# சித்த மருத்துவம்

மேல் நிலை — முதல், இரண்டாம் ஆண்டுகள்



தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்

# சித்த மருத்துவம்

மேல் நிலை — முதல், இரண்டாம்
ஆண்டுகள்

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை

©தமிழ்நாட்டு அரசு
முதற்பதிப்பு — 1980

**ஆசிரியர்கள் :**

டாக்டர் ஆ. ஆனந்தகுமார், G.C.I.M.,
கௌரவ இயக்குநர், சித்த மருத்துவ
மைய ஆராய்ச்சி நிலையம், சென்னை-29

டாக்டர் கா. சு. உத்தமராயர், H.P.I.M.,
ஓய்வுபெற்ற இயக்குநர், சித்த மருத்துவ
மைய ஆராய்ச்சி நிலையம், சென்னை-29

டாக்டர் இரா. தியாகராசன், L.I.M.,
ஷெனாய்நகர், சென்னை-30

டாக்டர் ஜே. ஆர். கிருஷ்ணமூர்த்தி, G.C.I.M.,
குன்றத்தூர், சென்னை-69

**விலை : ரூ. 15-00**

இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய
60 ஜி. எஸ்.எம். தாளில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர் :
திருமலை அச்சகம் & பதிப்பகம், சென்னை—600 004.

# பொருளடக்கம்

## பகுதி 1

## சித்த மருத்துவ இலக்கியங்களும் தத்துவங்களும்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சித்த மருத்துவ வரலாறு | ... | 1 |
| 2. | சித்த மருத்துவ அடிப்படைத் தத்துவங்கள் | ... | 44 |
| 3. | கற்பம் | ... | 116 |
| 4. | யோகம் | ... | 122 |
| 5. | பிற தமிழ் மருத்துவ இலக்கியங்கள் | ... | 131 |
| | அ. தேரையர் யமகம் | | |
| | ஆ. தேரையர் வெண்பா | | |
| | இ. தேரையர் மகா கரிசல் | | |
| | ஈ. தனிப்பாடல் திரட்டு | | |


## பகுதி 2

## சித்த அறிவியல்


| | | | |
|---|---|---|---|
| 1. | தாவரவியல் | ... | 201 |
| 2. | விலங்கியல் | ... | 290 |
| 3. | வேதியியல் | ... | 316 |

பகுதி 1

# சித்த மருத்துவ இலக்கியங்களும் தத்துவங்களும்

## மேல் நிலை — முதலாம் ஆண்டு

# 1. சித்த மருத்துவ வரலாறு

நம் நாட்டு மருத்துவத்தின் வரலாற்றில் அக்கறை கொண்டு ஆராய்ந்து அதன் பழமையைப் பற்றிய உண்மைகளைப் பல அயல்நாட்டினர் தெரிவித்துள்ளனர். அதன் விவரங்கள் வருமாறு:

'பொதுவாக, சித்தர் என்பவர் அசாதாரண மனித சக்தி படைத்தவர்களாகக் கருதப்படுபவராவர். அவர்கள் பெரும் பாலும் இயற்கையை வென்றவர்கள். சாதாரண மனிதர்களின் இயல்பில் அமைந்த வயது கிரமத்தையும், உடல் உரத்தின் குன்றுந் தன்மையையும் வென்று நீண்ட நாள் இளமையுடன் இருந்து பல அரிய சாதனைகளைச் சாதித்துள்ளனர். அவர்கள் கடலில் ஆழ்ந்துபோன தமிழ்ப் பேருலகிலிருந்து ஏற்கெனவே பெரிய சுயராச்சியமாக இருந்த எகிப்து நாட்டுக்குக் குடி யேறினர். அக் காலத்தில் ஏற்கெனவே நாகரிகம் பெற்றிருந்த தமிழர், சித்தர் பலரின் தலைமையில் அங்குச் சென்று குடி யேறினர் என்று அந்நாட்டுப் பழங்கால வரலாற்று வல்லுநர் பலர் தம் நூலில் கூறியுள்ளனர் என்ற உண்மைகளை மகா அல்க்சாண்டர் காலத்திய சரித்திர ஆசிரியர்கள் கூறியுள்ளார் கள். அச் சித்தர்களை அக்காலத்தில் ஜிம்னோஸோபிஃஸ்ட்ஸ் (Gymnosophists) என்று கூறினர். அவ்வாறு குடியேறிய சித்தர் பரம்பரை சற்றேறக்குறைய ஏசுவுக்குப்பின் நான்கு நூற்றாண்டு கள் வரை வாழ்ந்து வந்துள்ளதாக ஆதாரபூர்வமாக அறியக் கிடக்கின்றது.'

அன்னி பெசன்ட் அவர்களும், பூஜ்யர் லெட்பீடர் (Dr. Annie Besant and Rev. Leadbeter) அவர்களும் தாம் எழுதிய 'மக்களின் நாகரிக வளர்ச்சி' (Growth of Human Civilization) என்னும் வரலாற்று நூலில் பின் விவரித்துள்ள படியாகக் கூறியுள்ளனர் :

'ஏசு பிறப்பதற்கு 13500 ஆண்டுகளுக்கு முன் தென் தமிழ் நாட்டிலிருந்து உலகை ஒரு குடைக்கீழாண்ட மனுச்சக்கர வர்த்தியின் ஆணைப்படி ஒரு பெரிய நல்லெண்ணக்குழுவினர் இலங்கைத் தீவு வழியாகக் கடல் மூலமாகச் செங்கடலை யடைந்து எகிப்து நாட்டை அடைந்தனர். அவர்கள் நாடு பிடிக்கும் நோக்கத்துடன் செல்லவில்லை; அங்குச் சென்று குடியேறும் திட்டத்துடன்தான் சென்றனர். அந்த நாளிலேயே, எகிப்து ஒரு பெரிய நாகரிகம் பெற்ற பேரரசாகத் திகழ்ந்தது.

அக் காலத்தில் ஏறக்குறைய மூவாயிரமாண்டுகளுக்கு முன் தென் தமிழ்நாட்டிலிருந்த சூரியன், எகிப்து நாட்டின் தலை மைக் குருவாகத் திகழ்ந்தார். தென் தமிழ்நாட்டிலிருந்து சென்ற நல்லெண்ணக் குழுவினை தலைமை தாங்கி அழைத்துச் சென் றவர் செவ்வாய் (Mars). ஆகவே, அக்குழுவின் வருகைக்குத் தக்க வசதிகள் செய்து கொடுத்ததுமல்லாமல் அந்நாட்டுச் சக்கரவர்த்தியாகிய பஃரோவைச் (Pharaoh) சந்தித்து அக் குழு வினரைத் தக்க மரியாதையுடன் வரவேற்க ஏற்பாடுகள் செய் யச் செய்தார். அதன்படி அங்குச் சென்ற செந்தமிழ் நாட் டினருக்கு, நல்ல வரவேற்பளிக்கப்பட்டு அமைதியாகக் குடி யேறவும் சர்வ சுதந்தரம் அளிக்கப்பட்டது. சில நாள்கள் சென்றதும் சக்கரவர்த்தி பஃரோவின் மகளைச் செவ்வாய்க்கு மணம் முடித்துக் கொடுக்க ஏற்பாடு செய்து நிறைவேற்றினார். அச் சக்கரவர்த்திக்குப் பின் அரசுரிமையைச் செவ்வாய்க்குப் பெற்றுத் தந்தார். அந்தப் பரம்பரை பல்லாயிரம் ஆண்டுகள் அந்நாட்டையாண்டது. அம்மக்கள் தம் அறிவு வளத்தால் மேல் நாட்டினர் யாவரும் கற்கத் தகுந்த பல்கலைக் கூடங் களை ஆங்காங்கு நிறுவி மிக்க புகழ் பெற்றனர். அத்தகைய கலைக் கூடங்களில் கற்றுப் பயனடைந்தவர் அநேகராவர்.'

இவ்வண்ணமாகவே தமிழ்நாட்டில் ஆண்டு வந்த மனுச் சக்கரவர்த்தி சாவகத்தீவுக்கும் (Java), ஆஸ்திரேலியா வுக்கும் (Australia) மேலே கூறப்பட்டது போன்ற அறிவாளிக் குழுக்களை அனுப்பி உலக அறிவியலை வளமுறச் செய்ய முயன்றுள்ளார்.

இவ்வண்ணம் எகிப்து சென்றவர் நாளடைவில் அரபு, பாரசீக, ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளிலும் மத்திய ஆசியாவிலும் பல்லாயிரம் ஆண்டுகளுக்குப்பின் வட இந்தி யாவிலும் பற்பல குழுக்களாக வந்து குடியேறினர்.

இவர்கள் காலப்போக்கின் காரணத்தாலும், சூழ்நிலை, வெப்ப தட்ப நிலை, விளைபொருள் ஆகியவற்றின் மாறுபாடுகளின் காரணத்தாலும் நடையுடை பாவனை, மொழி, நிறம் முதலியவற்றில் மாற்றம் ஏற்பட்டு இருந்தது காரணமாக அவர்களைத் தென்னாட்டுத் தமிழர், பிற்காலத்தில் வேற்று மனிதராகக் கொண்டு நடந்துகொண்டுள்ளமை மனித இயல்பேயாகும். இந்தச் சரித்திரத் துணுக்கிலிருந்து நம் தமிழ்நாட்டுச் சித்தர்கள் பற்பல நாடுகளுக்கும் சென்று தம்முடைய அறிவியலைப் பரப்பி மக்களுக்கு உதவி புரிந்துள்ளனர் என்பது பெறப்படும்.

இவ்வாறு, பல்லாயிர ஆண்டுக்காலம் நாட்டின் நாகரிகத்துக்கு அடிகோலி நாட்டை நல்வழிப்படுத்திய சித்தர்கள் தோன்றியது தமிழ்நாடேயாகும். இத் தமிழ்நாடு பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் ஒரு பரந்த நாடாக இருந்தது என்பது சரித்திரம் கண்ட உண்மை. தற்போதுள்ள தமிழ்நாடு, அக்காலத்திய தமிழ்நாட்டின் ஒரு சிறிய ஒதுக்கப்பட்ட மூலை என்பதும், அந் நாடு தற்போதுள்ள இந்துமாக் கடலையும் அதற்கப்பாலும் உள்ள பாகத்தையும் அடைத்துக்கொண்டு மிகப் பரந்து இருந்ததென்பதும் வரலாற்று வாயிலாக அறியும்போது விளங்குகின்றது. அத்தகைய பெரிய நாடு சிறு சிறு தீவுகளாகப் பிளந்து போயும், மிகப் பெரிய நிலப்பரப்புகள் கடல் நீருள் மூழ்கியும் அழிந்துபட்ட குறிப்புகள் நம் பழந்தமிழ் நூல்களிலும், அவற்றுக்கு விளக்கம் தரும் உரை நூல்களிலும் காணக்கிடக்கின்றமையின், நம் நாட்டு மக்களுக்கு மறக்க முடியாத சம்பவமாக மனத்தில் ஊன்றி இருப்பது இயல்பாகவுள்ளது. இந்தச் சரித்திர உண்மையை, பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தபின் கேள்விப்பட அல்லது நூல் வாயிலாகப் பார்க்க நேரும்போது இதுவும் ஏதோ ஒரு 'புராணப் புளுகு' என்று கூறிவிடத் துணிவதைக் காண்கிறோம். மற்றும், சில விஞ்ஞானிகள் இதனை விஞ்ஞான ரீதியில் ஆய்ந்து முடிவு காணவேண்டும் என்பர். இஃது, எவ்வாறாயினும் பழந்தமிழ் நாடு மிகப் பெரிதாகத்தான் இருந்தது என்பது உண்மையே.

இறையனார் அகப்பொருள் என்னும் இலக்கண நூலுக்கு உரையெழுதிய ஆசிரியர் (பத்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்) மேற்படி வரலாற்றைப் பின்வருமாறு விளக்கிக் கூறியுள்ளார்;

பாண்டிய மன்னர்கள் தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கம் என மூன்று தமிழ்ச் சங்கங்களை நிறுவித் தமிழ் மொழி, கலைகள், பண்பாடுகள் முதலியவற்றை வளம்பெறச் செய்தனர். தலைச்சங்கத்தில் 549 உறுப்பினர்கள் இருந்தனர். அதற்கு அகத்தியர் தலைமை தாங்கினார். திரிபுரமெரித்த சிவ பெருமான், குறிஞ்சியின் கடவுளாகிய முருகப்பெருமான், செல்வத்தின் அதிபதியாகிய குபேரன்,முரஞ்சியூர் முடிநாகராயர் அவ்வுறுப்பினருள் சிலராவர். அக் காலத்தில் 4449 புலவர்கள் பற்பல பாடல்களை இயற்றிச் சங்கத்தில் அரங்கேற்றிப் புகழ் கொண்டனர். அந்தச் சங்க காலத்தில் பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை என்னும் நூல்கள் இயற்றப்பட்டு இருந்தன. மேலே கூறப்பட்ட தொகை உறுப்பினர்கள் 4400 ஆண்டுகள் தொடர்ந்து இருந்து சங்கத்தைச் செயற்படுத்தி வந்தனர். அந்தக் காலத்தைக் காய்சின வழுதி முதல் கடுங் கோன் ஈறாக எண்பத்தொன்பது பாண்டிய மன்னர்கள் ஆட்சி செலுத்தி முதற் சங்கத்துக்கு ஆதரவு அளித்துள்ளனர். அவ்வாறு ஆண்டு வந்த மன்னர்களுள் எழுவர் செந்தமிழ்ப் புலவராகவும் இருந்தார்கள். அச் சங்கம் கூடுமிடம் மதுரை என்னும் நகரமாகும். அது பிற்காலத்தில் கடற்கோட்பட்டது. தலைச்சங்க காலத்தில் அகத்தியம் என்னும் இலக்கண நூல் வழக்கிலிருந்தது.

இடைச் சங்கத்தில் 59 உறுப்பினர்களே இருந் தனர். அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர்க் கருங்கோழி, மோசி, வெள்ளூர்க் காப்பியன், சிறுபாண்ட ரங்கன், திரையன் மாறன், துவரை மன்னன் (துவரை– துவாரகை), கீரந்தை என்பவர்கள் உறுப்பினர்களுள் சில ராவர். இச் சங்கத்தில் 3700 தமிழ்ப் புலவர்கள் ஆதரவு பெற் றனர் என அறியக் கிடக்கின்றது. அவர்கள் பல நூல்களைப் பாடல்களாக இயற்றியளித்தனர். அக் காலத்தில் கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, அகவல் என்னும் பல வகையான நூல்கள் வழக்கில் இருந்தன. அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூதபுராணம் என்பவை அக் காலத்தில் வழக்கில் இருந்த இலக்கண நூல்களாம். இவ் விடைச் சங்கம் 3700 ஆண்டுக்காலம் பணியாற்றியுள்ளது. வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் ஈறாக ஐம்பத் தொன்பது பாண்டியர்கள் இடைச் சங்க காலத்தில் ஆட்சி செய்து சங்கத்துக்கு ஆதரவு அளித்துள்ளனர். அவர்களுள் ஐவர் தமிழ்ப் புலவர்களாக இருந்துள்ளனர். இச்சங்கம் கவாட

புரமென்னும் நகரில் கூடிப் பணியாற்றி வந்துள்ளது. இந் நகரும் காலப்போக்கில் கடலில் மூழ்கிவிட்டது.

கடைச் சங்கம் 49 உறுப்பினர்களுடன் தொண்டாற்றி யுள்ளது. சிறுமேதாவியார், சேந்தன் பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன், ஆசிரியர் நல்லந்துவனார், மருதன் இளநாகனார், நக்கீரர் ஆகியவர்கள் அவ்வுறுப்பினருள் சிலராவர். 449 புலவர்கள் சங்கத்தின் ஆதரவு பெற்றுப் பல நூல்களை எழுதியுள்ளனர். நெடுந்தொகை,குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, கலி, பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை என்பவை அக்கால நூல்களிற் சிலவாம். இச் சங்கம் 1850 ஆண்டு காலம், முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெரு வழுதி யீறாக நாற்பத்தொன்பது பாண்டிய மன்னர்களின் ஆதரவுடன் ஆட்சி செலுத்தப்பட்டு வந்தது. சங்கம் கூடிய இடம் மதுரை மாநகரமாம். இந்நகரின் சிறுபாகம் முடத்திரு மாறன் ஆட்சிக் காலத்தில் கடலுக்கிரையானது என்று வரலாறு உணர்த்தும். இப்போதுள்ள மதுரை பழைய மதுரையின் வடபாகம் என்க.

மேலே கூறப்பட்ட மூன்று சங்க காலத்திலும் மருத்துவப் புலவர்களால் எழுதப்பட்ட மருத்துவ நூல்களைப் பற்றிய குறிப்பு ஏதும் இதுவரை கிடைத்திலது. எனினும் கடைச் சங்க காலத்தில் சங்கத்தின் உறுப்பினராக மருத்துவன் தாமோதரனார் என்ற புலவர் இருந்ததாகத் திருக்குறளுக்குச் சிறப்புச் சாற்றும் திருவள்ளுவமாலையில் என்றும் வாடா மலராகத் திகழும் கீழ் வரும் வெண்பாவால் அறியக் கிடக்கின்றது.

**'சீந்திநீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனளாய்**
**மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில் – காந்தி**
**மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலில்**
**தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.'**

இப்பாடல் ஒன்றிலிருந்தே அக்காலத்தில் மருத்துவர் யாண்டும் இருந்திருத்தல் கூடுமென்றும் அக மருத்துவம், புற மருத்துவம், அறுவை மருத்துவம் வல்ல பலவகைப்பட்ட மருத்துவர் வாழ்ந்திருத்தல் கூடுமென்றும், பல நூல்கள் எழுதப் பட்டு வழக்கில் இருந்திருத்தல் கூடுமென்றும் ஊகிக்க இடந் தருகின்றது.

மேலே விவரித்த மூன்று சங்ககாலம் தொட்டுப் பல்லாண்டுக் காலம் சித்த மருத்துவம் குருசீடர் பரம்பரையாகத் தொடர்ந்து வந்துள்ளது என்ற உண்மை யாவரும் அறிந்ததே. ஆகவே, அநேக முறைகளை உள் மருத்துவத்துறையிலும் அறுவை மருத்துவத் துறையிலும் ஆசான் நேர்முகமாகப் பயிற்றுவிப்பதும் அதை மறையைப் போலக் காத்து வருவதும் பழக்கமாகிவிட்டது. எப்படி வேதம் எழுதப்படாமல் காதால் கேட்டே மனம் கொள்வதாக இருந்ததோ அதே போலப் பல காலம் சித்த மருத்துவப் பாடல்கள் மறையைப் போலக் காக்கப்பட்டு வந்துள்ளன என்னும் உண்மையைத் தற்போது கிடைத்துள்ள சில நூல்களினின்றும் அறியலாம். ஆகவே, மிக மிகப் பிற்காலத்தில்தான் சித்த மருத்துவர்கள் தாங்கள் பயின்றதும், கற்றதும், கைவந்ததுமான பற்பல முறைகளைப் பின்னால் வரும் சந்ததியார்க்குப் பயன்பட வேண்டுமென்னும் நல்ல நோக்கத்தோடு பனையோலைச் சுவடிகளில் எழுதி வைத்து மறைந்தனர் என அறியக் கிடக்கின்றது. அவ்வாறு வரையப்பட்ட நூல்களின் தலைப்பில் அகத்தியர் இயற்றிய தாகக் கூறப்பட்டுப் பின் பல பாடல்களில் 'அகத்தியர் கூறியதை யான் சொன்னேன்' என்று கூறியிருப்பதைச் சகஜமாகக் காணலாம். இதிலிருந்து அகத்தியருடைய சீடராக இருந்த ஒருவர்தாம் அகத்தியரிடமிருந்து பெற்ற சித்த மருத்துவ அறிவை அவருடைய காலத்துக்கு மிக்க பிற்காலத்தில் ஏட்டுச் சுவடியில் வரைந்து வைத்திருக்கலாம் என்று கருத இடந் தருகின்றது. ஆகவே, மேலே கூறப்பட்ட மூன்று சங்க காலத்திலும் சித்த மருத்துவப் புலவர் பலர் இருந்திருப்பினும் அவர்கள் பிற்காலத்தவர் போலன்றிப் பெரும்பாலும் அரசின் ஆதரவையோ, ஒரு சங்கத்தின் ஆதரவையோ, மக்களின் ஆதரவையோ வேண்டி நின்றதாகத் தெரியவில்லை. ஆகவே, பற்பல சித்தர்களுடைய உண்மை வரலாறுகள் மக்களுக்குத் தெரியாமலே போய்விட்டன.

பண்டைக்காலச் சித்தர்கள் சர்வ வல்லமை பொருந்திய எண் வகைச் சித்துகளிலும் தேர்ச்சி பெற்றுத் தம்முடைய ஆன்ம லாபத்தையே பெரிதும் கருதிப் பேணித் தம் வாழ்க்கையை மனித சமுதாயத்துடன் இணைத்து வாழாமல் காட்டின் மலைக்குகைகளில் வாழ்ந்து வந்தனர் என்பது யாவரும் அறிந்த உண்மை. அத்தகைய சித்தர்களை யடுத்து உண்மை நெறியுடன் ஒழுகி அவர்களுக்கு மனமுவக்கப் பணி செய்து பல்லாண்டுகள் உடனுறைந்த சீடர்களுக்குத் தம்முடைய சித்த

மருத்துவத்தை உபதேசித்தனர் என்பது தற்காலம் கிடைத்துள்ள சில சித்தர் நூல்களின் வாயிலாக அறியக் கிடக்கின்றது.

'நலங்காமல் யாவர்க்குக் கொடுப்ப தென்றால்
நாதாந்த வேதாந்த பிரமவிசா ரத்தார்
மலங்கவே அவதூதி தர்மி கூர்மி
மகத்தான சிவயோகி மதிமார்க் கத்தார்
துலங்கவே சுத்தசை தந்யத் தோர்கள்
சொன்மொழிகள் மறவாத தூய்மை யாளர்
கலங்கவே கன்மமனுட் டித்தோர் சாந்தர்
கற்புடைய மங்கையரைக் கருதார் தாமே.

தாமென்றுந் தந்தைதாய் பூசிப் போர்கள்
தமையடைந்த பேர்களையே பாது காப்போர்
ஏமென்ற வெவ்வுயிருந் தன்னுயிர்போ லெண்ணி
யிரங்குவோர் வரம்புதப்பி யிகழ்ந்தி டாதார்
வாமென்ற வாசியுடன் வாதித் தாடும்
அகத்தோர்கள் வாமத்தின் வழியி னிற்போர்
ஆமென்ற வப்புவுட னுப்புப் போல
அடைந்தோர்க்கங் கடங்கலும்போ திக்க லாமே.'

—(போகரேழாயிரம் முதலாமாயிரம் பா. *117*, *118*)

மேலே கூறப்பட்ட இருபாடல்களும் சிறந்த சீடனுக்குள்ள இயல்புகள் கூறப்பட்டதை உணர்த்தும். இத்தகைய இயல்புடையோர், பல்லாயிர மக்களுள் மிகச் சிலரே இருந்திருத்தல் கூடும். எனவே, முற்காலத்தில் சித்தரையடுத்துச் சித்தரானோர் மிகச் சிலராகவே இருத்தல் கூடுமென ஊகிக்க இடந் தருகின்றது. மற்றும், உண்மைச்சீடன் குருவினிடம் எவ்வாறு ஒழுகினால் குரு, சீடனுக்குப் பல உண்மைகளைக் கூறியும், காட்டியும், பயிற்றுவித்தும் உதவுவாரென்பதைப் போகர் தம் நிகண்டென்னும் நூலில் கூறியுள்ளார். அது வருமாறு :

'வறுமைபோ லுண்டுடுத்துஉப ரசத்தைத் தேடு
மகத்தான யோகிகளைக் கண்டு பேசு
நெறிமையாய் அவருடனே வார்த்தை பேசு
நினைவழிந்து போகாமல்உப ரசத்தைக் கேளு
வெறுமைபோற் சீவனத்துக் கிடத்தைக் கேளு
வேதாந்த நுட்பத்தின் விபரங் கேளு
திறமையாய் மலைதனிலே சஞ்ச ரித்துச்
சூதத்தின் சாரணைக்கு விபரங் கேளே.'

—(போகர் நிகண்டு பா. *292*.)

இது அவருடைய சொந்த அனுபவத்தால் பிறந்த அறிவுரையாகக் கொள்ளக்கிடக்கின்றது. ஆகவே, சித்த மருத்துவத்தைப் பயிலல் மிக்க பழங்காலத்தில் எவ்வளவு கடினமென்பதை அறியலாம்.

அவ்வாறு, மிக முயன்று கற்ற சித்தர்களுள் பெரும் பாலோர் யோக ஞான மார்க்கத்தைப் பின்பற்றி வாதவைத் தியத் துறையை மக்களுக்குப் பயிற்றுவிக்காமல் மறைந்தனர். வாதவைத்தியத் துறையைச் சிறப்புறச்செய்ய மனங்கொண்ட சில சித்தர்களே தகுதி பெற்ற சில சீடர்களையேற்று அவர் களைப் பயிற்றுவித்து மக்களுக்கு உபகாரியாக இருக்கப் பண்ணியுள்ளனர். ஆகவே, தொடக்கக்காலத்தில் நவநாத சித்தர்கள் என்ற ஒன்பதின்மரே சித்த மருத்துவ முறையைச் சீடர்களுக்குப் போதித்துப் பயிற்சியளித்து உலகுக்கு உதவு மாறு விடுத்தனர். அவர்களுக்குப் பின்னர்ப் பதினெண் சித்தர் என்ற எண்ணிக்கையால் குறிக்கப்பட்ட சித்தர்கள் தோன்றினார்கள் என்று முன்னம் கூறிய வரலாற்றினின்றும் தெரிகின்றது. இவ்வாறு கூறப்பட்ட நவநாத சித்தர்களும், பதினெண் சித்தர்களும் மேலே கூறிய மூன்று சங்க காலத்துக்கும் முந்தித் தோன்றி, அந்தச் சங்க காலங்களில் வாழ்ந்து கடல்கொண்ட தமிழ்க்கண்டத்திலிருந்து பிற நாடுகளுக்குத் தமிழ் மக்களைத் திரட்டிக்கொண்டு காப் பாக ஆஃபிரிக்கா, எகிப்து, சிறிய ஆசியா, அரேபியா, பாரசீகம், காந்தாரம் முதலிய நாடுகளில் குடியேற வைத்தும், அவர்களுடைய மனம், வாக்கு, காயம் ஆகிய வற்றைப் பண்புறச் செய்தும் உபகாரம் செய்ததாகப் பல குறிப்புகள் எகிப்து, அரேபியா, பாரசீகம் முதலான நாட்டு வரலாற்றால் அறியக் கிடக்கின்றன. இங்ஙனம் பிறநாடு களுக்குச் சென்ற சித்தர்கள் ஆங்காங்குக் கிடைத்த நற்சீடர் களுக்குச் சித்த முறையை உபதேசித்து அவர்களையும் சித்த ராக்கினர். எனவே, சில பிற்காலச் சித்தர் நூல்களில் நவகோடி சித்தர் உலகில் வாழ்ந்து மருத்துவத் தொண்டை மக்களுக்குச் செய்து வந்தனர் என்னும் உண்மை சாற்றப்பட்டுள்ளது.

**'வாரப்பா அறுபத்து நாலுமர புள்ளே**
**மகத்தான சீடவர்க்கம் கோடியா யிடிச்சே**
**சீரப்பா சீடவர்க்கம் சீடர்களைச் சொல்ல**
**சிற்றண்டம் பேரண்டம் பரவிச் சப்பா'**

**—(போகர் நிகண்டு பா. 196)**

என்னும் பாடலின் அடிகளால் சித்த மருத்துவம் உலக மெல்லாம் பரவி இருந்தது என்று அறியக் கிடக்கின்றது.

காலப்போக்கில் உலகின் பல பாகங்களில் குடியேறிய சித்தர்கள் ஆங்காங்குக் கிடைத்த சிறப்பான தாது தாவர சீவப் பொருள்களைக் கருவியாகக் கொண்டு மருத்துவ அறி வியலைப் பெருக்கிக் கொண்டனர். பண்டைக் காலத்தில் போக்குவரத்துச் சாதனக் குறைவாலும், ஒரு நாட்டுக்கும் மற் றொரு நாட்டுக்கும் ஏற்பட்ட பிணக்குகள், படையெடுப்பு, போர் முதலிய காரணத்தாலும், மற்றும் கடற்கோள், நிலநடுக் கம், புயல் முதலிய இயற்கையின் சீற்றத்தாலும் ஒரு நாட்டி னின்று மக்கள் மறுநாட்டுக்குச் செல்வது அருகியது. எனவே, பிற நாடுகளில் குடியேறிய சித்தர்களுக்கும் தாய்நாட்டில் உள்ள சித்தர்களுக்கும் தொடர்பு அற்றுப் பலகாலம் செல்லவே பல தலைமுறைகளுக்கப்பால் வழிவழியாக மருத்துவம் செய்து வந்தவர்கள் தங்கள் மருத்துவத்தைத் தாம் வாழ்ந்துவரும் நாட்டின்—எடுத்துக்காட்டாக எகிப்திய மருத்துவமுறை, அரபு வைத்திய முறை, கிரேக்க மருத்துவ முறை என்பன போல்— மருத்துவ முறையாகக் கூறிக்கொண்டனர். இது காலப் போக்கில் பொருந்துவதாயினும், இவற்றுக்கெல்லாம் தாய், பண்டைய சித்த மருத்துவமே என்பதைத் தற்போது மறந்தாலும், பண்டைக்காலந்தொட்டு ஆய்ந்து கண்டுபிடித்த வரலாற்றுச்சான்றுகள் உள்ளமையால் யாரும் மறுக்க இயலாது.

இவ்வண்ணம் உலகம் முற்றும் பரவி இருந்த சித்தர்களின் உடலமைப்பு, ஆயுட்காலம் முதலியவற்றைக் கூறும் சித்தர் நூல்களிலிருந்து பல அரிய செய்திகள் அறியக் கிடக்கின்றன. அவற்றுள் சில கீழே கொடுத்து விளக்கப்படும்.

'தூரப்பா மகாமேரு வடக்கி லுள்ள
சுகமான சித்தர்களைச் சொல்லக் கேளு
ஓரப்பா உயரமது பனைமட் டாகும்
உற்றுநின்ற வயதினுட வுறுதி கேளே 515

உறுதிமூ வாயிரமாம் இரண்டு தானும்
உற்றுநின்ற மகமேரு கிழக்குள் சித்தர்
நிறுதியாய் உயரமது செப்பக் கேளு
நேரான பனையளவு முக்கா லாகும்
மறுதியாய் வயததுவும் எழுநூ றாகும்
மகத்தான சித்துண்டு குளிகை யுண்டு
மிறுதியாய் மகமேரு மேற்குள் சித்தர்
மிடுக்கான உயரமரை வாசி தானே, 516

அரையான பனைமட்டு முயர மாகும்
ஐந்நூறு வயதாகும் ஆண்மை மெத்த
விரையாத வாதமுண்டு குளிகை யுண்டு
மிடுக்கான மூலிகையும்பா டாண முண்டு
துறையான ஆதிரசக் கிணறு முண்டு
சூட்சமாம் வித்தையுண்டு துடியோ மெத்த
மறையான மகமேருதென் றிசையிற் கேளு
வாகான வுயரங்காற் பனையின் மட்டே 517

மட்டான வயதுநூற் றிருப தாகும்
வாசிப்பார் வெகுநூல்கள் மார்க்கம் மெத்த
திட்டான பொதிகையினிற் சூழு கின்ற
சித்தர்கடான் தென்புறத்தில் தீட்சண மெத்த
கிட்டான குளிகையுண்டு கொடிய வேகம்
கூறவிது வெகுபேர்க்குக் குறிப்பு மெத்த
தட்டானை வலத்தில்வைக்கத் தாயார் தன்னைச்
சதாநித்தம் பூசிப்பார் தயாளர் தானே'

—(போகர் நிகண்டு பா. 518)

பொருள் : உலகுக்கு அச்சாணி போன்றுள்ளதும், அதன் வலியால் உலகு சுழலுவதுமான மேருமலையின் வடபால் வாழ்ந்து வரும் சித்தர்கள் பனையின் உயரமுள்ளவர்கள். அவர்கள் மூவாயிரம் ஆண்டுக் காலம் வாழ்ந்தவர்கள். அம் மலைக்குக் கிழக்கில் வாழ்ந்த சித்தர்கள் பனையின் முக்காலளவு உயரமுள்ளவர்கள். ஏழு நூறாண்டு வாழ்ந்தவராவர். அவர்கள் மிகப் பெரிய சித்துகளில் கைவந்தவர்கள். அவர்களிடம் மிக்க வல்லமை பொருந்திய குளிகைகள் உண்டு. மேருவுக்கு மேற்கில் வாழ்ந்து வரும் சித்தர்களின் உயரம் பனைமரத்தின் பாதியளவே. அவர்களின் வாழ்நாள் ஐந்நூறு ஆண்டுக் காலமாகும். அவர்கள் மிக்க வலிமையும் தைரியமும் உடையவர்கள். அவர்களிடம் மட்டற்ற வாதவித்தைகளும், மிக்க வீரியமுள்ள குளிகைகளும் உண்டு. அவர்கள் மிக்க சக்தி வாய்ந்த மூலிகைகளையும் பாடாணங்களையும் கையாண்டு வெற்றி கண்டவர்கள். அவர்களுடைய மருத்துவத்துக்கு உறுதுணையான இரசக்கிணறு அவர்களுடைய இருப்பிடத்திலேயே இருந்து பயன்தரும் வண்ணம் அமைந்துள்ள காரணத்தால், அவர்கள் மிக்க எடுப்பானதும், குறிப்பிடத் தக்கதும், மிக்க சூட்சுமமானதுமான பல அரிய வித்தைகளில் கைவந்தவர்களாக உள்ளனர்.

அந்த மேருமலைக்குத் தென்பால் உள்ள சித்தர்கள் காற்பனை உயரமும், நூற்றிருபதாண்டு ஆயுட்காலமும் உடையவர்கள். இவர்கள் பொதிகை மலையிலும் அதன் சூழலிலும் வாழ்பவராவர். அவர்கள் பல வித்தைகள் கற்றவர்களாயினும் எக்காலமும் கற்பதிலே மிக்க ஆர்வங்கொண்டு ஓவாது ஆய்ந்து ஆய்ந்து பல நூல்களை ஓதியும் எழுதியும் வைத்துள்ளனர். அவர்கள் மிக்க சுறுசுறுப்பும் விடாமுயற்சியும் உடையவர்கள். அவர்களிடம் மிகக் கொடிய வேகமும், மிக்க பரபரப்புமுள்ள குளிகைகள் அளவுகடந்து இருந்தன. அவர்கள் அம்மையப்பனாரை வழிபடும் சிந்தையர் ஆவர்.

மேலே கூறிய பாடலும் பொருளும் பல கோடி ஆண்டுகளுக்கு முன் இருந்த சித்தர்களின் வல்லமை, ஆயுட்காலம், இருப்பிடம் முதலான விவரங்களைச் சித்தமருத்துவம் முதலிய வித்தைகளைக் கற்க விழைபவர்களுக்கு விளக்கம் கூறுவது போல அமைந்துள்ளன. இப் பாடல்கள் போகர் என்ற சித்தரால் அவருடைய 'நிகண்டு ஆயிரத்து இருநூறு' என்னும் நூலில் சித்தர் வரலாற்றைக் கூறும் அகச் சான்றாக விளங்குகிறது.

மிக அண்மையில் தென் தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்த தாயுமான அடிகளார் என்னும் சித்தர் தமது நூலில் ஆதிகாலச் சித்தர்களின் வல்லமையைப்பற்றி மிக விரிவாகக் கூறியுள்ளார்.

'மைதிகழு முகிலினம் குடைநிழற் றிடவட்ட
வரையினொடு செம்பொன் மேரு
மால்வரையின் முதுகூடும் யோகதண் டக்கோல்
வரைந்துசய விருது காட்டி
மெய்திகழு மட்டாங்க யோகபூ மிக்குள்வளர்
வேந்தரே குணசாந்தரே
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே'

—(தாயுமான அடிகளார் பா. 61)

மேலே கூறிய பாடலும் சித்தர்கள் தென் தமிழ்நாட்டில் மட்டும் இருந்தவர், பிற இடங்களில் அவர்களின் தொண்டும், புகழும் பரவியில்லை என்னும் தற்காலக் கருத்து மிகப் பிழைபட்டது என்பதைக் கூறுகின்றது. அவர்கள் தென் தமிழ்நாட்டிலிருந்து மேருமலைச் சூழல்வரை பரவி 'அட்டாங்க யோக பூமிக்குள் வளர்வேந்தர்', என்று சிறப்பித்துக் கூறப்படுவதை

யும் காணலாம். மற்றும், 'என்றைக்குமழியாத சிவராஜ யோகரா யிந்த்ராதி தேவர்களெலாம் விஜயஜய ஜயவென்ன ஆசி சொலவே கொலுவிருக்கு நும் பெருமை யெளிதோ,' என்னும் சித்தர்களின் பெருமையைக் கூறி அவர்கள் மூவுலகிலும் வியா பித்துள்ளவர் என்று கூறுவர் தாயுமான அடிகளார்.

இவ்வண்ணம் பரந்த தமிழ்க் கண்டம் கடலில் ஆழ்ந்த காலத்தில் மேலே கூறியபடி பற்பல நாடுகளுக்குச் சென்று குடியேறி மத்திய ஆசிய நாடுகளிலிருந்து இமாலய மலைக் கணவாய் வழியாய் இந்தியாவிற்கு வந்து குடியேறினர். அக் காலத்தில் தமிழ் மக்கள் குமரிமுனை முதல் காஷ்மீரம் வரை பரவியிருந்தனர் என்பது பழங்கால வரலாறு. அவ்வாறுள்ள போது அவர்களுடைய கலைகளில் மிகச் சிறந்ததான மருத்து வக்கலையும் அவ்விடங்களில் பரவிச்சிறப்புற்று இருந்ததெனக் கூறவேண்டியதில்லை. மேலே கூறியபடி புதிதாகக் குடியேறிய மக்களுக்குத் தமிழ் மக்களின் பண்பாட்டிற்கிணங்க ஆதரவு கொடுத்து அவர்களுடன் பெரும்பாலும் ஒன்றிப்போய் விட்டனர். ஆனால், தென் தமிழ்நாட்டினர் மட்டும் தனிப் பட்டே நின்று தனித் தமிழ் அரசுகளை நிறுவி, சொல்லாலும் செயலாலும் தனித்தன்மை பெற்றுத் திகழ்ந்தனர் என்பது அக் காலத் தமிழ்நாடு சேர, சோழ, பாண்டிய நாடுகளாக முடிவேந்தர் மூவர் ஆட்சியில் சிறந்ததென்ற வரலாற்றுச் சான்று களாலும், பல இலக்கியங்களின் வாயிலாகவும் அறியக் கிடக் கின்றது. வடநாட்டில் புதிதாகக் குடியேறியவர்களும் ஏற்கெனவே இருந்த தமிழ் மக்களும் ஒன்றிய போது அவர் களுடைய மொழி, கலை, ஆசாரம் யாவும் ஒன்றிப்போதல் இயல்பு. ஆகவே, காலப் போக்கில் தமிழ் மக்களின் மருத்துவ மாகிய பல துறைகளையுடைய சித்த மருத்துவ முறைகள் அந்த நாட்டில் வழக்கிலிருந்த மொழிகளில் சிறப்பாக வடமொழியில் எழுதப்பட்டுக் காப்பாக வைக்கப்பட்டுவிட்டன.

பின்னர், புத்த மதமும் சமணமதமும் தோன்றியதன் விளை வாக அந்த மதத்தில் ஈடுபாடு கொண்ட மக்கள் தம் உடனுறை மக்களுக்கு மருத்துவ உதவி செய்து வந்ததுடன், விலங்குகள், புட்கள் முதலிய உயிரினங்களுக்கும் மருத்துவம் செய்து தம் தொண்டுகளை முழுமைப்படுத்திக் கொண்டுள்ளார்கள். அசோகப் பேரரசு காலத்தில் புத்தமதத்தை அயல்நாடு களுக்குப் பரவச் செய்ய முயன்ற வண்ணம் நம் நாட்டு மருத்து வத்தையும் அயல்நாடுகளில் பரவச் செய்துள்ளனர். வடநாடு

முற்றும் ஆண்ட அசோகர் கலிங்கப்போர் செய்து வென்றபின் தம் அண்டை நாடாகிய தமிழ்ப் பேரரசை நட்பு நாடாகப் பாவித்து அமைதியுடன் அரசோச்சி வந்ததாக வரலாறுகளால் அறியக்கிடக்கின்றது.

மற்ற நாடுகளுக்குப் புத்தமதக் குழு சென்றதைப் போலவே அசோகர் காலத்தில், தமிழ்நாட்டுக்கும் வந்து மதக்கோட்பாடு களைப் போதித்தமை உலகறிந்த செய்தி. அவ்வாறு வந்த புத்தர்கள் கடைச்சங்க காலத்தில் தம்முடைய மருத்துவ, மாந்திரீக, சோதிட ஆற்றலால் தமிழ்நாட்டு மன்னர்களை மிகவும் கவர்ந்து வந்தார்கள் என்பதை, சேர மன்னரின் இளவல் பௌத்தத் துறவியாகி, இளங்கோவடிகள் என்னும் பெயருடன் இயங்கி, தமிழிலக்கியத்துக்கு அவர் இயற்றிய காப்பியமாகிய சிலப்பதிகாரம் என்னும் அழியாப் புகழ்பெற்ற நூலால் அறியலாம். அதே போன்று சித்த மருத்துவத் துறை யிலும் ஈடுபாடு கொண்டு தமக்கு முதல்முதலாக அறிமுக மாகிய வடசொற்களால் பற்பல நூல்களை இயற்றியதாக வரலாற்றுச் சான்றுகள் மிகவுள. எனவே, தற்காலம் வடமொழி யில் எழுதியுள்ள மருத்துவ நூல்கள் யாவும் ஆயுள்வேதக் கோட்பாடுடையவை என்று கூறிக்கொள்வது தவறான தாகும். மற்றும், அக்காலந்தொட்டு மிக்க அண்மைக் காலம் வரை தமிழ்ச்சொல், வடசொல் என்னும் பொறாமை உணர்வு மக்களிடை இல்லை என்பது சரித்திரம் சாற்றும் உண்மையாகும். இவ்வாறு சித்த மருத்துவம் வேற்று மொழிகளில் புகுந்து தன் தொண்டையாற்றி வரும் பெருமை பெற்றதேனும், அவற்றுக்கு மூலப்படிகளாகத் திகழ்ந்த தமிழ் ஏடுகள், மக்களின் அறியாமையின் காரணத்தால் பல்லாண்டுக் காலம் காவேரியின் பதினெட்டாம் பெருக்குக்கு இரையாயின. எஞ்சியவற்றுள் பெரும்பகுதி சிதைக்கும் தீக்கும் இரையாயின. மற்றும், வெளிநாட்டார் நம் நாட்டு ஓலைச் சுவடிகளை ஆராயும் நோக்கத்துடன் வாங்கிச் சென்று அந்தந்த நாடுகளின் வாசக சாலைகளை வளப் படுத்திக் கொண்டனர்.

மிகப் பண்டுதொட்டுச் சித்த மருத்துவத்துக்கு நம் தமிழ் நாட்டில் மக்களின் ஆதரவைத் தவிர மன்னர்கள் ஆதரவு கிடையாது. பழங்கால அரசவையில் அரசு மருத்துவர் ஒரு வருண்டென்பது உண்மையேனும், அவர்க்கும் சாமானிய மக்களுக்கும் நேரடித் தொடர்புண்டா என்னும் வினாவுக்குச் சரியான பதில் இதுவரை கிடைத்திலது.

சேர, சோழ, பாண்டிய மன்னர்களும், அவர்களுக்குப் பின் பல்லவ சாளுக்கிய மன்னர்களும், அதன்பின் கிருஷ்ணதேவ ராயரும் அவருடைய ஆட்சிக்குப்பின் சிதறிய நாயக்க மன்னர் களின் ஆட்சியிலும் ஓயாச்சண்டை, கலகம், உட்பூசல், வெளிப்பூசல் ஆகியவற்றுக்கிடையே சிறப்புற ஆண்ட மன்னர்கள் இல்லாமலில்லை. அவர்களுடைய காலத்தில் சிற்பக் கலை, நாடகக் கலை, இசைக் கலை முதலானவை முன்னேறிய தைப் பற்றி ஆங்காங்குக் கட்டப்பட்ட கோயில்கள், அவற்றில் தற்போதும் காணப்படும் கல்வெட்டுச் சாசனங்கள், செப்பேட்டுச் சாசனங்கள் ஆகியவற்றின் வாயிலாக அறியக் கிடக்கின்றது. ஆனால், மக்களின் உடல்நல மேம்பாட்டை அக்கால மன்னர் நேரடியாகக் கண்காணித்தார்கள் என்ற வரலாறு யாண்டும் மேற்சொன்ன அரசாட்சிக் காலங்கள் எதி லும் குறிப்பிடப்படவில்லை.

ஆயினும் பல நூற்றாண்டுகளுக்குமுன் சிங்கள நாட்டை யாண்ட இரு மன்னர்கள் சித்த மருத்துவ முறைகளை ஏடுகளில் பதிப்பித்து ஜகராஜ சேகரம், பரராஜசேகரம் என இரு மருத் துவ நூல்களாகக் காத்து உதவியுள்ளனர்.

மேலே கூறிய இந்து மன்னரின் ஆட்சிக்காலம் இவ்வா றிருக்க முகம்மதியர் படையெடுப்புக்குப் பின் தென்னாட்டில் ஆண்டுவந்த முகமதிய மன்னர்கள் அவர்கள் தொன்றுதொட்டு அரேபியா, பாரசீகம் முதலிய நாடுகளில் தொடர்ந்து கை யாண்டு வந்த மருத்துவ முறையை யூனானி மருத்துவமென்று பெயரிட்டு ஆதரித்து மருத்துவர்களுக்குத் தம் அரசில் சிறப் பான இடம் அளித்து வந்தனர். அக்காலத்தில் தமிழ்நாட்டில் செல்வாக்குடனிருந்த இந்துக்களான சிற்றரசர்களும், ஜமீன் தார்களும், முகம்மதிய மன்னர்கள் அவர்களுடைய மருத்துவ முறையைச் சிறப்பித்துப் போற்றியாதரவளித்தமையைக் கண்டு தம்முடைய எல்லையில் தமிழ் மருத்துவத் தொண்டு புரிந்து வந்தவர்களுக்கு இறையிலி மானியம் வழங்கி ஆதரவளித்து வந்தனர். இதை இட்போதும் சில ஊர்களில் நிலக்கணக்கு விவரங்களைப் பார்க்க நேர்ந்தால் 'மருத்துவர் மானியம்' என்னும் பெயரோடு சில பல காணி நிலங்கள் இருப்பதைக் காணலாம்.

நம்நாடு ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்படும் முன்னரே மேல் நாட்டுக் கிறித்தவ மதபோதகர்கள் நம்நாட்டில் மேல்நாட்டு கல்வி முறைக்கும், மருத்துவ முறைக்கும் வித்தூன்றி மக்களைக்

கவர்ந்தீர்த்துக் கிறித்தவ மதத்துக்கும் தங்களுக்கும் ஆதரவு தேடிக்கொண்டனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தைக் கிழக்கிந்திய வாணிபக் குழுவின் ஆட்சிக் காலம் என்றும், அரசும் பாராளுமன்றமும் நேரடியாக ஆட்சி செலுத்திய காலம் என்றும் இரு வகையாகப் பிரிக்கலாம். அதில் முதலாவது, நாடு பிடித்து விரிவாக்கும் நோக்கத்துடன் செயல்பட்ட காலம் என்பதும், பின்னது மக்களுக்குள்ள தொழில், வாணிகம் முதலிய துறைகளில் முன்னேற விடாமல் வைத்து அடிமைகளாக்கி ஆண்டகாலம் என்பதும் யாவரும் அறிந்த உண்மை. அதன் பயனாக மக்களிற் பெரும் பாலோருக்கு மொழி, நடை உடை பாவனை யாவும் ஆளும் மக்களைப் பின்பற்றும் பழக்கம் வேரூன்றி நம் நாட்டுக் கலை, ஆசாரம்,நடையுடைபாவனைகள் யாவும் பழமையானது என்று எள்ளி ஒதுக்கப்பட்டு நாளடைவில் கைவிடப்படும் நிலை ஏற்பட்டுவிட்டது. இஃது இவ்வாறுள்ள நாட்டுமக்களின் நிலையில் நாட்டு மருத்துவத்தின் கதியும், தாய்மொழியின் நிலையும் அடிமட்டத்துக்குப் போய், இருக்கும் இடமே அறியவொண்ணாத நிலையை அடைந்தது. முகம்மதியர் ஆட்சிக் காலத்து மிக்க மதிப்போடு திகழ்ந்த யூனானி மருத்துவ முறையும் நம் நாட்டு சித்த ஆயுள்வேத மருத்துவத்தின் நிலையை அடைந்தது. போக்கு வரவு வசதியும், கல்வியறிவும் மட்டுப்பட்ட சூழலில் நம் நாட்டு மருத்துவத்துக்கு மக்களின் ஆதரவு நல்ல நிலையில் இருந்ததால் நம் நாட்டு மருத்துவ முறைகள் வழக்கொழிந்து மறைந்து போகாமல் இருக்கலாயின.

இவ்வாறுள்ள நிலையில் தஞ்சையையாண்ட சரபோஜி மன்னரின் காலத்தில் நம் நாட்டு மருத்துவமுறைகளுக்கெல்லாம் ஆதரவு கிடைத்தது. அவருடைய காலத்தில், ஆங்காங்குக் கேட்பாரற்றுக் கிடந்த மருத்துவம், கலை, வரலாறு, இலக்கியம் முதலியவை பற்றிய ஓலைச்சுவடிகள் யாவும் ஒருங்கு திரட்டப்பட்டு ஓர் ஏற்றமான இடத்தில் காப்பாக வைக்கப் பட்டன. சித்த, ஆயுள்வேத, யூனானி மருத்துவர்களை ஊக்குவித்து மக்களுக்கு மருத்துவ உதவி செய்ய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது. திரட்டிய ஏடுகளை வரிசைப்படுத்தி ஆய்வு செய்து பல நூல்களை எழுதவும் வாய்ப்புகள் அளிக்கப் பட்டன. மருந்து செய் சாலைகளை நிறுவி அனைத்து மருந்துகளையும்உற்பத்திசெய்யும்பணிக்கு ஆதரவுஅளிக்கப்பட்டது. மூன்று மருத்துவ முறைகளிலும் பற்பல அரிய பெரிய மருந்துகள் எல்லாம் உற்பத்தி செய்யப்பட்டுத் தக்க மருத்துவர் மூல

மாக மக்களுக்குப் பயன்படும் வண்ணம் முன்னணிக்குக் கொண்டுவரப்பட்டன. இவ்வாறு, அச் சிற்றரசரின் ஆதரவு சிலகாலம் நீடித்தது. அம் மன்னர் மறைவுக்குப் பின் ஆட்சி யைக் கைப்பற்றியவர்களின் ஆதரவின் குறைவால், நம்நாட்டு மருத்துவக்கலைக்குப் பழைய நிலை ஏற்பட்டுவிட்டது. எனினும், பல சித்த, ஆயுள்வேத, யூனானி மருத்துவர்கள் பொதுமக்களின் இடையறாத ஆதரவின் பலத்தால் மனம் தளராமல் மருத்துவ உதவி மக்களுக்கு கொடுத்து வந்தார்கள்.

அதன் பின், பல்லாண்டுகளுக்குப்பின் ஆங்கிலேய ஆட்சியில் பழைய சென்னை இராசதானி என்னும் பெயரில் தெலுங்கு, கருநாடக, மலையாள நாடுகளின் பகுதிகள் யாவும் ஒன்றி ஒரே இராச்சியமாக இருந்த காலத்தில் சென்னையில் நீதிக்கட்சி ஆட்சி செலுத்திய காலத்தில் நாட்டுப்பற்றும், நாட்டு மருத்துவக் கலைகளில் ஈடுபாடும் கொண்ட பனகல் அரசர் முதல் மந்திரியாகத் திகழ்ந்தார். அவருடைய பெருமுயற்சி யாலும், சர் முகம்மது உஸ்மான் என்னும் பெருந்தகையாரின் அருந்துணையாலும், காப்டன் ஜி.சீனிவாச மூர்த்தி அவர்களின் அயராஉழைப்பாலும் சென்னையில் அரசாங்கத்தின் ஆதரவில் 1924 ஆம் ஆண்டு ஒரு நாட்டு மருத்துவக் கல்லூரி தொடங்கத் திட்டமிட்டு ஒரு நாட்டு மருத்துவப் பள்ளி தொடங்கப்பட்டது. அப் பள்ளியில் சித்த,ஆயுள்வேத, யூனானி மருத்துவமுறைகள் போதிக்கப்பட்டு வந்தன. வைத்திய ரத்னா க.ச. முருகேச முதலியார் அவர்களின் பெருமுயற்சியால் பல எதிர்ப்புகளுக் கிடையே சித்தமருத்துவப் பிரிவு நிலைபெறச் செய்யப்பெற்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

அப் பள்ளி தொடங்கிய நாளில், வேறு எந்த மாகாணத் திலும், அத்தகைய சிறந்த பாடத் திட்டங்களுடன் போதிக்கும் நாட்டு மருத்துவப்பள்ளி அரசாங்கத்தின் ஆதரவில் ஏற்படுத் தப்படவில்லை என்பதை நினைவிலிருத்த வேண்டும். அதன் பின் பல்லாண்டுகளுக்கப்புறம் மற்ற மாகாணங்களில் ஆயுள் வேத, யூனானிக் கல்லூரிகள் அரசாங்கத்தின் ஆதரவில் தொடங்கப்பட்டுத் தற்போது மிகவும் முன்னேறியுள்ளன.

1937-38 ஆம் ஆண்டு சென்னை இராசதானியில் ஏற்பட்ட காங்கிரஸ் மந்திரிசபையில் டி. எஸ். எஸ். ராஜன் மருத்துவத் துறை அமைச்சராக இருந்தார். அவர் ஆங்கில மருத்துவ முறை பயின்றோருள் பள்ளிப்படிப்பு, கல்லூரிப்படிப்பு என இருவகையான நிலை கூடாதென்று பள்ளிப் படிப்பு நிறுத்தப்

பட்டது. அதே சமயம் இந்திய மருத்துவப்பள்ளியின் பாடத் திட்டம் மிக்க பற்றாக்குறையானது என்றும், தகுதியற்ற தென்றும், நாட்டு மருத்துவ முறைகள் யாவும் விஞ்ஞான அடிப்படையில் இல்லாதவை, தற்காலத் தேவைக்கு ஏலா தவை, முன்னேற்றம் சிறிதும் இல்லாதவை என்றும் குறை கூறி, அவ்வகை மருத்துவத்தைப் போதிக்கும் பள்ளிக்கூடம் இருப்பது மனிதவினத்துக்கு எள்ளளவும் பயனற்றது என்றும் குறை கூறி அந்தப் பள்ளியை மூடத் திட்டமிட்டார். அச் சமயம் அந்தப் பள்ளியின் முதல்வராக இருந்த காப்டன் ஜீ. சீனிவாச மூர்த்தி அவர்கள் தக்க சான்றுகள் மூலம் மருத் துவப்பள்ளியின் பாடத்திட்டத்தின் நேர்மையையும், போதிய தன்மையையும் அக் கல்லூரியில் பயின்றவர்களுடைய சேவைத் திறனையும் பற்பல எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கிக் கூறி அம் மருத்துவப் பள்ளியை நிலைக்கச் செய்தார்.

பின்னர், இந்த நாட்டு மருத்துவப் பள்ளி ஒரே நிலையில் யாதொரு மேம்பாடும் குறைபாடுமின்றி 1946 வரை நடந்து வந்து 1947-ல் நாட்டுக்கு உரிமை கிடைத்த பிறகு, திரு. டி. பிரகாசம் முதலமைச்சராகத் திகழ்ந்தபோது கல்லூரித் தகுதிக்கு உயர்த்தப்பட்டது. அக் கல்லூரி எட்டு ஆண்டு காலம் நடந்துவந்தது.

மீண்டும், ஒரு காங்கிரஸ் மந்திரி சபையின் ஆட்சிக் காலத்தில் 1955ஆம் ஆண்டு நிரந்தரமாக மூடப்பட்டது. அந்தக் காலத்தில், பொதுமக்களும், மருத்துவச் சங்கங்களும் தென்னாட்டில் பல இடங்களில் பொதுக்கூட்டங்கள் கூடி அரசினரிடம் இந்திய மருத்துவக் கல்லூரியின் தேவையை வலி யுறுத்தித் தீர்மானங்கள் சமர்ப்பித்தும், தக்க சான்றோர்களின் துணையுடன் அரசாங்கத்தார்களைச் சந்தித்துப் பரிந்துரை வழங்கியும் தற்போது பாளையங்கோட்டையில் உள்ள இந்திய மருத்துவக் கல்லூரி 1964 ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப் பட்டது. அவ்வாறு தொடங்கிய கல்லூரியில் சித்த, ஆயுள் வேத, யூனானி ஆகிய மூன்று மருத்துவ முறைகளையும் போதிக்கும் நோக்குடன்தான் அது தொடங்கப்பட்டது. ஆனால், பல்கலைக்கழகம் வகுத்தபடி தகுதியுடைய மாணவர் கள் ஆயுள்வேத, யூனானி மருத்துவத் துறைகளைப் பயில மனுச் செய்யவில்லை என்ற காரணத்தால், சித்த மருத்துவ

முறைமட்டுமே போதிக்கப்பட்டு வருகிறது என்னும் உண்மை யாவரும் அறிந்ததே.

தமிழர்கள் பண்டைக்காலத்தில் வாழ்ந்த நிலப்பகுதி, அவர்களுடைய அக்காலத்திய நாகரிக வளர்ச்சி, தெய்வ வழிபாடு, வாணிபம், கல்வி ஆகியவற்றைப் பற்றி 'வல்லுநர் களின் கருத்து'களைப் பிற்சேர்க்கைப் பகுதியில் காண்க.

அவை மேலே கூறிய சித்த மருத்துவத்தின் வளர்ச்சி முதலியவற்றை வலியுறுத்துவதாக உள்ளதை அறியலாம்.

## சித்தர்களின் வரலாறு

மானிடராய்ப் பிறந்த யாவர்க்கும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கு உண்டு என்பது யாவரும் அறிந்த உண்மை.

மனத்தை உடையவன் மனிதன் என்பதும் யாவர்க்கும் தெரிந்த உண்மையே. மனத்தின் தொழில் சிந்திப்பது. அஃதாவது எண்ணுவது. மனத்திலெழும் எண்ணத்துக்கு அளவே இல்லை என்பதை,

'உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன',

என்னும் ஆன்றோர் வாக்கால் அறியலாம். அப்படி எழும் எண்ணங்களில் நல்லவை தீயவை விரவி இருப்பது இயல்பு. நன்று, தீதின் பாகுபாட்டை அறிவது புத்தியின் செயலாகும். பலப் பல எண்ணங்களையும் புத்தியின் அளவுக்கு ஏற்ப நன்மை தீமையை ஒருவாறு அறிந்து செயல்படத் தொடங்கு வது சித்தத்தின் பணியாகும்.

ஒருவகைப்பட்ட நல்ல எண்ணங்களின்வழிப் பிறந்த குறிக்கோளைப் புத்தி வகுத்துத் தர, அதன்பாற் சித்தத்தைச் செலுத்தி முயன்று முயன்று வெற்றி காண்பதுவே 'சித்தி' என்று கூறப்படும். இவ்வகையில் வெற்றிகண்ட மகான்

களே **சித்தர்கள்** (சித்தி பெற்றவர் சித்தர், சித்தி உடையவர் சித்தர்) என்று கூறப்படுபவர்கள் ஆவார்கள். ஆகவே மனம், புத்தி, சித்தம் என்னும் அந்தக்கரணங்களை ஒன்றிக்க வல்ல திறமையுடையவர்கள் சித்தர்கள் என்பதாயிற்று. ஒரு பொருளோடு ஒரு பொருளையோ பல பொருள்களையோ இரண்டற ஒன்ற வைப்பது 'யோகம்' எனப்படும். உதாரண மாகத் 'திரிகடு சூரணம்' என்னும் மருந்து ஒரு யோகம் எனப் படும். இதில் சேரும் மூன்று பொருள்களும் கார்ப்புப் பொருள் களேயானாலும் தனித்தனிச் சரக்காய் இருக்கும்போது நிறம், வடிவம், குணம் முதலியவற்றில் வேறுபாடுடையவையே. ஆனாலும், அவற்றைத் தக்க அளவோடு பக்குவப்படுத்தி ஒன்றித்துத் தூளாகச் செய்து நாம் கொண்ட குறிக்கோளுக்குத் தக்க மருந்தாகச் செய்வதால் அதனை ஒரு யோகம் என்பர் பெரியோர். அதே போலச் சித்தர்கள் எனப்பட்ட பெரியோர் கள் தம்முடைய மனம், புத்தி, சித்தம் என்னும் மூன்று அந்தக் கரணங்களையும் ஒன்றித்து வெற்றி கண்டு தம் குறிக் கோளை அடைந்தவர்கள் என அவர்களுடைய நூல்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றது. அவர்களிடம் அகங்காரம் இல்லாத தன்மையாலேயே தம்மை யாரென்றும், தம்முடைய சதுரப்பாடு எத்திறத்தது என்றும், தம் பிறப்பு, வாழ்க்கை வரலாறு எத்தகைத்தென்றும் கூறாமல் மறைந்தனர். ஆயினும், உலகுக்கு உபகாரமாக அவர்கள் எழுதியும், பயிற்றுவித்தும் சென்ற நூல்களும் சீடர்களும் அவர்களுடைய பெருமை யையும், சேவையின் உயர்வையும் உலகுக்கு உணர்த்தி வருவதை யாவரும் அறிவர். அத்தகைய சித்தர்களின், சித்தின் வெற்றியானது, அவர்களுடைய ஆன்மசக்தியின் ஒப்பற்ற உயர்வின் பயனாக விளைந்ததாகும் என்னும் உண்மையை யும் அவர்களுடைய நூல்களின் வாயிலாக அறியலாம்.

சித்தத்தில் சிந்தித்தபடியே உடலும் உண்பனவும் அடைந்து அனுபவிக்கிறவர்களே சித்தர்கள். இவர்கள் சிவ நெறியைப் பூண்டு ஒழுகிய சித்த சமயத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் ; மேற்கண்ட சமயத்தில் சொல்லியுள்ள, அநுட்டிக்க வேண்டிய கிரியைகளைக் குறித்த விடயங்களையும் விதிகளை யும் விலக்கிவிட்டு, ஆன்மஞானம் ஒன்றையே கடைப்பிடித் தவர்கள். இவர்கள் காரணகாரிய வகைகளால் உடம்பைச் சோதித்து, எவ்வெவ் வகைப் பொருள்களால் உடல் வளர்ந்து அழிகின்றதென்பதை ஊக்கத்தாலும் முயற்சியாலும் கண் டறிந்து உடம்பைப் பொய்யென்று சொல்லுவதற்கு மாறாக,

மெய்யென்னும் சொல்லுக்குப் பொருள் கண்டு, சிலப்பதி காரத்தில் கூறியபடி அணிமா, மகிமா, லகிமா, கரிமா முதலிய அட்டமா சித்திகளையும் அடைந்தவர்கள். மேலும், தங்க ளுடைய உடம்பை மாத்திரம் தகுந்தபடி பலப்படுத்திக் கொண்டால், பிறப்பு இறப்பினின்று நீங்கிவிடலாம் என்று உணர்ந்து, அநேக காலம் உயிருடனிருக்கக்கூடிய நித்திய வாழ்வைப் பெற்ற பெரிய மகான்களாவர். இவர்கள் காய கற்ப வழியாலும், யோக சாதனையாலும் அபார சக்தி வாய்ந் தவர்கள். அழியக்கூடிய உடம்பைக் கொண்டே, ஞானசக்தி யால் மோட்ச சாதன வழியைத் தேடக் கூடியவர்கள்.

மேலும், இவர்கள் மூச்சையடக்கிப் பிடித்து மூலக்கன லாகிய குண்டலினி சக்தியை எழுப்பி, மணி மந்திர மருந்து களின் உதவியால் மாறாத மதியமிர்தமுண்டு நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடாகிய இவற்றை அறியாது நித்திய உடம் பைப் பெற்றவர்கள். உலோகங்களாலும், மந்திரசக்தியாலும் ககனக் குளிகை கொண்டு அநேக அண்டங்களைச் சுற்றி ஆங்காங்குள்ள அதிசயங்களைக் கண்டு ஆனந்தித்தவர்கள்.

ஆகவே, இவர்கள் அளவற்ற சக்தியுடையவர்கள். தங்க ளுடைய மாமிச உடலை (ஸ்தூல சரீரத்தை) இலிங்க வடிவ (சூட்சும சரீர) மாக மாற்றக்கூடிய சக்தி வாய்ந்தவர்கள். இவர்களுடைய மகத்துவத்தைப் பற்றி யோக நூல்களில் அநேகத் திருட்டாந்தங்களைக் காணலாம். இவர்கள், **மனோ சக்தியால்,** மருந்து கொள்ளாமலே உடம்பின் அணுவாதி தத்து வங்களை மாற்றி, பிணி, சாக்காட்டை அகற்றவல்லவர்கள். அன்றியும், மனோசங்கற்பத்தினால் ஏற்பட்ட மனோசக்தியை நினைத்தபடி நாடி வழியாகச் செலுத்தாமலே, மின்சாரச் சக்தி யைப் போல் உலகத்தில் அண்டம் முழுவதிலும் உள்ள பல திசைகளின் விடயங்களை இருந்தபடியே தெரிந்துகொள்ள வும், எங்கேனும், யாருடனேனும் உரையாடக்கூடிய வல்லமையும் பெற்றவர்கள்.

**'மருவவே வாசிவைத்து மூலத் தூணு**
**வழியோடே யாறுதலம் ஏறிப் பாரு**
**தருவவே சதாதார கத்தில் நில்லு**
**சகத்திரமா மரவிந்தப் பூவைக் கொய்வாய்**
**அருவவே யாயிபதந் தனையர்ச் சித்தே**
**அடுக்கநின்ற கங்கையிலே ஸ்நானம் பண்ணி**
**உருவவே பஞ்சதசாட் சரமா மத்தை**
**உச்சரிப்பாய் மாதாவின் பதத்தில் தானே.**

பதத்திலே அர்ச்சனைக ளெல்லாம் பண்ணிப்
பாங்கான வெளிதனிலே வத்து வைத்து
மதத்திலே பூசைபண்ணிப் பாவ கித்து
மயங்காமல் வத்துவைத்தான் பானம் பண்ணி
இதத்திலே வாசியைத்தா னிழுத்தே யேற்றி
ஏகமாய் மனதொன்றி இருந்து கொண்டு
விதத்திலே ஆடினதோ ராட்டைப் பார்த்து
மேன்மேலும் மீறியதோர் விளக்கம் பாரே.''

—(போகரேழாயிரம்—2ஆம் ஆயிரம்—பா. 97,98.)

'போமென்ற ஓங்கார மஞ்செழுத்தோ டாறும்
பேரான பஞ்சகர்த்தர் இருந்திடந்தான் பாரு
ஆமென்ற ஆங்கார ஆணவமும் போனால்
அப்பவல்லோ அகாரமுத லுகாரந் தோன்றும்
வேமென்ற மகாரமொடு விந்து நாதம்
விளங்கியதன் மேல்நிற்கும் பராபரந்தான் மைந்தா
வாமென்ற மகாரத்தைப் பற்றி யேறு
மனமொன்றி லாகிரியா லொத்துக் காணே.'

—(போகரேழாயிரம்—2ஆம் ஆயிரம்—பா. 346)

மேலே கூறப்பட்ட பாடல்களின் வாயிலாக மனம் ஒன்றும் வழிகளையும் அதன் சிறப்பையும் பயனையும் அறியலாம். அதையே திருவாதவூரடிகள், 'ஊனினைச் சுருக்கி யுள்ளொளி பெருக்கி' என்றமை, சித்தத்தைச் சிவன்பால் வைத்துச் சிவ சிந்தனையில் மூழ்க மூழ்கச் சித்த விகாரம் ஒடுங்கி அதன் பயனாக ஆன்ம சக்தி ஓங்குமென்றும் அதுவே செம்பொருட் சோதியென்னும் உண்மையைக் கரவாது கூறியதன்றோ? சித்தர்கள் கூறியதும் வாதவூரடிகள் கூறியதும் கருத்தொரு மித்தவை யாகும்.

இவ்வண்ணம் மனம் அடங்கப்பெற்ற ஆன்றோர்களுக்கு இயற்கையும் பணிந்து ஏவல் செய்யும். ஆகவே, சித்தர்கள் செயற்கரிய செயல்களைச் செய்ய வல்லவராவார்கள். இத் தகைய சித்தர்களின் ஆற்றலைத் தாயுமான அடிகளார் தம்

பாடல் தொகுதியில், 'வித்தகச் சித்தர்கணம்' என்னும் பகுதியில் பல பாக்களால் விவரித்துள்ளார். அதில் ஒரு பாடலை எடுத்துக்காட்டாக இங்குக் காணலாம்

'பாட்டளி துதைந்துவளர் கற்பகநந் நீழலைப்
பாரினிடை வரவ ழைப்பீர்
பதுமநிதி சங்கநிதி இருபாரி சத்திலும்
பணிசெயுந் தொழிலா ளர்போல்
கேட்டது கொடுத்துவர நிற்கவைப்பீர் பிச்சை
கேட்டுப் பிழைப்போ ரையும்
கிரீடபதி யாக்குவீர் கற்பாந்த வெள்ளமோர்
கேணியிடைக் குறுக வைப்பீர்
ஓட்டினை யெடுத்தாயி ரத்தெட்டு மாற்றாக
ஒளிவிடும் பொன்னாக் குவீர்
உரகனு மிளைப்பாற யோகதண் டத்திலே
உலகுசுமை யாக வருளான்
மீட்டிடவும் வல்லநீ ரென்மனக் கல்லையனன்
மெழுகாக்கி வைப்ப தரிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் நிலைபெற்ற
வித்தகச் சித்த கணமே.'

— (தாயுமானவர் பாடல்)

கணம் என்றால் கூட்டமென்றும், சித்தர் கணம் என்பது பதினெண் வகைக் கணத்தவர்களில் ஒரு கணத்தவர் (சாரார்) என்றும் கூறப்படும்.

### பதினெண்கணத்தவர்கள்

(1) அசுரர், (2) அமரர், (3) அந்தணர், (4) ஆகாச வாசி (விண்ணவர்), (5) இயக்கர், (6) உரகர் (உரகம் = பாம்பு — மனிதன் பாதி பாம்பு பாதியான உடலுள்ளவை), (7) கருடர், (8) கந்தருவர், (9) கிம்புருடர் (குதிரை உடல், மனிதன் தலை), (10) கின்னரர் (குதிரைத் தலை, மனித உடல்), (11) சித்தர்கள் (சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலுள்ள வெளியில் பூரண அருளைப் பெற்று வசிப்பவர்கள்), (12) நிருதர் (கரிய நிறமுடையவர்கள் — அரக்கர்), (13) பூதர், (14) பைசாசர், (15) போகபூமியர், (16) முனிவர், (17) விந்தயர், (18) வித்தியாதரர் என்பவராவர்.

தமிழ் வைத்தியத்திற்கே இவர்கள் காரணகர்த்தர்களாவர். உலகோர்க்கு எளிதில் புரியும்வண்ணம் தமிழ்ச் செய்யுள்களில் பாடி வைத்த சித்தர் நூல்கள் பலவாம். இவை உலக மக்களுக்குப் பயன்தரும் நோக்கத்துடன் இயற்றப் பெற்றவையே. இவர்கள் எழுதி வைத்த நூல்கள் எழுபதாயிரம், எண்பதாயிரம், ஏழு லட்சம் எனப் பலவாறாகக் கூறப்படும். தற்காலம் கிடைத்துள்ளவை மிகச் சிலவே. இவர்களைப் பிறநாட்டவர் அநேக விதமான பெயரிட்டு வழங்குவர். இவர்களது வல்லமையைத் தாயுமான அடிகள் விவரித்ததை மேலே கண்டோம். மற்றும்,

**'காரப்பா சித்தன்கற் பத்தோ டொன்றிக்**
**கைலாசப் பாசமதாய்க் கருதி வாழ்வான்**
**நேரப்பா கற்பமதை யுண்டு தேறி**
**நிசமான வாசியிற்சென் றிருப்பான் றானே.'**

என்றும்,

**'தானான தானவனாய் நின்று வாழ்வான்**
**சதகோடி நாளுமொரு நாளாய் நிற்பான்**
**ஊனான காயாதி கற்ப மெல்லாம்**
**உண்டுகரை யேறியவ னுறுதி யாவான்**
**வானான அண்டபகி ரண்ட மெல்லாம்**
**வரைகடந்து திரையகற்றி வந்து சேர்வான்**
**தேனான மொழியுடையா னமுத பானம்**
**தினந்தோறும் கொள்பவனே சித்த னாமே.'**

என்றும், கடைப்பிள்ளைக் கலைஞானம் 1201 என்னும் நூலில் கூறியுள்ள சித்தர்களின் வல்லமையைக் கண்டுகொள்க.

சித்தர்கள் தம் நூலில் கூறியுள்ள வாத முறையில் தங்கம் மிக எளிதில் செய்யமுடியும் என்னும் நம்பிக்கை மக்களிடையே இன்றும் இருந்துவருகிறது. தங்கம் விரும்பத்தக்க பொருளாக இருப்பினும், அது முயற்சியின்றிக் கிடைப்பதாயின் அல்லது எளிதில் கிடைப்பதாயின் அதனை ஒருவரும் மதிக்க மாட்டார்கள். இரசவாத வித்தை பலித்து அதனால் தங்கம் எளிதில் அளவுகடந்து கிடைக்குமாயினும் உலகம் ஒரு காசு பெறுமான செல்வம் அடையவிடாது. சுரங்கத்தில் அதிகமாகத் தங்கம் பெறுபவர்கள்கூட, இப்போதைய உலகக் கட்டுப்பாட்டுக்கு இணங்க, பொதுமக்களின் உழைப்பைக்

கொண்டு ஒரு சிலர் செல்வந்தராவர். இரசவாதவித்தை உண்மையாய் இருந்து மிகுந்த தங்கம் கிடைக்குமாயின் அது நாணயமாக இராது. ஆகவே, சித்தர்கள் தங்கள் நூல்களில் கூறியுள்ளது போல மிகவும் முயன்று, ஆன்ம சித்தியும் ஆன்ம சுத்தியும் பெற்று, காயசுத்தியும் காயசித்தியும் பெற்ற பின்னர் வாதத்தில் முனைந்தால்தான் வெற்றிகாண முடியும். அவ்வண்ணமின்றி எல்லோரும் வெகு சுளுவாகத் தங்கம் செய்ய வெண்ணி முனைந்தால் கீழ்க்காணும் சித்தர் வாக்கின்படி கெட்டலைவர் ரென்பது திண்ணம்.

**'ஆமேதானிவ் வையத்தே மடையர் கூடி**
**அலைந்தலைந்து சுட்டதனா லாவ தென்ன**
**போமேதான் புகையெழும்பி மேகம் போலப்**
**பொருமியே கண்கெட்டுப் போவார் பாரில்,**
**வாமேதான் வாய்புலம்பி மடைய ரெல்லாம்**
**வாதமது பலிக்குமென்றே பொருளைத் தோற்றுத்**
**தாமேதான் கடைச்சரக்கைச் சுட்டுச் சுட்டுக்**
**கருவறிந்த யோகியைப்போல் கண்கெட் டாரே.'**

—(அகத்தியர் பரிபாடைத் திரட்டு)

ஆகவே, சித்தர் கூறிய முன்னிரண்டு துறைகளாகிய, 'யோகம், ஞானம்' ஆகியவற்றில் சித்தி பெறாதவர் வாதத்தில் வெற்றி காணார் என்பதை அறிய வைத்துள்ளமை காண்க.

மேலும், சித்தர் என்பவர் எந்த அறிவுத் துறையிலாவது சித்தியடைந்தவராவர். உலகிலுள்ள அறிவாளிகளும் ஞானிகளும் கூறியவற்றைக் கேட்டு ஆய்ந்து அதில் உண்மையெனக் கண்டவற்றைத் தமதாக்கி அதை விளக்கி வளர்ப்பதுவே சித்தியடைபவர்களின் இயல்பாம்.

சித்தர் சிவத்தை நினைந்து நினைந்து சிவமானவராதலால் அவர்கள் நரை திரை, மூப்பு, பிணி, சாக்காடு முதலியவற்றைப் பெறாது, என்றும் இளமையோடும் வனப்புடனும் விளங்குவார்களென்பதை,

**'நீல நிறனுடை நேரிழை யாளொடும்**
**சாலவும் புல்லிச் சதமென் றிருப்பார்க்கு**
**ஞால மறிய நரைதிரை மாறிடும்**
**பாலனு மாவார் பார்நந்தி யாணையே.'**

—(திருமந்திரம்.)

என்னும் திருமூலர் வாக்கால் அறியலாம்.

ஆயினும், சித்தர் எனப்படுபவர் பொதியமலை, இமய மலை, சதுரகிரி, கொல்லிமலை, கஞ்சமலை முதலிய மலை களின் குகைகளில் தங்கித் துறவறம் தாங்கி யோகப் பயிற்சி செய்துகொண்டும், தம் மாணவர்களுக்கு யோகம் பயிற்று வித்தும், ஞானம் போதித்தும், உலோகம், பாடாணம், உப்பு கள் ஆகியவற்றைப்பச்சிலை, செய்நீர், திராவகம்,[1] துருதி ஆகிய வற்றின் உதவிகொண்டு கட்டு, களங்கு, சுண்ணம், பற்பம் (நீறு), செந்தூரம் என்னும் உயர்ந்த மருந்துகளாகச் செய்து மன்பதைகளின் தீராப் பிணி யென்று ஒதுக்கப்பட்ட நோய் களைத் தீர்த்துவருபவர்களென்றும், தாமே காயகற்பமுண்டு நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு நீங்கியவராய் வலுத்த உடலும், நிலைத்த உள்ளமும் கொண்டவரென்றும் இரசவாதக் கலையில் வல்லவரென்றும் பொதுமக்கள் நம்பினர். இது பெரும்பாலும் உண்மையே. ஆனால்,

**'குரைகடல் வறுமையும் குறத்தி யுண்மையும்**
**நரையற மருந்தையுண் டிளமை நண்ணலும்**
**விரைசெறி குழலினாள் வேசையர் ஆசையும்**
**அரையரன் பமைவதும் ஐந்தும் இல்லையே.'**

என்று கூறும் விவேகசிந்தாமணி.

கடல் முற்றும் சுவறுதலும், குறத்தி குறிசொல்லில் உண்மையைக் காணலும், நரை நீங்க மருந்துண்டதால் இளமை எய்துதலும், விலைமாதர் ஆடவர்பால் ஆசையுற்ற நிலையும், மன்னன் அன்புடையவனாதலும் ஆகிய இவ் வைந்தும் உலகில் இல்லாத பொருள்களாகும் என்கிறது பாடல். நரைமயிர் கறுக்க மட்டும் மருந்துண்ணாமல் சித்தர் முறைப்படி காயகற்ப மருத்துவம் பெற்றால், 'சந்ததமும் இளமையோடிருக்கலாம்' என்பது சித்தர்வாக்கு. அது பொய்க்காது என்பது மக்களது அநுபவமும் நம்பிக்கையு மாகும்.

இவ்வுடல் உரிய காலத்தில் வீழ்வது உறுதியென்று அகத்தியர் தாம் இயற்றிய பரிபூரணம் 400 எனும் நூலில் விளக்குகிறார். ஆகவே, காயகற்பமென்னும் முறை உடல்

**1 துருதியென்பது பல கூட்டுச் சரக்குகளைச் சேர்த்துச் செயற்கை முறையில் உண்டாக்கப்படும் நீர்ப்பொருள். போகர் இரண்டாமாயிரத்தில் இதன் விளக்கம் உள்ளது.**

நீண்ட காலம் நிலைத்திருக்கச் செய்யும்படியான சாதனை எனக் கொள்ளல் வேண்டும்.

சித்தர்கள் யோகப் பயிற்சியின் முதிர்ச்சியால் ஞானம் பெற்று அதன் துணைகொண்டு வாதம் செய்து மக்களின் உடற்பிணிகளையும் உள்ளப் பிணிகளையும் தீர்க்கமுனைந்து வெற்றி கண்டவர்கள். வாதமுறையாலும் ஒரு சிறிது ஞான மடைய வழியுண்டென்பதும் சித்தர்களின் உடன்பாடாகும். ஆகவே, சித்தர்கள் யாவரும் யோகம், ஞானம், வாதம், வைத் தியம் என்னும் நான்கு துறைகளிலும் சித்தி பெற்றவர்கள் என்றும், உடல் அழியும் முன்னதாகவே முத்திநிலை பெறு தற்கு ஏதுவான சித்திகளைப் பெறவேண்டுவது இன்றியமை யாததென்றும், அதற்கு முதற்படியாக யோக சாதனத்தைக் கடைப்பிடித்தும் வற்புறுத்தியும் உள்ளனர். அவ்வகை யோகப் பயிற்சிக்குக் காயகற்ப முறை உதவியாக இருக்குமென்பதை உணர்ந்து வாதவைத்தியத் துறையில் அதை நுழைத்து வெற்றியும் கண்டுள்ளனர்.

சித்தர்களை. நவநாத சித்தர், பதினெண்சித்தர், நவகோடி (ஒன்பது கோடி) சித்தர்கள், நவசித்தர் (தற்கால சித்தர்) எனப் பலவகையாகப் பற்பல நூல்கள் கூறும்.

## (அ) பதினெண் சித்தர்கள்

தொகையாகக் கூறப்படும் இவர்களின் பட்டியல் ஒவ்வொரு நூலில் சிலசில பெயர்கள் கூடியும், ஒவ்வொரு பெயர் விடு பட்டும் காணப்படுகின்றது. மருத்துவ வாதயோக ஞான சாத்திரமென்னும் நூலில் பதினெண் சித்தர்களின் பெயர்களும் அவர்களுடைய சமாதித் தலங்களும் கூறப்பட்டுள்ளன. அப்பாடல் வருமாறு:

**‘ஆதிகா லத்திலே தில்லையில் திருமுலர்**
**அழகர்மலை இராம தேவர்**
**அனந்த சயனம் கும்பமுனி திருப்பதி**
**கொங்கணவர், கமலமுனி யாரூர்**
**சோதிரங்கஞ் சட்டமுனி கருவை கருவூரார்**
**சுந்தரா னந்தர் கூடல்**
**சொல்லுமெட் டுக்குடியில் வான்மீக ரோடுநற்**
**றொல்காசியில் நந்தி தேவர்**

பாதியரிச் சங்கரன் கோவில்பாம் பாட்டி
பழநிமலைப் போக நாதர்
பரங்குன்ற மதில்மச்ச முனிபேரூர் கோரக்கர்
பதஞ்சலி இராமேச் சுவரம்
சோதிவைத் தீச்சுவரன் கோயிலில் தன்வந்திரி
திகழ்ம யூரங் குதம்பைச்
சித்தருணை யோரிடைக் காடர் சமாதியில்
சேர்ந்தன ரெமைக் காக்கவே.'

மேற்கண்ட பாடலில் திருமூலர், இராமதேவர், கும்பமுனி, கொங்கணர், கமலமுனி, சட்டமுனி, கருவூரார், சுந்தரானந்தர், வான்மீகர், நந்திதேவர், பாம்பாட்டி, போகநாதர், மச்சமுனி, கோரக்கர், பதஞ்சலி, தன்வந்தரி, குதம்பை, இடைக்காடர் என்று பதினெண் சித்தர்களின் பெயர்கள் கூறப்பெற்றுள்ளன.

அண்மையில் தொகுக்கப் பெற்ற சென்னைப் பல்கலைக் கழக அகராதியில் பதினெண் சித்தர் பட்டியலில் இடைக் காடரின் பெயரை நீக்கிப் **போதகுரு** என்று ஒரு சித்தரின் பெயரை ஏற்றியுள்ளார்கள். அவர் இயற்றியுள்ளதாக எந்த நூலும் இதுவரை கிடைத்திலது.

'கருவூரார் பல திரட்டு' என்னும் நூலில் பதினெண் சித்தர் களின் வணக்கம் கூறும் பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

'பார்த்திடவே நந்தீசர் மூலத் தீசர்
பண்பான அகத்தீசர் சட்டை நாதர்
போர்த்திடவே பதஞ்சலியும் ஊனர் கண்ணர்
கோரக்கர் கமலமுனி சண்டி கேசர்
கூர்த்திடவே இடைக்காடர் சிவாய சித்தர்
கொங்கணவர் தந்தை போக நாதர்
காத்திடவே மச்சமுனி பிண்ணாக் கீசர்
காலாங்கி சுந்தரரும் காப்பு தானே.'

இப் பாடலில் முதல் பட்டியலில் கூறப்பெறாத ஐந்து சித்தர்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அவை ஊனர், கண்ணர், சிவாய சித்தர், சண்டிகேசர், காலாங்கி என்பன வாம். ஆனால், முதல்பட்டியலில் கூறப்பட்ட இராமதேவர், கருவூரார், வான்மீகர், பாம்பாட்டி, தன்வந்தரி என்னும் ஐந்து சித்தர்களின் பெயர்கள் விடுபட்டுள்ளன.

இவ்வண்ணமே சித்தர் நூல்களை ஆராயுமிடத்து மேலும் பற்பல சித்தர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அவர்கள் எல்லோருடைய வரலாறுகளும் சரிவரக் கிடைக்கவுமில்லை. எனவே, மேலே கூறப்பட்ட இருபாடல்களிலும் காணப்பட்ட சித்தர்களின் வரலாறுகளையும் கிடைக்கப் பெற்றுள்ள சித்தர் நூல்வழி ஆய்ந்து கண்டவற்றை மட்டும் இங்கு விவரிப்பாம். மேலும், நவநாத சித்தர்களின் சரித்திரமும் சரிவரக் கிடைத்திலது. அவர்களும் மேற்படி பதினெண்மரில் சேர்க்கப் பட்டவராய் இருத்தல் வேண்டுமென்று ஊகிக்கற்பாலதே.

## 1. அகத்தியர்

அகத்தியரைப் பற்றிக் குறிப்பிடாத புராணங்களே இல்லை எனலாம். இவர் கும்பத்திலிருந்து தோன்றியவர் என்பதால் கும்பமுனி யென்றும் குறுகிய வடிவு உடையவராதலால் குறு முனியென்றும் வழங்கப்படுவதும் யாவரும் அறிந்ததே. மற்றும், வண்டமிழ் மாமுனி,சந்தநூல் தமிழ் தந்தவர். குறியோன், பைந் தமிழ் முனிவன், அறிவன், முத்தண்டமிழ் தேர்முனி. தமிழர் கோமான், ஆதிமுனி என்னும் பெயர்களும் பற்பல தமிழ் நூல் களில் அகத்தியரைக் குறிப்பனவாக உள்ளன.

ஆதியந்த'மற்ற காலத்திலும் இடத்திலும் தோன்றிய பல சித்தர்களுக்கும், காலத்தால் முற்பட்டவர் அகத்தியரே என்பது ஆராய்ச்சியாளர் பலருடைய கூற்றாகும். இவர் பன்னீராயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தவராகச் சில நூல்கள் கூறும். இவரை வேளாண் வகுப்பினராகச் சிலர் கருதுவர்.

இவர் கடலைக் குடித்து வற்றச் செய்தவரென்றும். விந்தத்தின் இறுமாப்பை அடக்கியவரென்றும், பார்வதி பரமேசுவரர் திருமணத்தின்போது குழுமிய கூட்டம் காரணமாக உலகின் வடபாகம் தாழாமல் இருக்கச்செய்யத் தென்றிசை நோக்கிச் சிவனால் அனுப்பப்பட்டுத் தமிழ்நாட்டுக்கு வந்தவரென்றும், திருத்தணியில் முருகப்பெருமானிடம் தமிழ் கற்றவரென்றும், குற்றாலத்து மால்வடிவைக் குழைவித்து இலிங்கமாக்கி அன்று முதல் அத்தலத்தைச் சிவத்தலமாக்கியவரென்றும், அன்றும் இன்றும் என்றும், தென்பொதிகையில் தங்கித் தமிழாய்ந்து வரு பவரென்றும் நூல்கள் கூறும்.

இவர் விதர்ப்பநாட்டு மன்னனின் மகளாகிய உலோபா முத்திரை என்னும் கற்பரசியை மணந்து இல்லறத்திருந்தவராகக்

கூறுவர். இவருடைய தவப்புதல்வரே புலத்தியராவார். புலத்தியரைத் 'திண்மை சான்ற சித்தன்' என்று நூல்கள் சிறப்பித்துள்ளமையின், 'மகனுரைக்கும் தந்தை நலத்தை' என்னும் பொய்யாமொழிக்கு இணங்க அகத்தியர் பெருஞ்சித்தராக இருந்திருத்தல் வேண்டுமென்று கருத இடம் தருகின்றது.

'திரிபிற் சிந்தையன் தீதுநன் கிற்படா
ஒருமை கொண்ட வுளத்தன், நம் மன்பருள்
பெரியன்'

எனச் சிவபெருமானால் புகழப்பட்டவர் அகத்தியர் என நூல்கள் கூறும் மேலே கூறப்பட்ட வரிகளில் சித்தர்களின் இலக்கணம் கூறப்பட்டுள்ளதையும் காண்க.

'நீண்டதமி ழால்உலகை நேமியி லளந்தான்' என்றும், 'ஈசன் நிகராய் உலகு சீர்பெற இருந்தான்' என்றும், 'என்றுமுள தென்றமிழ் இயம்பியிசை கொண்டான்' என்றும் கம்பர் அகத்தியரைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

அகத்தியர், தம்மைத் தேடிவந்து வணங்கிய இராமபிரானுக்கு, மனமுவந்து பல மந்திரங்களை அருளிச் செய்து தம்மிடமிருந்த தெய்விகம் பொருந்திய வில்லையும், கணைகள் நிறைந்த அம்பறாத் தூணியையும் தந்தருளி இராவணனை வெற்றிகொள்ள ஆசியும் வழங்கினார் என்பது இராமாயணம் கூறும் அகத்தியருடைய பெருமையாகும்.

இவர் யோகத்தின் இறுதிப் படியாகக் கூறப்படும் சமாதி நிலையை அனந்தசயனம் என்னும் தலத்தில் எய்தியதாக நூல்கள் கூறும். சில நூல்கள் கும்ப முனிவர் சமாதி எய்தியது திருக்குடந்தையில் என்று கூறும். இது கும்ப முனி என்று ஒரு சித்தர் பிற்காலத்தில் (நவசித்தர் வரிசையில்) இருந்திருக்கலாம் என்று எண்ண இடந்தருகின்றது.

**இவர் இயற்றிய மருத்துவ நூல்கள் :** அகத்தியர் இருபத்தோராயிரம், அகத்தியர் பன்னீராயிரம், அகத்தியர் பரிபூரணம், அகத்தியர் ஆயுள்வேதம் (சித்தமறை), அகத்தியர் நயனவிதி, அகத்தியர் குணபாடம், அகத்தியர் இலக்க சௌமிய சாகரம், அகத்தியர் அமுத கலைக்ஞானம், அகத்தியர் செந்தூரம் முந்நூறு, அகத்தியர் வைத்திய காவியம் 1500 முதலியன.

இவர் இயற்றியுள்ளதாகக் கூறப்படும் ஞானநூல்கள் பல. இவர் பெயரால் இயற்றப்பட்டுள்ள நூல்கள் அகத்தியர் கும்மி, அகத்தியர் பள்ளு, அகத்தியர் பிள்ளைத்தமிழ் என்பன.

## 2. போகர்

போகர் சீனநாட்டைச் சேர்ந்த மண்பானை முதலிய வற்றைச் செய்பவரென்பர். இவரைப் பௌத்த துறவி (புத்தபிட்சு) என்றும் சீனப் பயணியாக 1600 ஆண்டுகளுக்கு முன் இப் பாரத நாட்டுக்கு வந்து புத்தகயா, பாடலிபுத்திரம் முதலான இடங்களைத் தரிசித்துவிட்டுத் தமிழ்நாட்டுக்கு வந்த வரென்றும் சிலர் கூறுவர். இக் கூற்றுக்குத் தக்க சான்றுகள் இல்லை. ஆனால், இவரது நூல்களின் வாயிலாக, இவர் பல நாடுகளைச் சுற்றிப் பற்பல மொழிகள், கலைகள் ஆகியவற் றைப் பயின்று தேர்ந்து பல சீடர்களுக்குக் கற்பித்து வந்தார் எனத் தெரிகின்றது. தமிழ்நாட்டில் பற்பல ஆசான்களிடம் பயிற்சி பெற்றவராகவும் அறியக்கிடக்கிறது.

இவர் பதினெண் சித்தருள் ஒருவரென்பது தமிழ் மருத்துவ நூல்களில் கண்ட உண்மை. இவர், போகர் நிகண்டு, போகர் கற்பம் முந்நூறு, போகர் ஏழாயிரம், போகர் வர்ம சூத்திரம். போகர் சரக்கு வைப்பு எண்ணூறு, போகர் வாசியோகம் என்னும் நூல்களை எழுதியுள்ளதாகக் கிடைத்துள்ளன.

போகருடைய பாட்டனார் திருமூலர், ஆசானார் காலாங்கி நாதர், புதல்வர் கொங்கண சித்தர், முக்கிய சீடர் புலிப்பாணி என்று இவருடைய நுல்களின் வாயிலாக அறியக்கிடக்கிறது.

இவரிடம் மருத்துவம் முதலான கலைகளைக் கற்ற சீடர்கள் அவற்றைப் பாடலாக இயற்றிப் 'போகர் நூல்' எனறு பெயர் சூட்டி வழிவழியாகப் பற்பல அனுபவ முறைகளைக் கூட்டி நூலைப் பெருக்கியுள்ளனர்.

இவர் பல ஆண்டுக்காலம் தம் சீடர்களுடன் பழநியில் தங்கி இருந்து பல சித்து விளையாடல் புரிந்துள்ளதாகவும், அக் காரணம் பற்றியே பழநிக்குச் 'சித்தன் வாழ்வு' என்னும் பெயர் உண்டாயிற்று என்பதும் செவிவழி வரலாறு. இவருடைய மருத்துவ வல்லமையைக் காட்டவேண்டிப் பல பாடாணங் களையும் ஒருங்கு கூட்டி, நீர் நெருப்பு முதலியவற்றுக்குக்

கரைந்தும், புகைந்தும், உருகியும், ஆவியாகியும் போகாதவாறு திண்மையுறக் கட்டி அக்கட்டைக் கொண்டே பாலதண்டாயுத பாணி சுவாமியின் திருவுருவச் சிலையைப் பழநி கருவறையில் செய்துவைத்தார் என்றும், அந்தப் படிவமே தற்போது பழநி மூலவராய்ப் பிரதிட்டை செய்யப்பெற்று இன்றும் நிலைத்து ஆன்ம கோடிகளுக்கு அருள்சுரந்து வருவதாகவும் கூறப்படு கிறது. போகருடைய சமாதி பழநியில் இருக்கிறது. இவருடைய சமாதிக்கு இன்றும் புலிப்பாணி சாமியார் என்னும் ஒருவர் வழி வழியாக வழிபாடும் தொண்டும் செய்துவருகிறார். கதிர்காமம், திருச்செந்தூர், திருத்தணிகை, திருப்பரங்குன்றம் என்னும் இடங்களிலும் போகர் சமாதி நிலையில் இருந்தார் என்று சில நூல்கள் கூறும். இஃது இவருக்கு முருகப்பெருமானிடமுள்ள ஈடுபாடே காரணமாக இருக்கலாம் என்றும், இறுதியில் பழநி யில் சமாதி நிலையில் நிலைத்துவிட்டார் என்றும் கொள்ள இடமுண்டு. இந்த வரலாறு, முதலில் கூறியவண்ணம் போகர் சீனப் பயணி, பௌத்த துறவி என்றமை தவறு என் பதை வலியுறுத்துவதாய் உள்ளதைக் காண்க.

போகர் இயற்றியதாகக் கூறப்படும் போகர் எழுநூறும் போகர் ஜனன சாகரமென்னும் நூலும் உண்மையில் போகர் இயற்றியவை யல்ல. போகர் எழுநூற்றில் அந் நூலாசிரியர் 'விதமுள்ள போகரிஷி எனக்குச் சொன்னார்' என்றமையால் அந்நூலை இயற்றியவர் போகரும் அல்லர், பதினெண் சித்தர் களுள் ஒருவருமல்லர் எனத் தெரிகிறது. போகர் ஜனன சாகர மென்னும் நூலில், 'விதமான துருக்கர்மத மொன்றுண் டாக்கி நபிரூப மாய்உலகுள் எங்கு மானேன்' என்று ஒரு பாடலில் வரு வதால் அந்நூலை இயற்றியவர் ஏழாம் நூற்றாண்டிலோ அதன் பின்னரோ வாழ்ந்தவராக இருத்தல்வேண்டும் என்பது தேற்றம்.

### 3. திருமூலர்

சாலோகப் பதவியை அடைந்த சங்குகன்னர் என்னும் சித்தர் தம் முளக் கோட்பாட்டின்படி ஈசனால் பூவுலகுக்கு அனுப்பப்பெற்றார் என்றும், அவர் அகத்தியரைக் காணவரும் வழியில் சிதம்பரத்துக்கு அண்மையில் மாடுமேய்த்துக் கொண் டிருந்த மூலன் என்ற ஓர் இடையன் காலன் கோட்பட, அதைக் கண்ட ஆவினங்கள் வருந்தி ஓலமிட்டதைக் கண்டு பொறாமல்

தம் ஆவியை அவ்விடையன் உடலில் செலுத்தித் தாமே இடையன் உடலுடன் இயங்கி மாடுகளை ஓட்டிக்கொண்டு அவ்வவற்றின் இல்லங்களில் சேர்த்துவிட்டு யாண்டும் நில்லாமல் தில்லைக் கூத்தப்பெருமான் ஆலயத்தில் யோக சமாதியில் ஆழ்ந்திருந்து ஆண்டுக் கொரு முறை நிட்டை நீத்து ஒரு மந்திரமாக மூவாயிரம் பாடல்கள் இயற்றியருளினார். இறுதி யில் தம் குறிக்கோளுக்கு இணங்க அகத்தியரைத் தரிசித்து அவருடைய ஆசிரமத்தில் சில காலம் தங்கி அளவளாவி விட்டுத் தில்லைக்கு மீண்டு அவ்விடத்திலேயே சமாதி நிலை எய்தினார். இவரே திருமூலர் என்னும் சித்தராவார்.

இவர் காலாங்கிநாதரைச் சீடராய் ஏற்று அவருக்கு எல்லாச் சித்திகளும் கைவர அருளிச் செய்தார். எனவே, காலாங்கிநாதருடைய சீடராகிய போகநாதர் திருமூலரைப் பாட்டனென்று மிக்க உரிமையுடனும் அன்புடனும் உறவு கொண்டாடுவதைக் காணலாம்.

இவரியற்றிய நூல் 'திருமந்திரம்' என்னும் ஓர் ஈடிணையற்ற நூலாம். மற்றும், திருமூலர் வாதம் இருபத்தொன்று, திருமூலர் அறுநூற்றெட்டு, திருமூலர் வழலைச் சூத்திரம் முந்நூறு, திருமூலர் வைத்தியம், திருமூலர் ஞானம், திருமூலர் பலதிரட்டு என்னும் நூல்களும் இவரியற்றியனவாகத் தெரிகிறது.

## 4. இராமதேவர்

இவர் வரலாறு ஏதும் கிடைத்திலது. ஆனால், இவர் அழகர் மலையில் சமாதியில் நிலைத்துள்ளார் என்று தெரிகிறது.

## 5. கொங்கணர்

கொங்கணர் போகருடைய திருமகனார். இவர் சேர நாட்டுக்கு வடபாலுள்ள கொங்கணநாட்டின் மாதரசிக்குப் போகருடைய அருளால் தோன்றியவர் என்பது செவிவழிச் செய்தி. இதைக் கருவூரார் தம் பாடலில் 'கொங்கணர் தந்தை போகநாதர்' என்றமையால் அறியலாம்.

கொங்கணர் பெயரால் வழங்கும் செவிவழி வரலாறு ஒன்று வருமாறு :

கொங்கணர் என்ற சித்தர், ஒரு சமயம் தம்மீது எச்சமிட்ட கொக்கினைச் சினந்து நோக்க அக் கொக்கு உடனே எரிந்து நீறாகிவிட்டது. அவர் தம்முடைய வித்தையைத் தாமே வியந்து தருக்கிக் கொண்டிருந்தார். தருக்கால் சித்தின் திறம்

அழியும் என்பதைத் தம் ஆணவத்தால் மறந்தார் போலும்! சில நாள் சென்றபின் வழக்கம்போல ஒரு வீட்டின்முன் நின்று பிச்சை கேட்டார். அவ்வீடு திருவள்ளுவருடையது என்பதை அவர் அறியவில்லை. கொழுநன் பணிவிடையில் ஈடுபட்டிருந்த வாசுகி அம்மையார் சிறிது காலந்தாழ்த்திப் பிச்சையிட்டார். வந்த கொங்கணர் பிச்சையைக் காலந்தாழ்ந்து இட்டமைக்காக அம்மையாரைச் சினந்து நோக்கினார். ஆனால், அம்மையாரின் கற்புத் தீயை இவர் பார்வை ஒன்றும் செய்யவில்லை.

தம்மைச் சினந்து நோக்கிய ஆடவனை எள்ளிப் பார்த்துக் குறுநகையுடன், 'கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா?' என்று கேட்டார். இதனைச் செவியுற்ற கொங்கணர் தம்மைவிடச் சித்தியில் மேம்பட்ட நங்கையின் திறம் கண்டு நாணித் தாம் கொண்ட செருக்கினைக் கண்டு வருந்தினார்.

இவ் வரலாற்றில் கூறப்பட்ட கொங்கணர், திருவள்ளுவர் காலமாகிய முதலாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவராக இருத்தல் வேண்டுமென்றும் போகரின் மைந்தரான கொங்கணர் மிகவும் பிற்காலத்தவராக இருத்தல்வேண்டுமென்றும் கூற இடந்தருகிறது.

## 6. கமலமுனி

பதினெண் சித்தருள் ஒருவராகக் கருதப்படும் கமலமுனிவரை, உவச்சர் குடியில் பிறந்து பல சித்திகளையும் பெற்று இறுதியில் திருவாரூரில் சமாதியடைந்தாரென்பர். சிலர் நான்முகனே கமலமுனி என்னும் சித்தராய்த் தோன்றினார் என்றும் மதுரையில் சமாதியானார் என்றும் கூறுவர்.

இதுவரையில், இவர் இயற்றியதாகக் 'கமலமுனி பத்து' என்னும் ஒரு ஞானநூல் கிடைத்துள்ளது.

## 7. சட்டமுனி

சட்டமுனி என்னும் சித்தரைச் சட்டநாதர் என்பாரும் உண்டு. இவரைச் சிங்களவரென்பர் சிலர்.

இவர் பெருமையைப் புகழ்ந்துகூறும் செவிவழிக் கதை வருமாறு:

சட்டமுனிவர் பல திருத்தலங்களையும் பாதயாத்திரையாய்ச் சென்று தரிசித்துக்கொண்டே ஒரு நள்ளிரவு திருவரங்கத்தை நண்ணினார். அவ்வேளை திருக்கோயிலில் நள்ளிரவுப் பூசையை முடித்துவிட்டுக் கடைக்காப்பிட்டுவிட்டுத் தலைமைப்பட்டர் இல்லம் சேர்ந்துவிட்டார். வந்த முனிவர் பூட்டப்பட்ட திருவாயிலின் முன் நின்று ஆராக் காதலுடன் 'அரங்கநாதா' என்று மும்முறை விளித்தார். சரேலெனக் கதவுகள்—முன்வாயில் முதல் கருவறை-யாவும் திறந்துகொண்டன. மணியொலி, மேளதாளவொலி, திருமறைகள் ஓதும் ஒலி, கீத நிருத்தியவொலி, திருவிழாக்காலத்தில் ஏற்படும் வெடிகளின் ஒலி, மட்டற்ற மக்கள் கூட்டத்தாலேற்படும் இரைச்சலெல்லாம் ஒருமித்துக் குபீரென்று எழுந்தன. வேளையல்லாத வேளையில், கோயிலில் எழுந்த திருவிழாக்கோல ஒலிகளைக் கேட்டு ஊர் மக்களும், பூசையாற்றும் பட்டர்களின் கூட்டமும் கோயிலை நோக்கி விரைந்தனர்.

அவ்வமயம், எல்லா ஒலிகளும் நில்லாமல் ஒலித்துக்கொண்டே இருந்தனவேனும் கோயிலுக்குள் சட்டமுனிவரும் அரங்கநாதருமே இருந்தனர். ஆனால், அரங்கநாதர் பூண்டிருந்த ஆடையாபரணங்கள் சங்கு சக்கரமுட்பட யாவும் சட்டநாதரின் உடலின்மேல் இருப்பதை ஆலயத்தில் திரண்ட மக்கள் யாவரும் கண்டனர்; அரங்கநாதர் அணிபணி யேதுமின்றிக் கிடக்கவும் கண்டனர். ஆகவே, எல்லோரும் சட்டமுனிவரைக் கள்வனென்று முடிவு செய்தனர்.

உடனே அம் முனிவரின் உடலிலிருந்த அரங்கநாதரின் அணிபணிகளையெல்லாம் கழற்றிச் சுத்தம் செய்து புண்யாவாசனம் செய்து அரங்கநாதருக்குப் பூட்டினார்கள். பிறகு, முனிவரை மன்னன் முன் நிறுத்தி இரவு நிகழ்ந்தவற்றைக் கூறினர். மன்னன் முனிவரை உசாவியபோது அதுபற்றிய விடயம் தமக்கொன்றுந் தெரியாது என்றும் எல்லாம் அரங்கநாதன் செயலென்றும் கூறினார். இவருடைய கூற்றின் உண்மையை ஆராய மனங் கொண்ட மன்னன் தன் பரிவாரங்களுடன் முனிவர்முன் செல்லத் திருக்கோயிலை வந்தடைந்தான். சட்டமுனிவர் அரங்கர் முன் நின்று அரங்கநாதா என்று முன்னம் விளித்தவாறே மும்முறை விளித்தார். உடனே நள்ளிரவில் எழுந்த அத்தனை ஒலிகளும் காது செவிடுபட ஒரே காலத்தில் குபீரென எழுந்தன. அரங்கநாதருடைய ஆடையணிகள் யாவும் காந்தத்தை நோக்கிப் பறக்கும் இரும்பு ஊசிகளைப் போல விரைந்துவந்து முனிவரின் உடலில் ஏற்புடைய

இடங்களில் அமர்ந்தன. மன்னனும் மக்களும் இக்காட்சியைக் கண்டு வியந்தனர். அரங்கநாதனே சட்டநாதனென்றுணர்ந்து, முனிவருக்குத் தாம் செய்த அபசாரத்துக்கு மன்னிப்பு வேண்டி மன்னனும் மக்களும் வணங்கினர். முனிவர் யாவர்க்கும் நல்லாசி புகன்றார். திருவரங்கன் சந்நிதானத்திலேயே இவர் சமாதி நிலை எய்தி அருவராய் இருந்து மக்களுக்கு அருள்சுரந்து வருகிறார் என்பது இன்றும் மக்களிடம் உள்ள நம்பிக்கையாகும். இவர் சீர்காழியில் சமாதி எய்தினார் என்பது சிலர் கொள்கையாகும்.

## 8. கருவூரார்

கருவூரார் திரிசிரபுரம் மாவட்டத்திலுள்ள கரூரைச் சேர்ந்தவராவார். வெண்கலம், தரா, பித்தளை, தாம்பிரவேலை செய்யும் விசுவகன்மா மரபினர் என்று சில நூல்கள் கூறும். இவர் தோன்றிய கரூரிலேயே சமாதி கூடியுள்ளார் என்றும் சிலர் சீகாளத்தியில் சமாதி பெற்றார் என்றும் கூறுவர். இவர் பல தலங்களைத் தரிசித்துப் பக்திப் பாடல்கள் பல பாடியுள்ளார். அதில் முக்கியமானது திருவிசைப்பா வாகும்.

ஒருசமயம் இவர் திருநெல்வேலி சென்று நெல்லையப்பரையும், காந்திமதி அம்மையாரையும் தரிசித்து மானூரில் தங்கி இருந்தபோது இரவில் இவருக்குத் தம் நடனக் காட்சியைக் காட்டியருளினார் என்று நெல்லைத் தலபுராணம் கூறும். அந்த விழாவை இன்றும் ஆவணி மூல விழாவாக அத் திருக் கோயிலில் கொண்டாடுகிறார்கள். இவர் மதுரையும் ஈழமும் கொண்ட பராந்தக சோழனின் தந்தையாரான ஆதித்த சோழன் காலத்தில் வாழ்ந்தவர்.

இவர் இயற்றிய பாடல்களில் பதினெண் சித்தர்களைத் துதித்துள்ளமையால் இவர் பதினெண் சித்தருள் ஒருவரில்லை என்பதும், இவர்க்குக் குரு போகநாதர் என்று குறிப்பிட்டுள்ளமையால் இவர் போகரின் சீடர் என்பதும் பெறப்படும்.

கருவூரார் பல திரட்டு, கருவூரார் அட்டகன்மம் நூறு, கருவூரார் வாதகாவியம், கருவூரார் பூசாவிதி என்பவை இவர் இயற்றிய நூல்களுள் கிடைத்துள்ளவையாம்.

## 9. சுந்தரானந்தர்

சுந்தரானந்தர் பதினெண் சித்தருள் ஒருவராவார். இவர் வேளாண் மரபினர்; மதுரையில் சித்தியடைந்தார் என்பர்.

இவருடைய வாழ்க்கை வரலாறு ஒன்றும் கிடைத்திலது. சுந்தரானந்தர் அதிசய சூத்திரம், சுந்தரானந்தர் ஞான சூத்திரம், சுந்தரானந்தர் சூத்திரம் என்பவை இவரியற்றியனவாகக் கிடைக்கப்பெற்ற சில நூல்களாம்.

### 10. வான்மீகி

வடமொழியில் இராமாயணம் இயற்றிய வான்மீகி வேறு. சித்தர் வரிசையில் கூறப்படும் இவர் வேறு. இருவருமே வேடர் குலத்தவரெனத் தெரிகின்றது. இவர் இயற்றிய நூல்கள் வான்மீகி நாடி சாத்திரம், வான்மீகி பூதநாடி என்பவையே.

### 11. நந்திதேவர்

சைவ சமயத்தினர் எல்லோருக்கும் நந்திதேவர் புதியவர் அல்லர். இவரே, சிவன் உமைக்கு உபதேசித்த யோகம், ஞானம், வாதம், மருத்துவம், மந்திரம், சாத்திரம், தோத்திரம் யாவற்றையும் பூவுலகுக்குத் தம் சீடர்கள் வாயிலாகப் பரவச் செய்த பேருபகாரியாவார். இவ்வுண்மை எந்தச் சித்தர் நூலைப் புரட்டினாலும் தெள்ளிதின் விளங்கும். இதனை,

**'சொல்லிடவே தேவிக்குச் சதாசி வன்றான்**
**சொல்லவே தேவியும்நந் திக்குச் சொல்ல**
**நல்லிடவே நந்திதன் வந்தரிக்குச் சொல்ல**
**நயமுடன் தன்வந்தரி யசுவனிக்குச் சொல்ல**
**அல்லிடவே யசுவனியாங் தேவர் தாமும்**
**அகத்தியர்க் குரைத்திடவே யம்மு னீந்திரன்**
**புல்லிடவே புலத்தியர்க் குபதே சிக்க**
**புலத்தியரும் தேரையர்க்குப் புகன்றிட் டாரே.'**

— (யூகி. முனி. வைத். சிந்தாமணி)

என்னும் பாடலால் அறியலாம்.

நந்திதேவர் இம் முயற்சியில் ஈடுபடாமற்போனால் இவ் வுலகுக்கு மேலுலக நலன்கள் பரவாது நின்றுவிடுமன்றோ? ஆகவே, இவரே எல்லாச் சித்தர்களுக்கும் முதற் குருவாக மதிக்கத்தக்கவராவார்.

இவர் பூவுலகில் அந்தணர் குலத்தில் பிறந்து தவஞ்செய்து ஈசன், உமையம்மை ஆகியவர்களின் பேரருளால் பல கலை களையும் உபதேசம் பெற்று உலகிலுள்ள பல முனிவர்களுக்கு உபதேசித்துத் தாம் ஆற்ற வேண்டிய பணி முழுமையடைந்த பின் காசியில் சமாதி எய்தினார் என்னும் சில நூல்கள்.

நந்தீசர் முந்நூறு, நந்தீசர் கருக்கடை, நந்தியெட்டு என்னும் நூல்கள் இவர் எழுதியனவாகத் தெரிகிறது.

## 12. பாம்பாட்டிச் சித்தர்

இவர் அணிமாதி அட்டசித்தி பெற்று அதனால் யாதோர் ஆன்ம இலாபமும் கிட்டாமை கண்டு, ஞான மார்க்கத்தில் ஈடு பட்டுச் சீவன் முத்தராகத் திகழ்ந்தார். இவருடைய இயற் பெயர் தெரியவில்லை. இவர் ஞான நூல்களையே இயற்றியுள் ளார். இவர் தவவலிமையால் தம் மனக்கண்முன் கூத்தப் பெருமானின் ஆட்டத்தையே அனவரதமும் காண்பாராதலால் இவர் கூறும் பாடல் யாவற்றிலும் 'ஆடு பாம்பே ஆடு பாம்பே' என்று ஆடுகின்ற பாம்பை முன்னிலைப்படுத்தியே இசைப் பார். இக் காரணம்பற்றியே இவரைப் பாம்பாட்டிச் சித்தர் என்றழைத்தனர் போலும்.

இவர் நஞ்சுமுறிவு மருத்துவத்திலும், மந்திரத்திலும் மிக்க வல்லவர் என்று புகழ்ந்து கூறப்பெற்றுள்ளாரேனும் அதற்கு இலக்கியம் இவரியற்றதாக ஏதும் கிடைத்திலது.

இவரே பதஞ்சலி என்பர் சிலர். சிலர் இவரை நாகமுனி என்பர். இவர் கோசாயி மரபினர். சிலர் இவர் திருமுது குன்றத்தில் சமாதியடைந்தார் என்றும், சிலர் திருஞாலம், தண்டுவரை ஆகிய இடங்களில் சமாதியடைந்தார் என்றும் கூறுவர்.

நாகமுனி இயற்றியதாகச் **சிரோரோகவிதி**யென்றும் **நயனரோகவிதி** என்றும் நூல்கள் கிடைத்துள்ளன.

## 13. மச்சமுனி

மச்சமுனி நவநாத சித்தருள் ஒருவரென்றும், பதினெண் மருள் ஒருவரென்றும் சித்தர் நூல்களில் காணலாம். இவரை மச்சேந்திரநாதர் என்றும் கூறுவர். இவரைப் பரதவகுலத்தவர் எனச் சிலர் கூறுவர். சிலர் இவர் மச்சதேசத்தைச் சேர்ந்தவர் என்பர். மற்றும் சிலர், மச்சக்கொடியுடைய பாண்டிய மன்ன ருள் ஒருவர், முனிவராகிச் சித்துகள் வரப்பெற்றுச் சித்த ரானார் என்றும் கருதுவர். இக்காரணங்களால் மச்சமுனி என்று பெயர் பெற்றிருக்கலாம் எனக் கருதுவர் சிலர். இவர் இயற்றிய பெருநூல் ஒன்றில் தாம் மச்சதேயத்து அந்தணர் குலத்தில் தோன்றியவராகக் கூறியுள்ளார். ஆகவே, இவர்

பரதவர் குலத்தவரல்லர் என்பது இவரது நூலின் மூலமாகத் தெரிகின்றது.

இவரால் இயற்றப்பட்ட நூல்கள், பெருநூல் எண்ணூறு என்னும் தலைப்புடன் எட்டு நூல்கள் உண்டென்பர். அவற்றுள் ஒன்று மச்சமுனி திருமந்திரம் எண்ணூறாம். இது சரக்குவைப்பைக் கூறும் நூலாம். தற்போது ஓலைச்சுவடியாக இவருடைய மூன்று பெருநூல்கள் கிடைத்துள. அவற்றுள் ஒன்று சரக்குவைப்பைக் கூறும் நூலாகவும், மற்றது மைவித்தை, ஜாலவித்தை, வசிய மந்திரம் முதலியவற்றைக் கூறும் நூலாகவும், மூன்றாவது வாதம், மந்திரம், ஞானம், யோகம், வரலாறு ஆகியவற்றைக் கூறும் நூலாகவும் அமைந்துள்ளது. மற்றும், மச்சமுனி எட்டு, மச்சமுனி பாடல்கள், மச்சமுனி நிகண்டு என்னும் நூல்களும் இவர் இயற்றிய வைத்திய நூல்களாம்.

## 14. கோரக்கர்

கோரக்கர் பதினெண் சித்தருள் தனிச்சிறப்பு வாய்ந்தவர். முதன்முதலாக உலகத்தவர்க்குப் பிணிதீர்க்கும் மருந்தாகக் கஞ்சாவை உபயோகிக்கும் முறையைக் கண்டுபிடித்து நச்சுக் குறிகள் தோன்றாவண்ணம் மன்பதைகளின் நோய்களைப் போக்க வழிகண்டவரென்பதும், தாம் கண்டுபிடித்த மூலிகைக்குக் 'கோரக்கர்மூலி' என்று பெயர் வரக் காரணராய் இருந்தார் என்பதும் இவருடைய பெருமையைப் பறைசாற்றுவதாகும். மற்றைச் சித்தர்களைப்போல இவரும் யோகம், ஞானம், வாதம், வைத்தியம் என்னும் பொருள்களைப்பற்றிப் பல நூல்கள் எழுதி உள்ளார். இவரைக் கள்ளரினத்தவர் எனச் சில நூல்கள் கூறும். இவர் பேரூர் (இது கோவை மாவட்டத்திலுள்ள கொங்குநாட்டுத்தலமாகும்) என்னும் தலத்தில் சமாதிநிலை யெய்தி உள்ளார்.

**இவரியற்றிய நூல்கள் :** சந்திர ரேகை இருநூறு, நமநாசத் திறவுகோல் நூறு, இரவிமேகலை எழுபானைந்து, முத்தாரம் தொண்ணூற்றொன்று, நாதபேதம் இருபானைந்து, தனித் தொகுப்புகள் ஒன்பது பாடல்கள், கோரக்கர் அட்டகன்மம் நூறு, கோரக்கர் சுண்ண சூத்திரம் என்பவை இவர் இயற்றிய சில நூல்களாம்.

## 15. பதஞ்சலி

பாம்பாட்டிச் சித்தரே பதஞ்சலி என்பர் ஒரு சாரார். வேறு சிலர் இவர் அத்திரி முனிவரின் புதல்வர் என்பர். இவர்

வடமொழியில் யோகசூத்திரம் எழுதியுள்ளார் என்பர். தமிழில் இவர் இயற்றியதான நூல்கள் யாதும் கிடைத்தில.

## 16. தன்வந்தரி

திருமாலே பாற்கடலிலிருந்து சங்கு, சக்கரம், ஜலூகம் (அட்டை), அமிர்தகலசம் ஆகிய நான்கையும் தம் நான்கு கரங்களில் ஏந்தியவராய்ச் சர்வலோக ரட்சகராக, சர்வ வியாதி களையும் போக்கும் தன்வந்தரி பகவானாகத் தோன்றினார் என்பது ஒரு புராண வரலாறு. இவர் சூரியனின் புத்திரர்களான தேவ மருத்துவர் என்னும் அசுவனி தேவர்களுக்கு மருத்துவ மறையை உபதேசித்ததாகப் புராணங்களின் வாயிலாக அறிய லாம். இவர் அவதார புருஷர்.

தன்வந்தரி என்னும் பெயருடன் ஒரு சித்தர் இருந்திருத்தல் வேண்டும். மொழிப் புலமை உள்ளோரைத் 'தெய்வப் புலவர்' என்றும், கற்பிக்கும் ஆற்றல் மிக்கோரை 'வியாழ பகவான்' (பிரகஸ்பதி) என்றும் கூறுதல் போல மருத்துவப் புலமை யுள்ளவரைத் தன்வந்தரி என்று கூறி ஒருவரைச் சிறப்பித்தும் இருத்தல் கூடும். நம் நாட்டில் இயற்பெயர் மறைந்து சிறப்புப் பெயரே வழங்குவது தொன்றுதொட்டுள்ள நிகழ்வு. ஆகவே, ஒரு பெரிய மருத்துவப் புலவரைத் தன்வந்தரி என்று கூறிவந்த படியே அப்பெயர் நிலைத்துவிட்டதெனக்கொள்ளினும் அமை யும். இவர் மருத்துவக்கலைக்கு ஓர் ஒப்புயர்வற்ற கருவூல மெனக் கருத இடமுண்டு. இவர் பன்மொழிப் புலவராக இருத் தல் வேண்டும். இவர் தமிழில் பல நூல்கள் இயற்றியுள்ளது போலவே வடமொழியிலும் பல நூல்கள் இயற்றியுள்ளார். இவர் தமிழில் இயற்றியுள்ளதாகக் கூறப்படும் பல நூல்கள் காலப்போக்கில் ஒழிந்துபோயின. ஆனால், வடமொழிநூல்கள் யாவும் சேமமுற்றுள்ளன. இவர் இயற்றியதாகக் கூறப்படும் தமிழ் நூல்களில், தன்வந்தரி கருக்கடை நிகண்டு என்னும் நூல் குறிப்பிடத்தக்க தொன்றாகும். அந்நூலில் இவர் வட நாட்டவரென்றும், இவருடைய வடமொழி நூல்களில் சில வற்றை இவரே தமிழிலும் இயற்றியுள்ளார் என்றும் அறிவிக்கப் பெற்றுள்ளது. அதன் ஆதாரப் பாடலின் அடிகள்,

**'என் தேயம் உத்திர தேயம் ...'**
**நலம்புரிய என்னுடைய கிரந்தம் சொன்னேன்**
**உள்ளிடா அதைப் பிரித்துத் தமிழாற் சொன்னேன்'**

என்பதாகும்,

**இயற்றிய தமிழ் நூல்கள் :** தன்வந்தரி தைலம் ஐந்நூறு, தன்வந்தரி சிமிட்டு ரத்தினச் சுருக்கம், தன்வந்தரி நிகண்டு, தன்வந்தரி வைத்திய காவியம், தன்வந்தரி கலைக்ஞானம். தன்வந்தரி ஆயிரத்திருநூறு, தன்வந்தரி வைத்தியக் கருக் கடைச் சூத்திரம் இருநூறு, தன்வந்தரி வைத்தியம் இருநூறு, தன்வந்தரி நாடி எழுபத்திரண்டு என்பவை இவர் தமிழில் இயற்றிய நூல்கள்.

இவரை ஆதிசைவ அந்தண குலத்தவர் என்றும், இவர் வைத்தீசுவரன் கோயிலில் யோக சமாதி எய்தினார் என்றும் சில நூல்கள் கூறும்.

## 17. குதம்பைச் சித்தர்

குதம்பைச் சித்தர் பாம்பாட்டிச் சித்தர், அகப்பேய்ச் சித்தர் ஆகியோரைப் போல யோகசித்தி பெற்றவரேனும், ஞானமார்க் கத்தில் மிக்க ஈடுபாடுடையவர். இவர் தம் பாடலில் 'குதம்பாய்' என்னும் மகடூஉ முன்னிலையைப் பலமுறை கூறுவர். குதம்பை என்பது பனையோலைச் சுருளுக்குப் பெயர். அதைப் பெண் கள் காதுகளில் அணிவது மரபு. அதை யணிந்தவளான பெண்ணே என்று பொருள் பயக்கும் வண்ணம் 'குதம்பாய்' என்று விளித்துப் பாடல் இசைத்தமையே இச் சித்தருக்குக் குதம்பைச் சித்தர் எனப் பெயரைத் தந்ததாகக் கருதப்படு கின்றது.

இவர் பல்லாண்டு இல்லறத் துறவியாக இருந்து பின் அழகர் மலையில் சமாதி கொண்டுள்ளார் எனச் சில நூல்களின் வாயிலாக அறியக்கிடக்கிறது. இவர் இயற்றிய தமிழ் மருத்துவ நூல் யாதும் இதுவரை கிடைத்திலது.

## 18. இடைக்காடர்

திருமால் இடைக்காடராகவும், நாமகள் ஔவையாராகவும், நான்முகன் திருவள்ளுவராகவும் இவ்வுலகில் அவதரித்தனர் என்பது புராண வரலாறு.

இடைக்காடர் என்ற சித்தர் மருத்துவ வல்லுநராக இருந்து, காக்குங் கடவுளாகிய திருமாலைப் போலப் பலரையும் காத் தமை குறித்து இவரைத் திருமாலின் அவதாரம் என்றனர் போலும்.

திருவிளையாடற் புராணத்தில், 'இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்' என்னும் படலத்தில், இவருடைய பெருமையை உலகுக்குக் காட்டுவான்வேண்டி, சோமசுந்தரக் கடவுள் ஒரு திருவிளையாடலே நிகழ்த்தினார் எனின் இவர் பெருமை அளத் தற்கரிதே. அத் திருவிளையாட்டின் வரலாற்றை அந்நூலிற் கண்டுகொள்க.

இவர் இயற்றியதாக எந்த மருத்துவ நூலும் இதுவரை கிடைத்திலது. இவர் இடையர் குலத்தவர் என்றும், திருவருணைத் தலத்தில் சமாதிநிலை எய்தினார் என்றும் நூல்கள் கூறும்.

## 19 - 20. ஊனர் - கண்ணர்

ஊனர் – கண்ணர் ஆகியவர்களைப் பற்றிய வரலாற்று விவரம் யாதும் கிடைத்தில. சிலர், ஊனக் கண்ணர் என்னும் பெயரே இவ்வாறு திரித்துப் பிரித்துக் கூறப்பட்டு இரண்டு சித்தர்களாகக் கருதப்பட்டனர் என்றும், ஊனர், கண்ணர் என இரு சித்தர்கள் உண்டு என்றும் கூறுவர். எது உண்மை யோ? இவர் இயற்றிய நூல்கள் உள என்பர். எனினும், இது வரை ஒன்றும் கிடைத்திலது.

## 21. சிவாய சித்தர்

சிவவாக்கியரே சிவாய சித்தர் என்பர். இவர் உண்மையில் ஒரு சித்தரே. கருவூரார் பல திரட்டு என்னும் நூலில் இவரைச் சிவாய சித்தர் என்று கூறித் துதித்துள்ளார். இவர் பாடலுக்குச் 'சிவ வாக்கியம்' என்று பெயராம். இவர் பாடல்கள் யாவும் மெய்ஞ்ஞான போதமாகிய உயரிய வேதாந்தக் கருத்துகள் மலிந்தவையாகக் காணும். கீழ்வரும் பாடலொன்றே அதை விளக்கும் எடுத்துக்காட்டாகும்.

'நட்ட கல்லைத் தெய்வமென்று
    நாலு புட்பம் சாத்தியே
சுற்றி வந்து முணமுணென்று
    சொல்லும் மந்திர மேதடா ?
நட்ட கல்லும் பேசுமோ ?
    நாத னுள்ளி ருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம்
    கறிச்சு வைய றியுமோ ?'

தத்துவமறியாப் பேதையர் மேற்படி பாடலை வைத்துக் கொண்டு சிவவாக்கியர் உருவ வழிபாட்டை வெறுத்து ஒதுக்கியவரென்றும், கடவுள் நம்பிக்கை இல்லாதவரென்றும் பலவாறாகக் கூறுவர்.

இப் பாடலில் ஆண்டவன் ஆன்ம வடிவாக உன்னுள் ளேயே வீற்றிருக்கும்போது கற்சிலையை மந்திரங்களோதி நிறுத்தி, பூ முதலியவற்றைச் சாத்தி வழிபாடியற்றுவது ஏன் ? அது தன்னை அறியாதவன் செய்கையன்றோ? கறி சுட்ட சட்டியும் சட்டுவமும் கறிச்சுவை அறியாதது போல நீயும் உன் உள்ளே இருக்கும் ஆண்டவனை அறியாது திகைத்து வேண் டாத வேலையெல்லாம் செய்து காலத்தை வீணாக்குகிறாயே. அதனால் நீ யடையும் பயன் யாது? என்று வினவித் தெளி வுறுத்துகிறார்.

இவர் பாடலில் மெய்மருத்துவம் பற்றிய கருத்து யாண்டும் இல்லை. இவர் வரலாறு குறித்த சான்று ஒன்றேனும் இவர் பாடலில் கிடைத்திலது. ஆகவே, இவருடைய வரலாற்றை அறிதல் அரிது.

### 22. சண்டிகேசர்

இவர் வரலாறும் இவர் இயற்றியதான தமிழ் மருத்துவ நூலும் யாண்டும் கிடைத்தில.

### 23. காலாங்கிநாதர்

காலாங்கிநாதர் பதினெண் சித்தருள் ஒருவர். இவர் திருமூலரின் சீடர் என்றும், போகரின் குருவென்றும் சித்தர் நூல்கள் கூறும். இவரைச் சீன தேயத்தவரென்றும், உலோகம், மரம் முதலியவற்றிலிருந்து பொருள்கள் செய்யும் விசுவகன்ம வகுப்பினர் என்றும் சில நூல்கள் கூறும்.

இவரே பாரசீகத்தில் சென்று தங்கி மிகவும் புகழ்பெற்ற கலே (Galae) யாக இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். இவர் இடைச்சங்க காலத்தில் வாழ்ந்தவராகச் சில நூல்கள் கூறும்.

நான்மறைகளுள் யசுர் வேதத்தின் இடையே 'காலாக்கினி உருத்திரம்' என ஒரு மகாமந்திரம் உண்டு. அதனைக் கண்ட வரே காலாக்கினி என்ற பெயருடைய சித்தராக இருத்தல் வேண்டுமென்பது சிலர் கருத்து. சிவனுக்குப் பிரளய காலத்தில்

'காலாக்கினி' என்னும் பெயரோடு சோதிப்பிழம்பான தீப வடிவம் ஒன்றுண்டென்பது நான்மறைகளும் கூறும் கருத்தாகும். அத்தகைய தோற்றத்தைத் துதித்த மறையின் பகுதியே 'காலாக்கினி உருத்திரம்' எனப் பெயர் பெற்றதென்றும், அதை இயற்றியவர் பெயரும் காலாக்கினியாக இருக்கலாம் என்றும் சிலர் கருதுகின்றனர். காலாக்கினி என்னும் வடசொல் காலாங்கி எனத் தமிழாக்கம் பெற்றுத் தொன்றுதொட்டு வழங்கிவருவது யாவரும் அறிந்ததே.

ஆகவே, காலாங்கிநாதர் என்னும் பெயருடைய சித்தர்கள் இருவர் இருந்திருக்கலாம் என்று தெரிகின்றது. இவர் இயற்றியதாக ஒரு நூலும் இதுவரை கிடைத்திலது.

இவர் காஞ்சியில் சமாதியானார் என்று சிலரும், திருப்பனந்தாள், திருக்கடவூர் என்னும் தலங்களில் யோக சமாதியில் எழுந்தருளினார் என்று சிலரும் கூறுவர்.

### 24. வெகுளிநாதர்

வெகுளிநாதர் என்று கூறப்படும் சித்தர் விசுவாமித்திரராக இருக்கலாம் என்று சிலரும் துர்வாசராக இருக்கலாம் என்று சிலரும் கருதுகின்றனர். இவ்விருவருள் எவரே ஆயினும் ஒருவர்க்கொருவர் சினத்தில் (வெகுளி) சளைத்தவரல்லர். இவர்களுடைய தவவலிமையும், சபிக்கும் ஆற்றலும் புராணப் பிரசித்தம் பெற்றவையாம். இவரை நவநாத சித்தர் வரிசையில் பல சித்தர் நூல்கள் விவரித்துள்ளன. எனினும், இவருடைய வரலாறு யாண்டும் கிடைத்திலது. இவர் இயற்றியதாகத் தமிழ் மருத்துவ நூலும் ஒன்றுகூடக் கிடைத்திலது.

இவர் காசியில் சமாதிநிலை பெற்றுள்ளார் என்றும், திருவாவடுதுறையில் சமாதிநிலை பெற்றுள்ளார் என்றும் கருதுவர்.

## (ஆ) நவநாத சித்தர்கள்

(1) சத்தியநாதர், (2) சதோகநாதர், (3) ஆதிநாதர், (4) அனாதிநாதர், (5) வெகுளிநாதர் (வகுளிநாதர் என்னும் சதுரகராதி), (6) மதங்கநாதர், (7) மச்சேந்திரநாதர், (8) கடேந்திரநாதர், (9) கோரக்கநாதர் என்னும் ஒன்பதின்மரும் நவநாத சித்தர்கள் எனப்படுபவராம்.

நவநாத சித்தர்களுள் மச்சேந்திரநாதர் (மச்சமுனி), கோரக்கநாதர், வெகுளிநாதர் ஆகியவர்களுடைய சில குறிப்புகள் கிடைத்துள்ளன. அதை மேலே அவர்களுடைய வரலாறுகளில் விளக்கியுள்ளதைக் கண்டுகொள்க. மற்ற சத்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர், அனாதிநாதர், மதங்க நாதர், கடேந்திர நாதர் ஆகிய ஆறு நாத சித்தர்களின் பெயர் மட்டும் கிடைத்துளவேயன்றி அவர்களைப் பற்றிய குறிப்புகள் எவையும் தமிழ் நூல்களில் கிடைத்தில. ஆகவே, அவர்களுடைய வரலாறுகளை ஈண்டு இயம்ப இயலவில்லை.

நவகோடி சித்தர்கள் என்னும் பாகுபாட்டில் பற்பல சித்தர்களின் பெயர்கூடத் தெரியவில்லை. தமிழ் மருத்துவ நூல்கள் எழுதிய சில சித்தர்களின் பெயர்களும், அவர்களுள் மிகச் சிலருடைய வரலாறுகளும் ஓரளவுக்குக் கிடைத்துள்ளன. அவற்றை அந்தந்த நூல்களைப் படிக்கும் வாய்ப்புள்ளபோது அறிந்துகொள்ளலாம்.

# 2. சித்த மருத்துவ அடிப்படைத் தத்துவங்கள்

## தோற்றக் கிரம ஆராய்ச்சி

இந்நிலவுலகில், சிறப்பாக நம் தாய்நாட்டில் (இந்தியாவில்) எக்கலையைக் கற்க வேண்டுமெனினும் பரதத்துவத்தின் உணர்வு இன்றியமையாதது. சிறப்பாக, நம் தமிழ்நாட்டு மருத்துவம் (சித்த மருத்துவம்) தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

மருத்துவம் கற்கும் மாணவனுக்குத் தத்துவ ஆராய்ச்சி எந்தவகையில் வேண்டியுள்ளது என்னும் வினா எழுகின்றது; கேட்கவும் படுகின்றது. இவ்வாறு வினவும் எழுச்சி, மேலை நாட்டு நாகரிகம் நம் மக்களைத் தொடர்ந்த பிறகே எழத் தொடங்கியுள்ளது. ஆனால், இந்நாட்டிலேயே பிறந்து இந் நாட்டு முதியோருடைய பழக்க வழக்கங்களில் ஊறியவர்களுக்கு, இக் கேள்வி ஒரு பிள்ளைமதி படைத்தவனுடையதாகத் தோன்றுவது இயல்பாம். கல்வியறிவில்லாத இந்தியனுங்கூட இயல்பாகத் தத்துவ உணர்வு உடையவனாக இருப்பதை யாங்கணும் காணலாம்.

உலகப் புகழ்பெற்ற மேலைநாட்டு விஞ்ஞானிகளாகிய கேரல், அக்ஸ்லி முதலிய பலர் இந்திய நாட்டுக் கலைகளின் அமைப்பை வியந்ததோடு நில்லாமல் மேலைநாட்டுக் கலை களையும் தத்துவ அடிப்படையில் அமைக்கலாமென்று பரிந் துரைத்துள்ளனர்.

தத்துவ ஆராய்ச்சி, அறிவின் வளர்ச்சிக்காகவும், அனுபவ சாதனத்துக்காகவும் கூறப்பெற்றுள்ளது. இதன் உட்பிரிவாகிய ஒரே ஆன்மாவைப்பற்றிய கொள்கையின் (ஏகான்ம வாதம்) விளக்கம் அறிவை வளம்பெறச் செய்யும். மற்றொரு பிரிவாகிய சைவ சித்தாந்தம் அனுபவ சாதனத்துக்கு வழிவகுக்குமென்க. மருத்துவம் செய்தல்கூட ஒரு மருத்துவனுடைய சமயமெனக் கருதப்பெறும்.

இம் மண்ணிற் பிறந்த ஒருவன் கற்றல் எதற்கென அக் கல்வியின் துணைகொண்டு ஆய்ந்து, பிறப்பிறப்பாகிய இன்னல்களை நீக்கி நிலையான இன்பத்தை அடையும் வழியைக் கண்டு அதன்படி நின்று பயன் துய்க்கவேண்டு மென்பதேயாகும். இதனைத் துறக்கம் என்றும் வீடு பேறு என்றும் கூறுவர்.

'மொழியின் முட்டறுத்து வீடு பெறுதல்', ஒருவன் இப் பிறவி வந்தபோதே முயன்று எவ்வகையானும் பாடுபட்டு ஆன்ம விடுதலையடைதலையே தன் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். ஆன்ம விடுதலைக்குப் பலவகை வழி முறைகள் நூல்களில் கூறப்பெற்றுள்ளன. அவற்றில் யாதேனும் ஒன்றைக் கடைப்பிடித்து ஒழுகி வெற்றிபெற இவ் வுடலை இயைவிக்க வேண்டுவது இன்றியமையாத தொன் றாகும். அத்தகைய தகுதியும் உரமும் பெறாவண்ணம் உடற்கும் உளத்துக்கும் ஊறுசெய்பவை பல்வகைப் பிணி களேயாம்.

உடலில் தோன்றும் பிணிகள் யாவும் வீடடையும் வழி களாகிய இயமம், நியமம், தவம், ஜபம், உபவாசமிருத்தல், ஆசறக் கற்றல் ஆகிய இவற்றைப் பின்பற்ற இடந்தராத முட்டுக்கட்டைகளாகும். அவ்வண்ணம் பயிலாதவிடத்து வீடடைவது அரிதாய்விடும். பிறவிப்பயனடையாத காரணத் தால் அவ்வான்மா மீண்டும் பிறத்தலும், இறத்தலுமாகிய இன்னற் கடலிற் கிடந்து உழலநேரிடும். ஆகவே, பிறவி எண்ணிலவாகும்; பயனில் பிறவிகளாகும்.

ஆகவே, ஒருவன் நோயில்லாமல் இருந்தால்தானே அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களைத் (புருஷார்த்தம்) தேடிக்கொள்ள இயலும். நோய்கள், மெய் யின்ப வாழ்வுக்குப் பகையாக உள்ளமையைக் கருதியே 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்னும் பழமொழி யும், 'நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும்', என்று முற்றுந் துறந்தவராகிய இராமலிங்க அடிகளாரும் கடவுளிடம் வேண்டிக்கொள்வதும் காணக்கிடக்கின்றது. இத்தகைய நோய்களைத் தடுக்கும் வழிமுறைகளையும், தீர்க்கும் வழி வகைகளையும் விரிப்பதான அறிவியல் நூலே மருத்துவம் எனப்படும்.

மருத்துவ நூல்கள், நோய் தோன்றக் காரணங்கள், நோயின் குறிகுணங்கள், தடுப்பு முறைகள், நோய் உண்டான பின் அதன் தீர்வுக்கான வழிமுறைகள், மருந்துப் பொருள்கள், அவற்றின் இயல்புபண்பு, கையாளும் வகை விவரங்கள், நோயி னின்று விலகி வாழக் கடைப்பிடிக்க வேண்டிய பயிற்சிகள், உண்ணத்தக்க உணவுகள் முதலியவற்றைப் பற்றியும், நோயுற்ற காலத்தில் உண்ணத்தக்க உணவு, பத்திய முறை களைப் பற்றியும் விவரிப்பனவாம்.

நோய் தோன்றக் காரணங்கள், நோயுற்றபோதும் நோயற்றபோதும் உடலின் இலக்கணம், நோய் தீர்வுக்கும் தடுப்புக்கும் கையாளும் பொருள்களின் பண்புகள், அவற்றின் செயல்திறன் ஆகியவற்றைப்பற்றித் 'தரிசனம்' என்னும் அடிப் படையில், வடமொழி ஆயுள்வேத நூல்களில் விவரித் துள்ளனர்.

அவ்வாறே சித்தர்களும், பிறவிப்பயனைப் பெறவிடாமல் தடையாய் நிற்கும் பிணிகளிலுழலும் மாந்தர்களிடம் கழிபே ரிரக்கம் கொண்டவர்களாய், அந் நோய்களைத் தவிர்க்க மனங் கொண்டு, நோய்களைத் தடுக்கவும், தீர்க்கவும் வழிமுறை களை வகுத்துள்ளனர். அத்தகைய மருத்துவ முறையே சித்த மருத்துவமாகும்.

இயல்பாக மனித உடலானது இயற்கையை முதற்காரண மாகவும் துணைக் காரணமாகவும் கொண்டுள்ளது என்னும் உண்மை யாவரும் அறிந்ததே. நம் முன்னோர் இத்தகைய இயல்பை மாற்றியமைக்க வழிகண்டு வெற்றி பெற்றனர். அவர் கள் கண்ட நெறியைக் கைப்பற்றி இச் சீவசரீரம் (பிராகிருத சரீ

ரம்) இயல்பாய்க்கொண்டுள்ள பிரகிருதியின் கூட்டை (சேர்க்கையை) விலக்கி, உருவுடனும் அருவுடனும் கூடியதான சீவசரீரத்துக்கு ஒப்பான அமைப்பை உண்டாக்கி, உடலில் தொடர்பு கொள்ளும் பிணிகள் தோன்றாமல் தடுத்தற்கு வேண்டிய திறனை யூட்டி, அவ்வண்ணமே ஆன்மதத்துவ விசாரத்தினால் அந்தக்கரணங்களின் சக்தியைப் பெருக்கித் 'தானேசிவம்' (சிவோகம்) என்னும் தத்துவ விளக்கத்தைப் புலனாக்கி, மனத்தைப் பொருந்திவருகின்ற நோய்களை முதற்கண் தடுத்து, தூலசரீரத்தின் அமைப்பிலும் அதற்கு ஆதாரமான ஆன்ம தத்துவத்தின் அமைப்பிலும், சிவத்துக்குச் சற்றும் பேதமற்ற நிலையைப் பெற்று அச் சத்து சித்தொடு இரண்டற்ற நிலையில் கலந்தவராய், நித்தியானந்த அனுபவத்தில் இடையறா இன்பத்தைத் துய்த்திடச் செய்ய ஏதுவாகும் வழிகளை வகுத்தனர். அவை இருவகைப்படும் :

1. இரண்டறக் கலத்தலாகிய கொள்கையை ஒட்டி, 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்னும் நிலையைப் பெற ஞானம், யோகம் என்னும் இரு நெறிகளைத் திறம்பட வகுத்தனர் ஒரு சாரார்.

2. மற்றையோர், கன்ம மார்க்கத்தை யொட்டியும், உலகம், ஆன்மா ஆகிய இவை இரண்டற்ற நிலையில் தங்கியும் (அத்துவிதநிலை), வெவ்வேறான நிலையில் (துவிதநிலை) இருந்தும், சத்து, சித்து, ஆனந்த உருவங்கொண்டுள்ள 'பதி' யாகிய தலைவன் சிவத்தின் அருளைப்பெற ஜபம் (ஒரு மந்திரத்தை முறைப்படி பன்முறை ஓதல்), தியானம் (அவனுக்குள் ஓர் உருவத்தை மனத்தாலமைத்து அகக்கண்ணால் காணல்), சரியை (உடலால் நிகழ்த்தக்கூடிய உபசரிப்புகள்) என்னும் உபாயங்களால் முயன்றிடல் வேண்டும். ஐவகை மலங்களோடு (ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம்) ஆன்மா கூடி இருப்பதால் பிறப்பு, இறப்பு என்னும் கட்டுப்பாட்டில் உழலும் ஆன்மா என்னும் 'பசு' விடுபட்டு, 'பதி' யென்னும் சிவத்துடன் இரண்டறக் கலந்து 'சிவோகம்' என்னும் நிலையைப் பெற்றுக் குறைவும் முடிவு மற்றதான ஆனந்தத்தில் ஆழ்ந்துகிடத்தல் என்னும் சைவ சித்தாந்தக் கோட்பாட்டை ஐயந்திரிபறக் கற்று, தக்க ஆசானிடம் சிவ தீட்சை பெற்றுச் சித்தாந்தத்தில் விதிக்கப் பெற்ற முறைகளைக் கைக்கொண்டு வீடு பெறவேண்டுமென்று விதித்தனர்.

இவ்விருவகையில், யாதேனுமொன்றை ஏற்க விரும்பினாலும், ஆங்கு வகுக்கப்பெற்றுள்ள முறைகளைக் கைக்கொண்டு ஒழுகப் பிணியற்ற உடலும் வன்மையும் வேண்டும். ஆதலால், இவ்வுடல் அமைப்பை மாற்றி முற்கூறிய 'சிவசரீரம்' அல்லது 'சாம்பவ சரீரம்' பெறற்கு உற்ற வழியாய், 'இரசேச்சுர தரிசனம்' என்னும் மற்றொரு வகை வழியை வகுத்துள்ளனர் மருத்துவ நூல் வல்லுநர்களான சித்தர்கள். இரசேச்சுர தரிசனம் கூறுவதாவது :

இரசம் என்னும் பாரதம் (பாதரசம்) சிவனின் வீரியமென்றும், அப்பிரகம் சிவசக்தியென்றும், பாசமாகிய மருளைப் போக்கும் அருளென்றும் வழங்கப்படும் பார்வதியின் வீரியமென்றும் விளக்கி, இவ்விரண்டும் பொருந்தக் கூறப்படும்.

இவற்றைத் தக்க கைம்முறை செய்முறைகளால் ஒன்றாய்ச் சேர்த்து ஒத்த மருந்தாகச் செய்து (பாகப்படுத்தி) உண்பதால் சிவசக்திகளின் வீரியம் இவ்வுடலில் ஏற்பட்டு இப் பிராகிருத (பருவுடல்) உடல் சிவசரீரமாக (சாம்பவ சரீரம்) மாறி ஒரு காலமும் அழிவற்றதாயும் நிலையுற்றதாயும் நிற்பதற்குக் 'காயகற்ப' முறையை வகுத்தனர்.

இவ்வண்ணம் இரசத்தையும் அப்பிரகத்தையும் இணைத்துக் கற்ப மருந்து செய்யும் கைம்முறை, செய்முறை, மற்றுமுள்ள முயற்சிகளில் சித்தர்கள் முனைந்தபோது இடையிடையே பற்பல வேறு பொருள்கள் கையாளப்பெற்றும், உண்டாக்கப்பெற்றும் வந்தன. அவ்வாறு கிடைக்கப் பெற்ற பொருள்களை (மருந்துகளை) மக்கட்குள்ள பிணிகளைப் போக்க மருந்துகளாகப் பயன்படுத்தி நற்பயன் கண்டனர். அவற்றின் பயன்களையும், பக்குவங்களையும் மிக விரிவாகக் கூறியும், செய்து காட்டியும், ஏடுகளிற் பதிப்பித்தும் வந்துள்ளார்கள்.

இவ்வாறு தாதுப் பொருள்களால் கிடைக்கப்பெற்ற பற்பம், செந்தூரம், சுண்ணம் முதலான மருந்துகள், மூலிகைகளால் செய்யப்பட்ட மருந்துகளைக் காட்டிலும் மேம்பட்டவையாகும் என்றும் கண்டுள்ளனர்.

இவ்வுண்மை வடமொழியில் வல்ல ஆயுள் வேதியர்களும் ஒப்புக்கொண்ட செய்தியாகும். அவர்கள் புகழ்ந்து கூறிய மேம்பாடுகளாவன :

1. குறைந்த அளவில் பெரு நோய்களைத் தீர்க்கும் தன்மை உடைமை.
2. உண்பதற்கு விருப்பமற்ற கைப்பு, துவர்ப்புப் போன்ற சுவையின்மை.
3. மருந்துண்டவுடன் விரைவில் பயனைத் தோற்று விக்குந் தன்மை உடைமை.
4. நாட்பட்ட நோய்களைக் குறுகிய காலத்தில் போக்கி நலனுறச் செய்யுந் தன்மை.
5. மூலிகை மருந்துகளைப் போலல்லாமல், எவ்வளவு காலம் வைத்திருந்தாலும் செயல் திறம் (வீரியம்) குன்றாமல், மாறாக வீரியம் மிகைப்படுந் தன்மை.

இந்தக் காரணங்களால் தாதுப் பொருள்களால் செய்யப் பட்ட பற்ப செந்தூர சுண்ணங்கள், மூலிகைப் பொருள்களால் செய்யப்பட்ட மருந்துகளைக்காட்டிலும் சிறந்தவை என்பர்.

இனி, வேதாந்தம் என்னும் தலைப்பில் அத்துவித சித்திக் குரிய வழிகளாகிய யோகம், ஞானம் என்னும் துறைகளும் மற்றொரு தலைப்பில் சைவசித்தாந்தமும் விளக்கிக் கூறப்படும்.

இவற்றை விளக்குவதற்கு முன்பு சித்தர்களின் உண்மை யான கோட்பாடு யாதென ஆராய வேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது. அதனை அறியவேண்டின் சித்தர் மரபில் வந்தவர் களின் கூற்றைக்கொண்டேதான் அறிய இயலும். அவ் வண்ணம் சித்தர் மரபில் வந்தவர் தாயுமான அடிகளாவார் என்பதை அவர் இயற்றியுள்ள பாடல்களே சான்றாக நின்று வலியுறுத்தும். அவர் தமது குருவணக்கம் கூறுமிடத்துத் தம் குரு மூலன் மரபில் வந்த மௌனகுருவென்று கூறுவர். இதனை,

> 'வாசமுறு சற்கார மீதென்னை யொருஞான
> மத்தகச மெனவ ளர்த்தாய்
> மந்தரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
> மரபில்வரு மௌன குருவே'

என்னும் அடிகளால் அறியலாம்.

திருமூலர் ஒரு சித்தரென்பது உலகறிந்த உண்மை. அவருடைய சீடராகிய ஒரு மௌன முனிவரே தாயுமானாரின் குருவாக மேற்கண்ட அடிகளில் கூறப்பெறுகின்றார். ஆகவே, அவரும் சித்தர் மரபில் வந்தவரெனத் தெரிகின்றது (இங்குக் குறிப்பிட்ட மரபு, சீடர் மரபு என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.)

இத்தகைய சித்தர் மரபின் தோன்றலாகிய தாயுமானார், தாம் சிறப்பித்துச் சித்தர் கூட்டத்தைத் தொழும் கருத்துடன் இயற்றிய பாடல்களில், சித்தர்கள் வேதாந்தத்தையும் சித்தாந் தத்தையும் ஏற்றத்தாழ்வின்றி மதித்து, ஒத்த நலன் பயப்பன வாகக் கண்டுகொண்டு, சிறந்த ஆன்மீக நிலையையும் மெய் யுணர்வையும் அடைந்தார்களென்று கூறியுள்ளார். அவ்வடி கள் வருமாறு :

**'வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற**
**வித்தகச் சித்தர் கணமே.'**

இவை தாயுமான அடிகளார் சித்தர்களுக்கு வணக்கம் செலுத்தும் முறையில் 'சித்தர்கணம்' என்னும் பகுதியில் வந் துள்ள பாடல்களின் ஈற்றடிகளாம். இவ்வாறு கூறி இருப்ப தால் சித்த மருத்துவ மாணவர்கள் தத்துவ அறிவு பெறவேண்டு மென்பது வெளிப்படை. மேலும் வேதாந்தம், சித்தாந்தம் என்னும் இரு தத்துவங்களையும் கசடறக் கற்றல் வேண்டு மென்பதும் விளங்கும்.

அத்துவிதம், விசிட்டாத்துவிதம், துவைதம் என்னும் முப் பெரும் பிரிவுகளைக்கொண்ட வேதாந்தமும் சைவசித்தாந்த மும் தென்னாட்டில் பெரு வழக்குடையவை. கொள்கைபற்றி யும் மொழிபற்றியும் உள்ள வேறுபாட்டினை இவண் புகுத் திடின், நாம் சொல்ல எடுத்துக்கொண்ட பொருள் பயனற்றுப் போகும்.

தேரன் குணவாகடமென்னும் நூலில் தாவரப் பொருள் களின் தோற்றத்தைக் கூறும் கீழ்வரும் பாடல் வேதாந்த அடிப்படையைக் கொண்டே விவரிக்கப் பெற்றுள்ளது. அப்பாடல்,

**'தேடரு மகண்டவொளிப் பிழம்பாய் ஞானா**
**தீதப்பூ ரணமாய்த்தற் செயல்கொண் டெல்லா**
**மூடவிட வல்லதுமாய்க் தனித்த வொன் றுள்**
**மூழ்கிநின்ற முக்குணசிற் சத்தி தன்னில்**

நாடனந்தம் பிறந்ததிற்கா லுதித்த திற்றீ
நாரமண்ணுண் டாய்மண்டான் நல்க வந்த
ஓடதியி லனமுமதி லுலகு நிற்கு
முயர்வாய்ந்தவ் வோடதியி னுரிமை சொல்வாம்.'

இதன் பொருளைக் காணவேண்டில் ஞானாநந்த ஒளிப் பிழம்பின் மூடவல்ல சக்தியைப் பற்றியும், தோற்றவல்ல (விட வல்ல) சக்தியைப் பற்றியும் அறியவேண்டும். இவ்விரு சக்தி களை விவரிப்பது வேதாந்தக் கொள்கையாம்.

இவ்விரு சக்திகளையும் 'ஏமமாயா விநோத வீசனா ரருளி னாலே,' என்றும், 'தோற்றமாஞ் சத்தி தன்னில் சொல்லிய விண்ணாம்,' என்றும் தொடங்கும் கைவல்லிய நவநீதச் செய்யுள்களின் விளக்கங்களால் அறிந்துகொள்ளலாம்.

இவற்றை ஆவரண சக்தி (மூடவல்ல சக்தி), விட்சேபசக்தி (தோற்றவல்ல சக்தி) என்பர் வடமொழி நூலோர். ஆதலின், வேதாந்த சித்தாந்தக் கொள்கைகளைச் சித்த மருத்துவ மாணவர்கள் கற்கவேண்டுவது இன்றியமையாததாம்.

## (அ) வேதாந்தம்

**உயிர்களின் தோற்றம் :** பிறவிக் கடலில் மூழ்கிப் பல்வேறு துன்பங்களை நுகர்ந்து அக் கடலினின்றும் கரையேறும் வழி (உபாயம்) ஒன்றை யறியவேண்டுமென அவாவியவன் (சீடன்) ஒரு நல்லாசானைச் (சற்குருவை) சார்ந்து பணிந்து தன் பழங்கண்களை (துன்பம்) அறப்போக்கும் ஆற்றை யல்லது ஆற்றலை உணர்த்துமாறு வேண்டினான்.

'இவனதி காரி யானோன்
இந்திரி யங்க ளாலும்
புவனதெய் வங்க ளாலும்
பூதபௌ திகங்க ளாலும்
தவனமூன் றடைந்து வெய்யிற்
சகித்திடாப் புழுப்போல் வெம்பிப்
பவமறு ஞான தீர்த்தம்
படிந்திடப் பதறி னானே.' —(கை. ந. பா. 13)

இப்பாடலில் நல்ல மாணவனின் குணங்களாகிய சமம், தமம், விடல் (உபரமம்), சகித்தல் (திதீட்சை), சமாதானம், சிரத்தை

என்னும் ஆறுகுணங்களையும் தகுதியாகப்பெற்ற சீடன் இந்திரியங்கள், தெய்வங்கள், பூதாதிகள் ஆகிய காரணங்களால் நேரும் உபாதைகளை நீக்கிக்கொள்ளும்பொருட்டுக் குருவருளால் ஏற்படும் ஞானமாகிய புனித நீரால் கழுவி நீக்கப் பெறுமென்ற தேற்றத்தால் விரைந்துவந்து குருவினைப் பணிந்து நின்றான்.

(சமம் = அகக்கரணங்களை அடக்குதல் ; தமம் = புறக்கரணங்களை அடக்குதல்; விடல் (உபரமம்) = உலகப் பொருள்களின் பற்றுவிடல்; சகித்தல் (திதீட்சை) = அந்தக்கரணங்களில் எழும் காமம் முதலியவற்றை அடக்குதல்; சமாதானம் = குருவின் உபதேசப் பொருளையே மெய்யென்று கொண்டிருத்தல்; சிரத்தை = குருவின் உபதேச வாக்கியத்தில் பற்றுக் கொள்ளல்.)

ஈசனருளால் நல்லாசானை நெருங்கும் நல்வாய்ப்பு அத்தகைய நற்சீடனுக்குக் கிடைத்து, ஒரு நல்ல குருவை நெருங்கும் விதத்தைத் தத்துவ நூல்களில் விவரித்த வண்ணமாக முறைப்படி சென்றடைந்தான். அது எங்ஙனமெனின் ,

> 'ஆனபின் மனைவி மக்கள்
> அர்த்திவே டணைகள் மூன்றில்
> கானவர் வலையிற் பட்டுக்
> கைதப்பி யோடு மான்போல்
> போனவன் வெறுங்கை யோடே
> போகாத வண்ணஞ் சென்று
> ஞானசற் குருவைக் கண்டு
> நன்றாக வணங்கி னானே.' —(கை. ந. பா. 14)

மனைவி, மக்கள், செல்வம் என்று கூறப்படும் மூன்று விருப்பங்களின் ஈர்ப்புகளில் (ஏடணாத்திரியம்) சிக்குண்டவனான சீடன், வேடன் வலையில் சிக்குண்ட மான் அவன் கையினின்று தப்பிச்சென்றது போல மேற்படி ஈர்ப்புகளின் திறத்திலிருந்து தப்பித்துக்கொண்டு சென்று, குருவின் பாதங்களை விளக்கிப் பூசித்து வலம்வந்து வணங்கினான்.

சீடன் வெறுங்கையோடு போகாதவண்ணம் கைகளை வீசிக்கொண்டு போகாமல் கைகளைக் கட்டிக்கொண்டு சென்றான்.

இங்குக் கற்கவேண்டிய பகுதி மிகவும் உயர்ந்ததாகிய மெய்ஞானப் பாடமாதலால் அதனைக் கற்பவன் பண்டைக்

காலச் சீடனைப் போலவும், கற்பிக்கும் ஆசானும் முற்காலச் சற்குருவைப் போலவும் நடந்துகொள்ள வேண்டுமென்பதை இவ்விரு பாடல்களும் வலியுறுத்தியுள்ளன. நற்சீடனுக்குரிய தகுதிகளை முதற் பாடலின்கீழ் விளக்கியுள்ளதை ஒவ்வொரு வரும் மனத்திற் கொள்ளல்வேண்டும். மாணவன் என்னும் சொல் மாண்பு உடையவன் என்னும் பொருள் தரவல்லது.

இவ்வாறு தன்னிடம் வந்த சீடனைக் கண்ட குரு கீழ்க் கண்டவாறு கூறலுற்றார்:

'வாராயென் மகனே தன்னை
மறந்தவன் பிறந்தி றந்து
தீராத சுழற்காற் றுற்ற
செத்தைபோற் சுற்றிச் சுற்றிப்
பேராத கால நேமிப்
பிரமையிற் றிரிவன் போதம்
ஆராயுந் தன்னைத் தானென்
றறியுமவ் வளவுந் தானே.' —(கை. ந. பா. 19)

தான் யாரென்று விசாரித்து அறியாதவன் சூறாவளியிற் சிக்குண்ட சிறு துரும்பைப் போல (பிறத்தலால்) இவ்வுலகத்தி லும், (இறத்தலால்) அவ்வுலகத்திலும் மாறிமாறி வருவதும் போவதுமாய் இருப்பன். இந்த நிலை அவன் தன்னைப் பிரம்மம் என்று உணரும்வரை நீடிக்கும்.

'தன்னையுந் தனக்கா தாரத்
'தலைவனை யுங்கண் டானேல்
பின்னையத் தலைவன் றானாய்ப்
பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்
உன்னைநீ யறிந்தா யாகில்
உனக்கொரு கேடு மில்லை
என்னைநீ கேட்கை யாலே
யீதுப தேசித் தேனே.' —(கை. ந. பா. 20)

தான் யார்? தன் தலைவன் யார்? தனக்கும் தன் தலைவ னுக்கும் உள்ள தொடர்பு யாது? என்னும் விடயங்களின் உண்மைத் தத்துவத்தைச் சீடன் அறிவானேயாமாகில் பிறவிக் கடலினின்று கரையேறுவானென்றும், அப் பிறப்பு இறப்பு களுக்குக் காரணமும் அதனை ஒழிக்கும் வழிமுறைகளையும் விளக்கினார், 'என்னை நீ கேட்கையாலே ஈதுபதேசித்தேனே'

என்பதால் ஆர்வத்துடனும் தகுதியுடனும் கூடிய சீடன் குருவை யடுத்துப் பணிவுடன் அறிவைக் கோரி விண்ணப்பித்துக் கொண்டாலன்றி ஏனையோர்க்கு வேதாந்த, சித்தாந்த உண்மைத் தத்துவங்களை விளக்கலாகாதென்னும், சான்றோர் நெறிமுறையையும் உணரவைத்தார் எனக் கொள்க. தன்னை யும் என்றதால் சரீரத்தினுள் கிடக்கும் ஆன்மாவை என்று பொருள்கொள்ள வேண்டும்.

'வாராய் என் மகனே' என்றது, உபதேசக் குரு சீடனுக்குத் தந்தையாவார் (ஞானப்பிதா என்பர் ஏனையோர்) என்பதை விளக்குகின்றது. மற்றும், அவர்தம் சீடனுக்குத் தீக்கை (தீட்சை) கொடுத்தாரென்பது விளங்குகிறது.

'தீக்கை' (தீட்சை) என்பது, ஒரு சடங்கைத் தக்க முதியோன் (குரு) விதிப்படி எல்லா ஏற்பாடுகளையும் செய்து தொடங்கிவைத்தல் என்று பொருள்படும். அது மூவகைப் படும். அவை: காணுந் தீக்கை (நயன தீட்சை), நினையுந் தீக்கை (ஞாபகத் தீட்சை), தீண்டுந்தீக்கை (ஸ்பரிச தீட்சை) என்பனவாம். அவற்றின் விளக்கம் வருமாறு:

மீன் முட்டைகளை இட்டுக்கொண்டே நீரில் நீந்திச் செல்லும். எல்லா முட்டைகளையும் இட்டான பின் தான் இட்ட முட்டைகளைக் காணும்போது, அவை குஞ்சுகளாகித் தாய் மீனுக்குப் பின் நீரில் நீந்திச் செல்லும். அவ்வண்ணமே குருவின் பார்வை சீடன்மீது விழுந்தவுடனேயே, அவன் உண்மை யறிவு பெற்றுக் குருவைப் பின்தொடர்தல் ஒரு வகை யாம். இதுவே காணுந்தீக்கையாம்.

ஆமை, தான் இட்ட முட்டைகளைப் பற்றி நினைத்த வுடனேயே முட்டைகளெல்லாம் குஞ்சுகளாக மாறி ஆமையின் பின் செல்லும். இவ்வகை நிகழ்ச்சியில் ஆமை ஓரிடத்திலும், முட்டைகள் வெகு தூரத்துக்குக்கப்பால் ஓரிடத்திலும் இருக்கக் கூடும்; அல்லது அண்மையிலும் இருக்கக் கூடும். ஆயினும், இவ்வகை நிகழ்ச்சி உடலுறுப்பின் இயக்கம் யாதுமின்றி மனத் தாலேயே நிகழ்கின்றது. அதே போல, குரு தம் சீடனுக்கு நினைப்பாற்றலாலேயே தீக்கை செய்விப்பதுமுண்டு. இது நினைப்புத் தீக்கை (ஞாபக தீட்சை) என்னும் வகையாம்.

கோழி முட்டையிட்ட பின் தானே அதன்மேல் உட்கார்ந்து சூடு கொடுத்துக் குஞ்சு பொரிக்கச் செய்கிறது.

இதனை அடைகாத்தல் என்பர். இவ்வாறே குரு சீடனைத் தம் கையால் தொட்டு உணர்த்துவது ஒரு வகை. இது தீண்டுந் தீக்கை (ஸ்பரிச தீட்சை) என்று கூறப்படும்.

இம்மூவகையில் பெரும்பாலும் கையாளப் பெறும் தீக்கை தீண்டும் (ஸ்பரிச) தீக்கையேயாம். ஆகவே, இந்தச் சீடனுக்கும் தீண்டும் தீக்கை அறிவுணர்த்தினார் என்று கொள்க. இதனை உபதேசம் என்றும் கூறுவர். (உப = அருகில்; தேசம் = இடம்) சீடனுக்கருகில் குரு இருந்து ஓதுவித்தல் என்பது பொருளாம்.

'தன்னையும்' என்னும் சொல், தன் உடலிலுள்ள ஆன்மாவை உணர்த்துவதாகும்.

**'இன்னது தேகம் தேகி**
**இவனென உணர்வான் யாவன்**
**அன்னவன் தன்னைத் தானென்**
**றறிந்தவ னாகு மென்றார்**
**சொன்னபின் தேகி யாரித்**
**தூலமல் லாம லென்றான்**
**பின்னது கேட்ட வையர்**
**பீழையும் நகையுங் கொண்டார்.'**

—(கை. ந. பா. 22)

தேகம் இது; இத்தன்மையது. தேகியென்பவன் தேகத்தில் தங்கியுள்ள ஆன்மா. அஃது எத்தன்மையை உடையது என்று விசாரித்து மனத்தால் உணர்ந்தவனே ஞானியாவானென்று கூறினார். உடனே சீடன், 'இந்தப் பருவுடலேயல்லாது தேகியென்பவன் வேறு யாராக இருக்கக் கூடும்?' என்று வினவினான். அதைக் கேட்ட ஆசிரியர் மிகுந்த மனவருத்தத்தையும், மகிழ்வையும் ஒரே நேரத்தில் கொண்டார்.

தேகம் வேறு; தேகி வேறு என்று குரு அறிவுறுத்தக் கேட்ட சீடனுக்குத் தன் கொள்கையாகிய தேகியே தேகமென்பதில் உள்ள குற்றம் புலப்படாமல் ஐயங்கொண்டான். இவன் அறியாமையைக் கண்ட குரு முதலில் மிகவும் வருந்தினார். அதே நேரத்தில் அவனுடைய உண்மை நவிலல் என்னும் தன்மை கண்டு மிகவும் மகிழ்ந்தார். உடனே, தன் சீடன் கொண்ட ஐயத்தை நீக்க முற்பட்டார்.

'தேகமல் லாமல் வேறே
தேகியார் காணே னென்றாய்
மோகமாங் கனவில் வந்து
முளைத்தவ னெவன்நீ சொல்வாய்
சோகமாங் கனவு தோன்றாச்
சுழுத்திகண் டவனார் சொல்வாய்
ஆகநீ நனவி லெண்ணும்
அறிவுதா னேது சொல்வாய்.' —(கை. ந. பா. 23)

'சீடனே! நான் இவ்வுடலே யல்லாமல் இவ்வுடலில் தங்கி யுள்ளவன் யாவன்? அவனைக் காண இயலவில்லையே' என்றனை யல்லவா? நான் விளக்குவதைச் சற்றுக் கவனிப்பாயாக.

நீ தூங்கும்போது உன் உடல் யாதோர் இயக்கமும் கொள்வதில்லை என்றறிவாய் அன்றோ? அப்போது கனவு ஒன்று உனக்கு நிகழ்கின்றது. அக் கனவில் தோன்றுபவன் யாவன்? சொப்பனம் ஏதுமின்றித் தூங்குகிற சுழுத்தி நிலையைக் காண்பவன் யாவன்? மற்றும், விழித்திருக்குங்காலத்தில் இயற்கையின் ஒளிப் பொருள்களாகிய ஞாயிறு, திங்கள், தீ இல்லாதபோதும் பஞ்சேந்திரியங்கள் ஒலி, ஊறு, நாற்றம், சுவை முதலான விடயங்களை யறியும் அறிவென்பது எது? என்பதைக் கூறுவாய் என்று வினவினார்.

'நனவுகண் டதுநான் கண்ட
நனவுள நினைவு நீங்கிக்
கனவுகண் டதுஞ்சு ழுத்தி
கண்டதும் வேறொன் றேபோல்
தினமனு பவிப்ப தொக்கும்
தெரியவு மில்லை சற்றே
மனதினி லுதிக்கும் பின்னே
மறைக்கும தருளு வீரே.' —(கை. ந. பா. 24)

சீடன் கூறுவதாவது, 'நான் விழிப்பில் நினைவுடன் இருந்தபோது கண்டவையும், நான் என் நினைவு இழந்து தூங்கும்போது கனவென்னும் காலத்தில் காண்பவையும் நினைவற்றுக் கனவுமற்ற காலத்தில் (சுழுத்தி நிலையில்) யான் அறிந்தனவும், இந்த உடலுக்கு அப்பாற்பட்டவொன்றைத் (தேகியை) தினம் தினம் அனுபவத்தில் ஏதோ சில காலத்தில் தெரிந்திருந்தும், அனவரதமும் தேகம் வேறு, தேகி வேறு என்னும் உணர்வு என்னுள்ளத்தில் தெளிவாகத் தெரிய

வில்லை. சில காலம் தெரிந்தும் பலகால் அவ்வுணர்வின்றியும் இருந்துள்ளேன். அப்படியன்றி எந்நேரமும் இவ்வுடல் வேறு, உடலில் உள்ளவன் (தேகி) வேறு என்னும் உணர்வைப் பெறுமாறு அருளுவீராக' என்றான்.

பின்னர், உடலென்பது யாது? அதன் அமைப்பின் கூறு எத்தன்மையது? அஃது இங்குத் தோன்றியது எங்ஙனம்? மெய்யின் பொது இலக்கணங்கள், சிறப்பிலக்கணங்கள் யாவை? என்பவற்றின் விவரங்களையும், தேகி (உடலில் உறைவோன்) யார்? அவன் எவ்வாறு உண்டானான்? அவனுடைய பொது, சிறப்பு இலக்கணங்கள் யாவை? மெய்க்கும் மெய்யுள்ளுறைவானுக்கும் (தேகி) எங்ஙனம் கூட்டு ஏற்பட்டது? அவ்விதச் சேர்க்கையால் பயன்யாது? என்பவை போன்ற தேகியின் விவரங்களையும் சற்குரு விவரிக்கக் காரணம் ஏற்பட்டது. இவ் விவரங்கள் யாவும் மருத்துவக் கலையைக் கற்கும் ஆர்வமுள்ளார்க்கு இன்றியமையாதது.

வினாவிடையில் விளக்கப்பட்ட இவ் விடயங்களைச் சுருங்கக் கூறப்புகின், வேதாந்த நூல்கள் நமக்கு உபதேசிக்கும் தத்துவங்கள் இரண்டாகும். அவை; (1) அத்தியாரோபம், (2) அபவாதம் என்பன. அத்தியாரோபம் என்பது **மித்தை** அதாவது பொய் எனப்படும். இதனால் கட்டு அல்லது தளையேற்படும். இதனைப் **பந்தம்** என்றும் வழங்குவர். அபவாதம் என்பது வீட்டைத் தரவல்லது.

**'அத்தியா ரோப மென் றும்**
**அபவாத மென் றுஞ் சொல்லும்**
**உத்தியால் பந்தம் வீடென்**
**றுரைக்கும்வே தாந்த மெல்லாம்**
**மித்தையா மாரோ பத்தால்**
**பந்தமா மபவா தத்தான்**
**முத்தியா மிவ்வி ரண்டின்**
**முந்தியா ரோபங் கேளாய்.'** —(கை. ந. பா. *26*)

ஆரோபமென்பது எவ்வாறு பொய்யாம் எனின், ஒரு பொருள் வேறொரு பொருள் போலத் தோன்றல். கயிறு பாம்பு போலத் தோற்றமளித்தலும், கானலில் நீரோட்டம் போலக் காணப்படுதலும், விண்ணில் நீல நிறம் காண்டலும் போதிய எடுத்துக்காட்டுகளாம்.

இவ்வகைத் தோற்றப் பொருள்களில் உயிருள்ளவை (அசடம்), உயிரற்றவை (சடம்) என இருவகைப் பொருள் களால் இவ்வுலகு உண்டாகியுள்ளது. அஃது எவ்வாறெனில்,

**'இப்படிப் போல நாம**
**ரூபங்க ளிரண்டு மின்றி**
**ஒப்பமாய் இரண்டற் றொன்றாய்**
**உணர்வொளி நிறைவாய் நிற்கும்**
**அப்பிர மத்திற் றோன்று**
**மைம்பூத விகார மெல்லாம்**
**செப்புகற் பனையி னாலே**
**செனித்தவென் றறிந்து கொள்ளே.'**

— (கை. ந. பா. 28)

மேலே கூறியது போலப் பெயரும் உருவமும் இன்றி இரண்டற்ற ஒரே பொருளானது அறிவாகவும், முழுமையுடைய தாகவும் உணர்வுடையதும், உணர்வை ஊட்டவல்லதுமான பிரமத்தில் ஐம்பூதங்களின் வேறுபாடுகளெல்லாம் தோன்றும். இவ்வகைத் தோற்றமே உலகம் எனப்படும். இது கற்பனைப் பொருளென்பர் மெய்யறிவு பெற்றவர்கள்.

**'அதுதானெப் படியென் றக்கா**
**லநாதியாஞ் சீவ ரெல்லாம்**
**பொதுவான சுழுத்தி போலப்**
**பொருந்துமவ் வியத்தந் தன்னில்**
**இதுகால தத்து வப்பே**
**ரீசனுட் பார்வை யாலே**
**முதுமூல சுபாவம் விட்டு**
**முக்குணம் வியத்த மாமே.'**

—(கை. ந. பா. 29)

அவ்வகைப் படைப்புகள் (சிருட்டிகள்) யாவும் எவ் வண்ணம் நிகழுமெனின், அநாதியாய் உள்ள உயிர்களெல் லாம், ஆக்கல் (சிருட்டி) தொடங்கும் முன், சுழுத்தி நிலையில் கருவிகரணங்களெல்லாம் இருக்குமாறு போல மாயையி னிடத்தே பொருந்தி இருக்கும். அச்சீவர்களின் கன்மவாசனை யும் உடனுறையும். இம் மாயையானது கால தத்துவமென்று பெயர் பெற்றதான ஈசனது அகப்பார்வை வெள்ளத்தாலும், கன்மாவின் மேலான பக்குவத்தாலும் முன்னிருந்த தன்மை நீங்கி முக்குணம் வெளிப்படும்.

இப் பாடலால், ஆன்மாக்கள் பல; அவை அழிவற்றவை (நித்திய வத்து); அவை மாயையில் பொருந்தியுள்ளவை என்பதும், அத்தகைய 'முது மூல சுபாவம்' என்று கூறினமையின் அம் மூலப் பிரகிருதி என்னும் மாயையின் இடமாய் உலகம் தோன்றிற்று என்பதும், இப் பிரகிருதியின் மாறுதலே (பரிணாமம்) இப் பிரபஞ்சமென்பதும் கிடைக்கப் பெறுகின்றது.

பிரளய காலத்தில் சின்மயமான எல்லாச் சீவர்களும் இலிங்க சரீரத்தில் நிற்கப் பெற்றவையாய், பிறப்புக்கு முன் தாம்தாம் செய்த வினையின் வித்தையும் தம்மிடம் தாங்கியும், அவ் வியக்தம் (புலனாகாத் தன்மை) என்னும் 'முதுமூல சுபாவத்தில்' (மூலப் பிரகிருதியில்) ஒடுங்கி நிற்பவையாகும். பிரகிருதி, விகிருதி (பகுதி, விகுதி) யாவும் பிரமத்தின் உள்ளடங்கியவை யாதலின், முன் சொன்ன அவத்தையில் (காலம்), அதாவது பிரளய காலத்தின் நிலையை இப் பிரம்மத்தின் சுழுத்தியென்பர். இவ் வவத்தை சில காலம் நீடித்துநிற்கும். அதை அளவிட்டுக் கூற இயலாது. ஏனெனில், அக்காலத்தில் இரவு, பகல் என்னும் பாகுபாடுகள் கிடையா. இந் நிலைக்குக் **கால தத்துவப் பேர்** என்று பெயர்.

இவ்வண்ணம் 'கால தத்துவப் பேர்' வரப் பெற்றுள்ள நிலையில் 'ஈசனுட் பார்வையாலே' கடவுளின் அருட்சுரப்பின் காரணமாய், அந்த அவ்வியக்தம் தன் சமநிலையை விட்டுத் தன்னுட் கிடந்த சத்துவ, இராசத, தமோ குணங்களின் ஏற்றத் தாழ்வென்னும் மாற்றங்கள் உண்டாகும் காரணத்தால் வியக்தம் (வெளிப்படல்) என்னும் மாற்றத்தைப் பெற்றுக் காரிய ரூபமாகிய ஆக்கல் (சிருட்டி) தொழிலுக்கு முதற் காரணமாய் நிற்கும்.

குறிப்பு : 'ஈசன்' என்னும் சொல்லின் சிறப்பான பொருள் கவனிக்கத் தக்கதாகும். எவனொருவனுடைய ஏவல் மற்றெல்லோராலும் பணிந்தேற்கப்படுகிறதோ அவன் ஈசனென்றும், எவனொருவனுடைய ஆட்சிக்குட்பட்டு யாவுமே நிற்கின்றனவோ அவனே ஈசனென்றும், எவனொருவனின் அருட்பெருக்கினால் ஆக்கம் (அநுக்கிரகம்), அழிவு (நிக்கிரகம்) என்னும் இருவகையான செயல்களும் நிகழ்கின்றனவோ அவனே ஈசன் என்றும் குறிக்கப்படுகின்றது.

முன் சொன்ன 'கால தத்துவப் பேர்' என்னும் நேரத்தில் அசையும், அசையாப் பொருள்கள் (சராசரப் பொருள்) யாவும்

அவனுள்ளேயே (ஈசனுக்குள்ளேயே) அடங்கிக் கிடத்தலால் அவன் 'உட்பார்வையாலே' என்றதால் அவனுடைய இச்சை யினால் உலகம் தோன்றலாயிற்று. ஆகவே, உலகம் தோன்று தற்கு ஈசன் நிமித்த காரணமும், மாயை முதற் காரணமும், மற்றுமுள்ள வித்தென்ற அவ்விடத்துக் கிடக்கும் கன்மங்களும், முக்குணம் முதலானவையும் துணைக் காரணங்களாய் நின்று உலகம் உண்டாயிற்று என்றறிக.

இவ்வண்ணம் உண்டாகும் உலகத்தில், முக்குணங்களின் இயல்புகள் தோன்றும். எங்ஙனமெனின்,

**'உத்தம வெளுப்புச் செம்மை**
**யுரைத்திடு கறுப்பு மாகும்**
**சத்துவ குணத்தி னோடு**
**ரசோகுணந் தமோகு ணந்தான்**
**சுத்தமோ டழுக்கி ருட்டாச்**
**சொல்லுமுக் குணமு மூன்றாய்**
**ஒத்துள வேனுந் தம்முள்**
**ஒருகுண மதிக மாமே.'** **—(கை. ந. பா. 30)**

சுத்த வெண்மை, செம்மை, கருமை என்பவை முறையே சத்துவ, இராசத, தாமச குணங்களின் (சொரூபம்) உருவங்கள் (நிறங்கள்) ஆகும். சமநிலையில் உள்ளபோது இம் மூன்று குணங்களும் (ஒரே தாம்பில் உள்ளடங்கிய முப்புரி போல) ஒன்றுபட்டு நிற்குமேனும், செயலாற்றும் நேரத்தில் இவை, ஒன்றினும் ஒன்று ஏறியும் தாழ்ந்தும் வரும். இவை (1) ஒன்றை மற்றொன்று அடக்கியும், (2) ஒன்றையொன்று தழுவியும், (3) ஒன்றையொன்று விருத்தி செய்தும், (4) இரு குணங்கள் இணைந்தும் செயல்படுதற்குக் காரணமாதல் கண்டறியப்பட்டுள்ளது இஃது ஒரு சாராரின் கருத்து. மற்றொரு சாராரின் கருத்துப் பின் வருமாறு :

**'ஒருவழி யிதுவா மித்தை**
**ஒருவழி வேறாய்ச் சொல்வர்**
**மருவுமவ் வியத்தந் தானே**
**மகதத்வ மாகு மந்த**
**அருண்மக தத்து வந்தான்**
**அகங்கார மாகு மென்றும்**
**கருவகங் காரம் மூன்றாக்**
**காட்டிய குணமா மென்றும்'** **— (கை. ந. பா. 31)**

செயற்கையில் மூலப் பிரகிருதியானது விகாரமுற்று முதலில் மகதத்துவமாகும் பிறகு இம் மகதத்துவம் அகங்காரமாக மாறும். இவ் வகங்காரம் முக்குணங்களிலும் உள்ளதே ஆயினும், அவற்றுள் ஒவ்வொரு ஞாட்பில் யாதேனுமொன்று அளவுக்குமீறி நிற்கும் காரணத்தால், மூன்று வகையாய்ப் பிரிந்து மீசுர சத்துவ அகங்காரம், மீசுர இராசத அகங்காரம், மீசுர தாமச அகங்காரம் என மாறும்.

சித்தாகிய ஆன்மா மீசுரமான சத்துவ அகங்காரத்தை யொட்டி நின்று தன்னைத் தானறிய முயலும் செயலை ஏற்கும். இங்கு மீசுரமுற்று நிற்கும் சத்துவ அகங்காரம் ஆன்மாவுக்குத் துணைக் காரணமாய் நின்று, அறிவைப் பெருக்கி, ஆன்மா தன்னைத் தானே காண்பதற்குத் தோற்றுவிக்கும் விளக்கைப் போலக் (துணைக் காரணமாய்) காண உதவுகின்றது. மாயை யில் சிக்குண்டு உழன்று, அறிவற்ற நிலையுற்றதுமான ஆன்மா, முன் சொன்ன சத்துவத்தின் உதவியைப் பெறுமளவும் (அவ் வியக்தம்) தொக்கிய நிலையிலேயே தழுவிநிற்கும் என்க.

முன் சொன்னவாறு துணைக் காரணமாய் நின்று, ஆன்மா விற்கு அறிவை உதவும் சத்துவத்தின் திரிபான கருவிக்கே **மக தத்துவம்** என்றும் **புத்தி தத்துவம்** என்றும் பெயர். அறிவே உருவெனத் தக்கதான சொரூபத்தைப் பெற்ற கருவியாகிய இம் மகதத்துவத்தில் தோன்றும் பிரம்மத்தின் சாயையைத் 'தான்' என்று உணர்தல் அகங்காரத்தின் செயலாகும். முன் சொன்னது போல இவ் வகங்காரத்திலேயே சத்துவகுணம், மற்ற இரண்டினைக் காட்டிலும் ஓங்கிநிற்குமாயின், அப் புத்தி தத்துவமானது செயலற்று எவ்வித மாற்றங்களுமின்றி நிலை பெற்று நிற்கும்.

ஆயினும், இவ்வகங்காரத்தில் இராசதம் விஞ்சி, சத்துவம் தாமசம் என்னும் இருகுணங்களையும் செய்கையில் புகுத்து மேல், இயந்திரங்களும் தன்மாத்திரைகளும் உற்பத்தியாகும். இவ்விதச் சேர்க்கையில் உற்சாகமுறும் அகங்காரத்துக்கு இராசத அகங்காரம் என்று பெயர்.

செயற்கையில் புகுவதும், ஆயினும் அறிவின் துணை யின்றிச் சடத்தன்மை ஓங்கும் வகையில் மாற்றங்களைப்பெறக் காரணமாய் நிற்பதும் இவ்வகங்காரத்தின் மீசுரமான தமோ குணமேயாகும். இவற்றினிடமாய்ப் பஞ்ச தன்மாத்திரைகள் அல்லது சூக்கும பூதங்கள் அல்லது நொய்ய பூதங்கள் ஆகிய ஐந்தும் தோன்றும்.

இவ்வாறு, அகங்காரத்திலேயே மூவகையுண்டென்பது புலனாகின்றது. இங்கும் சத்துவம், தமசு இரண்டும் தனித் தனியே மீசுரமுற்றுச் செயறகையில் மாறுபாட்டை அடை வதற்குப் பொதுவாக இவ்விரண்டினோடும் தனித்தனியே ஓங்கிய இராசதகுணம் துணைக்காரணமாய் நிற்றல் முக்கிய மாகும். இம்மூவகை அகங்காரங்களுக்கும் முறையே அறிவின் பெருக்கோடு கூடியது என்னும் பொருள்படுமாறு **தைஜசாகங் காரம்** என்றும், மற்றுமுள்ள இருவகை அகங்காரங்களை விகாரமுறச் (மாற்றமுறச்) செய்யும் இயல்புடையதெனப் பொருள்படுமாறு **வைகாரிகா அகங்காரம்** என்றும், நொய்ய பூதங்களும், அவற்றின் வாயிலாக மகா பூதங்களும் உண்டாவ தற்கு ஏதுவாய் நிற்குமெனப் பொருள்பட **பூதாதி அகங்காரம்** என்றும் மாற்றுப் பெயர்கள் உண்டு. இவற்றினிடமாய்த் தைஜசாகங்காரம் முதற்காரணமாயும், வைகாரிகா அகங்காரம் துணைக் காரணமாயும் நின்று, இந்திரியங்களும் அந்தக் கரணங்களும் உண்டாகின்றன. மற்றும், பூதாதி அகங்காரம் முதற்காரணமாகவும், வைகாரிகா அகங்காரம் துணைக்காரண மாகவும் நின்று நொய்ய பூதங்க ளைந்தும் உண்டாகின்றன என்று அறியவும். இவை யாவும் நுண்ணுடலுக்கு (சூட்சும சரீரத்துக்கு) ஒன்றியவை யாகும்.

பருவுடலுக்கு இயைபு கொண்டவை பஞ்சீகரணத்தால் ஏற்படும் மாற்றங்கள் (பரிணாமங்கள்) ஆகும். இவையே ஈசனின் அருளால் ஆன்மாவுக்கு ஏற்படும் போக தநுவில் (துய்க்கும் மெய்யில்) நிலைபெறும். இப் பஞ்சீகரணமுறை பிறகு விவரிக்கப்படும்.

### உலகம், சீவன், முதல்வன்

**'இக்குணங் களிலே விண்போன்**
**றிருக்குஞ்சிற் சாயை தோன்றும்**
**முக்குணங் களினுந் தூய்தாம்**
**முதற்குண மாயை யாகும்**
**அக்குணப் பிரமச் சாயை**
**யந்தரி யாமி மாயை**
**எக்குணங் களும்பற் றாதோன்**
**நிமித்தகா ரணனா மீசன்.'** **(கை. ந. பா. 32)**

இந்தச் சத்துவமாதி முக்குணங்களில் விண்போன்று பரந் தும், நுண்ணியதாயும், எத்தொடர்பு மற்றும் இருக்கும் சித்தின்

பிரதிபிம்பம் (நிழல்) உண்டாகும். முக்குணங்களிலும் தூயதான சத்துவகுணமானது அவ்வாறேயுள்ள தூய சத்துவ முக்கியத் துவம் பெற்ற மாயையில் பிரதிபிம்பிக்கும் அல்லது பிரதிபலிக் கும். பிரம்மத்தின் சாயையானது மறைந்தும் எங்கும் பரவியும் இருக்கும். மாயையே உடலாகக்கொண்ட ஈசன் எக்குணங் களையும் சார்ந்திராமல் தனித்துள்ளவன் என்றறிக.

இங்கு, முதல்வனாகிய ஈசனின் 'சித்' என்னும் சொரூபம், சத்துவம் ஓங்கியதான அகங்காரத்தைத் தழுவிநிற்கும் ஆன்மா வோடு தோற்றுமேல் ஆங்கதற்கு 'அந்தர்யாமி' என்று பெயர். இது முதல்வனின் சுழுத்திநிலை. இந் நிலையின் சொரூபமே நமக்கு 'ஆனந்தமய கோசம்' ஆகும்.

சாத்துவிகாகங்காரம் ஆன்மாவின் உறைவிடமாகும் என்று கூறப்பட்டது. இச் சாத்துவிகாகங்காரமே முதல்வனின் (ஈசனின்) 'சித்' சொரூபத்துக்குக் (உபாதி) காரணமுமாகும் என்று கூறப்பெற்றுள்ளது. இதற்கு 'அந்தர்யாமி'யென்னும் பெயரும் உண்டு. இந்திரியங்களின் வாயிலாகப் பொருள்களை ஆன்மா உணர்வதற்குச் சத்துவகுணத்தின் மீசுரமே (மிகைப் படலே) விளக்கைப்போல் உதவுமென்று விளக்கினோம். அவ் வான்மாவால், அவ் விடயங்களையும், ஆன்மாவையுங் கூட அறியவல்லவனாய், ஆங்கே கிடக்கும் அந்தர்யாமியும் ஈசனின் 'சித்' சொரூபமானதால், ஈசனே உயிர்களுக்கும், அவற்றின் இந்திரியங்களுக்கும், உயிராம் ஆன்மாவிலுள்ள அறிவிற்கும் முதற்காரணமும், நிமித்த காரணமுமாகின்றான் என்பது தெளிவாகிறது. இதுவே, விசிட்டாத்துவித சமயமும், சைவ சித்தாந்தமும் தெள்ளிதின் தெரிவிப்பதான உண்மை யாகும். நிமித்த காரணனென்று ஈசனைக் குறிப்பிட்டதன் பொருள் என்னையெனின், காரியமாகிற உலகெலாம் அவனன்றி உண்டாகா. ஆயினும், காரியங்களை ஒட்டி நிற்கும் விசேடங்களும், மலங்கள் முதலியவையும், நிமித்த காரணனான ஈசனைப் பற்றா. அதனாலேயே, மேலே கூறிய பாடலின் ஈற்றடியில் 'எக்குணங்களும் பற்றாதோன் நிமித்த காரணனாம் ஈசன்' என்று கூறியுள்ளமையைக் காண்க.

**உயிர்களின் தோற்றம்**

**'ஈசனுக் கிதுசு ழுத்தி**
**யிதுவேகா ரணச ரீரம்**
**கோசமா நந்த மாகுங்**
**குணமிரா சதம வித்தை**

தேசறு மவித்தை தோறுஞ்
சிற்சாயை சீவ கோடி
நாசமா முயிர்க்கப் போது
நாமமும் பிராஞ்ஞ னாமே.' —(கை. ந. பா. 33)

மாயையே ஈசனுக்கு சுழுத்தியவத்தையாம். இதுவே காரண சரீரமும், ஆனந்தமயகோசமும் ஆகும். இராசத குணம் அஞ்ஞானம் (அவித்தை) என்று கூறப்பெறும். அவ் அவித்தையாகிய அஞ்ஞானத்தில் சிற்சாயை (ஈசனின் நிழல்) படிந்திருப்பனவே சீவர்களாம். காரிய சரீரங்களை யடையாமல் இருக்கும் அவ்வுயிர்க்குப் **பிராஞ்ஞன்** என்னும் பெயரும் அத் தறுவாயில் உண்டாமென்க.

இராசதகுணம் முதன்மை பெற்றதான சகல விகாரங்களுக்கும் அவித்தை (அஞ்ஞானம் = அறிவின்மை) என்னும் பொதுப்பெய ருண்டெனினும் **யான், எனது** என்பன போன்ற உணர்ச்சிகளின் எழுச்சிக்குக் காரணமாய் நிற்பது அகங்காரத்தினுள் ஓங்கியுறும் இராசத குணமேயாகும். இதில் தோன்றும் பிரம்மத்தின் 'சித்' என்னும் தத்துவத்தையே 'சீவன்' என்பர். இவ்விதச் சீவன்கள் பலகோடி உண்டேனும், ஒவ்வொன்றும் தோன்றுவதற்கும், தோன்றியபின் நிலைபெறுவதற்கும், செயலாற்றவும் உடனிருந்துஇயக்குவிக்கும் முதல்வன் இச் சீவனுக்கு முதற்காரணமும், நிமித்த காரணமும் ஆவான். இச் சீவனைத் தனக்குக் கருவியாக ஏற்று, இச் சீவனுக்கு விளங்கும் அறிவையும், அச் சீவனை நெருங்கிநிற்கும் கன்மங்களாலுண்டான மலங்களையும் அறியவல்லவனாகவும் ஈசன் நிற்பான். இச் செய்தியின் விளக்கத்தைப் பிறகு பாச விலக்கண விளக்கத்தின்கீழ் விரித்துரைப்பாம்.

மேலே புகன்ற, விஞ்சிய இராசத குணமானது இருள் போல நின்று தத்துவத்தை மறைத்து யான், எனது என்னும் தோற்றங்களை இச் சீவனுக்கு உண்டாக்கும். இந்த இராசத குணத்துக்கு **அவித்தை** (அஞ்ஞானம்) என்றும், இவ் வவித்தையினால் சூழப்பெற்று மூழ்கி மருண்டு கிடக்கும் சீவனுக்குப் **பிராஞ்ஞன்** என்றும் பெயருண்டாம்.

அறிவின்மையின் உயர்வைத் தெரிவிக்கும் பொருள் தர வல்ல **பிராஞ்ஞன்** என்னும் இச் சொல்லில் கிடக்கும் சிலேடை கவனிக்கத்தக்கது. இச் சொல்லால் அதத்துவமான (நிலையற்ற) கடபடாதிகளை நன்குணர்ந்தவனாதலால் 'பிராஞ்ஞன்'

என்றும், தன்னையும், தனக்காதாரமாம் தலைவனையும் சிறிதேனும் அறியாதவன் என்றறிவிக்கவே 'பிராஞ்ஞன்' (அஞ்ஞானத்தோடு கூடியவன்) என்றும் கூறினர். ஆயினும், நிலையற்ற பொருள்களை நன்கறியும் ஆற்றல் இவனுக்கமைந்துள்ளதால், இவை நிலையற்றவை (அதத்துவம்) இவற்றினின்றும் வேறுபட்டதான தத்துவமென்றும், என்றென்றும் நிலையற்றதாய் ஒன்றிருத்தல் வேண்டும் என்றறிவதற்கும் இவனாலேயே ஆகும். ஆகவே, இவனைப் 'பிராஞ்ஞன்' என்பது பொருந்தும்.

இதுவரையில் நாம் கூறியவை யாவை என்று சுருக்கிக் கூறிடில் :

(1) மனிதன் உடல், ஆன்மா (தேகம், தேகி) என்னும் இரு தத்துவங்களின் சேர்க்கையைப் பெற்றிருப்பவன்.

(2) ஆன்மா என்பது ஈசனேயன்றி வேறில்லை.

(3) ஈசனே நிலைபெற்ற நித்தியமான தத்துவம்.

(4) மற்றுள்ளவை யாவும் அவித்தையின் (அஞ்ஞானம், அறிவின்மை) வாயிலாய் உண்டான தோற்றங்களேயாம். இவை நிலையற்றவை என்பதால் அதத்துவங்களெனக் கருதப் பெற்று இவை (இல்லவே இல்லை, பொய்த் தோற்றம்) மித்தையே ஆகும் எனக் கூறப்படும்.

(5) இவ் அவித்தை அல்லது அஞ்ஞானம் அல்லது இருள் இருவகையாகச் செயல்படும். அவை : (அ) ஆரோபம், (ஆ) அபவாதம்.

(அ) ஆரோபமாவது ஒன்றை மற்றொன்றாய் அறிதல் (தெளிதலன்று). சுத்தியில் வெள்ளியின் தோற்றத்தைக் காணல் (கிளிஞ்சிலில் காணப்படும் வெண்மையை வெள்ளி என்று எண்ணுவது, சுத்தி = கிளிஞ்சில்) இதற்கு ஓர் எடுத்துக் காட்டு. இம் மடமையே பிறப்பிறப்புகள் என்னும் பந்தத் துக்குக் (தளை) காரணமாகும்.

(ஆ) அபவாதமாவது நல்லறிவு. இது தத்துவப் பொருளின் உண்மையை விளக்கி வீடுபயக்க வல்லதாகும.

(6) மேலே, முதலிரண்டில் கூறப்பெற்ற உண்மைக் கிணங்க ஆன்மாவும் உடலும் முதல்வனின் அருளால் தோற்றம் பெற்றன என்பதை அறிந்தோம். ஆதலின், இவை

யாவும் தோற்றங்களே அன்றிச் சத்துப்பெற்ற தத்துவப் பொருள் க ளல்லவென்றும், பிரம்மம் மாத்திரமே சத்துப்பெற்ற அழிவற்ற (நித்திய) பொருள் என்றும் அறியக்கிடக்கின்றன.

(7) இவ்வுடலும் உயிரும் பிரம்மத்தினிடமாய்ப் பிறந்த தோற்றங்கள் அல்லது பிரமமே உடலுயிர் என்னும் தோற்றங் கள்ள ஏற்றதெனல் (விவர்த்தவாதம்) ஒவ்வும்.

(8) அத் தோற்றங்களை மித்தை (பொய்) ஆனவை என்று நாமறியாமல், நிலைபெற்ற தத்துவங்களென்று அறிதற்கு (எண்ணி இருத்தற்கு) ஆரோபமென்ற இருளின் திரிபான மருளே (மயக்கம்) காரணமாகும்.

(9) நிலையற்றவையாயினும், இவற்றில் ஒவ்வொன்றிலும் பிரமத்தின் 'சித்' என்னும் பாவம் அல்லது பகுதி சேர்ந்திருக் கிறது. அதனாலேயே இவை நம் பொறிகளுக்கும் அறிவுக்கும் புலனாகின்றன.

(10) நம் உடல் சூக்கும உடல், காரண உடல், தூல உடல் என்னும் மூன்று அவத்தை (நிலை)களைப் பெற் றுள்ளது.

(11) 'சுத்த சைதன்னியம்' என்னும் பிரம்மத்தின் ('சித்'தின்) கூறு அவயக்தத்தில் தோன்றுங்கால் ஆங்குண்டாகும் அறிவின் பிழம்பான சேதனனுக்குக் 'கூடஸ்தன்' என்று பெயர். இக் கூடஸ்தனின் சேர்க்கைக்குப் பிரமத்தின் விருப்பமே காரணம். முக்குணங்களையும் சமநிலையில் கொண்டும் ஒருவிதமான மாற்றமும், இயக்கமும் இன்றி 'முதுமூலப் பிரகிருதியாய்' உள்ள அவ்யக்தத்தில் பொருந்திய முக்குணங்களில் அசைவு (சலனம்) உண்டாகி, அவ்யக்தம் மாற்றமுள்ள தோற்றத்தைப் பெறக் காரணமாகும். முதலில் மாற்றமுறும் இம் முதுமூலப் பொரு ளுக்கு **வியக்தம்** என்று பெயர் வழங்கும்.

(12) அந்த வியக்தத்தில் வந்து இயங்கும் சித்தாகிய ஆன்மா **அவ்யக்தம், வியக்தம்** என்னும் தோற்றத்தைப் பெறுங் கால் தானும் தொடர்ந்து வியக்தத்திலும் வந்தேறும்.

(13) அவ்வாறே இந்த வியக்தத்திலும் அவ்வியக்தத்தி லிருந்த முக்குணங்களும் தொடர்ந்துவரும். ஆயினும், அவ் யக்தத்தில் சமநிலையிலிருந்த இக் குணங்களுக்கு ஒரு தரம் ஏற்றக் குறைவென்னும் மாறுதல் ஏற்படத் தொடங்கியதால்

வியக்தமாய்த் தோன்றும் அவத்தைகளிலெல்லாம் முக்குணங்களும் சமமற்ற நிலையிலேயே இருக்கும்.

(14) இவ்விதமான வியக்தத்தில் (முக்குணங்களின் சேர்க்கையும், சித்'தென்னும் ஆன்மாவும் உள்ளது) சத்துவ குணம் மிகுந்துள்ள இடத்தில் ஈசனின் தோற்றமுற்று 'அந்தர் யாமி' என்னும் பெயராலறியப்படும். இவ்வகையான வியக்தம், அதிலுள்ள சத்துவத்தின் மீசுர நிலை, அதில் தோன்றும் பிரம்மம், ஆங்குக் கிடக்கும் ஆன்மா ஆகிய இவற்றின் கூட்டுக்குப் (ஒன்றிப்புக்குப்) பொதுவாக **ஆனந்தமயகோசம்** என்பது பெயராம்.

(அ) இக் கோசத்தில் சத்துவம் மீசுரமுற்றிருப்பினும் இராசதமும் தாமசமும் இல்லையென்று கூறக்கூடிய அளவுக்குக் குறைந்திருப்பினும், அங்குள்ள ஆன்மாவுக்கு ஏற்படும் அனுபவங்கள் அல்லது முக்குணங்களின் சேர்க்கை அந்தர்யாமியைச் பிரம்பத்லை) சற்றும் தீண்டுவதில்லை. ஆயினும், இவ்வந்தர்யாமியே ஆனந்தமய கோசம் தோன்றவும் நிலைபெற்றிருக்கவும் முதற்காரணமும் துணைக் காரணமும் ஆகும்.

(ஆ) இங்குத் தலைவனாகிய பிரம்மம் நிமித்த காரணமாய் மட்டுமன்றி உபாதான காரணமாவான் என்றும், இவை யாவற்றுக்கும் அந்தப் பிரம்மத்தின் (ஈசனின்) இச்சையே (விருப்பம் அல்லது அருள்) காரணமென்றும் அறியத்தக்கதாம்.

(15) இச் 'சித்'தின் தோற்றம் மீசுரமுற்ற இராசத குணத்தில் உண்டாகுமேல், **தான், தனது** என்றுணரும் அறிவு சீவனுக்கு உண்டாகும். இவ்வாறு அறிவு பெற்ற சீவனும், அதற்கு ஆதாரமான (துணையான) இராசதகுணம் விஞ்சியதாலுற்ற அகங்காரமும் (எனதென்ற உணர்வு) ஒன்றுபட்டிருக்க நிமித்த காரணமாயுள்ள, மேலே புகன்ற அந்தர்யாமியும் சேர்ந்து **விஞ்ஞானமயகோசம் என்னும்** இரண்டாவது உடற்கூட்டைப் பெறும். இங்கு நிலைபெற்ற சீவனுக்குப் **பிராஞ்ஞன்** என்று பெயர். இவனுக்கு விழிப்பு (சாக்கிரதை), சொப்பனம் (கனவு), உறக்கம் (சுழுத்தி) என்னும் மூன்று அவத்தை (காலங்)களும் உண்டு. அவித்தை (மெய்யறிவின்மை = இது ஒருவகை மலம்) என்னும் இருளில் சிக்குண்டிருப்பதால், இவன் தன்னையே **'பரன்'** (தனக்கு அப்பாற்பட்ட மேலோன்) என்று கருதுவதற்கு ஏதுவாகிறது. மற்றும், இராசதகுணம் மிகுந்து (மீசுரமுற்று)

இருப்பதால் அறிவும் பெருகி (விருத்தியாகி) இருக்குமாதலின், அதத்துவங்களான (மெய்யற்ற) கடம்படம் (வெற்று உருவமும், உருவத்தின் நிழலும்) முதலியவற்றை அறியும் ஆற்றலும் இவனுக்கு உண்டு. குருவின் தீட்சையும், உபதேசமும் பெற்று, இறைவனதருளும் இவனுக்கு உறுமேல் அவ் வவித்தை நீங்கி, அதத்துவங்களைத் தத்துவங்களாகக் கருதிய பிழையினின்றும் நீக்கம் பெற்று நித்திய (அழிவற்ற = நிலைபெற்ற) தத்துவப் பொருளை (செம்பொருள், மெய்ப்பொருள் என்னும் திருவள்ளுவர் வாக்கை நினைவுகூர்க) அறியும் ஆற்றலும் இவனுக்கு (சீவனுக்கு) உண்டாகும்.

இதனால் இப் பிராஞ்ஞன் அதத்துவங்களை அவித்தையின் காரணமாய்த் தத்துவங்களாய்க் கருதும் வரையில் பந்தத்தைத் (கட்டு, தளை) துய்ப்பான் (அனுபவிப்பான்) என்பதும், பொய்யை (அதத்துவங்களை) மெய்யல்ல (தத்துவங்களல்ல) என்று விடுத்துத் தத்துவப் பொருளை நாடும் ஆற்றலைப் பெறுவதற்கு உற்ற வன்மையும் இவனுக்கே உண்டென்பதும் அறியக்கிடக்கின்றது.

இவ்வாறு **ஆனந்தமயகோசம், விஞ்ஞானமயகோசம்** என்னும் கூடுகளைச் சீவன் பெற்ற வகைமுறையே சத்துவ குணம் மீசுரமுற்ற அகங்காரத்தின் வாயிலாகவும், இராசத குணம் மீசுர முற்ற அகங்காரத்தின் வாயிலாகவும் பெற நேரிட்டது என்பது புலனாகின்றது. இவ் விரு கோசங்களும் தாமசகுணத்தின் விரிவால் நேர (விளைய)வல்ல மற்றைய மூன்று கோசங்களையும் பெறுதற்குக் காரணமாய் இருப்பதால் இவ்வ ஆன்மாவுக்குக் காரண சரீரம் (உடல்) என்று வகுக்கப்பட்டன.

(16) மூலப் பிரகிருதியின் தோற்றத்தின் தொழில் மேலும் தொடர்வதால் தமோகுணம் மீசுரமுற்ற (ஓங்கிய) அகங்காரத்தின் வாயிலாய் மற்றுமுள்ள **மனோமய, பிராணமய, அன்னமய கோசங்கள்** (போர்வை அல்லது குடில்) சீவனுக்கு உடலாய் வந்தமைகின்றன. இவற்றுள், அன்னமய கோசம் பருத்த உருவில் (தூல வடிவு) காணக் கிடைக்கப்பெறுவதால் பருவுடல் என்றும், மற்றுமுள்ள இரண்டும் நுண்ணுடல் (சூட்சும சரீரம்) அல்லது இலிங்க சரீரம் என்றும் பெயர் பெறுகின்றன.

இனி, இத் தமோ குணம் மிகுந்த அகங்காரத்தின் வாயிலாய்த் தோற்றம் பெறும் இம் மூன்று கோசங்களும், அவற்றின் தத்துவங்களும், உறுப்புகளும் பொறி புலன்களும், ஸ்தூல பூதங்களும், அவற்றின் காரணமாகிய நொய்ய பூதங்களும்,

மற்றும் ஸ்தூல பூதங்களின் கூட்டால் பருப் பொருள்கள் (ஸ்தூல திரவியங்கள்) உண்டான விவரங்களும், அப் பருப் பொருள்களின் சுவை, வீரியம் முதலானவை உண்டானது எங்ஙனம் என்னும் விவரங்களும் நோக்கக் கிடப்பனவாகும்.

தமோ குணத்தின் மாற்றத்தால் (பரிணாமத்தினால்) தோன்றும் ஏனைய மூன்று கோசங்களை விவரிக்கும் முன் **ஆவரண சக்தி** (மூடி வைக்கும் வன்மை) **விட்சேப சக்தி** (விடுவிக்கும் அல்லது வெளிப்படுத்தும் அல்லது தோன்றவைக்கும் வன்மை) என்னும் இருவகைச் சக்திகளைப் பற்றி அறிய வேண்டுவது இன்றியமையாததாகும். ஏனெனில், இவ் விரு வன்மைகளே தாமச குணத்தை மாற்றமடையச் செய்து இயக்குவிப்பவை யாதலாலேயாம்.

பிரம்மத்தின் நிழல் ('சித்'தின் நிழல்) தாமச குணம் மிக்குற்ற அகங்காரத்தின் மேல் (தாமசாகங்காரத்தின்மேல்) விழும் போது மேற்கூறப்பட்ட இரு வன்மைகளை (ஆவரண சக்தி, விட்சேப சக்தி) இணைக்கச் செய்தே (சம்பந்தித்தே) மாற்றத்தை (பரிணாமத்தை) உண்டாக்குகிறது.

**'ஏமமா யாவி னோத**
**வீசனா ரருளி னாலே**
**பூமலி உயிர்கட் கெல்லாம்**
**போகசா தனமுண் டாகத்**
**தாமத குணமி ரண்டு**
**சக்தியாய்ப் பிரிந்து தோன்றும்**
**வீமமா மூட லென்றும்**
**விவிதமாந் தோற்ற மென்றும்.'** —(கை. ந. பா. 56)

ஆன்மாவுக்குத் துய்க்கும் கருவியாகிய பருவுடலை உதவ வேண்டுமென்னும் அருளுணர்வு ஈசனுக்கு உண்டானபோது அவ் வருள் வெள்ளத்தின் செயலால் தாமசாகங்காரம் இரு வல்லமைகளாய்ப் (சக்திகளாய்ப்) பிரிந்து செயல்புரியும். இவற்றுள் (வீமமாம் என்றதனால் அச்சந் தரவல்ல என்று பொருள் கொள்க) மூடல் என்னும் வன்மை அதாவது 'ஆவரண சக்தி' ஒன்று. விவிதமாம் என்றது உலகிலுள்ள பலவகைப் பொருள் களாம் (பதார்த்தங்களாம்). தோற்றம் என்னும் (விட்சேப) சக்தி வெளிப்படத் தோற்றுவிக்கும் வன்மை மற்றொன்றாகும்.

இவற்றுள் ஆன்ம தத்துவத்தையும், பிரம தத்துவத்தையும், இரண்டும் ஒன்றே என்னும் உண்மையையும் அறியக்கூடாத

வண்ணம் மறைக்கும் இயல்புடைய (அஞ்ஞான) சக்திக்கு **மூடல் வன்மை** (ஆவரண சக்தி) என்று பெயர்,

உலகிலுள்ள பல்வேறு சடப்பொருள்களும் (உயிரற்றவை), அசடப் பொருள்களும் (உயிருள்ளவை) பிரம்மத்தினிடமாய்த் தோன்றற்குக் காரணமாய் இருப்பதால், தோற்றுவிக்கும் தொழிலைப் புரியும் இச் சக்திக்குத் தோற்றல் (வெளியாக்கல்) வன்மை அல்லது **விட்சேப சக்தி** என்று பெயர்.

'அருளினாலே' என்றதால் நிர்க்குணமான (உரு, பெயர், யாதுமில்லாதது) பிரம்மத்துக்கு, அருளென்னும் குணமுண்டாகிப் பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்க ஏதுவாமென்று விளக்குதலால் அத்துவிதக் கோட்பாட்டைச் சார்ந்ததான வேதாந்தமும் (அபேதவாதம்), பேதாபேத வாதமான சித்தாந்தமும் இணைந்து ஒன்றுபடக் காண்கிறதை அறிக. சித்தாந்தத்தில், பொருளுமாய், அவனுமாய், அல்லாமலுமாய், ஒளியாய் என்கின்றமையால் மேற்படி வாதம் விளங்கும்.

மூடல் என்னும் ஆவரண சக்தியால் தத்துவ விளக்க முண்டாகக் காரணமற்றுப் (வாய்ப்பு அற்று) போவதால் பிறவிக் கடலுள் எக்காலத்திலும் சீவன் மூழ்கிக் கிடக்க நேரிடும் என்னும் காரணத்தால் இச் சக்தியை அச்சந் தருவதான அல்லது பயங்கரமானதான என்னும் பொருள் தரவேண்டி, வீமமாம் என்று கூறினார் என்க.

**'தோற்றமாஞ் சக்தி தன்னில்**
**சொல்லிய விண்ணாம் விண்ணில்**
**காற்றதாங் காற்றிற் றீயாம்**
**கனலில்நீர் நீரில் மண்ணாம்**
**போற்றுமிவ் வைந்து நொய்ய**
**பூதங்க ளென்று பேராம்**
**சாற்றுமற் றிவற்றில் போக**
**சாதன தநுவுண் டாகும்.'** —(கை. ந. பா. 36)

தோற்றமெனக் கூறப்பட்ட விட்சேப சக்தியால் விண்ணும் (ஆகாசம்), விண்ணிலிருந்து காற்றும் (வாயு), காற்றிலிருந்து தீயும் (தேயு), தீயிலிருந்து நீரும் (அப்பு), நீரிலிருந்து மண்ணும் (பிருதிவி) ஆகிய நொய்ய பூதங்கள் தோற்றம் கொண்டன. (முன்னர்க் கூறப்பட்ட 'தேடரு மகண்ட வொளிப் பிழம்பாய்' என்று தொடங்கும் தேரையர் குணவாகட நூலின் செய்யுளில்

'மூடவிட வல்லதுமாய்த் தனித்தவொன்று' என்னும் சொற்றொடர் இப் பாடலின் கருத்தோடு இயைபுடைமையைக் காண்க.) இந்த நொய்ய பூதங்களின் இடமாய்த் தோன்றும் மகாபூதங்களும், இம் மகாபூதங்களின் சேர்க்கையால் உண்டாகும் இப் பிரபஞ்சமும் (சடப்பொருள்கள் மட்டுமே ஈண்டுக் குறிக்கப்பட்டுள்ளன) உண்டாகின்றன.

**'ஆதிமுக் குணமிப் பூத**
**மடங்கலும் தொடர்ந்து நிற்கும்**
**கோதில்வெண் குணத்தி லைந்து**
**கூறுணர் கருவி யாகும்**
**ஓதிய பின்னை யைந்து**
**முளம்புத்தி யிரண்டா ஞான**
**சாதன மாமிவ் வேழுஞ்**
**சற்குணப் பிரிவி னாலே.'** **—(கை. ந. பா. 37)**

தமக்குக் காரணமான தாமசகுணம் ஓங்கி முதன்மை பெற்ற மாயையின்கண் உள்ள தமசில் சத்துவம், தமசில் இராசதம், தமசில் தமசு என்னும் முக்குணங்கள் மூன்றும் இத் தன்மாத்திரைகள் முழுவதிலும் தொடர்ந்துநிற்கும். அதன் காரணமாக உணர்கருவிகளாகிய (ஞானேந்திரியங்கள்) ஐந்து, உளம் (மனம்), புத்தி ஆகிய ஏழு தத்துவங்களும் தோன்றின.

மேற்படி ஏழு தத்துவங்களும் **ஞானசாதனம்** (உணர்தற்குதவும் உறுதுணைகள்) எனக் கூறப்படும்.

**'இராசத குணத்தில் வேறிட்**
**டெடுத்தகூ றைந்து மைந்தும்**
**பிராணவா யுக்க ளென்றும்**
**பெருந்தொழிற் கருவி யென்றும்**
**பராவிய பெயரா மிந்தப்**
**பதினேழும் இலிங்க தேகம்**
**சுராசுரர் நரர்வி லங்காய்த்**
**தோன்றிய வுயிர்கட் கெல்லாம்.'**

**—(கை. ந. பா. 38)**

ஐந்தைந்தாய்க் கூறுபடாத ஐம்பூதங்களில் இராசதகுணம் ஒன்றிய காரணத்தால், பெரிய கன்மேந்திரியங்கள் எனவும், பிராணாதி வாயுக்களெனவும் பெயருண்டாயின. ஆகவே,

முன் பாடலில் கூறப்பட்ட ஏழு ஞான சாதனங்களுடன், கன்மேந்திரியங்கள் ஐந்தும், பிராணாதி ஐந்து வாயுக்களும் சேர்ந்ததான இப் பதினேழு தத்துவங்களும் தேவர், அசுரர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரங்கள் என எழுவகைத் தோற்றங்கொண்டதான எல்லா உயிரினங்களுக்கும் சூட்சும உடலாம்.

இதற்கு முன் பாடலில் கூறியவாறு சத்துவக் குணக் கூறுகள் கூடிச் சத்துவமெனக்கூறப்பட்ட அந்தக்கரணங்களை உண்டாக்கின. அவை நான்காயினும், இவ்வாசிரியர் சித்தத்தை மனத்திலும், அகங்காரத்தைப் புத்தியிலும் அடக்கி அந்தக் கரணங்களை இரண்டென்பர். எவ்வாறெனில், பொருள்களின் நன்மை தீமைகளை உறுதிப்படுத்தும் தன்மையைப் புத்தியென்றும், சங்கற்பத்தையும் விகற்பத்தையும் உறுதி செய்யும் தன்மையை மனம் என்றும், நினைப்பாற்றலைப் பெருக்குந்தன்மையைச் சித்தமென்றும், ஒரு பொருளின்மீது உரிமை கொண்டாடுந்தன்மையை அகங்காரம் என்றும் கூறும். ஆகையால், பொருளின் நன்மை தீமையைக் கொண்டுதான் நம் மனம், வேண்டும் வேண்டாம் (விருப்பு, வெறுப்பு) என்னும் தன்மையை வெளிப்படுத்துமாகையால் புத்தியை மனத்தினுள் அடக்கினார். அதே போன்று நினைப்பாற்றலின் விளைவே (சித்தத்தின் விருத்தியே) அகங்காரம் விளையக் காரணமாதலால், அகங்காரத்தைச் சித்தத்தில் அடக்கினார். இவ்வகையில் அந்தக்கரணங்கள் இரண்டென்றார் போலும்.

மேலும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து கருவிகளையும் கூட்டி அவற்றுக்கு 'ஞானசாதனம்' எனப் பெயர் சூட்டப்பெற்றது.

பஞ்சபூதங்களின் சமட்டியில் இராசத குணக் கூட்டால் பிராணன் தோன்றியது. அது தொழில், இடம் முதலிய வேறுபாடுகளால் ஐந்து பெயர்களை உடையதாம். அஃது எவ்வாறெனின் :

**1. வியானன் :** இது வெளியின் (ஆகாயம்) கூறானபடியால், வெளி எங்கும் நிறைந்திருப்பதுபோல இஃது உடல் முற்றும் பரவி இருக்கும். இதற்கு இருப்பிடம் தமரகம் (இதயம்). இதன் தொழில் நடத்தல், உடலுறுப்புகளை அசைத்தல், கண்ணிமைத்தல்—விழித்தல் முதலியனவாகும்.

**2. பிராணன் :** இது வளியின் (வாயு) கூறானபடியால், வளியைப் போலத் தமரகத்தினின்று மூக்குவரை அலைந்து நிற்கும். இஃது உயிருடன் கலந்து, தலையை இடமாகப் பெற்று மார்பு, கழுத்து இவ்விடங்களில் வாழ்வதன்றி, மனம், புத்தி, ஐம்பொறி இவற்றைத் தன்வயப்படுத்தி, காறி உமிழ்தல், இருமல், தும்மல், ஏப்பம்விடல், மூச்சுவிடல்–வாங்கல், உண்ணும் உணவை உட்செலுத்துதல் என்னும் தொழில்களை நடத்தும்.

**3. அபானன் :** இது நெருப்பின் (தேயு) கூறானபடியால், எருவாயினின்று (குதம்) அடிவயிறு, இடுப்பின் பூட்டு, நீர்ப் பை, ஆண்–பெண் குறிகள், கருப்பப்பை, தொடை ஆகிய இடங்களில் வாழ்ந்து, வெண்ணீர் (விந்து), நாதம், மலம், சிறு நீர், கரு இவற்றை வெளிப்படுத்தும்.

**4. சமானன் :** இது நீரின் (அப்பு) கூறானபடியால், உடலின் நடுவான பக்குவாசயத்தையே இடமாகப் பெற்று, வயிறு முற்றிலும் வாழ்ந்து, உண்ட உணவு, நீர்ப்பொருள் களைச் செரிப்பித்தற்குரிய தீயை விருத்திசெய்து சாரத்தையும் திப்பியையும் வேறாகப் பிரித்து, சாரத்தை உடலின் எல்லா இடத்துக்கும் பகிர்ந்து கொடுக்கும்.

**5. உதானன் :** இது மண்ணின் (பிருதிவி) கூறானபடி யால், மார்பையே இடமாகக்கொண்டு கொப்பூழ், கழுத்து, மூக்கு இம் மூவிடங்களிலும் வாழ்ந்து, பேச்சுக்கு முதற்காரண மாய் இருப்பதன்றி, முயற்சி, மனத்திடம், உடல்வன்மை, உடல் நிறம், உடல் ஒளி, நினைப்பு ஆகியவற்றையும் உண் டாக்கும்.

விண்ணின் சத்துவகுணக் கூறால் கேட்டல் என்னும் உணர்வைத் தரும் காதுகளும், காற்றின் சத்துவகுணக் கூறால் ஊறு எனும் தொடுஉணர்வைத் தரும் தோலும், தீயின் சத்துவகுணக் கூறால் பார்வை (ஒளி) என்னும் உணர்வைத் தரும் கண்களும், நீரின் சத்துவகுணக் கூறால் மணம் என்னும் உணர்வைத் தரும் மூக்கும் ஆகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும் தோன்றின.

அதே போல, விண்ணில் இராசதகுணக் கூறால் வாக்கும், காற்றில் இராசதகுணக் கூறால் கைகளும், தீயில் இராசத குணக் கூறால் கால்களும், நீரில் இராசதகுணக் கூறால்

ஆண் பெண் குறிகளும், மண்ணில் இராசதகுணக் கூறால் எருவாயும் ஆகிய ஐந்து கன்மேந்திரியங்களாய் உருப்பெற்றன.

ஆகவே, ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, பிராணன்கள் ஐந்து, அந்தக்கரணங்கள் இரண்டு ஆகப் பதினேழும் எல்லா உயிரினத்துக்கும் இலிங்க சரீரம் எனப்பட்ட சூக்கும உடல் என்க.

தோற்றச் சக்தியின் (விட்சேப சக்தி) வாயிலாய் 'நொய்ய பூதங்கள்' என்னும் ஐந்து தன்மாத்திரைகளும், பிறகு, பஞ்சீ கரணமென்னும் முறையை ஒட்டி, இந் நொய்ய பூதங்களிட மாய்த் தோன்றும் மகா பூதங்களும், இம் மகாபூதங்களின் சேர்க்கையாலுண்டாகும் இப் பிரபஞ்சமும் (சடப் பொருள் மட்டுமே குறிப்பிடப்படுகின்றன) உண்டாகின்றன.

தாமசகங்காரத்தின் மாறுபாட்டால் இவை யாவும் உண் டாயின. ஆயினும், இவற்றுள் சத்துவ, இராசத, தாமத குணங் கள் மூன்றுமே தொடர்ந்துவரக் கிடக்கின்றன என்பதும், தாமத குணம் மீசுரமுற்றுள்ள தாதலால், இப் பொருள்களெல்லாம் சடப் பொருள்களாய்த் தோன்றின என்பதும் அறியக்கிடக் கின்றது. இக் காரணம் பற்றியே இச் சடப்பொருள்களிலுங் கூட, சிலவற்றுள் சத்துவ குணத்தின் வாயிலாய்த் தோன்றிய சில தன்மைகளும், இராசத குணத்தின் வாயிலாய்த் தோன்றிய சில தன்மைகளும், தாமத குணத்தின் வாயிலாய்த் தோன்றிய வேறு சில சிறப்புத் தன்மைகளும் உண்டாகின்றன. எவ்வாறெனில், சடப்பொருள்களெல்லாம் (உயிரற்ற பொருள் கள்) மீசுரமுற்ற தாமத குணத்தின் மாற்றமே ஆயிடினும், அவற்றுள் ஒன்று கரும்பாகவும், மற்றொன்று வேம்பாகவும், வேறொன்று புளியாகவும். இவ்வாறே பற்பல தன்மைத் தாகவும் இருத்தலால், தாமத குணத்தின் வாயிலாக வந்த சடப் பொருள்களுள்ளும் சிலவற்றுள் சத்துவ குணமும், சில வற்றுள் இராசத குணமும், வேறு சிலவற்றுள் தாமத குணமும் சிற்சில காரணங்களால் சிற்சில சந்தர்ப்பங்களில் (இடம், காலம், சூழ்நிலை ஆகிய இயற்கையின் மாறுபாடு களால்) உண்டாகின்றன. இவ் விடயங்கள் பல மருத்துவ நூல்களில் விரித்துக் கூறப்பட்டுள்ளன.

வியக்தம் (வெளிப்பட்டுள்ள விளக்கநிலை), மகத்துவம் (பேருண்மை) முதல் நொய்ய பூதங்களென்னும் சுவை, ஒளி,

ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன்மாத்திரைகள் ஈறாக உள்ள பிரகிருதியின் பேதங்களுக்குச் (இயற்கையின் பாகுபாடு களுக்கு) சமட்டி என்று பெயர். இந்த நொய்ய பூதங்களின் வாயிலாகத் தோன்றும் மகா பூதங்களென்னும் விண், காற்று, தீ, நீர், மண் என்பன முதல், அவற்றின் சேர்க்கையாலுண் டான இவ் வுலகிலுள்ள எல்லாமும் வியட்டி என்னும் ஆக்கத் தின் (சிருட்டியின்) உட்பிரிவின் பாற்படும். தனித்தனி மரங் களைக் குறித்து விவரித்தல் வியட்டி என்றும், அவற்றின் தொகுதியிலுண்டான காட்டைக் குறித்து விவரித்தல் சமட்டி யென்றும் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இவ்வாறே இத் தாமத குணத்தின் (தாமசகுணம்) நொய்ய பூதங்கள் தனித்தனியாகச் சத்துவம் மீசுரமுற்ற சாத்துவிக அகங்காரத்துடன் சேர்ந்து ஐந்து ஞானேந்திரியங்களை (மெய், வாய், கண், மூக்கு, செவி) தோற்றுவிக்கும். மற்றும், அந்தக் கரணங்கள் என்று கூறப்படும் மனம், புத்தி, சித்தம், அகங் காரம் என்னும் நான்கையும் தோற்றுவிக்கும்.

இதனால், சத்துவ குணம் மீசுரமுற்ற அகங்காரத்தின் (சாத்துவிக அகங்காரம்) தோற்றங்களும், தாமத குணம் மிக் குற்ற அகங்காரத்தின் (தாமசாகங்காரம்) வாயிலாய்த் தோற்ற முற்ற சடப்பொருள்களின் பஞ்சீகரண முறையையும் (கிரமத் தையும்) விவரித்தோம். இவ் விடயத்தையே வேறு சிலர் மற் றொரு வகையாய் விவரித்துள்ளனர்.

**'சூக்கும சடமிம் மட்டுஞ்**
**சொல்லினோ மிப்பாற் றூலம்**
**ஆக்குமா ரோபந் தானும்**
**அடைவினின் மொழியக் கேளாய்**
**தாக்குமிவ் வுயிர்க்குத் தூல**
**தநுவும்போ கமுமுண் டாகக்**
**காக்குமவ் வீசன் பஞ்சீ**
**கரணங்கள் செய்தான் றானே.'** —(கை. ந. பா. 40)

நுண்ணுடல்பற்றி இதுவரை கூறினோம். இனி, பருவுடலை ஆக்கும் தகைமையை முறைப்படி கூறுவேன், கேட்டுக் கொள்வாயாக. நுண்ணுடலில் (இலிங்க சரீரத்தில்) உறவுகொண்டு உயிர்க்கு. அதன் வினைப்பயன் போலப் பரு வுடலையும் அந்த உடலுக்குப் பொருத்தமான துய்க்குந் தன்மையையும், வாய்ப்பையும் உண்டாக்கும் பொருட்டு எல்

லோரையும் காக்கும் ஈசன் ஐந்து தன்மாத்திரைகளையும் பஞ்சீ கரணம் செய்தான்.

'ஐந்துபூ தமும்பத் தாக்கி
யவைபாதி நந்நான் காக்கி
நந்துதம் பாதி விட்டு
நான்கொடு நான்குங் கூட்ட
வந்தன தூல பூத
மகாபூத மிவற்றி னின்றும்
தந்தன நான்காந் தூல
தநுவண்ட புவன போகம்.' —(கை. ந. பா. 41.)

ஐந்து பூதங்களையும் (தனித்தனியாக ஒவ்வொன்றையும்) சரி பாதியாகப் பகிர்ந்து பத்துப் பாகங்களாக்கிக்கொண்டு, ஒவ்வொரு பாதியையும் நந்நான்காகப் பகிர்ந்து-ஆக ஒவ்வொரு பூதத்தின் ஒரு பெரிய பகுதியும் (அரைப்பாகம்), நான்கு சிறிய பகுதியுமாக (அரைக்காற் பாகம்) ஆமாறுசெய்து அப் பாகங்களில், பெரிதாகிய அரைப்பாகத்தில் அப் பூதம் நிற்க, மிகுதியான நான்கு பாகங்களில் மற்றைய நான்கு பூதங்களின் அரைக்காற் கூறுகள் (சிறிய பாகங்கள்) இணைந்ததன் விளைவாய்த் தூல பூதங்கள் வந்தன.

மகா பூதங்கள் என்பவை அண்டம், புவனம், போகம், பாக்கியம் என்பனவாம். அண்டம் அதாவது பிரம்மாண்டம் என்பதனுள்ளே மேலெழு புவனம் (உலகங்களாகிய பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் என்பன), கீழேழு புவனம் (அதலம், விதலம், சதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம் என்பன) ஆகியவை சேர்ந்த பதினான்கு உலகங்களும் அடங்கும். போக்கியம் என்னும் நுகர்தகு பொருள்களாகிய உணவு, நீர் காற்று முதலான பல பொருள்களையும், நுகர்ச்சிக்களனாகிய சராயுஜம் (பையில் தோன்றுவன), அண்டஜம் (முட்டையில் தோன்றுவன), சுவேதஜம் (வியர்வையினின்றும் தோன்றுவன), உற்பீஜம் (வித்தினின்றும் தோன்றுவன) என்று கூறப்பெற்ற நால்வகைப் பிறப்பினங்களையும் ஆக்கி அளிக்கப்பெற்றன.

ஆகவே, ஒவ்வொரு பூதத்திலும் ஐந்தைந்து பூதங்களைச் சேர்த்து மேலே கூறியபடி சிருட்டி செய்வதற்கு (ஆக்குவதற்கு) பஞ்சீகரணம் என்று பெயர். எந்தப் பூதங்கள் பஞ்சீகரணம்

செய்யப்பட்டனவோ அவற்றைப் பஞ்சீகிருத பூதங்கள் என்பர்.

இராசத குணம் மீசுரமுற்ற அகங்காரத்தின் ஒரு பகுதி சத்துவகுணம் மீசுரமுற்ற அகங்காரத்தின் துணையால் ஐவகை வாயுக்களாகவும் (பஞ்சபிராணன்), மற்றொரு பகுதி தமோ குணம் மீசுரமுற்ற அகங்காரத்தின் துணைகொண்டு ஐவகைத் தொழிற் கருவிகளாகவும் (கன்மேந்திரியங்கள்) மாறும் என் பதை முன்னமே கூறியுள்ளோம்.

இவ்வாறு உணர்கருவிகளாகிய ஞானேந்திரியங்கள் ஐந்து, தொழிற் கருவிகளாகிய கன்மேந்திரியங்கள் ஐந்து, வாயுக்கள் ஐந்து, மனம், புத்தியாகிய இப் பதினேழும் சேர்ந்து ஆன்மாவுக்கு 'இலிங்கசரீரம்' என்னும் நுண்ணுடலாக அமை கின்றன.

இவற்றுள் இராசதகுணத்தின் மாற்றமாய் வந்து தோன்றிய பஞ்சவாயுக்களும் அவற்றின் செயல்களும் **பிராணமயகோசம்** எனப்படும். சத்துவகுணம் மீசுரமுற்ற அகங்காரத்தின் வாயி லாகத் தோன்றிய ஞானேந்திரியங்கள் (உணர் கருவிகள்) மனம், புத்தி ஆகியவற்றின் செயல்களுக்கும், அவற்றுக்கு ஆதாரமான தத்துவங்களுக்கும் **மனோமய கோசம்** எனப் பெயர்.

தமோகுணம் மீசுரமுற்ற அகங்காரத்தின் வாயிலாகத் தோன்றிய மகாபூதங்களின் சேர்க்கையாலுண்டான இவ் வுட லுக்கு **அன்னமய கோசம்** (தூலதநு = பருவுடல்) என்று பெயர்.

இவ்வாறு ஆன்மாவுக்கு உற்ற உடல், ஐந்து கோசங்களின் பிணைப்பால் உண்டானதாகும். இவற்றுள் ஆனந்த மய கோசம் காரணசரீரம் என்றும், விஞ்ஞானமய கோசம், மனோ மயகோசம், பிராணமயகோசம் ஆகிய மூன்றும் சூக்குமசரீரம் (அல்லது இலிங்கசரீரம்) என்றும், அன்னமயகோசம் காரிய சரீரம், போகதநு (தூலசரீரம் அல்லது பருவுடல்) என்றும் கூறப்படும்.

## (ஆ) சைவ சித்தாந்தம்

**பதி, பசு, பாச விளக்கம்**

இதுவரை கூறியவாற்றான் 'பிரம்மம்' ஒன்றுதான் உள்ளது; மற்றவை யாவும் இல்லை. அப் பிரம்மத்துடன் இச் சீவன்

இரண்டறக் கலத்தலே சீவன் முக்தி (மோட்சம்) ஆகும். இத் தத்துவத்தை ஞானமார்க்கத்தால் அறிந்து பெறலாம். யோக சாதனையும் இதற்குத் துணைபுரியும் என்னும் முடிபுகளைக் கண்டோம். இதற்குச் சான்றாக வேதங்களையும், உபநிடதங்களையும், சூத்திரங்களையும், சூத்திர உரைகளையும் எடுத்துக் கூறுவர். ஞானமார்க்கத்தையோ அன்றி யோக மார்க்கத்தையோ பின்பற்றல் ஏதோ ஒரு சிலர்க்கு மட்டுமே சாதிக்க முடியுமே யன்றிப் பெரும்பாலாரான மக்கட்கு இவ் வுபாயங்கள் பயன்படா. பெரும்பான்மையான இவர்கள் பிறவியின் பயனைப் பெறாமலேயே பிறவிக்கடலில் மூழ்கிக் கிடத்தல் வேண்டுமன்றோ? அவர்கட்கும் நற்கதிவாய்க்க யாதொருவழியும் வகுக்கப்படவில்லையா? மேலும், ஏகமாய் நின்ற பிரம்மம் இன்னதென்று வகுத்துரைக்க முடியாததென்று நூல்கள் அறுதியிட்டுக் கூறுமேல், இன்னதென்றும், இத் தன்மைத்தென்றும் வகுக்க முடியாததை அறிவினால் எங்ஙனம் காணல் கூடும்; அல்லாமலும், அபேதமாய் (வேறுபாடு அற்றதாய்) நிர்க்குணமாய் (யாதொரு பண்பும் தோற்றாததாய்), ஏகமாய் (ஒன்றேயொன்றாய்), கேடின்றி என்றும் நிலைத்து நிற்கும் பிரம்மம்' ஒன்றுதான் நாம் அறியக்கிடக்கும் தத்துவமா மென்று சுருதிகள் ஒருபுறம் முறையிட, பேதம் (வேறுபாடு) என்று சொல்லும் சுருதியின் மற்றொரு பாகத்துக்கும், பேதாபேதம் (ஒற்றுமையில் வேறுபாடு அல்லது வேறுபாட்டில் ஒற்றுமை) என்று கூறும் அதே சுருதியின் மூன்றாம் பகுதிக்கும் அளவின்றிப் (பிரமாணம் அல்லது சான்றுகள்) பிதற்றல் என்று நீக்கத்தக்கதா? கொள்ளத்தக்கதா? அவ்வண்ணமே கன்ம மார்க்கம், பக்தி மார்க்க மென்றெல்லாம் வகுக்கப்பட்ட வழிகள் பயனற்றவைகளா? பிரம்மத்தைச் 'சகுணம்' என்றும், உலகம் உள்ளது என்றும் விவரிக்கும் (வருணிக்கும்) சுருதி வாக்கியங்கள் பொருளில் மொழிகளா? இவ்வித வினாக் களுக்கு விடைகூறிய வகையிலும், குறிப்பிட்ட ஒருசிலரே யன்றிக் கல்லாதவர், கற்றவர் ஆகிய யாவர்க்குமே பயன்படக் கூடியதுமான சில விளக்கமான பொருள்கள் அவ் வேத வாக் கியங்களுக்கே கொடுக்கப்பட்டு அவ்வழியாய் உதவிய 'சைவ சித்தாந்தம்' என்னும் மரபுகள் தோன்றின.

இம் மரபுகளின் விசாரணைகளே (விவாத விளைவுகள்) இத் தலைப்பில் விளக்கப்படும்.

கன்ம மார்க்கத்தால் (வினைவழியில்) மோட்சம் (வீடு) அடையலாம் என்பதை உன்னிப்பார்க்கில், ஈசன் ஒருவன்

உளன் என்பதையே ஒப்புக்கொள்ளாத மீமாஞ்சகர்கள், இந்திரன், அக்கினி போன்ற பல்வேறு கடவுளர் இருத்தலை ஏற்றலும், வேள்வி (யாகாதி கன்மங்கள்) முதலான பற்பல நல்வினையால் மந்திரமூர்த்திகளான (தீக்கடவுள், புரந்தரன், நீர்க் கடவுள்) பிற கடவுளர்களைத் திருப்திசெய்து அதனால் 'சுவர்க்கம்' (துறக்கம்) என்னும் லோகாந்தரத்தைப் (இவ்வுலகைவிட்டுப் போனநிலை) பெற்று இன்பந் துய்க்கலாம் என்று சொல்வதும், அவற்றை முற்றிலும் எதிர்க்கும் அத்துவித சமயத்தினர் ஞானமார்க்கம் (மறைகளில் விவரித்தவையான) ஒன்றையே ஏற்றலும் இரு முனைகள் (கோடிகள்) ஆகும் .இவ்விரு கோடியினர்க்கும் போதிய சான்றுகள் வேதத்தில் கிடக்கின்றன. இவற்றுள் எது சரியானது என்று நிலைநாட்டுவது எவ்வாறு? வேதத்தில் சொல்லிய சில பாகங்களை மட்டுமே ஏற்று மற்றப் பாகங்களைத் தவிர்த்தல் நன்றன்று. இச் செயலால் தகுதியுடைய தீர்மானத்தை நிலைநாட்ட இயலாமற் போய்விடும். இதை மனங்கொண்டு மேற்கூறிய இரு கொள்கையினர்க்கும் மாறாக 'சைவசித்தாந்தம்' என்னும் மார்க்கமானது, வேதங்களில் கூறப்பட்ட 'கன்மகாண்டம்,' 'ஞான காண்டம்' என்னும் இரு பாகங்களையும் ஏற்றுக்கொண்டு, ஒருமைப்பாடு கண்டு ஞானமும் கன்மமும் தேவைதாம் என்பதை வற்புறுத்தி 'ஞானகன்ம சமுச்சயம்' என்னும் தத்துவத்தை வற்புறுத்துகின்றது. அவ்வண்ணமே 'நிர்க்குணமான பிரம்மம்' (உருவமற்றநிலை), சகுணமானதாகவும் (உருவுற்றநிலை) பெறுமென்றும்; அது உருவாயும் அருவாயும், உளதாயும் இலதாயும், அணுவில் அணுவாயும், மேருவினும் வலியதாயும் ஆயினும், வாக்குக்கன்றி மனத்துக்கும் எட்டாததாயும் உளதென்றும் கூறியுள்ளனர்.

இந்தச் சித்தாந்தப்படி யாவற்றினும் மேலான பொருளாய்த் தலைமையில் நிற்குந் தலைவனாய் உள்ளது 'சிவன்' என்னும் தத்துவமாகும். இவனே ஈசன், இறை, இறைவன், பதி என அழைக்கப்படுவதன்றிக் குறிப்பிட்ட மொழியிலுள்ள சொற்கள் யாவுமே இவனைக் குறிப்பவையாகுமென்றும் கூறுவர். சீவான்மாக்கள் உண்டென்றும், அவை ஒவ்வொரு சரீரத்துக்கு ஒவ்வொன்று வீதம் பலகோடி உளவென்றும், ஆயினும், இவ் வான்மாக்கள் முன் சொன்ன பரமனின் (சிவன்) திரிபேயென்றும் கூறுகின்றது. இவ்வண்ணம் 'தான் அவனே' என்றறிதலே பிறவியைப் பெற்ற ஆன்மா செய்யத்தக்கதாகும். இதுவே, ஆன்மாவுக்கு 'மோட்சம்' என்று கூறப்படும்.

ஈசனுக்கும் ஆன்மாவுக்குமுள்ள (சிவனுக்கும் சீவனுக்குமுள்ள) சம்பந்தத்துக்குத் 'தாதான்மியம்' (அவ்வண்ணமாய் இருத்தல்) என்று பெயர். படமாகிற (துணி) காரியத்துக்கு நூல் முதற்காரணமாயும். துணைக் காரணமாயும் இருப்பது போல் நூலின் சேர்க்கையும் (நெசவு) ஒரு காரணமாகுமன்றோ? இக் காரணமாகின்ற நூலின் சேர்க்கைக்கும், காரியமாகிற படத்திற்கும் உள்ள சம்பந்தத்தைத் தாதான்மியம்' என்பர். ஆன்மாக்களுக்கும் ஈசனுக்குமுள்ள சம்பந்தம் தாதான்மியம் என்றதால் பல கோடி ஆன்மாக்களின் சேர்க்கையே ஈசனாம் என்பது இதனால் புலனாகிறது. ஆகவே, இங்குப் பேதம், அபேதம் (வேற்றுமை, ஒற்றுமை) ஆகிய கொள்கைகளாகிய இரண்டுமே ஏற்கப்பட்டுள்ளதென்பதை அறிக. இதனால் 'தானே அவன்' என்பதை ஓர் ஆன்மா அறிதலே பிறவிப் பயனாம் என்பது விளங்குகின்றது. இது ஞான மார்க்கமாகும். இவ் வறிவைப் பெறற்குக் கன்ம மார்க்கம் உதவியாய் ஏற்கத் தக்கது என்பதைச் சைவசித்தாந்தம் விளக்கும். மேற்சொன்ன வண்ணம் ஈசனினின்றும் வேறுபடாத ஆன்மா, 'தான் யார்?' என்பதை மறந்தது எங்ஙனம்? என்றால், அஞ்ஞானத்தினால் உண்மை நிலை மூடப்பட்டுத் தன்னைத்தான் அறியாமை வந்து கூடும். பிறகு அதைத் திரும்பவும் நினைப்பூட்டிக் கொண்டறிவதே மோட்சமாகுமென்று 'பிரத்யபிக்ஞா தரிசனம்' கூறும். 'பிரத்யபிக்ஞா' என்றால், 'பண்டொரு முறை நான் கண்ட தேவதத்தனே யாவான், இன்று என்முன் நிற்கும் இவன் என்று உணரும் அறிவு' என்பதாகப் பொருள்படும். இதற்கு நினைப்பு (ஸ்மிருதி), பார்த்தல் (அநுபவம்) ஆகிய இரண்டும் வேண்டும். இதனால் 'அகம் பிரம்மாஸ்மி' என்னும் முடிவான நிலை கிடைக்குமென்பது ஞானமார்க்கத்தை மாத்திரமே ஏற்கும் மதத்தினரின் கொள்கையாகும்.

சைவ சித்தாந்தமோ என்றால் ஞானம், கன்மம் இரண்டையுமே ஏற்று, ஈசனைச் 'சிவ'னென்றழைத்து, தான் அவனே என்று ('சிவோகம்' என்றுணர்தற்கு) அறிவதற்கு ஞானமார்க்கத்தைத் தழுவியும், அவ் வறிவைப் பெறற்கு உபாயமாகக் கன்ம மார்க்கத்தை யேற்று, ஜபம், தியானம், சரியை என்னும் கன்மங்களை வகுத்து அவற்றின் வாயிலாய், உண்மையைக் காணவொட்டாது மறைக்கும். அஞ்ஞானத்தைப் போக்கி, 'சிவோகம்' என்னும் மெய்ஞ்ஞானத்தைப் பெற்று, ஓர் ஆன்மா ஈசனுடன் இரண்டற்ற நிலையைப் பெறல் என்னும் 'ஞான கன்ம சமுச்சயம்' என்னும்படியான ஒரு மார்க்கத்தை வகுத்துக் காட்டும்.

'ஒன்றென்ற தொன்றேகாண் ஒன்றே பதிபசுவாம்
ஒன்றென்ற நீபாசத் தோடுளைகாண்—ஒன்றின்றால்
அக்கரங்க ளின்றாம் அகர வுயிரின்றேல்
இக்கிரமத் தென்னு மிருக்கு.' —(சிவஞானபோதம்)

மெய்கள் அகரமொடு சிவணியன்றி இயங்காமையானும், இகர ஈகார, உகர ஊகாரங்கள் அகரத்துக்குரிய அங்காப்பு முயற்சியோடு சிவணியன்றிப் பிறவாமையானும், எகர ஏகார, ஒகர ஓகாரம் முதலாயின முன் அகரக் கூறும் பின் இகர உகரக் கூறுகளுமாய் இயைந்தன்றிப் பிறவாமையானும், அவையெல் லாம் அகரமாகிய உயிரையன்றிப் பிறவாமையானும், அவை யெல்லாம் அகரமாகிய உயிரையின்றி யமையாமை பெற்றாம். அது போல, பிரம மில்லையாயின் ஒரு பொருளுமில்லை என்ற தூஉம், பிரமத்தை இன்றியமையாமைப் பொருட்டென்பார், 'அக்கரங்க ளின்றா மகரவுயிரின்றே லிக்கிரமத்தென்னுமிருக்கு' என்றார். அகரஉயிரை நாதமென்றுரைப்பாரும் உளர்.

'அரக்கொடு சேர்த்தி அணைத்தவக் கற்போல்
உருக்கி உடற்கியைந்து நின்று—பிரிப்பின்றித்
தானே உலகாந் தமியே னுளம்புகுதல்
யானே உலகென்ப னின்று.' —(சிவஞான போதம்)

கலப்பாய் நிற்றலான் உலகேயாம் என்பார் உடங் கியைந்து எனவும், பொருட்டன்மையான் வேறு நிற்றலால் தானேயாமென்பார் நின்று எனவும், உயிர்க்குயிராய் நிற்றலால் தானேயுலகாம் என்பார் பிரிப்பின்றி எனவும் கூறினார்.

ஈண்டும் இரட்டுற மொழிந்து கொள்க. உலகென்றது ஈண்டு உயிர்களை. இலனாகலான் என்பது இன்றி எனத் திரிந்து நின்றது. இதனால் மூவகையும் ஒருங்கு கூறுதற்கு எடுத்துக் காட்டியவாறறிக.

இவ்விரு செய்யுள்களும் ஆன்மாவுக்கும் ஈசனுக்கும் உள்ள தாதான்மியத்தை விளக்கி, ஒருவகையில் இவ்விரண்டும் வெவ்வேறென்றும், மற்றொரு வகையில் இவ்விரண்டும் ஒன்றே யாம் என்றும் ஏற்கும் கொள்கை விளக்கப்படுகிறது. மேலும், ஆன்மா பேதமானது என்று ஏற்குந்தருணத்து,

'அவ்வினையைச் செய்தவனில் அவ்வினைஞர் தாஞ்சென்றங்
கவ்வினையைக் காந்த பசாசம்போல் – அவ்வினையைப்
பேராம லூட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தா மறிந்தணைப்பா ராங்கு.' —(சிவஞான போதம்)

ஆன்மாக்களுக்குத் தமக்கென அறிவின்மையானும், வினை சடமாகலானும், மாயை, 'தாரகமாம் அத்தன்தாள் நிற்ற' லெனப் போந்தமையானும், முதல்வனே அறிந்தணைவா னெனப் பாரிசேடப் பிரமாணங் கூறுவர், அவ் வினையைப் பேராமல் ஊட்டும்பிரானின் நுகராரேல் ஆர்தாம் அறிந்தணைப் பார் என்றார். செய்வதற்கிடனாகிய உடம்பைச் செய்வது என்று உபசரித்தார்.

அற்றேல், இவ் வினை ஆதியோ? அநாதியோ? ஆதியாயின் முன் இல்லது இடையே தோன்றுமென்பது சத்காரிய வாதத் திற்கு ஏலாது. அநாதியாயின் ஒருவர் கூட்டவேண்டுவதில்லை என்னும் ஆசங்கையை நீக்கி அதனை வலியுறுத்தற்கு எடுத்துக் காட்டு.

'நெல்லிற் குமியும், நிகழ்செம் பினிற்களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே - வல்லி
மலகன்மம் அன்றுளவாம் வள்ளலாற் பொன்வாள்
அலர்சோகஞ் செய்கமலத் தாம்.'

—(சிவஞான போதம்)

மாயை இறைவனுக்குப் பரிக்கிரக சக்தியாதலின், வல்லி என்றார். இஃதறியாதார் மகடூஉ முன்னிலையாக்கி உரைப் பார். வினைக்குத் தொன்மை கூறுவார் இனம்பற்றி மாயை மலங்கட்குத் தொன்மையும் உடன் கூறினார். இருவினை உண்மைக்கோதிய பிரமாணமே அவற்றிற்குப் பற்றுக்கோடா கிய மாயை யுண்மைக்கும் பிரமாணமா மென்பதாலும், மேலைச் சூத்திரத்திற் கூறிய சத்காரிய வாதத்தானும், மாயை யுண்மை பெறப்பட்டது. மலமுண்மைக்குப் பிரமாணமும் மேலைச் சூத்திரத்திற் பெறப்பட்டது.

மேற்படி செய்யுள்களால், உலகத்தில் பிறவியைப் பெற்ற ஆன்மா, சுகதுக்க அநுபவங்கள் யாவற்றையும் அவனிடமாய்ப் பெறுகின்றனவென்றும், இதற்கு அவ் வான்மாவின் வினையே காரணமா மென்றும் விளக்கப்பட்டிருப்பது காணக் கிடைக் கிறது. ஆயினும்,

'எங்குமுள னென்றளவை ஒன்றன் றிரண்டென்னில்
எங்கு முளனன் றெவற்றெவனும்—அங்கண்
அவையவன் அன்றில்லைப் பொன்னொளிபோ லீசன்
அவையுடைமை யாளாநா மங்கு.'

—(சிவஞானபோதம்

என வரும், பசுபாசங்களும் வியாபகம் ஆகலின், அவையும் இம் முறைமைபற்றித் தத்தம் சக்திகளோடும் தாதான்மியமாய் நிற்குமென்பது பெறப்படுதலான் முதல்வனோடு அவற்றிடை வேற்றுமையில்லை போலுமென்னும் **ஆசங்கை** நிகழாமைப் பொருட்டு 'அவையுடைமை யாளாநா மங்கு' என மேலைச் சூத்திரத்தில் 'தாரகமா மத்தன்தாள்' எனவும் 'அதனின்றலா லொன்று பலவாறே தொழும்பாகும்' எனவும் கூறிப்போந்த வற்றை அநுவதித்து உணர்த்தினாராகலின், அது கூறியதுகூற லன்மை உணர்க.

'எவற்றெவனும் அங்கணவை யவனன்றில்லை', என்பது எவ்விடங்களிலுமுள்ள எத்திறப் பொருளுமாகிய அவ்விடத்துப் பொருள்கள் அம் முதல்வனை யின்றியமையா என்றவாறு.

இச் செய்யுளால் பேதமாயும், அபேதமாயும் (வேறுபடுத்தியும் ஒருமைப்படுத்தியும்) சொல்லப்பட்ட தத்துவங்களை ஒன்றுபடுத்திப் பார்க்கப் பேதாபேதம் (வேற்றுமையில் ஒற்றுமை அல்லது ஒற்றுமையில் வேற்றுமை) என்னும் சித்தாந்தக் கொள்கை விளங்கும். இதுவே சைவசித்தாந்தத்தின் சுருக்கம்.

இனி, அத்தகைய சைவசித்தாந்தத்தை விளக்கவல்ல சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் முதன்மையானது 'சிவஞானபோதம்'. சித்தாந்தத்துக்கு ஆணிவேர் போன்ற இந் நூலில் பன்னிரண்டு சூத்திரங்கள் உள. இவற்றைப் பொது அதிகாரமென்றும் உண்மை அதிகாரமென்றும் இருவகையாகப் பிரிக்கலாம். பொது அதிகாரத்தில் ஆறு சூத்திரங்களும், உண்மை அதிகாரத்தில் ஆறு சூத்திரங்களுமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றுள் முதற்பகுதியான பொது அதிகாரம் இரண்டு இயல்களாக ஆக்கப்பட்டுள்ளது. இவற்றுள் பதி, பசு, பாசம் என்னும் முத் தத்துவங்களுக்குப் பிரமாணங்கூறும் முதல் மூன்று சூத்திரங்களுக்குப் **பிரமாணவியல்** என்றும், அத் தத்துவங்களின் இலக்கணத்தை விவரிக்கும் அடுத்த மூன்று சூத்திரங்களுக்கு **இலக்கணவியல்** என்றும் பெயர். உண்மையதிகாரத்தில் ஏழாவது முதல் பன்னிரண்டாவதுவரை உள்ள ஆறு சூத்திரங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ஏழாம் சூத்திரம் முதல் மூன்று சூத்திரங்கள் துன்பம் நீங்குவதற்கும் இன்பம் பெறுவதற்கும் நாம் ஏற்கத் தகுந்த சாதனங்களை வகுக்கும். ஆதலால், இதற்குச் **சாதனவியல்** என்றும், இச் சாதனத்தால் பெறும் பயனை, (அஃதாவது பாசம் அறவே

ஒழிந்து சிவப்பேறு பெறலென்னும் இருவகைப் பயனை)பெறும் பேற்றின் இலக்கணங்களைப் பத்து முதல் மூன்று சூத்திரங்கள் விளக்கும் காரணத்தால் இதற்குப் **பயனியல்** என்றும் பெயர். இவ்வாறு உண்மை அதிகாரமும் **சாதனவியல், பயனியல்** என்னும் இரு பிரிவுகளை உடையதாம்.

**பதியின் விளக்கம்**

பேதாபேதத்தைச் சைவசித்தாந்தம் ஏற்கிறது. மேலும், இது நிர்க்குண பிரம்மத்தையும், சகுண பிரம்மத்தையும் சமமாக ஏற்கிறது. பரப்பிரம்மத்தை இச் சமயத்தினர் பதியென்றும், சிவனென்றும் பெயரிட்டழைக்கின்றனர். ஆன்மாக்கள் உண்டு என்றும், அவை பலகோடி என்றும், பிறப்பும் இறப்பும், சுகமும் துக்கமும் எல்லாம் கன்மத்தின் பயனாய் விளைவன என்றும் சொல்லுகின்றது. 'சிவம்' குறிப்பிட்ட ஆன்மாவின் கன்மத்தை ஒட்டி அதற்குப் பிறப்பை அளிப்பதல்லாது அதனுடன் தனது சித் சக்தியையும் நிலைக்கச் செய்கிறது. முதலில் சொன்ன வகையில் பேதமும், பின்னர்ச் சொன்ன வகையில் அபேதமும் ஏற்கப்பட்டது என்பது இதனால் விளங்குகிறது. 'சிவம்' என்னும் பதி ஒருவகையில் ஞானப் பிழம்பாய் மாற்றம் ஒன்றுமின்றித் தன்னைத் தெரிவிக்கும் இயல்பை மட்டும் பெற்று நிற்கும். இச் சிவத்தின் மற்றொரு அம்சம் தன் ஒளியை உலகத்தின்மேல் வீசி இவ்வுலகத்திலுள்ள பொருள்கள் அறியப்படும் நிலையை அடைவிக்கும். இவ்வொளியின் ஒரு **கூறே** இவ்வுலகிலுள்ள சட அசடப்பொருள்கள் யாவற்றிலும் உட்புகுந்திருத்தலால் அவை அறியப்படும் இயலைப் பெறலாயின. சிவத்தின் இந் நிலையைப் பரிதியும் (ஞாயிறும்) அவன் கதிரும் போலாகும் என்று விவரித்துள்ளார்கள். சூரியன தன ஒள்ளொளியால் (ஜோதியால்) தன்னைக் காண்டற்குக் கிடைக்கும்வண்ணம் செய்வதன்றித் தன்னொளியால் ஏனையவற்றைக் காணக்கிடக்குமாறு செய்வித்தலைப் போல, பதியின் ஞானமாகிய அம்சத்திற்குச் சிவம் என்னும் பெயரும், மற்றொரு பாகமாகிய ஒளிக்குச் சக்தியென்னும் பெயரும் சைவசித்தாந்தம் கூறும். ஆகவே, சிவமும் சக்தியும் சேர்ந்த தனிப (ஒபபற்ற) பெருஞ்சோதி சொரூபத்துக்குப் பதி யென்னும் பெயர் வழங்கலாயிற்று. (இதனையே இராமலிங்க அடிகளார் 'அருட்பெருஞ்சோதி' யென்றும், 'தனிப் பெருங் கருணை' யென்றும், தனிப்பெருஞ்சோதி' யென்றும் கூறுதல் காண்க.) மேற்சொன்ன சக்திக்குச் 'சிவசக்தி என்றும், 'அருட்சக்தி'யென்றும் பெயருண்டு. **'அருளின்றி அவனிலன்'**.

அவனை அறிவுக்கு எட்டுவிப்பதும் அவ் வருளின் செயலே யாகும் என்று சித்தாந்தத்தில் வற்புறுத்தப்பட்டுள்ளது. இங்கு ஒவ்வொரு சட, அசடப்பொருளிலும் புகுந்துநின்று அப் பொருள்களுக்கு மூன்றுவித அவத்தைகளையும்—தோன்றல், நிற்றல், மறைதல்—அளித்தற்குக் காரணமாய் இருப்பது இப் பதியின் அருள் என்னும் பகுதியே ஆகும். இதனால், அவனருள் சொரியும்போது விரிவைப் பெறும் இவ்வுலகின் போக்கைச் சிருட்டி (தோற்றுவித்தல் = ஆக்குவித்தல்) என்றும், அவ் வருளினாலுண்டான சட, அசடப்பொருள்கள் இங்கிருக்குங் காலத்தை நிலைத்திருத்தல் அல்லது இருத்தல் (ஸ்திதி = Existence) என்றும், அவ் வருள், அவனிச்சையால் அவனுட் சென்றடங்கும் நேரத்தில், அருளின் இன்மையால் இருத்தற்கு இயலாததாய் இவ் வுலகமும் அவனுட்சென்று அடங்கி மறையும் அல்லது அழியும் எனத் தெளியலாம். இதனையே பிரளயம் என்பர்.

சிவனைப் ‘பிரளய கர்த்தா’ என்று சகல வேத சாத்திரங்களும் (எல்லா மறைகளும் அறிவியல்களும்) வகுத்துள்ளதை மறக்க வியலாது. பிரளய காலத்துக்குப்பின் சிருட்டியைத் தொடங்குங்கால் (ஆக்க வேலை தொடங்கும்போது) உண்டாக்குவதற்கு (சிருட்டிக்கு) இன்றியமையாத துணைப் பொருள்கள் (உபகரணங்கள்) யாவும், பிரளய காலத்தில் எச் சிவனிடம் ஒடுங்கிநின்றனவோ அச் சிவனை யல்லாமல் மற்றெவர்க்கும் அத் துணைப்பொருள்கள் பெறக் கிட்டா. ஆதலின், அச் சிவனாலேயே அத் துணைப்பொருள்களைக் கொண்டு ஆக்கத்தைத் தொடங்க முடியுமென்று எளிதில் விளங்கும் ஆதலின் சிவனே முதற்பொருளாமென்று சைவ சித்தாந்தம் அணுவளவும் ஐயமின்றியும், சிறிதும் திரிபின்றியும் வற்புறுத்தி விளக்கும்.

சீவான்மா என்பது ஒவ்வொரு சரீரத்திலும் தனித்து நிற்கும் உயிர்ப்பேறாகும். (பேறு = ஐசுவரியம்.) இதனைச் சிலர் அசடப் பொருள் என்பர். இவ் வான்மாவும் பதியினிடமாய் உண்டானதாயும், அந்தர்யாமி என்னும் நிலையில் தன்னுடன் கிடக்கும் பதியின் ஒரு சிறு அணுவுக்குத் தான் சரீரமாய் நின்று அப் பதியினால் இயக்கப்படுவதாயும், அப் பதியின் ஆணையைத் தவிர்க்கமாட்டாததாயும் நிற்கும்.

இப்படி உயிர்ப்பொருள் (ஆன்மா), சடப்பொருள் இரண்டினாலும் ஆகிய இவ்வுலகத்தையே தனக்குச் சரீரமெனப் பதி

யென்னும் சிவன் ஏற்று அணுவினில் அணுவாகியும், உயிருக்கு உயிராகியும் நின்று இவ்வுலகையே நிலைநிறுத்தியும், தன் இச்சைப்படி ஆட்டுவித்தும், தனது இச்சையாலே அழித்தலையும் செய்வதால் பேதமும் அபேதமும் விளக்கப்பட்டதுகாண்க. (இதற்கு உதாரணமாக நமது சரீரத்தின் அமைப்பையே கூறலாம்.) இவ்விதம் சடப்பொருளாலான இச் சரீரத்தினுள் சரீரியாக நிற்கும் நிலை இவ் வான்மாவுக்கு வந்தது கன்மத்தினாலென்று விளக்கப்பட்டது. தன்னுள் அந்தர்யாமியாய்க் கிடக்கும் (மறைந்து கிடக்கும்) பரம்பொருளை இவ்வான்மா உணரமாட்டாமைக்குக் காரணம் யாதெனில் அது தன்னைச் சார்ந்த மலங்களாலே யாகும். இம் மலங்களை நீக்கும் உபாயத்தை யறிந்து அவற்றை அறவே ஒழித்திடின் இவ்வான்மா தன்னையுங் கண்டு 'தனக்காதாரமாம்' தலைவனையுங் கண்டு தானே 'அத் தலைவனாய்' விளங்குவான். இதுவே சைவ சித்தாந்தம் வகுக்கும் 'மாபேறா'கும்.

மேற்சொன்ன மலங்களின் சேர்க்கையால் **தானே அவன்** என்னும் உண்மையை அறியமாட்டாமல் கிடக்கும் இவ் வான்மா. அதனால் இது **சிவோகம்** என்னும் உண்மை நிலையை அறியாமல் மாயையில் கிடந்துழலுகின்றது.

சற்குருவின் உபதேசத்தின் வாயிலாய்ச் சிவதீட்சை பெற்ற ஒருவன் ஜெபம், தியானம், சரியை என்னும் மூன்று உபாயங்களால் ஈசனருளைப் பெற்று மேற்சொன்ன ஆறு தத்துவங்களை அறிந்து (பதி, பசு, பாசம், வித்தியா, அவித்தியா, இந்திரியம்) மலங்களைக் களைந்து, அகக்கண்ணால் அருட் பெருஞ்சோதியைக் கண்டு ஆனந்தத்தைப் பெற்று அச் சோதியுடன் இரண்டற்ற நிலையில் முடிவற்ற ஆனந்தத்தில் மூழ்குவான். இதுவே சைவசித்தாந்தம் வகுத்துக் காட்டிய முத்திப் பேறாகும். இவ்விதம் முத்தி பெற்ற ஆன்மா (பசு) திரும்பவும் வாராது (பிறப்பிறப்பற்று) நிற்கும் என்பது உறுதி. அதாவது இவ் வான்மா மீண்டு வந்து பிறவாது.

**பிறத்தலாவது**, தான் செய்த கன்மங்களுக்கு ஏற்றதாய இன்ப துன்பங்களை அநுபவிப்பதற்குத் தக்கதாயும், அந்த இன்ப துன்பங்களை வல்லான் வகுத்த விதிப்படி உணரவல்ல பொறி, புலன்களையும் உடையதாயுமுள்ள ஓர் உடலைப் பெற்று, பிறப்பிறப்புக் கடலில் உழல்வதாகும் என்றறியவும். பேதாபேத வாதத்தை அடிப்படையாகக் கொண்ட சைவசித் தாந்தத்தின் கொள்கைப்படி பதியும் பசுவும் ஒன்றே. ஆயினும்,

பாசத்தோடு கூடி இருப்பதால் பசுவினால் 'தான் யார்?' என்பதை அறியக்கூடாமை என்பதை, 'ஒன்றென்றது ஒன்றே காண்' என்று தொடங்கும் செய்யுளின் விளக்கத்தை ஏற்கெனவே கூறியுள்ளதிலிருந்து அறிந்துகொள்க.

மற்றும், அத்துவிதமென்னும் சொல்லானே ஏகமெனில் ஏகமென்று சுட்டுவதுண்மையின் அத்துவிதமென்று சொல்லே அந்நியநாத்தியை உணர்த்தும்.

'கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ளம்
இட்டதொரு பேரழைக்க வென்னென்றாங் — கொட்டி
அவனுளமா கில்லா னுளமவனா மாட்டா
தவனுளமா யல்லனுமா மங்கு.'

என்னும் செய்யுளால், அத்துவிதம் என்னும் சொல்லினாலேயே ஈசனும் ஆன்மாவும் இரண்டற ஒன்றுபட்டவை யென்னும் பொருளுண்மையேனும் ஏகமென்று மற்றொரு முறை வற்புறுத்தல், கூறியதுகூறல் என்னும் குற்றத்தின்பாற் படாதோ எனின் அன்று. அதற்கு விடை கீழே தரப்படும். விடையைத் தந்து சுபக்கத்தை நிலைநிறுத்துதல் போற்றத்தக்கது. இங்கு,

1. பதிப்பொருளை ஓரினமாக்கிச் சிவனை யதனுள் ஒன்றாய்க் கணித்தல் தகாது என்பதை வலியுறுத்தவும்,

2. அச் சிவனின் அருட்பெருக்கினால் தோன்றிய உலகம் சத்தியமானதென்று ('உள்ளதிலிருந்துதான் உள்ளது விளையும்' என்னும் சத்காரிய வாதத்தைத் தழுவி) வாதிக்குங்கால், காரியமாகிய சத்தியப்பொருளின் காரணமாகிய 'அருளும்', சத்தியப் பொருளே யாகவேண்டுமாதலால், அவ் வருளைச் (சத்தி) சிவனிடமிருந்து வேறுபட்டதாய்க் கொள்ளக்கூடாது என்பதையும் விளக்கி இருத்தல் காண்க. இதற்கு உதாரணமாக அகரம் முதலான உயிரெழுத்துகள் மெய்யெழுத்துகளுடன் சேர்ந்து உயிர்மெய்யெழுத்தாவதைக் குறிப்பிட்டுள்ளார். மற்றும், 'அகரம் முதலான' என்றதால் ஓரெழுத்துள் ளடங்கிய மூவெழுத்தின் பொருளையும், அதிலும் முதலெழுத்தின் பொருளில் புதைந்திருக்கும் சூக்குமத்தின் உட்பொருளையும் சுட்டியதாகுமெனச் சமயவல்லுநர் உரைப்பர்.

பதியை ஓரினப் பொருளாக்குதலுங் கூடுமோவெனில், ஆம் என்பது முதல் சூத்திரத்தின் முதல் வாக்கியத்தில் காண்க.

'ஒன்றென்றது ஒன்றே காண்'— இஃது எந் நுதலிற்றோ வெனின், சங்கார காரணனான முதல்வனையே முதலாக வுடைத்து இவ்வுலகமென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இவ் வார்த்திகத்தின் உரையாசிரியர் மேற்குறித்த சங்கையைத் தீர்த்திருப்பதையுங் காண்க.

'சங்கார காரணனாயுள்ள' என்றதனால் வேறு காரணனரு முண்டு என்று கிடைக்கப் பெறுகின்றது. அன்றியும், நிவர்த்திகலை முதலிய பஞ்ச கலைகள் உட்பட்ட ஐவகைச் சங்காரத்துள் இறுதிக்கண்ணதாகிய மகா சங்காரத்தைச் செய்யும் வினைமுதலாய் உள்ள தலைவனையே தனக்கு முதற் கடவுளாய் உடைத்து.

'முதல்வனையே' என்னும் சொல்லின் ஏகாரம் இயைபின்மை நீக்குதற்கும், பிறிதினியைபு நீக்குதற்கும் பொதுவாய் நின்ற 'பிரிநிலை' என்னும் இம் மேற்கோளால் அத்துவிதம், ஏகம் என்னும் இரு சொற்களும் முக்கிய வாக்கியத்தின் பொருளையூட்ட இன்றி யமையாதவை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி யாகிறது.

**'பண்ணையு மோசையும் போலப் பழமதுவும்**
**எண்ணுஞ் சுவையும்போ லெங்குமாம் — அண்ணல்தான்**
**அத்துவித மாதல் அருமறைக ளொன்றென்னா**
**தத்துவித மென்றறையு மாங்கு '** —(சிவஞானபோதம்)

ஆண்டுப் 'பிரமம் அத்துவிதம்' என்றது பிரமம் உயிர்களில் வேற்றுமையின்றி நிற்பதென்னும் பொருட்டாகலான், அஃது 'ஏகம்' என்பதனோடு முரணுமாறில்லை என்பதாம்.

'எங்குமா மண்ணல்தான்' என விசேடித்தது குணமும் குணியும் போல உடனாயும், அவ்வாறு உடனாகாமைக்கு அநுபவங் காட்டியவாறு. வியாப்பியமும் வியாபகமுமாதல் ஒப்புமை மாத்திரையேபற்றிக் குணகுணிகளை உவமை கூறினார் என்பது. மேற்படி செய்யுளால் காரியப் பொருளான இவ் வுலகில் 'தன்னருள் வெளிக்குளே அகிலாண்ட கோடி யெல்லாம் தங்கும்படிக்கிச்சை வைத்து உயிர்க்குயிராய்த் தழைத்த தெது? மன வாக்கினில் தட்டாமல் நின்றதெது?' அணுவினில் அணுவாகிநிற்கும் ஈசனின் இரண்டற்ற நிலையென விளக்கியுள்ள தத்துவமே இன்று யாண்டும் கொள்ளப்படுகின்றது.

அசித்துப் பொருளான இவ் வுடல் சித்துப்பொருளான ஆன்மாவுக்குப் போர்வை போல அமைந்துள்ளது. அவ் வண்ணமே உயிர்க்குயிராய் நிற்கும் பதியும், ஆன்மாவைத் தனக்குப் போர்வையாக ஏற்றுள்ளான். 'சித்'-ஆம் ஆன்மா வைத் தனக்கோர் அம்பரமாய் ஏற்றுள்ள நாதனைச் **சிதம்பர நாத**னென்று அழைத்ததன் பொருளினிமை ஈண்டுச் சுவைக்கக் கிடைக்கிறது. அசித்து, சித்து இரண்டையுமே தனக்குச் சரீர மென்றவகையில் ஏற்றுள்ளான் ஈசன். ஆகவே, ஒவ்வொரு தனி மனிதனும் ஒரு சிறிய உலகமென்பது உண்மையேயா மன்றோ? இதனாலேயே, 'அண்டத்திலுள்ளதைப் பிண்டத்திற் காண்பீர்' என்னும் சொல்லால் சுருக்கிச் சொன்னார் போலும். இத் தத்துவத்தை இந் நூலில் ஏற்கெனவே விளக்கியுள்ள 'அரக் கொடு சேர்த்தி' என்று தொடங்கும் பாடலின் பொருளால் கண்டுகொள்க.

ஆயினும், பாசம் போகும்வரை. மலங்கள் நீங்கும்வரை யில் வேற்றுமை நீங்கா. பிறப்பும், சின்னாள் வாழ்வும், பின்பு இறப்பும் மாறி மாறி வந்துகொண்டே இருக்கும். இவ் வண்ணம் உலகிலுள்ள எல்லாப் பொருள்களுமே (உலகமே) தோன்றல், நிற்றல், மறைதலென்னும் இயல்புற்றனவாய் இருத்தலின், இவ் வுலகத்தைத் தருபவன் (படைப்பவன்) ஒருவன் வேண்டுமென்று உணரக்கிடக்கின்றது. அவனே கர்த்தா ; அவனே முதல்வன் ; அவனே தலைவன் ; அவனே ஈறுமாக (முடிவாக) நிற்பவன். அவன் ஆணையால் உலகந் தோன்றலும், நிற்றலும், அழிதலும் ஆதலால் அவனருள் வெளிக்குளே அகிலாண்ட கோடியெலாம் அடங்கவும், அவனே இவ் வண்டங்கள் பதினான்கிற்கு அப்பாலும் இப் பாலும் நிற்பவனாவன். இக் கருத்தை,

'ஒருவனோ டொருத்தி யொன்றென்
றுரைத்திடு முலக மெல்லாம்
வருமுறை வந்து நின்று
போவது மாத லாலே
தருபவ னொருவன் வேண்டுந்
தான்முத லீறு மாகி
மருவிடு மனாதி முத்த
சித்துரு மன்னி நின்றே.'

— (சிவ. சித். முதல் சூத்திரம் பா. 1)

(இதன் பொருள்): அவன், அவள், அது என்று சுட்டப்படும் பிரபஞ்சமெல்லாம் **முதற்காரணத்தினின்று** மல வேதுவால் தோன்றும் முறைப்படி தோன்றி நிற்கும் முறையானே நின்று, ஒடுங்கும் முறைப்படியே ஒடுங்குவதுமாகிய காரியமாய் இருத்தலின், மருவிய அநாதி முத் தத்துவத்தையும், சித்துருவையும் பொருந்திநின்று ஆக்குபவனும் (சிருட்டிப்பவனும்), அழிப்பவனும் (சங்கரிப்பவனும்) தானேயாகித் தருபவன் ஒருவன் வேண்டும். தருபவன் ஒருவன் வேண்டுமென்பது பிரதிக்ஞை. வருமுறை வந்துநின்று போவது மாதலாலே என்பது ஏது. இவ் விரண்டு அவயவங் கூறலே கடாதிகட்குக் குலாலனைப் போலென்னும் உதாரணம் தானே போதரும்.

அவனே முன் சொன்னதுபோல் உலகெலாமும் ஆகிறான்; அவ்வுலகினின்று வேறுபட்டவனு மாகிறான். தானே அனைத்துக்கும் தலைவனாய் நின்று தன் ஆணைக்குட்பட்டு உலகம் யாவும் தனது கன்மானுசாரம் அமர்ந்து செல்லக் காரணமாகிறான்.

அமலனாகிய அவன், அழிவற்ற சீர்பெற்றவனான மலங்களோடு கூடிய சேதனாசேதனப் பொருள்களுடன் நீங்காது எங்கு முளனாய் நிற்கிறான். (சேதனன் = அறிவுள்ளவன்; அசேதனன் = அறிவில்லாதவன்) இத் தத்துவத்தை,

**'உலகெலா மாகி வேறா**
**யுடனுமா யொளியா யோங்கி**
**அலகிலா வுயிர்கள் கன்மத்**
**தாணையி னமர்ந்து செல்லத்**
**தலைவனா யிவற்றின் தன்மை**
**தனக்கெய்த லின்றித் தானே**
**நிலவுசீ ரமல னாகி**
**நின்றனன் நீங்கா தெங்கும்.'**

—(சிவ. சித். இரண். சூ. பா. 1.)

(இ-ள்): பிரபஞ்சமெல்லாம் தானே ஆகி, அவையிற்றுக்கு வேறுமாகி, வியாப்தியினாலே அநந்நியனுமாகி, ஞானப் பிரகாசமாய் உயர்ந்து அளவற்ற ஆன்மாக்கள் தத்தம் கன்மங்களுக்கு ஈடாய்த் தனது கட்டளை வழியில் நடக்கத் தானே எல்லாக் கிருத்தியங்களுக்கும் (செயல்களுக்கும்) தலைவனாய் இவ் வான்மாக்களின் இயல்பு தன்கண் நிகழ்தலின்றி நிறைந்த சீரையுடைய நின்மலன் தான் ஒருவனே யாகி எங்கும் பூரண

னாய் நிற்பவன் என்னும் உண்மை இப் பாடலில் கூறியுள்ளமையைக் காண்க.

பல்வேறு கட்சியினர் கொண்டுள்ள 'ஆன்மா இல்லை' என்னும் கோட்பாட்டை (இதனை நைராத்ம வாதமென்பர் வடநூலார்,) மேற்படி பாடலுக்குப்பின் பன்னிரண்டு பாடல்களால் சிவஞான சித்தியார் என்னும் நூலில் கண்டித்து, ஆன்மா உண்டு என்று **தர்மிக்கிராகமானம்** என்னப்பட்ட அளவை முறையானே நிலைநாட்டியுள்ளார்.

**தர்மிக்கிராகமானம் என்பதன் விளக்கம்**

தர்மம் என்பது ஒரு பொருளின் இயல்பு. தர்மி என்பது ஒரு குறிப்பிட்ட இயல்புடைய பொருள். கிராகம் என்பது ஏற்றல் என்னும் பொருள் தருவது. மானம் என்பது அளவை (Logic) என்னும் பொருளை உடைய சொல். மேயம் என்பது அளந்தறியப்படுவதாகிய ஒரு பொருள். ஆகவே, தர்மிக் கிராகம் என்பது, ஓர் இயல்பைக் கண்டு அதன் வாயிலாய் அவ் வியல்புடையது (ஒரு பொருள்) ஒன்று இருத்தல்வேண்டும் என்றறியும் முறைக்குச் சூட்டப்பெற்ற பெயராமென்க.

இதையே உடலுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள சம்பந்தத்தைப் போல், ஆன்மாவுக்கும் ஈசனுக்குங்கூடச் சரீர சரீரி பாவமே உண்டென்றும், ஆயினும், சரீரம் ஆன்மா ஆகாது என்பதுபோல் ஆன்மா ஈசனாகாதென்றும், ஆன்மாவினால் தரிக்கப்பட்டாலன்றிச் சரீரம் நிலைக்கப்பெறாது என்றதுபோல் ஈசனால் தரிக்கப்பட்டாலன்றி (அந்தர்யாமியாய்) ஆன்மாவும் நிலையாது என்றும் கூறும் தத்துவம் கீழ்வரும் பாடலில் விளக்கப்பட்டுள்ளது.

**'உருவொடு கருவி யெல்லா**
**முயிர்கொடு நின்று வேறாய்**
**வருவது போல வீச**
**னுயிர்களின் மருவி வாழ்வான்**
**தருமுயி ரவனை யாகா**
**வுயிரவை தானு மாகான்**
**வருமவ னிவைதா னாயும்**
**வேறுமாய் மன்னி நின்றே.'**

—(*சிவ. சித்.* 2ஆம் சூத். பா. 3)

(இ–ள்): ஆன்மா பருவுடலோடு சூக்குமத்திலும் மற்றத் தேகங்களிலும் பொருந்தியும் வேறாகியும் நிற்பதுபோலச்

சிவனும் ஆன்மாக்களைப் பொருந்தி இருப்பன். இருந்தாலும், அவ் வான்மா சிவனாக மாட்டாது. அச் சிவனும் ஆன்மாக்க ளாக மாட்டான். சிவன் இப்படி வேற்றுமை உள்ளவனாக வும், வேற்றுமையற்றவனாகவும் நிலைபெற்று நிற்பன்.

மேற்கூறிய விவரங்களை விரிவாய் அறிய வேண்டின் மேற்படி நூலைத் தக்க குருவினிடம் அமர்ந்து முறைப்படி கற்றலே மிகவும் பொருந்தும்; ஆயினும், அதனுடைய சுருக் கத்தை ஈண்டுச் சிறிது தேவையின் நிமித்தம் விளம்பினோம்.

**பசு இலக்கணம்**

இனி, பசு (ஆன்மா) என்னும் தத்துவத்தை ஆராய்வாம். இதற்கு உயிர் சீவன், சீவான்மா, சேதனன் என்னும் பெயர்கள் உள. பசு இலக்கணத்தைப் படிக்கும் முன்பு பசுவென்னும் பொருளொன்று உண்டோ ? என்னும் நைரான்மவாதிகளின் மருளையும் இருளையும் போக்கச் சிவஞான சித்தியார் என்னும் நூலாசிரியரும் அதன் உரையாசிரியரும் பொழிந்துள்ள தேன் மொழிகளின் இனிமையைச் சுவைத்தல் இன்றியமையாத தாகும்.

**'உயிரெனப் படுவ திந்த**
**வுடலின்வே றுளதா யுற்றுச்**
**செயிருறு மிச்சா ஞானச்**
**செய்திக ளுடைய தாகிப்**
**பயில்வுறு மின்ப துன்பப்**
**பலன்களும் நுகரும் பார்க்கில்.'**

—(சிவ. சித். சுபக். 3ஆம் சூத். பா. 1.)

(இ-ள்) : உயிரென்று சொல்லப்படுவது இச் சரீரத்துக்கு அன்னியமாய்ப் பொருந்திநின்று மலத்தால் குற்றம் பொருந்திய இச்சா, ஞான, கிரியைகளை உடையதாய்ப் பழக்கமாக வரும் இன்ப துன்பங்களைக் கர்மானு குணமாகப் புசிக்கும். பார்க்கு மிடத்து நித்திரையுடனே பஞ்சாவத்தைகளையும் அடையும். ஆயினும், துரியாதீதத்தில் பொருந்தி இருப்பதே உண்மையாம். (துரியாதீதமே ஆன்மத்தானமாதலால் உண்மை யென்றார்.)

ஆன்மா இல்லையென்னும் பல்வேறு கட்சிகளின் வாதங் களைக் கண்டித்து ஆன்மா உண்டு என்று நிலைநாட்டும் வாதங்களின் விவரம் :

**1. சூனிய வாதம்**

இது புத்த சமயத்தின் கொள்கை **சர்வம் சூன்யம்** என்பது இவர்களின் துணிபு. அஃதாவது, யாவும் இன்மையே எனப் பொருள்படும். இங்கு யாவும் என்பது எவற்றைக் (எதை) குறிக்கும். இன்மை என்பது உண்மையாயின் 'யாவும்' என்னும் சொல்லால் குறிப்பிடப்படுபவை யாவை? இல்லாத பொருள்களுக்கு வழக்குண்டாவது எங்ஙனம்? யாவுமே சூனிய மாயின் அறிவும் இல்லையென்றன்றோ கொள்ளவேண்டும்? அறிவும் இல்லையேல் 'சூனியம்' என்னும் தத்துவத்தை உணர்வது எங்ஙனம்? அவ்வாறன்றிச் சர்வம் (எல்லாம் = யாவும்) என்னும் சொல்லுக்கு ஞானம் (அறிவு) என்னப்பட்ட தொன்று நீங்கலாக உள்ள எல்லாம் என்று பொருள் கொள்க என்பராகில், சர்வம் (யாவும்) என்னும் சொல்லுக்கு இவர்கள் கற்பிக்கும் பொருள் மொழிக்கே புதுமையானதாகும். அப் பொருளையும் ஒருகால் ஏற்போமாயின் 'அறிவு மட்டும் உள்ளது; மற்றைய யாவும் இல்லை' என்பது பௌத்தர்களின் சித்தாந்தமாகும். அறிவினால் அறியப்படுவது ஒன்றுமே இல்லையேல், அறிவு மாத்திரம் உண்டென்பதை அறிதல் எங்ஙனம் சாத்தியமாகும்? என்றிவ்வாறெல்லாம் வாதங்களும் பிரதிவாதங்களும் (சொற்போர்கள்) உண்டாகும். அவற்றை யெல்லாம் ஒருபுறம் விடுத்து ஆன்மா என்னும் சொல் வழக்கி லிருப்பதாலும், அச் சொல்லைக் கேட்குங்கால் ஏதோ ஒரு பொருளைப்பற்றிய அறிவு உண்டாதலாலும், இல்லாததற்கு ஒரு பெயரும் பொருளும் உண்டாகா ஆதலாலும், ஆன்மா என்னும் உயிர்ப் பொருள் உண்டென்று சாதிக்கப்படுகிறது.

**2. தேகான்மவாதம்**

இவ்வுடலே ஆன்மா எனப்படுவது என்று சிலர் கூறுவர். தேகம் ஆன்மாவாயின் 'யான்', 'எனது' என்பன போன்ற அகம்பாவம் என்னும் பொருள்தரும் சொற்களால் யாது பயன்? 'என் காளை' என்னும் தொடரில் 'என் கால்' என்பதில் உள்ளது போல் என் என்னும் சொல்லுக்குத் தனது உடலுடன் சேர்ந்த என்னும் பொருள் ஒட்டாதே 'என் காளை' யென்றவிடத்து. ஆகவே, 'என்' என்னும் சொல் இவ்வுடலுக்குப் புறம்பானது என்னும் ஒரு பொருளைக் குறிப்பது மறுக்க முடியாத உண்மை. ஆன்மா என்பது இதுவே. இது சரீரம் அன்று. சரீரத்துக்குப் புறம்பானதும் ஆயினும் தேகத்தோடு ஒத்து இயங்குவதுமான ஒரு தனிப் பொருளென்பது உண்மை.

### 3. இந்திரியான்ம வாதம்

ஒரு சிலர் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றின் கூட்டத்துக்கே ஆன்மா என்னும் இனப் பெயர் உண்டு என்று கூறுவர். இதுவும் சரியன்று. இவ் இந்திரியங்களில் ஒவ்வொன்றும் தத்தமது விடயத்தை மட்டுமே ஏற்க உதவியாகும் கருவியாம். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவையே இவ்வைந்து இந்திரியங்களின் விடயங்களாம். இவ் இந்திரியங்களின் உதவியால் மேற்சொன்ன உணர்வு ஏற்படுவது உண்மை. மற்றும் இச்சை கிரியை போன்றுவேறு சில தருமங்களும் உண்டென்பதை மறுக்க முடியாது. இவை முன் சொன்ன இந்திரியங்களால் சாதிக்கக் கூடியவை யல்ல. மிகைப்படும் இத் தருமங்களுக்கு உறைவிடமான ஒரு தருமி இருத்தல் வேண்டுமென்னும் முடிவை மறுக்க முடியாது. அத் தருமியே ஆன்மா வாகுமென்று இந்திரியான்ம வாதம் மறுக்கப் படுகிறது.

### 4. இலிங்கசரீர ஆன்மவாதம்

இறந்தபின் பிறப்புற ஆன்மாவுக்குக் கதி சாதனமாய் உள்ள இலிங்கசரீரமே ஆன்மாவாகுமென்பது வேறு சிலர் கொள்கையாகும். இவ் இலிங்கசரீரத்துக்குச் சூக்கும சரீரம் (நுண்ணுடல்) என்றும் பெயராம். இக் கொள்கையும் சரியன்று. தூல சரீரத்தின் இந்திரியங்களால் அறியப்படும் விடயங்கள் சூக்கும சரீரத்துக்குப் புலப்படா. அவ்வண்ணமாயின், உறங்கியவர் தாம் கண்ட கனாப் பொருளை உணர்ந்தபின் ஓதுங்காலை, உணர்ந்த பின்பும் தொடர்ந்து அக் கனாவினைக் காணுகின்றார் என்று கூறல் தகுமா? அன்றி, உணர்ந்த அக் கனவு மாறுவதால், கனாவினைக் கண்ட ஆன்மா உணர்ந்தவனின் உடலிலிருந்தும் பறந்துபோயிற்றெனல் தகுமா? கனாவினைக் கண்ட சரீரம் உணர்ந்தவனின் உடலைவிட்டு வெளியேறிவிட்டது என்றுதான் சொல்லத்தகுமா? உறங்குங்காற் கண்ட கனாப் பொருள் உணர்ந்த பின்னும், உணர்ந்த நேரத்தைய அநுபவங்கள் கனாவிலும் பின்னிக் கிடப்பதால், நுண்ணுடலுக்கும் பருவுடலுக்கும் உள்ள பிணைப்புப் புலனாகிறது. ஆன்மாவானது பருவுடலை விழிப்பு நிலையில் பயன்படுத்திக் கொள்வதுபோலவே நுண்ணுடலைக் கனவு நிலையில் பயன்படுத்திக் கொள்கிறது. ஆகவே, ஆன்மா என்னும் தனித் தத்துவப் பொருள் உட்சட்டை, புறச்சட்டைகளை நாம் அணிவதுபோல, இவ்விரு உடல்களையும் (நுண்ணுடல், பருவுடல் ஆகிய இரண்டையும்) அணிந்துள்ளது. ஆகவே,

ஆன்மா என்பது பருவுடலில் இருந்து வேறுபட்டது போலவே, நுண்ணுடலினின்றும் (இலிங்க சரீரத்தினின்றும்) வேறுபட்ட தாகுமென்னும் சமாதானத்தினால் இச் சார்பினரையும் தவிர்த் துள்ளார்.

## 5. பிராணான்ம வாதம்

நாம் உட்கொள்ளும் வாயுவிற்குப் (பிராண வாயுவுக்கு) பிராணன் என்று பெயர். ஆன்மாவுக்கும் பிராணனென்று ஒரு பெயரும் உண்டு ஆதலின், இவ் வாயுவே ஆன்மா என்பர் சிலர். இதுவும் சரியன்று. பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என்னும் ஐவகை வாயுக்களும் அதனதன் செயல்களை (கன்மத்தை) ஒட்டி வேறுபடுத்திக் கூறப்படுபவை ஆதலால், இவை யாவும் ஒன்றாகித் தம்முள் முக்கியமான பிராணன் என்னும் பெயராலே அழைக்கப்படுவதில் குற்ற மில்லை யாதலின், இச்சை, கிரியைகளும்கூட ஒருவிதத்தில் இவ் வாயுக்களின் செய்கையின் உட்படுமாதலின் இவ் வாயுவே ஆன்மா வென்பது இப் பாலாரின் கொள்கை.

அங்ஙனமாயின் இன்பம், துன்பம், அன்பு, கனிவு, ஆர்வம் முதலிய உணர்ச்சிகள் இவ்வகை வாயுக்களின் கருமங்களுக்குப் புறம்பானதல்லவா? இவ்வுணர்ச்சிகளுக்கு உறைவிடம் யாது ?

பிராணன் என்னும் சொல் சில சமயங்களில் ஆன்மாவைக் குறிக்கும் வகையில் வழங்கப்படுவதாலேயே பிராணவாயுவே ஆன்மாவெனத் துணிதல் தகாது. பிராணன் என்னும் சுவாச நடப்பு, ஆன்மா சரீரத்தில் உள்ளது என்பதைக்காட்டும் இலக் கணமும் சான்றுமாகும். வாயுவைப்போல ஆன்மாவுக்குப் பிரிவுகளில்லை. மற்றும், வாயுவைப் போலன்றி ஆன்மா வானது ஞான, இச்சா, கிரியை என்னும் சக்திகளுடன் கூடியது. ஆகையால் பிராணவாயு (மூச்சு வாங்கிவிடும் காற்று) ஆன்மா என்று ஏற்கத்தக்கதன்று.

## 6. பிரமாத்தும வாதம்

சிலர் பிரம்மமே ஆன்மா என்பர். இந்திரியங்களின் உதவி யின்றியே எல்லாவற்றையும் அறியவும் செய்யவும் ஆற்றல் உள்ளது பிரம்மம்.

ஆன்மாவோ என்னில் பஞ்ச பூதங்களாலான பஞ்ச கோச மய சரீரத்தின் (இந்திரியங்கள் உட்பட) உதவியின்றி நிலவி, தான் ஞான, இச்சா, கிரியா சக்திகளைப் பயன்படுத்தமாட்டாது.

'புருடனே அறிவ னாகில்
பொறிபுல னாதி போதந்
தருவதென் னறிவு மாயா
தநுகர ணாதி பற்றி
வருவதிங் கநாதி யாக
மலத்தினின் மறைந்து நிற்ப
னருவனா யிவற்றோ டாளு
மமைச்சரும் அரசும் போல்வான்.'

—(சிவ. சித். 4ஆம் சூத். பா. 31)

ஆன்மாவே அறிவன் என்னில் பொறிபுலன் முதலியன அவ் வான்மாவுக்கு ஞானம் தரும் காரணம் யாது? மாயா காரணமாகிய தநுகரணாதிகளைப்பற்றி ஆன்மாவுக்கு ஞான முண்டாம். ஆன்மா அநாதியே; மலத்தில் மறைந்து அருவ மாய் நிற்பன். ஆதலால், அமைச்சர் முதலானோரோடு அர சாளும் மன்னனைப் போல் இப் பொறி புலன் முதலியவற்றோடு பொருந்தி இருப்பான். (உடல் என்பது இந்திரியங்களும் அந்தக்கரணங்களும் கூடியது என்பது இப் பாடலில் குறிக்கப் படுகிறது.)

இச் செய்யுளால் ஆன்மா அரசன் போல நின்று தநு (உடல்) கரணாதிகளை (மனம், புத்தி, சித்தம், அகங்காரம்—'ஆதிகள்' என்றமையால் ஐம்பொறிகளையும் ஐம்புலன்களையும் சுட்டு மென்றறிக.) அமைச்சர் போல ஏற்று நிலவுகின்றான். மாயை யின் விளைவான இத் தநு கரணாதிகளையும் பிரம்மம் ஏற்க வேண்டியதில்லை என வகுத்து ஆன்மா பிரம்மத்தினின்றும் வேறுபட்டது; கன்மத்தினால் உண்டான மலங்களோடு கூடி இருப்பதால் மாயையில் சிக்குண்டு கிடப்பது என்பதை வலி யுறுத்துகிறார்.

## 7. சமுச்சயான்ம வாதம்

சுக்கில சுரோணிதங்கள், பஞ்சபூதங்கள், பஞ்சகோசங்கள் மற்றும் இந்திரியங்கள், பஞ்ச வாயுக்கள் என்னும் இவற்றின் கூட்டமே ஆன்மா (சமுச்சயம் = கூட்டம்) எனப்படும் என்பர் மற்றும் சிலர். இதுவும் சரியன்று. யோக சாதனத்தினால் துரியம், துரியாதீதம் என்னும் நிலைகளை அடைந்த யோகிக்கு, ஆங்கு ஏற்படும் தனிச்சிறப்பான அநுபவங்களை அந்த யோகி யின் ஆன்மாவன்றி வேறு ஒன்றினாலும் அறியவோ, அதனைத் துய்க்கவோ இயலாது. ஆகையால், ஆன்மாவென்னும் தனித்

தத்துவம், மேலே சொன்ன கூட்டத்தினின்றும் வேறுபட்டிருக்கின்றதென்று சுபக்கத்தை நிலைநிறுத்தியுள்ளார். இவ்விதம் ஆன்மா உண்டு என்று நிரூபித்துள்ளார். மேலும், இவ் வான்மாவின் சொரூப இலக்கணங்களைக் கீழ்க்காணுமாறு விவரித்துள்ளார்.

இவ் வான்மா, பசு, சேதனன் எனப்படும் உயிர்ப்பொருள். ஞான சக்தி, இச்சா சக்தி, கிரியா சக்திகளைப் பெற்றதாய்ச் சுக, துக்க, இச்சா, துவேஷ, பிரயத்நன, தர்மாதர்மங்களுக்கு (இவை தமிழில் முறையே இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு, முயற்சி, அறம், மறம் என்பவையாம்) உறைவிடமாய்த் தன் கன்மத்தின் மலத்தால் பூசப்பட்ட மாசுடன் கூடியதாய்த் தன்னைத் தானறிய மாட்டாததாகவும், கன்மத்தின் விளைவாய் இன்பதுன்பங்களைப் பெற வருவதும் போவதுமான (பிறப்பு, இறப்பு) இயல்புடையதாகவும், அக் கன்மத்திற்கு ஏற்றதான இன்பதுன்பங்களைத் துய்க்கத் தகுந்ததான பலவகைப்பட்ட உடல்களை (தநுக்களை) அம் மாயையினால் பெற்று ஒவ்வோர் உடலுக்கு ஒவ்வொன்று எனும்படி அவ்வவ் வுடல்களில் இருந்து தான் ஓர் அரசன் எனத் தனது தநுகரணாதிகளைத் தனது அமைச்சுரிமை எனப் பெற்றதாய் வழங்குந் தனிப் பொருளாம். மலங்களைப் போக்கிக் கொண்டால் தன் சொரூபத்தைத் தான் அறியவல்லதாகும். முன் சொன்ன சரியை, கிரியை, ஆசான்உபதேசம் முதலிய உபாயங்களால் மாயையை நீக்கிப் பிறவிப் பெருங்கடலைத் தாண்டி இறைவனுடன் இயங்கும் இயல்பையும் பெற்றது. இதுவே பசுவின் தத்துவம்.

**பாச இலக்கணம்**

பாசம் என்பது மலம். இது ஆன்மாவை மறைத்து அதன் மேற்பூச்சு என்னும்படியாகத் தாம்பிரத்திலுறும் களிம்பைப் போலவும், இரும்பில் உண்டாகும் துருவைப் போலவும் நிற்பது. இது ஐவகைப்படும். அவை : ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம் என்பனவாம். இவை ஆன்மாவைச் சிவப்பேறு பெறவொட்டாமல் தவிர்த்து, பவப் பேற்றுடன் (பிறவித் துன்பத்துடன்) கட்டி வைக்கும் கயிற்றைப் போன்றவையாம். இவற்றைப்பற்றி இதுவரையில் ஆங்காங்கு ஒருவாறு விளக்கப்பட்டுள்ளது.

மகாப் பிரளயகாலத்தில், மகா சம்மாரமூர்த்தியான ஈசனிடத்தில் சகல சட அசடப் பொருள்களும் சென்றடங்கு

மென்பதும் அதனால் அச் சம்மாரமூர்த்தியே தன் வசமுள்ள வற்றைக் கொண்டு மீண்டும் உலகைத் தோன்றுவிக்கிறான் என்பதும் முன்னமே விவரிக்கப்பட்டதாகும்.

அவ் வீசனுள் அடங்கும் ஆன்மாக்கள் தத்தம் வினைப் பயனால் பெற்ற மலங்களைக் களிம்பைப் போல மேற் பூச்சாகத் தத்தம் இடத்துப் பெற்றே இருக்கும். ஆதார மொன்றுமின்றி ஆன்மா நிலையுறாதாதலின் இதற்குக் 'கதி சாதனம்' எனப்படும் சூட்சும சரீரமும் (நுண்ணுடலும்) இவ் வவத்தையிலுண்டு (அவத்தை = நிலை).

இந்நுண்ணுடலில் பருவுடலுக்கு வேண்டிய மூலப்பொருள் கள் யாவும் மிக நுண்ணியதாக, வித்தினுட் கிடக்கும் மரத்தைப் போன்று சேர்ந்துள்ளன. பிரளயகாலத்துக்கு முன் தான் செய்த தக்க (இதமான), தகாத (அகிதமான) கன்மங்களை யொட்டியே—மேற்சொன்ன களிம்பு போன்ற மலப்பூச்சுடன் கூடிய ஆன்மா — சிருட்டி (ஆக்க) காலத்தில் அக் கன்மங் களுக்கு ஏற்பப் பலன்களைப் பெறவும், அதனைத் துய்க்கவும் தகுதி வாய்ந்ததும், உதவக் கூடியதுமான ஓர் உடலைப் பெறும்.

**'உள்ளதே தோற்ற வுயிரணையு மவ்வுடலின்**
**உள்ளதாமுன் செய்வினை யுள்ளடைவே—வள்ளலவன்**
**செய்பவர் செய்திப் பயன்விளைக்கும செய்யேபோல்**
**செய்வன் செயலணையா சென்று.'** —(சிவஞான போதம்)

மேலைச் சூத்திரத்தில் ஓதிய சத்காரியத்தின் இயல்புபற்றி வினையுண்மை சாதிப்பார், 'உள்ளதே தோற்ற' என்றும், உள்ளதாகிய சஞ்சிதவினை தோற்றப்பட்ட இன்பதுன்ப நுகர்ச்சிக்கு நிலைக்களனாகிய உடலில் பொருந்தி அவற்றை அநுபவிப்பது சடமாகிய புத்தி தத்துவமேயாம் என்னும் சாங்கி யரை மறுப்பார், 'உயிரணையும் அவ்வுடலின்' என்றும், முன் செய்வினை ஈண்டு அநுபவித்து ஒழிந்தால் மேலைக்கு வரு மாறு என்னை என்னுங் கடாவை விடுப்பார், 'முன் செய்வினை உளளடைவே உள்ளதாம்' என்றும், வினை தானே பயனாக வரும்; இறைவன் எற்றுக்கு எனனும் மீமாஞ்சகரை மறுப்பார், 'செய்பவர் செய்திப் பயன் விளைக்குஞ் செய்யே போல் வள்ள லவன் செய்வன் செயல் சென்றணையா' என்றுங் கூறினார்.

அக் கன்மங்கட்கு ஏற்ற பலனைத் துய்க்காது தவிர்க்க முடியாது. அக் கன்மங்களுக்கு உற்ற பலனை அநுபவிக்கப்

பொருத்தமான உடலையே ஒவ்வோர் ஆன்மாவுக்கும் ஈசன் அருளுவான். ஒவ்வோர் ஆன்மாவின் கன்மத்தையும் அதனால் அவ் வான்மா பெறக்கிடக்கும் பிறப்பின் வகையையும் நன் கறியும் வல்லமையுள்ளவன் ஈசனேயாம். அவனிடம் படைப் பிற்கு அவசியமான ஏனைய துணைப்பொருள்களுமுண்டு. ஆகவே, ஈசன் தானே கர்த்தனாய் (படைப்புக் கடவுளாய்) நின்று மாயையைத் துணைக்காரணமாக ஏற்று உலகைப் படைத்துப் போக்கியங்களைத் (நுகர்பொருள்களை) தோற்று வித்து உயிர்களுக்கு உடலையும் அளித்து, மற்றும் பவத்தில் (பிறப்பில்) புகுத்தித் தமது 'இத்' (தக்க) கன்மங்களால் சிவப் பேற்றைப் பெறமுயலுமாறு ஒரு வாய்ப்பை யளிக்கிறான். இதற்கு ஆதாரம் 'உலகெலாமாகி வேறாய் உடனுமாய்' என வரும் பாடல் முன்னமே கூறப்பட்டுள்ளதைக் கண்டுகொள்க. இப் பாடலில் 'தலைவனாய்' என்னும் சொல்லால் உலகத்துக்கு அவனே கர்த்தன், நிமித்த காரணன், முதற் காரணனும் ஆவான் என்பதும், 'உலகெலாமாகி நின்றனன்' என்றும், 'உலகெலா மாகி யுடனுமா நின்றனன்' என்றும், 'உலகெலாமாகி உடனு மாய் எங்கும் நீங்காது நின்றனன்' என்றும் கூறினமையின் ஈசன் முன் சொன்ன நிமித்தகாரணன் மட்டுமன்றி உபாதான காரணனும் ஆவானென்பது விளங்குகின்றது. எக் காரணத்தின் சேர்க்கை அல்லது உதவியின்றி ஒரு காரியம் நிலைத்திராதோ அப்படிப்பட்ட காரணத்துக்கு உபாதான காரணமென்று பெயர்.

ஈசன், உயிர்களைக் கன்மத்தின் ஆணையில் அமர்ந்து செல்லுமாறு செய்விப்பவன். அவ்வண்ணமே அவற்றைச் செலுத்துபவனுமாவான். ஆயினும், ஈசன் அமலனாய் நிற்ப வன். அவனை மலங்கள் பற்றா. அவனுக்குப் பிறப்பில்லை. ஆயினும், உயிர்களைக் கன்மத்தின் ஆணையிற்செலுத்த, உலகெலாமுமாகி, அதனுடனுமாகி, உயிரினுக்கு உயிராய் நிற் பவன் என்னும சித்தாந்தத்தை மட்டும் ஏற்கவேண்டும். உட லினைப் பெற்ற உயிர், உடலையும், இந்திரியங்களையும், இந் திரியார்த்தங்களையும் அறியவல்லது. ஆயினும், இவ்வுடலோ இந்திரியங்களோ இந்திரியார்த்தங்களோ அவ்வுயிரினை அறிய மாட்டா. அவ்வாறன்றி, ஈசன் உயிரினுக்கு உயிராய் நின்று உயிரையும், அதனாலறியப்படும் யாவற்றையும் அறியவல்லவ னாவான். ஆயினும் இவை ஒன்றும் அவனை அறியமாட்டா. இக் கருத்தை பின்வரும் பாடலால் அறியலாம்.

'பொறிபுலன் கரண மெல்லாம் புருடனா வறிந்தான் மாவை
அறிதரா வவையே போல ஆன்மாக்க ளனைத்து மெங்கும்
செறிதருஞ் சிவன்ற னாலே அறிந்திடுஞ் சிவனைக் காணா
வறிதருஞ் சிவனெ யெல்லாம் அறிந்தறி வித்து நிற்பான்.'

—(சிவ. சித். 5ஆம் சூத் பா. 1)

(இ–ள்) பஞ்சேந்திரியங்கள், அறிவு, அந்தக்கரணங்கள் ஆகிய இவையெல்லாம் புருடனாகிய ஆன்மாவினால் அறியப் படும். அவ் வான்மாவை அவை அறியமாட்டாதனவாகும். அதே போல ஆன்மாக்களெல்லாம் எங்கும் நிறைந்தவனாகிய ஈசனாலே அறியப்படும். ஆனால், அவ் வான்மாக்கள் சிவனை அறியாவாம். அறியத்தக்க சிவனே எல்லாவற்றையும் அறிந்து ஆன்மாக்களையும் அறிவித்து நிற்பான்.

உயிர்கள் உடலைப் பெறற்கும், அதற்குத் துணையாய் உலகமே தோன்றற்கும் காரணமாய் நிற்பது கன்மமலமாயிற்று அன்றோ? அக் கன்மம் இதம் (ஹிதம்), அகிதம் (அஹிதம்) — நல்லது, தீயது அல்லது தக்கது, தகாதது—என இருவகைப் படு மென்று முன்னமே கூறப்பட்டுள்ளது. இவற்றுள்,

**இதம் ஹிதம் :** மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் பிறர்க்கு நலம் செய்தலும், மறைகள், சமயநூல்கள் ஆகியவற் றுள் செய்யக்கடவ என விதிக்கப்பட்டவற்றைச் செய்தலும், மேற்படி நூல்கள் தவிர்க என்ற கன்மங்களைச் செய்யாமல் ஒழிதலும் இதமான கன்மங்களாகும். இவற்றைச் சத்கன்மா, நல்லவை, தக்கவை என்பர.

'அறஞ் செய விரும்பு, ஐயமிட்டுண், ஙப்போல் வளை, சக்கர நெறிநில், தந்தைதாய்ப் பேண்' என்பன போன்ற செய்யக்கடவ என விதித்து வகுக்கப்பட்ட அறச் செயல்களை வழுவாது செய்தலும், 'ஈவது விலக்கேல், கண்டொன்று சொல் லேல், உடையது விளம்பேல், ஔவியம் பேசேல்,' என்பன போன்ற செய்யத் தகாதவையென்று விலக்கிக் கூறப் பெற் றுள்ள கன்மங்களைத் தவிர்த்தலும் இத (ஹித) மாம். இவையே நன்மை தருவதுமான செயல்களாம். நற்செயல்கள் ஈசனின் நல்லருளைப் பெறற்கு ஏதுவாகும்; மற்ற மலங்களை நெருங்க வொட்டா; மாயையைத் தவிர்க்கவும் உதவும்; பிறவியைப் போக்கிச் சிவப்பேற்றைச் சாதிக்கவல்ல துணையுமாகும்.

**அகிதம் (அஹிதம்) :** பிறருக்குத் தீங்கிழைத்தல், மற்றும், செய்யக்கடவை என வகுக்கப்பட்டவற்றைச் செய்யாதிருத்த

லும், தவிர்க்கக்கடவ என வகுக்கப்பட்டவற்றைத் தவிர்க்காமல் ஏற்றலும், இயற்றலும் அகிதம் (அல்லது தீயது, தகாதது) ஆகும்.

இவ்வண்ணம் ஒருவன் செய்யும் நலந்தீங்குகளுக்குத் தக்க பலனாக இன்பதுன்பங்களை ஈசன் வழங்குகிறான். இவ்வின்ப துன்பங்களைத் துய்க்கத்தக்கதான பிறப்பையும் அளிக்கிறான் என்பதை,

**'இதமகி தங்க ளென்ப திகன்மன வாக்குக் காயத்**
**திதமுயிர்க் குறுதி செய்த லகிதமற் றதுசெய் யாமை**
**இதமகி தங்க ளெல்லா மிறைவனே யேற்றுக் கொண்டங்**
**கிதமகி தத்தா லின்ப துன்பங்க ளீவ னன்றே.'**

—(சிவ. சித். 2ஆம் சூத். பா. 3)

இதம் அகிதங்களென்று சொல்லப்படும் கன்மங்கள், மனோவாக்குக் காயங்களால் உண்டாவன அவற்றுள் இதமென்பது உயிர்க்கு உறுதியாகிய புண்ணியங்களைச் செய்தல்; அகிதமென்பது அப் புண்ணியங்களைச் செய்யாமை. இந்த இதாகிதங்களையெல்லாம் சிவன் தானே ஏற்றுக்கொண்டு அவற்றின் காரணமாக இன்பதுன்பங்களைக் கொடுப்பவன் ஆன்மா சுதந்தரவீனன் ஆதலாலும் கன்ம சடமாதலாலும் இவ்விரண்டையும் காரியப்படுத்துவோன் இறைவனாதலால், 'இறைவனே ஏற்றுக்கொண்டு' என்றார்.

இவ்விதப் புண்ணிய பாவச் செயல்களுக்குத் தக்க பலனாகப் பிறப்பெடுத்த ஆன்மா முறையே வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் பெறுகின்றது. இதுமட்டுமன்றி அவ் வான்மா மீண்டும் மீண்டும் பிறவிக் கடலிலேயே சிக்குண்டு உழலவும் ஏதுவாகிறது. இவ்வண்ணம் சீவன் பிறவிக்கடலில் சிக்குண்டு கிடத்தற்கும், அதனினின்றும் கரையேறுதற்கும் அச் சீவனின் கன்மமே காரணமாயின் இறைவனொருவன் உண்டென்று ஏற்பது ஏன் எனில்,

**'இறைவனிங் கேற்ப தென்னை**
**இதமகி தங்க ளென்னி**
**னிறைபர னுயிர்க்கு வைத்த**
**நேயத்தி னிலைமை யாகும்**

அறமலி யிதஞ்செய் வோருக்
கநுக்கிர கத்தைச் செய்வன்
மறமல யகிதஞ் செய்யில்
நிக்கிர கத்தை வைப்பன்.'

—(சிவ. சித். 2ஆம் சூத். பா. 14)

இதாகிதங்களை இறைவன் ஏற்பது யாது காரணமெனில் பூரணனாகிய சிவன் ஆன்மாக்களிடத்து வைத்த பேரருளே ஆகும். இதமாகிய மிக்க புண்ணியங்களைச் செய்வோர்க்கு இன்பத்தைச் செய்வான். அகிதமாகிய மிகப் பாவங்களைச் செய்பவர்களுக்குத் துன்பத்தைச் செய்வான் என்னும் காரணத்தாலேயே என்க.

சிவன் உயிர்களுக்கு இன்பம் செய்வதன்றித் துன்பம் செய்வதும் பேரருளாலே யாகும். அஃது எங்ஙனமெனில், அவரவரது பாவங் காரணமாக அவர்களைத் தண்டித்துக் குற்றங்களைப் போக்கி அச்சமுண்டாக்கிக் கிரமங்களைப் போதித்து இம் முறைமையாக இப்போது புண்ணியங்களைச் செய்யும் என்பன். ஆதலால், சிவன் செயல் எந்தக் கிரமத்தில் இருந்தாலும் அச் செயலுக்கு எப்போதும் அருளே காரணமாகும். இதனை,

'நிக்கிர கங்க டானு
நேசத்தா லீவன் செய்வ
தக்கிர மத்தாற் குற்றம்
மடித்துத்தீர்த் தச்சம் பண்ணி
இக்கிர மத்தி னாலே
யீண்டற மியற்றி டென்ப
னெக்கிர மத்தி னாலு
மிறைசெய லருளே யென்றும்.'

—(சிவ. சித். 2ஆம் சூத். பா. 15)

இப் பாடலால் அறியலாம்.

'தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்க டஞ்சொ லாற்றின்
வந்திடா விடிலு நுக்கி வளாரினா லடித்துத் தீய
பந்தமு மிடுவ ரெல்லாம் பார்த்திடிற் பரிவே யாகும்
இந்தநீர் முறைமை யன்றோ ஈசனார் முனிவு மென்றும்.'

—(சிவ. சித். 2ஆம் சூத். பா. 16)

தாய்தந்தையர் தாங்கள் பெற்ற பிள்ளைகள் தங்கள் சொல்வழி வராவிட்டால் இளங்கொம்பினால் அடித்து அச் சுறுத்திக் கொடிய விலங்கும் பூட்டுவர். ஊகிக்குமிடத்து இவை யாவற்றுக்கும் அன்பே காரணமாகும். சிவன் ஆன்மாக்களுக்கு நிக்கிரகம் செய்வதும் எப்போதும் இம் முறைமைத்தேயாம்.

**'தானஞ்செய் பொருட ரித்தோர்**
**செய்தவர் தக்க செய்தி**
**யூனம்பி னுறவே காண்டும்**
**பலனுறு விப்பான் வேண்டு**
**மீனமில் செய்தி யீச**
**னிடும்பணி யிவைநாஞ் செய்தா**
**னூனங்க ளதிக நோக்கி**
**நுகர்விப்பன் வினைநோய் தீர.'**

—(சிவ. சித். 2ஆம் சூத் பா. 21)

தானம் செய்த பொருள், அதனைப் பெற்றவர், அத் தானம் செய்தவர், இவ்வகையாக வந்த கன்மங்கள் இவை எல்லாம் உடனே நாசமடைவதைக் கண்டோம். ஆதலால், பலன் களைக் கொடுப்பவன் ஒருவன் வேண்டும். விதிவசத்தால் சாத்திர கன்மங்களெல்லாம் சிவன் ஆணையிட்ட பணிவிடை களாகும். இப் பணிவிடைகளை நாம் செய்யின், அவரவர் கன்மங்களின் ஏற்றக்குறைவுகளைக் கண்டு இருவினையாகிய நோய் தீரும்படி புசிப்பிப்பான்.

**'உலகுடல் கரணங் கால**
**முறும்பல னியதி செய்தி**
**பலமிவை கொண்டு கன்மம்**
**பண்ணுவ துண்ப தானா**
**னிலவிடா விவைதாஞ் சென்று**
**நினைந்துயிர் நிறுத்திக் கொள்ளா**
**தலகிலா வறிவ னாணை**
**யணைந்திடு மருளி னாலே.'**

—(சிவ. சித். 2ஆம் சூத். பா. 22)

புவனமும், தநுவும், கரணமும், காலமும், அதனாலுறும் பலனும், அதனை வரையறுக்கும் நியதியும், இவற்றின் தொழி லும் ஆகிய இவற்றைக் கொண்டு ஆன்மாக்கள் கன்மம் புரி வதும், அக் கன்ம பலன்களைப் புசிப்பதும் ஆகிய இவை யாவும் சடங்களாதலால், ஆன்மாவைச் சென்றடைய மாட்டா.

ஆன்மாவும் சுதந்தரவீனன் ஆனதால் ஊகித்து நிறுத்திக் கொள்ள மாட்டான். ஆதலால், எண்ணிறந்த ஞானத்தை உடைய சிவன்தன் ஞான சக்தியானது அருளினாலே தநுவாதி களையும் ஆன்மாவையுங் கூட்டிப் புசிப்பிக்கும்.

'ஒழுக்கமன் பருளா சாரம்
உபசார முறவு சீலம்
வழுக்கிலாத் தவந்தா னங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவ டக்க
மறிவொடர்ச் சித்த லாதி
இழுக்கிலா வறங்க ளானால்
இறங்குவான் பணிய றங்கன்.'

—(சிவ. சித். 2ஆம் சூத். பா. 23)

நல்ல நடத்தை, சிவ பக்தி, சீவ காருண்யம், வேதாகமங் களில் கூறிய கர்மாநுட்டானங்கள், பெரியோரை உபசரித்தல், அப்பெரியோரை நட்டல், நல்லறிவு, குற்றமற்ற தவம், சத் பாத்திர தானம், பெரியோரைத் துதித்தல், அவரை வணங்கல், சத்தியம், களங்கமற்ற துறவு, செருக்கில்லாமை, ஆகம அறி வுடன் அர்ச்சித்தல், அக்கினி காரியம், கபில பூசை, சிவாலய தரிசனம் முதலான தவறில்லாத நல்வினைகளைச் செய்யின் சிவன் அத் தருமச் செயல்களுக்கு அருள்செய்வன்.

'மனமது நினைய வாக்கு
வழுத்தமந் திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங்
கிச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுத லகற்றி வாழும்
செயலற மானா லியார்க்கும்
முனமொரு தெய்வ மெங்குஞ்
செயற்குமுன் னிலையா மன்றே.'

—(சிவ. சித். 2ஆம் சூத். பா. 24)

மனம் தியானிக்கவும், வாக்குத் துதிக்கவும், மந்திரங்களை உச்சரிக்கவும், பல மலர்களைக் கையிலெடுத்து அவரவர் வழிபடு தெய்வத்தை அர்ச்சித்துக் கோபம் முதலிய குற்றங் கடிந்து வாழுஞ் செயலெல்லாம் சிவதன்மம் ஆதலால் எத் தேவர்களுக்குங் காரணனான சிவனே எவ்விடத்தும் அவரவர்

களது தியானாதி செய்கைகளுக்கு முன்நின்று அருள் செய் வான்.

மேற்படி பாடல்களால் கன்மங்களின் விரிவை அறிவதுடன், சிவன் ஒருவன் உண்டு என்று ஏற்பதற்குத் தக்க காரணங் களையும் அறியலாம்.

பகுத்தறிவுடன் கூடிய ஆன்மாக்களுக்குப் பிறப்பை யீந்து, நன்மை தீமைகளை அறியும் ஆற்றலையும் அருளி, நன்மை களை ஏற்றும், தீயவற்றைத் தவிர்த்தும், அவனருளுக்குத் தன்னைப் பாத்திரனாக்கிக் கொள்ளவும், அதனால் பிறவிக் கடலைத் தாண்டிப் பிறப்பிறப்பைத் தவிர்க்கவும் அளித்த ஓர் அரிய வாய்ப்பே பிறவியாகும்.

விகித கன்மங்களை வழுவாது ஏற்றுச் செய்தும், நிஷித்த (தீய) கன்மங்களை நெருங்கவொட்டாது தவிர்த்தும் அவனரு ளுக்குத் தன்னைப் பாத்திரனாக்கிக்கொள்ள ஈசன் அளித்த பிறவியாம் இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தக்க முறையில் பயன் படுத்திக் கொள்ளாமல், ஒரு மூடன், பிரகிருதியின் பாசத்து உட்பட்டவனாயும் பொறிபுலன்களுக்கு வசப்பட்டவனாயும் பிறவிக்கடலிலேயே கிடந்து உழல வழிதேடிக் கொள்ளல்,

'நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டுவந் தானொரு தோண்டி—அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி

என்னும் பாடலுக்கு இலக்கியமாவது போலும்.

நன்மை தீமைகளை யறியும் புத்தியைக் கொடுத்து, இருள் நிறைந்த வாழ்க்கையில் வழிகாண விளக்கெனச் சாத்திரங் களையும் இறைவன் ஈந்துள்ளான். இனி, இவற்றைப் பயன் படுத்திக் கொள்ளல் ஓரான்மா செயக்கடவதேயன்றி, ஈசனைப் பழிப்பதோ கன்மமே காரணமாதலால் ஈசன் யாதுக்கெனத் தருக்கித்தலோ தகாது. மேலே கூறியபடி வினைப் பயனை அனுபவிக்குங்காலேனும், ஒருவன் 'தன்னை நினைப்பானோ? தன்னை நாடுவானோ? தான் வகுத்த நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பானோ?' என்னும் நோக்கத்துடனேதான் இப் பிறவியை ஈசன் அளித்துள்ளான். இவ் விவரங்களை மேலே கூறிய பாடல்களிலிருந்து அறியலாம். இப் பாடல்களில் நாம் ஈசனருளைப் பெற எவ்வண்ணம் ஒழுகவேண்டும் என்னும் சரியை, கிரியைகளை விளக்கமாகக் கூறிப் பாசத்தைக் களை யும் உபாயத்தையும் கூறியமை கண்டுகொள்க.

தொடக்கத்தில் கூறிய ஐவகை மலங்களுமே பாசம் எனப் படுபவை; ஆயினும், ஆணவம், கன்மம், மாயை மாயேயம், திரோதானம் என்னும் இவ் ஐவகை மலங்களுள் கன்மமும் மாயையும் திரோதானத்தில் அடங்கியவையாகும். இத் திரோ தானத்தைச் சிவசத்தி யென்றும், அருளென்றும் கூறுவர். மற் றுள்ள மலங்கள் இச் சிவசக்திக்கு அடங்கியும், அதன் பலத்தா லேயே செயலாற்றவல்லவையு மாகின்றன. ஆகவே, இச் சிவ சக்தியென்பது (திரோதாயி) யாதென்றறிந்து, அதன் செயல் யாது? அது எங்குக் கிடக்கிறது? என்னும் உண்மைகளை அறிவோமானால் மலங்களையெல்லாம் அறிந்தவராவோம்.

திரோதானம் என்பது மறைவு, மறைத்தல், மூடல் எனப்படுவ தாகும். மறைக்கும் சீலை, மூடுந்திரை எனவும் பொருள்படும்.

திரோதாயி என்பது தான் வேறொன்றை மறைப்பதல் லாது தானேயும் மறைந்துகிடக்குந் தத்துவமாம். திரோதாயி யின் சக்தியால் மறைக்குந் திரையும் காணக்கூடாததாகும்; மறைக்கப்படும் தத்துவமும் புலனாகாது. திரோதானம், திரோ தன சக்தி, சிவசக்தி என்றெல்லாம் குறிப்பிடப்படுவது இத் திரோதாயியைத்தான்.

ஆன்மாவினுள் புகுந்து மறைந்துள்ள இத் திரோதாயிதான் ஆன்மாவுக்கு அறிவுப் பெருக்கைச் சுரக்கும் ஊற்றாகும். அவ் வான்மாவின் கன்மத்தை அநுசரித்துத்தான் திரோதாயியின் வாயிலாய்ச் சுரக்கும் அறிவின் தூய்மையும் வாய்க்கும். கண்ட தையும் கேட்டதையும் சீர்தூக்கிச் சிந்தித்து உண்மையைப் பிரித்தெடுத்து ஏற்றற்கும், தீமையைத் தவிர்த்தற்கும் இவ் வறிவுப் பெருக்கின் தூய்மையே காரணமாகும். இவ் வறிவின் பெருக்கோ திரோதாயியின் வாயிலாய்ச் சுரப்பதாகும். திரோ தாயியோ சிவசக்தியாகும். சிவசக்தியே அருள் என்பர். அவ் வருளோ சிவனன்றித் தனித்திராது. சிவனோ அருளின்றி நிற்பவனல்லன். அவ் வருளின் உதவியினாலேயே,

**'கருவியால் பொருளால் காட்டால்**
**காலத்தால் கன்மந் தன்னால்**
**உருவினால் அளவால் நூலால்**
**ஒருவனா லுணர்த்த லானும்**
**அருவனா யுண்மை தன்னி**
**லறியாமை நிற்ற லானும்**
**ஒருவனே அனைத்தி னாலும்**
**உணர்த்துவ னருளி னாலே.'**

**—(சிவ. சித். 5ஆம் சூத். பா. 4)**

தத்துவங்களாலும், விடயங்களாலும், தேயு முதலிய பூதங் களாலும், முக்காலங்களாலும், இருவினைகளாலும், பருவுட லாலும், அளவைகளாலும், சாத்திரங்களாலும், வேறு ஒருவன் உணர்த்தலானும், அருபியாகிய கேவலாவத்தையில் ஒன்று மறியாது நிற்றலானும் சிவன் ஒருவனே காரணமாகக் கருவி முதலியவற்றால் உணர்த்துவான்.

'கருவியும் பொருளுங் காட்டும்
காலமுங் கன்மங் தானும்
உருவமும் அளவு நூலும்
ஒருவரு முணர்த்த லின்றி
அருவனா யகில மெல்லாம்
அறிந்தவை யாக்கி வேறாய்
ஒருவனே உயிர்கட் கெல்லாம்
உயிருமாய் உணர்த்தி நிற்பன்.'

—(சிவ. சித். 5ஆம் சூத். பா. 5)

மேலே சொன்ன கருவி முதலிய ஒன்பதாலும் உணர்த்தப் படுதலின்றி அருபியாய், சர்வக்ஞனாய், சர்வ கர்த்திருத்து வமும் உடையவனாய் (முற்றுமுணர்ந்தவனாய், எல்லாம் ஆக்கும் ஆற்றலுடையவனாய்), இவற்றுக்கு வேறுபட்டவனு மாய்ச் சிவனொருவனே உயிர்க்குயிராய் இருந்து உணர்த்தி நிற்பன்.

மேலே கூறிய பாடல்களில் விளக்கியாங்கு ஒருவகை யானும் அறியக்கூடாது நிற்கும் சிவனாம் ஒருவனே அவ் வருளின் உதவியால், தூய்மையான அறிவுச்சுரப்பின் பெருக் கால், யாதேனும் ஒரு மாயத்தாலோ அன்றிப் பல உபாயங்க ளாலோ உண்மையை (தத்துவத்தை) ஆன்மா அறியத் துணைபுரிந்து உதவுவான்.

'அருளது சத்தி யாகும்
அரன்றனக் கருளை யின்றித்
தெருள்சிவ மில்லை யந்தச்
சிவமின்றிச் சத்தி யில்லை
மருளினை யருளால் வாட்டி
மன்னுயிர்க் களிப்பன் கண்கட்
கிருளினை யொளியா லோட்டும்
இரவியைப் போல வீசன்.'

—(சிவ. சித். 5ஆம் சூத். பா. 9)

சிவத்துக்கு அருள் என்பது சக்தியாகும். அவ்வருளை யின்றித் தெருளத் தக்க சிவமில்லை. அந்தச் சிவத்தையின்றிச் சக்தியில்லை.

ஆணவ மலத்தைத் தனதருளால் வாடச் செய்து நிலை பெற்ற ஆன்மாக்களுக்குச் சிவன் அருளுவன்; கண்களுக்குப் புலப்படும் இருளைச் சூரியன் போக்குவது போல.

ஆகவே, ஈசனது அருளைப் பெறுதற்கு உற்றவையென வகுக்கப்பட்ட ஒழுக்கச் செய்கைகளால் (சரியை, கிரியை களால்) ஈசன் ஆன்மாவின்பால் இரங்க அதனால், அவனரு ளென்னும் திரோதாயியின் வாயிலாய் நல்லறிவு (சத்ஞானம்) சுரக்க, ஆன்மா அழியும் பொருள்களின் உண்மை நிலையை உணர்ந்து, அவற்றைத் தனது குறிக்கோளாக்காமல் மாற்று வித்து மெய்ப்பொருளாம் ஈசனின் உண்மைத் தத்துவத்தை நன்றாய் அறிந்து ஏனைய மலங்களால் தீண்டப்படாததாய் அமலனாய்ப் பிறவிக்கடலைத் தாண்டியவனாய்த் தில்லை வெளியிற் கலந்து நிற்பன்.

அவ்வாறின்றி அகித (தீய அல்லது பாவச் செயல்களில்) கன்மங்களின் மீசுரத்தாலுற்ற அதர்மத்தின் ஆக்கம் (மறத்தின் பெருக்கம் மேம்பட்டு) மிகைப்பட்டு இருக்குமேல் அவ் வருளே ஏனைய மலங்களைக் கிளறி, அறிவைச் சேறாக்கிச் சேற்றில் புரளும் பன்றியைப் போல ஆன்மாவைப் பவத்துடன் (பிறப் பிறப்பில்) பிணைத்துக் கட்டும் கயிறு போல் செயலீட்டும் ஆத லின் இவ் வருளாம் சக்தியை, உண்மையை மறைத்துச் சிவப் பேற்றைத் தடுக்கும் இயல்புடையதைப் பாசம் என்று அழைத் தது முற்றும் பொருந்து மன்றோ?

**'தெரிந்துகொண் டோரொன் றாகச்**
**சென்றைந்து புலனும் பற்றிப்**
**புரிந்திடு முணர்வி னோடு**
**போகமுங் கொடுத்த யோனி**
**திரிந்திடு மதுவுஞ் செய்து**
**செய்திகண் டுயிர்கட் கெல்லாம்**
**விரிந்திடு முணர்வுங் காட்டி**
**வீட்டையு மளிப்பன் மேலோன்.'**

—(சிவ. சித். 5ஆம் சூத். பா 8)

ஒவ்வொன்றாகத் தெரிந்துகொண்டு சென்று, பஞ்சேந்திரிய வழியால் அறியும் அறிவோடு போகத்தையும் கொடுத்து,

யோனிகள்தோறும் உழலுந் தொழிலையும் (பிறப்புத் தொழில்) செய்வித்துப் பக்குவச் செயலையுங் கண்டு ஆன்மாக் களுக்கெல்லாம் பரந்த அறிவையும் கொடுத்து வீட்டையும் கொடுப்பன் மேலான சிவன்.

இவ்விதம், வீட்டைப் பெற உதவுங்கால் இத் திரோதாயி யிக்கு 'அருள்' என்றும், பந்தத்தைப் பயக்குங்கால் 'திரோதாயி' என்றும் பெயர்.

வேதாந்தம் என்னும் தலைப்பில் சொன்னவாறு பிரம் மத்தின் தோற்றும் உரத்தின் (விட்சேப சக்தியின்) செயலால் இயங்கிய மூலப் பிரகிருதியின் பரிணாமத்தால் தோற்றம் பெற்ற உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் (இந்திரியங்கள், இந்திரி யார்த்தம் யாவுமே) இங்கு விளக்கப்பட்ட பாசம் என்னும் தத்துவத்தைச் சேர்ந்தவையே ஆகும்.

அந்தத் தோற்றுவிக்கும் உரத்தின் (விட்சேப சக்தியின்) செயலாலேயே உண்மை நிலையை அறிந்து ஆன்மா எல்லாத் தளைகளிலிருந்தும் நீக்கம்பெற்று வீடடைதல் கைகூடும்.

வேதாந்த பாகத்தில் தத்துவத்தின் அடிப்படையான உண் மையும், சித்தாந்த பாகமாகிய இந்தப் பகுதியில் தெளிவித்த உண்மையின் அடிப்படையான தத்துவமும் ஒன்றே. பரிபாடையும் முத்திபெறற்கு வகுத்த உபாயமும் மட்டுமே வேறுபட்டவை. வேதாந்த பாகத்தில் ஞான மார்க்கமும், அறிவின் வழியும், சித்தாந்த மார்க்கத்தில் ஞான கன்ம சமுச் சய மார்க்கம்—அறிவும் நல்வினை தீவினையும் கூடியதாலுண் டான சேர்க்கையால் ஏற்பட்ட வழியும் என்பன கவனிக்கத் தக்கவை.

## (இ) அறுசமயக் கோட்பாடுகள்

பிற சமயவாதிகள் : (1) சமணர், (2) பௌத்தர், (3) சாங்கியர், (4) வைசேடிகர், (5) மீமாம்சகர், (6) நையாயிகர் எனப்படுவோராவர்.

### (1) சமணர்

சமணரைச் சைனர், சமணர், ஆசீவகர், அருகதர் என்னும் பெயர்களால் குறிப்பிடுவதுண்டு. இவர்களது கொள்கைப்படி

உலகம் தெளிவான இரு பிரிவில் அடங்கும். ஒன்று உயிர்; மற்றது உடலும் ஏனைய சடப்பொருள்களும். ஒன்று சீவன்; மற்றது அசீவன். சீவன், அசீவன் இரண்டும் அழிவற்றவை. ஆத்மாக்கள் பல. அவை சடசம்பந்தம் இல்லாதிருக்கும்போது முற்றுணர்வும், முடிவிலாற்றலும் உடையவை. புலன், பொறி யனைத்தும் ஆத்மாக்களுக்குக் கட்டுகள். இக் கட்டுகளைக் களைந்தால், ஆத்மா தன் இயல்பாகிய சைதன்யமே சொருப மாகி விடும். இவ் வுணர்வுக்கு **கேவலஞானம்** என்று பெயர். ஞானம் மட்டுமே என்பது பொருள்.

சீவன், அசீவன் என்னும் இரண்டுதாம் உள. மூன்றாவது பொருள் இல்லை. சீவன் எந்த உடலைத் தனக்கு உறை விடமாகக் கொள்கிறதோ அந்த உடலின் பருமனுக்கு ஏற்பத் தன்னைக் கூட்டவும் குறைக்கவும், விரிக்கவும், சுருக்கவும் வல்லது. உலகின் நம் புலன்களுக்கு விடயமாகும் பௌதிகப் பொருள்களெல்லாம் அசீவனே.

பொருள்கள் நிலைமாறிப் பகுதிகளாகப் பிரிந்து, பிரிபட முடியாத மூல நுண்பொருளாக முடியும். இவையே அணுக்கள். அணுக்களெல்லாம் ஈற்றில் ஒரே தன்மையுடையன என்பர் சமணர். இவை அநாதி நித்தியப் பொருள்கள். அணுக்களுக்கு இயங்கும் சக்தி இயல்பாகவே அமைந்துள்ளது என்பர். வேதத்தை இவர்கள் புறக்கணித்தனர். கடவுளை ஏற்காத காரணத்தால் 'நிரீச்சுரவாதிகள்' எனப்பட்டனர். எனவே, அவைதீக சமயத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

எதைப்பற்றி எதைச் சொன்னாலும் அங்ஙனமிருக்கலாம் என்னும் 'சியாத்' வாதத்தைக் கொண்டவர். எப் பொருளைப் பற்றியும் எந்த ஒரு முடிவும் முடிந்த முடிவாகாது. முடிவுகள் பல ஆகலாம். இங்ஙனம் பல முடிவுகளை ஏற்கும் கொள்கையே 'அநேகாந்த' வாதமாகும். உடம்பெடுத்தற்கு முன் சீவன் உண்டோ?, இல்லையோ? என வினாய வழி, உண்டாம், இல்லையாம், உண்டும் இல்லையாம், சொல்லொணாததுமாம், உண்டுமாம் சொல்லொணாததுமாம், இல்லையுமாம் சொல் லொணாததுமாம், உண்டுமில்லையாம் சொல்லொணாததுமாம் என ஏழு வகையாக வகுப்பர்.

### (2) பௌத்தர்

பௌத்தத்தில் 18 பிரிவுகள் பேசப்படுகின்றன. பௌத்தம் காண்டல், கருதல் ஆகிய இரண்டு அளவைகளை மட்டுமே

ஏற்றுக்கொள்கின்றது. மூன்றாவதாகிய ஆகமப் பிரமாணத்தைத் தள்ளிவிடுகிறது. எனவே, அவைதிக சமயத்தைச் சார்ந்தது பௌத்தம். பௌத்தரும் நிரீச்சுரவாதிகளே.

பிறப்புகள் பல எனக் கூறும் பௌத்தர் கன்ம பலனுக்கு ஏற்பவே மறுபிறப்பு அமைகின்றதென்பர்.

**மாற்றத்தாலாயது உலகம்** : மாற்றம் என்றால் புத்தர் கொள்கைப்படி அழிதல் அல்லது நீங்குதல். குண இயல்புகளின் தொகுப்பையே நாம் உயிர் என்றும் உடல் என்றும் குறிக்கின்றோம். இவற்றையே பௌத்தர் நாமரூபம் என வழங்குவர். நிலையான மாற்றமடைந்துகொண்டிருக்கும் இந் நாமரூபம் தவிர நிலையான ஆத்மா என்ற பொருள் இல்லை என்பது புத்தரது வாதம். எனவே, இது 'அநாத்மவாதம்' அல்லது 'நைராத்மியவாதம்' எனப்படும்.

**கணபங்கவாதிகள் :** ஒரு பொருளும் கணநேரம்கூட நிலைப்பதில்லை என்னும் கருத்துடையவராதலின், பௌத்தரைக் கணபங்கவாதிகள் என அழைப்பர். மாற்றம் சதா நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது. மாற்றம் ஒரு பொருளின் சில பகுதிகளில் மட்டும் நிகழாமல், பொருள் முழுவதுமே நிகழ்ந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு கணமும் அதே போன்ற இன்னொன்றாகவோ அதனின்றும் வேறுபட்டதாகவோ மாறியபடி இருக்கின்றது. மாறுமுன் இருந்த அதே பொருள்தான் மாறிய பின்னும் இருக்கிறது என்பது தவறு. மாறுமுன் இருந்ததும் மாறிய பின் இருப்பதும் ஒன்றுபோல இருப்பதால் நாம் அவற்றை ஒரே பொருள் என எண்ணுகிறோம். உண்மையில் அவையிரண்டும் ஒன்றல்ல. ஒரு கணத்தில் இருக்கும் பொருள் மறு கணத்தில் இருப்பதில்லை. எனினும், மாற்றம் நிகழும் வேகத்தில் தொடர்ச்சியறாத ஒரே பொருளாகவே அவை காணப்படுகின்றன. காலையில் நாம் விட்டு நீங்கும் வீடு வேறு; மாலையில் வந்து புகும் வீடு வேறு. மாற்றம் சிறிய அளவில் நிகழும்போது அது நமது கண்ணுக்குப் புலப்படுவதில்லை. காலவரம்பு பெரிதான பின் நாம் அதனைக் காண்கிறோம். மாறும்போது மாற்றம் நமக்குப் புலனாவதில்லை. அது வேறொன்றாக மாறும்போதுதான் புலனாகிறது.

மாற்றம் என்பது ஒரு பொருள் அழிந்து அதனிடத்தில் இன்னொன்று தோன்றுவது. எனவே, ஒரு பொருள் இன்னொன்றாக மாறிய பின்னும் முதலில் இருந்த பொருளே

நிலைத்துநிற்கின்றது எனக் கொள்வது தவறு. எந்த ஒரு பொருளும் தொடர்ந்து ஒரு கணம்கூட நிலைப்பதில்லை. தோன்றிய அக்கணமே அது தன் போன்ற இன்னொன்றைத் தோற்றுவித்து மறைந்துவிடுகிறது.

ஒன்று தான் மாறி இன்னொன்றாய் நிற்கிறது என்பதும் பிழை. மாறிய பொருள் பின்னும் நிலைக்கின்றது என்பது அழிந்த பொருள் அழிந்தபின்னும் இருக்கின்றது என்பது போன்றது. ஒரு கணத்துக்குமேல் நிலைத்துநிற்பது ஒன்று உண்டெனப் பேசத்தக்க பொருள் எதுவுமில்லை. மாற்றம் ஒன்றுதான் உண்மை. எனவே. பொருள் ஒன்றுமில்லை. மாற்றம்தான் உளது. நிலைபேறு என்பது பொய்.

காய் கனியானபின் காய்தான் கனியாகி யிருக்கிறது ; இரண்டும் ஒன்றுதான் ; காய் இன்னும் உள்ளது ; காயான ஒரே பொருள்தான் கனியாகவும் நிலைத்திருக்கின்றதெனின், மாற்றம் நிகழவில்லை. ஆனால், உண்மை அதுவன்று. அணு, உயிர் போன்ற பொருள்கள் எதுவுமில்லை. மாறி மாறி அதிவேகமாக நிகழ்ந்துகொண்டிருக்கும் எண்ணக் கோவை, உணர்சசிச் சேர்க்கை போன்றவைதாம் உள்ளவை. எனவே, மாற்றம்தான் உண்மை. இந்த ஓட்டத்தாலும் மாற்றத்தாலும் ஆயதே இவ் வுலகம். இதுவே பௌத்தரின் கொள்கை.

### (3) சாங்கியர்

வேத உபநிடதங்களைப் பிரமாணமாக ஏற்றுக்கொண்ட சமயங்களுள் சாங்கியமும் ஒன்று. சாங்கியம் என்னும் சொல் லுக்குப் 'பூரண அறிவு' என்று பொருள். எனவே, மூலப் பொருள்கள்பற்றிப் பூரண அறிவைத் தரும் சமயத்துக்குச் சாங்கியம் என்னும் பெயர் வைத்தனர் எனலாம்.

மாற்றமும் நிலைபேறும் உண்மை என்கிறது சாங்கியம். எது மாற்றமடைகிறதோ அது அறிவுள்ள பொருள் ஆகாது. அதேசமயம் அறிவே சொரூபமான பொருள் எதுவோ அது மாற்றம் அடையாது என்ற நியதியைச் சாங்கியம் அமைத்துக் கொண்டது.

மூலப்பொருள் இரண்டு. ஒன்று அறிவே சொரூபமான புருடன்; மற்றது அறிவற்ற பிரகிருதி. பிரகிருதிதான் உலகின் தோற்றத்துக்கு மூலம். பின் ஒடுங்குவதும் அதில்தான். புருடன் மாற்றம் அடையாத பொருள். பிரகிருதி அருவ

மானது. இவற்றையெல்லாம் சாங்கியர் அனுமானத்தால் அறிந்தனர்.

அதாவது, உலகிலுள்ள சடப்பொருள்களெல்லாம் போகப் பொருள்கள். இப் போகப் பொருள்கள் தம்மைத்தாமே அனுப விக்கமாட்டா. ஒரு பழம் தன்னைத்தானே சுவைக்க மாட் டாது. அதனைச் சுவைத்து அனுபவிப்பது ஒரு சேதனப் பொருளால்தான் முடியும். எனவே, அசேதனப் பொருள்கள் மூலமே அவற்றைப் பயன்படுத்தும் சேதனப் பொருள்களும் உண்டு என்று வலியுறுத்துகின்றது சாங்கியம். பிரகிருதி, சத் துவம், ராஜசம், தாமசம் என்னும் முக்குணங்களையுடையது. இம் முக்குணங்களும் பொருள்களே. முக்குணங்களும் ஒப்ப நின்ற நிலையில் பொருள்கள் கிடையா. அது சிருட்டிக்கு முற்பட்ட நிலை. அதுதான் உலகின் ஒடுக்கம். இம் முக் குணங்களின் சமநிலை தடைப்பட்டு, ஒன்று உயர்ந்தும் மற்றவை தாழ்ந்தும் பற்பல விதமாகச் சேர்வதனால் பற்பல பொருள்களும் உண்டாகின்றன. பிருதிவி உடலையும் ஏனைய பொருள்களையும் தோற்றுவிப்பது புருடன் பொருட்டே.

ஒவ்வொரு காரியத்துக்கும் காரணம் இருந்தாக வேண்டும். சாங்கியர், காரண நிலையிலும் காரியம் உண்டு என்கின்றனர். காரியம் எங்கிருந்தோ புதிதாகத் தோன்றுவதன்று. அது உற் பத்திக்கு முன்னும் உள்ளது. எள் காரணம்; எண்ணெய் காரியம். நூல் காரணம்; புடைவை காரியம். மண் காரணம்; பானை காரியம். புடைவை நூலிலும், பானை மண்ணிலும் முன்பே இருக்கின்றன. உள்ளதுதான் வரும். இல்லாதது வாராது என்று கூறும் இவ் வாதத்திற்குச் ‘சத்காரிய வாதம்’ எனப் பெயர்.

புருடன் கர்த்தாவல்லன்; போக்தா (அனுபவிப்பன்). செயலற்றுக் கிடக்கும் புருடன் ஒரு முடவனை யொத்தது. அறிவற்ற பிரகிருதி ஒரு குருடனையொத்தது. இரண்டும் சேர்ந்து இயங்குவது குருடன் தோளில் முடவன் ஏறி இருவரும் பயணம் செய்வதை யொக்கும்.

சாங்கியர் அளவைகள் மூன்றை ஏற்றபோதிலும், கடவுள் களை ஏற்கவில்லை.

### (4) வைசேடிகர்

மனமும் புறத்தேயுள்ள பொருள்களும் உண்மையென்னும் மெய்ம்மை வாதத்தை ஏற்பவர் வைசேடிகர். உலகின் மூலத்

திற்குக் காரணமான பொருள்கள் பல. உலகில் பொருள்கள் பகுதிகளாகப் பிரிகின்றன. பொருளைப் பிரித்துக்கொண்டே போனால் பகுதியற்ற ஒரு நிலையை அடைந்தே தீருவோம் என்பது வைசேடிகரது கொள்கை. இவற்றை அணுக்கள் அல்லது பரம அணுக்கள் என்பர். இவை அழியாதவை. இவையே உலகின் தோற்ற ஒடுக்கத்திற்குக் காரணம்.

**ஒன்பது திரவியங்கள்:** பஞ்சபூதம், காலம், இடம், ஆத்மா, மனம் ஆகியவற்றை ஒன்பது திரவியங்கள் என்பர். இவற்றில் ஆகாயம் மட்டுமே பகுதிகளால் ஆகாதது. மற்றவை பகுதி களால் ஆயவை. இவற்றின் பகுதிகளே அணுக்கள். பூத அணுக்கள் ஒவ்வொன்றும் தனித்தனி இயல்புடையது. ஒவ் வோர் இனத்திலும் அனந்தம் அணுக்கள் உள. ஒவ்வோர் அணுவும் தனக்கென ஒரு தனித்தன்மையை உடையது. அத்தன்மையையே விசேடம் என்பர். அந்த விசேடமே அதை அதன் இனத்திலுள்ள ஏனைய அணுக்களிலிருந்து பிரிப்பது.

கண்ணுக்குப் புலனாகாத இப் பரம அணுக்கள் இவ்விரண் டாகச் சேர்ந்து இணை அணுக்களாகும். மும்மூன்று இணை கள் சேர்ந்து மூவிணை அணுக்களாகும். அந் நிலையிலேதான் நமக்குப் புலனாகும். இதனையே சிருட்டியின் ஆரம்பம் என்பர். ஆரம்பகால வைசேடிகர், 'அதிர்ஷ்டம்' என்னும் தத்துவம்தான் அணுக்களை இயக்குவது என்றனர். பிற்காலத் தவா, அணுக்கலளைச் சேர்த்து ஆக்குவோனும் பின் பிரித்து அழிப்போனும் இறைவன் எனக் கொண்டனர்.

காரணத்தில் இல்லாது புதிதாக ஒரு காரியம் தோன்றும் என்பர். அதாவது, பகுதிகளாய்க் காரணத்தில் இல்லாதது அப் பகுதிகளின் சேர்க்கையாகிய காரியத்தில் தோன்றும். எடுத்துக்காட்டாக, இரண்டு பகுதிகள் சேர்ந்து ஒரு புதிய பொருள் உண்டாயிற்றென்றால், பகுதிகள் இரண்டு, தோன் றிய பொருள் ஒன்று, ஆகப் பொருள் மூன்றென்பர் வைசேடிகர். இந்த வாதத்திற்கு 'அசத்காரிய வாதம்' எனப் பெயர்.

விசேடம் என்னும் தத்துவத்தைக் கொண்டதனால் வைசேடிகர் எனப்பட்டனர்.

### (5) மீமாம்சகர்—மீமாம்சை

எந்த ஆதாரத்தையும் வேண்டாது வேதவாக்கை ஒப்பற்ற முழுமுதற் பிரமாணமாக ஏற்பது எனபது மீமாம்சை என்னும்

சொல்லுக்கு நேர்ப் பொருள். முறையாக விசாரித்தல் அல்லது ஆராய்தல். வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது என்னும் ஒரு காரணத்தை மட்டும் கொண்டு ஏற்றுக்கொள்ளாது, அது நமது பகுத்தறிவுக்கும் பொருந்துகின்றது என நிரூபித்துக்காட்டுவது. வேதவாக்கியங்களின் அர்த்தத்தைச் சரியாக அறியும் நோக்கத்தோடு, சொற்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். சொல்லை ஆராயத் தொடங்கிய மீமாம்சகர் சொல்லை ஆக்கும் எழுத்தையும் அதனை அடையாளமாகக் கொண்ட ஒலியையும் ஆராய்ந்தனர்.

பொருளும் குணமும் ஒன்றா ? வேறா ? என்னும் வினாவிற்கு, ஒன்றும் அன்று ; வேறும் அன்று ; ஒன்றும் வேறும் என்றனர்.

**அணுக்கொள்கை :** கண்ணுக்குப் புலனாகாத அணுக்களை ஒப்புக்கொள்வதில்லை. மூவிணை அணுவை மட்டுமே ஒப்புக்கொள்கின்றனர்.

**ஆன்மா :** என்றும் உள்ளவை. ஆன்மாவிற்கு அறிவு ஒரு தொழில். எனவே, தொழில் நிகழும்போது, செய்வோனும் தொழிற்படு பொருளும் பாதிக்கப்படுகின்றன.

**கன்மம் :** நித்திய கன்மத்தோடு முத்தியடைய ஞானமும் வேண்டும் என்று கருதுகின்றனர். இதனால்தான் இவர்களது கொள்கைக்கு 'ஞானகன்ம சமுச்சய வாதம்' என்னும் பெயர் ஏற்படலாயிற்று.

### (6) நையாயிகர்

நையாயிகர், மெய்ம்மைவாதிகள். பிரத்தியட்சப் பிரமாணத்தைப் பிரமாணங்களுள் மிக முக்கியமானதாகவே நையாயிகர் கருதுகின்றனர் ஆனாலும், இந்த ஒன்றைமட்டும் கொண்டு உலக உண்மையை நிரூபிக்க அவர்கள் முற்படவில்லை. தர்க்க ரீதியாக நிலைநாட்ட வேண்டுமென அவர்கள் விழைந்தனர்.

அறிவைப் பெறும் வழியாகிய பிரமாணத்துக்கு முதன்மை கொடுத்தனர். பிரமாணம் சரியானதானால்தான் அப் பிரமாணத்தைக் கொண்டு நாம் அறியும் பொருளும் சரியானதாகும் என்பது அவர்கள் கட்சி.

பிரமாணங்கள் ஆறனுள் முதல் நான்கை ஒப்புக் கொள்கின்றனர். புறப்பொருள்கள் யாவும் நம் மனத்தைப் பொறுத்தனவல்ல ; சுதந்தரமாகவே உள்ளன. பிரத்தியட்சத்தில் புறத்தேயுள்ள பொருள்களுக்கும் புலன்களுக்கும் நேரடியான சம்பந்தம் உண்டென்பர். இக் கொள்கையை மீமாம்சகரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

பொருளோடு புலன் நேராகத் தொடர்புற்றே அதனை அறியும் எனக் கொள்வர். அதே போல் பொருளின் இன்மையையும் (அபாவம்) அறியும் என்பர்.

பிரத்தியட்சத்தை லௌகிகப் பிரத்தியட்சம், அலௌகிகப் பிரத்தியட்சம் எனப் பிரிப்பர். லௌகிகத்தைப் புறம் எனவும் உள் எனவும் இரண்டாகப் பிரிப்பர். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் அனைத்தும் லௌகிகப் பிரத்தியட்சம் ஆகும். ஒரு மனிதனை இன்னான் என்று அறியும்போது மனித இனத்துக்கு மட்டுமேயுரிய பொதுத் தன்மைகளை அவனிடம் காண்கிறோம். இப் பொதுத் தன்மையை அறிவது அலௌகிகப் பிரத்தியட்சத்துக்கு உதாரணமாம்.

# 3. கற்பம்

தமிழ் மருத்துவ முறைகளில் கற்ப மருந்துகள் தலையாவன. இவை சித்தர்களால் கண்டுபிடிக்கப்பட்டுத் தமிழகத்திற்குத் தரப்பெற்றவை. கற்பமென்பது உடம்பினை நோயுறாதபடி நன்னிலையில் வைத்திருந்து நரை, திரை, மூப்பு இவற்றையும் பிணிகளையும் நீக்கும். உடம்பின் மேன்மையை முழுதும் உணர்ந்தவர் சித்தர். இவர் நரை, திரை, மூப்பறியா நல்லுடம்பு பெற்றோர். உடலுக்கு உறுதிபயக்கும் பொருள்களை அறிந்து நன்மருந்து செய்து பொய் எனுமுடலை மெய்யென நிலைக்கச் செய்தனர். சித்த முறையில் உடலின் நன்மையைக் காப்பது **'காய கற்பம்'** எனப்படும். இஃது எண் வகைச் சித்திகளை அடைவதற்கேதுவானது. இக்காலத்தில் இக் கற்ப முறைகளை நமது உடலைப் பேணவும், பல ஆண்டுகள் உயிரோடு வாழவும், பிணிகளைப் போக்கி உடலைத் தேற்றவும், பிணிகள் வாராதபடி தடுக்கவும் பயன்படுத்தலாம்.

மனிதன் இல்லற வாழ்விலானாலும் துறவற வாழ்விலானாலும் தன் உடம்பைப் பேணல் முதன்மையானது. இதனைத் திருமூலர் திருமந்திரத்தில் கீழ்க்காணுமாறு கூறுகின்றார்:

**'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே'.**

உடம்பைக் காப்பது கற்பம். இது உடம்பைக் கல்லைப் போலாக்கும். கல்லினாற் செய்த சிலை பன்னெடுங் காலமாயினும் நரை, திரை, மூப்பு, பிணி இவை எய்தாததுபோலக் கற்பமான உடலும் இக் கேடுகளை அடைவதில்லை.

கற்பத்தை உண்டால் காயம் அழியாது என்று திருமூலர் கூறுகின்றார்.

கற்பம் பொது, சிறப்பு என்று இருவகைப்படும். பொதுக் கற்பம் உடலைக் காத்து, மேனிக்கு எழிலையும் பலத்தையும் தந்து நரை, திரை, மூப்பு, சாக்காடு வாராமல் தடுக்கும். சிறப்புக் கற்பம் உடல் உறுப்புகளிலாவது உடல் முற்றுமாவது கண்ட பிணியை நீக்கி உடலுக்கு வன்மை தந்து பலம் ஊட்டும். கற்பம் நீண்ட காலம் உயிருடன் வாழச் செய்யும் என்று அறியலாம்.

இவ்வாறு பொது, சிறப்பு என்று பிரித்துக்கூறப்பட்ட கற்பத்துள் மூலிகை, தாது, சீவப்பொருள் அவிழ்தங்களும், மேலும் உடலைக் காக்கும் யோகாசனப் பயிற்சிகளும், பிராணாயாமம் என்று சொல்லப்படும் மூச்சுப் பயிற்சியும், யோகம், முப்புவும் அடங்கும்.

முப்பு மருத்துவ முப்பு, வாத முப்பு, யோக முப்பு என விரியும். மருத்துவ முப்பு, பிணிகளை எளிதில் போக்கி உடலைத் தேற்றும். வாத முப்பு எவ்வாறு கீழ்வகுப்புப் பொருள்களை மேம்பாடடையச் செய்யுமோ அதுபோல உடம்பை அதன் அழியும் தன்மையினின்று மாற்றி அழியாதபடி செய்யும். யோக முப்பு என்பது நமது உடல் உள்ளேயே ஊறுகின்ற நீர்ச்சத்துகளாம். இவை ஆயுட்காலத்தை வெல்லத் தக்கன. யோகம் செய்வதன் மூலம் யோக முப்புவை ஒழுங்குபடுத்தி நீண்ட நாள்கள் வாழமுடியும்.

இவை தவிர அமுரிதாரணை (Urine Therapy), இயமம், நியமாதி, நன்னடத்தை, மனத்தூய்மை ஆகியவும் கற்பமாம். முதலில் கூறிய கற்ப அவிழ்தத்தைக் கவனித்தால் இது தாவரத் தாதுச் சீவப்பொருள்களாகும். சில மூலிகைகளின் இலையாதி பொருள்களுள் ஒன்றையாவது, பலவற்றையாவது, தனியாக வாவது, பிற பொருள்களுடன் கலந்தாவது அன்றி உலோக, உபரச, உப்புப் பொருள்களையாவது அவ்வவற்றினுக்குக் கூறப்பட்ட பக்குவப்படி நாளளவும் பத்தியமும் காத்து, பெருக்கியோ, குறைத்தோ அளவுப்படி உண்டுவருதலாம்.

பொதுவாக இது நாடோறும் செய்துண்பது, முன்னதாகவே தயாரித்து வைத்திருந்து உண்பது என்னும் இருவகையிலும் உண்ணப்படுவது. மூலிகைக் கற்பப் பொருள்களும் கற்ப யோகங்களும், தேரன் யமக வெண்பா, காப்பியம், சேகரப்பா, போகர் கற்பம், கருவூரார் வாதகாவியம், திருமூலர், அகத்தியர் வைத்திய நூல்களில் கூறப்பட்டுள்ளன. தாது கற்பம்பற்றி அகத் தியர் செந்தூரம்300 போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளது.

கற்ப மருந்துண்ணுங் காலத்துப் பல வரன்முறைகளை அனு சரிக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இவற்றை வழு வாது கடைப்பிடிக்க நற்பலனைத் தரும். சில கற்ப மருந்து கட்குச் சிறப்பான அளவு துணைமருந்து, நாளளவு, பத்திய முறைகள் முதலியன கூறப்பட்டுள்ளன. கற்பம் உண்ணும் பிணியாளன், மருத்துவன் கூறும் விதிகளைத் தவறாது கடைப் பிடித்தொழுக அவன் கற்ப மருந்தின் முழுப்பலனையும் அடை வான் ; உடல்நிலை நன்றாகும்.

இன்னும் கற்பமுண்ணும் காலத்துத் தூய்மையாள மனத் துடன் இருத்தல் வேண்டும். ஒருமையில்லாத மாறுபாடான பொல்லாப்புப் பாராட்டாமல். குற்றங்களுக்குக் காரணமான திருட்டு, கபடு, பட்டித்தனம் ஆகியவற்றை நீக்கி அடக்கமாக இருந்து கற்பமுண்ணவேண்டும். மனம் தூய்மையானால் கற்ப மருந்து சிறந்த பலனைத் தரும் என்பதில் ஐயமில்லை.

கற்ப மருந்தை நன்னாளில் ஆரம்பித்தல் நன்று. பல கற்ப மருந்துகள் முதலில் சிறு அளவில் தொடங்கி நாளுக்கு நாள் பெருக்கி உண்ணப்பட வேண்டும். சிலவற்றை ஏற்றியும் இறக்கியும் உண்ணவேண்டும். இவற்றை உண்ணத் தொடங் கியபின் இடையீடின்றி ஒரு நாளும் விடாமல் தொடர்ந்து கூறப் பட்ட நாளளவுவரை உண்ணவேண்டும். பெரும்பாலான

கற்ப மருந்துகள் ஒரு மண்டல கால அளவு புசிக்க வேண்டியன. அநேக கற்பங்களுடன் மிளகு, உப்பு இவை சேருகின்றன பலவற்றுக்குப் புளி நீக்கவோ அன்றிச் சிறு அளவு புளி சேர்க்கவோ கூறப்பட்டுள்ளது. அகப்பத்திய மான இச்சாபத்தியம் பலவற்றுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

கற்ப மூலிகைகள் நூற்றெட்டு என்று கருவூரார் **வாத காவியத்தில்** கூறப்பட்டுள்ளது. அவற்றுள் சில கடுக்காய், ஓரிலைத் தாமரை, வெண்தூதுவேளை, கீழாநெல்லி, மஞ்சள் கரிசாலை, கருநெல்லி, வெண்கரந்தை, மருதோன்றி, வெள் ளை எருக்கு, கருந்துளசி, சேராங்கொட்டை, எலுமிச்சை, 'செங்கரந்தை என்பன.

**தாதுப்பொருள் கற்பம் :** எலுமிச்சம் பழத்துடன் அயம் கூட்டிச் செய்யப்படும் அயசம்பீர கற்பம், அயத்துடன் கரி சாலை கூட்டிச் செய்யப்படும் அயபிருங்கராஜ கற்பம், தங்கம், இரசம், கந்தகம் சேர்த்துச் செய்யப்படும் பூரணச் சந்திரோ தயம் என்னும் பெயருடைய செந்தூரம் போன்றவைகளாம்.

**சீவப்பொருள் கற்பம் :** பசுவின் பச்சைப் பால், காய்ச்சின பால், இந்திரகோபப் பூச்சி போன்றவைகளாம்.

**பிராணாயாமம்** என்னும் மூச்சுப் பயிற்சி கற்ப முறைகளில் ஒன்று என்பதைக் கீழ்க்காணும் திருமந்திரச் செய்யுளால் உணரலாம்:

**'ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்**
**காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை**
**காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்கு**
**கூற்றை உதைக்கும் குறியது வாமே.'**

அனைத்து உயிரினங்களுக்கும் உயிர்க்கால் (**பிராணவாயு**) மிக மிக இன்றியமையாததாக உள்ளது. இஃது உயிருக்கு ஆதாரமாக எண்ணப்பட்டதாலேயே இவ்வாறு பெயர் பெற்றது. மூச்சுத் தொழிலினால் நம் உடலுக்குத் தேவை யான உயிர்க்காலை நாம் பெற்றுக்கொள்கிறோம். மூச்சு (Respiration) என்பது **உள்மூச்சு** — பூரகம் (Inspiration), **வெளிமூச்சு** — இரேசகம் (Expiration), நிறுத்தல் — கும்பகம் (Retention) என்னும் மூன்று நிலைகளை யுடையது. பொது வான நிலையில் நாம் மூச்சினால் உள்வாங்கும் உயிர்க் கால் முழுவதும் நமது உடம்பில் கலந்துவிடுவதில்லை. இவ்

வாறு உடம்பில் கலவாத உயிர்க்கால் வெளிமூச்சில் ஏனைய கால்களுடன் வீணாகச் சென்றுவிடுகிறது. இவ்வாறு வீணாய்க் கழியும் உயிர்க் காலை, மூச்சுக் காற்றைப் பிராணாயாமப் பயிற்சி செய்து அதிக நேரம் நுரையீரல்களுக்குள் நிறுத்தி வைத்து உடம்பில் கலக்கச் செய்தனர். இப் பயிற்சியே மூச்சுப் பயிற்சி, பிராணாயாமம், வாசி அல்லது வாயுதாரணை எனப் படும். இப் பயிற்சியினால் நரம்பு மண்டலங்கள் பலப்படு கின்றன. நரம்பு விலங்கள், மூளை இவற்றுக்கு ஏனைய திசுக் களைவிட அதிக அளவு உயிர்க்கால் தேவைப்படுகிறது.

பிராணாயாமத்தினால் அதிக அளவு உயிர்க்காலை நுரை யீரல்களிலிருந்து குருதிச் சுற்றோட்டம் எடுத்துச்செல்ல வாய்ப்பு உண்டாகிறது. அது குருதியால் எல்லா உடல் திசுக் களுக்கும் கொண்டுசெல்லப்பட்டாலும், நரம்பு விலங்களும் மூளையும் அவை நன்றாகச் செயல்படும்பொருட்டு அதிக அளவு உயிர்க்காலைப் பெற்றுக்கொள்ளுகின்றன.

உயிர்க்காலின் அசைவு எதுவோ அதுவே சித்தத்தின் அசைவென்றும், உயிர்க்காலின் அசைவை வென்றால் சித்தத்தை வயப்படுத்தலாம் என்றும் கூறுவர்.

மூச்சுப் பயிற்சியினால் உடல் கற்பமாகும். மேலும், பிராணாயாமத்தால் மனம் கட்டுப்படும்; சக்தியும் பலமும் உண் டாம் ; எல்லா நோய்களும் தீரும் ; உடலுறுப்புகளுக்குப் பயிற்சி தரும் செரிமானசக்தி பெருகும்; நரம்புகளைத் தூய்மை யாக்கி அவற்றைத் தூண்டும் ; திடச்சித்தம், மன ஒருமைப் பாடு, மனமகிழ்ச்சி, உடலழகு, இனிய குரல், ஊக்கம், சுறுசுறுப்பு, உடல் நறுமணம் ஆகியனவும் உண்டாம். இவற் றால் ஆயுட்காலம் அதிகப்படும்.

பிராணாயாமம் செய்யச் சாத்துவிக குணம் வேண்டும். நல்ல காற்றோட்டமுள்ள இடம் வேண்டும். தரை ஈரமற்ற தாய் இருக்கவேண்டும். பனியும் குளிரும் இல்லாத காலத்து ஆற்றங்கரை, ஏரிக்கரை, தோட்டம், வெளி, மலைப்பகுதி இவ்விடங்களில் செய்யலாம்.

மனத்தை ஒருமைப்படுத்தி இயம, நியமாதிகளைக் கைக் கொண்டு நாடோறும் பயிலவேண்டும். மூச்சுப்பயிற்சி செய் பவர் அரிசி, கோதுமை, நெய், பால், தயிர், மோர் இவற்றை உண்ணலாம். அரைவயிறு அன்னமும், கால்வயிறு நீரும்

உண்டு மீதிக் கால்வயிறு வெறுமையாக இருக்கவேண்டும். புளிப்பு, இனிப்பு, உவர்ப்பு, கார்ப்புப் பொருள்களைக் கூடுமானவரை விலக்குவதும் மது, ஊன் நீக்குவதும் நன்று.

இல்லறத்தார், துறவறத்தார் எவராயினும், இருபாலரும் (ஆடவர், பெண்டிர்) இதனைச் செய்யலாம்.

அருணோதய முதல் 3 நாழிகை, நண்பகல், சூரியன் படுவதன் முன்னும் பின்னுமாக 2 முகூர்த்தமென்னும் 4 நாழிகை, நள்ளிரவு ஆக நாலுமுறை செய்ய வேண்டும். வேளை ஒன்றுக்கு 20 முதல் 80 பிராணாயாமம் செய்யலாம். மூச்சை வெளிவிடலையும் உள் வாங்கலையும் மெதுவாயும் நிதானமாயும் செய்ய வேண்டும்.

**பயிற்சி முறை**

இதற்குப் பத்மாசனம் ஏற்றது. துறவறத்தாருக்குச் சித்தாசனம் ஏற்றது.

1. வலக்கைக் கட்டை விரலால் வல நாசித் தொளையை மூடிக்கொண்டு இடத் தொளையால் மெதுவாகக் காற்றை உள்ளே இழுக்க (பூரிக்க) வேண்டும்.

2. பிறகு இட நாசித் தொளையையும் மோதிரவிரல், சிறு விரல்களால் மூடிக்கொண்டு மூச்சை அப்படியே அடக்க (கும்பகம் செய்ய) வேண்டும். முடிந்தவரை அடக்கிக்கொண்டால் போதுமானது, சிரமப்பட்டு அடக்கவேண்டியதில்லை.

3. அடுத்து வலக்கைக் கட்டைவிரலை எடுத்துவிட்டு மிக மிக மெதுவாக வல நாசித் தொளை வழியாகக் காற்றை விட (இரேசிக்க) வேண்டும்.

4. இனி முன்போலவே வல மூக்குத் தொளை வழியாகக் காற்றைப் பூரகம் செய்து,

5. சற்று நேரம் கும்பித்து,

6. இட நாசித் தொளை வழியாக இரேசிக்க வேண்டும்.

இந்த ஆறு தொழிலும் ஒரு பிராணாயாமம் ஆகும்.

இது போல் தொடர்ந்து செய்யவேண்டும். பூரகம் 1, கும்பகம் 4, இரேசகம் 2 என்னும் கால விகிதப்படி இருக்க

வேண்டும். தொடக்கத்தில் குறைவான பயிற்சி செய்து நாளா வட்டத்தில் பெருக்கிக்கொண்டே போகலாம்.

வெளிவிடும் மூச்சு 'அம்' (ஹம்) என்னும் ஒலியுட னும் உள் வாங்கும் மூச்சு 'சம்' (ஸம்) என்னும் ஓசையுடனும் இருக்கும் என்பர். இதை நுணுக்கமாய் அறிய வேண்டும். பிராணாயாமம்பற்றிய இன்னும் விரிவான பல செய்திகள் ஞான. யோக, சரநூல்களில் கூறப்பெற்றுள்ளன. இந் நூல்கள் திருமூலர் திருமந்திரம், திருமூலர் ஞானம், ஞானசர நூல், திருவள்ளுவர் ஞானம், காகபுசண்டர் ஞானக்குரல், சிவவாக்கியர் ஞானம் முதலியன.

# 4. யோகம்

யோகம் என்பது ஐம்பொறி புலன்களால், மனம் சிதறிப் போகாவண்ணம் அதை ஒருமைப்படுத்தி, பேரின்பமொன்றையே மனத்திலுன்னி அகத் தொழின் மாத்திரையான், ஆகம விதிப்படி ஒழுகுவது. இஃது எண் வகையாகும். அவை **இயமம்**, **நியமம்**, **ஆதனம்**, **பிராணாயாமம்**, **பிரத்தியாகாரம்**, **தாரணை**, **தியானம்**, **சமாதி** என்பன. இவற்றைத் தீதகற்றல், நன்றாற்றல். இருக்கை, வளிநிலை அல்லது உயிர்ப்பு, தொகை நிலை, பொறைநிலை, நினைதல். நொசிப்பு என்றும், இவை அனைத்தையும் அட்டாங்க யோகம் அல்லது அகத்தவம் எட்டு என்றும் கூறுவர். இதனை,

**'இயம நியமமே எண்ணிலா ஆதனம்**
**நயமுறு பிராணா யாமம்பிரத் தியாகாரஞ்**
**சயமிகு தாரணை தியானஞ் சமாதி**
**அயமுறும் அட்டாங்க மாவது மாமே.'**

என்னும் தமிழ் மூவாயிரச் செய்யுளால் அறியலாம்.

**யோகம் – விளக்கம்**

இயமம் — மனத்தூய்மை; நியமம் — செயல்தூய்மை; ஆசனம் — இருக்கை; பிராணாயாமம்—மூச்சுப் பயிற்சி; பிரத்தியாகாரம் — பொறி புலனடக்கம்; தாரணை—மனத்தை ஒருவழி நிறுத்தல்; தியானம் — இடையறாச் சிந்தனை; சமாதி — மனத்தைப் பரம்பொருளுடன் ஒன்றி நிறுத்தல்.

இவற்றுள் ஆதனம் என்பது ஆசனம் என்றும், யோகாசனம் என்றும் வழங்கப்பெறுகின்ற யோக முறைக்கான உடற் பயிற்சி முறைகளாம். சித்தர்கள் தங்கள் குறிக்கோளான சித்தி எய்தும்பொருட்டு இம் முறைகளைக் கையாண்டு தமது உடலைப் பலப்படுத்திப் பேரறிவு விளங்கப் பெற்றனர். பிராணாயாமம் போன்ற ஆதனமும் கற்பமாகும். இவை தவிர ஏனையவை கற்பத்துள் அதிமுக்கியப் பொருளாதலும், அவை நம் போன்றவர்கட்கு எளிதில் ஒழுகக்கூடாமையாலும் அவை கற்பமென்னும் பிரிவின்கீழ்க் கூறாது விடப்பட்டன.

பிராணாயாமம், ஆதனம், குண்டலினியை எழுப்பல், மதியமுது உண்ணல் ஆகிய அனைத்தும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு உடையன. இவற்றுள் மதியமுது என்பது தீர்த்தம், சிவக்குடிலை நீர் என்னும் பெயர்களாலும் அழைக்கப் படும் யோகமுப்புவாம். இதுவும் கற்பமே. ஆதனம், பிராணா யாமம் ஆகிய யோகம் செய்வதால் மதியமுது உடலில் ஊறிக் காயத்தைக் கற்பமாக்கும்.

### ஆதனம் (யோகாசனம்)

சிவயோகம் என்னும் இராசயோகம் பண்ணுங்காலத்துச் சித்தாசனம் என்னும் ஆசனமும், இல்லறத்தாருக்கு அவர்கள் வாயுதாரணை என்ற உயிர்ப்புப் பண்ணுங்காலத்து பதுமா சனமும் சிறந்ததென்று 'அட்டயோக' நூல்கள் கூறுகின்றன. பொதுவாக, ஆசனங்கள் என்ற இருக்கை யாவும் உடற்பயிற்சி போன்றவைகளே. எனினும், இவை பொதுவான உடற்பயிற்சி களினின்றும் செயலிலும் நிலையிலும் வேறுபடுகின்றன. எவ்வாறெனில், பொது உடற்பயிற்சிகள் உடலின் மேற்புற முள்ள உடல் தாதுக்களையே வன்மைப்படுத்துகின்றன. ஆனால், யோக இருக்கைகள் உடலின் உள் உறுப்புகளை வன்மைப்படுத்துகின்றன.

சித்தர்கள் சில இருக்கைகளில் இருந்து வளிநிலை யறிந்து குண்டலினி சக்தியை எழுப்பி மதியமுதுண்டு பேரின்பம் என்னும் சிவநிலையைக் கண்டனர். இவர்கள் உடலும் மெய்ப் பொருளாயிற்று. இதனாலேயே சித்தர்கள் கடவுளைக் கண்டு தெளிந்தவர் என்றும் பக்தர்கள் கடவுளைக் காண முயல்பவர் என்றும் பேரறிஞர் கூறிப் போந்தார்.

ஆசனங்கள் தொகையால் எண்ணற்றன. இதனைத் திருமூலர் 'பல் ஆதனம்', 'எண்ணிலா ஆதனம்' என்னும்

சொற்றொடர்களால் குறிப்பதால் அறியலாம். எனினும், இவற்றுள் சிலவே பழக்கத்தில் இருந்து வந்துள்ளன. திருமூலர் தமிழ் மூவாயிரத்தில் பதுமாசனம், பத்திராசனம், குக்குடாசனம், சிங்காசனம், சொத்திராசனம், வீராசனம், கோமுகாசனம் என்ற சில மட்டுமே சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள் பத்திரம், வீரம், பதுமம், கோமுகம், குக்குடம் ஆகிய ஐந்தும் ஞான சாதனைக்குரிய ஆசனங்களாகும்.

யோகாசனப் பயிற்சியினால் உடல் உள்ளுறுப்புகள் பலமடைகின்றன. உடலில் வீணான சதைப் பிடிப்புகள் ஏற்படுவதில்லை. உடல் அழகுடன் வளர்ந்து நோயின்றியும் உரத்துடனும் இருக்கும். யோகாசனம் உடலின் எல்லாப் பகுதிகட்கும் குருதிச்சுற்றோட்டத்தை உண்டாக்கும். சுறுசுறுப்பு, புத்தித் தெளிவு, நினைவாற்றல் முதலானவை உண்டாகும். யோகாசனம் செய்ய இதுபற்றி நன்றாய் அறிந்த ஆசிரியர் துணை வேண்டும். எவரது துணையுமின்றிப் பிசகாகப் பழக்கம் பண்ணினால் பல கேடுகள் உண்டாகக்கூடும்.

வயிறு நிறைய உண்டபின் இருக்கைப் பயிற்சி செய்தலாகாது. உணவுண்டு சில மணிநேரம் கழித்தே இதைச் செய்ய வேண்டும். இதுபோலவே மலம், சிறுநீர் ஆகியவையும் உடலில் தேங்கி இருத்தலாகாது. இவற்றை வெளியாக்கிய பின்னரே பயிற்சி செய்யவேண்டும். பயிற்சி செய்யும் இடம் நல்ல காற்றோட்டமுள்ளதாய் இருக்கவேண்டும். பயிற்சியின் போது வாயினால் மூச்சுவிடல் அல்லது வாங்கல் கூடாது. மூக்கினாலேயே சுவாசிக்க வேண்டும்.

யோகாசனப் பயிற்சி செய்து வந்த பலர் நரை, திரை, மூப்பு, பிணி இவையின்றி வாழ்வதைக் காணலாம். இவை உடலை நன்னிலையில் வைத்திருப்பது மட்டுமன்றிப் பிணிகள் உடலிற் சேராதும் தடுக்கின்றன. பிணி வந்திருந்தாலும் அவற்றை நீக்குகின்றன.

மேலும் இப் பயிற்சிகளால் மனம் தூய்மையாகி ஒருமைப்பட்டு எழுச்சியுண்டாகும்.

யோகாசனம் செய்ய மான்தோல், புலித்தோல், சித்திரக் கம்பளம், வெண்துகில், தருப்பை ஆகிய ஆசனங்கள் சிறந்தவை. மேடு பள்ளமில்லாத சமதளத்தில் யோகாசனம் செய்ய வேண்டும். கூனுதல், குறுகுதல் தவிர்த்து நேராய் இருக்க

வேண்டும். பயிற்சிகள் மெதுவாயும் நிதானமாயும் செய்யப் பட வேண்டும். பொதுவாக வழக்கிலுள்ள சில ஆசனங்களை இனிக் காண்போம்.

**1. பதுமாசனம் :** சமதளத்தில் உட்கார்ந்து வலப்பாதத் தை இடத்தொடைமீதும் இடப்பாதத்தை வலத்தொடைமீதும் ஏற்றி, இரண்டு கைகளையும் கோத்து மலர்ந்திருக்குமாறு இருத்தல். தாமரைபோன்று இருத்தலின் இது பதுமாசனம் எனப்பட்டது. பதுமாசனம் செரிமான சக்தி உண்டாக்கும்; உடல் நலமும் மனமகிழ்ச்சியும் ஏற்படுத்தும் ; கீழ்வாயு நோய் தீரும். முக்குற்றம் (வாத பித்த கபம்) தன்னிலைப்படும். நரம்புகள் வலுவடையும்.

**2. சித்தாசனம் :** இது பதுமாசனம் போன்றதே. ஆனால், இவ் விருக்கையில் குதிகால்கள் தொடைமீது ஏறா ஒன்றன் மேலொன்றாய் மூலாதாரத்தை அழுத்தும்படி குய்யத்துக்கு மேலும் கீழுமாய் இருக்கும். இவ்வாறிருப்பதால் சின்னாள் களில் காம இச்சை குறையும் என்றும் குறிவளர்ச்சி குன்றிப் போம் என்றும் கூறப்படுகிறது. இதனாலேயே துறவிகட்கு இந்த இருக்கை சிறந்ததாகக் கொள்ளப்படுகிறது. சித்தாசனத் தில் முத்திரையுடன் கூடிய கைகளை முழங்கால் மடிப்பின்மேல் வைத்திருப்பர்.

**3. பத்திராசனம் :** உட்கார்ந்த நிலையில் இடக்காலைக் கீழாக அதன்மேல் வலக்கால் வரத்தக்கதாய், பாதங்கள் இரண்டும் தொடைகட்குக் கீழாகப் பின்னால் பிட்டத்துக்குக் கீழும் முழங்கால்கள் இரண்டும் ஒன்றன் மேலொன்றும் இருக்கத்தக்கதாய்க் கைகளிரண்டையும் வல முழங்கால் மடிப் பினமேல் வைத்தபடி இருத்தல் பத்திராசனம் எனப்படும்.

**4. குக்குடாசனம் :** குக்குடம் என்பது கோழி. இவ் வாசனம் கோழியின் அமைப்புடையது என்று தேறலாம். கால்களைத் தொடைகள்மீது வில்போல் ஏற்றி முழங்கையில் உடலைத் தாங்கி இருப்பது.

**5. மயூராசனம் :** மயூரம் என்றால் மயில். கையை ஊன்றி முழங்கையில் மடித்து மேற்கை படுக்கைக்கோட்டில் நிறுதிட்டமாய் அதனோடு உடலும் நேராய் இருக்க நிற்பது.

இதனால் வயிற்றுப் பிணிகள் தீரும். செரிமான உறுப்பு கட்கு அதிகக் குருதிபாயச் செய்யும்.

6. **சிங்காசனம் :** உட்கார்ந்தபடி முழந்தாள்களில் கைகளை நீட்டி, வாயை நேராக வைத்துக் கண்களிரண்டினாலும் மூக்கின் வேரை நோக்கி இருத்தல்.

7. **புயங்காசனம் :** புயங்கம் என்றால் பாம்பு. கால்களை நீட்டிக் குப்புறப் படுத்துக் கைகளையூன்றித் தலை, மார்பு, வயிற்றின் மேல்பகுதிவரை மேலே தூக்கி வைத்திருத்தல்.

இவ் விருக்கையால் முதுகந்தண்டுக்குப் பயிற்சி கிடைக்கும்.

8. **சலபாசனம் :** சலபம் என்றால் வெட்டுக்கிளி. சமதளத்தில் குப்புறப் படுத்து, உள்ளங்கை மேல்நோக்கியும், கைகள் உடலோடு நெடுக்கிலுமாக வைத்து, முகவாய் தரையில்பட, கால், தொடைகளை மேலே தூக்கி வைத்திருத்தல்.

இதனால் மலச்சிக்கல் தீரும். வயிற்றுப் பேசிகளுக்கும் வயிற்று உள் உறுப்புகட்கும் பயிற்சி தரும்.

9. **தனுராசனம் :** தனுர் என்றால் வில். குப்புறப் படுத்துக் கால்களிரண்டையும் மேலே தூக்கி, கைகளைப் பின் மேலாய்க் கொணர்ந்து கால்களைப்பற்றி முன்னாக வளைத்து நிற்பது.

இதனால் கீல் பிணிகள் தீரும்; பசியுண்டாகும்.

10. **சிரசாசனம்:** தலை கீழாகவும், கால் மேலாகவும் நிற்றல். தலையின் கீழாகக் கைகளை மடித்துத் தலைக்கு அணைபோல வைத்திருக்கவேண்டும். இதனால் மூளைக்கு அதிகக் குருதி பாய்ந்து மூளை பலப்படும். நரம்பு மண்டலம் தூண்டப்படும். இதைப் பெண்கள் சூல் கொண்டபோதும் தீட்டான காலத்தும் செய்யக்கூடாது.

11. **சர்வாங்காசனம் :** மல்லாந்து படுத்து, கால்களை மெதுவாக ஒட்டியபடியே மேலே தூக்கிப் பின் பிட்டப் பாகத்தையும் இடுப்புப் பாகத்தையும் மேலே தூக்கிக் கைகளால் முதுகு புறத்தில் தாங்கிநிற்றல். இது நரை,திரை, மூப்பை மாற்றி இளமையுண்டாக்கும். உடலின் எல்லா உறுப்புகளும் பலப்படும். வீதன கோளங்கள் தூண்டப்படும். இதனால் பெருநோய் தீரும்.

12. **சவாசனம் :** சவம் என்றால் பிணம். மல்லாந்து படுத்துக் கால்களை நேராயும், கைகளை உடலோடு பக்கவாட்டிலும் வைத்து நேராய்ப் படுத்திருத்தல்.

இது களைப்பைப் போக்கும்; புத்துணர்ச்சி உண்டாக்கும். இவை தவிர இன்னும் பலவகையான ஆசனப் பயிற்சிகள் உண்டு. அவற்றை விரிவாய்க் கூறும் நூல்களில் அறிந்து கொள்க.

**இராச யோகம்**

சித்தர்கள் பேரின்ப வீடு என்னும் சிவபதியை இராச யோகம் செய்து பெற்றனர். இராச யோகம் செய்வதன் மூலம் உடல் கற்பமாகும். யோக சாதனைகளினால் குற்றமற்றதும் மாறுபாடற்றதுமான வாழ்க்கையை அடைய முடியும் என்று புலனாகிறது மாறுபாடு என்பது நரை, திரை, மூப்பு, பிணி இவற்றால் ஏற்படுவது.

உடலில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை என்னும் ஆறு ஆதாரங்கள் உண்டு. மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை வாசியால் எழுப்பி ஆதார வழியாக ஆக்கினைக்குக் கொண்டு செல்லப் பேரின்பம் உண்டாகும். இதுவே அமுது, மதியமுது, பூரணம், சிவபதி, வீடு என்று பல பெயர்களாலும் கூறப்படுவது. இந்த யோகமும் கற்பங்களில் ஒன்று என்பது வெளிப்படை.

யோகம் செய்ய வாசி என்னும் பிராணாயாமமும் உறு துணையாகும். வாசியினாலேயே குண்டலினி சக்தியை எழுப்ப முடியும். அதுமட்டுமன்றி மன ஒருமைப்பாடு, தக்க ஆசனம் இவையும் குண்டலினியை எழுப்பப் பெருமளவு துணையாகும்.

குண்டலினி பாம்பு போலச் சுருண்டுகிடக்கும் என்றும் இதை எழுப்புதலே இந்த யோகத்தில் முக்கியம் என்றும் எண்ணப்படுகிறது. குண்டலினியை எழுப்ப ஆசனங்களோடு முத்திரையையும் செவ்வையாக அனுசரிக்கவேண்டும் என்பர். குண்டலினி சக்தியை எவன் அறிகிறானோ அவன் யோக வித்துவான் என்றும், யோகிகள் தூங்கும் குண்டலினியை விழிக்கச் செய்கிறவர்கள் என்றும் அட்டயோக நூல்கள் கூறும்.

குதத்திற்கு இரண்டங்குலம் மேலும் குய்யத்திற்கு இரண்டங்குலம் கீழுமாக உடலின் மத்தியில் மூலாதாரத்தில் குண்டலினி இருக்கும்.

சித்தாசனமும் முத்திரையும் அனுட்டித்து மனத்தை ஒருமைப்படுத்தி இருந்து வாசியைச் சரியாகக் கடைப்பிடித்துப்

பயிற்சி செய்ய வெப்பமுண்டாகி, இதனால் தகிப்புண்டாகிக் குண்டலினி விழிப்படைந்து தடியால் அடிபட்ட சர்ப்பம் போல நிமிருகிறது. இச் சக்தியை ஆதாரங்கள் வழியாக அசைத்து மேலே ஏற்றிக்கொண்டுவர அமிர்த நிலையை அடையலாம்.

அமிர்த நிலையாவது சின்கயின் மத்தியில் பரமாத்மா பொருந்தி இருப்பதால் சுழிமுனையின் மேற்பாகத்தில் சோம நீர் ஒழுகிக் கொண்டிருப்பது என்பர். இது சந்திர அமுது, மதி அமுது என்றும் சொல்லப்படும்.

**இயம நியமம்**

**மனத்தூய்மையும் செயல்தூய்மையும்**

**'மாவும் மக்களும் ஐயறி வினவே**
**மக்கள் தாமே ஆறறி வுயிரே.'**

என்கிறது தொல்காப்பியம். இதனால் ஏனைய உயிர்களை விட மக்கள் அறிவிற் கூடியவர்கள் என்று தெளிவாகிறது. எனினும், மனிதன் தனக்குள்ள அதிகப்படியான அறிவினால் நன்மை தீமைகளைப் பகுத்துணர்ந்து ஒழுக்கத்துடன் வாழும்போதுதான் சிறப்படைகிறான். நம் முன்னோர்களால் ஒழுக்கம். உயிரினும் மேம்பட்டதாக எண்ணப்பட்டது. இவ்வாறான சிறப்பான ஒழுக்கமாவது நல்மனம், நற்செயல் இவற்றால் ஏற்படுவது. இவையே இயமம், நியமம் என்று நம் சித்தர் நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. மனத்தூய்மை **இயம**மென்றும், செயல்தூய்மை **நியம**மென்றும் பொருள்படும். மனமும் செயலும் தூய்மையானால் மனிதன் கவலை, துன்பம் ஆகியவற்றால் தாக்கப்படமாட்டான். இதனால் அவன் நரை, திரை, மூப்பு, பிணி ஆகியவைகட்கு அப்பாற்பட்டு வாழ முடியும் என்பது சித்தர்கள் கருத்து. மனத்தின் தொழில் நினைத்தல், நினைத்தலால் செய்யப்படுவது செயல். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று மிக்க தொடர்புடையன.

இயம நியமமாவது என்னெனக் கூறப்போந்த திருமூல நாயனார் தம் தமிழ் மூவாயிரத்தில்,

**'கொல்லான்பொய் கூறான் களவிலான் எண்குணன்**
**நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய**
**வவ்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்**
**இல்லான் இயமத் திடையில்நின் றானே.'**

'தூய்மை அருளூண் சுருக்கம் பொறைசெவ்வை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமி யீரைந்து நியமத்த னாமே'

என்று கூறுகின்றார்.

நல்ல செயல்களைச் செய்வதும் நல்ல மனத்தினைக் கொண்டிருத்தலும் கற்பமாகும். தீச்செயலைப் புரிந்த ஒருவன் தன் மனத்திலுண்டாகும் எண்ணங்களாலும் கவலைகளாலும் களைப்படைந்து, சோர்வுற்றுத் துன்புறுவான். கொடிய செயல்களைப் புரிந்தால் மனம் அவற்றை மறப்பதில்லை. இதைத் 'தன்நெஞ்சே தன்னைச் சுடும்', என்னும் முதுமொழி யால் அறியலாம். தீச்செயல் புரிவதால் மனப் போராட்டம் உண்டாகி, மனவேதனை யுண்டாகும். அது கவலையாகும். கவலையால் நரையுண்டாம்; நரையால் மூப்புண்டாம்; இத னால் பிணியுமுண்டாகி விரைவில் மரணத்தை உண்டாக்கும். நல்ல செயல்கள் செய்துவந்தால் அஃது ஒருவனைப் பன் னெடுங்காலம் நரை, திரை, மூப்பு, பிணியின்றி வாழச் செய்யும். அவனுடைய சாவைத் தடுக்கும் ஆற்றலும் அதற் குண்டு.

நியமந் தவறித் தீச்செயல் செய்வதால் இருவகையான தீங்குகள் ஏற்படும். ஒன்று, அச் செயலால் உடலுக்கு உண் டாம் கேடு ; மற்றது மனத்துக்கு உண்டாம் கேடு. மனத்துக் குண்டாம் கேடு இயமத்துட் சாரும். உடலுக்கும் உண்டாம் கேட்டினைக் கீழ்வருவனவற்றால் தெரிந்துகொள்ளலாம். ஆகார நிதி நியதிகளும் நாள் ஒழுக்கமும் தவறின் அது நோய் வாய்ப்படுத்தும். குறைவான உணவு, மிகுந்த உணவு, காலந் தப்பிய உணவு இவை மாறுபாடுள்ள உணவு எனப்படும். மாறுபாடுள்ள உணவினால் உடல் பல பிணிகளுக்கு உட் படும். இதுபோலவே பல் துலக்கல், குளித்தல் போன்ற நாள் ஒழுக்கங்கள் தவறினும் பிணிகளுண்டாகும். கட்குடி போன்ற தீய பழக்கங்கள் உடலைக் கேடுறச் செய்யும். காமத்தால் பொருட் செலவும் கடும் நோய்களும் உண்டாகும். சண்டை முதலியவற்றால் உடல் நைந்து வருத்தமுறும். இவ்வாறான நியமந் தவறிய எல்லாச் செயல்களும் பெருந்தீங்கை விளை வித்து வாழ்நாள்களைக் குறைக்கும். இவை உடலையும் மனத் தையும் பாதிக்கச்செய்யும் தன்மையுடையவை. இதனாலேயே ஒழுக்கம் நம் முன்னோர்களால் கற்பமாக எண்ணப்பட்டது.

ஒழுக்கமான செயல்களைச்செய்து வருபவனுக்கு உடலாலோ அன்றி மனத்தாலோ கேடு விளைவதில்லை. அவன் பன்னெடுங்காலம் வாழ்வான்.

இனி இயமமான நன்மனம்பற்றிக் கூறுமிடத்து மனம் என்றால் என்ன என்று முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். மனம் உள்ளம், அகம், நெஞ்சு என்னும் வேறு சொற்களாலும் தமிழ் நூல்களில் கூறப்படுகிறது. தத்துவம் தொண்ணூற்றாறில் அந்தக்கரணம் நான்கு. அவை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன. இவற்றிற்குத் துணையாய் நிற்பவை அறிவு, பொறி, புலன், தொழிற் கருவிகள் ஆகியவையாம். இவை அறிதல், செய்தல் ஆகியவற்றுக்கு அடிப்படை. மனத்தில் எண்ணங்கள் தோன்றுகின்றன; புத்தி அவ் வெண்ணங்களை ஆராயும் ; சித்தம் முடிவெடுக்கும் ; அகங்காரம் அதை நிலைப்படுத்தும். இப்படிப் பிரித்துக் கூறினும் இந் நான்கு கருவிகளும் எப்போதும் சேர்ந்தே தொழில் செய்கின்றன. மனம் ஒருநிலையில் இருப்பதில்லை. மனத்தை அடக்கிவிட்டால் நன்மை பயக்கும். மனத்தை ஒருமைப்படுத்தும் எண்ணத்துடனேயே நம் நாட்டில் இறை வழிபாடு, தவம் முதலானவை செய்யப்பட்டன.

ஒவ்வோர் உடலுறுப்புடனும் இணைக்கப்பட்டிருக்கும் நரம்பு உணர்ச்சிகளை மனம் சார்ந்து நிற்கிறது. அதனால்தான் அளவுக்கு மீறிய கோபம் ஏற்படும்போது கண் சிவந்து உடல் சூடேறுகிறது. கோபம் தணிந்ததும் களைப்பும் சோர்வும் உண்டாகின்றன. மனத்தில் மாறுதல் உண்டாகிறபோது உடலிலும் மாறுதல் உண்டாகிறது. அவ்வாறே உடலில் உண்டாகும் மாறுதல் மனத்தையும் மாற்றியமைக்கிறது. உள்ளம் தளர்வுறும்போது உடலும் தளர்வுறுகிறது. ஒன்று வலிவு பெறும்போது மற்றதும் வலிவு பெறுகிறது. இதனால் உள்ளத்துக்கும் உடலுக்கும் உள்ள நெருக்கமான பிணிப்பை நாம் தெரிந்துகொள்ளலாம். மனம் தூய்மையானால் அது உடலுக்குக் கேடு விளைவிப்பதில்லை; நன்மையுண்டாக்கும். உடலை நல்ல நிலையில் வைத்திருக்க மனத்தூய்மை வேண்டும். 'மனநலம் மன்னுயிர்க் காக்கம்' என்று வள்ளுவர் இயமத்தின் சிறப்பைக் கூறுகிறார். மேலும், மனத்தால் உண்டாகும் காமம், வெகுளி, மயக்கம், அவா, துன்பம் ஆகியவை நீங்கப்பெறின் உடலைப் பிணி சேராது. இதை,

**'காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**
**நாமங் கெடக்கெடும் நோய்'**

என்று வள்ளுவர் கூறுகிறார்.

**'மனமது செம்மை யானால்**
**மந்திரம் செபிக்க வேண்டாம்'**

என்று ஆன்றோர் கூறுவர்.

மனம் தூய்மையானால் நரை, திரை, மூப்பு, பிணியின்றிப் பன்னெடுங்காலம் இருக்கமுடியும் என்று இயமத்தின் சிறப்பை உணரமுடிகிறது.

# 5. பிற தமிழ் மருத்துவ இலக்கியங்கள்

## தேரையருர் வரலாறும்

தேரையர் பழந்தமிழ்நாட்டின் ஒரு பகுதியாய், 'தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்று ஔவை மூதாட்டி சுட்டிக்கூறும் சிறப்புடைய தொண்டை நாட்டிலே சற்றேறக் குறைய ஐந்நூறு ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்திருந்தவராவர் என்பது மருத்துவ அறிஞர் கருத்தாகும். இவர்தம் ஊர் பாலாற்றின் வடகரையிலுள்ள திருமலைச்சேரி என்பதாம். தந்தையார் நம்பிபூபதி என்னும் பெயரினராவார்.

தேரையர் தம் இளமையிலேயே முத்தமிழும், சோதிடமும், பிற பல கலைகளும், பல மொழிகளும் கற்றுத் தேர்ந்து தொண்டை நாட்டு மன்னரிடம் பரிசிலும் வரிசைகளும் பெற்றுப் புகழ்பெற்று வாழ்ந்தார்.

மேலும், கூரத்தில் தருமசவுமியர் என்னும் புத்த ஆசிரியரிடம் மருத்துவம் பயின்று சிறந்த மருத்துவராகவும் விளங்கினார். இவர் செய்தருளிய நூல்கள்:

சிகாமணி வெண்பா
நிகண்டு
சேகரப்பா
காப்பியம்
தரு

நாடகம்
அந்தாதி
மிகாவண்ணம்
நாண்மாலை
யமகவெண்பா
எதுகைப்பா
கரிசல்
நீர்க்குறி
நீர்நெய்க்குறி
தைலவருக்கச் சுருக்கம்
தினக்கிரமாலங்காரம்
சிகிச்சைக் கிரமம்
நோய் மருந்தளவை
பிரதானகுண மூலித்தரு
வைத்தியப்பள்ளு நாடகம்
மருத்துப் பாரதம்

என இருபத்தொன்றென்பர். ஆயின்,

**'சிகாமணி வெண்பா நிகண்டு சேகரப்பா**
**தேரையர் காப்பியந்தரு நாடக மந்தாதி**
**மிகாவண்ணம் நாண்மாலை யமக வெண்பா**
**விளங்கெதுகைப் பாயிவையெல் லோரு மெச்சு**
**மகாமகிமைக் கரிசலெனு முறையீ ராறும்**
**வேதாந்த சித்தாந்த வைத்திய வாத**
**முகாதியினு மசையாத விரிவுள் வேத**
**முத்தமுமா விளங்குமிது சத்தியந் தானே'**

என்னும் செய்யுள் பன்னிரண்டு நூல்களையே விளக்குகின்றது. இவர் செய்த நூல்களெல்லாம் ஒருங்கே ஒருவர்பாற் கிடைக்காமையானும் எல்லாம் அச்சில் வாராமையானும் உண்மை உணர்தற்கிடமில்லை.

இவர் செய்த நூல்களில் மருத்துப் பாரதமே ஈற்றதென்றும் இதன் பின்னர் ஒரு நூலும் செய்யவில்லை என்றும் தெரிகிறது.

இவையன்றித் தேரையர் 100 என்றும், 500 என்றும், 1001 என்றும், 1500 என்றும் சில நூல்கள் வெளிவந்திருக்கின்றன. அவற்றின் செய்யுள் நடை, சொல்நோக்கு, பொருள்நோக்கு முதலியவை இவர் செய்யுள்களுக்கு ஒவ்வாமையால் அவை இவரால் இயற்றப்பட்டன அல்ல என்பர்.

இந் நூலாசிரியர் அறநூல்கள், காப்பியங்கள்,புராணங்கள், இதிகாசங்கள், மறைகள், ஆகமங்கள், கணித நூல்கள், சோதிட நூல்கள், இலக்கண நூல்கள் ஆகிய எல்லா நூல் களிலும் நன்கு பயின்று தேர்ச்சி பெற்றுள்ளார் என்பதும், பழ மொழிப் பாகுபாடு, சந்தச் செய்யுள் பாடுதல் இவைகளில் வல்லமை பெற்றிருந்தார் என்பதும் இவர்தம் நூல்களில் ஆங் காங்கே கூறும் ஆட்சிகளாலும், மேற்கோள்களாலும், சொல் நயம், பொருள் நயங்களாலும், அணிவகைகளாலும், எடுத் தாளும் கருத்துகளாலும் விளங்குவதாகும்.

இத் தமிழ்ப்பெருங் கடலனார் செய்த நூல்கள் எல்லாம் பெரும் புலவர்களாலும் வியக்கக்கூடிய தன்மையிலிருப்பினும், அவற்றுள் 'மருத்துப் பாரதமே' கருதொணா வியப்பைக் கற் றார்க்கும் மற்றார்க்கும் உண்டாக்குமென்பதில் ஒருசிறிதும் ஐயப்பாடின்று.

## (அ) தேரையர் யமகம்

### அவையடக்கம்

**'முத்தமிட்டு றைக்குமன்னர் மூடனென்வாய்ச் சொற்கொளல்சேய்**
**முத்தமிட்டு றைக்குமிலை மொய்கொளல்போன் - முத்தமிட்டுச்**
**சங்கமுற முன்புசிறார் தாங்களிக்கக் காட்டேரற்**
**சங்கமுற முன்னவர்போற் றான்.' (1)**

(சொற்பொருள்) : முத்தமிழ்—இயல் இசை நாடகத்தினது; துறைக்கு—பிரபந்தத் திராவிடத்துக்கு; மன்னர்—கவிராசரான புலவர்கள்; மூடன்—முட்டாளான; என்—என்னுடைய; வாய்—வாயினாலே பேசுகிற; சொல்—பேச்சை; கொளல்—அங்கீகாரம் பண்ணிக் கொள்ளுகிறதெப்படி யென்றால்; சேய்—குழந்தைப் பிள்ளையினுடைய வாயை; முத்தமிட்டு—தாங்கள் முன்னே முத்திகொடுத்துப் பிறகு அந்தக் குழந்தைப் பிள்ளையினது வாயில்; உறைக்கும்—எச்சிலிலேயூறியிருக்கப்பட்டதான; இலை—வெற்றிலையை; மொய் — (தாயானவள்) உடனே; கொளல்—வாயிலே வாங்கிக்கொள்ளுதல்; போல்—போலவும்; முத்து—முத்துகளை; அம்—அழகாக; இட்டு—பெற்றுவைத்த; சங்கம்—சங்குகள்; உற—உண்டாயிருக்க; முன்பு—எதிரிலே; சிறார்—பிள்ளைகளுக்கு; தாம்—தங்களிலே; களிக்க—மகிழ்ச்சி யுண்டாக்கத் தக்கதாகப் பதிலுக்கு; காட்டு—காண்பிக்கும்; ஏரல்—கிளிஞ்சிலினுடைய; சங்கம்—கூட்டத்தினது; முறம்—

முறங்களாக மிகவும்; முன்—நினைக்கப்பட்ட; அவர்—அந்த மனிதரைப், போலவும்—போன்றும்; தான்—மெய்யென்று.

**வாத குணம்**

**'பொற்றா மரையான் புனைமெய் யரண்காக்கும்**
**பொற்றா மரையான் புகல்வதென்னே—பொற்றாம்**
**வளவினிலை யாக்குரம்பை மன்னானென மன்ன**
**வளவினிலை யாக்கும் வளி.'** **(2)**

(சொ-ள்): பொன்—சொர்ணத்தினது மயம்பெற்ற; தாமரையான்—கமலாசனத்தையுடைய பிரமதேவன்; புனை—உண்டு பண்ணிய; மெய் — சரீரமான; அரண் — கோட்டையை; காக்கும்—ஆளப்பட்ட; பொன் — அழகிய; தாமரை — மாலையை யுடைய வர்க்கத்தை; யான்—நான்; புகல்வது—சொல்லவேண்டியது; என்னே—என்னத்துக்காக; பொற்றாம்—ஒன்பது துளைகளுடனேகூடிய; வளவின்—வீட்டினுடைய; நிலையா—அநித்தியமான; குரம்பை—குடிசைக்கு; மன்னன்—அரசன்; என—என்று சொல்லத்தக்கதாய்; மன்—நிலைபெற்ற; அ—அந்த; அளவினில்—பிரமாணத்திலே; ஐ—அநுமானத்தை; ஆக்கும்—உண்டுபண்ணப்பட்ட; வளி—வாதத்தினது குணம்.

**நாடிப் பரீட்சை**

**'அன்ன மயில்குயில்மா வாண்டலையூ ரோதிபுளி**
**அன்ன மயில்குயில்மா வாண்டலையாய்—அன்னமயில்**
**வித்தகரை யாவாயுள் வேதியரா மேனையர்செய்**
**வித்தகரை யாவரிது வீண்.'** **(3)**

(சொ-ள்): அன்னம்—அன்னப் பறவையைப் போலவும்; மயில்—மயில் பறவையைப் போலவும்; குயில்—குயில் பறவையைப் போலவும்; மா—வண்டு போலவும்; ஆண்டலை—கோழியைப் போலவும்; ஊர்—எறும்பைப் போலவும்; ஓதி—ஓணானைப் போலவும்; புள்—கருடப் பறவையைப் போலவும், ஈ—ஈயினது பேதமாகிய ஒரு சாதிப் பறவையைப் போலவும் (ஆகிய இந்த ஒன்பது வகையும் ஒவ்வொரு வகைக்கு மூன்றாக வாதத்திற்கும், பித்தத்திற்கும், சேட்பத்திற்கும் வரிசையாய்க் கிரமாலங்காரமாகப் பார்த்தால் ஒன்பதும் சரிப்படும். அப்படிக்குப் பார்க்குமிடத்திலே; வாதத்திற்கு அன்னம், மயில், குயிலும்; பித்தத்திற்கு வண்டு, கோழி, எறும்பும்; சேட்பத்திற்கு ஓணான், கருடன், ஈயும் வரிசைக் கிரமமாகப் பார்த்துக்கொள்வது. பின்னும் மேலே கூறிய) அன்னம் — உண்ணப்பட்ட சோற்றை;

அயில்—புசிக்கிறதினாலே யதனுடைய ரசங்கூடிக் கொழுப்பை வளர்க்க அதனாலே; சூயில் - அது உண்டுபண்ணிய; மா—பெரிதான கொழுப்பினாலது செய்யும் மயக்கத்தால்; ஆண்டு—அந்த இடத்திலே (அந்த மயக்க நிமித்தியம்); அலையாய்—மனம் தத்தளிக்கமாட்டாய், அன்—அப்பேர்ப்பட்ட, நம்—நம்முடைய அயில்—கூர்மையான புத்தி கோசரத்தாலறியப்பட்ட; வித்தகர்—விற்பத்தியானவர்க்கே; ஐயா—நான் சொல்லுகிறேன்; ஆயுள் வேதியர் — வைத்தியர்; ஆம் — அது மெய்தான்; ஏனையர்—மற்றப் பேர்களெல்லாம்; செய்வித்த - கட்டிவைத்த; கரையர்—கரையென்று மாத்திரமா; அரிது வீண்—அருமையாய்ச் சொல்ல வேண்டிய தொன்றுமில்லை.

**அசாத்திய விலட்சணம்**

**'பாசாங் குசனார் பரிபோ னரம்போடில்**
**பாசாங் குசனார்வாய்ப் பல்லானாற்—பாசாங்கு**
**சாரமிலை தீபனமுந் தாகமும்பொ யீமநிலஞ்**
**சாரமிலை யச்சொல்காட் டம்.'** **(4)**

(சொ-ள்): பாசாங்குசனார் பரிபோல் - பெருச்சாளியெப்படி நடந்து திரியுமோ அப்படிப்போல; நரம்பு—நாடியானது; ஓடி—நடந்து; பாசு—பச்சை நிறம்;ஆம் – ஆகியிருக்கப்பட்ட; குசன்—தருப்பைப் புல்லைப் போல; நார் – நீட்சிமை, வாய்—உண்டாகிய வறட்சியுடைத்தாயிருக்குமேயானால்; பல்லானால்—பல்லுங்கூட வறண்டு தருப்பைப் புல்லைப்போலாயிருக்குமேயானால்; பாசாங்கு – அவனசைவாகிய சனதாக நித்திரை முதலியவை அவனுக்கு வேண்டியதாகப் பேசுகிறதெல்லாம்; பாசாங்கு – மெய்யல்ல பொய்யே; சாரமில்லை – சத்தியமல்ல அசாத்தியமாய்; தீபனமும் – பசி முகமென்று சொல்லுகிறதும்; தாகமும் – நீர் வேட்கை யென்று சொல்லுகிறதும் இவையெல்லாம்; பொய் – (அப்பிரயோசனமே பிரயோசனமில்லை) மெய்யல்ல பொய்யாம்; ஈமம் — சுடுகாடான; நிலம் — பூமியிலே; சார் – போய்ச் சேரத்தக்க முன்னாடித்தானே; மிலைய – சாக்கிரதை பண்ணிக்கொள்வாயாகவும்; சொல் – என்று சொல்லியுத்தரவு பண்ணு; காட்டம் - விறகு கட்டை முட்டைகளை.

**போசனமுதல் குறிப்பும், சகுனமும் அறிந்து துணிதல்**

**'போசனத்தை நித்திரையைப் போகத்தை யாதரவைப்**
**போசனத்தை நேரறிந்து போற்றல்விட்டுப் – போசனத்தைக்**
**கண்டுமலை யாதி கனவு சகுனமிப்பாற்**
**கண்டுமலை யாதிபிட கா.'** **(5)**

(சொ-ள்): இன்னமொருவகைக் குறிப்புச் சகுனஞ் சொல்லுகிறார்: போசனத்தை – சாப்பாட்டையும்; நித்திரையை – தூக்கத்தையும்; யோகத்தை--சுகசவுக்கிய இன்பத்தையும்; ஆதரவை— நிலையான வுறுதித் தன்மையையும்; போசனத்தை – இவற்றையெல்லாம் நல்ல சாத்திர வயித்தியனானவன் நோயாளியைப் பார்க்கிறபோது தானே குறிப்பினாலே போஜராஜனுடைய முகத்தைப் பார்த்த பேரெல்லாரு மெப்படி சாயித்திய கவனஞ் சொல்லுவார்களோ அப்படி மகிமை யுக்தி யூகையுண்டாயிருக்க வேணுமென்கிற இலட்சணத்துடனே; நேரறிந்து – சமமாகப் பார்த்துக்கொண்டு மேலே நிராசையாய்; போற்றல் விட்டு – பண்டிதம் பார்க்கிற வேனலயை அறுதியாய் நிராகரித்துவிட்டு; போ – நோயாளியினுடைய வீட்டைவிட்டு வெளியே துணிந்து போய்விடு; சனத்தை – அங்கே நோயாளியைப் பார்த்து மயங்கிக்கொண்டிருக்கப்பட்ட அவனுடைய உறவின் முறை பந்துசனங்களையெல்லாம்; கண்டு – பார்த்து அவர்களுடனே நீயுங்கூடத்தானே மனோதைரியத்தைவிட்டு; மலையாதி – மருட்சியாய் மருண்டுபோய்விடாதே; கனவு – சொப்பனங்களிலேயும்; சகுனம் – சகுனங்களிலேயும்; இப்பாற்கண்டுமலை – முன்னே போகும்போது பின்னாலேயிருந்து தும்முகிற தும்மலை; ஆதி – இவை முதலான துர்க்குண துர்ச்சகுன உற்பாதங்களினாலேயும்; பிடகா – வயித்திய சிரேஷ்டனே! நீயறிந்து துணிவாயாக.

### வைத்தியம் பார்க்கத் திதியறிதல்

'அஞ்சுபத்து முன்னிருத்தை யாபத் திரைசதமி
அஞ்சுபத்து முன்னிருத்தை யட்டமிவி—யஞ்சுபத்து
நல்லுவா வாறு நவமி பதினொன்று
நல்லுவா வாறுபதி னால்.' (6)

(சொ-ள்): மருத்துவனானவன் மருத்துவம் பார்ப்பதற்காகத் திதிகள் சொல்கிறார் — எப்படியென்றால்: அம்—அழகிய; சுபத்து—நல்ல சவுக்கியத்துக்கு; முன்—முதற்பிரதானமாக; இருந்து—வைத்துக்கொள்ளவேண்டியது; ஐயா-என்னய்யனான வயித்தியனே நீ; பத்திரை—துதியை; சதமி – சத்தமி; அஞ்சு— பஞ்சமி; பத்து – தசமி; முன்னிருத்தை – சதுர்த்தி; அட்டமி— எட்டாந் திதியாகிய அட்டமி; வி—இவையல்லாத; அஞ்சு பத்து – பயப்படத்தக்க பொல்லாத யுக்தமான; நல்லுவா— கிருஷ்ணபட்சத்து உவாவான அமாவாசை; ஆறு—அதற்குச் சரியானதான பாட்டிமை, நவமி - ஒன்பதாவது திதியாகிய நவமி; பதினொன்று – ஏகாதசி; நல்லுவா – பருவம் (பாட்டிமை);

ஆறு—சஷ்டி; பதினால்—சதுர்த்தசி; இவை பொல்லாதன. மற்ற மீதியான திரிதியை, துவாதசி, திரையோதசி இந்த மூன்றும் மத்திமம்.

### வாரமறிதல்

**'மதியாத வன்மதித்து மத்தியென்று சுத்த**
**மதியாத வன்முதன்மை மைந்தர்—மதியாத**
**பாற்கடலை மானப் பளிங்காண் டளப்பான்சேய்**
**பாற்கடலை மானவைப்பார் பார்.'** **(7)**

(சொ-ள்): மருத்துவம் பார்க்குமிடத்திலே மருத்துவனான வன் பார்த்துக் கொள்ளவேண்டிய வாரங்களெப்படியென்றால்: மதி—சோமவாரம்; ஆதவன்—பானுவாரம் இந்த இரண்டையும் வரிசைக் கிரமமாக; மதித்து—உத்தமமாக முதலிலே சகல யோக்கியத்துக்கும் முதலாக வைத்துக் கொள்ளுகிறது. சோம வாரமொன்று மாத்திரமே; இரண்டாவது உத்தமமாக வைத்துக் காட்டப்பட்டது. புதவாரம் மாத்திரம்; மத்தியென்று—நல்லது மல்லாமல் பொல்லாததுமல்லாமல் வித்தியாசமா யிடையிலே மத்திமமென்று வைத்துக்கொள்ளப்பட்டவர்கள் மூன்று பேர். அவர்களை மேலே சொல்லுகிறோம்; சுத்த மதியாதவன் முதன்மை மைந்தர் — உத்தமத்திலே வைக்கக்கூடாதென்று தள்ளத்தக்க பொல்லாங்கையுடைய பொல்லாததென்று சொல்லப்பட்டது முன்னே நிறுத்திவைத்துப் பானுவாரமும் அவன் பிள்ளையாகிய சனிவாரமும் பிறகு மத்திமமென்று முன்னே நிறுத்தி வைத்த; மதியாத பாற்கடலை மான—கடை யாத திருப்பாற் கடலைப்போல் வெண்மையாயிருக்கப்பட்ட; பளிங்கு—சுக்கிர வாரமும்; ஆண்டளப்பான்—குருவாரமும்; சேய்—அங்காரகவாரமும்; பாற்கு—இந்த மூன்று வாரமும் மத்திம மென்று சொல்லப்பட்டபடியான பங்குக்கு; அடலை—பலத்தை; மான்—பெருமையை யுண்டாக்கத்தக்கதாய்; வைப்பார்—அதிலே உத்தம, மத்திம, அதமமென்று வைத்துக்கொள்ளுவார் கள்; பார்—எப்படி யென்றால் உத்தம மத்திமமாவது சுக்கிர வாரமும், மத்திம மத்திமமாவது குருவாரமும், அதம மத்திம மாவது அங்காரக வாரமுமாகப் பார்ப்பாயாக.

### நட்சத்திரமறிதல்

**'அச்சுவதி கேட்டை யரவுபூ ரட்டாதி**
**யச்சுவதி கேட்டை யழிக்குமே—யச்சுவதி**
**கொக்கரிமான் பண்டி கொடுநுகமோ டந்தாசி**
**கொக்கரிமான் மத்தியிருக் கும்.'** **(8)**

(சொ - ள்) : பண்டிதனானவன் பண்டிதம் பார்க்க வேண்டியதற்கான நட்சத்திரங்கள் பார்த்துக் கொள்ள வேண்டியதெப்படி யென்றால், முதல் உத்தமமான நட்சத்திரங் களிலே உத்தமமானவை அச்சுவதி - அஸ்வனி நட்சத்திரமும்; கேட்டை—கேட்டை நட்சத்திரமும்; அரவு—ஆயிலிய நட்சத் திரமும்; பூரட்டாதி—பூரட்டாதி நட்சத்திரமும் இந்த நான்கு நட்சத்திரங்களும் உத்தம உத்தமம், உத்தம மத்திமம், உத்தம அதமம், உத்தம அதமாதமம். இப்படிப் பார்த்துக்கொள்ள வேண்டியது; அச்சுவதி—பயங்கர முண்டாயிருக்கப்பட்ட; கேட்டை—பொல்லாங்கு எல்லாம்; அழிக்குமே - கெடுத்துப் போட்டு நன்மையைக் கொடுக்கும்; அச் சுவதி—அப்பாலே சொல்லப்பட்ட சுவாதி நட்சத்திரமும்; கொக்கு—மூல நட்சத் திரமும்; அரி—கார்த்திகை நட்சத்திரமும்; மான்—மிருகசீரிட நட்சத்திரமும்; பண்டி - ரோகிணி நட்சத்திரமும்; கொடுநுகம்— மக நட்சத்திரமும். ஓடம்—ரேவதி நட்சத்திரமும், தாசி—பரணி நட்சத்திரமும்; கொக்கரிமான் — திருவோண நட்சத்திரமும் இந்த ஒன்பது நட்சத்திரமும்; பொல்லாத நட்சத்திரங்களி லேயும் உத்தமப் பொல்லாதது; மத்திமப் பொல்லாதது; அதமப் பொல்லாதது இப்படிக்கு ஒன்றுக்கு மூன்று மூன்று விதமாகப் பார்த்துக் கொள்ளவேண்டியது—மற்றப் பதினாலு நட்சத்திரங் களும் மத்திமம் - பொல்லாததிலே கூடினதுமல்ல நன்மையிலே கூடினதுமல்ல ஒருவிதமாகப் பார்த்துக்கொள்ள வேண்டியது. இப்படி இந்த இருபத்தேழு நட்சத்திரங்களையும் பண்டிதன் அனுபோக சித்தியாக வழக்கத்திலேயும் நடத்தையிலேயும் பாரத்துக்கொள்ளக் கடவனாக.

### மாதங்களறிதல்

**'சித்திரவை காசி திறமானி யாடிமத்தி**
**சித்திரவை காசி சிதைக்குமே—சித்திரைவை**
**யங்கார கன்போ லனுகூல மாகவதி**
**யங்கார கன்மகிமை யை.' (9)**

(சொ - ள்) : மருத்துவன் மருத்துவம் பார்க்க வேண்டிய தற்கான மாதங்கள் பொதுவுஞ் சிறப்புமாகச் சொல்லுகிறார் எப்படியென்றால் : சித்திரை - சித்திரை மாதமும்; வைகாசி— வைகாசி மாதமும்; (இந்த இரண்டு மாதங்களும்) திறம் — உறுதி யான நன்மையைக் கொடுக்கும்; ஆனி - ஆனி மாதமும்; ஆடி— ஆடி மாதமும்; இந்த இரண்டு மாதங்களும்; மத்தி - ஒன்று மில்லை பிரயோசனப்படாது; (அப்பாலேயொழிந்த ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி

இந்த எட்டு மாதங்களும் பொல்லாதனவாம்.) சித்து – அஷ்ட அயிசுவரிய பாக்கிய யோகங்களும்) வைகு — இருக்கப்பட்ட; ஆசி – வரப்பிரசாதத்தை; சிதைக்குமே – கெடுத்து மருந்தைப் பலிக்கவொட்டாமற் கெடுத்துப்போடும்; (மிதமில்லாமல் மெய் தானது எப்படியென்றால்) சி – கடலின்; திரை – அலையுடனே; வை – பொருந்தியிருக்கப்பட்ட; அங்காரகன் – அக்கினியான தெப்படி; போல – கூட்டி அனுகூலமாகக் கலப்பாகியிருந்து கொண்டுதானே அந்தக் கடலினது நீரைத் தானே எப்படித் தகித்துப் போடுமோ அப்படி; வதி – இந்த மாதமான காலங் களுமிப்படிக் கூடத்தானே ஒப்பாயிருந்து கொண்டு; அங்க— நோயாளியினது தேகத்தில்; ஆர்—நிறைந்து; அகன் – பரந் திருக்கப்பட்ட; மகிமையை--நன்மையாகிய பலத்தையெல்லாம் கொடுக்கும்.

## லக்கினங்களறிதல்

**'மாடா டரிவை மகரமுங் கோல்விண்மீன்**
**மாடா டரிவையரி மைதுனந்தேள் - மாடாடு**
**கும்பங் கடகங் குறிப்பி லிவைமூன்றா**
**கும்பங் கடகமெனக் கொள்.'** (10)

(சொ – ள்) : பண்டிதனானவன் பண்டிதம் பார்க்கத் தொடங்குவதற்காகப் பார்த்துக்கொள்ளவேண்டிய ஓரை லக் கினங்கள் சொல்லுகிறேன். எப்படியென்றால் : மாடு – ரிஷப லக்கினமும்; ஆடு – மேஷலக்கினமும்; அரிவை – கன்னியா லக்கினமும்; மகரமும் – மகரலக்கினமும்; கோல் – துலா லக்கி னமும்; வில் — தனுசு லக்கினமும்; மீனம் – மீனலக்கினமும்; (இந்த லக்கினங்களேழையும்) மாடாடு – மத்திமமாக நடுவே வைத்துக்கொள்க. அரி – சிங்கலக்கினமும்; மைதுனம் – மிதுன லக்கினமும்; தேள் – விருச்சிக லக்கினமும்; அரிவை – சுத்தமா யிந்த மூன்று லக்கினங்களும் பொல்லாத லக்கினங்களான படியினாலே தள்ளிப் போடுக; கும்பம் – கும்பலக்கினமும்; கடகம் – கடகலக்கினமும்; வை – இந்த இரண்டு லக்கினங் களும் மெத்த நல்லது. (உத்தமமானபடியினாலே பொல்லா தனவற்றுக்கும் முதன் வைத்துக்கொள்ளென்பதாம்.) குறிப்பில் – சாடையாலே பார்த்து; இவை – இந்த; மும்மூன்று பிரிவான உத்தம, மத்திம, அதமமென்கிற; ஆகும் பங்கு – பங் கீடாயிருக்கப்பட்ட; அடு — நெருங்குகின்ற; அகமெனக் கொள் – பொல்லாங்கு மத்தி நன்மையென்றறிந்து கொள்க.

## மருத்துவம் பார்க்கிறதற்குப் பொல்லாத சகுனம்

**'பாக்க னிருளி பணிகுறுக்கு முன்னிகலன்
பாக்க னிருளி பனவனயில்—பாக்கன்
குசவன் கனவட்டன் கொல்லன் கணக்கன்
குசவன் கனவட்டன் கொள்.'** (11)

(சொ – ள்) : பண்டிதனானவன் பண்டிதம் பார்க்கிறதற்காக நோயாளியின் வீட்டுக்குப் போகும்போது சகுனம் பார்க்க வேண்டியதில் பொல்லாத சகுனங்கள் எப்படியென்றால் : பாக்கன் – பூனையும்; இருளி – பன்றியும்; பணி — பாம்பும் இந்த மூன்றும்; குறுக்கு – குறுக்கு ஓட்டமாய் வரலாகா; முன்— எதிரிலே பார்க்கத்தக்கதாய்; இகலன் – நரியும்; பாக்கன்— செம்படவனும்; இருளி – வேடச்சியும்; பனவன் – பார்ப்பானும்; அயில்பாக்கன் – போசனம் பண்ணவேண்டிய மனிதனும்; குசவன் – குயவனும்; கனவட்டன் – குதிரைக்காரனும்; கொல்லன் — கருமானும்; கணக்கன் — கணக்கப்பிள்ளையும்; குசவன்-வெட்டுக்கத்திக்காரனான விறகுகாரனும்; கனவட்டன்— தோட்டிப்பறையனும் இவர்கள் எல்லாம் வரலாகாது; கொள்— எதிரே கண்டால் மெத்தப் பொல்லாங்கு என்று அறிந்து கொள்க.

## நல்ல சகுனம்

**'மந்திரி தந்தன் மகிபாலன் கைக்கோளன்
மந்திரி தந்தன் மடையனிறை—மந்திரிநாய்
வாரணமான் முன்பால் மயில்காரி நாரைவன்னி
வாரணமான் பாறணில்நல் வாய்.'** (12)

(சொ - ள்) : பரிகாரியானவன் பரிகாரம் பார்க்கப்போகிற போது வழியிலே காணவேண்டிய நல்ல சகுனங்கள் எப்படி யென்றால் எதிரிலே முன்னாக வரவேண்டியவற்றை மிக நாடிச் சொல்லுகிறார் : மந்திரி – கள் விற்கிறவனும்; தந்தன் – விக்கி னேஸ்வர பூசைக்காரனும்; மகிபாலன் – பூமியையுழுது பயிர் செய்கின்ற வேளாண்மைக்காரனும்; கைக்கோளன் – நெசவுக் காரனும்; மந்திரி—ஆலோசனையிலே அரசனுக்குச் சமானமான அமைச்சனும்; நாய் – நாயும்; வாரணம் – யானையும்; மான்— மானும் ஆகிய இவையெல்லாம்; முன் – எதிரிலேயும்; பால்— பால் குடமும்; மயில் – மயிலும்; காரி – காக்கையும்; நாரை— நாரையும்; வன்னி – கிளிப்பிள்ளையும்; வாரணம் – கோழியும்; ஆன் - பசுமாடும்; பாறு – பருந்தும்; அணில் – அணிற்பிள்ளை

யும்; நல்வாய் — கரிக்குரிமான் பட்சியும் ஆகிய இவையெல்லாம் இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கத்திலேயும் வரவேண்டியது. இப்படி வந்தால் நல்ல சகுனம் என்றறிந்துகொண்டு போய் மருத்துவத்தைப் பார்க்கவேண்டியது.

### மருத்துவனையழைக்கவேண்டிய தன்மை

'வந்தவ னிசத்தன் மகுடன் கிரகத்தன்
வந்தவ னிசத்தன் மழன்சேயன்—வந்த
உடலன லங்கார னுன்மத்தன் யோகி
உடலனலங் காரனவி யோன்.' (13)

(சொ - ள்) : மருத்துவம் பார்க்கவேண்டியிருக்கிற பண்டித னண்டைக்கு மருத்துவம் பார்த்துக்கொள்ளத் தக்கதாக நோயாளி வரவேண்டிய நல்ல இலட்சணமெப்படியெனில் : வந்தவன் — மருத்துவனை அழைக்க வந்தவன்; நிசத்தன் — சத்திய பத்தியுடைய மெய்யனாகவும்; மகுடன் — தலையிலே தலைப்பாகை தரித்துக்கொண்டிருக்கப்பட்டவனாகவும்; கிர கத்தன் — விவாகமான பத்தினியுடனேயிருக்கப்பட்டவனாக வும்; வந்தவனிசத்தன் — பூமியின் கண்ணிலே பெருங்காற்றடிப் பது போலச் சத்தத்தையுடையவனாகவும்; மழன் — சிறுபிள்ளை வயதுடையனாகவும்; சேயன் — சிவந்த நிறத்தையுடையவ னாகவும்; வந்தவுடலன் — சரீரத்திலே கவசமான சட்டை சொக்காயிட்டுக் கொண்டிருக்கிறவனாகவும்; அலங்காரன் — பிரகாசிக்கப்பட்ட முத்துமாலை யணிந்திருக்கப்பட்டவனாக வும்; உன்மத்தன் — மதுபானம் முதலான போதைப்பொருளை உண்டதனாலே வெறியனாகவும்; யோகி — தெய்வபூசை செய்யப்பட்ட மகாவிரதனாகவும்; உடலன் — கோபக்குரோத முடையவனான யுத்த சன்னத்தனாகவும்; அலங்காரன் — இயற் கையாய்த் தானே நல்ல சுந்தரத்தையுடையவனாகவும்; அளி யோன் — தயாபரனாகவும்; இப்படிக்கெல்லாம் உள்ளவன் அழைக்க வந்தால் மருத்துவனானவன் அந்த வயித்தியத்தை நம்பிப் பார்க்கவேண்டியது.

### மருத்துவனை யழைக்கவொண்ணாத் தீது

'கண்டவரை யத்தர் கரியமுது வர்முண்டர்
கண்டவரை யத்தர் கரிதவர்—கண்டவரை
உள்ளவரா காத்தொனியோர்கதையரீ னர்துனி
யுள்ளவ ராகாத்தீ யோர்.' (14)

(சொ-ள்): பண்டிதனானவன் தன்னையழைத்துக்கொண்டு போகத்தக்கதாய் நோயாளியிடத்தேயிருந்து வந்த மனிதரைப் பொல்லாதவர்களல்லாமறப்படிக்குப் பார்த்துக்கொள்ள வேண்டிய தெப்படியென்றால் : கண்டவர் — தம்மை வந்து பார்த்தவர்கள்; ஐயத்தார் — அனுமான சிந்தையுடனே கூடினவர்களாகார்;கரிய(ர்) — கறுத்த நிறமானவர்களாகார்; முதுவர்-பெரிய வயதுடைய கிழவர்களாகார்; முண்டர் — மொட்டத் தலையாயிருக்கப்பட்டவர்களாகார்; கண்டவர் — நேத்திரமில்லாத குருடராகார்; ஐயத்தார் — பிச்சையெடுக்கிற வறுமையுண்டான பேர்களாகார்; கரிய (ர்) — சாட்சி சொல்லப்பட்ட சாட்சிக்காரராகார்; தவர் — துறவிகளான தவசிகளாகார்; கண்டவரையுள்ளவர் — மூங்கிலினுடைய வில்லைக் கையிலே பிடிக்க உண்டான பேர்களாகார்; ஆகாத்தொனியோர்—பேசுகின்ற பேச்சு மெத்த ஆழமான கிணற்றிலே பேசுகிறாப் போலே ஈனசுரமான பேச்சுப் பேசுகிற பேர்களாகார்; கதையர்—கையிலே தடிக் கோலைப் பிடித்துக்கொண்டிருக்கப்பட்ட பேர்களாகார்; ஈனர் - சண்டாளராகார் (சாதியிலே கீழான சாதியையுடைய புலையர் முதலான சண்டாளராகார்); துனியுள்ளவர் — மனத்திலே மெத்த துக்கத்தினாலே விசாரவிதனமுண்டான பேர்களாகார்; ஆகாத்தீயோர் — இவர்களெல்லாம் அழைக்க வருகிறதற்கு யோக்கியமல்லாதவர்களானபடியினாலே அறிந்து மருத்துவனானவன் தப்பித்துக்கொள்ளவேண்டியது.

### இடங்களின் நன்மை தீமையறிதல்

**'காற்படையான் பாலாழிக் கண்படையான் பச்சிமனூர்**
**காற்படையான் கோவெறிபுண் கண்ணயனோர் - காற்படையான்**
**வச்சிரத்தன் வாசநல்லாண் மாதிட மாந்துரு**
**வச்சிரத்தன் வாழ்வருமை வாழ்.'** **(14)**

(சொ - ள்) : வாத, பித்த, சேத்துமமான மூன்று நோய்களுக்கும் பொருந்திய இடமும் பொருந்தாத இடமும் பிரித்துக் கூறுகின்றார் எப்படியென்றால் : காற்படையான் — முருகன்; பாலாழிக் கண்படையான்—திருமால்; பச்சிமன் — வருணன்; ஊர்—இந்த மூன்று பேர்களுடைய வாழ்விடமான மலையைச் சேர்ந்த நாடென்னும் குறிஞ்சி நிலமும், காட்டைச் சேர்ந்த நாடென்னும் முல்லை நிலமும், கடலைச் சேர்ந்த நாடென்னும் நெய்தல் நிலமும்; காற்படையான்—முறையே கிரமப் பிரகாரம் பொல்லாத நமனைப் போலும் குரூரியான படைத்தலைவனான சேத்துமத்திற்கும்; வெறி—பித்தத்திற்கும்; கோ—அரசனான

வாதத்திற்கும் பொருந்திய தானமாகிய இடங்களை இந்த மூன்றிலேயும் இவர்கள் மூன்று பேருக்குஞ் சொந்தமான தானங்களான படியினாலே பலப்பட்டிருப்பார்கள்; புண்கள்—நோயாகிய நலியென்கிற உபத்திரவத்தை; அயன் —பிரமதேவனானவன்; ஓர்கால்—ஒரு காலத்திலும்; படையான்—உண்டுபண்ணமாட்டான்; வச்சிரத்தன் வாசம்—(அது எங்கேயென்றால்) தேவேந்திரனுடைய ஆட்சிக்குச் சொந்தமான நாட்டைச் சேர்ந்த நாடென்னும் மருத நிலத்தினிடத்திலே, மேலே சொன்ன மூன்று பேர்களுக்கும் பக்குவப்படாதவிடமானபடியினாலே நோயாளிக்கு ஒரு நோயும் வாராதென்பது குறிப்பு. நல்லாண் மாதிடமாம்—நல்ல குணத்தையுடைய வீரமாதாவாகிய கொற்றவையினுடைய இடமான வெப்பத்தைச் சேர்ந்த பாலை நிலத்தினிடத்திலே எந்த நோய்களும் அணுகாதபடியினாலே நோயாளியானவன் வாசம் பண்ணுகிறதுக்காம்; துருவச்சிரத்தன்—அப்படியந்த நிலத்திலேயிருப்பானேயானால் துருவனைப் போலச் சிரஞ்சீவியாயென்றைக்கும் அழியாமலிருப்பான்; வாழ்வருமை — அந்த நிலத்திலே வாசம் பண்ணுகிறது மிகவும் கடினமாயிருக்கும்; வாழ் – இருந்தால் நல்லது. இருக்கச் சம்மதியாயிருந்தால் இருப்பாய்.

### நல்ல மார்க்கத்துக்குண்டான நன்மை

**'வைவச் சுதனை மதியே மினிப்பாரில்**
**வைவச் சுதனைநிகர் வாழ்ந்திருப்போம் - வைவச்சு**
**யாமினிப்பா வோடறன்மூ வென்றூ ழிளவனிதை**
**யாமினிப்பா லோமவரி யேம்.'** **(16)**

(சொ - ள்) : நல்ல மார்க்கத்துக்குண்டான நன்மையாவதெப்படி யென்றால் : வைவச்சுதனை—எல்லாருயிரையும் வாங்கப்பட்ட நமனை; மதியேம்—நாங்கள் அலட்சியமாகப் பார்ப்போமே தவிர இலட்சியமாகப் பார்க்கிறதில்லை; இனி—இனிமேலைக்கு; பாரில்—பூமியினிடத்திலே; வைவு—வாழ்ந்திருப்பது எப்படியென்றால்; அச்சுதனை நிகர்—மகாவிஷ்ணுவாகிய நாராயணனைப்போல; வாழ்ந்திருப்போம்—சௌக்கியத்துடனே நிலையாக நெடுநாள் செல்வத்துடனேயிருப்போம்; வைவச்சு—ஒருவர் திட்டுகிறதற்கு மொத்தப் பயத்தைத் தானே தருவதாகிய; யாமினிப்பால்—ராத்திரிக்காலத்தில் என்றென்றைக்கும் ஒரு கடைப்பிடியான ஒரே வழியாய் நல்ல பசுவின் பாலைப் போசனமாகப் புசிப்பதும்; ஓடறன் –பெரிய நதிப் பிரவாகங்களிலே வெள்ளமாயோடப்பட்ட நல்ல தண்ணீரிலே விடாமற் குளிப்பதும், குடிப்பதுமாக வழக்கப்படுவதும்;

மூவென்றூழ்—முதுமையான வெய்யிலென்கிற சாயங்காலம் காயும் வெயிலில் விருப்பத்துடனே காய்வதும்; இளவனிதை—தனக்குப் பிந்தின இளையவளான வயதையுடைய சிறு பெண்ணைக்கூடிப் புணர்ச்சி செய்வதும்; யாம்—நாங்கள்; இனிப்பால் — மசாசந்துஷ்டியுடனே கூடி; ஓமவரியேம் — விசுவாசமாகச் செய்யப்பட்ட எக்கிய ஓமப்புகையை விரும்பிப் படப் பண்ணிக்கொள்வதும், மேலே சொன்ன பிரகாரம் செய்யக் கடவோமாகையால் என்றைக்கும் அச்சமின்றி இருப்போம்.

### பொல்லாத மார்க்கத்துக்குண்டான பொல்லாங்கு

**'காலமென்று வைகார்முக் காலரா கித்திரிவார்**
**காலமென்று தின்னார் கயராவார்—காலமென்று**
**மாலையளை யூறா மயானப் புகைமுதிய**
**மாலையளை யுந்தழுவு வார்.'** **(17)**

(சொ - ள்) : பொல்லாத மார்க்கத்துக்குண்டான பொல்லாங்குகளெப்படியென்று சொல்லுகிறார் : காலமென்று வைகார்—மனிதருக்குண்டான வயது நூறு ஆண்டு என்னுமப்படிக்கு நூறு ஆண்டான பிற்பாடு மரணத்தையடையவேண்டுமென்று இருக்கமாட்டார்கள், அகால மரணமாயற்பாயுசாகப் பிரமாணமில்லாமல் இறந்துபோவார்கள்; முக்காலராகித் திரிவார்-நடக்கமாட்டாமலே தடியையூன்றிக்கொண்டு தள்ளாடித் தள்ளாடிக்கொண்டு நடந்து திரிவார்கள் (தங்கள் காலிரண்டும் தடிக்கோல் ஒன்றுமாக மூன்று கால்களுடனே நடக்கிறவர்களைப் போல); காலமென்று தின்னார்—பால வயதுடனேயிருந்தபோதுந் தாங்கள் நடக்கிற நடத்தை பொல்லாததானபடியினாலே நோயினாலே பல்லுகள் அசைவு கொடுத்து விழுந்துபோம் ஆகையால், ஒரு பண்டத்தைத் தின்ன வேண்டுமென்றால் சுவையுண்டாக்கத்தக்கதாய்ப் பல்லாலேமென்று தின்னுகிறதற்கு நிருவாகமில்லாமல் தவிப்பார்கள்; கயராவார்—காசரோகமேலிட்டுச் சீணிக்கத்தக்க பலவீனராகிப் போவார்கள்; காலமென்று—இப்படிக்கெல்லாம் போகிற பேர்கள் ஆரென்றால் கூற்றுவனைப்போலே கூற்றுவத்துவம் பண்ணப்பட்ட காலத்தால் காயப்பட்ட குரூரமான இளவெயில் சரீரத்திலே படத்தக்கதான பேர்களும்; மாலையளை—ராத்திரிக் காலத்தில் தயிரைப் புசிக்கிற பேர்களும்; ஊறாம்—சருகிலையூறிக்கொண்டு கொஞ்சமாகிலும் போக்குவரத்தில்லாமலிருக்கிற தண்ணீரைப் புசிக்கப்பட்ட பேர்களும்; மயானப்புகை—சுடலையிலே பிரேதம் வேகிற புகையைச் சரீரத்திலே படும்படி செய்கிறபேர்களும்; முதியமாலையளையும்—

தழுவுவார்—வயதிலே தமக்கு மூத்த பெண்களைத்தாமே எப்போதுங்கூடிப் புணர்ச்சி செய்யப்பட்ட துன்மார்க்க நடத்தையுண்டான பேர்கள்.

**மருத்துவம் பார்க்கத் திடமில்லாதவர்**

**'பயந்தவரை மூத்தவரைப் பாலரைப்பெண் டிரைப்**
**பயந்தவரை மைத்துனரைப் பாறப்—பயந்தவரை**
**நட்டவரை வாகடத்தி னாட்டினாலோட் டில்விதை**
**நட்டவரை நேர்குவர்வீ ணாள்.'** **(18)**

(சொ-ள்) : மருத்துவம் பார்க்கத்தக்க திடமில்லாதவர்களிடம் அப் பிரயோசனத்தைப் பார்க்கக் கூடாதென்பது சொல்லுகிறார் : பயந்தவரை—நோயாளியானவனுடைய தாய் தந்தையான பேர்களையும்; மூத்தவரை—தனக்கு மூத்தவர்களான தமையன் தமக்கை முதலான பேர்களையும்; பாலரை—தனக்குச் சின்னவர்களான தம்பிமார், தங்கைமார், பேரன்மார், பேர்த்திமார், பின்னும் சிலரையும்; பெண்டிரை—தனக்கு மிகவும் பாத்தியப்பட்டவர்களானாலும் சரியே அல்லாத பேர்களானபோதிலும் பெண்களாகப் பிறந்தவர்களான பேர்களையும்; பயந்தவரை—மெத்த மெத்தப் பயங்காளிகளாய் அடிக்கடி பயப்பட்ட பேர்களையும்; மைத்துனரை—தனக்கு மிகவும் பாத்தியமான மாமன் பிள்ளை, அத்தை பிள்ளை, சகோதரிகள் புருஷர்கள், பாரியையுடனே பிறந்த பேர்கள் இப்படிப்பட்ட பேர்களையும்; பாறப் பயந்தவரை — வெகுவேகமாயோடப்பட்டதான ஆற்றுத்தண்ணீர், தடாகத்தண்ணீர், கிணற்றுத் தண்ணீர் இவற்றிலே தவறி விழுந்து அந்தத் தண்ணீர் மேலே நனைந்தபோது, தானதை விட்டு வெளியே வந்தது போலே வியர்வை வேர்க்கத்தக்கதான பித்தசயித்திய தேகத்தையுடைத்தான பேர்களையும்; நட்டவரை—சிநேகிதம் பண்ணினவர்களான பேர்களையும்; வாகடத்தில் — இப்பேர்ப்பட்ட பேர்களையெல்லாம் மருத்துவ சாத்திரத்திலே மருத்துவம் பண்ணச் சொல்லிய பிரமாணந் தப்பாமற்படி செய்யச்சொல்லி; நாட்டினால்—தப்பித்து ஏற்படுத்திப் பார்க்காவிட்டால்; ஓட்டில் விதை நட்டவரை நேர்குவர்—பயனில்லாமல் மருத்துவம் கெட்டுப்போம்; எப்படியென்றால் : வரையோட்டில் நல்ல விதைகளைப் பயிர் செய்யவேண்டிய நிமித்தமாக விதை விதைத்ததுபோலப் பயனின்றிக் கெட்டுப்போம்; ஏனென்றால் அவர்களுடைய வாஞ்சையினாலேயும் அறியாமையினாலேயும் பயத்தினாலேயும் இரக்கத்தினாலேயும் துணிவுபெற மாட்டா

மல் தயங்குவார்கள் ஆனபடியினாலே; வீணாள்—அதிலே உழைக்கப்பட்ட காலம் பயனில்லாமற் போகும்.

### மருத்துவம் பார்க்கத் திடமுண்டான சாமர்த்தியர்

'தாயத் தவனும் தபதியுமே னாதியுமா
தாயத் தவனுந் தறுகணனுந் – தாயத்
தவனும் பரிசனனுஞ் சட்டகனுங் கோனுந்
தவனும் பரிகாரி தான்.' (19)

(சொ–ள்) : வயித்தியம் பார்க்கிற சாமர்த்தியத்திலே திடமுண்டான நல்ல வயித்தியனானவ னிலக்கணமெப்படியென்று சொல்லுகிறார்: தாயத்தவனும்—கியாதியான பங்காளியாவது அவனுடைய வமிசத்திலேயிருக்கப்பட்ட மித்திரபேத வக்கிரத் துவமான மனிதனான இவர்களும்; தபதியும்—கம்மாளச் சாதியில் மரவேலை பண்ணப்பட்ட தச்சனும்;ஏனாதியும்—வேட்டையாடப்பட்ட வேடச் சாதியான இருளனும்; ஆதாயத்தவனும்—வாணிகஞ் செய்வதனாலே பருவமறிந்து இலாப சம்பாத்தியம் பண்ணப்பட்ட செட்டி வர்க்கத்தானும்; தறுகணனும்—நல்ல தண்டு தளங்களிலே போயநேகஞ் சண்டைகள் பண்ணியஞ் சாமலிருந்து இரத்தத்திலே பழகித்தாட்சணியமில்லாமல் உயிர்க் காசைப்படாத சுத்த வீரனான சேவகனும்; தாயத்தவனும்—சூதையே யெந்நாளும் விரும்பியதிலே தானே சீவனம் பண்ணிக் கொண்டிருக்கப்பட்ட சூதக்காரனான சூதமாடுகிறவனும்; பரிசனனும்—வேலைக்காரனாகி மிக்க நம்பிக்கையு முடையவனான பரிசாரகனும்; சட்டகனும்—ஒரு குடியிலே சம்பந்தம் பண்ணவேண்டி இரண்டு பெண்களிருந்தாலதிலே ஒவ்வொருத்தர் ஒவ்வொரு பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொண்டவர்களான சகலனும்; கோனும்—இராசரீகம் பண்ண வல்லவனான அரசனுமாகிய அதிகாரம் பெற்றவனும்; தவனும்—தவம் பண்ணியதால் மகிமையுண்டான தெய்வ வரப்பிரசாதம் பெற்றவனும்; பரிகாரிதான்—இவர்களெல்லாம் பண்டிதர்களானபடியினாலே சத்தியமும், பத்தியும், அன்பும், விசுவாசமும், பாக நிதானமும், விற்பத்தியும், துணிவும், தெளிவும் மிகுந்தவர்களாகி யிருப்பார்களாகையால் இவர்கள் வயித்தியராவார்கள்.

### மருத்துவரை உண்மையாக நம்புதல்

'மருத்துவரை நோயினர்தா மாதா பிதாவா
மருத்துவரை யென்னவருள் வைக்க – மருத்துவரை
கையடையா ளந்தந்தக் காரியத்தி லென் றுநம்பிக்
கையடையா ளந்தந்தக் கால்.' (20)

(சொ - ள்): மருத்துவம் பண்ணப்பட்ட பண்டிதரை வினையைப் போக்கிக்கொள்ளப்பட்ட நோயாளிகள் உண்மையாக நம்பவேண்டியதென்கிற முறைமையைச் சொல்லுகிறாரெப்படியென்றால்: மருத்துவரை—மருத்துவம் பார்க்கப்பட்ட பண்டிதரை; நோயினர் – நோயாளிகள்; தம் – தங்களுடைய; மாதா—தாயாரைப் போலவும்; பிதா—தந்தையாரைப் போலவும்; ஆம் – அப்படியே மெய்யாய்; மருத்துவரை – அமுர்த சஞ்சீவியிருக்கப்பட்ட மகா மேரு பருவதத்தைப் போலவும்; என்ன—என்று சொல்லிக்கொள்ளத் தக்கதாக; அருள் – அவர்களிடத்திலே விசுவாசத்தை; வைக்க – நம்பிக்கையெண்ணத்தை நன்றாய் வைக்கவேண்டியது. மருத்துவரை – வாத பித்த சேட்பமென்று சொல்லப்பட்ட மூன்றுவித நாடிகளான அவர்களுடைய எல்லைப் பிரமாண இலட்சணங்களை நன்றாயறிந்து பார்க்கத்தக்கதான; கையடை – அடைக்கலமாகத் தேகத்தை உங்கள் கையிலே யொப்பித்தோம்; ஆள் – நீங்கள் வழக்கமாகப்பாருங்கோள்; அந்தந்தக்காரியத்தில் —எப்போது எப்படி எப்படியான கவைகளிலே என்னென்ன விதமாகப் பார்க்கவேணுமோ அப்படிக்கெல்லாம்; என்று – இந்த விதமாகச் சொல்லி; நம்பிக்கை – நம்பப்பட்டதாகிய; அடையாளம் – ஒரு பிரமாணிக்கமான சாட்சியை யுறுதியாக; தந்தக்கால்—கொடுப்பார்களேயாமாகில்.

**மருத்துவன் முன்னிலை**

**'ஈரமதி மித்திரனா ரெல்லைவரு நோயாளி**
**யீரமதி மித்திரரென் னில்வினை – யீரமதி**
**பண்டிதரு மைத்தொழினீ பார்நன்மை பண்டிதரும்**
**பண்டிதரு மெச்சுமகி பா.'** (21

(சொ–ள்): மருத்துவம் பார்க்கப்பட்ட மருத்துவனைப் பார்த்து முன்னிலையாகச் சிறிது புத்திமதிகள் அவர்களைக் காட்டிலும் பெரியவர்கள் சொல்லுகிறார்கள். எப்படியென்றால்: ஈரமதி – குளிர்ச்சி பொருந்திய சந்திரனும்; மித்திரனார்—சூரியபகவானும்; எல்லை – அவர்களிருக்கப்பட்ட நாள் வரைக்கும்; வரும் — உன்னைத் தேடிக்கொண்டு வரப்பட்ட; நோயாளி – பிணியாளனானவன்; ஈர — அன்புடனே கூடின; மதி—புத்தியை யுடையவனாக யிருப்பானேயானால்; மித்திரன் —பின்னும் நண்பனாகவும்; என்னில்—இப்படிக்கெல்லாமிருப்பானேயாமாகில்; வினை – அவனுடைய நோயை; ஈரமதி – அறுந்துபோகத்தக்கதாய் நீ கெட்டியாய் நிதானித்துக் கொள்ள வேண்டியது; பண்டு—முன்காலத்திலே, இது – இந்த

நடக்கைகளுண்டு; அருமை – இப்போது தற்காலத்துக்கு மெத்த பிரையாசமாயிருக்கும்; தொழில்—அப்படியான பிரையாசமான காரியமாயிருக்கும்; நீ பார் நன்மை—அப்பா! நன்றாயாராய்ந்து சோதித்து நல்ல குணத்தை விசாரணை பண்ணிப் பார்க்க வேண்டியது; பண்டிதரும்—நல்ல விற்பனரான புலவர்களாலே யும்; பண்டிதரும்—நல்ல வைத்தியத்திலே யோக்கியமான பேர் களாலேயும்; மெச்சுமகிபா — எண்ணிக்கையான கண்ணியப் பட்டிருக்கப்பட்ட பண்டித சிலாக்கிய மகாராஜனானவனே.

### நோயாளி முன்னிலைப் புத்தி

**'பாணித் தலத்தைப் பரிகாரி தீண்டுதற்குப்**
**பாணித் தலத்தைப் பரிகரித்துப்—பாணி**
**யமுதத்தை யொவ்வியபோ லாதரித்துப் போற்றி**
**யமுதத்தை நேர்வதியை யா.'** (22)

(சொ – ள்) : மருத்துவனானவன் பிணியாளனைப் பார்த்து முன்னிலையாகச் சில புத்திமதி சொல்லுகிறதெப்படியென்றால் : பாணித்தலத்தை—அப்பா, பிணியாளனே! உன்னுடைய கையை; பரிகாரி—உனக்கு மருத்துவம் பார்க்கத்தக்கதாய் வந்த மருத்துவனானவன்; தீண்டுதற்கு—பிடித்து நாடி நிதானித்துப் பார்க்கவந்தபோது; பாணித்தல் — அதற்குத் தாமதம் பண்ணிக் காலத்தை நீடித்தல் பண்ணுதற்குச் சாலம் பண்ணல்; அத்தை — அந்தத் துர்க்குணமான பொல்லாங்கை யெல்லாம்; பரிகரித்து — பரிகரித்துப் போட்டு; பாணி— (அப்பாலே நீ யெப்படியிருக்கவேண்டியதென்றால்) தண்ணீரானது; அமுதத்தை – பாலிலே; ஒவ்வியபோல் – ஏகமாய்க்கலந்து கொண்ட மரியாதையைப்போலவே நீயும் 'க்ஷீரோதகஞாய' மென்கிறது போலே; ஆதரித்து – மருத்துவனுடைய தயவைத் தானே தாயகமாக மெத்த நம்பிக்கை கொண்டு; போற்றி— அந்த மருத்துவனைச் சகல விதத்திலேயும் வணக்கமாகப் பூசை மரியாதைகளுபசாரங்கள் செய்து; அமு – அப்பாலே அந்த மருத்துவனுடைய அனுமதி அனுக்கிரக அனுகூலமான அதிகாரம் பெற்று; தத்தைநேர் – கிளிப்பிள்ளையைப்போலே; வதியையா – அடங்கி யெவ்வளவு பண்டிதர் சொன்னாரோ அவ்வளவிலேதானே இருந்துவிடத்தக்கதான புத்தியுடனே யிருந்து விடுவாயாக.

### பிணியாளனுக்குப் புத்தி சொல்லுதல்

**'பத்தியத்தை நோயையனு பானத்தை லங்கணத்தைப்**
**பத்தியத்தை முன்மருகன் பண்ணவிற்கொள்—பத்தியத்தை**
**யேகமா யார்த்தாலு மேறாச் செவிபோலே**
**யேகமா யார்த்தாலு மெய்.'** (23)

(சொ – ள்) : மருத்துவனானவன் மருத்துவம் பார்த்துக் கொள்ளப்பட்ட பிணியாளனுக்குப் புத்திமதிகள் பின்னுஞ் சில சொல்லுவானெப்படியென்றால், பிணியாளனே ! உனக்குறுதி யானது சொல்லுகிறேன் கேள் : பத்தியத்தை – பிணி நீங்குகிற வரைக்கும் பரிகாரி சொன்னபடி நடந்துகொள்ளவேண்டிய பத்தியமும்; நோயை – பிணியினுடைய வகையும்; அனு பானத்தை – அவிழ்தத்திற்குக்கூடக் கூட்டுறவாகக் கூட்டிப் பொசிக்கப்பட்டதும்; லங்கணத்தை—நோய் குறையத்தக்க தான போசனப் பொசிப்பில்லாமற்படி பட்டினி யுபவாசமாக இருப்பதும்; பத்தி—உபசாரமன்பு; அத்தைமுன்—மாமியார் முன்னே வந்தனத்துடனே மருமகள் செய்கிற விதத்துடனே செய்; மருகன் பண்ணலிற் கொள்—மருமகனானவன் செய் கிற மரியாதை யுபசாரத்தைப் போல அங்கீகாரம் பண்ணிக் கொள்ளவும் ; பத்தியத்தை—பலவிதமான மேளவாத்தியச் சத்தத்தை ; ஏகமாயார்த்தாலும்—ஒருமுகமாக முழங்குவிக்கிற போது அந்த முழக்கத்தினாலேயுண்டாகிற சத்தங்கள் வெகு வாக முழங்கினபோதைக்கும்; ஏறா – ஏற்றுக்கொள்ளாத; செவி போல—காதைப் போல நோய்களெல்லாம்; ஏக—போய்விடத் தக்கதாய்; மாய் – அதம்பண்ணிப் போட்டு; ஆர்த்து – ஆர வாரத்தைப் பண்ணிக்கொண்டு, ஆலும் – கூத்தாடும், எய்— ஆனபடியினாலே பட்டினிகளெல்லாம் முள்ளம்பன்றியைப் போல்.

**அவிழ்த வகைகளிற் பற்ப சிந்தூர மாத்திரைகளே முக்கியமென்பது**

> **'மூவினையோர் வெண்செய்கரு மொய்ம்புமவை நம்பியறி**
> **மூவினையோர் நன்னூன் மொழிவதிதே – மூவி**
> **வலாரியங்கி காலனிவர் வாகனமாச் செய்ய**
> **வலாரியங்கி யம்புவியாள் வார்.'** (24)

(சொ – ள்) : மூவினை – (அவிழ்தங்களின்) மேம்பாடான தொழில்கள்; ஓர் வெண்செய்கரு – ஒப்பற்ற பற்ப வகைகளும், செந்தூர வகைகளும், மாத்திரை வகைகளுமே; மொய்ம்பும் அவை – (பண்டிதர்கட்குள்ள) வல்லபமும் அவ்வவிழ்தங்களே யாகும்; நம்பி—ஆண்மக்களிற் சிறந்த பண்டிதோத்தமனே; அறிமூவினை ஓர் – முக்கியமாய் அறியவேண்டிய மூவகை நோய்கட்குக் குறியாகிய நாடிகளை உணர்வாயாக. நல்நூல் மொழிவது இதே—சிறந்த மருத்துவ சாத்திரங்கள் கூறுவதும் இதுவே; (அன்றியும்) மூவி—தனித்தனி; வலாரி அங்கி காலன் இவர் வாகனமாச் செய்யவலார் – இந்திரன், அக்கினி, இயமன் (என்னும் இவர்கள்) ஏறுகின்ற வாகனங்களைப்போன்ற; (நிற

முடையவையாய் முறையே பற்ப, செந்தூரம், மாத்திரை என் பவைகளைச்) செய்ய வல்லப முள்ளவர்கள்; இயங்கி அம்புவி ஆள்வார்—எங்கும் உலாவி உலகத்தை ஆள்பவர்களா வார்கள்.

அவிழ்த வகைகளில் முக்கியமானவை பற்பமும் செந் தூரமும் மாத்திரையுமேயாகலின், அம் மூன்றிலும் மேம்பட்ட முறைகளைக்கைப்பாகம் செய்பாகங்கள் தவறாமற்செய்யவும், அவற்றை உபயோகிப்பதற்குரிய நோய்களை நிதானித்து அறி வதற்கு வாத பித்த சேத்தும நாடிப் பரீட்சைகளை நன்றாய்க் கூர்ந்து உணரவும் கற்றுக்கொண்டு, மேற்படி பற்ப செந்தூர மாத்திரைகளின் நிறங்கள் முறையே வெண்மை, செம்மை, கருமை என்னும் மூவிதமாயிருக்கச் செய்யவேண்டுமென்பதும், அவ்வாறு செய்வோரே உலகத்துள்ள ஏனைய பண்டிதர்கட் கெல்லாம் தலைமை பெறுவார்களென்பதுமே.

## (ஆ) தேரையர் வெண்பா

### மயிலவனாயுதம் (வேல்)

**'பல்லுக் கடுத்த பலநோ யகற்றியதைக்**
**கல்லுக்கு நேராகக் காட்டுமே—மல்லுக்கு**
**நண்மின்வினை காளெனப்போய் நாளும் வியாதிகளைச்**
**சண்மயில வன்னாயு தம்.'** **(1)**

(குறிப்புரை) : மயிலவன் ஆயுதம்—வேல் (கருவேல்); உட லிலுள்ள பிணிகளை விளித்துப் போருக்கழைத்து உறைவிடந் தேடிப்போய் அவை தம்மை வேரறக் களைந்து நீக்குவதாகிய வேல் என்னும் மூலிகை, சிறப்பாகப் பற்களின் நோய்கள் பல வற்றையும் நீக்குவதுடன் அப் பற்களையும் வலிமையடையச் செய்து கற்களையொப்ப உறுதிப்படுத்தும். மல்லுக்கு நண் மின்—மற்போருக்கு வாருங்கள்; சண்—உண்டொழித்தல்.

### பிடகர்

**'மணிமந் திரவவிழ்த மார்க்கந் தெரிந்து**
**பிணிக ளறிந்தொதுக்கிப் பின்னும்—தணிய**
**உடலை வளர்த்திடலா லுத்தியினா னூலால்**
**பிடகர் வயித்தியர்க்குப் பேர்.'** **(2)**

(கு-ரை): பிடகர்—மருத்துவர்; மணி—இரசமணி; மந்திரம் —மந்திரம் ஓதல்; அவிழ்தம்—மருந்து; மார்க்கம்—மருந்து செய்யும் முறையும் பிரயோக முறையுமாகிய முறைமை. இங்ஙனம் வழிமுறை யறிந்தும் நோய்களின் இயல்பை நாடியாலறிந்தும் அந்நோய்கள் வலிகுறைந்து நீங்கத்தக்க மருந்தூட்டி உடம்பை வளப்படுத்தலாலும், நுண்ணறிவாலும், மருத்துவ நூல்களைக் கற்றுத் தேர்ச்சியுற்றமையாலும், பிடகர் என்பது வைத்தியர்க்குப் பேராம்; பிடகம்-வேதம். ஈண்டு மருத்துவ நூலைக் குறித்து நின்றது.

(உ-ம்.) 'மந்திரமுந் தந்திரமு மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான்'
—(அப்பர் தேவாரம்)

### காமன்

**'கட்டி யெதிர்நின்று கடுநோயெல் லாம்பணியுந்**
**திட்டி வினையகலுந் தேகமெத்த—புட்டியாம்**
**மாமனுக்கு மாமனென மற்றவற்கு மற்றவனாங்**
**காமனெனுந் திப்பிலிக்குக் கை.'** (3)

(கு-ரை.): காமன்—திப்பிலி. திப்பிலியாகிய நல்ல மருந்துச் சரக்கைப் பயன்படுத்தினால், கடிய நோய்ப் பிணிகள் யாவும் கைகட்டி எதிராக வந்து நின்று வணங்கும். மாமனுக்கு மாமனென—மாமனாகிய சிவபிரானுக்குத் தான் மாமனாகிய; காமன் —மன்மதனாகிய காமவேளின் பேர் புனைந்த திப்பிலிக்கு என்று முடிக்க. புட்டியாம்—தேகவலிமையாம். காமன் திருமாலின் மகனாதலின் சிவபெருமான் மாமனாம். அவனுக்குக் காமன் மாமனாவது சிவன் உமையவளை அணைதற்கு விருப்பமுண்டாக்குங் காரணத்தால் அவளையுதவிய முறையாலென்க. மற்றவர்க்கு மற்றவன்—நோய்களாகிய பிற எல்லாவற்றிற்கும் பகைவன்.

### சொல்

**'காயசித்தி யுண்டாக்கிக் கைத்தருசி யைப்போக்கி**
**ஆயச மெல்லா மடக்குதலால்—ஆயுள்விதி**
**வல்லவரே யாய்ந்து வகுத்தா ரெனக்குறுதி**
**சொல்லுடலுக் கானதென்று சொல்.'** (4)

(கு-ரை.): சொல்—நெல். நெல்லானது காயசித்தியைத் தந்து கைப்புடைய அருசியைப் போக்கும்; ஆயாசத்தை

யெல்லா மடக்கும்; மருத்துவநூல் வல்ல மருத்துவர் ஆராய்ந்து எனக்குறுதிமொழியாகக் கூறினார்கள்; எனவே, சொல்லாகிய நெல் உடலுறுதியானதென்று சொல்லுக.

### ஞமலி

**'கங்களங்கா மம்முறையாற் காணலா மெப்பொருளும்**
**இங்கிதமா யாரு மெளிதிலே — எங்கள்**
**உமைத னருளா லுலகி லறிய**
**ஞமலி மலத்தாலே நா.'** (5)

(கு - ரை.) : ஞமலி—மயில். எம்மையாளும் உமையம்மை திருவருளாலே, மயில் மலத்தினால் நாகங் களங்காகும்; அந்த முறையாலே எப்பொருளும் தமதாகவடைய எளிதாகப் பெற லாம்; உலகிலுள்ளார் யாவரு மொப்புமாறு என்க. நாகங் களங்காம் எனக் கடையு முதலுங் கூட்டி முடிக்க.

### பரிகாரி

**'வெந்த பிசிதத்தை வேகாப் பிசிதத்தில்**
**நுந்துதல்போ லூனை நுகர்வார்க்குச் — செந்துகள்மேற்**
**கண்ணோட்ட மில்லாக் கதைபோற் பொருளாசை**
**எண்ணுபரி காரிகளுக் கில்.'** (6)

(கு – ரை.) : பரிகாரி—மருத்துவன். சமைத்த வூனைத் தம் மாமிசம் பெருக்க வாய்வழி வயிற்றினுள் புக அடைப்பவர்க் குப் பிறவுயிரினங்கள்மேல் கண்ணோட்டம் (இரக்கம்) செல் லாதவாறுபோல், பொருள்மேல் இச்சையுடைய மருத்து வர்க்கும் மருத்துவத்திலும் பிணியாளர்பாலும் ஆர்வமும் இரக்கமுமிலவாம்.

**'தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்'**

என்னும் பொய்யாமொழி, இச் செய்யுளின் முற்பகுதிக்குக் காட்டாதலறிக.

### அதள்

**'உரிபோர்வை மீக்கோ ளுடனே புறணி**
**தரியூன்பை பச்சைவடந் தட்டை—உரிய**
**செதிள்தொக்கு மேற்சருமஞ் செட்டை யுடனே**
**அதளென்ப துந்தோலுக் காம்.'** (7)

(கு—ரை.) : உரியும் போர்வையும் மீக்கோளும் புறணியும் தரியும் ஊன்பையும் பச்சையும் வடமும் தட்டையும் செதிளும் தொக்கும் சருமமும் செட்டையும் அதளும் என்று சொல்லப் படுவனவெல்லாம் தோலின் பரியாயப் (வேறு) பெயர்களாம்.

### அத்தி

**'அங்க முடலாணி யாதார வாதாரி**
**கங்காள மென்பு கறைகட்கு—மங்காத**
**புந்தியுள நூலோர் புகலு முறைப்படியே**
**அத்தி யெலும்பென் றறை. (8**

(கு—ரை.) : அங்கம், உடலாணி, ஆதாரம், ஆதாரி, கங்காளம், என்பு, கறை, கட்கு, அத்தி என்பவற்றை எலும்பின் பெயர்களாகக் கூறுவர் அறிவுடையோர்.

### எருவை

**'செம்பால் கறையுதிரஞ் செந்நீர் குருதிரத்தம்**
**நெம்பான நெய்த்தோர்புண் ணீர்சோரி—பம்பு**
**முரவையடர் சோணிதத்தி னோடு சுடுவன்**
**எருவை யிரத்த மிவை.' (9)**

(கு—ரை) : செம்பால், கறை, உதிரம், செந்நீர், குருதி, நெய்த்தோர், புண்ணீர், சோரி, உரவை, சோணிதம், சுடுவன், எருவை என்பன இரத்தத்தின் மறுபெயர்களாம்.

### மா

**'பாக்கிய மாக்கும் பலமாக்குங் கெட்டதையும்**
**யோக்கிய மாக்கு முயர்ப்பிக்கும்—ஆக்கமென் றுந்**
**தேவென் று நன்மைத் திறமென் றுஞ் சீரென் றும்**
**மாவென் று வந்தபெரு மை.' (10)**

(கு-ரை.) : மா—பெருமை (பல பொருளொரு சொல்). பாக்கியமும், வலிமையும், கெட்டதையும் நன்னிலையாக்குதலும், உயர்த்தலும், ஆக்கந்தருதலும், தெய்வத்தன்மை தருதலும், நன்மையாவும் மிகுதலும், புகழ் வளர்த்தலும் ஆகியவெல்லாம் பெருமையினாலானவாம். ஆக்கமென்றும் தேவென்றும் நன்மைத் திறமென்றும் சீரென்றும் மாவென்றும் வந்த பெருமை பாக்கியமாக்கும். உயிர்ப்பிக்குமெனவுரைத்து முடிவு காண்க.

## கீணோக்கி

'நோய்களெல்லா மப்பா னுகரப் பசியுண்டாம்
சேய்களென்னச் செல்வஞ் செருக்குமே – காய்கிழங்கு
மூணாக்குங் கல்லு மொருநாழி கைக்குள றுங்
கீணோக்கி யாலாகுங் கீழ்.' (11)

(கு – ரை) : கீணோக்கி – கீழ்நோக்கியால் நோய்களெல்லாம் கீழாகும் (தணிந்துவிடும்). அப்பால் நன்குணவு கொள்ளப் பசியெடுக்கும்; உடலின்பமாகிய செல்வம், செல்வச்சிறார்கள் களிப்படையுமாறுபோல மகிழ்ச்சி மிகும். காய் கிழங்கு முதலிய உணவு வகைகளையும் உட்கொள்ள உடம்பு ஏற்றுக் கொள்ளும்; கல்லும் சீரணிக்கும்படி பசித் தீ மிகும் என்பதாம். கீழ்நோக்கி என்பது கீணோக்கி என்றாயிற்று; வாழ்நாள் வாணாள் என வருதல் போல. கீழ்நோக்கி—மலக்கழிவு செய்யும் மருந்து.

## பூகம்

'வாய்த்த வுடற்குளத்தில் மன்னுங் கொடிகளற
நோய்த்தா மரையை நொறுக்குமே—தேய்த்தவுண்டை
ஆகமிள குப்புடனெய் யாலரைத்து நீரிலுணப்
பூக மதகரியைப் போல்.' (11)

(கு – ரை): பூகம்—கமுகு. கமுகின் காயாகிய பாக்கை மிளகும் உப்பும்கூடச் சேர்த்து ஆவின் நெய்விட்டரைத்து உருட்டி நீருடன் உண்ண, உடலாகிய தடாகத்தில் தோன்றிய நோய்களாகிய தாமரைக் கொடிகளை மூலத்தூறுடன் மத யானை யழித்தொழிப்பதுபோல் அழிக்கும். உருவக அணி.

## பெண்ணை

'மேகவெட்டை சோகை வெறிமுதலா யுள்ளவெல்லாம்
போகவட்டை நல்கிப் புரக்குமே—வாகடர்கள்
உண்ணவரு புற்றாளி யோடே வருபோந்தை
பெண்ணை பனைதாலம் பேர்.' (13)

(கு–ரை): பெண்ணை – பனை. புல், தாளி, போந்தை, பெண்ணை, தாலம் என்று பெயர் பெறும் பனை, தன் பாளையினூறலால் காய்ச்சி ஆக்கும் வட்டையுதவி மேகவெட்டை, சோகை, வெறி முதலாகிய நோய்கள் தீரப் பாதுகாக்கும் மருத்துவ நூலுடையார் உண்மருந்தாகத் தரும் பனைவட்டு என்று முடிக்க.

### சரவணம்

'சீறி யடங்காத சேனா பதியமரில்
ஏறிய போதி லெதிராளி—வேறே
கரவடத்தா லேயவனைக் கட்டி யடக்கச்
சரவணமே நாகபா சம்.' (14)

(கு-ரை) : சரவணம் – நாணல். சினந்து போர்க்கு அடங்காத சேத்துமமாகிய பகைவனை அவன் கைம்மிஞ்சியபோது எதிரியானவன் பிறிதொரு சூழ்ச்சியால் அவனைக் கைகால் முடங்கக்கட்டியடக்குதற்கு நாணலின் பயன் சிறந்த நாகபாசம் போல்வதாம். இப் பொருள்கோள் பிறிதுமொழிதலென்னும் அணி பொருந்த நின்றவாறுணர்க.

### கருணை

'போசனத்தின் பூணாகிப் போசனித்த பேர்க்குமகா
ராச வுபசார நல்குதலாற்—பேசு
தரணிமிசைப் பண்டிதர்கள் தாமறியச் சொன்னேன்
கருணை சவுக்கியத்தின் கண்.

(கு-ரை) : கருணை – கருணைக்கிழங்கு. கருணைக்கிழங்கு உணவுக்கு அணிகலம்போல்வது; உண்டவர்க்கு உணவில் விருப்பமூட்டுவது; உலகமருத்துவர் சான்றாக உடல்நன்மைக்குரிய கண்போல்வதாகும்.

### சாதி

'ஈன்றவர்க்கு மொவ்வா விழிவென்று முன்னூலிற்
சான்றவரே கூறுதலால் தப்பாமல் – ஊன்தணிய
நீதியமு தானாலு நீசப் படிவருணச்
சாதிநல மாகாது தள்.' (16)

(கு-ரை) : சாதி – குலம்; பெற்றோர்க்கும் இழிவைத்தரும் சாதி வேறுபாடானது. அறநூல் நீதி நூல்களோதிய சான்றோராகிய பேரறிவுடையோரும் தம் நூல்களிற் கூறியிருத்தலால் அம் மொழி தவறாவகையாக, ஊன்றியறிவும் அறிவுக்கு எளிதாக நீதியாயமுதம் நேராயினும் நீசத்தன்மையென ஒதுக்கும் சாதியுயர்வு தகாது. அக் கொள்கையை விட்டுவிடுக என்பதாம்.

'பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.'

என்னும் வாயுறைவாழ்த்தும் மேலதற்குச் சான்றாம்.

### உறைக்கனி

'போன வியாதிகளைப் போற்றி யழைப்பிக்கும்
ஊனை வளர்க்கு முபாதிக்கே—யான
திறத்தா லுனக்குரிசை தின்னமுதா னாலும்
உறைக்கனியின் பண்புதனை யோர்.' (17)

(கு-ரை): உறைக்கனி—மிளகாய். உறைப்பு உறை என நின்றது செய்யுள் விகாரம். மிளகாயின் பயனால் மருத்துவத்தால் தீர்ந்த நோய்களும் மீளக் கிளைக்கும்; தன் கூட்டுச் சுவையால் விரும்பியுண்பார் உடம்பை நோய் பொதிகூடாக வளர்க்கும்; ஆகவே, மேற்கூறிய வகையால் உணவுச் சுவைக் கேற்றதாகவிருப்பினும் மிளகாயின் கார்ப்புச் சுவை உடல் நலத்துக் கேற்ற தன்றென்பதை ஓர்ந்துணர்க என்பதாம்.

### அழற்காய்

'வாதத்தை யும்மதனால் வந்தமைந்த வெம்மையையுஞ்
சீதத்தை யும்முறிவு செய்திடலால்—ஓது
வழக்கா யுலகிலெரி வண்மை யெனினும்
அழற்காயை விட்டவரி யார்.' (18)

(கு-ரை): அழற்காய்—மிளகு. வாதத்தையும் கபத்தையும் நீக்கும்; உலகில் அழல் தன்மையுடைய பொருளாயினும் மிளகினைப் பயன்படுத்தாமல் விட்டவரில்லை. விட்டவர் யார் என்பது விட்டவரியார் என வந்தது.

### இந்தனம்

'எக்கியத்தி லும்புதிய யாகத் திலுமகஞ்செய்
முக்கியத்தி லும்மணஞ்செய் முன்றிலிலுந்—தொக்கவிழ்தம்
உந்திடத்தும் லோக முருகிடத்து மூளுதலால்
இந்தனந்தென் கீழிறைமெய் யில்.' (19)

(கு-ரை): இந்தனம்—விறகு; எக்கியம், யாகம், மகம் என்று பல திறமாக இயற்றப்படும் ஓமங்களிலும், திருமணச் சடங்கியற்றும் மணவறை மண்டபத்தில் இயற்றும் வேள்வியிலும் சமிதையாகவும், பாடாண வகைகளும் உலோக வகைகளும் தைலம் இரசாயனமாகியவை பாகஞ் செய்தற்குப் புடத்திற்கும் எரிப்பிற்கும் விறகாகவும் பயன்பட்டு மூளுதற்கிடமாகி நிற்றலால் தென்கீழ்த்திசைக் கடவுளாகிய தீக்கடவுளுக்கு உறைவிடம் போன்றதாம் விறகு என்க. விறகின்றித் தீப்பயன் கொள்ள முடியாதென்பதாம்.

### சிவை

'பீடமா மாடப் பெருமையாம் பின்னுமகா
கூடமாங் கூடக் கொலுவுமாம்— நாடு
பவனமா மாடரங்காம் பள்ளியறை யாகுஞ்
சிவையவிழ்த லோகமிவை சேர்.' (20)

(கு–ரை) : சிவை – பலபொருள் தரும் ஒரு சொல்; பீடம்—ஆசனம்; மாடம்—மாளிகை; கூடம்—(கூடுமிடம்) சபை; கொலு —சபையிற்கூடிய கூட்டம்; பவனம்—வீடு; ஆடரங்கு – கூத்தியற்றுமிடம்; பள்ளியறை – படுக்கையறை; அவிழ்தம் – மருந்து; உலோகம்—பொன் முதலிய நவலோகங்கள்; சிவை—சிவன் மனைவி பார்வதி; சிவையின் பொருளாகியவற்றைக் கூட்டி முடித்து ஏற்றவாறு பொருள்கொள்க.

### வால்

'கள்ள மடையார் கருத்தைப்போ லீசன்னி
உள்ள படிபோ லுணுமவிழ்த—வள்ளலெனப்
பால்வெள்ளை சுவேதமுதல் பாரதிமெய் சுக்கிலமெய்
வால்தவளம் பாண்டுவெண் மை.' (21)

(கு–ரை) : வால் – தூய்மை. கள்ளச் சிந்தனையிலாதார் நெஞ்சம், சன்னி நீங்குமாறு உட்கொள்ளும் பற்பம், பால் வெள்ளை, சுவேதம், கலைமகளுருவம், இந்திரியத்தின் நிறம், வால், தவளம், பாண்டு, வெண்மை என்பன தூயவெள்ளையின் பரியாயப் பெயர்களாம்.

### மை

'ஆதிபரை காளி யரிவண்ண மிப்படியென்
றோதி யுலகிற் குணர்த்துதல்போல்—நீதிமுறை
மைநீ ணிலமியம்ப லாகியகா ளிங்கமணி
மைநீல் கறுப்புகரு மை.' (22)

(கு–ரை) : மை—ஒருபொருட் பன்மொழி. முதல்வியாகிய பராசக்தி, காளி, திருமால் ஆகிய இவர்கள் உருவண்ணம் இங்ஙனமாமென்று உலகினர் அறிய உண்மையாகக் காட்டுவன போலும்; காளிங்கம், மணி, மை, நீல், கறுப்பு, கருமை என்பன வாகவரும் பெயர்களுடைய நிறப் பண்பு குறித்த சொற்கள் என்பதாம். நீலம் – நீல் எனக் கடை குறைந்துநின்றது.

### கந்தி

'கோலமெனப் பேர்புனைந்து கோபித்துத் தன்குணமா
யால மிகவே யணுகுமே—ஞாலமிசை
முந்துகப வாதபித்த மூன்றிற்கு மூன்றாகிக்
கந்தியென வோதுபுசங் கம்.' (23)

(கு - ரை): கந்தியென்று மருத்துவர் கூறும் புசங்கம், கோல மெனவும் பேர்கொண்டு உடம்பினிடத்து அநாதியாகவே தோன்றி ஆதரித்தும் நோய்ப்படுத்தியும் அழித்தும் வருகின்ற முக்குற்றங்களாகிய வாத பித்த சேத்துமங்கள் நிலை பிசகுங் கால் முறையே அம் மூன்றனுக்கும் மூன்றாகி அவற்றின் மிகை குறைகளை நீக்கிச் சமப்படுத்தி உடம்பைக் காக்குமென்பதாம். கந்தி—கமுகு; கோலம்—இலந்தை; புசங்கம்—பாம்பு. இவை முறையே கமுகு வாதத்திற்கும், இலந்தை பித்தத்திற்கும், பாம்பு சேத்துமத்திற்குமாகக் கொள்க. பாம்பின் நஞ்சு கலந்துசெய்யப் பட்ட அவிழ்தங்களைச் சேத்தும மேலிட்ட சன்னி முதலிய மரணத்தை விளைக்கும் நோய்கட்கு ஊட்டுவதென்பதாம்.

### தொடி

'நடுவு நிலையுடைய நல்லார்போ லுண்மை
உடைய தறிவித் துறையும்—வடிவப்
படியாய் விராகனெடை பத்தாத னேரால்
தொடியே நிறைக்குரிய சொல்.' (24)

(கு – ரை): தொடி—ஒருபலம். நடுவுநிலைமை தவறாத சான்றோர்போல் உண்மையான நிறையை அறியச்செய்து நிலவும் உருவுடைய நிறைகல்லாகி, பத்து விராகனெடை கொண்டதாய் வழங்கும் தொடி யென்னும் பலமே நிறைக்கு முன்னிற்பதாகிய சொல்லாம்.

### அனுசன்

'தம்பியுடை யான்படைக்கஞ் சானென் றுலகினிலி
யம்புமது மெய்ம்மை யதனாலே – நம்பி
மனது கலக்க வருமுறைமை யாலே
அனுச னுயிர்க்குதவி யாம்.' (25)

(கு – ரை): அனுசன்—தம்பி. 'தம்பியுடையான் படைக்கஞ் சான்' என்னும் வழக்கு உண்மையேயாம். அதனால் நம்பிக் கையுடன் மனமொன்றிய பிறப்புரிமை முறைமையால் தம்பியா யுள்ளான் உயிர்க்குதவியாவான் என்பதாம். 'தம்பி யுடையான்

படைக்கஞ்சானென்று மாற்றந் தந்தனையால்' என இராமன் இலக்குவனைப் பாராட்டிக் கூறியதாக வரும் கம்பராமாயணத் தொடர் இவ் வெண்பாவில் ஆசிரிய வசனமாக எடுத்தாளப் பட்டிருத்தல் காணலாம்.

### மருந்து நாற்கூறு

**'நோயாளி பண்டிதனந் நோய்க்கு மருந்திடைய**
**னேயான நால்வ ரிடமாகும் – தூயமருந்**
**தின்குணமென் றாதி யியம்பினா ராகமத்தின்**
**நன்குணமா யோதுகிறேன் நான்.'** (26)

(கு – ரை) : நோயாளியும், நோய் நீக்கும் மருத்துவனும், அவன் பிரயோகிக்கும் மருந்தும், மருத்துவனுக்கும் நோயாளனுக்குமிடையில் நின்று பக்குவம், உபசாரம், பிரயோகம் முதலியவற்றைச் செய்யும் உழைச்செல்வானுமாகிய நான்கு கூறுகளாக நடைபெறும் மருத்துவ முறையென்று மருத்துவாகமத்தில் முன்னோர் கூறியுள்ளனராதலின் யான் அதனை நல்ல எண்ணத்துடன் நுமக்குக்கூறுகிறேன் என்பதாம். இவ்வெண்பா திருக்குறளின் கண்,

**'உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று**
**அப்பால்நாற் கூற்றே மருந்து'**

என வரும் பாவின் பொழிப்பாமாறு உணர்க.

### பத்தியப் பலன்

**'பத்தியத்தி னாலே பலனுண்டா கும்மருந்து**
**பத்தியங்கள் போனாற் பலன்போகும் – பத்தியத்திற்**
**பத்தியமே வெற்றிதரும் பண்டிதருக் காதலினாற்**
**பத்தியமே யுத்தியென்று பார்.'** (27)

(பொழிப்புரை): பத்தியத்தினால் மருந்து பலனுடையதாகும்; பத்தியங்கள் தவறானால் மருந்தின் பயனும் இல்லையாம்; பத்தியமுறையாக மருந்தூட்டும் பண்டிதர்க்கு அம் மருந்தினைக்காட்டிலும் பத்தியமே வெற்றி தருவதாகும்; ஆகையால், பத்தியமுறை மருத்துவமே நுண்ணறிவின் பாற்பட்டதாகும்.

### நசியம் முதலியன

**'நசியம் புகைபற்றி நாசிகத்தூ ளெண்ணெய்**
**இசையு மிவைநாலு மெண்ணி – இசையப்**
**புரியு மருத்துவரைப் போலொருவ ருண்டோ**
**தரணி தனிலினிது தான்.'** (28)

(பொ – ரை): நசியமும் புகையும், பற்றும், நாசிகத்தூளும், எண்ணெயும் ஆகிய இவை நான்கையும் அறிந்து ஏற்புடைய தாகப் புரியும் மருத்துவ பண்டிதரை ஒப்பாவா ருலகில் உளரோ. இம் முறை நல்ல இனிய முறையாவதனால் என்பதாம். நசியம், நாசிகத்தூள் என்னும் இரண்டையும் மூக்கின் பயனாக ஒன் றாக்கி நான்கென்று தொகை கூறினார்.

**பொற்றலைக் கையாந்தகரைக் கற்பம்**

**'திருவுண்டாம் ஞானத் தெளிவுண்டா மேலை**
**யுருவுண்டா முள்ளதெல்லா முண்டாம் – குருவுண்டாம்**
**பொன்னாகத் தன்னாகம் பொற்றலைக்கை யாந்தகரைத்**
**தன்னாகத் தின்னாகந் தான்.' (29)**

(பொ – ரை) : பொற்றலைக் கையாந்தகரையின் சமூலத் தைப் பக்குவ கற்பமாக உண்ணின், உண்டவர்க்கு உடம்பு பொன்னாகும் ; திருப் பெருகும்; ஞானத் தெளிவு பிறக்கும் ; மேன்மையான உருவ வழகுண்டாகும்; இன்னும் புருஷார்த்த மான யாவையு முண்டாகும். நல்ல நிறமுண்டாம்.

**அனுபானங்கள்**

**'அனுபானத் தாலே யவிழ்தம் பலிக்கும்**
**இனிதான சுக்குகன்ன லிஞ்சீ — பினுமுதகங்**
**கோமயம் பால்முலைப்பால் கோநெய்தேன் வெற்றிலைநீர்**
**ஆமிதையா ராய்ந்துசெய்ய லாம்.' (30)**

(பொ - ரை) : அனுபானங்களின் சேர்க்கையாலேதான் அவிழ்தங்கள் நோய் நீக்கும் ஆற்றல் பெற்றனவாம். அவ் வனு பானங்கள் பலவகைப்படுவனவாம். அவையாவன : சுக்கு, கரும்பு, இஞ்சி, நீர், கோமயம், ஆவின்பால், தாய்ப்பால், ஆவின் நெய், தேன், வெற்றிலைச்சாறு என்பனவாம். இவற் றை நோய்க்கும் மருந்துக்கும் பொருந்துமாறு கூட்டிக்கொள்க என்பதாம்.

**நோய்க் காரணங்கள்**

**'பிணிக்கேது கரமென்ப பேசுதல்வே றில்லை**
**தணிக்காத கோபத்தாற் றாகந் — தணிக்காமை**
**யாலுண்டி யாற்புணர்ச்சி யாலீரத்தாற் சுமையால்**
**மேலும் பிணிகளுறு மே.' (31)**

(பொ – ரை) : அதிகமாகக் கோபப்படுவதால், மிக்க நீர் வேட்கையுறுதலால், மாறுபாடான உணவுகளால், ஓதத்தால்,

புணர்ச்சியால், ஓதத்தால், அதிகமான சுமையால் நோய்கள் உண்டாகுமென்பதாம்.

### பத்தியப் பெருமை

**'பத்தியம் போனாற் பலன்போ மருந்துகளுக்**
**கத்தியினி னோய்க ளணுகுமே — பத்தியங்கள்**
**உண்டானா லுண்டா முறுதி யவிழ்தங்கட்**
**கெண்டாலு முண்மையிதை யே.' (32)**

(பொ-ரை): மருத்துவர் விதித்த பத்தியம் மாறினால், மருந்துகளின் பயனும் வீணாயொழியும்; அஃதன்றியும் உடம்பில் உள்ள தாதுக்களில் எலும்புவரை முன்னுள்ள நோய்கள் முன்னையினும் மிகுதியாகவே தோன்றி வருத்தும்; பத்திய முறை தவறாதாயின் மருந்துபயோகம் உடற்குறுதியாவதுடன் அவ்வவிழ்தங்கட்கும் நன்மதிப்புண்டாம்; ஐயனே இஃதுண்மை யாமென்றறிவாயாக. அத்தி – அஸ்தி, எலும்பு.

### இதுவுமது

**'பத்தியத்தா லுண்டாகும் பண்டிதற்குப் பேராண்மை**
**பத்தியத்தா லுண்டாகும் பாண்டிதங்கள் — பத்தியத்தை**
**விட்டாற் பிணிவகைகள் வித்தரிக்கும் விட்டிடலை**
**விட்டாற் பறக்கும் வினை.' (33)**

(பொ-ரை): பத்தியம் வகுத்து மருத்துவம் புரிவதால், பண்டிதர்களின் பண்டிதமும் பேராண்மையெய்தும்; மருத்துவ முறைகளும் பயன் தருவனவாகும்; பத்தியமில்லையானாற் பிணிகள் விருத்தியடையும்; பத்தியம் விடுதலை அனுசரியாமல் விட்டு, பத்தியத்தை மேற்கொண்டால் நோய்கள் பறந்தோடு மென்பதாம்.

### பத்திய விலக்கான பொருள்கள்

**'பல்வணம் புளிகடுவெண் ணாலு முதலாக**
**ஒவ்வொரு தினமா யொழிவராய் — நவிலிறைச்சி**
**கூழ்ப்பாண்ட மச்சம்பெண் கோத்திரங்கொள் பிரமபத்ரி**
**கீழ்ப்பாகு மெத்தவிது சீ. (34)**

(பொ-ரை): உப்பு, புளி, கடுகு, எள் என்னு மிந்நான்கு முதலாக மருந்து முறைக்கேற்ப ஒவ்வொன்றாக நீக்கத் தகுந்த வற்றை நீக்கவும்; இதன் மேலும், இறைச்சிவகை, பூசணிக்

காய். மீன்வகை, பெண்போகம், வரகு, கொள்ளு, புகையிலை ஆகியவை மருந்து முறிவுப் பொருள்களாமாகையால், அவற்றையும் நீக்கவேண்டுமென்பதாம். கீழ்ப்பு – கீழ்மை ; சீ — உவர்த்தொதுக்கல் குறிப்புச் சொல்.

**உணவு**

**'நோயனுக்குப் புத்தி நுவலுவேன் உண்டதற்ற**
**காய மறிந்து கடைப்பிடித்துத் — தீயலதை**
**உண்கப் பசிமிகுதி யுற்றதறிந் தானக்கால்**
**அண்கற்ப நல்லுறுதி யாம்'. (35)**

(பொ–ரை) : பிணியுழந்து வருந்தும் நோயாளனுக்குப் புத்தி கூறுவேன்; அஃதாமாறு, முன்னுண்ட வுணவு செரித்தமையை அறிந்து மேலுண்ணும் உணவின் தன்மையையும் அது செரிக்குந் தன்மையையுமறிந்து, தீயதான வுணவல்லாதனவற்றைப் பசித் தீயின் அளவுக்கேற்ப வுண்க. அங்ஙனம் முறையறிந்து உணவு கொள்ளின் பொருந்திய கற்ப முறையாயமைந்து உடற்குறுதியாம் என்பதாம்; இச் செய்யுள்

**'அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல**
**துய்க்க துவரப் பசித்து'**

எனவும்,

**'மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணின்**
**ஊறுபா டில்லை யுயிர்க்கு'**

எனவும் வரும் குறட்பாக்களின் விளக்கமாமாறு அறிக.

**வேண்டா மருந்து**

**'வேண்டா மருந்தென்று வீணுக் கருந்துவது**
**பூண்டாகு மெய்க்குப் பொருந்தியது — மீண்டுஞ்**
**செரித்த தறிந்ததனைத் தின்னிற் சிறுத்து**
**மரித்து விடாமல்வாழ் வார்.' (36)**

(பொ–ரை) : நோய் மருந்தென்று கருதிப் பயன்படாதனவாகிய மருந்துகளை வீணிலே யருந்துவதை வேண்டாராய், உடற்கும் நோய் நீக்கத்திற்கும் பொருந்துவனவாகிய மருந்துகளை உட்கொள்வதனையே முறையாகப் பூண்பவராய், முன்னுண்ட உணவினை மீண்டுமுண்ண நேர்ந்தால் முன்னுண்டது செரித்ததனையறிந்துண்பவராய் முறைப்படி நடப்பவராயின் அவர்தம் உடம்பு நோய்களால் அடர்ப்புண்டு

மெலிந்து மரித்துப்போகாதாதலால் அவர் நீண்ட வாழ்க்கை யெய்துவர் என்பதாம்.

**'மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்தியது**
**அற்றது போற்றி யுணின்'**

என்னும் குறட்பாவின் பொருளும் இச் செய்யுளில் அமைந்துள் ளமை யறியுலாம்.

## நற்பண்டிதர்

**'நோயறிந்து நோய்முதலி நோக்கறிந்து நோயுதவு**
**தாயறிந்து போக்குந் தரமறிந்து — காயநிலை**
**நொந்தழியா வண்ண நுகர்விப்பார் நோயினர்க்குத்**
**தந்தையெனு நற்பண்டி தர்.'** **(37)**

(பொ–ரை) : நோய் நீக்கி நலம்விளைக்கும் மருத்துவர்கள் நோயாளியின் பிணியை நாடி வகைகளாலறிந்து அந் நோயின் காரணத்தையும் நோயை விளைக்கும் உடற்கூற்றின் பகுதியை நீக்கும் வகையையும் அறிந்து உடல்வன்மை சிதைவுறா வகையால் ஏற்ற மருந்துகளை நுகரப்பண்ணி நோய்தீர்த்து நலம்பயத்தலால் நோயினர்க்குத் தந்தையை ஒப்பார் என்ப தாம்.

**'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்'**

என்று செந்நாப்போதாரும் கூறுவதை ஈண்டு ஒப்புநோக்குக.

## மருத்துவர் மதிநுட்பம்

**'குணநாடி நோயறிந்து கொண்டுபிணி யாளர்**
**குணநாடி ஞாபகமுட் கொண்டு — நிணரா**
**யதது தணிய மடைவவிழ்த மீயு**
**மதியர் வயித்தியரா வார்.'** **(38)**

(பொ–ரை): பிணியாளர் குணமறிந்துநோயின் தன்மையை நாடி வகைகளால் நாடியறிந்து ஞாபக சக்தியை மறவாது உள்ளத்திலிருத்தி வைத்துக்கொண்டு அவ்வந் நோய்கள் தணி தற்கேற்ற அவிழ்தங்களை அளித்து நலம் பயக்கும் மதிநுட்ப முடையோரே மருத்துவராவார்.

### மருத்துவன் அறியவேண்டியன

'வண்கால தேசவர்த்த மானமறி பண்டிதர்க்குங்
கண்காண் வழக்கமே கைமுறையாம் — பெண்காணி
ஆனாலுஞ் செல்வாக்கே யாதீன மப்படிநீ
நானாலுஞ் சொல்லவறி நாள்.' (39)

(பொ–ரை): காலம், இடம், வழக்கம் மூன்றையும் முறையா யறிந்த மருத்துவர்க்கும் அவ்வப்போது அவ்வவ்விடங்களில் நிகழும் வழக்கமே கைம்முறையாக அனுசரிக்கும் வழக்கமாக அமையும். அதுபோல் பெண்ணுரிமையாக (மகட்கொடை) உடைய விளைநிலமாக இருப்பினும் செல்வாக்கினியல்பி லேயே அவ்வுரிமை ஆட்சியாக நிற்கும்; ஆனமையின். மருத்துவநூல் வழக்கு வெல்ல வேண்டுமாயின் மருத்துவனியல் பாகிய பதினாறனையும் மறவாமற்கொண்டு அவ்வவ்விடங் களில் கையாளவும் எடுத்துச் சொல்லவும் வல்லனாக மருத்துவன் இருக்கவேண்டும் என்பதாம்.

### மருத்துவன் இயல்புகள் பதினாறு

1. நோயை யறிதல்,
2. அதன் காரணமறிதல்,
3. அது நீக்கும் உபாயம் தேர்தல்,
4. பிணிக்காலங்களின் அளவுணர்தல்,
5. நோயாளி அளவறிதல்,
6. சரீர சுபாவமறிதல்,
7. பருவநாடல்,
8. வேதனைகளின் அளவறிதல்,
9. சாத்தியமாய்தல்,
10. அசாத்தியமோர்தல்,
11. யாப்பியமுணர்தல்,
12. மருந்து செய்தல்,
13. பழைய மருத்துவர் முறையில் தவறாமை,
14. உதிரங் களைதல்,
15. அறுத்தல்,
16. சுடுதல்.

இங்ஙனம் கூறும் இயல்புகளை அறிந்து முறைமையாக ஆற்றவல்லவனே மருத்துவனாவான்.

**அறியா மருத்துவர்**

**'நோயை யறிந்தந்த நோயா னதுபிறந்த**
**வாயை யறிந்து வரிசையு — பாய**
**மருந்தறிந்து செய்யா வயித்தியர்பூ மிக்குள்**
**இருந்தென்ன பாழ்த்தசுமை யே.' (40)**

(பொ–ரை) : நோயினையறிந்தும் நோய் தோன்றிய காரணத்தையறிந்தும் உபாய நெறியால் வகையான மருந்தை யறிந்தும் மருத்துவத்தை முறையாகச் செய்யவியலாத மருத்துவர் உலகில் இருத்தலால் பயன் யாதெனில் மருத்துவத் துறைக்கும், உலகிற்கும், நோயினர்க்கும் வீணான சுமையே யாம்.

**கால் முடம் நீங்க**

**'ஆம்பிரம் பிண்டி யரிதகியி லாக்கொட்டை**
**காம்பீர வேர்கள் கஷாயமாய்த் — தாம்பிறிவு**
**கால்கால்கால் கால்பங்கு காய்ச்சியுண மண்டலத்திற்**
**கால்கால்கால் கால்பங்கு கால்.' (41)**

(பொ–ரை) : மா, அசோகு, கடுக்காய், இஞ்சி, முருக்கு ஆகியவற்றின் வேர்களை ஒவ்வொரு வகைக்கும் கால் பங்கு வீதம் எடுத்துக் கூட்டி நீர்விட்டுக் காய்ச்சி, காற்பங்காகச் சுண்டக் காய்ந்த நீரையுண்ண ஒரு மண்டலத்தில் முடவன் கால் முடம் நீங்கி முழுக் காலாகும் என்பதாம். பங்குகால் — முடவன் கால்; கால்கால்கால்கால்—நாலுகால் ஒருகால்; முழுக் காலாகும் என்க.

## (இ) தேரையர் மகா கரிசல்

**குறுவிருத்தம்**

**'பண்டித னியலுள பண்டித கணமே.'**

(பொருள்) : பண்டு இதன் இயல் உள—பழைய நூல் களில் யான் செய்திருக்கின்ற இந் நூலின் இலக்கணங்கள் எல் லாம் அடங்கி இருக்கின்றன ; பண்டித கணமே – மருத்துவக் கூட்டத்தவர்களே (எ – று).

வேறு பொருள் : பண்டி தன் இயலுள — (இந்நூல் யான் செய்தது ஏதுக்கென்றால்) வயிறு வளர்க்கவேண்டிய நிமித்த

மேயாம். ஏனெனில், சகடக் காலானது எப்படி மேலும் கீழும், கீழும் மேலும் ஆமோ அதுபோல் யான் சுழல்வதே காரண மாம் ; பண்டித கணமே — (ஆகலின்) மருத்துவக் கூட்டத்தவர் களே ! நீங்கள் என்னுடைய பிழைகளைப் பொறுப்பீர்களாக (எ — று).

வேறு பொருள் : பண்டிதன் இயலுள — (பாண்டித்தியம் நிறைந்த பண்டிதனின் தகுதிகள் உள்ளன; பண்டித கணமே—மருத்துவக் கூட்டத்தவர்களே (எ—று).

இதுவுமது

மகத்துவ மிகுதமிழ் வரப்பிர சாதி
அகத்திய முனிவர னடியிணை பரவி
தருமசவு மியதன் மந்திரி சற்குரு
பரன்மகிமை யுட்கொண்டு பேயகத் தேரன்
செயுமுறை தெரிகிலாத் தேரனா யடியேன்

உயுமுறை வைத்திய வுரைதமிழ்க் கரிசல்
தருங்குறு மகவற் றாழிசை மோனை
வகைபெறு சந்த வருக்கத் துறைக்கே
பூசினி யெனவண்டம் பொம்மினுமா லலங்கல்
ஆசினிகழல் நூறி யப்பியுண் மகிழ்மாபோல்

பேசினூற் கமுத பேசினி காப்பே
ஆயில் குடிபுன லனலை யடுநெறி
ஆயி லடுபை ரவிமுன் காப்பே
கபித்த பலமானது மேகபித்தபல மோட்டலிற்பேய்
கபித்தபல மாகுமெழு கன்னியர்கள் காப்பே

பைத்திய சன்னிவேலிப் பருத்திக்கு அச்சுறலிற்சூர்
பைத்திய சன்னிவேலிப் பாரிடங் காப்பே
நிம்பவித் தெண்ணெய் மறியுணா மூலிபுண்ணீக்குதலென
[வீரன்
சம்பவித்தெண்ணை முடிக்கு மிக்குரிசிலே தம்பிரானெனத்
[தானே.
சூதப் பிசினிச் சொறியைத் தெறல்போல்

சூதப் பிசகைச் சுடுமா ருதியே
சித்திர மூல மசத்திர மடலிற்
பத்திர வரிஹர புத்திர னடுமே
மருந்துபுள் ளிருக்குவேளூர் வைத்தியநாதத் தெய்வம்
பொருந்துயி ருடல்போல்வாழ்வு புனைசிவ சத்தியாகி

ஐயய னாயகி யாதி யளித்தருள்
தைய னாயகி தந்தமுத் தையனே
எட்டுக்கண் மறையவன் எழுதி னும்புழு
வெட்டுக்கண் மறைகர வீரம்போக் கல்போல்
கூவிளம்பூ வளிசெய் குன்ம மடல்போல்

கூவிளம்பூ வலிமை கொண்டுநனி காப்பான்
புரண்டரைக் காத மாத்திரை யெதுவும்
புசிக்கினோ யாளியை யுடனே
இரண்டரைக் காத மாத்திரை மாற்றாள்
எனச்செய்யு மப்படி யின்றி

இல்ல வித்தை மண்ம யக்க
மின்றி யற்றல் போற்பிழை
இல்ல வித்தை யில்லெ னச்செய்து
என்னை வந்து காக்கவே
மறிகட லுலகிற் பொறியுடை மாந்தர்

குறிகொடு துருவு நெறியிஃ தாமே.

(சொற்பொருள்) : சிறப்புமிக்க தமிழ்மொழி கண்டு முத்தமிழை வரப்பிரசாதமாகக் கொண்ட மாமுனி அகத்தியருடைய பாதம் பணிந்தும், எனது சற்குரு தெய்வப் பண்டிதராகிய தரும சவுமியரது பாதம் பணிந்து அவருடைய அருளைப் பெற்றும், இவ்வுலகை உண்மையாக எண்ணுபவனும் நாயினும் கடையனாம் தேரனுமாகிய யான் உயிர்கள் உய்யுமாறு மருத்துவத்தைக் கூறுகின்ற அகவல் குறுந்தாழிசை மோனை சந்த வருக்கத்துறையில் செய்யப்பட்ட கரிசல் நூலினை. (1—8)

பூசினியென அண்டம் பொம்மினும் — அண்டம் பூசனிக் காயைப்போல வீங்கினாலும்; மாலலங்கல் – துளசி; ஆசினி — பலாக்கொட்டை ; கழல் — கழற்சிப் பருப்பு ; நூறி — (இவை மூன்றனையும்) அரைத்து ; அப்பியுண் – பீசத்தில் தடவியும் உள்ளுக்கருந்தியும் ; மகிழ்மாபோல் — மகிழ்ச்சியடைபவர்களைப் போல்; பேசு இந்நூற்கு – சொல்லப்பட்ட இந்நூலினை; அமுதபேசினி – கலைவாணி; காப்பே—காப்பாளாக! (9—11)

ஆயில் குடிபுனல்—ஆயில் மரப்பட்டையிட்டுக் காய்ச்சி வரப்பட்ட குடிநீர்; அனலை—கோடை வெப்பினை; அடுநெறி —போக்கி உடலைக் காத்தல்போல்; ஆயி – தாயாகிய; அடுபைரவி முன் காப்பே – பகைவர்களைக் கொல்லும் காளிதேவி இந் நூலைக் காப்பாளாக! (12, 13)

கபித்த பலமானது—விளாம்பழமானது; மேக பித்த பலம் ஒட்டலில்—மேக பித்த வன்மையை உடலிலிருந்து ஓட்டி உடலைக் காத்தல் போல; பேய்கபித்த பலமாகு எழுகன்னி யர்கள் காப்பே — காட்டுத் தெய்வங்களால் பலத்த காவலுடன் வீற்றிருக்கும் ஏழு கன்னியர்கள் காப்பார்களாக ! (14, 15)

பைத்திய சன்னி — பித்த சன்னி ; வேலிப் பருத்திக்கு — உத்தாமணிக்கு ; அச்சுறலின் — பயப்படுவதைப்போல, சூர் — வீரமாது ; பைத்திய சன்னி — துன்பத்தையும் சரசத்தையு முடைய ; வேலிப் பாரிடங்காப்பே — வேலிபோல் வளைந் திருக்கும் பூதங்கள் காப்பாகும். (16, 17)

நிம்பவித்தெண்ணெய் — வேப்பெண்ணெயுடன் ; மறி உணாமூலி — (கலந்த) ஆடுதின்னாப்பாளை ; புண்ணீக்குத லென — புண்ணை நீக்கி உடலைக் காத்தல்போல ; வீரன் — வீரன் ; சம்பவித்த — நேர்ந்திருக்கிற ; எண்ணை — எண் ணத்தை (நினைப்பை) ; இக் குரிசிலே முடிக்கும்—முடிக்கும் பெருமையிற் சிறந்தோனே முடித்துக் கொடுக்கும் ; தம்பிரா னெனத்தானே — எப்பொருட்கும் இறைவனாகிய சிவனைப் போலவே முடிப்பான். (18, 19)

சூதப் பிசினி — மாம்பிசினானது ; சொறியை — தினவை ; தெறல்போல் — கெடுத்து உடலைக் காப்பதுபோல், சூதம் — வஞ்சனையையும் ; பிசகை – குற்றத்தையும் ; மாருதிசுடும் – அனுமான் அதம்பண்ணிக் காக்கும் ; சித்திரமூலம் — சித்திர மூலமானது ; அசத்திரம் — சத்திரம் (அறுவை) செய்யாமல் இயற்கையாய் வந்த புண்ணை ; அடலின் — கொன்று உடலைக் காப்பதுபோல ; பத்திர வரிஹர புத்திரன் — பூமியில் வலுவுள்ளவராயும் புத்திர பாவனையாகவுமுள்ள அரிஹர புத்திரன் ; அடுமே — பகைவர்களைக் கொன்று இந்நூலைக் காப்பானாக ! (20 – 23)

மருந்து — அமிர்தம் இருக்கும் ; புள்ளிருக்கு வேளூர் வைத்தியநாதத் தெய்வம் – புள்ளிருக்கு வேளூரில் (வைத்தீஸ் வரன் கோயில்) வீற்றிருக்கும் வைத்தீஸ்வரன் ; பொருந்துயிர் உடல்போல் — உயிரும் உடலும் பொருந்தியிருப்பதைப் போல ; வாழ்வு புணை — இல்லற வாழ்வைக்காட்ட ; சிவ சத்தியாகி — சிவனுக்குச் சக்தியுமாகிய; ஐயன் நாயகி – இறை வனுக்கு நாயகியாகிய உமையும் ; ஆதியளித்தருள் – பண்டு உலகங்களை அளித்து அருளின ; தையனாயகி தந்த முத்தை

யனே — தையல் நாயகியும் ஆகிய உமை தந்தருளிய முத்துக் குமரனே !; எட்டுக்கண் மறையவன் எழுதினும் புழு வெட்டுக் கண் — எட்டுக் கண்களையுடைய பிரமன் புழுவெட்டுக்கண்ணாய் இருப்பாய் என்று விதிப்பினும் அவ் அடையாளத்தை ; மறை — மறைக்கின்ற ; கரவீரம் — ஆற்று அலரி ; போக்கல் போல் — நீக்கிச் சரீரத்தைக் காத்தல்போல் இந் நூலைக் காத்தல் வேண்டும். (24 – 29)

கூவிளம்பூ — வில்வப்பூ ; வளிசெய்குன்மம் — வாதத்தினால் உண்டான குன்மரோகத்தை; அடல்போல் — நீக்கி உடலைக் காத்தல்போல் ; கூ — உலகத்திலுள்ள உயிர்களுக்கு ; விளம்பு — சொன்ன இந்நூலை ; வலிமைகொண்டு — வன்மையுடன்; நனி காப்பான் — மிகவும் காத்து ரட்சிப்பான். (30, 31)

புரண்டு அரைக்காத மாத்திரை எதுவும்—புரளும்படி அரைக்கப்படாத மாத்திரையெல்லாம் ; புசிக்கின் — அருந்தினால் ; நோயாளியை — பிணியாளனை ; உடனே இரண்டரைக்காதம் — இரண்டரைக்காதம் நடக்கும் கால வரையறைக்குள் ; மாத்திரை மாற்றாள் எனச் செய்யும் — பாண்டுவின் மனைவியாகிய மாத்திராதேவியின் சக்களத்தியாகிய (சக — களம் ஸ்திரீ) குந்தியாக்கும். அதாவது, குந்தி நடக்கச் செய்யும். அப்படியின்றி — அப்படித் துன்பம் நேராவண்ணம் இந் நூலைக் காக்கவும்; இல்லவித்தை — தேற்றாங்கொட்டை; மண் மயக்கமின்றி இயற்றல் போல் — நீரில் கலந்திருக்கும் மண்ணைப் போக்கித் தெளிவித்தல்போல ; பிழை இல்ல வித்தை — பிழை இல்லாத வித்தை இல்லையாகலின் ; இல்லெனச் செய்து — ஒரு குற்றமும் இல்லையென்னும்படி செய்து ; என்னை வந்து காக்கவே — என்னுடைய நூலைக் காப்பாயாக ! (32 – 39)

மறி — மடிந்து வருகின்ற ; கடலுலகில் — கடலால் சூழப்பட்ட உலகின்கண் ; பொறியுடை மாந்தர் — ஐம்பொறிகளால் அறிவையுடைய பெரியோர்களின் ; குறிகொடு — வழியைக் குறிப்பாகக் கொண்டு ; துருவு — ஆராய்கின்ற ; நெறியிஃ தாமே — வழி இதுவேயாகும். வேறு மார்க்கமில்லை. (40, 41)

**மருத்துவம் பார்க்கும் நாள்கள்**

**'உடுவரையன் மேதைபொனன்**
**உசனன்பின் உதிரன் உதயனலன்**
**உதவுபொருள் உருவாகுமெழில்**
**உத்தம மத்திமம் உற்றறி கஷ்டமில்**
**உற்றது மிற்றதும் உற்பன மிற்றே.'**

(சொ—ள்) : உடு அரையன் — நட்சத்திரங்களுக்கு அரச னாகிய சந்திரனுக்கு உரிய நாள் திங்கட்கிழமை ; உத்தமம் — மருத்துவம் பார்ப்பதற்கு உத்தமமான நாளாகும் ; மேதை — புதன்கிழமை ; மத்திமம் — மத்திமம் ; பொனன் — குருவாகிய வியாழக்கிழமை (அதமம்); உசனன் — வெள்ளிக்கிழமை (அத மாதமம்) ; பின் உதிரன் — பிறகு சிவப்பு நிறத்தையுடைய செவ்வாய்க்கிழமை (அதிலும் தாழ்ந்த நாள்); உதயன் — சூரியன் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை ; அலன் — கருமை வடிவத்தை உடைய சனிக்கிழமை (இவ்விரண்டு நாள்களும் சுத்தமாய் ஆகா. உற்றதும்—மருந்து கொடுத்தால் தீரா நாள்களையும் இற்றதும் — தீரும் நாள்களையும் ; உற்றறி — ஆராய்ந்து அறி வாய் (அப்படி அறிதல்); கஷ்டமில் - பின்னர் வருத்தப்படா மைக்கு வழியாகும். பொருள் உதவு — உயர்ந்த மருந்தைக் கொடு ; உரு — உடல்; எழில் ஆகும் — வனப்பு உண்டாம். உற்பனமிற்றே — நோய் நீங்கற்கு வழி இதுவேயாகும்.

குறிப்பு : இவை வடநாட்டுக் கொள்கை. தமிழ்நாட்டிற்கு ஞாயிறு, செவ்வாய், வியாழன் என்னும் மூன்று நாள்களே வார இலட்சணமாம். இதனைக் கீழ்க்காணும் மேற்கோளினால் உணரலாம்.

**'காரியும் புதனும் திங்கள் கருதிடில் மருந்து தீதாம்**
**சீரிய வெள்ளி நோயாம் செவ்வாய் வியாழன் பிணிதீரும்**
**பாரினி லுள்ள பேர்க்குப் பரிகாரம் செய்ய வேண்டின்**
**ஆரிய னருளி னாலே அருக்கநாள் மருந்து செய்யே.'**

### மருத்துவர்களாகத் தகாதவர்கள்

**'உவச்சன் காருகி உலகன் காழியன்**
**உலவன் காஞ்சுகி உமணன் காவிதி**
**உரகன் கம்மியன் உவணி யதோரணி**
**உபாசி யேனாதி உபாத்தி மாகதன்**
**உடோலி காபாலி உசாலி பாண்டிலி**
**உதாரி சாலினி உதாவியீங் கிவர்கள்**
**உண்மைப் பாண்டித உத்தியோக ராகார்.'**

(சொ—ள்) : உவச்சன் — பூசாரி (பூச்சன்); காருகி — கைக் கோளன்; உலகன்—குயவன்; காழியன் — வண்ணான் ; உலவன் — மலையாளி; (உலம் — மலை, கல்); காஞ்சுகி — கொல்

லன்; உமணன் – உப்பு விளைவிப்போன்; காவிதி—கணக்கன்; உரகன்—பாம்பாட்டி (உரகம் – பாம்பு); கம்மியன் – கம்மாளன்; உவணி—காருடவித்தைக்கரரன் (உவணம்—கருடன்); அதோரணி—யானைப் பாகன்; உபாசி – மந்திரவாதி; ஏனாதி— வேட்டைக்காரன்; உபாத்தி—உபாத்தியாயன்; மாகதன்— பட்டுவான்; உடோலி – மேளக்காரன்; காபாலி—அங்காளம்மை மருளன்; உசாலி—பாடகன்; பாண்டிலி—தேர்ப் பாகன்; உதாரி – வள்ளல்; சாலினி—தெய்வ உபாசகன்; உதாவி— ஆபத்துவமானவன்; ஈங்கு இவர்கள்—இப்பேர்ப்பட்டவர்கள்; உண்மைப் பாண்டித உத்தியோகராகார் — உண்மையான பாண்டித்தியம் உடைய மருத்துவராக மாட்டார்கள் (வயிறு வளர்க்க மருத்துவம் செய்பவர்கள் என்றவாறு).

### தீச் சகுனம்

**'ஏனாதி விலியன் வாணியன் ஏமாதுலன் வினையன்**
**ஏமலன் வாச்சியன் ஏவலன் வசியன்**
**ஏறூதியன் மடையன் பனை**
**ஏட்டையன் இந்தளி ஏட்டை யன்முன்**
**ஏகாசனி முண்டிதன் பள்ளி**
**ஏதிலன் வாதுவி ஏணியார்**
**ஏழக மாண்டலை ஏனங் கருப்பை**
**ஏடகன் சந்தன் ஏடகன் சந்தன்**
**ஏயிவர் முன்னே ஏலா தேல்பவை.'**

(சொ–ள்): ஏனாதி – அம்பட்டன்; விலியன்—வேட்டைக்காரன்; வாணியன்—எண்ணெய் விற்போன்; ஏமாதுலன்—தட்டான்; வினையன்—கூலிவேலை செய்பவன்; ஏமலன் – கிளிஞ்சில் சுடுபவன்; வாச்சியன் – மேளம் கொட்டுபவன்; ஏவலன்— வேலைக்காரன்; வசியன்—செட்டி; ஏறூதியன் – எருதுமீது பொதிபோட்டு வருபவன்; மடையன் – சமையலாள்; பனை ஏட்டையன் – கையில் பனையோலை கொண்டுவருபவன்; இந்தளி—விறகுகட்டை கொண்டுவருபவன்; ஏட்டையன் – தரித்திரன்; முன் ஏகாசனி – மேலாடையுடன் வருபவன்; முண்டிதன்—மொட்டைத் தலையன்; பள்ளி—அடிமையான்; ஏதிலன்— அந்நியன்; வாதுவி – குதிரையைப் பழக்கக்கூடியவன்; ஏணியார் – மான்குட்டி, பாம்பு போன்றவைகளைக் கொண்டுவருபவன்; ஏழகம் ஆட்டுக்கடா; ஆண்டலை—சேவல்; ஏனம்— பன்றி; கருப்பை – எலி; ஏடகன் சந்தன்—செய்தி கூறுவோன், விபூதி பூசிக்கொண்டு வருபவன்; ஏடகன்—கைக்கோளகன்

(கைக்கிளையன்); சந்தன் ஏயிவர் — எப்பொழுதும் தூது செல்பவர்; முன்னே ஏல்பவை ஏலாது – முன்னே வருவது கூடாது.

### நற்சகுனம்

**‘ஏகாலி வாரணி ஏணியன் கோவலன்**
**ஏதிய னரசன் ஏடன் பண்டிதன்**
**ஏனலன் மந்திரி ஏலவையன் புலையன்**
**ஏடன் சதுர்த்தன் ஏமாப்பி னன்வரன்**
**ஏரக னூர்திமா ஏரமூர் காத்திரி**
**ஏர்விடை கருணி ஏணங் கரண்டம்.’**

(சொ–ள்) : ஏகாலி—வண்ணான்: வாரணி—மாவட்டிக்காரன்; ஏணியன் – சாணான்; கோவலன் – இடையன்; ஏதியன் —ஏனாதி; அரசன் – அரசன்; ஏடன்—தோழன்; பண்டிதன்—வித்துவான்; ஏனலன் – குறவன் (கூட்டுடன் வருபவன்); மந்திரி —அமைச்சன்; ஏலவையன்—பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுகின்றவனான கம்பு கட்டியான்; புலையன் – பறையன்; ஏடன் —பூக்காரன்; சதுர்த்தன் - சாதுரியமாகப் பேசுபவன்; ஏமாப்பினன் – வெகுமதி பெற்றிருக்கிறவன்; வரன்—தெய்வ வரம் பெற்ற உத்தமன்; ஏரகன் ஊர்தி—மயில்; மா – குதிரை; ஏரமூர்—நகாரு போட்டிருக்கிற எருது ; காத்திரி — காருடமாரம் பொறுக்கிற ஒட்டகம்; ஏர்விடை—ஏரில் பூட்டியிருக்கிற எருது; கருணி – பெண் யானை; ஏணம்—கூட்டுடன் கூடிய புனுகு பூனை; கரண்டம்—நீர்க்காக்கை இவை எதிரில் வரின் நன்மையாம்.

### மருத்துவம் செய்வதற்கு ஏற்கும் திதி, நட்சத்திரம், ராசி

**‘ஏகா தசிநவம் ஏற்குமற் றவையே**
**ஏறுரே வதியார் ஏற்குமற் றவையே**
**ஏழை யிரட்டைவில் ஏற்கு மோரையே**
**ஏதுவாய் வைத்தியர் ஏசாப்பாண் டிதமுறை**
**ஏசறு மாயுளர் ஏற்பா டிஃதே.’**

(சொ–ள்): ஏகாதசி—ஏகாதசி; நவம் —நவமி; மற்றவையே —இவை நீங்கலாக; ஏற்கும் – மற்றத் திதிகள் எல்லாம் ஏற்கும்; ஏறு – அசுவனி; ரேவதி—ரேவதி; ஆர் – ஆயில்யம்; மற்றவை ஏற்கும் – இவை நீங்கலாக மற்றவையெல்லாம் மருத்துவம் செய்யக்கூடிய நட்சத்திரங்களாகும் ; ஏழை — கன்னிராசி; இரட்டை – மிதுன ராசி; வில் – தனுர் ராசி நீங்கலாக; ஏற்கும்

ஓரையே — மற்ற ராசிகள் எல்லாம் ஏற்கும்; ஏசறும் — குற்றமற்ற; ஆயுளர் — மருத்துவர்களுக்கு; ஏதுவாய் — சாதகமாக; ஏசாப் பாண்டித முறை — குற்றமற்ற மருத்துவ முறையைக் கூறிய வைத்தீஸ்வரர்; ஏற்பாடிஃதே — கூறியுள்ள முறையிதுவே யாகும்.

**நோய் தோன்றற்குக் காரணங்கள்**

**'ஓலத்தி னாலதிக பாரத்தி னாலே**
**ஓவாத வுரையாற்சை யோகத்தி னாலே**
**ஓச்சலி னாலே ஓட்டலி னாலே**
**ஓட்டவி லாழிபல ஓட்டுத லாலே**
**ஓடமே றலினால் விடாமழை யினாலே**
**ஓதமே வலினால் வினையோதி மத்தன்**
**ஓதிமத் தன்ஓதி மத்த னாட்டினால்**
**ஓதியி தாமென ஓதி யேதலை**
**ஓரசை வால்வரி ஓகை யால்வகை**
**ஓதன மிஞ்சும் புசிப்பத னால்நீர்**
**ஓடையி லுந்துங் களிப்ப தனாலே**
**ஓணம்பனை ஓதப்பெயர் ஓடஞ்சா டுறலால்**
**ஓங்கலி லேறிமெய் ஓங்கலி னாலே**
**ஓவாக் காதர ஒளிமே லுறுமென்**
**ஓதுமா வைத்திய ஓதுமா வேளூர்**
**ஓமதூ மாதரர் ஓர்விஃ தாமே.'**

(சொ—ள்) : ஓலத்தினால்—எப்போதும் கூச்சலிட்டுப் பேசு தலாலும்; அதிக பாரத்தினாலே — அதிகச் சுமைகளை எடுப்ப தனாலும் ; ஓவாத உரையால் — அளவுகடந்து இடைவிடாமல் பேசுவதாலும் ; சையோகத்தினால் — (அளவு கடந்து) பெண் களைக் கூடுவதாலும் ; ஓச்சலினால் — (எப்போதும்) கையை யோங்கி எறிதலினாலும் ; ஓட்டலினால் — (எப்போதும்) ஓட்டு வதாலும் ; ஓட்டம் — விரைவினையுடைய ; வில் — வில் வித்தையினாலும் ; ஆழி — சக்கரத்தையுடைய வண்டிகளை யும் அவைபோன்ற பலவற்றையும் ; ஓட்டுதலாலே — ஓட்டு தலினாலும் ; ஓடம் ஏறலினால் (அடிக்கடி) ஓடத்தில் ஏறிச் செல்வதாலும் : விடாமழையாலே — அடர்மழையில் நனைவ தாலும் ; ஓதம் மேவலினால் — எப்போதும் ஈரமாயிருக்கிற சதுப்பு நிலத்தில் வசிப்பதாலும் (அல்லது ஈரத் துணியைக் கட்டியிருத்தலாலும்) ; வினை ஓதிமத்தன் — எப்போதும் பனி யிலேயே திரிகிறதனாலும் ; ஓதிமத்தன் — கட்குடித்து வெறி

கொண்டு மயங்கிப் போவதனாலும்; ஓதிமத்தன் நாட்டினால் — பிரமனது வீடாகிய தாமரைக் கிழங்கையே கறிசெய்து சாப்பிடுவதனாலும்; ஓதியிது ஆமென ஓதியே தலை ஓர் அசைவால் — இராகங்களைப் பிறருக்குத் தான் சொல்லித் தரும்போது இதுதான் இதுதான் என்று சொல்லித் தலையை யொருபுறமாய் இயற்கைக்கு மாறாக அசைத்தலினாலும்; வரிஓகையால் — மிக்க களிப்பினாலும்; ஓதனம் வகை மிஞ்சும் புசிப்பால் — பலவகை உண்டிகளை அளவுக்கு அதிகமாய்ப் புசிப்பதாலும்; நீர் ஓடையில் உந்தும் களிப்பதனால் — நீர் நிறைந்த ஓடையில் எப்போதும் அமர்ந்து நீராடிய களிப்பாலும்; ஓணம்பனை ஓதப்பெயர் ஓடம் சாடுறலால் — ஓணம் என்னும் பெயர் வழங்குமாறு பெருமையும் குளிர்ச்சியும் பொருந்திய கடலில் ஓடம், பெருங்கூடை முதலியவற்றிலேறிக் கடத்தலினாலும்; ஓங்கலிலேறி மெய் ஓங்கலினால் — மலைமேலேறிக் குதித்து உடம்பு ஓங்காமல் சோர்தலினாலும்;

ஓவாக்காதரஒளி — ஒளி நீங்காத் துன்பத்தை விளைவிக்கின்ற நோயானது; மேல் உறும் என — வெளிப்படும் என்று; ஓது மா வைத்தியம் — சொல்கின்ற சிறந்த மருத்துவத்தை; ஓதுமா வேளூர் — கற்றோரால் துதி செய்யப்பட்டு வருகின்ற புள்ளிருக்கு வேளூரில் எழுந்தருளியிருக்கின்ற; ஓம தூம ஆதரர் — வேள்வி விரும்பினரான வைத்தீசுவரர்; ஓர்வு இஃது — ஓர்ந்து உணர்த்தின விதி இஃதாம்.

### மருத்துவரிலக்கணம்

### ஆசிரியப்பா

**'ஔவைக்கு நேராகி ஔவைக்கு நேராய்**
**ஔவைப் பருவமெய்தி ஔவைப் பினாடி**
**ஔவிய மோவுத லாயுளர்க் கியல்பே.'**

(சொ—ள்): ஔவைக்கு நேராகி — (கடவுள் வழிபாட்டிலும் பல நூல்களை நன்றாய் ஆராய்ந்தறிவதிலும்) ஔவைக்கு ஒப்பாகி; ஔவைக்கு நேராய் — (தன் சொந்தப் பிள்ளைக்கு நோய் வந்தவிடத்து நற்றாயானவள் அந் நோயைத் தீர்க்க எவ்வளவு அன்பு, கவலை உடையவளாய் இருப்பாளோ, அவ்விதமே நோயாளியிடத்தில் அன்பு, கவலைசெலுத்துதலில்) தாயனையவராய்; ஔவைப் பருவம் எய்தி — (மிக்க மூப்பைப் பெற்ற கிழவி இவ் வுலக வாழ்க்கையில் பழக்கம் பெற்றிருத்தல் போல, நோயிலக்கணம், மருந்தருத்தல் முதலியவற்றில்)

விருத்தராய் (அதாவது, முழு அனுபவ சித்தராய்); ஔவைப் பினாடி — (ஆழ்ந்த கருத்து, புத்தி நுட்பம் முதலியவற்றை யுடையராயிருத்தலில்) ஔவையைப் பின்பற்றி; ஔவியம் ஓவுதல் — (பிறர் ஆக்கம் கண்டு) பொறாமை கொள்ளுதலை விட்டிருத்தல்; ஆயுளர்க்கு இயல்பு — உத்தம மருத்துவர் களுக்குரிய இலக்கணமாகும். ஏ — அசை.

### நசியம்

**'நசியந்தலை வலிமற்றது நசியந்தக னாமே**
**நையத்தெறு மையப்பிணி நவ்விக் கிதுபுலியே**
**நமனுக்கொரு நமன்வெற்றியை நறுக்கிப்பிழி மூக்கில்**
**நளிருஞ்சுர குளிருந்தலை நடுக்கும்பிணி விடுக்கும்.'**

(சொ—ள்): நசியம்—நாசியில் விடக்கூடிய மருந்தானது; தலைவலி—தலைநோயையும்; மற்றது—அதனுடன் சம்பந்தப் பட்ட மற்றநோய்களையும்; நசி—ஒழிக்கின்ற; அந்தகன் ஆம்— ஏமனுக்கு ஒப்பானதாகும்; நைய—உடலும் உயிரும் மெலி யும்படி; தெறும்—வருத்துகின்ற; ஐயப்பிணி—சீதள நோயாகிய; நவ்விக்கு—மானுக்கு; இது—இந்த நசியமானது; புலியே— புலிக்கு ஒப்பானதாகும். அந்த நசியமாவன: நமனுக்கு— எமனுக்கு; ஒரு நமன்—ஒப்பற்ற எமனாகிய சிவபெருமான் அணிந்த; வெற்றியை—வெற்றிமாலையாகிய தும்பைப் பூவை; நறுக்கி—சிதைத்துவருஞ் சாற்றை; மூக்கில் பிழி—மூக்கில் விடவேண்டிய அளவாக விடுவாய் (அப்படி விட்டால்); நளிரும்—தனிக் குளிரும்; சுர குளிரும்—குளிர் சுரமும்; தலைநடுக்கும் பிணிவிடுக்கும்—தலையை நடுங்கச் செய்கின்ற நோயாகிய நடுக்குவாதமும் (கம்ப வாதம்) நீங்கும்; (இத் தும்பையானது தன்னுடைய வலிவு காரணமாக ஒருவனை அழிக்கவருகின்ற அரசனை எதிர்த்து அவனை அழிப்போன் தரிப்பதாம். அவ்வாறாக மார்க்கண்டேயனைத் தன் வன்மை காரணமாக அழிக்கவந்த எமனை அழிக்கவந்த வேளையில் சிவபெருமான் அணிந்திருக்க வேண்டியது தும்பை மலர் மாலை யாகையால், அம்முறைப்படி 'நமனுக்கொரு நமன் வெற்றி' என்று அத் தும்பையைக் கூறினார் தேரையர். இதனை.

**'மைந்து பொருளாக வந்த வேந்தனைச்**
**சென்றுதலை யழிக்குஞ் சிறப்பிற் றென்ப'**

என்று தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியலிற் கூறியதனால் அறிக.

## நோயினுற்பத்தி

'நோயினுற் பத்திகேள் நோன்மைகூர் மைந்தனே
நோயாளி யென்பதறு நோயாளி முன்னே
நோய்கள்வினைக் காதரமு னோய்கள் வரவேது
நோனாமை யால்வெகுளி நோனாத பசியால்
நோனாத நீர்பருகல் நோனாத வுணவால்
நோக்கியரு மைதாக நோக்கியொழி துயிலால்
நோக்கரென நடமாடி நோக்கிநட மிடலால்
நோட்டக்கா ரரிணாடி நோட்டமொழி குரலால்
நோவையர் மாதரொடு நோவமரு வுதலால்
நோன்புவிர தாதிமிக நோற்கவரு மெலிவால்
நோஞ்சையென வணுகுவை நோவவயி லுதலால்
நோண்டவரி தெனவேரை நோண்டியய ருதலால்
நோனாத யீரமடி நோனவணி குதலால்
நோய்களுற் பத்திவெகு நோய்கள்விளை விரையாய்
நோய்கள்விளை வயலாய்மெய் நோய்கள்வளர் பயிராய்
நோயுதவு பலனாகி நோய்கள்வெகு மேலாம்
நோதக வுரைத்தனமி நோய்களற மேலே
நோயினிக லாளர்புரி நோன்மையிஃ தினியே.'

(சொ–ள்) : நோன்மைகூர் மைந்தனே – மருத்துவ நூலை ஆராய உள்ளத்தில் வன்மை மிகக்கொண்ட மாணாக்கனே ; நோயின் உற்பத்தி கேள் — மக்கள் உடலில் நோய் தோன்றும் வரலாற்றைத் திரட்டிப் பொதுவாகச் சொல்லுகிறேன் அதை நீ கேட்டுக்கொள்வாயாக; நோயாளி என்பது – நோயாளி என்று சொல்லிக்கொள்வதை ; அறு — நீக்கு ; நோயாளி — நோயுற்ற வனுக்கு ; நோய்கள் வரவு — அந் நோய்கள் வருதலுக்கு ; ஏது — காரணங்களாவன ; முன்னே நோய்கள் — பழவினைத் துன்பங்களும் ; வினைக் காதரமும் — இப்பொழுது செய்கிற உணவு செயல்களின் துன்பங்களுமாம். (ஆயினும் அவற்றில் உணவு, செயல்களாகிய காரணத்தாலேயே ஈண்டுச் சொல்லு கிறேன்) அவை : நோனாமையால் — அது நன்றாகவில்லை இது நன்றாக வில்லை என்று சொல்லி எதையும் வெறுத்தலாகிய சகியாமையாலும்; வெகுளி – எப்பொழுதும் சினம் கொள்வ தாலும்; நோனாத பசியால் – பொறுக்கவியலாத மிக்க பசி யாலும்; நோனாத நீர் பருகல்—(குடிக்கவேண்டிய விதிப்படி காலத்தில் குடியாமல் நினைத்த நினைத்த காலங்களிலெல்லாம்) மிகுதியாக நீர் குடித்தலாலும்; நோனாத உணவால் – (ஒரு நாளைக்கு இத்தனை பொழுதுதான் உண்ணவேண்டுமென்கிற

விதியைக் கடந்தும் அவ் விதிப்படி உண்ணினும்) மிகுதியாக உண்ணும் உணவாலும்; நோக்கம் அருணம் அதுவாக நோக்கி —எப்பொழுதும் மேற்பார்வையாய்ச் சூரியனையே பார்த்துக் கொண்டு இருப்பதாலும் ; ஒழிதுயிலால் — (உடற்பயிற்சி யாதொன்றுமின்றி) தொழிலற்றுச் சோம்பலாய் இருத்தலி னாலும்; நோக்கர் என — நோக்கர் என்னும் குலத்தினர் நடிப்பதுபோல ; நடமாடி — நடை முதலியவற்றைக் காட்டி; நோக்கி — மேற்பார்வையாய்ப் பார்த்து; நடமிடலால் — நடிப்ப தனாலும் ; நோட்டக்காரரின் நாடி நோட்ட மொழி குரலால்— பொருள்களின் நோட்டம் பார்ப்பவர்களைப்போலத் தாம் பல வற்றின் நோட்டம் கண்டு எப்பொழுதும் சத்தமாய்ப் பேசுத லாலும்; நோயயர் மாதரொடு நோவ மருவுதலால் — நோயால் வருந்திக்கொண்டிருக்கிற பெண்களுடன் தான் துன்பப்படற்கு ஒரு காரணமாய்ப் புணர்தலினாலும் ; நோன்பு விரதாதி மிக நோற்கவரும் மெலிவால் — ஒருபொழுது உண்டு பல நோன்பு கள் நோற்பதால் உண்டாம் உடல் மெலிவாலும்; நோஞ்சை யென அணுகு உணவு நோவ அயிலுதலால் — சிறு உணவும் வருத்தப்பட்டுக்கொண்டே உண்ணுதலாலும்; நோண்ட அரிது என வேரை நோண்டி அயருதலால் — அம் மரத்தின் வேர் கல்லி எடுத்தற்கு அவ்வளவு கடுமையா ? பார்ப்போமென்று அதைக் கல்லி உடல் சோர்வு அடைதலாலும் ; நோனாத ஈரம் மடி நோன அண்ிகுதலால் — மிகுந்த ஈரத் துணியை எப்பொழுதும் கட்டிக்கொண்டிருப்பதாலும் ; நோய்கள் உற்பத்தி — நோய் கள் உண்டாகும்.

வெகு நோய்கள் விளைவிரையாய் — அவை மிக்க நோய்கள் விளைகின்ற விதையாகவும்; நோய்கள் விளை வயலாய் — அவ் விதைகளிலிருந்து வேறு நோய்கள் உண்டாகக்கூடிய வயலாக வும்; மெய் நோய்கள் வளர் பயிராய் — உடல் நோய்கள் வளரக் கூடிய பயிராகவும்; நோயுதவு பலனாகி — அப் பயிரிலிருந்து வேறு நோய்கள் வளரக்கூடிய பலனாகவும்; நோய்கள் வெகு மேலாம் — இன்னும் வெகுநோய்களுமுண்டாம்; நோ்தக உரைத் தனம் — இவற்றை நோய்க்குத் தக்கவாறாகச் சொன்னோம். இனி — இனிமேல் ; இந் நோய்கள் அற — இச் செய்யுளில் சொல்லப்படும் காரணங்களால் உண்டாகக்கூடிய நோய்கள் நீங்க ; நோயின் இகலாளர் புரிநோன்மை — அதற்குப் பகைவரான மருத்துவர்கள் தக்க வழிசெய்தல் அவர்களின் வன்மையாம்.

## மிசைபண்டக் குணம்

மிசைபண் டக்குணம் மிசைபண் டக்குணம்
மிச்சி லெனப்புகல் மிசைதலி னெச்சம்
மிகைப்படி லெஞ்சிடில் மித்திர பேதம்
மிசைமடை யின்குணம் மிக்குர மெய்க்கே
மிசையவ லின்குண மிடிதண வாதே
மிசையு மபூப மிடலை யளிக்கும்
மிஞ்சுநெ யாக்கை மிஞ்சணி யாமே
மிக்க சுதைக்கொரு மிக்குமெய் யழகு
மித்திர வமுதுண மித்திர னாமெய்
மிகுததி பருகவு மிகுமெழின் மேனி
மிதமோர் பருகவு மிதமா முடலே
மித்தைய முண்ணமெய் மித்தை யிராதே
மிடலுறு தேன்கொள மிடறுர மாமே
மிகுகரு ணையயுண மிருதுர மெய்க்கே
மிரியலி னறல்கொள மின்மினி யாமெய்
மிகுமுசா ரணமுண மிலையுமெய் யொளியே
மிசையயி ரமுதுகொள மிளிரணி யாமெய்
மிழற்றரம் பைக்கனி மிசையுறு மையே
மிழற்றுறைக் கனியுணின் மிஞ்சுமைக் கனலே
மிடைமாங் கனிரச மிசையுடல் கசமே
மிக்க பலாக்கனி மிசையுடல் வசமே
மித்துரு வரையலுண மிதுனம தாக்கை
மிசையலி லட்டுக மிருகபதி யுடலே
மிஞ்சுநெய் பாயசம் மிசையமு தஃதே
மிலையு மிலைக்கறி மிசைவதுப் பூதே
மிழற்று பழங்கறி மிசைவது மிழிவே
மின்னலி னழியுமெய் மிசையினெள் ளாணம்
மித்திர பேதன மிக்குமை யவியால்
மிச்சிலென் றாலுமெய் மிசைவது சுகமே
மிதமறி வூணினன் மிருகண் டேயன்
மிசைபண் டக்குண மிதமிஃ தாமே.

(சொ-ள்.): மிசை—உண்ணக்கூடிய; பண்டம்—பொருள்களுடைய; குணம் — தன்மைகள் ; மிசை — மேல் ; பண்டு—பழமையாகிய; அ — அந்த ; குணம் — பண்புகளாம் ; மிச்சில் என புகல் — உயர்ந்த பொருள்களென்று சொல்லப்படுகின்றவை ; மிகைப்படில் — அதிகப்பட்டாலும் ; எஞ்சிடில் — குறைந்தாலும் ; மித்திரபேதம்—உடல்நலம் மாளும்; மிசை—

தின்கிற; மடையின்குணம்—சோற்றின் குணமாவது; மெய்க்கு — உடலுக்கு; மிக்குஉரம் — மிகுபலத்தைக் கொடுக்கும்; மிசை — தின்கிற; (உயர்ந்த) அவலின் குணம் — அவலினது குணத்தால்; மிடி தணவாதே — வறுமை நெருங்காது; மிசையும் அபூபம்—உண்ணும் அப்பம்; மிடலை அளிக்கும்—உடம்பிற்கு வலிமையைக் கொடுக்கும்; மிஞ்சுநெய் — நெய் உண்ண; யாக்கை — சரீரத்திற்கு; அணியாமே—அழகைக் கொடுக்கும்; மிக்க சுதை—அதிகமாகப் பால் அருந்துதல்; ஒரு மிக்கு மெய்யழகு — மிகுந்த அழகைக் கொடுக்கும்; மித்திர வமுதுண—சித்திரான்னங்களைப் புசிக்க; மித்திரனாம் மெய்—சரீரத்திற்கு நண்பனாகும்; மிகுததி பருக—மிகுந்த தயிர் பருக; மிகும் எழின்மேனி—சரீரத்தின் அழகு அதிகரிக்கும்; மித மோர் பருக — அளவுடன் மோர் கொள்ள; மிதமாம் உடலே—உடல் மிதமாகும்; மித்தைய முண்ண — வெண்ணெய் உண்ண; மெய் மித்தையிராதே — மெய் பொய்யாகாது; மிடலுறு தேன் கொள — வலிமையுள்ள தேன் கொள்ள; மிடறு உரமாமே—தொண்டை உரமாகும்; மிகு கருணையையுண — சிறந்த கருணையை உண்ண; மிருதுரமெய்க்கே — உடல் நொய்மையை யடையும்; மிரியலின் அறல் கொள—மிளகு நீரை உண்ண; மின்மினியாம் மெய்—உடல் மினுமினுப்படையும்; மிகு முசாரணமுண — பெருங்காயம் உண்ண; மிலையுமெய் யொளியே—உடலுக்கு ஒளியைக் கொடுக்கும்; மிசையயிரமுது கொள — சர்க்கரைப் பொங்கல் உண்ண; மிளிரணியாமெய்—சரீரத்திற்கு அழகைக் கொடுக்கும்; மிழற்றரம்பைக்கனி மிசை யுறுமையே — வாழைப்பழம் உண்ண அழகுண்டாம்; மிழற் றுறைக் கனியுணின் — மிளகாய் உண்ண; மிஞ்சுமைக்கனலே —கபானலம் உண்டாம்; மிடைமாங்கனிரசம்—மாங்கனிரசம் உண்ண; மிசையுடல் கசமே—உடல் யானை போன்ற வலுவைப் பெறும்; மிக்க பலாக்கனி—பலாக்கனி உண்ண; மிசையுடல் வசமே—மேலான உடல் தன் வசப்படும்; மித்துரு வரையலுண—மூங்கிலரிசியுண்ண; மிதுனமதாக்கை — சரீரம் இரட்டிக்கும் (பருக்கும்); மிசையில் லட்டுகம்—லட்டு சாப்பிட; மிருகபதியுடலே—சரீரம் சிங்கத்தைப்போல் ஆகும்; மிஞ்சுநெய் பாயசம் — நெய் பாயசம் உண்ண; மிசையமுதஃதே—சரீரத் திற்கு மேலான அமுதமாகும். மிலையுமிலைக்கறி—கீரை களுண்ண; மிசைவதுப்பூதே — சரீரத்திற்கு அழகுண்டாகும்; மிழற்று பழங்கறி—பழங்கறி உண்ண; மிசைவது மிழிவே—உடலுக்கு மிகுந்த குற்றத்தை உண்டாக்கும்; மிசையினெள்ளாணம் —எள் சோறுண்ண; மின்னலினழியும்—நொடிப் பொழுதில் அழிந்து விடும்; மித்திரபேதனம் மிக்கும் ஐயவியால்—கடுகால்

உடல் அழிந்துவிடும்; மிச்சிலென்றாலும்—கரியென்றாலும்; மெய்மிசைவது சுகமே—சரீரத்திற்குச் சுகம்; மிதமறிவூணினன் —மிதமாக உண்ணக் கூடியவன்; மிருகண்டேயன்— என்றும் மார்க்கண்டேயனாக வாழ்வான்; மிசைபண்டக் குணமிதாமே — உண்ணும் பண்டப் பொருள்களின் குணம் இதுவே யாகும்.

## (ஈ) தனிப்பாடல் திரட்டு

**ஆயுள் மாமறை யேமறை யாமெவ்வா றென்னின்**
**ஆய வீடடை வோர்கள் மானியர்களே யல்லால்**
**ஏய வேறிலை யவருடல் வீந்திடா தியற்றத்**
**தூய நன்மருந் துரைத்தலா லாமெனச் சொல்வாய்.**

(குறிப்புரை): பிணியைத் தடுத்தும் நீக்கியும் ஆயுளை வளர்க்கக்கூடிய வழிகளைக் கூறுகின்ற மருத்துவ நூல்களே மறைகளாகும். எவ்வாறென்னில் பேரின்பத்தை நுகர வல்லவர்கள் மக்களே அன்றி வேறு உயிரினங்களில்லை. ஆதலினால், அம் மக்களின் உடல் அழியாது இருக்க இம் மறைகள் பரிசுத்தமான நன்மருந்துகளைக் கூறுகின்றபடியால் என்க.

### மருத்துவம் மூன்று வகைப்படுமெனல்

**சூதகந்தி தாதுபற்பம் சொன்னநாட் டார்சிகிச்சை**
**ஓதரிய மூலியிம்மண் ணூர்சிகிச்சை—வேதடரும்**
**சத்ரக்ஷா ராக்கினிநி சாசரச் சிகிச்சையென்றே**
**முத்திறத்த தென்று மொழி.**

(கு-ரை.): மருத்துவம் மூன்று வகைப்படும். அவை முறையே விண்ணவருறை, மக்களுறை, சூருறை என்பனவாம். இரசம், கந்தகம், தாதுப் பொருள்களின் பற்பச் செந்தூராதிகளைக் கொண்டு செய்யும் மருத்துவம் விண்ணவருறையாகும். மூலிகைகளைக்கொண்டு செய்யும் சூரணம், குடிநீர், வடகம் முதலியவற்றைக்கொண்டு செய்யும் மருத்துவம் மக்களுறையாகும். காரம், அறுவை, கட்டுதல், சுட்டிகை முதலியவற்றைக் கொண்டு செய்யும் பரிகாரம் சூருறையாகும்.

### பேதி மருந்து (சுரசம்)

**கடுக்களிசுக் கிந்துகரி கால்மதங்கோ டங்கை**
**யடுக்களை நீர்வார்த் தரைத்துக்—கொடுக்க**
**வளரு மிளமுலை மாதே வயிறு**
**களகுள களகுள காண்.**

(கு-ரை.): கடு—கடுக்காய்; களி—களிப்பாக்கு; சுக்கு—சுக்கு; இந்து—இந்துப்பு; கரிகால்—யானையின் கால்களாகிய நான்கு பங்கு; மதம்—யானையின் மும்மதமாகிய மூன்று பங்கு; கோடு — யானையின் கொம்பாகிய இரண்டு பங்கு; அங்கை—யானையின் தும்பிக்கையாகிய ஒரு பங்கு; அடுக்களை நீர்—நிசிநீர்.

செய்முறை: கடுக்காய்—4 பங்கு; களிப்பாக்கு—3 பங்கு; சுக்கு—2 பங்கு; இந்துப்பு—1 பங்கு: இவைகளை முறையாகத் தூள்செய்து, நிசிநீர் விட்டு நன்றாய் அரைத்துச் சுரசமாக்கிக் கொடுக்கப் பேதியாகி மலக்கட்டுகள் நீங்கும். வாதத்தால் கீல்மூட்டுகளில் உண்டாம் குடைச்சல், வலி முதலிய வாயுத் தொல்லைகள் தீரும். உடம்பு மென்மையாகும். தூக்கம் உண்டாகும்.

**பேதி கட்ட**

**ஆனைக் கன்றி லொருபிடியும்**
**அரையன் விரோதி யிளம்பிஞ்சும்**
**கானைக் குதிரைப் புறத்தோலும்**
**காலிற் பொடியை மாற்றினதும்**
**தானைத் தாய்கொல் சலத்துடனே**
**தயவாய்க் காய்ச்சி நாலிலொன்றாய்**
**மானைப் பொருதும் விழியாளே**
**வடுகுந் தமிழும் குணமாமே.**

(இதன் பொருள்): ஆனைக்கன்றி லொருபிடியும்—ஆனைப் பெயர் கொண்ட அத்திப்பிஞ்சு ஒரு பிடியும்; அரையன் விரோதி இளம் பிஞ்சும்—அரசனுக்கு விரோதி கோ. அப் பெயர்கொண்ட கோவை இளம்பிஞ்சும்; கானக்குதிரை புறத் தோலும் — காட்டில் பயிராகும் குதிரைப் பெயர்கொள் மாமரப் பட்டையும்; காலிற்பொடியை மாற்றினதும்—காலிற் பொடி படாது செய்யும் செருப்பின் பெயர்கொண்ட செருப்படையும்; தானைத் தாய்கொல் சலத்துடனே — தன்னை ஈன்ற தாயைக் கொல்லும் வாழையின் நீரும்; தயவாய்க் காய்ச்சி நாலிலொன் றாய் மானைப் பொருதும் விழியாளே! வடுகுந் தமிழுங் குண மாமே—மானைப் போர் செய்யும் விழியழகுடையாளே! இட்டத்தோடு நாலிலொரு பங்காய்க் காய்ச்சிய கியாழத்தை அருந்தில் வடுகிற்கும் தமிழிற்கும் பொதுப்பெயர்கொண்ட கடுப்பு (பேதி) குணப்பட்டுக் கட்டும் என்ப.

### குளிர்சுரக் கியாழம்

**இப்பினார் தன்மே லாணை**
**யிடுபுடோல் முத்தக் காசு**
**பப்படாம் சீந்தில் சுக்கு**
**பையவே நையக் காய்ச்சும்**
**அப்பினார் தேனி னாரோ**
**டளாயினா ரென்னக் கேட்டு**
**வெப்பினார் குளிரி னாரை**
**வினவினார் விடைகொண் டாரே.**

(இ-ள்.): இப்பினார் — அக்கினியையும் நாகத்தையும் உடைய பரமசிவன் (சங்கரன்); தன்மேலாணை—மேலிட்ட ஆணைப்படி; இடுபுடோல்—சுடுகாட்டிடமாய்க் கொண்ட பேய்ப்புடல்; முத்தக் காசு — கோரைக் கிழங்கு; பப்படாம்— பற்பாடகம்; சீந்தில் சுக்கு பையவே நையக் காய்ச்சும் அப்பினார்—சீந்தில் தண்டு சுக்கு இவற்றையும் நைய இடித்துப் பைய எட்டிலொன்றாய்க் காய்ச்சிய கியாழ ரூபங்கொண்டார், தேனினாரோ டளாயினார் என்னக் கேட்டு—தேனென்ப வரோடு கலந்துகொண்டார் என்பதைக் கேட்டு; வெப்பினார்— அதி உஷ்ணங் கொண்டவர்; குளிரினாரை—தனக்கு முதல் துணையான குளிரையுடையவரை; வினவினார்—யாம் இப் பெரும் படைத் தலைவர் முன் செய்வது யாதெனக் கேட்டார்; விடைகொண்டாரே—இனிச் செய்கைக்கிடமில்லாமையால் இருவரும் வந்தவரிடம் விடை கொண்டேகினர். பற்படாம் பப்படாம் என்று எதுகை நோக்கி நின்றது.

இச் செய்யுள் அகத்தியர் 2,000 என்னும் நூலிலும் காணப் படுகின்றது.

### விக்கலுக்குச் சூரணம்

**எட்டுத் திப்பிலி ஈரைந்து சீரகம்**
**சுட்டுத் தேனிற் கலந்துண்ண விக்கலும்**
**விட்டுப் போகும் விடாவிடில் புத்தகஞ்**
**சுட்டுப் போடுநான் தேரனு மல்லனே.**

புத்தகம்—மயிலிறகு.

**செய்முறை:** திப்பிலி 8 பங்கு. சீரகம் 10 பங்கு, மயிலிறகு சுட்ட சாம்பல் $4\frac{1}{2}$ பங்கு.

திப்பிலியையும் சீரகத்தையும் நன்றாகப் பொடித்து மயி லிறகு சாம்பலுடன் கலந்து தேனில் கொள்ள விக்கல் தீரும்.

**அளவு :** அரைமுதல் 1 கிராம், இரு வேளை.

### தாளிசாதி வடகம்

**தாளிச பத்திரி மரிசஞ் செவ்வியந் தத்தந் தொடியொன்றே**
**சரமொடு கட்டையும் ஆதிக் கிருபால் சந்தரணி முப்பாலாம்**
**நீளில வங்கத் தோலிலை யாடகி நிட்குடி வெகுமூலம்**
**நெடுகப நாசனி வகைவகை கஃசா நிறைவடி துகளூடே**
**வேளிரு கைச்சிலை வட்டெடை சைவம் விரவிப் பயதாழி**
**வெந்தை எடுத்திடி சிறுலிகுசத் தளவே வடகம் பிடியுண்**
**யாளியை யொத்த கபங்கால் கிரகணி அலசங் கொடுவமனங்**
**யதிசா ரம்பக் கத்தெழு நோயிவை யலரிப் பனியாமே.**

(இ–ள்.) : தாளிசபத்திரி மரிசம் செவ்வியம் தத்தம் தொடி யொன்றே—தாளிசபத்திரி, மிளகு, செவ்வியம் இவை வகைக்கு ஒவ்வொரு பலம் ; சரமொடு கட்டையும் ஆதிக்கிருபால் — திப்பிலியும் திப்பிலிக் கட்டையும் முன்சொல்லியதற்கு இரண்டு பங்கு (வகைக்கு இரண்டு பலம்); நீளிலவங்கத் தோலிலை — இலவங்கப்பட்டை, இலவங்கபத்திரி; ஆடகி நிட்குடி—சிறு நாகப்பூ, ஏலம்; வெகுமூலம்—வெட்டிவேர் ; நெடுகபநாசனி— சிற்றரத்தை ; வகைவகை கஃசாநிறை — வகைக்குக் கால் பல எடை ; வடி — மேற்கண்ட சரக்குகளை வறுத்து இடித்துப் பொடித்து வஸ்திரகாயம் செய்து; துகளூடே—தூரணத்துடன்; வேளிரு கைச்சிலை வட்டு—கரும்பு வெல்லம்; எடை சைவம்— சைவக் கிரியைகள் பதினாறு என்று சொல்லப்படும் நிறை பதினாறு பலம் ; விரவி — கலந்து; பயதாழி — பால் உள்ள மண்பாண்டத்தின் மீது வேடுகட்டி அதன்மீது வெல்லம் கலந்த தூரணத்தைப் பரப்பி மேல்மூடி எரித்து; வெந்தை எடு—பிட்டுப் போல் வேகவைத்து வெந்தவுடன் சூட்டுடன் எடுத்து ; இடி— கல்லுரலில் இட்டு இடித்து; சிறுலிகுசத் தளவே வடகம் பிடி— மிகச் சிறிய எலுமிச்சம் பழ அளவில் வடகம் செய்துலர்த்தி ; உண்—அருந்த ; யாளியை ஒத்த கபம்—முற்றிய யாளியின் சூரலொலியைக் காட்டும் கபம் ; கால்—வாயு ; கிரகணி— கிராணி ; அலசம்—மந்தப்பிணி; கொடுவமனம்—கொடுமை யான விடாவாந்தி ; அதிசாரம்—அதிசார நோய்; பக்கத்தெழு நோய் — பக்கச் சூலைநோய் ; இவை அலரிப் பனியாமே— இவை சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும் என்பதாம்.

## அயஜம்பீரக் கற்பம்

**ஆட்டுத் துகள்கறி திரிதொடி பப்பத் தரையை யெண்ணருணக்**
**காட்டுக் கனியுள் ளவையைம்பூ தத்தொரு கலமுன் னிடுதிலநெய்**
**கூட்டுத் தொகைமுற் கூறிடு சில்லிடு குழையிடு மண்டலமே**
**ஓட்டுப் பிளவொன் றிருபோ துணுபாண் டொடுசோ பையுமறுமே.**

(இ-ள்.): ஆட்டுத் துகள் — அயப் பொடி; கறி — மிளகு தூள்; திரி — பூண்டு (உரித்தது); பப்பத்து அரை — முறையே பத்துப்பத்து அதில் அரைப் பங்காகிய ஐந்து பலமாக நிறுத்துக் கொண்டு (முதலில் அயப் பொடியையும் மிளகு தூளையும் கலந்த பிறகு பூண்டு சேர்த்து நன்றாக அரைத்து); ஐ எண் அருணக் காட்டுக் கனியுள்ளவை — நாற்பது எலுமிச்சம் கனிகளை ஒவ்வொன்றையும் நந்நான்காகப் பிளந்து ஒவ்வொன்றினுள்ளும் அரைத்த மருந்தைப் பொதிந்து; ஐம்பூதத்தொரு கலமுன்னிடு — பஞ்சபூதத்தில் முதன்மையதாகிய மண்ணினால் செய்த பானையில் வரிசையாக அடுக்கி; திலநெய் கூட்டுத் தொகை முற்கூறிடு—அதில் எள் நெய் ஐம்பது பலம் ஊற்றி; சில்லிடு—பானை வாய்க்குப் பொருத்தமான ஓட்டால் மூடிச் சீலை செய்து; குழையிடு மண்டலமே ஓட்டு—பூமியில் ஒரு மண்டலம் வரை புதைத்துவைத்து எடுத்து; பிளவொன்று இருபோதுணு — பிளவொன்று இருவேளை வீதம் உண்ண; பாண்டொடு சோபையுமறுமே— பாண்டு நோயோடு சோகை நோயும் கெட்டு நீங்கும் என்பதாம்.

## கப குணம் ஐந்து

**சீதமா மொன்று செறியிரும லாமொன்று**
**ஓது மனமந்த மொன்றாகும்—போத**
**கனல்விளைக்கு மொன்று கபகுணமொன் றைந்தாம்**
**அனல்விளைக்கு மைய மதற்கு.**

(பொழிப்புரை): சீதளம், இருமல், பசிமந்தம், வெப்பம், கபம் விளைவித்தல் ஆகிய ஐந்து குணங்களைக் கொடுக்கக் கூடியது சிலேத்துமம் என்பதாம்.

பிற்சேர்க்கை

## அ. சித்த மருத்துவ அடிப்படைத் தத்துவங்கள்

தொண்ணூற்றாறு தத்துவங்கள், வெவ்வேறு கொள்கைகள், தொழில்கள்.

**96 தத்துவங்கள் (சிவப்பிரகாசக் கட்டளைப்படி)**

(1) ஐம்பூதங்கள் : மண், நீர், தீ, வளி, விண்.

(2) ஐம்பொறிகள் (ஞானேந்திரியங்கள்) : மெய், வாய், கண், மூக்கு, செவி.

(3) ஐந்து நுண்ணிய பொருள்கள் (பஞ்ச தன்மாத்திரைகள்) : சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

(4) ஐந்து தொழில் உறுப்புகள் (பஞ்ச கன்மேந்திரியங்கள்) : கை, கால், வாய், எருவாய், கருவாய்.

(5) அகக்கருவிகள் நான்கு (அந்தக்கரணங்கள்) : மனம், அறிவு, நினைவு, முனைப்பு (அகங்காரம்).

இம்முறையில், ஆன்ம தத்துவம் இருபத்து நான்கு ஆகும். இதற்கு அசுத்த தத்துவம் என்பதும் பெயர்.

(6) ஏழு உணர்வு நிகழ்ச்சிப் பொருள்கள் (சுத்த வித்யா தத்துவங்கள்) : காலம், பிறழா நிகழ்ச்சி (நியதி), கலை, நினைப்பு (வித்தை), விருப்பு (அராகம்), மகன் (புருடன்), மாயை.

(7) ஐந்து சிவநிலையப் பொருள்கள் (பஞ்ச சிவ தத்துவங்கள்) : தூய நினைவு (சுத்த வித்தை), தலைமை (ஈசுரம்), அருள்நிலை (சாதாக்கியம்), அன்னை (சக்தி), அத்தன் (சிவம்).

இம் முறையில் உட்கருவிகள் (அகக்கரணம்) முப்பத்தாறாகும்.

(8) புறக்கருவிகள் (புறக்கரணம்)

(அ) மண்ணின் கூறு ஐந்து : மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை.

(ஆ) புனலின் கூறு ஐந்து : ஒடுநீர், குருதி, வெண்ணீர், மூளை, கொழுப்பு.

(இ) அனலின் கூறு ஐந்து : உணவு, தூக்கம், அச்சம், சேர்க்கை (மைதுனம்), சோம்பல்.

(ஈ) வளியின் கூறு ஐந்து : ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல்.

(உ) விண்ணின் கூறு ஐந்து : இன்பம் (காமம்), உட்பகை (குரோதம்), ஈயாமை (உலோபம்), பெருவேட்கை (மோகம்), கொழுப்பு (மதம்).

இந்நிலையில் பூதகாரியங்கள் இருபத்தைந்து.

(9) பத்து வளி அல்லது காற்று (தசவாயுக்கள்) : உயிர்க்காற்று அல்லது உயிர்வளி (பிராணன்), மலக்காற்று (அபானன்), தொழிற்காற்று (வியானன்), ஒலிக்காற்று (உதானன்), நிரவுகாற்று (சமானன்), தும்மற்காற்று (நாகன்), விருக்காற்று (கூர்மன்), கொட்டாவிக்காற்று (கிருகரன்), இமைக்காற்று (தேவதத்தன்), வீங்கற்காற்று (தனஞ்சயன்).

(10) பத்து நாடிகள் (தச நாடிகள்) : இடப்பால் நரம்பு, இடமூச்சு (இடைகலை), வலப்பால் நரம்பு, வலமூச்சு (பிங்கலை), நடுநரம்பு, நடுமூச்சு (சுழிமுனை), உள்நாக்கு நரம்பு (சிங்குவை), வலக்கண் நரம்பு (புருடன்), இடக்கண் நரம்பு (காந்தாரி), வலச்செவி நரம்பு (அத்தி), இடைச்செவி நரம்பு (அலம்புடை), கருவாய் நரம்பு (சங்கினி), எருவாய் நரம்பு (குரு).

(11) தொழில் உறுப்புகளின் செயல்கள் ஐந்து (வசனாதிகள்) : சொல்லல் (வசனம்), நடத்தல் (கமனம்), கொடுத்தல் (தானம்), விடுதல் (விசர்ச்சனம்), மகிழ்தல் (ஆனந்தம்).

(12) வாக்குகள் நான்கு : நுண்ணோசை (சூக்குமை), நினைவோசை (பைசந்தி), மிடற்றோசை (மத்திமை), செவியோசை (வைகரி).

(13) முக்குணங்கள் : நன்மை அல்லது அமைதி (சத்துவம்), மனவெழுச்சி அல்லது எழுச்சி (இராசதம்), மயல் அல்லது மயக்கம் (தாமதம்).

(14) அகங்காரங்கள் (முனைப்புகள்) மூன்று : தைசசாகங் காரம், வைகாரிகாகங்காரம், பௌதாதிகாகங்காரம்.

**வெவ்வேறு கொள்கைகள்**

திருவாலவாய்க் கட்டளையில் ஏடணைகள் மூன்றைக் கூறி, சிவப்பிரகாசக் கட்டளையில் கூறிய அகங்காரங்கள் மூன்று நீங்கலாய் மற்றத் தொண்ணூற்று மூன்றும் ஒன்றாய்ப் பொருந்தியிருக்கின்றன.

முப்பற்றுகள் (மூவேடணைகள்) : பொருட்பற்று (அர்த்த வேடணை), புதல்வர் பற்று (புத்திரவேடணை), உலகப் பற்று (உலகவேடணை).

**96 தத்துவங்கள் (வேதாந்த தத்துவக் கட்டளைப்படி)**

I. முதல் தத்துவம் 30 : (1) பூதம் ஐந்து, (2) பொறி ஐந்து, (3) புலனைந்து, (4) கன்மேந்திரியம் ஐந்து, (5) கன்ம விஷயம் ஐந்து, (6) கரணம் நான்கு, (7) அறிவு ஒன்று.

II. இரண்டாம் தத்துவம் 30 : (1) நாடி பத்து, (2) வாயு பத்து, (3) ஆசயங்கள் ஐந்து, (4) கோசம் ஐந்து.

III. மூன்றாந் தத்துவம் 36 : (1) ஆதாரம் ஆறு, (2) மண்டலம் மூன்று, (3) மலம் மூன்று, (4) தோஷம் மூன்று, (5) ஏடணை மூன்று, (6) குணம் மூன்று, (7) இராகம் எட்டு, (8) வினை இரண்டு, (9) அவஸ்தை ஐந்து.

பூதம் 5 ; பொறி 5 ; புலன் 5 ; கன்மேந்திரியம் 5 ; கன்மவிஷயம் 5 ; கரணம் 4 ; நாடி 10 ; வாயு 10 ; குணம் 3. ஏடணைகள் 3. ஆக இவ்வைம்பத்தைந்தையும் முற்கூறிய கட்டளைகளில் கூறியுள்ளார்.

1. அறிவு : தன்னைக் கண்டு மகிழ்ந்திருத்தல்.

2. ஆசயம் ஐந்து : (1) அமர்வாசயம், (2) பகிர்வாசயம், (3) சலவாசயம், (4) மலவாசயம், (5) சுக்கிலவாசயம்.

3. கோசம் ஐந்து : (1) அன்னமய கோசம், (2) பிராண மய கோசம், (3) மனோமய கோசம், (4) விஞ்ஞானமய கோசம், (5) ஆனந்தமய கோசம்.
4. ஆதாரம் ஆறு : (1) மூலாதாரம், (2) சுவாதிட்டானம், (3) மணிபூரகம், (4) அனாகதம், (5) விசுத்தி, (6) ஆக்கினை.
5. மண்டலம் மூன்று : (1) அக்கினி மண்டலம், (2) ஆதித்திய மண்டலம், (3) சந்திர மண்டலம்.
6. மலம் மூன்று : (1) ஆணவம், (2) காமியம், (3) மாயை.
7. தோஷம் மூன்று : (1) வாதம், (2) பித்தம். (3) கபம்.
8. வினை இரண்டு : (1) நல்வினை, (2) தீவினை.
9. அவஸ்தை ஐந்து : (1) சாக்கிரம், (2) சொப்பனம், (3) சுழுத்தி, (4) துரியம், (5) துரியாதீதம்.
10. இராகம் எட்டு : (1) காமம், (2) குரோதம், (3) உலோபம், (4) மோகம், (5) மதம், (6) மாற்சரியம், (7) இடும்பை, (8) அகங்காரம்.

**96 தத்துவங்கள் (தத்துவ தீபிகையில் கூறியபடி)**

வாசல்கள் 9, பொறி 10, புலன் 10, ஆதாரம் 6, மண்டலம் 3, நாடி 10, தாது 7, கோசம் 5, கரணம் 4, அவஸ்தை 5, குணம் 3, மலம் 3, இராகம் 8, வியாதி 3, வாயு 10, ஆக 96.

பொறி, புலன், ஆதாரம், மண்டலம், நாடி, கோசம், கரணம், அவஸ்தை, குணம், மலம், இராகம், வாயு, வியாதி இவை முற்கூறி உள்ள கட்டளைகளில் கூறப்பட்டன. அவற்றில் கூறாதவை இங்குக் கூறப்படுகின்றன.

வாசல்கள் ஒன்பது : செவிகள் 2, கண்கள் 2, நாசிகள் 2, வாய் 1, பெண் குறி அல்லது ஆண்குறி 1, குதம் 1.

தாதுக்கள் ஏழு : இரசம், குருதி, தசை, கொழுப்பு, எலும்பு, மூளை, வெண்ணீர் (சுக்கிலம்).

**96 தத்துவங்கள் (சித்தாந்தக் கட்டளைப்படி)**

| | | | |
|---|---|---|---|
| 1. | பூதம் | 5 | அகக்கருவிகள் 36 |
| 2. | ஞானேந்திரியம் | 5 | |
| 3. | தன்மாத்திரை | 5 | |
| 4. | கர்மேந்திரியம் | 5 | |
| 5. | அந்தக்கரணம் | 4 | |
| 6. | வித்தியாதத்துவம் | 7 | |
| 7. | சுத்ததத்துவம் | 5 | |

| | | | |
|---|---|---|---|
| 8. | பஞ்சபூதங்களின் கூறுகள் | 25 | புறக்கருவிகள் 60 |
| 9. | பிருதிவியின் வழி நாடி | 10 | |
| 10. | வாயுவின் வழி நாடி | 10 | |
| 11. | ஆகாயத்தின் வழி ஏடணை | 3 | |
| 12. | வாக்காதியின் தொழில் | 5 | |
| 13. | குணம் | 3 | |
| 14. | வாக்கு | 4 | |

இந் நூலில் கூறிய தத்துவங்கள் தொண்ணூற்றாறும், சிவப் பிரகாசக் கட்டளையில் கூறிய தத்துவங்கள் தொண்ணூற் றாறும் ஒரே வகைப்பட்டன.

**96 தத்துவங்கள் (யூகிசிந்தாமணியில் கூறியபடி)**

உறுதியாம் பூதாதி யோரைந் தாகும்
    உயர்கின்ற பொறியைந்து புலனைந் தாகும்
கறுதியாங் கன்மவிந் திரிய மைந்தும்
    கடிதான ஞானவிந் திரிய மைந்தும்
திறுதியாந் தீதாய கரணம் நான்கும்
    திறமான வறிவொன்றும் நாடி பத்தும்
மறுதியாம் வாயுவது பத்து மாகும்
    மகத்தான விஷயமஞ்சு கோச மஞ்சே.

அஞ்சவே யாதார மாறு மாகும்
    அறியமண் டலமூன்று மலமூன் றாகும்
தொஞ்சவே தோடமூன்றே டணைதான் மூன்று
    தோதகமாங் குணமூன்று வினையி ரண்டாம்
தஞ்சவே ராகமெட்டு அவத்தை யைந்து
    தயங்கியதோர் கருவிகடாம் தொண்ணூற் றாறு
ஒஞ்சவே யொவ்வொன்றாய் விரித்துச் சொல்வேன்
    உறுதியாம் பூதாதி யுரைக்கக் கேளே.

பாட்டின் பொருள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பூதம் | 5 | 6. | கரணம் | 4 |
| 2. | பொறி | 5 | 7. | அறிவு | 1 |
| 3. | புலன் | 5 | 8. | நாடி | 10 |
| 4. | கன்மேந்திரியம் | 5 | 9. | வாயு | 10 |
| 5. | ஞானேந்திரியம் | 5 | 10. | விஷயம் | 5 |
| | | | 11. | கோசம் | 5 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12. | ஆதாரம் | 6 | 17. | குணம் | 3 |
| 13. | மண்டலம் | 3 | 18. | வினை | 2 |
| 14. | மலம் | 3 | 19. | இராகம் | 8 |
| 15. | தோஷம் | 3 | 20. | அவத்தை | 5 |
| 16. | ஏடணை | 3 | | ஆக | 96 |

யூகிசிந்தாமணியில் கூறிய தொண்ணூற்றாறு தத்துவங்களும் வைத்திய சதக நாடியில் கூறிய தொண்ணூற்றாறு தத்துவங்களும் ஒன்றாய்ப் பொருந்தி இருக்கின்றன.

## ஆ. அளவைகள்

பொருள்களில் சரிநுட்பமான அறிவுதான் அளவை எனப்படும். இதனையே பிரமாணம் எனவும் கூறுவர். அதாவது உலகிலுள்ள கண்ணால் காணும் பொருள்களை அளத்தற்கு நீட்டல், நிறுத்தல், முகத்தல், எண்ணல் போன்ற அளவைகள் இருப்பதுபோல் காணமுடியாத ஆன்மா, இறைவன் போன்றவற்றை நிருபிப்பதற்கு ஓர் அளவு நூலாகப் பயன்படுவது அளவை நூலாகும்.

இவ் அளவைகளை மூன்று என்றும், ஆறு என்றும், பத்தென்றும் கூறுவர். முதல் மூன்று அளவைகளிலேயே மற்ற ஏழும் அடங்கும். அவையாவன :

1. புலனறிவு (Perception) — (காண்டல், காட்சி)
2. உய்த்தறிவு (Inference) — (கருத்து, கருதல், அனுமானம்)
3. ஒப்புமை (Comparison) — (உவமை)
4. மேற்கோள் (Authority) — (உரைகள், ஆகமம், வேதம், ஆப்தவாக்கியம்)
5. அவாய்நிலை (Implication) — (குறிப்பு, அருத்தாபத்தி)
6. இயல்பு (Propriety) — (தகுதி)

7. உலகுரை (Rumour) — (மண்ணுரை, மரபுரை, ஐதிகம்)
8. கூடாமை (Impossibility) — (அபாவம், இன்மை)
9. மறிநிலைமெய்ம்மை — (மீட்சி, ஒளிபு, ஒளிவறிவு)
10. தொடர்பியைபு (Association) — (உள்ளநெறி, உண்டாநெறி)

**காண்டல் கருதல் உவமம் ஆகமம்**
**ஆண்டைய அருத்தா பத்தியோடு இயல்பு**
**ஐதிகம் அபாவம், மீட்சி ஒழிவுஅறிவு**
**எய்திஉண் டாநெறி என்றிவை தம்மால்**
**பொருளின் உண்மை புலன்கொளல் வேண்டும்**
**மருளில் காட்சி ஐவகை யாகும்.**

— மணி. 27:9–14

**உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்**
**செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்**
**செங்கல் பொடிக்கூரை வெண்பல் தவத்தவர்**
**தங்கள் திருக்கோவில் சங்கிடுவான் போகின்றார்**
**எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்**
**நங்காய் எழுந்திராய்.**

— ஆண்டாள் திருப்பாவை

**1. காண்டல் அளவை (புலனறிவு)**

ஐம்பொறி புலன்களாலும் உணரப்படுவது காண்டல் எனப்படும். இது ஐந்து வகைப்படும்.

(1) கண்ணால் வண்ணவுரு
(2) செவியால் ஓசை
(3) மூக்கால் மணமறிதல்
(4) நாவால் சுவையறிதல்
(5) மெய்யால் ஊற்று உணர்வறிதல்.

மேற்கூறிய இவற்றை உணர்வதில் உயிர்த்திறமும், புலன் திறமும், மனத்திறமும் நன்னிலையில் இருத்தல் வேண்டும். ஞாயிறு, திங்கள், தீப் போன்ற ஒளியும் வேண்டும்.

மேலும் இட அறிவு சார்ந்த இழுக்கு நேர்தல் கூடாது. அதனுடன் தப்பெண்ணம், தவறான கருத்து, திரிபு அல்லது விபரீதம், பொருந்தாமை அல்லது இசைவின்மை, முரண் அல்லது மாறுகோள் ஆகிய இழுக்குகள் இருத்தல் கூடா.

இவற்றின் வழியாக இடம், பெயர், இனம், பண்பு, செய்கை ஆகிய 5 கூறுகளையும் வரையறுத்துப் பொருளை அறியும் அறிவு காட்சியாகும்.

**2. கருதல் அளவை** (Inference)

கருத்தளவாவது கண்ணால் கண்ட பொருளைக் கொண்டு காணாத ஒன்றை உய்த்தறிய உதவும் உள உணர்வு முறையாகும். அது மூவகைப்படும். அவையாவன :

(1) உடனிகழ்வு (பொது சாமான்ய அனுமானம்) (Inference by co-existence)

(2) பயன் (எச்சம் அல்லது காரிய அனுமானம்) (Inference by effect)

(3) முதல் நிலை (முதல் அல்லது காரண அனுமானம்) (Inference by cause).

**(1) உடன் நிகழ்வு** (Inference by co-existence)

காட்டில் யானை காணாதே யானையின் பிளிறலைக் கேட்டு யானை அங்குளது எனக் கொள்வதாகும்.

**(2) பயன்** (Inference by effect)

மழை காணாது வெள்ளம் கண்டு வேறிடத்து முன் மழை பெய்திருக்க வேண்டுமெனத் துணிவது.

**(3) முதல் நிலை** (Inference by cause)

கருக்கொண்ட மேகத்தைக் கண்டு இனி மழை பெய்யும் எனத் துணிதல்.

காரண காரியங்கள் கடந்த காலத்தவை, நிகழ்காலத்தவை, வருங்காலத்தவை என முக்காலத்தில் எதனில் நிகழ்ந்தாலும் அவற்றுள் காணப்படாத ஒன்றைக் காணப்படும் ஒன்றன் வாயிலாகத் தப்பெண்ணத்திற்கு இடமின்றி உய்த்துணர்தல், உய்த்தறிவு, கருதல் அளவையாகும்.

**3. ஒப்பு**

எருமையைப் போலிருக்கும் காட்டெருமை.

**4. மேற்கோள்**

சான்றோர்கள் அனுபவ வாயிலாக எழுதி வைத்தவற்றை உண்மை எனக் கொள்ளல். (எ-டு) நமது முன்னோர்கள் எழுதி வைத்த நூல்களனைத்தும் மேற்கோளாகும்.

**5. அவாய் நிலை** •

ஆய்க்குடி எனும் ஊர் கங்கைமீது உளது என்றபோது அது கங்கைக் கரையில் உளது எனக் குறிப்பால் உணர்தல்.

**6. இயல்பு**

யானை மீதமர்ந்த ஒருவன் பொருள் கொடு என்று கேட்டால் அது அங்குசத்தையே குறிக்கும்.

**7. உலகுரை**

மக்கள் பொதுவாக வழங்குவதை நம்புவது.

(எ-டு.) இம்மரத்தில் பேய் உளது. இப் புற்றில் பாம்பு உளது.

**8. கூடாமை**

ஒரு பொருள் இருக்கக்கூடாது என்று தெரிந்து இல்லை என்று முடிவு செய்வது.

(எ-டு.) முயலுக்கு கொம்பில்லை.
மெய்ஞ்ஞானி வாயில் பொய் இல்லை.

**9. மீட்சி**

போரிட்ட இருவரில் ஒருவன் வென்றான் என்றபோது மற்றவன் தோற்றான் என அறிவது.

(எ-டு) மூன்று பேரில் இருவரைக் கள்வர் அல்லர் என்றால் எஞ்சி நின்ற ஒருவனைக் கள்வன் என்பது.

**10. தொடர்பியைபு**

நீர் குளிரும்.
தீச் சுடும்.
ஆயிரத்தில் நூறு உண்டு.

## இ. வல்லுநர்களின் கருத்துகள்

(வி. ஜி. இராமச்சந்திரன்)

கலைமகள், ஜூன் 1979 பக்கம் 455—'56.

'தமிழர் உலகத்தின் ஆதிமக்கள், ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருந்திய நாகரிகமும் செவ்விய ஆட்சி முறையும் கொண்ட மக்களாக இருந்தனர்' என வரலாற்றாசிரியர்கள் பி. டி. சீனிவாச ஐயங்கார் அவர்களும், எஸ். லியாங் (S. Liang) அவர்களும் குறிப்பிடுகின்றனர்.

'இதுவரை கிடைத்த சான்றுகளிலிருந்து சுமேரியாவுடன் கி.மு. 4000-த்துக்கு முன்பிருந்தும்,எகிப்துடன் கி.மு. 3000-த்துக்கு முன்பிருந்தும், சீனத்துடன் கி. மு. 1200-க்கு முன்பிருந்தும் தமிழர்கள் கடல் வாணிகம் புரிந்து வந்தனர். கி. மு. 7 ஆம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னும் பாபிலோனுடனும், பிறகு மேற்கு நாடுகளுடனும் கடல் வாணிகம் செய்தவர்கள் தமிழக மேற்குக் கடற்கரையின் வணிகர்களே' என்று ரைஸ் - டேவிஸ் (Rise-Dawis) என்னும் அறிஞர் தெளிவுபடுத்துகிறார்.

'கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் சுமேரிய யூப்ரிடிஸ் ஆற்றின் மேற்குக் கரையில் இரண்டு தமிழ் வணிகர் குடியேறி அங்கே கண்ணனுக்கும் பலதேவனுக்கும் கோயில் கட்டினர்.' கி. மு. முதல் நூற்றாண்டளவில் 'கடலில் வடமதுரை நோக்கிப் பயணம் செய்த பாண்டியனின் மகளிர் சென்ற கப்பல் புயலில் சிக்கிய போது சிவனையும் முருகனையும் வேண்டி வழிபட்டனர்', என்று 'ஆவசிய சூரணி' (பக். 706) என்னும் சமணநூல் கூறுகின்றது. சாணக்கியர் தமது அர்த்தசாஸ்திர நூலில் பாண்டியரைக் குறிப்பிடுகிறார்.'

1. பேராசிரியர் ஹெக்கல் (Prof. Hekkal) தமது 'படைப்பின் வரலாறு' (History of Creation) என்னும் நூலில், 'லெமூரியா (கோந்து வளநாடு) மனித இனத்தின் தொட்டில்' எனக் கூறுகிறார்.

2. பேராசிரியர் ராலே (Prof. Raleigh) 'உலக வரலாறு' (History of the World) என்னும் நூலில் 'பெருவெள்ளத்துக்குப்

பின் (பிரளயத்துக்குப் பின்) இந்தியாவில் மனித இனம் முதல் முதலாகத் தோன்றியது' என்கிறார்.

3. திரு. டோபினார்டு (Topinard) 'தென்னாசியாவின் மிகப் பழமையான பகுதி தென்னிந்தியாதான்' எனச் சாற்று கிறார்.

4. பிரிட்டானியச் சங்கத்தின் தலைவரான (President of British Association) சர் ஜான் எட்வன்ஸ் (Sir Jhon Edwans) 'மனிதன் தென்னிந்தியாவில்தான் தனது தோற்றத்தையும் வளர்ச்சியையும் பெற்றான்' என்கிறார்.

5. ஸ்காட் எலியட் (Scott Elliot) தமது 'மறைந்த லெமூரியா' (Lost Lemuria) என்னும் நூலில், 'மனிதனின் மிக மிகப் பழமையான நாகரிகம் தென்னிந்தியாவில்தான் இருந்தது. அதன் விரிவான நிலப் பகுதிதான் கடலினுள் மூழ்கிய லெமூரியா' என விளக்குகிறார்.

6. சர் டி. டபிள்யூ. ஹோல்டர்னெஸ் (Sir T. W. Holderness), தமது 'பெரிய இந்தியாவின் மக்கள்' (The Great Indian People) என்னும் நூலின் முதல் அத்தியாயம் 28ஆம் பக்கத்தில், இந்தியாவின் தீபகற்பப் பகுதியில் தென்னகத்தில் திகழ்ந்த நாகரிகம் மிகப் பழைமையானதும், பெருமை பெற்றதுமாகும்' என விளக்குகிறார்.

7. வணக்கத்துக்குரிய ஹீராஸ் பாதிரியார் (Rev. Father Heeras) 'மிகத் தொல்பழங்காலத்திலேயே (கி.மு. 5000), காவிரி நதிக்கரையில் தொடங்கிய ஹரப்பா நாகரிகம் தமிழர்களது ஆதரவுடன் மேல்கரை ஓரமாகக் கத்தியவார், சிந்து, பஞ்சாப் முதலிய பகுதிகளில் முன்னேறிப் பின்னர் மத்திய தரைக்கடல் நாடுகளிலும், அதன் கீழை நாடுகளிலும் (Near East) பெருகிப் பரவிற்று' எனக் கூறுகிறார்.

8. டச்சு நாட்டு நிபுணர்கள் 1961 ஆம் ஆண்டில் பிலாகாவைச் (Filaka) சார்ந்த குவெய்த் (Kuwait) தீவில் துணிவான ஆய்வை மேற்கொண்டனர். 'நாடக அரங்கங்கள், கப்பல் துறை மேடைகள், வீடுகள், உக்கிராண அறைகள் முதலியவை அச் சோதனையால் வெளிக் கொணரப்பட்டன. ஆங்கிருந்த இடிபாடுகளிலிருந்து ஏராளமான இலச்சினைகள் கண்டெடுக்கப்பட்டன. மொகஞ்சதாரோ மெசபொடேமியாவைச் சேர்ந்த உர் (Urr) நில அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்

பட்ட இலச்சினைகளைப் போன்றே அவை இருந்தன. கி.மு. 3000 ஆம் ஆண்டு வாக்கில் சுமேரியாவில் வந்து குடியேறிய நாகரிக இனத்தைச் சார்ந்த மக்கள் கிழக்கே பாரசீகவளைகுடாவில்(இந்தியா)இருந்துதான் வந்தார்கள்' என டச்சு நிபுணர்களின் ஆய்வறிக்கை அறுதியிட்டுக் கூறுகிறது.

9. புகழ்பெற்ற வரலாற்றாசிரியரான வில் டிருவான்ட் (Will. Dru-ant) 'ஹீப்ரு முக்கியப் பகுதிகள் யாவும் இந்திய மூலத்தையே கொண்டிருக்கின்றன எனக் கருத இடமுண்டு' என்று கூறுகிறார்.

வீரமிகு செயல்களைப் புரியும் சிந்துவெளி வணிகமக்கள் தம் வர்த்தகப் பண்டங்களுக்குரிய சந்தைகளைக் காணவும், அதிகப்படியான தம் மக்களை வேற்று நாடுகளில் வாழவைக்கவும் கருதிக் கடல்கடந்த நாடுகளுக்குச் சென்று குடியேறினர். எனவே, குவெய்த் பகுதியிலும் வெளியிலிருந்து வந்து குடியேறிய மக்கள் சிந்துவெளி மக்களைத் தவிர மற்றவர்களாக இருக்க முடியாது என்று டச்சு நாட்டு நில அகழ் வாராய்ச்சி வல்லுநர்களும் கருத்துத் தெரிவிக்கின்றனர். வரலாற்றுக் காலங்களில் பொனிசியர்கள் (Phoneciaons) மத்திய தரைக்கடல் பகுதிகளில் எவ்வகையில் குடியேறினார்களோ அதே வகையில்தான் சிந்துவெளியினரும் வெளிநாடுகளில் குடியேறினார்கள்.

ஹரப்பாவில் கிடைத்த இலச்சினைகளைப் போன்றவை மிகுதியாகக் கிடைக்கும் பாபிலோன், மெசபொடேமியா, வருகுநிப்பூர் ஆகிய நாடுகளில் இந்திய வணிக முகவர்களின் குடியிருப்புப் பகுதிகளுங்கூட இருந்திருக்கவேண்டும் எனவும், கடல்கடந்த நாடுகளில் சிந்துவெளி வணிக முகவர்கள் நிலையாக வாழ்ந்திருக்கவேண்டும் எனவும், கி.மு. 4000 முதல் 3500-லேயே வெளிநாட்டு முதலீடுகளுடனும் கடல்வழிச் செலவுக்குரிய வசதி வாய்ப்புகளுடனும் சிந்துவெளி வணிகப் பெருமக்கள் மிக்க மேம்பாட்டுடன் இருந்திருக்கவேண்டும் எனவும் சர் லியோனார்டு உல்லி (Sir Leonard Wolley) கருத்துத் தெரிவிக்கிறார். (மூலம் : ஆரியதரங்கிணி, பக். 112–113).

இத்துணையளவுக்கு அகப்புறச் சான்றுகள் இருந்துங்கூட மிகப்பெரிய கற்றறிவாளர்களான பேராசிரியர் கே. கே. பிள்ளை, சேதுப்பிள்ளை போன்றோரும், இன்னும் மற்றவர்களும், 'திராவிடர்கள் வேற்று நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு

வந்தவர்கள்' என்னும் கருத்தடங்கிய பல நூல்களை எழுதியுள்ளனர். அந் நூல்கள் திருத்தியமைப்பதற்குரியவை.

இந்திய நாட்டின் ஆதிக்குடிகள் தமிழர்களே என்றும் தரை வழியாகவும் கடல் வழியாகவும், வெளி நாடுகளுக்கு அவர்கள் சென்று தமிழ்க் கலாசாரத்தைப் பரப்பினார்கள் என்றும், அவர்கள் கி. மு. 4000 முதல் வணிகத்திலும் கடல் ஆதிக்கத் திலும் மிகவும் மேம்பட்டிருந்தார்கள் என்றும் சங்க இலக்கியங்கள், புராண வரலாறுகள், மத்தியதரைக்கடல் நாடுகள், எகிப்து, பெர்சிய வரலாறுகளின் ஒப்பாய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

மெசபொடேமியா, ஆப்பிரிக்கா, எகிப்து முதலிய பிற நாடுகளில் இருக்கும் சிவன், முருகன் சிற்பங்கள், தமிழர்கள் தம் நுண்கலைகளைப் பரப்பினார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

அமெரிக்காவில் உள்ள கொலராடோ ஆற்றங்கரையில் கி. மு. 8000 ஆண்டுகளுக்கு முன்பிருந்த சிவன் கோயில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸ் மக்கள் சிவனை, 'சிவப்பன்' என்னும் பெயரால் வழிபட்டனர். இந்தோனேசி யாவில் சிவன் கோயில்கள் இருந்தன; இன்றும் சிவனை வணங்குவோர் அங்கு வாழ்கின்றனர். ஜப்பானியர் பழந் தெய்வம் 'சிவோ' எனப்பட்டது. கொரியாவில் வீதிதோறும் சிவன் கோயில்கள் இருந்தன; பாபிலோனியக் களிமண் ஏடு களில் சிவன் என்னும் சொல் மாதப் பெயராக உள்ளது. எகிப்து நாட்டு ஆற்றங்கரைகளில் சிவ முடிசூட்டு விழாவில் திருவெம்பாவையின் ஈற்றடியைப் பாலி எழுத்தில் எழுதிப் படித்தார்கள்.

ஆப்பிரிக்காவிலிருந்தும் எகிப்திலிருந்தும் சிவ வழிபாடும் முருக வழிபாடும் இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட வில்லை. அவ்வகையிலேயே கண்ணன் வழிபாடும் எகிப்தில் உண்டு. அதனால், எகிப்தில்தான் கண்ணன் பிறந்தான் என நாம் கொள்ள முடியுமா?

ஐரோப்பிய நாடுகளிலும் சீனா, ஜப்பான், மங்கோலியா, தாய்லாந்து, இந்தோனேசியா, கென்யா, பர்மா, எகிப்து ஆகிய நாடுகளிலும் இராமாயணம் பல வடிவங்களில் பரவியுள்ளது. அயர்லாந்தில் இராமாயணம் நாடோடிக் கதையாகக்கூட வழக்கில் இருந்துவருகிறது. இவையெல்லாம் இராமாயணம்

உண்மை வரலாற்று நிகழ்ச்சி என்பதையும் அது உலகம் முழு வதும் தெரிந்திருந்தது என்பதையும் காட்டுகின்றன.

ஏசுநாதரைச் சென்ற 1980 ஆண்டுக் காலமாக எப்படி வழி பட்டு வருகின்றனரோ, அவ்வகையிலே இராமனையும் கிருஷ்ணனையும் கி. மு. 4000 முதலே வணங்கி வருகின்றனர். ஏசுநாதர் ஜெருசலத்தில் பிறந்தார். இராமனும் கிருஷ்ணனும் இந்தியாவில் பிறந்தனர்; வேறுபாடு இவ்வளவே. எனவே, 'தென்னகம், நாகரிகத்தின் தொட்டில்' என்பதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

பகுதி 2

# சித்த அறிவியல்

## மேல் நிலை — இரண்டாம் ஆண்டு

# 1. தாவரவியல்

## மூலிகை இயல் (Herbal Botany)

### முன்னுரை

**மூலிகை – சொல் விளக்கம்**

வடமொழியில் திரமானவற்றைத் **தாவரம்** என்பது போலத் தமிழ்மொழியில் மூலம் உடையவற்றை **மூலி** என்றும் (வேர் உடையவற்றை வேரி என்றும்) வழங்குதல் அறிவுக்கு ஒத்த மரபாகும். மன்றோரம் சொன்னார் மனையில் **'பாதாள மூலி படரும்'** என்று சொல்லும் மூதுரை. எடுத்துக்காட்டாகச் சித்திர மூலம், ஈசுவரமூலி, சிறுபஞ்சமூலம், நறுக்குமூலம் முதலிய மூலங்களையும், கொடிவேரி, இருவேரி, சதாவேரி போன்ற வேரிகளையும் மருத்துவ வழக்கில் குறிப்பிடலாம். ஆனால், இதுவரையிலும் மூலி என்னும் சொல் மருந்துச் செடிகளையே வழக்காற்றில் குறித்து வருதல், ஒரு மரபு வழுவமைதியாகும். அறிவியல் அடிப்படையில் உலகில் உள்ள அனைத்துச் செடி, கொடி, மரங்களுமே மருத்துவப்பயன் உடையவையே.

கிறித்தவ வேதாகமம் குறிப்பிடுதல் போல ஒவ்வொரு மூலிகையிலும் ஏதாவது மருந்துச் சத்து ஒன்று உண்டு. இதனால் எல்லா மூலிகைகளுமே மருந்துகள்தாம். ஒரு குறிப் பிட்ட மூலிகை, மருந்துச் செடி அன்று என்று சொல்வோ மானால் அஃது அம் மூலிகையின்மேல் இதுகாறும் அனுபவ அடிப்படையிலோ (Empirical basis), அறிவியல் அடிப்படை யிலோ (Experimental basis) ஆய்வுகள் நடைபெறவில்லை என்பதைக் குறிக்கிறது. இவ்வாறு நோக்கின் உலகில் உள்ள சுமார் 2,50,000 மூலிகைகளும் மருந்துச் செடிகளே.

**பஞ்சாங்கங்கள்**

ஒரு மூலியின் வேர், தண்டு, இலை, பூ, கனி என்னும் ஐந்து (பஞ்ச) உறுப்பு (அங்கம்)களுமே மருந்துத் தன்மை வாய்ந்தவை தாம். இருப்பினும் இவை அனைத்திலும் வேரில்தான் அதிக

மான மருந்துச் சத்துகள் தயாரித்துச் சேமித்து வைக்கப்படுகின்றன. வேர் நிலத்தில் இருத்தலால் அதிக மாறுபாடின்றி விளங்குதலாலும், தாவரத்தின் அடிப்படையான உயிர் வாழ்க்கைக்கு முக்கிய மேடையாகி அமைவதனாலும், மற்ற அங்கங்களைவிடச் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆகையால், இத்துணைச் சிறப்பு வாய்ந்த மூலத்தை அடிப்படையாகக்கொண்டு தமிழ் மக்கள் மரம், செடி, கொடி, புல், பூண்டுகளை மூலிகை என்று அழைத்தல் சாலச் சிறந்த அறிவியல் கோட்பாடாகும். மாறாக வடமொழிச் சொல்லான 'தாவரம்' திரமான மூலிகைகளை மட்டும் அல்லாமல் நிலத்தில் ஊன்றி நிற்கும் பவளம் போன்ற விலங்குகளையும், பல்வகைக் கனிமங்களையும் ஒருங்கே குறிப்பிடுதலால் குழப்பமான ஒரு சொல்லாகும். இதனால் தமிழ் மரபின்படி மரஞ், செடி, கொடி, புல், பூண்டின் அறிவியலை மூலிகை இயல் என்று குறிப்பிடுதலே அறிவுக்கு ஏற்ற கருத்தாகும்.

**மூலிகையே மனிதனின் முதல் மருந்து**

முதல் மருந்தாக ஆதிமனிதன் ஒரு மூலிகையைத்தான் மருந்தாகப் பயன்படுத்தியிருக்கவேண்டும். விலங்கு மருந்துகளையோ, கனிம மருந்துகளையோ பயன்படுத்தி இருத்தல் அரிது. ஏனெனில், மூலிகை எங்கும் வளர்பவை; எளிதில் கிடைப்பவை.

**முதல் மூலிகை**

மூலிகைகளுள் மருந்தாகப் பயன்பட்ட முதல் மூலிகை எது? என்பது கேள்விக்குரிய பொருள். மனித நாகரிகம் முதலில் தோன்றிய குமரிக் கண்டத்தில் தழைத்து வளர்ந்த குமரிப்பூண்டா (Aloe barbadensio), வேதகால ஆரியர்கள் இருக்கு வேதத்தின் 9ஆவது காண்டத்தில் 120 பாடல்கள்வழிப் போற்றும் சோமப்பூண்டா என்பது வாதத்திற்குரிய கேள்வி. மறைந்த குமரிக்கண்டத்தில் (Lost Lemuria) வாழ்ந்த தமிழ் நாகரிகத்தின் வரலாற்று நூல்கள் காலவெள்ளத்தில் கரைந்து போய்விட்டதால் இம் முதல் நாகரிக மக்கள் பயன்படுத்திய மூலிகைபற்றிய செய்திகள் தற்போது இல்லை. இருப்பினும் இந் நூற்பகுதி ஆசிரியர் மேற்கொண்ட **சோமப்பூண்டு** பற்றிய ஆய்வுகள் சோமவழிபாடும் (Soma cult) சோமபான வழக்குகளும் குமரிக் கண்டத்திலிருந்து மத்திய ஆசியா, ஐரோப்பா, தென்அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய கண்டங்களுக்குப் பரவியதற்குத் தகுந்த ஆதாரம் உண்டு

என்று நம்புவதால் குமரிப்பூண்டும் சோமப்பூண்டும் முந்தைய தமிழர்கள் கைக்கொண்ட சிறந்த ஓடாதிகள் (ஔடதங்கள்) என்று கொள்ள இடமுண்டு. முந்தைய சித்தர்களும் முனிபுங்கவர்களும் தம் உடலை இறவாது காயகற்ப சாதனை செய்யக் கைக்கொண்ட சிறந்ததொரு கற்ப மருந்து குமரிச்சாறு என்று அறிகிறோம்.

'கொள்ளடா குமரிகாமம் கொள்ளடா' என்னும் சித்தர் பாடலிலிருந்து குமரிச்சாற்றின் கற்ப மகிமையினை அறிகிறோம். அண்மையில் ரஷ்யாவில் நடந்த ஆய்வுகள் குமரிச்சாற்றின் சிறப்பை உலகம் உணரச் செய்துள்ளன.

**சங்கநூல்களில் மூலிகைகள்**

மூலிகைவழி மருத்துவத்தை நம் மக்கள் மேற்கொண்ட செய்திகளை நூல்வழியாக முதன்முதலில் சங்கநூல்களில் பார்க்கிறோம்.

தொல்காப்பியத்தில் புல்லுக்கும் மரத்திற்கும் இடையே உள்ள வேற்றுமையை அவற்றில் உள்ள புறக்காழ், அகக்காழ் இருத்தலைக் கொண்டு விளக்குகிறார், தொல்காப்பியர். அவர் சே, யா, ஞெமை போன்ற மரங்களின் இயல்புகளைச் சொல்கிறார். சங்க நூல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட செடி கொடி மரங்கள் பற்றிய செய்திகள் உள்ளன.

சுக்கு, சீந்தில், கற்கண்டின் மருத்துவ இயல்பை மருத்துவன் தாமோதரனார் திருவள்ளுவ மாலையில் விவரிக்கிறார்.

> **'சீந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனளாய்**
> **மோந்தபின் யார்க்கும் தலைக்குத்து இல்'**

**திருமூலர்,** திருமந்திரத்தின் பல கற்ப மூலிகைகளின் இயல்புகள் பற்றி விளக்குகின்றார். அவர் வழிவந்த போகர் 1444 மூலிகைகள்பற்றிய விரிவான செய்தியைத் தம் நிகண்டில் குறிப்பிட்டுள்ளார். மூலிகைத் துறையில் மன்னராக விளங்கும் தேரன் இம் மூலிகைகளைக் கொண்டு செய்யப்படும் 2000-த்துக்கும் மேற்பட்ட மருந்து வகைகளை விரித்துரைத்துள்ளார். இவர் வழிவந்த பல சித்தபுருடர்கள் பல மூலிகை நிகண்டுகளை இயற்றியுள்ளனர். இது போலவே ஆயுள்வேதத் துறையில் சரகர், சுசுருதர் போன்றோர் தொடங்கிய மூலிகைச் செய்திகள் 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பவமிச்சிரா காலத்தில்

சிறப்பு நிலையை அடைந்தன. இதுபோன்றே வெளிநாடு களிலும் சீனா, மெக்ஸிகோ, எகிப்து போன்ற பழம்பெரும் நாடுகளிலும் மூலிகையைப் பற்றிய மருத்துவச் செய்திகள் வளர்ந்து வரலாயின. அந் நாடுகளில் எல்லாம் மூலிகையும் மருத்துவமும் இணைபிரியாத் துறைகளாக வளர்ந்து வரு தலைக் காண்கிறோம்.

**ஐரோப்பிய மூலிகையியல்**

இவ்வாறே ஐரோப்பாவின் மருத்துவ வளர்ச்சியில் மூலிகை மருத்துவமும், மூலிகைத் தாவரவியலும் அடிப்படையாக விளங்கின என்று அறிகிறோம். முதல் மூலிகை வாகடத்தை எழுதிய **அரிஸ்டாட்டில்** (Aristotle) முதல் **பார்க்கின்ஸன்** (Parkinson) இறுதியாகப் பல மூலிகை மருத்துவர்கள் (Dioscorides, Pliny போன்றவர்கள்) பல மூலிகை நூல்களை எழுதி யுள்ளனர். இவற்றில் **குல்பெப்பர்** (Culpeper) என்பவர் எழுதிய மூலிகை நிகண்டு மிகப் புகழ் வாய்ந்தது.

இவ்வாறு தழைத்தோங்கிய மூலிகை மருத்துவம் வெளிநாடு களில் அழிந்து, நவீன அல்லோபதி மருத்துவம் தழைத் தோங்கப் பின்வரும் காரணங்களைக் கூறலாம்:

1. மருத்துவ வாகடங்களில் இடம்பெற்ற பல மருந்து மூலிகைகள் மிகக் கவனமாக மருந்தளவில் கையாளப்பட வேண்டிய நாபி (Aconite), அபின் செடி (Opium), குரோசானி ஓமம் (Henbane) போன்ற நச்சு மூலிகைகளாகும். இவற்றைக் கவனக் குறைவாகப் பயன்படுத்தியதால் இம் மருந்துகள் வழக்குக் குறையலாயின. இருப்பினும் சடாமாஞ்சில் (Valerian), சீமை நிலவேம்பு (Gentian), எட்டி (Nux Vomica), சர்ப்பகந்தி (Serpentina) போன்றவை இன்னும் நவீன மருத்துவத்தில் இடம் பெற்று வருகின்றன.

2. நவீன அறிவியலின் வேதியியல் கண்டுபிடிப்புகள் காரணமாகப் பல செயற்கை வேதியியல் மருந்துகள் உருவாகி உள்ளன. உதாரணம், பல செயற்கை **மலேரியா** மருந்துகள், கந்தக மருந்துகள் போன்றவை. இருப்பினும் **கொய்னா, அபின், அட்ரோபா** போன்ற மருந்துகள் இன்றும் மூலிகைகளிலிருந்தே பெறப்படுகின்றன.

முற்காலத்தில் வெளிநாட்டில் மட்டுமன்றி நம் நாட்டிலும் மேம்பாடு அடைந்திருந்த மூலிகை மருத்துவம் அண்மை நூற்

றாண்டுகளில் வளமிழந்து வாடலாயிற்று. இதனை மீண்டும் உயிர்ப்பிக்க இந்திய அரசும், மாநில அரசுகளும் பல மூலிகை ஆராய்ச்சித் திட்டங்களையும், மூலிகைத் தோட்டங்களையும் உருவாக்க முனைந்து வருகின்றன. இதனால் மருத்துவ அறிவு போலவே மருத்துவருக்கு மூலிகை அறிவும் ஒரு கண் போன்றது என்பதை,

**'மருந்து சுத்தி குணநிகண்டு கண்கள் மூன்றாம்'**

என்னும் தேரன் உரையால் உணர்கின்றோம்.

**மூலிகை பயிரிடுதலும் மூலிகைத் தோட்டங்களும்**

ஆதி மனிதன் அளவின்றிக் கிடைத்த மூலிகை வளம் காரணமாக வேண்டும் போதெல்லாம் மூலிகைகளைச் சேகரித்துக் கொண்டதன்றி அதனைப் பெருமளவில் பயிரிட முற்படவில்லை. நாகரிகம் வளர்ந்தபோது நாடோடி வாழ்க்கையை ஒழித்து காடுகொன்று நாடாக்கி மனித இனம் மேம்பாடு அடைந்த காலத்தில் இவ்வாறு மூலிகை முதலை அழிக்கும் பெருந்தீங்கைப் பல நாகரிக மக்கள் நன்கு உணர்ந் தனர். இதனால் பல மூலிகைத் தோட்டங்களை உருவாக்கிய கிரேக்க, இந்திய மன்னர்களின் முயற்சிகளை அவர்தம் வரலாறுகள் மூலம் அறிகின்றோம். கி. மு. 350ஆம் ஆண்டில் கிரேக்க தத்துவ ஞானியும் மருத்துவருமான அரிஸ்டாட்டில் ஒரு மூலிகைத் தோட்டத்தை உருவாக்கியதாக அறிகிறோம்.

இந்தியாவில் மூலிகைத் தோட்டங்கள் **நந்தவனங்கள்** என்றும், **உத்தியானவனங்கள்** என்றும் அழைக்கப்பட்டன. கி.மு. 220-ல் வாழ்ந்த அசோக மன்னன் மனிதர், விலங்குகளின் மருந்துச் சிகிச்சைக்காகப் பாண்டிய நாடு, இலங்கை, யவனம், கேரளம், சோழநாடு போன்ற பகுதிகள் அனைத்தையும் கொண்ட தன் ஆட்சிக்குட்பட்ட பேரரசில் 'தோட்டங்களிலும் நந்தவனங்களிலும் மூலிகைகளைப் பயிரிடவேண்டும், விதை செடி கிடைக்காத இடங்களில் இறக்குமதி செய்து பயிரிடப்பட வேண்டும்' என்னும் ஆணையிட்டதாகக் குசராத் மாநிலத்தின் ஜினாகரின் அருகே உள்ள கிர்னார் மலைக் கல்வெட்டுகள் மூலம் அறிகின்றோம்.

மகத மன்னன் **பிம்பிசாரன்** காலத்தில் (கி. மு. 546—494) தனது அரசவை மருத்துவனான ஜீவகனை அனுப்பி இந்தியா முழுவதுமுள்ள மூலிகைகளை ஆய்ந்து அறிந்ததாகத் தெரிய வருகிறது. கி.மு. 300–ல் இந்தியாவிற்கு வந்த கிரேக்கத்

தூதர் மெகஸ்தனிஸ் இந்தியாவின் செல்வங்களை விவரிக்கும் போது வைராகி என்ற முனிவர்கள் பலர் மருந்துச் செடிகள் நிறைந்த உத்தியானவனங்களை நாடு முழுவதும் நிறுவியதாக எழுதியுள்ளார்.

ஆங்கில அரசாட்சிக்குமுன் மொகலாயர்கள் வடஇந்தியாவிலும், சோழர்கள் தென்னிந்தியாவிலும் பல மூலிகைத் தோட்டங்களை நிறுவியதாகத் தெரியவருகிறது. குறிப்பாக இராசராசனும், இராசேந்திர சோழனும் 11ஆவது நூற்றாண்டில் பல ஆதுரசாலைகளை நிறுவியதாகவும் அவற்றிற்குப் போதுமான **மூலிகைகளை** வளர்ப்பதற்காக **மூலிகை வாரியங்களை** நிறுவியதாகவும் முக்கூடல் கல்வெட்டுகள், உத்தரமேரூர் கல்வெட்டுகள், கோவிந்தபுத்தூர் கல்வெட்டுகள் போன்றவை குறிப்பிடுகின்றன.

இக் கல்வெட்டுகளின் வழியாகச் **சித்திரமூல வாரியம், கரிசாலை வாரியம், செங்கழுநீர் வாரியம்** போன்ற தனிப்பட்ட மூலிகை வாரியங்கள் அமைத்ததாகவும் அறிகிறோம். இம் மூலிகைகளைப் பயிரிடுவோரை ஊக்குவிக்கும் பொருட்டு வரி விலக்குகள் ஒரு சிலருக்கு அளித்ததாகவும் அறிகிறோம்.

அண்மையில் இந்தியா முழுவதும் மூலிகைத் தோட்டங்களும், மூலிகை வாரியங்களும் அமைப்பதற்குரிய முழு முயற்சிகளைப் பல மாநில அரசுகள் மேற்கொண்டுள்ளன. இவ்வாறு உத்தரப்பிரதேசத்தின் ராணிகட்டில் ஒரு மூலிகைக் கேந்திரமும், கேரளாவில் ஒரு மூலிகை வாரியமும், குசராத் மாநிலத்தில் ஒரு மூலிகைக்கழகமும் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலும், ஆந்திர மாநிலத்திலும் மூலிகை வாரியங்கள் அமைப்பதற்குரிய முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. இவ் வாரியங்களின் மூலம் கிடைக்கும் மூலிகைகள் நம் உள்நாட்டு மருந்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் அந்நியச் செலாவணியையும் ஈட்டித்தரும் வாய்ப்புடையன.

மத்திய அரசு இந்தியா முழுவதும் உள்ள மூலிகை ஆராய்ச்சியைத் தரப்படுத்துவதற்காக லக்னோவைத் தலைமை இடமாகக் கொண்டு 'மத்திய தேசிய மூலிகை நிறுவன அமைப்பு' ஒன்று ஏற்படுத்தி உள்ளது. இதைத் தவிரவும் ஜாண்டு (Zandu Chemicals) நிறுவனத்தார், இமாலயா மருந்து நிறுவனத்தார் போன்ற தனியார் நிறுவனங்கள் பலவும் மூலிகைகளை வளர்த்துத் தமது மருந்துத் தேவைகளைப் பூர்த்தி செய்து

வருகின்றனர். ஆண்டுதோறும் சுமார் 120 இந்திய நாட்டு மூலிகைகள் பலகோடி ரூபாய் அளவிற்குத் தூத்துக்குடி, கொச்சி, பம்பாய்த் துறைமுகங்கள் வழியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இவற்றுள் நித்தியகல்யாணி, நிலவாகை, நரிவெங்காயம், அமுகண்ணி, பப்பாளி இலை, கலப்பைக் கிழங்கு, சர்ப்பகந்தி முதலியன குறிப்பிடத்தக்கவை. இவை கிளாக்ஸென்ன, ஐஸாப்டின் போன்ற மாத்திரைகளாக நம் நாட்டிற்கே திரும்ப வருகின்றன.

## 1. திரிகடுகு

திரிகடுகு என்பது சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று சரக்குகள் சேர்ந்த கூட்டுமருந்தின் பெயராகும். இது மிகப் பழைமையான கூட்டுமருந்து என்பது, நல்லாதனார் தாம் இயற்றிய நூலுக்குத் 'திரிகடுகம்' என்று பெயரிட்டமையே புலப்படுத்தும்.

### அ. சுக்கு

**வேறு பெயர்கள் :** ஆர்த்ரகம், உலர்ந்த இஞ்சி, சுக்கு, சுண்டி, சொண்டி, சௌபன்னம், சௌவர்ணம், நவசுறு, நாகரம், மஹெள ஷதம், விச்வபேஷஜம், விடமுடிய அமிர்தம், வேர்க்கொம்பு, கோடகம்.

Zingiber Officinale, Roscoe
Eng : Dried Ginger.

இஃது இந்தியாவில் அநேக இடங்களில் பயிரிடப்படு கிறது; நீர் செழிப்புள்ள இடங்களில் முக்கியமாய் உண்டாகிறது. ஆயினும், செம்பாடுகளிலும் மணல் பூமி களிலும், சிறப்பாகவும், சென்னை, கொச்சி, திருவாங்கூர் முதலிய இடங்களிலும், பஞ்சாப், வங்காளம் முதலிய நாடு களிலும் ஏராளமாகப் பயிரிடப்படுகிறது. இது பச்சையாக உள்ளபோது இஞ்சி என்றும் உலர்ந்தபின் சுக்கு என்றும் பெயர்பெறும்.

**பயன்படுத்தும் உறுப்பு :** கிழங்கு (உலர்ந்தது)
சுவை—கார்ப்பு, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

**செய்கை :** வெப்பமுண்டாக்கி — உஷ்ணகாரி (Stimulant) பசித்தீத்தூண்டி—ஜடராக்கினிவர்த்தனி (Stomachic) அகட்டு வாய்வகற்றி—உதரவாதஹரகாரி (Carminative)



படம் 1. இஞ்சி (சுக்கு)

**குணம் :** சுக்கினால், செரியாமை, மார்பெரிச்சல், புளி யேப்பம், வெப்பம், கீழ்வாய் நோய், இரைப்பு, இருமல், கழிச்சல், நீரேற்றம், குன்மம், வயிற்றுப்புசம், காதுகுத்தல், முகநோய், தலைநோய், குலைவலி, பாண்டு, வயிற்றுக்குத்தல், ஐயசுரம் போம்.

**வழக்கு :** சுக்கைக் களி செய்து நெற்றிக்கிடத் தலைவலியும், கழுத்தின் மீதிடத் தொண்டை வலியும், புருவத்தின் மீதிட அண்மைப் பார்வைக் கெடுதியும் நீங்கும்.

சுக்கு, கற்கண்டு வகைக்கு வராகனெடை ஒன்று; இரண்டையும் பொடிசெய்து, காலை மாலை இரு வேளையும் இளநீரில் ஒரு சிட்டிகை கொடுக்க, சுமையெடுத்து உடம் பதிர்ந்து நெஞ்சுவலிப்பதும், மேல் மூச்சு காண்பதும் நீங்கும்.

**ஆ. மிளகு**

**வே. பெ :** கறி, கோளகம், மிரியல், சருமபந்தம், வல்சம், மரிசம், குறுமிளகு, மலையாளி.

**Piper Nigrum, Linn.**

இது, தென்னிந்தியாவில் மலையாளம், கொச்சி, குடகு, மைசூர் முதலிய மலைநாடுகளில் பயிராகும் ஒருவகைக் கொடி. இது மரங்களைச் சுற்றி ஏறி அடர்த்தியாய் வளரும். இதன் பழத்துக்கு மிளகு என்பது பெயர். இதன் பழம் பழுத்த தோல் உதிர்ந்தால் அதனை வெள்ளை மிளகு எனக் கூறுவர்,

**சுவை** — கைப்பு, கார்ப்பு; **தன்மை**—வெப்பம்; **பிரிவு**—கார்ப்பு.





படம் 2

*மிளகு (பச்சை)* *மிளகு (காய்ந்தது)*

**செய்கை :** காறலுண்டாக்கி (Acrid)

அகட்டுவாய்வகற்றி—உதரவாதஹரகாரி (**Carminative**); முறைவெப்பகற்றி—முறைவியாதிரோதி (**Antiperiodic**); தடிப்புண்டாக்கி – ஷோணகாரி

(Rubefacient); வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant); வீக்கங்கரைச்சி (Resolvent); வாதமடக்கி—வாதஹரகாரி (Antivata).

**பச்சை மிளகு** (A green variety of Pepper)

குணம் : இது வளிநோய்களையும் சீழ்மூலத்தையும் நீக்கும்.

**பழம் (மிளகு)**

இதனால் குளிர்சுரம், பாண்டு, கோழை, கழிச்சல், குன்மம், வாயு, சுவையின்மை, வெறி, மூலம், சந்நியாசம், வலிப்பு (அபஸ்மாரம்), பிரமேகம், இருமல், பங்குவாதம், குய்யரோகம், சோணிதவாதம், களநோய், செவிவலி, இரத்தகுன்மம், செரியாமை, காமாலை இவை போகும்.

மிளகு வளி, தீ, கபக்குற்றங்கள் இவை அனைத்தையும் நீக்கும். அன்றியும் திமிர்வாதம், கழலை, வளி, சளி இவைகளையும் அகற்றும்.

வழக்கு : மிளகு, பெருங்காயம், அபினி வகைக்கு 2 கிராம் எடுத்து, செவ்வையாக அரைத்து 12 மாத்திரைகள் செய்து, அதில் ஒரு மணிக்கொரு முறை ஒரு மாத்திரை கொடுத்துவர, வாந்திபேதி நீங்கும்.

**இ. திப்பிலி**



படம் 3

திப்பிலி (சிறியது) திப்பிலி (பெரியது)

வே. பெ: உண்சரம், உலவைநாசி, காமன், குடாரி, கோலகம், கோழையறுக்கி, சரம், மாகதி, கணை,

தண்டுலி, கணம், பாணம், பிப்பிலி, வைதேகி, அம்பு, ஆதிமருந்து.

Piper longum, Linn.
Chavica roxburgii

இது கொடி வகை. இதனைத் தென்னிந்தியாவிலும், வங்காளத்தின் கீழ்ப்பாகங்களிலும் இதன் பழத்திற்காகப் பயிரிடுகிறார்கள். இதற்கு மிளகைப் பார்க்கிலும் காரம் மிக அதிகம். இதில் இருவகை உண்டு. ஒன்று அரிசித் திப்பிலி, மற்றொன்று யானைத் திப்பிலி.

ப. உ : காய், அரிசி, வேர்.

**பச்சை**

சுவை—இனிப்பு, தன்மை—தட்பம், பிரிவு—இனிப்பு

**உலர்ந்தது**

சுவை — கார்ப்பு, தன்மை — வெப்பம், பிரிவு — இனிப்பு

**செய்கை**

வெப்பமுண்டாக்கி — உஷ்ணகாரி (Stimulant)
அகட்டுவாயுவகற்றி – உதரவாதஹரகாரி (Carminative)

## 2. திரிபலை

திரிபலை என்பது கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆகியவை சேர்ந்த மருந்தின் பெயராகும். இதனை மருத்துவ முப்பழம் எனவுங் கூறுவர்.

**அ. கடுக்காய்**

வே. பெ : அபையன், அமுதம், அம்ருதா, அரிதகி, ஏமவதி, ஐயவி, ஹைமவதி, கடு, சிவா, பத்தியம், பிஷக்வரா, வனதுர்க்கி, விஜயதேவன், ரோகிணி, ஜீவந்தி.

Terminalia chebula, Retz.
Eng : Chebulic Myrobalam, Ink nut.

கடுக்காய், மர வகுப்பைச் சேர்ந்தது. இது சில இடங்களில் உயர்ந்தும், சில இடங்களில் மிக உயரமின்றித் தாழ்ந்தும்

பயிராகின்றது. வட இந்தியாவில் உண்டாகும் மரங்கள் மிக உயரத்தை அடைவதில்லை. நருமதைக்குத் தென்பாகத்தில் வளர்பவை சற்றேறக்குறைய 100 அடி உயரமுள்ளனவாகவே இருக்கின்றன. இலங்கைத்தீவிலும், இந்தியா முற்றிலும் இம்மரம் பயிராகின்றது. தெற்கில் மேட்டுப்பாங்கான இடங் களிலும், குமாயூனிலும், வங்காளத்தின் மத்திய பாகங்களிலும் அளவு கடந்து விளைகின்றது.



படம் 4. கடுக்காய்

ப. உ : பிஞ்சு, பழம்.

### கடுக்காய்ப் பிஞ்சு

இப் பிஞ்சை உலர்த்திய பின், முட்டை வடிவமாயிருப் பினும், இருபக்கங்களிலும் பெரும்பாலும் சப்பையாயும் சுருங்கியுமிருக்கும்.

குறிப்பு : 'கடுக்காய்க்கு அக நஞ்சு', 'சுக்குக்குப் புற நஞ்சு' என்னும் பழமொழியின்படி, கடுக்காயுள்ளிருக்கும் கொட்டையையும் பருப்பையும் நஞ்செனக் கருதுவர். ஆனால்,

அது கண் நோய்களுக்காகச் செய்யும் மருந்துகளில் கூட்டப் படுகிறது.

**முதிர்ந்த கடுக்காய்**

இது, நம் நாட்டில் கிடைப்பனவும், வெளிநாட்டிலிருந்து வரக் கூடியனவுமான சூரத்துக் கடுக்காய், காபூல் கடுக்காய் என்னும் இரண்டுமாம். நாட்டுக் கடுக்காயில் ''முற்றிப் பழுத்தது, பசுமை நிறத்தோடும் சதைப் பற்றுள்ளதாகவும் இருக்கும். அவ்வாறு இல்லையேல், கருநிறத்தோடு சதைப் பற்று அற்றதாக இருக்கும். காபூல் கடுக்காய், பார்வைக்குப் பெரியதாகத் தோன்றினும், ஊட்டமில்லாமல் இருக்கும். சூரத்துக் கடுக்காய், மஞ்சள் நிறத்தோடு ஊட்டமும், எடையோடுமிருக்கும். இதுவே உள் மருந்து முறைகளுக்கு மிகவும் சிறந்ததாகும்.

சுவை : முக்கியச் சுவை—துவர்ப்பு, அதனுடன் சிறிது இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கைப்புப் பெற்றிருக்கும்.

கொட்டை — துவர்ப்பு, பருப்பு — இனிப்பு, நரம்பு — புளிப்பு, காம்பு — கைப்பு, தோல் — கார்ப்பு, தன்மை — வெப்பம், பிரிவு — இனிப்பு.

குறிப்பு : அறுசுவைகளுள் உப்புச்சுவை நீங்கலாக மற்ற ஐந்து சுவைகளும் இதில் அடங்கியிருக்கின்றன. ஆகையால், இது முக்குற்ற அளவாகிய முப்பிணியைப் போக்கும் வல்லமை உடையதாயிருக்கின்றது.

புளிப்புச் சுவையால் வளிக்குற்றத்தால் உண்டாகும் நோய்களும், இனிப்புச் சுவையால் தீக்குற்றத்தினால் ஏற்படும் நோய்களும், கார்ப்பு, கைப்பு, துவர்ப்புச் சுவைகளால் ஐயக் குற்றத்தால் உண்டாகும் பிணிகளும் போம்.

குற்றங்களில் ஒன்றை மிகுத்தும், மற்றொன்றைக் குறைத்தும் செய்யுந்தன்மை இதற்கின்மையே, இதன் ஒப்பற்ற பெருமையாகும்.

மேலும், கடுக்காயில் அமைந்துள்ள ஐம்பெரும் பொருளின் (பூதங்களின்) கூட்டுறவே, இஃது இனிப்புப் பிரிவை அடைய ஆதாரமாகின்றது.

**குணம்** : இது, வெம்மை, நொய்மை, வறட்சி, இயக்கம் என்னும் பண்புகளையுடையது. மேலும், இது பசித்தீயைத் தூண்டிச் செரிப்பிக்கச் செய்து, உடற்கட்டுகளுக்கு வன்மை தந்து, முதுமை வரவொட்டாமற் செய்யும். அன்றியும் வாழ் நாள் பெருக்கையும், அறிவையும், ஆற்றலையும் தரும். ஆதல்பற்றி இஃதொரு காயகற்பப் பொருளாகக் கொள்ளப் படுகிறது.

இன்னும் இது வாதாதி குற்றங்களைக் கீழ்நோக்கச் செய்யவும், பசியைத் தூண்டவும் கூடியது. பக்குவமாகாத உணவைச் செரிப்பிக்கவும் செய்யும்.

தோடங்கள் தங்கிய இடங்களிலிருந்து அவற்றை வெளிப்படுத்துதல் குடலிலுள்ள இயக்கச் சக்தியைத் தூண்டி மலத்தை வெளிப்படுத்துதல், கிழத்தன்மையைத் தடுத்தல் ஆகியவையும் இதற்குண்டு.

இஃதன்றியும் கடுக்காயினால் கன்னம், கழுத்து, நா, ஆண் குறி இவ்விடங்களின் நோய்கள், காலடிப் புற்றுநோய், அதி தூலம், இடிபுண், வாதசோணிதம், காமாலை, தாவரசங்கம விடங்கள் இவை போம்.

**பொதுப் பண்பு**

மிகுநீர் போதல், சுவையறியாமை, தமரக நோய், குருதி யழல், இடிபட்ட புண், உதரவர்த்தவாதம், உதட்டு நோய், கண் நோய்கள், இருமல், காமாலை, புழு நோய்கள், குன்மம், குட்டம், கைகால் எரிச்சல், கோழை வெளிப்படுதல், தலை நோய்கள், சோபை, இரைப்பு, தொண்டைக்கம்மல், நீர் வேட்கை, ஆண்மையின்மை, ஈரல் நோய், வெள்ளை, பெரு வயிறு, நாவறட்சி, நாவின்நோய்கள், நிறம்மாறுபடுதல், பங்கு வாதம், பாண்டு, மார்புநோய், மூத்திராகாதம், மூத்திரகிரிச்சம், மூர்ச்சாரோகம், மூலரோகம், மேகரோகம், மேதோரோகம், வயிற்றுப்பொருமல், வயிற்று வலி, வாதரத்தம், வாதானு லோபம், வாய்நீர் சுரத்தல், வாந்தி, விக்கல், புண், விதை வாதம், வெண்குட்டம், விடசுரம், புராணசுரம், க்ஷயம், குலை வியாதி, இந்திரிய மார்க்கங்களிலும், மலம் முதலியவை வெளிப் படவேண்டிய மார்க்கங்களிலும் அடைபடுதல் முதலிய நோய் கள்ல்லாமல் அசீரணம், அழலை, அஸ்மரி, இருமல், இளைப்பு, உள்ளங்கால் எரிவு, உட்சூடு, உன்மத்தம், உஷ்ணவாயு, கபவாதரோகம், கிரந்தி, குலை எரிவு, குடல் புரட்டல், கை

எரிவு, தோஷம், பவுத்திரம், புகைச்சல், மண்டைப்புற்று, மண்டைக்கிரந்தி, வயிற்றுக்கட்டி, வாய்ப்புண் முதலிய நோய்களுந் தீரும்.

**கடுக்காயின் சிறப்பு**

**கடுக்காயுந் தாயுங் கருதிலொன்றென் றாலும்**
**கடுக்காயத் தாய்க்கதிகங் காண்நீ — கடுக்காய்நோய்**
**ஓட்டி யுடற்றேற்றும் உற்றவன்னை யோசுவைகள்**
**ஊட்டியுடற் றேற்று முவந்து.**

— தேரையர் வெண்பா

[தாயோ, அறுசுவை உணவை ஊட்டி உடலைத் தேற்று வாள். கடுக்காயோ, உடற்பிணிகளை ஓட்டி உடலைத் தேற்றும். பிணிகளை நீக்கினாலல்லவோ, உணவு பயன்பட்டு உடல் தேறும். ஆதலின், தாய் உணவை மாத்திரம் ஊட்டுந் தன்மை உடையவளாதலால், தாயினும் கடுக்காய் சிறந்த தெனக் கொள்க.]

**ஆ. நெல்லிக்காய்**

**வே. பெ:** ஆமலகம், ஆமரிகம், தாத்தாரி, தாத்திரி, கோரங்கள், மிருதுபலா, மீதுந்து.

Phyllanthus emblica, Linn.
Emblica officinalis
Eng: Indian Gooseberry.

இது தென்னிந்தியாவில் ஏராளமாக வளருகின்ற மரம்.

முக்கியமாக மலைநாடுகளில் உண்டாகும். இதன் பழம், பச்சையாயிருக்கும்போது வெண்மஞ்சள் நிறமாகவும், உலர்ந்த பின் கறுப்பு நிறமாகவும் இருக்கும். இதற்கே 'நெல்லி முள்ளி' என்று பெயர். நெல்லி மரவகையில், கருநெல்லி என்றும் அருநெல்லி என்றும் வேறிரண்டு இனங்களும் உண்டு.

**ப. உ:** இலை, பூ, பட்டை, வேர், காய், விதை.

சுவை—புளிப்பு, துவர்ப்பு, இனிப்பு; தன்மை—தட்பம்; பிரிவு—இனிப்பு

**செய்கை:** இலை, பட்டை, காய்ந்த பழம்
துவர்ப்பி — ஸங்கோசனகாரி (Astringent)

பூ

குளிர்ச்சியுண்டாக்கி—சீதளகாரி (Refrigerant)
மலமிளக்கி — மலகாரி (Laxative)

பழம்

குளிர்ச்சியுண்டாக்கி—சீதளகாரி (Refrigerant)
சிறுநீர்பெருக்கி – மூத்திரவர்த்தனி (Diuretic)
மலமிளக்கி — மலகாரி (Laxative)



படம் 5. நெல்லிக்காய்

**குணம்** : நெல்லிக்காயைப் பகற்போதுண்ணில் வெறி, ஐயநோய், பீனிசம், வாய்நீர்ச் சுரப்பு, வாந்தி, மயக்கம், தலை சுழலல், மலபந்தம், பிரமேகம் இவை போகும். காமன் போன்ற அழகுண்டாகும். அதன் புளிப்பால் அழலும் (பித்தமும்) துவர்ப்பால் ஐயமும் நீங்கும்.

## இ. தான்றிக்காய்

**வே. பெ :** அக்ஷம், கந்தகட்பலம், கந்துகள், கலித்துருமம், களந்தூன்றி, சதகம், தாபமாரி, விபீதகம், திரிலிங்கம், பூதவாசகம், தானிக்காய், தாணிக்காய்

Terminalia belerica, Roxb
Eng : Beleric Myrobalans.



படம் 6. தான்றிக்காய்

இது மர வகுப்பைச் சேர்ந்தது.

இந்தியாவில் காடுகளிலும், மலை அடிகளிலும் உயர்ந்து வளரும். இதன் காய்க்குத் தான்றிக்காய் என்பது பெயர்.

ப. உ. : இலை, பழம், விதை.

சுவை – துவர்ப்பு; தன்மை—வெப்பம்; பிரிவு—இனிப்பு.

**செய்கை :** துவர்ப்பி—ஸங்கோஸனகாரி (Astringent)
கோழையகற்றி — கபஹரகாரி (Expectorant)
மலமிளக்கி—லகுவ்ரேசனி (Laxative)
உரமாக்கி—பலகாரி (Tonic)

**குணம்:** இதனால், சிலந்திநஞ்சு, ஆண்குறிப்புண், வெள்ளை, குருதியழல்நோய், வளி, தீக்குற்றங்களால் வரும் நோய்கள் போம். மேலும், இஃது உடற்கு அழகையும் ஒளியையும் கொடுத்து முக்குற்றங்களையும் தன்னிலைப் படுத்தும்.

**வ. கு:** தான்றிக்காயைச் சுட்டு மேல்தோலைப் பொடித்து, அவ்வெடைக்குச் சர்க்கரை சேர்த்து, தினம் இரு வேளை 4 கிராம் எடை வெந்நீரில் கொடுக்கப் பல் வலி தீரும்.

தான்றிப் பொடியைத் தேனில் கலந்து கொடுக்க, அம்மை நோய் நீங்கும்.

அரைப்பலம் தான்றிக்காய்த் தோலை 170 மி.லி. நீரில் சேர்த்து மூன்றில் ஒரு பங்காகக் காய்ச்சி, தேன் 28 கிராம் சேர்த்துக் கொடுக்க இரைப்புத் தணியும்.

## 3. தசமூலம்

தாவரத்தின் ஐந்துறுப்புகளில் (பஞ்ச அங்கங்களில்) பெரும் சிறப்பு வாய்ந்தது அதன் வேர் அல்லது மூலம் என்பதை ஏற்கெனவே கண்டோம். ஏனெனில், பெரும்பாலான மருந்துச் சத்துகளின் களஞ்சியமாக விளங்குவது மண்ணிற்கு அடியில் காணப்படும் மூலமாகும். மருத்துவ அனுபவ அறிவில் மாண்புடன் விளங்கிய நம் முன்னோர்கள் மூலங்களின் சிறப்பை உணர்ந்து அதனைப் பல்வேறு கோணங்களில் வகைப் படுத்தினர். இவ்வாறு பிறந்த வகைபாடுகளே **தசமூலங்கள், பெரும் பஞ்சமூலங்கள், சிறுபஞ்ச மூலங்கள், அஷ்டமூலங்கள்** போன்றவையாகும். இவற்றில் தசமூலங்களும் பஞ்சமூலங்களும் சிறப்பான வகைபாடுகள்.

தமிழ் மருத்துவத்தில் **கண்டங்கத்தரி**, **சிறுவழுதுணை**, **சிறுமல்லி**, **பெருமல்லி**, **நெருஞ்சி**, **வில்வம்**, **பெருங்குமிழ்**, **தழுதாழை**, **பாதிரி**, **வாகை** ஆகிய பத்து மூலங்களையும் **பதார்த்தகுண சிந்தாமணி** என்னும் மருத்துவநூல் **தசமூலங்களாக** வகைப் படுத்துகின்றது. இந்தப் பத்து வேர்களையும் நம் முன்னோர் கள், அவற்றைத் தரும் தாவர வகையில் பெருமரம், சிறு செடி என்ற வகுப்பிற்கு இணங்க மேலும் இரு கூறுகளாகப் பிரித்து (வில்வம், வாகை, பெருங்குமிழ், தழுதாழை, பாதிரி என்னும்) ஐந்து பெரு மரங்களின் வேர்களைச் சேர்த்துப் பெரும் பஞ்ச மூலம் என்னும் ஒரு பிரிவையும், (சிறுவழுதுணை, நெருஞ்சில், சிறுமல்லிகை, பெருமல்லிகை, கண்டங்கத்தரி என்னும்) ஐந்து சிறு செடிகளின் வேர்களைச் சேர்த்துச் சிறு பஞ்சமூலம் என்று மற்றொரு பிரிவையும் அமைத்தார்கள். இந்த மூலிகைகளின் பெயரால் **காரியாசான்** செய்த **சிறுபஞ்சமூலம்** என்னும் நீதிநூலும் பண்டைக் காலத்தில் இயற்றப்பட்டது. இந்த மூலிகைகள் பற்றிய செய்திகளைப் பின்வரும் பகுதிகளில் காணலாம்.

## சிறுபஞ்சமூலம்

### அ. கண்டங்கத்தரி

Solanum Xanthocarpum

Eng — Wild eggs plant, Bitter—sweet woody night shade

இது செடி வருக்கத்தைச் சேர்ந்தது ; எல்லா விடங்களிலும் கிடைக்கும் ; முக்கியமாகக் கிழக்கு மேற்குக் கரையோரங்களில் ஏராளமாய் வளரும்.



படம் 7. கண்டங்கத்தரி

**ப. உ** : இலை, பூ, காய், பழம், விதை, வேர்.

சுவை — கார்ப்பு ; தன்மை—வெப்பம் ; பிரிவு—கார்ப்பு.

**செய்கை :** கோழையகற்றி — கபஹரகாரி (Expectorant)
சிறுநீர்ப்பெருக்கி — மூத்திரவர்த்தனி (Diuretic)
அகட்டுவாய்வகற்றி — உதரவாதஹரகாரி (Carminative)

விதை.

பெருங்கழிச்சலுண்டாக்கி — ஜலவிரேசனி (Hydragogue).

**குணம்** : இதனால் காசம், சுவாசம், க்ஷயம், அக்கினி மந்தம், தீச்சுரம், சன்னிவாதம், ஏழு வகைத் தோடங்கள், வாதநோய் ஆகியவை போம்.

## சிற்றாமல்லி பேராமல்லி விளக்கம்

(Uraria logopoides and Desmodium gangeticum)

**சித்தாமல்லி** வேரும் **பேராமல்லி** வேரும் சிறுபஞ்சமூலங்களில் சித்த மருத்துவத்தில் சொல்லப்படுகின்றன. மல்லி என்னும் சொல் மல்லிகையைத்தான் குறிப்பிடுகிறது எனப் பல நூற்றாண்டுகள் காலம் கடந்த இந்நிலையில் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. தமிழ்மொழியில் தற்கால அகராதி ஆசிரியர்களும், திரு. சாம்பசிவம் பிள்ளையவர்கள் போன்ற தலைசிறந்த சித்த மருத்துவ அறிஞர்களும் இரு மல்லிகளையும் மல்லிகை இனங்களின் வேராகத் தமது நூல்களில் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு சிற்றாமல்லிகையை (Jasminum angustifolium) என்னும் மூலிகையாகவும், பேராமல்லிகையை (Jasminum sumbuc) என்னும் இனமாகவும் சுட்டிக்காட்டி உள்ளனர். அது பொருந்தாது.

ஆனால் ஆயுள்வேதத்தில் தசமூலங்களில் இவை சாலிபர்ணியின் வேராகவும், அம்சபாதியின் வேராகவும் குறிக்கப்பட்டுள்ள செய்தி இங்கே ஆய்ந்து நோக்கற்பாலது. மேலும் குமரி மாவட்டம், நெல்லை மாவட்டம் போன்ற இடங்களில் சிற்றாமல்லிகை என்னும் பெயரில் கிடைப்பது மல்லிகை வேரன்று, சிறுபுள்ளடி அல்லது (அம்சபாதியின்) பெரும் புள்ளடியின் வேராகும். இதனால் இவ்விரு இனங்களும் உண்மையான சிற்றாமல்லி பேராமல்லி இனங்கள் என இக்கட்டுரை ஆசிரியர் கருதுகிறார். ஏனெனில் கடைச் சரக்கில் அவரைக்குடும்பத்திற்குரிய வேர் முண்டுகள் காணப் படுகின்றன. இதனால் ஆயுள்வேதம் குறிப்பிடும் 10 மூலங்களும் தமிழ் சித்த மருத்துவத்தின் 10 மூலங்களுக்குச் சமமாகின்றன. இரண்டே மூலிகைகளில் இருந்து வந்த முரண்பாடு இதனால் நீங்குகிறது. இந்த விளக்கத்தின் அடிப்படையில் இந்நூலின் மூலம் சிற்றாமல்லியை யுரேரியா லோகோபாய்டிஸ்

(Uraria logopoides) என்றும், பேராமல்லியை டெஸ்மோடியம் கான்ஜெடிகம் (Desmodium gangeticum) என்றும் குறிப்பிடலாம். இவ்விரு மூலிகைகளும் அவரைக் குடும்பத்தைச் (Papilionaceae) சார்ந்தவை.

**ஆ. சிற்றாமல்லி (சிறுபுள்ளடி)** (Uraria logopoides)

சிற்றாமல்லி படர்ந்து வளர்ந்து பல்லாண்டு வாழும் கிளை விரித்த ஒரு புதர்ச் செடி. இலைகள் முக்கூட்டு இலைகளாக வோ, ஓர் இலைக்கூட்டிலைகளாகவோ விரவிக் காணப்படு கின்றன. இந்தியாவில் கேரளக் காடுகளிலும், கீழைக் கடற் கரை ஓரத்திலும், வங்காளத்திலும் இஃது அதிகமாக வளர் கிறது. தமிழ்நாட்டில் இதைச் சிறுபுள்ளடி என்று வழங்குவர். புள்ளினுடைய கால் போல் இருப்பதால் இப்பெயர் பெறுகிறது. தற்கால வழக்கில் சிறுபுள்ளடி என்னும் பெயரில் 'Desmodium Trifolium D.C' என்னும் தாவரத்தைத் தவறாக வழங்குகிறோம்.

**மருந்தியல்கள் :** இதன் வேரைச் சிறந்த உரமாக்கியாகவும் உடல் தேற்றியாகவும் பயன்படுத்துகின்றனர். நாட்பட்ட பீனிசத்திற்கு நல்ல மருந்து. கருவுற்ற மகளிர் ஏழாவது மாதத்தில் இதன் வேரைப் பாலில் கலந்து உண்டால் கருச் சிதைவு ஏற்படும் எனப் பழைய மருத்துவ நூல்கள் குறிப்பிடு கின்றன.

**இ. பேராமல்லி (பெரும்புள்ளடி)** (Desmodium gangeticom)
(Hedysarum gangeticum, Linn.)

தசமூலங்களில் ஒன்றான பெருமல்லிகை வேர், பெரும் புள்ளடி வேரையே குறிப்பிடுகிறது என்பதை ஏற்கெனவே சுட்டிக் காட்டினோம். தமிழ்நாட்டில் பெரும்புள்ளடி என்னும் பெயரில் மிக நெருங்கிய இருசிற்றினங்களின் பெயர்கள் வழங்குகின்றன. அவை 'Desmodium Gangeticum' என்னும் மூலிகையும் 'Desmodium Latifolium' என்னும் மூலிகையும் ஆகும். இவை இரண்டு இனமும் ஆயுள்வேதத்தில் சாலிபரணி என அழைக்கப்படுகின்றன.

இது சிறந்த தாது வெப்பகற்றி; பீனிசத்திற்கு நல்ல மருந்து. ஆயுள்வேதத்தில் பிற வேர்களுடன் அரிஷ்டமாகத் தயாரிக்கப்படுகிறது. வேர்க்குடிநீரை முறைக்காய்ச்சலுக்கும், பிள்ளைப்பேற்றுக்குப்பின் வரும் சுரத்திற்கும் மருந்தாகப் பயன்படுத்துகின்றனர். இதன் வேரைச் சிறந்த உடல்தேற்றி

யாகவும், உரமாக்கியாகவும், இரைப்புநோய் (Asthma), சீதக் கழிச்சல், வாந்தி போன்றவற்றிற்கும் கொடுக்கிறார்கள்.

ஈ. **நெருஞ்சில்**

**வே. பெ :** திரிகண்டம், திரிகண்டகம், திரிதண்டம், நெருஞ்சிபுதும், அசுவசட்டிரம், கோகண்டம், சுவாதுகண்டம்.

Tribulus terrestris, Linn
Eng : Small Caltrops.

இது, தரையில் படரும் ஒருவகை முட்செடி. முட்கள், மாட்டின் கொம்பைப் போன்று பிரிவுடையன. பூக்கள் மஞ்சள் நிறமாயிருக்கும். இதில் சிறுநெருஞ்சில், பெரு நெருஞ்சில் அல்லது யானைநெருஞ்சில் என்னும் பிரிவுகளு முண்டு. நெருஞ்சிலுக்கு யானைவணங்கி என மற்றொரு பெயருமுண்டு.



படம் 8.
சிறு நெருஞ்சில் பெரு நெருஞ்சில்

இவை குணத்தில் மிகுதியாய் மாறுபடுவதில்லை.

**ப. உ. :** செடி முழுமையும்.

சுவை — துவர்ப்பு, இனிப்பு ; தன்மை — சீதம் ; பிரிவு — இனிப்பு

**செய்கை :** குளிர்ச்சியுண்டாக்கி—சீதளகாரி (Refrigerant)
சிறுநீர்ப்பெருக்கி—மூத்திரவர்த்தனி (Diuretic)
உள்ளழலாற்றி—அந்தர்ஸ்நிக்தகாரி (Demulcent)

உரமாக்கி — பலகாரி (Tonic)
ஆண்மைபெருக்கி—காமவர்த்தனி
(Aphrodisiac)
துவர்ப்பி — ஸங்கோசனகாரி (Astringent)

**நல்ல நெருஞ்சில்**

குணம் : இதனால் சொட்டு நீர், சுரவெதும்பல், கல்லடைப்பு, நீரடைப்பு, முடவாயு, வெள்ளை, சிறுநீர் எரிச்சல், மூக்குற்றம், நீர்வேட்கை, வெப்பம் ஆகியவை நீங்கும்.

**நெருஞ்சில் வித்து**

இதனால், சிறுநீர்க்கட்டு, சிறுநீர் எரிச்சல், சதையடைப்பு, கல்லடைப்பு ஆகியவை நீங்கும்.

**சிறுநெருஞ்சில்**

வ. கு : இதன் காயையும் வேரையும் பச்சரிசியோடு வேக வைத்துக் கஞ்சியை வடித்துச் சர்க்கரை கூட்டி, வெள்ளை, நீர்க்கடுப்பு இவற்றுக்குக் கொடுப்பது நாட்டு வழக்கம்.

நசுக்கிய நெருஞ்சிக்காய் 68 கிராம், கொத்துமல்லி விதை 8 கிராம், நீர் 680 கிராம் இவற்றை நேர் பாதியாய்ச் சுண்ட வைத்து வடிகட்டி, 40 மி.லி. வீதம் தினம் இருவேளை கொடுத்து வர நீரடைப்பு, சதையடைப்பு, கல்லடைப்பு, நீர் எரிச்சல் முதலியன நீங்கும்.

**உ. சிறுவழுதுணை**

**வே. பெ** : வழுதலை, வழிதுணை

(Solanum melongena)

Eng : Egg Plant, Brinjal

இஃது இந்தியா முழுவதும் பயிரிடப்படுகின்ற ஒருவகைச் செடி. இதில் அநேக சாதிகளுண்டு.

பப்பறமுள்ளி {
ஆகாசக்கத்தரி (Hibiscus Longifolius)
2 வகை.
1. சிறு ஆகாசக்கத்தரி
2. பெரு ஆகாசக்கத்தரி
}

கண்டங்கத்தரி (Solanum Jaequini)
காறல்கத்தரி (Solanum Insanum)

கத்தரி நாயகம் (Veronia), யானைச் சீரகம்
கொத்துக்கத்தரி (Solanum Stramoni folium)
சிறுவழுதலை (முள்ளி) (Solanum Ind.)



படம் 9. சிறுவழுதுணை

வழுதுணையில் மூன்று வகை : (1) கறுப்புவழுதுணை, (2) பெருவழுதுணை, (3) சிறுவழுதுணை. இது தச அல்லது சிறுபஞ்சமூலத்தொன்று.

ப. உ : இலை, பிஞ்சு, காய், பழம், வித்து, வேர்.

சுவை — கைப்பு, துவர்ப்பு, தன்மை—வெப்பம் ;
பிரிவு—கார்ப்பு

செய்கை : வெப்பமுண்டாக்கி (Stimulant)
உறக்கமுண்டாக்கி (Hypnotic)
கோழையகற்றி (Expectorant)

**பிஞ்சு**

**குணம்** : பிஞ்சு முக்குற்றத்தை விலக்கும்; ஆனால், புடையையும் கிரந்தியையும் அதிகப்படுத்தும் ; பத்தியத்துக்கு உதவும்.

**காய்**

இஃது அழலால் வந்த ஐயத்தைப் போக்கும் ; கரப்பான், புடை, சொறி, சிரங்கு இவற்றை விளைவிக்கும். மேக ஊறலை அதிகப்படுத்தும்.

சிறுவழுதலைக்கறி, உடம்பிற்குக் கேடு செய்யாது. பத்தியத்திற்கும் நன்று.

**பழம்**

இதனால் இரைப்பு, கோழை, வளிக்குற்றம் இவை நீங்கும். கரப்பான், பித்தநோய், பெருநோய், பெரும்புண், ஆண்மையின்மை, உடல் அனல் இவை உண்டாகும்.

**வேர்**

இஃது ஐயவளி நோய்கள் யாவற்றையும் நீக்கும்.

**பிஞ்சு, காய்**

**வ. கு** : இவற்றைச் சமைத்தும், வற்றலிட்டு வறுத்தும் உண்ணலாம்.

**பழம்**

வ. கு : இலிங்கத்தைப் பழத்துக்குள் வைத்து, மூன்று சீலைமண் செய்து காடைப் புடமிடவும். இப்படி 100 புடமிட இலிங்கம் கட்டுப்படும்.

**வேர்**

இஃது ஐயம், வளி இவை சேர்ந்த நோய்களைப் போக்கச் செய்யுந் தைலங்களிற் சேர்க்கப்படும்.

# பெரும்பஞ்சமூலம்

**அ வில்வம்**

**வே. பெ :** குசாபி, கூவிளம், கூவிளை, சிவத்துருமம், நின்மலி, மாலூரம்.

Aegle marmelos, Corr.
Eng. Bael (tree)

இஃது இந்தியா முற்றும் பயிராகும் மரம்.

**ப. உ:** இலை, பூ, பிஞ்சு, காய், பழம், வேர், பிசின், பட்டை, ஓடு, வேர்ப்பட்டை.

**இலை, பூ, பிஞ்சு, காய், வேர்**

சுவை — துவர்ப்பு, கைப்பு, தன்மை — தட்பம், பிரிவு — கார்ப்பு.

**பழம்**

சுவை — துவர்ப்புடன் சிறுகைப்பு, தன்மை — தட்பம், பிரிவு — கார்ப்பு.

**செய்கை**

**இலை :**

வியர்வை பெருக்கி—ஸ்வேதகாரி (Diaphoretic)
காமம்பெருக்கி—காமவர்த்தனி (Aphrodisiac)
வெப்பகற்றி — சுரஹரகாரி (Febrifuge)

**பூ, பிஞ்சு, காய் :**

துவர்ப்பி — ஸங்கோசனகாரி (Astringent)
செரிப்புண்டாக்கி — பாசநகாரி (Digestive)
பசித்தீத்தூண்டி—ஜடராக்கினிவர்த்தனி(Stomachic)

**பழம் :**

துவர்ப்பி — ஸங்கோசனகாரி (Astringent)
எரு இளக்கி — மலகாரி (Laxative)
பசித்தீத்தூண்டி—ஜடராக்கினிவர்த்தனி(Stomachic)

**வேர், பிசின் :**

ஆண்மை பெருக்கி—காமவர்த்தனி (Aphrodisiac)

**குணம் :** வில்வத் தளிர் — எல்லா மேகத்தையும், பூ — மந்தத்தையும், பிஞ்சு — குன்மத்தையும், பழம் — கண்ணிருளையும், பிசின் — வெண்ணீர்க் குறைவையும் நீக்கும்.

வில்வத்தினது காய், கனி, இலை, வேர், முதலானவற்றைத் தூள், ஊறுகாய், குடிநீர், தைலம்; ஆகிய எந்த விதமாகிலும் செய்து உட்கொள்ள, அஃது உடற்கு அழகையும், ஆண்மையையும் கொடுக்கும்; மயக்கம், குழறிப் பேசும் தன்மை இவற்றை நீக்கும்.



படம் 10. வில்வம்

**வேர்**

குன்மம், முக்குற்றத்தின் கேடு, சோபை, ஐயத்தாலுண்டான நீர் வேட்கை, சுரம், நீரேற்றம், முப்பிணி, உடல் கடுப்பு இவைகளை நீக்கும்.

**இலை**

**வ. கு:** இது சிவன் கோயிலில் அர்ச்சனை செய்யும் பத்திரங்களுள் சிறந்தது.

இளந்தளிரை வாட்டித் துல்லிய சீலையில் முடிந்து ஒற்றடமிட மேகத்தாலுண்டாகும் கண் சிவப்பு நீங்கும்.

வில்வவேர், சிற்றாமுட்டிவேர், சுக்கு இம்மூன்றையும் சேர்த்துக் காய்ச்சி எட்டில் ஒன்றாய் வடித்து, தேனைக் கலந்து அருந்தக் கொடிய முப்பிணி வாந்தி தீரும்.

இலை 1-க்கு நீர் 4 பங்கு கூட்டி நாலிலொன்றாக வடித்த குடிநீர், வயிற்றுக்கடுப்பு, மேகவாயு இவற்றைப் போக்கும். சுரத்திற்கும் கொடுக்கலாம்.

இலைச்சாற்றைப் பிழிந்து, உடனே அதில் மிளகுதூள் சிறிது சேர்த்துக் கொடுக்கச் சோபை, காமாலை தீரும். மேற்படி சாற்றுடன் நீர் அல்லது தேன் கூட்டிக்கொடுக்க, மூக்கு நீர் பாய்தலும், சுரமும் போம். ஒரு முறை கழியச் செய்யும்.

பசுவின் நீர்விட்டு இலையை இடித்துப் பிழிந்த சாற்றில் 80—170 மி.கி. வீதம் கொடுத்து வரப் பாண்டு, சோபை, வீக்கம் போகும். புளி ஆகாது.

**பூ**

இதைக் குடிநீரிட்டேனும், உலர்த்திப் பொடி செய்தேனும் மந்தத்தைப் போக்க வழங்கலாம் (அளவுகள் : குடிநீர் 40—80 மி.லி. ; பொடி 260—1040 மி.கி. ஆகும்.)

**பிஞ்சு**

இளம்பிஞ்சை அரைத்து, 2—6 கிராம் எருமைத் தயிரில் கலந்து கொடுக்க வயிற்றுக்கடுப்பு, குன்மம், சீதக்கழிச்சல் நிற்கும். இம்முறை சிறு பிள்ளைகளுக்கே பெரும்பாலும் வழங்கப்பட்டு வருகிறது.

**காய்**

இதைப் பசுவின் பால் விட்டரைத்துத் தலைக்குத் தேய்த்து நீராட மண்டைச் சூடு, கண்ணெரிச்சல் நீங்கிக், கண்கள் குளிர்ச்சியடையும்.

காயை வெட்டி வெயிலில் உலர்த்திப் பொடி செய்து, சிறுவர்கட்கு 1—2 கிராம் எடையும், முதிர்ந்தவர்கட்கு 2—4 கிராம் எடையும் தினம் இருமுறை கொடுத்துவரச் சீதக்கழிச்சல், குருதிக் கழிச்சல் நிற்கும்.

காயுடன் இஞ்சி, சோம்பு, சேர்த்துக் குடிநீரிட்டு மூல நோய்க்குக் கொடுத்துவரலாம்.

**பழம்**

**வில்வப்பழத் தைலம் :** வில்வப்பழம், கார்போகி, வெந்தயம் வகைக்கு 34 கிராம் எடுத்துப் பசுவின் பால் விட்டரைத்து, 680 கிராம் எண்ணெயிற் கலக்கிச் சிறுதீயிட்டெரித்து வடித்து, தலைமுழ்கிவரக் கண்ணெரிச்சல், தலைவலி, உடல் அழல்,

மூளையைப் பற்றிய நோய் நீங்குவதுடன் உடலுக்கு அழகும் வன்மையும் உண்டாகும்.

## ஆ. பெருங்குமிழ்

குமிழ்மரம்

**Gmelina asiatica**

இது புதர்களிலும், காடுகளிலும், வேலி ஓரங்களிலும் பயிராகும் ஒருவகைக் குத்துச்செடி வகுப்பைச் சேர்ந்தது. இதில் மூன்று இனமுண்டு. இவை செங்குமிழ், நிலக்குமிழ், பெருங் குமிழ். இவற்றுள், இங்குக் கூறப்புகுவது பெருங்குமிழாம். இதன் காய் பழுத்தவுடன் மஞ்சள் நிறத்தைப் பெறும். பெருங் குமிழ் வேர் தசமூலத்தில் ஒன்றாகும்.

ப. உ.: பழம், வேர்.

சுவை — கைப்பு, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

செய்கை : வெப்பமுண்டாக்கி — உஷ்ணகாரி (Stimulant)
வெப்பகற்றி—சுரஹரகாரி (Febrifuge)

குணம் : இஃது, அதிக வெப்பத்தையும், தலையிலுண் டாகும் சுண்டுகளையும் போக்கும்.

வ. கு : இப் பழத்தை நசுக்கி நீரிற் சேர்த்துக் கழாய மிட்டு, அத்துடன் சமபாகம் எண்ணெய், பசுவின் பால் சேர்த்துக் கலக்கி, அதில் கிச்சிலிக் கிழங்கு, கசகசா, கார் போகவரிசி, காட்டுச்சீரகம், கருஞ்சீரகம் இவற்றைத் தயில முறைக்குரிய அளவு எடுத்துப் பசுவின்பால் விட்டரைத்துக் கலக்கி, சிறுதீயிட்டெரித்துப், பக்குவ பாகத்தில் வடித்து, வாரத்துக்கிருமுறை தலையிலிட்டு முழ்கிவர, உடல் வறட்சி நீங்கி உடல் மேனி பெறுவதுடன், தலையிலுண்டாகும் அரிப் புடன் கூடிய சுண்டுகளும் நீங்கும்.

பெருங்குமிழ், முன்னை, சிற்றாமல்லி, பேராமல்லி, பாதிரி, நெருஞ்சில், சிறுவழுதுணை, வில்வம், கோஷ்டம், சுக்கு, கண்டங்கத்தரி இவை ஒவ்வொன்றையும் ஓர் எடை எடுத்துச் சேர்த்து, இரண்டு நாழி நீர்விட்டு, எட்டில் ஒரு பங்காகுமாறு சுண்டக்காய்ச்சி அளவோடு பருக முப்பிணி மூர்ச்சை முதலியன வாராதொழியும்.

## இ. தழுதாழை

வே. பெ : தக்காரி, வாதமடக்கி, நந்தக்காரி.
Clerodendron phlomoides, Linn.

வெப்பக் காடுகளில் எங்கும் வளர்ந்து வருகிற இச்சிறு மரம் இந்தியா முழுவதும் கிடைக்கும்.

ப. உ : இலை, வேர்.

சுவை — கைப்பு, துவர்ப்பு, தன்மை—வெப்பம், பிரிவு — கார்ப்பு.

**செய்கை :** உடற்றேற்றி—வியதாபேதகாரி (Alterative)
துவர்ப்பி — ஸங்கோசனகாரி (Astringent)

**குணம் :** பக்கவாத முதலிய 80 வளி நோய்கள், மூக்கடைப்பு நோய்கள், படை, கழலை, ஐயசுரம், குடைச்சல் இவை நீங்கும். ஆனால், அழலை உண்டாக்கும்.



படம் 11. தழுதாழை

**வ. கு :** இலைச்சாற்றை அல்லது வேர்ச் சாற்றை எடுத்து அதன் அளவுக்கு விளக்கெண்ணெய் சேர்த்து, மேக நோய்களுக்குக் கொடுத்து வரலாம்; அல்லது இலையைப் பொடித்துத் தனியாகவும் கொடுக்கலாம்.

இலைச்சாற்றில் 17 கிராம் வீதம் காலை மாலை உள்ளுக்குக் கொடுக்க, சுரத்தைத் தணிக்கும். இதனுடன், இலைச்சாற்றை மூக்கில் இரண்டொரு துளி விடலாம்.

இலையை நீரில் சேர்த்துக் காய்ச்சி வலியுள்ள இடங்களைக் கழுவலாம்.

இலை பொடித்ததை, ஆளி எண்ணெய் விட்டுப் பிசறி, சிறிது வெதுப்பிச் சூட்டுடன் வைத்துக் கட்ட நெறிக்கட்டிகள் கரையும்.

வேரை எண்ணெயிலிட்டுக் காய்ச்சிப் பிடிப்புகளுக்குத் தடவி வரலாம் ; அல்லது இலையில் விளக்கெண்ணெய் தடவி வெதுப்பி வைத்துக்கட்டலாம்.

ஈ. **பாதிரி**

**வே. பெ :** கன்னி, பாடலிகரம், பாடலம், புன்காலி.
Setreospermum suaveolens, DC.

இஃது, இந்தியாவில் கிடைக்கக்கூடிய மரம் ; வெப்ப நாடுகளில் பெரிதும் பயிராகிறதில்லை. இதன் பூவிற்கு 'மதனகாமேஸ்வரப்பூ' என்று பெயர்.

**ப. உ :** இலை, பூ, பட்டை, வேர்.

சுவை—துவர்ப்பு, தன்மை—தட்பம், பிரிவு—இனிப்பு.

**செய்கை :** சிறுநீர்ப் பெருக்கி (Diuretic)
வெப்பகற்றி (Febrifuge)

**பூ**

**குணம் :** இதனால் தீச்சுரமும் மேகமும் நீங்கும். பெண் வசியமுண்டாகும்.

**வேர்**

இதனால், நீரிழிவு, கரப்பான், உழலை, கண், காது, கை, கால்களைப் பற்றிய எரிச்சல், நீரிழிவுக் கட்டிகள், புண்கள், எருவாய் முளைகள், சொறி சிரங்கு, வயிற்று மந்தம், ஐயவளிக் கூட்டு இவை போம்.

**வ. கு :** இதன் இலைச்சாற்றுடன் பழச்சாறுங் கலந்து, தலையில் தேய்த்து ஊறவைத்துப் பின் தலைமுழுகி வர, தீக்குற்றத்தைப் போக்கி வெறிநோயை நீக்கும். மேற்கூறிய மருந்தை உள்ளுக்குக் குடிக்கவும் கொடுக்கலாம். இவ்விலையைக் குடிநீரிட்டுந் தரலாம்.

பூவைக் குடிநீரிட்டு அல்லது அரைத்துச் சாப்பிட மேகம் தணியும் ; சுரம் நீங்கும்.

பூவின் சாற்றைத் தேன் கலந்து உட்கொள்ள, விக்கல் நீங்கும்.

பட்டை ஒரு பங்கு, நீர் பத்துப் பங்கு சேர்த்து ஒரு மணி நேரம் ஊறவைத்து, 15 மி.லி. முதல் 30 மி.லி. வீதம் காலை மாலை உட்கொள்ள வயிற்றுவலி, இருமல், சோபை முதலியன நீங்கும்.

வேரைக் குடிநீரிட்டாவது அல்லது உலர்த்திப் பொடி செய்தாவது கொடுக்க அது மேற்கூறிய நோய்களை விலக்கும்.

உ. வாகை

**வே. பெ :** சீரிடம், பாண்டில்.

Albizzia lebbeck, Benth
(Mimosa flexuosa or M. Sirissa.)

இஃது இமயத்தைச் சார்ந்த இடங்களிலும், வங்காளம், மத்திய இந்தியா, தென் இந்தியா முதலிய இடங்களிலும் பயிராகும் மரம்.

ப. உ : இலை, பூ, பட்டை, வேர்ப்பட்டை, வித்து, பிசின்.

சுவை — கார்ப்பு கைப்பு, தன்மை — வெப்பம், பிரிவு — கார்ப்பு.

**செய்கை :** துவர்ப்பி — ஸங்கோசனகாரி (Astringent)
குளிர்ச்சியுண்டாக்கி — சீதளகாரி (Refrigerant)

**வாகைமரம்**

**குணம் :** பசியை உண்டாக்கும். பாம்பு முதலிய நஞ்சுகள், அழல் புண்கள், வாதச் சொறி, சுரம், நீர்வேட்கை, வாய்ப்புண் ஆகியவற்றைப் போக்கும்.

**வாகைப்பூ**

வாகைப்பூ, வளிக்குற்றத்தைத் தன்னிலைப்படுத்தும்; நஞ்சுகளைப் போக்கும்; ஐயப்பிணியைத் தொலைத்துவிடும்.

**வாகைப்பிசின்**

வாகைப்பிசின் வெள்ளை, மேகக்கட்டி ஆகியவற்றை விலக்கும். அழகையும் வன்மையையும் உண்டாக்கும்.

வ. கு : இலையை அரைத்துக் கண் நோய்களுக்குக் கண்களின்மீது வைத்துக் கட்டிவரலாம்.

பூவை அரைத்துக் கட்டிகள், வீக்கம், தடிப்பு இவற்றின் மீது பூசிவர அவை அழுந்தியோ, பழுத்துடைந்தோ போம்.

பூவை அரைத்தாவது, குடிநீர் செய்தாவது கொடுத்துவர, வளிநோய்களையும், பாம்புக்கடியையும், ஐயப்பெருக்கையும் போக்கும்.

பட்டையை உலர்த்திப் பொடிசெய்து தக்க அளவில் கொடுக்கக் குருதி மூலம், பெருங்கழிச்சல், வெள்ளை, மற்றும் வாகைமரம் என்னும் தலைப்பின்கீழ்க் கண்ட நோய்கள் தீரும்.

வேர்ப்பட்டையின் பொடியைக்கொண்டு பல்துலக்க, பல்லீற்றுப் புண் நீங்கும். பல் இறுகும்.

விதையை நீரிலுரைத்துக் கண்களிலிட, கண் நோய்கள் தீரும். நெறிக்கட்டிகளின் மீதும் பூசலாம்.

விதைப்பொடியைச் சுமார் 4—6 கிராம் எடை உட்கொள்ள, நெறிக்கட்டிகள் அமுங்கும்.

விதைத் தைலம் பெருநோயைப் போக்கும்.

பிசினை 1 – 2 கிராம் வீதம் தினம் இருவேளை தக்க துணைமருந்துகளுடன் கொடுத்துவர வெள்ளை, கழலை,மேகக் கட்டி போகும். உடலுக்கு அழகும் வன்மையுமுண்டாகும்.

## 4. ஐந்து துவர்கள்

நாவல், ஆல், அரசு, அத்தி, இத்தி என்னும் ஐந்தையும் ஐந்து துவர்கள் என்பர். இவ்வைந்தில் நாவலைத் தவிர மற்றவை பாலுள்ள மரங்களாகும்.

### அ. நாவல்

**வே. பெ :** நவ்வல், நம்பு, சம்பு, சாதவம், ஆருகதம், நேரேடு, நேரேடம், சாட்டுவலம், சாம்பல், சுரபிபத்திரை.

Eugenia Jambolana
Eng : Jambul.

இம்மரம், நம் நாடு முழுமையும் வளருகின்றது. இதில் வெள்ளை நாவல், கொடிநாவல், குழிநாவல், கருநாவல், சம்புநாவல் எனப் பல வகைகளுள்ளன.

ப. உ : எல்லாப் பொருளும்.

சுவை — துவர்ப்பு, தன்மை — தட்பம், பிரிவு — கார்ப்பு.

**பொது**

**செய்கை**

**பழம்** துவர்ப்பி — ஸங்கோசனகாரி (Astringent)
பசித்தீத்தூண்டி — ஜடராக்கினிவர்த்தனி (Stomachic)
சிறுநீர்ப்பெருக்கி — மூத்திரவர்த்தனி (Diuretic)
உடலுரமாக்கி — பலகாரி (Tonic)

**பட்டை**

**குணம்:** பட்டையினால், வாயிற்பிறக்கும் நோய்கள், இருமல், பெரும்பாடு, ஈளை, குழந்தைகளுக்குண்டாகும் புண் முதலிய குற்றங்கள் (தோடம்) நீங்கும்.



படம் 12. நாவல்

**வேர்**

இதனால், வளிநோய்கள், கரப்பான், புண், நீரிழிவு, குருதிக் கழிச்சல் முதலியனவும், சுரமும் போம்.

நாவற்பட்டையைக் குறும்பாட்டின் குருதியை விட்டு ஊறவைத்து எட்டுப்பங்கு கொண்டு, அதனுடன் படிகாரம் இந்துப்பு வகைக்கு இரண்டு பங்கு கூட்டி அரைத்து, உருண்டை செய்து, இரட்டைப் பிரமிச்சாறும், தேனும் சேர்த்துத் தரின் பெரும்பாடு என்னும் நோய் போம்.

இதை முறைப்படி குடிநீர் செய்து உட்கொள்ள நீரிழிவு, கழிச்சல் வகை போம். வாய்ப்புண்ணுக்கும் இதைக் கொண்டு வாய் கொப்புளிக்க உலரும்.

இதன் சாற்றைப் பெரும்பாட்டுக்கு வழங்கலாம்.

இதுவே எட்டி நஞ்சுக்கு மாற்றாகும்.

இதன் பட்டைச் சாற்றினால் இரும்பு செந்தூரமாகும்.

**நீர்**

நாவல் வேர் ஊறிய நீரானது, கழிச்சல், நீரிழிவு ஆகியவற்றை நீக்கும். உடற்குக் குளிர்ச்சியையும் ஆண்மையையும் தரும். ஐயம், சுரம், மந்தம் இவற்றைப் பெருக்கும்.

நாவற்கொழுந்துச்சாறு, மாவிலைச்சாறு இவ்விரண்டையும் கலந்து கடுக்காய்ப் பொடியுடன் சேர்த்து, ஆட்டுப்பாலில் கலந்து கொடுக்கச் சீதக்கழிச்சல் போம்.

**விதை**

விதையைத் தூள் செய்து வேளைக்கு 2—4 கிராம் எடை கொடுக்க நீரிழிவு நீங்கும்.

இதன் தூளுடன், மாம்பருப்புத் தூளையும் சேர்த்துக் கொடுக்கச் சிறுநீரைப் பெருக்கும்.

இதன் கொட்டையை மிகுந்த அளவிலுண்ண நஞ்சாம். அந்த நஞ்சுக் குறிகளையும், அதன் முறிப்புகளையும் நஞ்சு நூலில் பார்க்க.

**பழம்**

இதன் சாற்றைப் பிழிந்து, ஒரு புட்டியில் ஒரு திங்கள் வரையில் மூடிவைத்திருந்து. அதன்பின் எடுத்துக் கொடுக்க, நீரிழிவிலுண்டாகும் நீர்வேட்கை போம்.

பழத்தினாலுண்டாகும் தீங்கை முறிக்க, நெல்லிக்காயை மென்று தின்று குளிர்ந்த நீர் குடிக்க வேண்டும் (அகத்தியர் நஞ்சு முறிவு).

பழச்சாற்றை மணப்பாகு செய்து கொடுக்கப் பசியை உண்டாக்கும். வயிற்றுப் போக்குகளை நிறுத்தும்.

ஆ. ஆல்

**வே. பெ :** இயக்குரோதம், காமரம், கோவி, தொல்மரம். பழுமரம், பூதம், வடம், வானோக்கி.

Ficus bengalensis,

Eng. The banyan tree

இம் மரமானது, இந்தியாவில் எப்பாகங்களிலும் சருவ சாதாரணமாயுள்ளது.



படம் 13. ஆல்

**ப. உ :** இலை, பழம், வீழுது, பால், பூ.

சுவை — துவர்ப்பு, தன்மை—சீதம், பிரிவு—இனிப்பு.

**செய்கை :** துவர்ப்பி – ஸங்கோசனகாரி (Astringent)
உரமாக்கி – பலகாரி (Tonic)
காமம் பெருக்கி – காமவர்த்தனி (Aphrodisiac).

**குணம் :** இதன் எல்லாப் பாகமும் மேகம், வயிற்றுக் கடுப்பு, நீரிழிவு இவற்றைப் போக்கும் ; உடற்கு வன்மை தரும்.

ஆல், வாயில் சிறு கொப்புளங்களோடுங்கூடிய புண்ணை யும், கிரந்தி மேகத்தையும் போக்கும். அன்றியும், உடற்கு வன்மையையும் அளிக்கும்.

**விழுது**

பல்துலக்க உதவும் ; பல் இறுகும்.

**'ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலுமிரண்டுஞ் சொல்லுக்குறுதி.'**
[பழமொழி]

**ஆலம்பால்**

**செய்கை :** உடல் உரமாக்கி — பலகாரி (Tonic)
துவர்ப்பி — ஸங்கோசனகாரி (Astringent)

சுவை — துவர்ப்பு, தன்மை — தட்பம், பிரிவு — இனிப்பு.

**குணம் :** மேகத்தைப் போக்கும் ; அசைகின்ற பல்லை இறுக்கும் ; தலைக்குக் குளிர்ச்சியைத் தரும் ; விந்துவைப் பெருக்கும்.

**வ. கு :** நாக்கு வெடிப்பு, வெள்ளை, ஆண்மைக் குறைவு இவற்றுக்கு உள்ளுக்கும், பல் ஆட்டம், கால் வெடிப்பு இவற்றுக்கு மேலுக்கும் வழங்கலாம். விழுதைக் கொண்டு பல் துலக்கப் பல் இறுகும். வயிற்றுளைச்சல் போகும்.

**ஆலம் விதை**

**செய்கை ;** உரமாக்கி – பலகாரி (Tonic)
மலமிளக்கி — மலகாரி (Laxative)

**குணம் :** இது வயிற்றைக் கழிக்கும் ; உடற்கு ஊட்டத் தைத் தரும்.

**வ. கு :** மலச்சிக்கலைப் போக்குதற்குச் செய்யும் இளகங் களுடன் (லேகியங்களுடன்) இதைச் சேர்த்துக் கொள்ளலாம் ;

தேகபலத்தைத் தரக்கூடிய இதர ஔஷதங்களோடும் இதைச் சேர்த்து உபயோகிக்கலாம். இரத்த காசத்துக்கு, அகத்தியர் கும்மி 47, 48 ஆவது பாடலில் சொல்லியிருக்கும் மருந்து முறையில் இந்த விதையும் சேர்ந்திருக்கிறது.

**ஆலம் பட்டை**

**செய்கை :** துவர்ப்பி — ஸங்கோசனகாரி (Astringent)

**வ. கு :** இதைக் குடிநீரிட்டு வாய் கொப்புளித்துவர வாய்ப்புண், வாய்நாற்றம், நாவெடிப்பு, ஈற்றுப் புண் இவை போகும். விரணங்களைக் கழுவவும் இதை உபயோகிக்கலாம்.

பட்டையை இடித்து, 10 மடங்கு நீர்விட்டு, நன்றாக ஊற வைத்து உள்ளுக்குக் கொடுத்துவர, நீரிழிவும் நீங்கும்.

**ஆல் வேர்ப்பட்டை**

**வ. கு :** இதை முறைப்படி குடிநீரிட்டு, பாலுடன் சேர்த்துக் கொடுக்க வெள்ளை நீங்கும்.

**ஆலமொட்டு**

**வ. கு :** இதைப் பால், சர்க்கரை முதலியவற்றோடு சேர்த்து வயிற்றுளைவுக்குக் கொடுக்க அது நீங்கும்.

**ஆலம்பழமும் வேர்க்கொழுந்தும்**

**வ. கு :** இவை வெண்ணீரைப் பலப்படுத்தும்.

**இ. அரசு**

**வே. பெ :** அஸ்வத்தம், அச்சுவத்தம், திருமரம், கவலை, பேதி, பணை, கணவம், சராசனம், பிப்பிலம், சீதாகோழி.

Ficus religiosa, Linn.
Eng. The Peepul tree: Sacred fig.

இது இந்தியாவில் சாதாரணமாக எங்கும் பயிராகிற பெரு மரத்துள் ஒன்று.

ஆனி முதல் ஆவணித்திங்கள் வரையில் பூக்கும். இம் மரம் தெய்வத் தன்மையுடையதென நம்பப்படுவதால்,

இது கோயில்களிலும் கோயில்களை அடுத்துள்ள இடங்களிலும் வைத்துப் பயிராக்கப்படுகிறது.

'அரச மரத்தைச் சுற்றிவிட்டு அடிவயிற்றைத் தொட்டுப் பார்த்தாள்.'

என்னும் பழமொழியும் உண்டு. இப் பழமொழி இவ்விலை சூலகத்துண்டாம் கோளாறுகளைப் போக்கும் தன்மையுடைய தாதலால் எழுந்தது போலும்.

**ப. உ :** இலை, வித்து, பட்டை, வேர், பால்.

சுவை — துவர்ப்பும் கைப்புமுள்ளது, தன்மை — தட்பம், பிரிவு — இனிப்பு.



படம் 14. அரசு

**செய்கை :** வித்து — மலமிளக்கி, மலகாரி (Laxative and cooling)

இலை, வேர், பட்டை—துவர்ப்பி—ஸங்கோசன காரி (Astringent)

**குணம் :** இலைக்கொழுந்து — உடல் வன்மையைப் பெருக்கும்; சுரத்தையும் முக்குற்றத்தையும் போக்கும். அன்றியும் சூலகத்துண்டாம் கோளாறுகளைப் போக்கி, சூல் அமையச் செய்யும்.

பிள்ளைப்பேறு இல்லாதார் இம்மரத்தை நாள்தோறும் சுற்றி வந்து வணங்குவதுண்டு.

**விதை :** இளகக் கழியச் செய்யும்.

மரப்பட்டை, வேர்ப்பட்டை — புண்களை ஆற்றும்.

இலைக் கொழுந்தைப் பாலில் அவித்துச் சர்க்கரை சேர்த்துண்ணக் காய்ச்சல், முப்பிணி ஆகியவை தணியும்.

வித்தைத் தக்க அளவில் பொடி செய்து உட்கொண்டுவர, மலச்சிக்கல், குரல் வறட்டல் போம். பசித்தீ பெருகும்.

பட்டையின் நுண்ணிய துகளைப் புண்ணின்மீது தூவிவர, புண் ஆறி வரும்.

ஐந்து துவர்ப்புப் பொருள்களில் அரசுமொன்று. ஆகையால், இவ்வைந்து பட்டைகளின் குடிநீரை, வாய்ப்புண்ணுக்குக் கொப்புளிக்கும் நீராகவும், வெள்ளையில் நீர்த்தாரை வழியாகச் செலுத்திக் கழுவும் நீராகவும் பயன்படுத்தலாம். அவற்றால் காய்ச்சிய எண்ணெயையும் கையாளலாம்.

இம்மரத்தில் வளரும் புல்லுருவியின் இலையை அரைத்துப் பிள்ளைப் பேறு இல்லாப் பெண்கட்கு எலுமிச்சம்பழம் அளவு மூன்று நாள் சூதகத்திற்கு முன்பு கொடுத்துவர, சூல் அமையும்.

இம் மரத்தைக் குத்துவதனால் வடியும் பாலைப் பாதத்தில் காணும் பித்த வெடிப்புகளுக்குத் தடவலாம்.

## ஈ. அத்தி

**வே. பெ :** அதம், அதவு, உதும்பரம், கோளி, சுப்பிரதஷ்டம்.

Ficus glomerata, Roxb. & F. racemosa.

Eng. Country fig.

இது மர வகுப்பைச் சேர்ந்தது. இந்தியாவில் எங்கும் பயிராகிறது. மரத்தின் மேற்பட்டை வெளுத்தும், பிளவுபட்டும், சுரசுரப்பாயுமிருக்கும். அடி மரம் முதல் உச்சிக்கிளைகள் மட்டும், மரத்தையொட்டிக் காய் காய்க்கும். இதன் பூவைக் காண்பது மிக அரிது. இதனாலேயே, நீண்ட காலங் கடந்து காணப்பட்ட நேசனை நோக்கி, 'யான் உன்னை அத்திபூத்தது போலக் கண்டேன்' எனக்கூறும் வழக்கிருக்கிறது. இதன் காய் உருண்டையாயும், பச்சை நிறமாயும், வழுவழுப்பாயும், மேல் பாகம் மினுமினுப்புடன் பட்டுப் போன்ற மெல்லிய சுணையுடனுமிருக்கும். மேலும் காயின் அடிப்புறம் சிறிது

குவிந்து, மத்தியில் ஒரு சிறு தொளையும், அதைச் சுற்றிச் செந்நிறக்கோடுமிருக்கும். பழுத்தவுடன் அது செங்கல் நிறமாக



படம் 15. அத்தி

மாறும். அதனுள் சிறு விதைகளும் பூச்சிகளும் அடங்கியிருக்கும்.

தென் இந்தியாவில் இதன் பிஞ்சையும் காயையும் சமைத்து உண்பது வழக்கம். மருந்துண்ணுங் காலங்களில், இதைப் பத்தியப் பொருளாக வழங்குவதுண்டு.

ப. உ: பிஞ்சு, காய், பழம், பால், பட்டை, மது.

**பிஞ்சு**

சுவை – துவர்ப்பு, தன்மை – தட்பம், பிரிவு—இனிப்பு.

**செய்கை :** துவர்ப்பி—ஸங்கோசனகாரி (Astringent)

**குணம் ;** துவர்ப்புடைய அத்திப்பிஞ்சு மூலவாயு, மூலக்கிராணி, இரத்தமூலம், வயிற்றுக்கடுப்பு ஆகியவற்றைப் போக்கும்.

**வ. கு :** இதைச் சமைத்துண்ண மேற்கண்ட பிணிகள் போகும்.

**காய்**

சுவை – துவர்ப்பு, தன்மை – தட்பம், பிரிவு – இனிப்பு.

**செய்கை :** துவர்ப்பி—ஸங்கோசனகாரி (Astringent).

**குணம் :** வெள்ளை, வாதநோய், சூலை, உடல்வெப்பு, புண் (விரணம்) ஆகிய இவை போம். மலங்கழியும்.

**வ. கு :** இதையும் பிஞ்சைப்போலச் சமைத்துண்ண மேற் கண்ட நோய்கள் தணியும். மலங்கழியும்.

**பழம்**

சுவை – இனிப்பு, தன்மை—தட்பம், பிரிவு—இனிப்பு.

**செய்கை :** குருதி பெருக்கி—ரத்தவர்த்தனி (Improves blood) மலமிளக்கி – மலகாரி (Laxative).

**குணம் :** இஃது குருதியைப் பெருக்கும். கழியச்செய்யும்.

**பால்**

சுவை—துவர்ப்பு, சிறு இனிப்பு, தன்மை—தட்பம், பிரிவு—இனிப்பு.

**செய்கை :** துவர்ப்பி – ஸங்கோசனகாரி (Astringent).

**குணம் :** பித்த கோபம், நீரிழிவு, சூலை, இரத்த மூத்திரக் கிரிச்சரம் ஆகியவற்றைப் போக்கும்.

மேலும், இது இரத்தபேதி, பெரும்பாடு, வெள்ளை, நீரிழிவு, தாதுக்குறைவு இவைகட்கும் வழங்கப்படுகிறது.

**வ. கு :** வெண்ணெய் அல்லது சீனியுடன் கூட்டிக் கொடுக்க, மேற்குறிப்பிட்ட பிணிகள் போம்.

**பட்டை**

சுவை – துவர்ப்பு, தன்மை—தட்பம், பிரிவு – இனிப்பு.

**செய்கை :** துவர்ப்பி—ஸங்கோசனகாரி (Astringent).

**குணம் :** பட்டை, கீழ்வாய்க்கடுப்பு, குருதிப்போக்கு, சீதக்கழிச்சல், நாற்றமுள்ள புண்கள், வெள்ளை ஆகியவற்றைப் போக்கும்.

**வ. கு :** அத்திப்பட்டைக் குடிநீர் : பட்டையை விதிப்படி குடிநீர் செய்து கொடுத்துக்கொண்டுவர, கீழ்வாய்க்கடுப்பு முதலிய மேற்கண்ட நோய்கள் விலகும். இதைக்கொண்டு கழுவி வர, நாற்றமுள்ள புண்கள் ஆறிப்போம்.

அத்திப்பட்டையைப் பசுவின் மோர்விட்டு இடித்துப் பிழிந்த சாற்றைத் தினம் ஒன்றுக்கு, இரண்டு மூன்று முறை, அரைமுதல் ஓர் ஆழாக்கு வீதம் கொடுக்க, பெரும்பாடு நிற்கும்.

**அத்திக்கள்**

சுவை – (அற்ப) இனிப்பு, தன்மை — தட்பம், பிரிவு — இனிப்பு.

**செய்கை :** உடற்றேற்றி – வியதாபேதகாரி (Alterative).

**குணம் :** மரவேரிலிருந்து இறங்கும் கள்ளில் சீனியேனும், பேயன் வாழைக்கனியேனுங் கூட்டி நாடோறும் விடியற் காலையில் உட்கொள்ள, எலும்பைப் பற்றிய மேகம், உட்சூடு, பித்தமயக்கம், நீர்வேட்கை முதலியவை தணியும்.

**உ. இத்தி**

**வே. பெ :** இந்திரி, இறலி, சுவி.
Eng : Ficus, Gibbosa, Blume.

இது தென்னிந்தியாவில் ஏராளமாகப் பயிராகும் ; ஆல் வகுப்பிற் சேர்ந்தது.

**ப. உ :** பிஞ்சு, காய், பட்டை.

சுவை—துவர்ப்பு, தன்மை – தம்ப[·‘ பிரிவு — இனிப்பு.

**செய்கை :** துவர்ப்பி — ஸங்கோசனகாரி (Astrigent).

**பிஞ்சு**

**குணம் :** இது கழிச்சல், பெரும்பாடு, உட்சூட்டினாற் பிறக்கின்ற பிணியினங்கள் இவற்றைப் போக்கும்.

இப் பிஞ்சுகளை அரைத்தேனும், இதன் பட்டையைக் குடிநீர் செய்தேனும் குடித்துவர, மேற்கண்ட பிணிகள் நீங்கும்.

இதன் காயை நெய்விட்டு வெதுப்பித் தின்றால், எருக்கட்டுப் போம்.



படம் 16. இத்தி

இது நம் நாட்டில் தோட்டங்களிலும், மேட்டு நிலங்களிலும் தானாகவே பயிராகும் பூண்டு. இராமேசுவரம் முதலிய தென்பகுதிக் கடற்கரைகளில் இது பயிரிடப்படுகிறது.

## 5. அட்ட வர்க்கம்

அட்ட வர்க்கம் என்பது இந்துப்பு, ஓமம், கருஞ்சீரகம், சீரகம், சுக்கு, திப்பிலி, மிளகு, பெருங்காயம் ஆகிய எட்டுச் சரக்குகள் கூட்டிச் செய்யும் மருந்தாகும். இவற்றில் இந்துப்பு, காரசாரப் பொருளாகும். மற்றவை யாவும் தாவரப் பொருள்களாகும். மற்றும் இவற்றில் சுக்கு, திப்பிலி, மிளகு என்னும் மூன்று சரக்குகளைத் திரிகடுகு என்னும் தலைப்பின் கீழ்க் கூறியுள்ளதைக் கண்டுகொள்க.

### அ. இந்துப்பு

**வே. பெ :** சைந்தவம், சிந்தூரம், சந்திரனுப்பு, மதிகூர்மை, மதியுப்பு, மிந்தாச்சொல்.

Sodii Chloridum Impura or Sodium Chloride Impura Rock Salt

இது, வைப்பு உப்புகளில் ஒன்று. இது தாவரச் சரக்கில்லை ; எனினும் மேற்படி அட்டவர்க்கம் என்னும் கூட்டு மருந்தில் இது சேர்வதால் இதைப்பற்றி இங்குக் கூறலாயிற்று.

இவ்வுப்பைச் சிந்து தேசத்திலும், பஞ்சாப் வடமேற்குப் பாகங்களிலும் பூமியிலிருந்து வெட்டி எடுக்கின்றார்கள். இந்த உப்பு, 2 முதல் 10 பவுண்டு நிறையுள்ள கட்டிகளாயும், மேற் பக்கம் அழுக்குப் படிந்த கபிலநிறமாயும், உட்பக்கம் வெண்மையாயும், வாயிலிடில் உப்பாயுமிருக்கும்.

**செய்கை :** இந்த உப்பிற்கு மலகாரிச் செய்கை உண்டு.

இந்துப்பினால் எவ்விதக் குன்மம், அலசம், அசிர்க்கரம், கபபித்தம், கபாதிக்கம், நரம்புக்கிரந்தி, மூக்குற்றம், மலபந்தம், விஷமசுக்கிலம், கப உபதம்சம், கடுவன் ஆகிய நோய்கள் ; தலை, விழி, நா, தந்தமூலம், காது, கன்னம், கண்டம், யோனி இவ்விடத்து நோய்கள் ; சந்நியாசம், நேத்திரகாசம், தாகம், சுவாசம், இரத்தமூலம் முதலிய பிணிகள், சிலந்தி, தேள், எலி இவற்றின் விடங்கள் ; வாதக்கடுப்பு, சூலை முதலியன நீங்கும்.

**பயன்கள் :** தேகத்தில் சுளுக்கு வந்தால், இந்துப்பைப் பற்றுப் போடலாம். வலியுடன் கூடிய வீக்கங்களுக்கு இதைச் சூடாக்கி ஒற்றடமிடலாம்; இதை இளஞ்சூடான வெந்நீரில் கரைத்து வாந்தியை உண்டுபண்ண உபயோகிக்கலாம்.

வ. கு : நிலாவாரை, சோம்பு, சுக்கு, கொத்துமல்லி வகைக்கு ½ தோலா (6 கிராம்) வீதம் ஒன்றிரண்டாய் இடித்துக் கால்படி (325 மி. லி.) நீர்விட்டுப் பாதியாய்க் குறுக்கிப் பிசைந்து

வடிகட்டி, அதில் தேகபலத்திற்கேற்ப இரண்டு முதல் ஐந்து வராகனெடை (8·4—21 கிராம்) வரை இந்துப்பைக் கலக்கி உட்கொள்ளின் பேதியாகும். இதனைப் பித்தக் கழாயம் என்று வழங்குகின்றனர்.

அக்கினிமாந்தம், நேத்திரரோகம், கிரந்தி, தாபனம், கப பித்தம், எலிவிஷம் இவற்றுக்கு இதைப் பேதிக்குக் கொடுத்து, நல்ல குணங்கண்டதாக டாக்டர் மொஹிதீன் ஷெரீப் அவர்கள் சொல்லியுள்ளார்கள்.

**ஆ. ஓமம்**

**வே. பெ :** அசமோதம், திப்பியம்.

Carum copticum, Bench hook
Ptychotis Ajowan, DC
Eng : The Bishops weed.

இஃது, இந்தியாவில் பயிரிடப்படுகின்ற ஒரு செடி வகை ஆகும். இதை வாயில் போட்டால் விறுவிறுப்பாகவும், காரமாகவும் இருக்கும். இதில் ஒரு மணமுண்டு.

**ப. உ :** விதை

**அளவு :** $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ வராகனெடை

சுவை—கார்ப்பு, தன்மை – வெப்பம், பிரிவு – கார்ப்பு.

**செய்கை :** பசித்தீத்தூண்டி — ஜடராக்கினிவர்த்தனி (Stomachic)
இசிவகற்றி – அங்காகர்ஷண நாசனி (Antispasmodic)
அகட்டுவாய்வகற்றி — உதரவாதஹரகாரி (Carminative)
அழுகலகற்றி – தாதுக்ஷீணரோதி (Antiseptic)
வெப்பமுண்டாக்கி – உஷ்ணகாரி (Stimulant)
உரமாக்கி – பலகாரி (Tonic)
உமிழ்நீர்பெருக்கி — திரவகாரி (Sialogogue)

**குணம் :** இதனால் ஐயசுரம், இருமல், செரியாமந்தம், பொருமல், கழிச்சல், ஊழி, குடலிரைச்சல், இரைப்பு, பல்நோய், குய்யரோகம் இவை போம்.

வ. கு : ஓமம், சுக்கு, சித்திரமூல வேர்ப்பட்டை, இம் மூன்றும் ஓரெடையாக எடுத்துப் பொடித்து ஒன்று கலந்து, கலந்த எடைக்கு நேர், கடுக்காய்ப் பொடி கூட்டி வேளைக்கு மூவிரல் அளவு மோரில் கொடுக்க, மந்தம் நீங்கும்.

ஓமம், கடுக்காய்த் தோல், முக்கடுகு, சிற்றரத்தை, அக்கிரா காரம், திப்பிலிவேர் இவற்றின் பொடி ஓரெடையாகக் கூட்டிய எடைக்கு நேர்பாதி சருக்கரை சேர்த்து காலை மாலை மூவிரல் அளவு கொள்ள, புகையிருமல் தீரும்.

ஓமம், மிளகு வகைக்கு 34 கிராம் இவற்றை வெதுப்பி, வெல்லம் 34 கிராம் சேர்த்தரைத்து, காலை மாலை, 10 நாள் கொட்டைப் பாக்களவு சாப்பிட வயிற்றுக்கடுப்பு, பொருமல், கழிச்சல் தீரும்.

ஓமம் 252 கிராம் ஆடாதோடைச்சாறு, இஞ்சிச்சாறு, பழச் சாறு, புதினாச்சாறு வகைக்கு 136 கி. இந்து உப்பு 34 கிராம் சேர்த்து ஊறவைத்து உலர்த்தி எடுத்துத் தூளாக்கிக்கண்ட எடைக்குச் சருக்கரை கூட்டிக் கலந்து வேளைக்கு ½ முதல் 2 கிராம் வீதம் காலை மாலை இருமல், சுவாசகாசம், அசீரணம் முதலியன நீங்கக் கொடுக்கலாம்.

**ஓமத்தீநீர் :** 1440 கி. 8400 மி. லி. விட்டு வாலையில் வடிக்க உண்டாவது, ஓமத்தீநீர்.

**தீரும் நோய் :** ஊழி, வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, செரியாக் கழிச்சல், மந்தம் இவற்றைப் போக்கும். அகட்டு வாய்வகற்றுஞ் செய்கை இதற்குண்டு.

## இ. கருஞ்சீரகம்

**வே. பெ :** அரணம், உபகுஞ்சிகை, காணம்.
Nigella sativa
Eng : Black Cumin ; Small Fennel.

இஃது இந்தியாவில் சற்றேறக்குறைய எல்லாப் பாகங் களிலும் பயிராகும்.

**ப. உ :** விதை. (இது சிறியவுருவமுடையது. மூன்று மூலை வடிவம், கருநிறம்).

**சுவை — கைப்பு, தன்மை — வெப்பம், பிரிவு — கார்ப்பு.**

**செய்கை :** அகட்டுவாய்வகற்றி—உதரவாதஹரகாரி (Carminative)
சிறுநீர்ப்பெருக்கி—மூத்திரவர்த்தனி (Diuretic)
ருதுவுண்டாக்கி—ருதுவர்த்தனி (Emmenagogue)
பாற்பெருக்கி — க்ஷீரவர்த்தனி (Galactogoguc)
புழுக்கொல்லி — கிருமிநாசனி (Anthelmintic)
பசித்தீத்தூண்டி—ஜடாராக்கினிவர்த்தனி (Stomachic)
தூக்குணிப் புழுக்கொல்லி — கிருமிக்னி (Parasiticide)
வறட்சியகற்றி—ஸ்நிக்தகாரி (Emoliedn)

**குணம் :** மண்டைக்கரப்பான், புண், உட்சூடு, தலை நோய், கண்ணோய் இவையும், சிரங்கு, வயிற்றுப்பொருமல், குன்மம், மார்புவலி, இருமல், வாந்தி, ஓக்காளம், வீக்கம், காமாலை ஆகியவையும் கருஞ்சீரகத்தால் நீங்கும்.

**வ. கு:** இதன் பொடியைக் காடியுடன் கலந்து உட்கொள்ளக் குடலிலுள்ள புழுக்கள் வெளிப்படும்; இதையே 3–7 நாள் வரையில் காலை ½ கி. மாலையில் 4 கிராம் வீதம் வெறி நாய்க் கடி, இதர நச்சுக்கடி இவற்றின் நஞ்சு தீரக் கொடுக்கலாம்.

நொச்சிக் குடிநீருடன் இதன் பொடியைக் கூட்டிக்கொடுக்க மேகப்பிடிப்பு, சுரம், விட்டுவிட்டு வருகின்ற சுரம் தணியும்.

இதை வெந்நீர் விட்டரைத்துத் தலைவலி, கீல்வீக்கம், உடல் வீக்கம் இவற்றுக்கு மேற்பூச்சாய்ப் பூசக் குணமுண்டு. இதைக் காடிவிட்டரைத்துப் புடைகளுக்குப் பூசலாம்.

பசுவின் நீர், அல்லது சிறுவர்களின் சிறுநீர் விட்டரைத்து வீக்கத்திற்குப் பூசக் குணமுண்டு.

தேன் விட்டரைத்துப் பிள்ளை பெற்ற பின் வரும் வலிக்குப் பூசலாம்.

இதை அரைத்து நல்லெண்ணெயில் குழப்பிக் கரப்பான், சிரங்கு, இவற்றுக்குப் பூச, நன்மை தரும்.

இதன் பொடியைத் தேன் அல்லது நீரில் கலந்து கொடுக்க, மூச்சு முட்டல் நீங்கும். மோருடன் கலந்து கொடுக்க, விடா விக்கல் தீரும். சூதகக்கட்டு, சூதகச் சூலை இவற்றுக்கு 1 கிராம் அல்லது 3 கிராம் எடை வரை கொடுக்கலாம்.

இதன் தீநீர் அல்லது தைலத்தை முகர்ந்தாலும், பூசினாலும் ஐயத்தாலுண்டாகும் தலை நோய், மூக்குநீர் வடிதல், நரம்பைப் பற்றிய வலி, இடுப்பு வலி ஆகியவை நீங்கும்.

இதன் தைலத்தை வெற்றிலையில் பூசித் தின்ன ஆண்மை பெருகும். ஆண் குறியில் பூசக் குறி பெருகும்.

**ஈ. சீரகம்**

**வே. பெ :** அசை, சீரி, உபகும்பபீசம், நற்சீரி, துத்தசாம் பலம், பித்தநாசனி, போசனகுடோரி, மேத்தியம், சீதேவியார்.

Cuminum cyminum.

சீரகச் செடி, இந்தியாவில் எல்லாவிடங்களிலும் பயிராகிறது. இதற்கு ஒருவித மணமுண்டு.

**ப உ :** விதை.

சுவை — கார்ப்பு, இனிப்பு, தன்மை – தட்பம், பிரிவு— இனிப்பு.

**செய்கை :** அகட்டுவாய்வகற்றி — உதரவாதஹரகாரி (Carminative)
வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant)
பசித்தீத்தூண்டி – ஜடராக்கினிவர்த்தனி (Stomachic)
துவர்ப்பி—ஸங்கோசனகாரி (Astringent).

**குணம் :** இதனால் அழல் போம். வயிற்றுவலி, வாய் நோய், ஈரல் நோய், காசம், கல்லடைப்பு, குருதிக்கழிச்சல், இரைப்பு, குரல் கம்மல், மூக்குநீர் பாய்தல், வெறி, வளிநோய்கள் இவை விலகும். இஃது உடலுக்கு வலுவைத் தந்து, கண்ணுக்குக் குளிர்ச்சியையும் உண்டுபண்ணும்.

சீரகத்தை நாட்டுச் சருக்கரையுடன் விடாது கடைப்பிடியாய் நாளும் உண்ணில், தேகம் வன்மை பெறும் ; அன்றியும், மேலுதடு கீழுதடு இரண்டும் வீங்கிப் போனதனால் ஏற்பட்ட நோய் விலகும்.

வ. கு : நன்றாய்ப் புடைத்தெடுத்த சீரகம் 170 கிராம், முதலில் இஞ்சிச்சாற்றில் ஊறவைத்து உலர்த்தி, பிறகு முசுமுசுக்கைச் சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து உலர்த்தி எடுத்துக் கொண்டு, அதனுடன் ஏலம், சுக்கு, திப்பிலி, மிளகு, கோட்டம், நெல்லிமுள்ளி, நெற்பொரி, வில்வப்பழத் தோடு இவற்றின் பொடி வகைக்கு 8 கிராம் சேர்த்து ஒன்றாய்க் கலந்து, அதன் எடை வெள்ளைச்சருக்கரை சேர்த்து வேளைக்கு 4 கிராம் முதல் 8 கிராம் வீதம் தினம் காலை மாலை இரு வேளையும் கொடுக்க, மேற்கண்ட நோய்கள் போம்.

சீரகத்தைக் கையாந்தகரைச் சாற்றில் ஊறப்போட்டு எடுத்த பொடி 4 கிராம், சருக்கரை 2 கிராம், சுக்குப்பொடி 2 கிராம் இம்மூன்றையும் கலந்து தினமிருவேளை உட்கொள்ள, காமாலை, வாயு, உட்சுரம்தீரும்.

சீரகம், சுக்கு, ஏலம். நெல்லிமுள்ளி இவைகளின் பொடிகளை ஒரு நிறையாய் எடுத்து, அவ்வளவிற்குப் பாதிச் சருக்கரை சேர்த்து, மூன்று விரல் அளவு காலை, மாலை உட்கொள்ள தீக்குற்றம் தன்னிலையடையும்.

சீரகத்தைப் பொடித்து வெண்ணெயில் கொடுக்க எரி குன்மம் நீங்கும்.

உ. சுக்கு
ஊ. திப்பிலி
எ. மிளகு

} ஏற்கெனவே கூறப்பட்டுள்ளன.

ஏ. பெருங்காயம்

வே. பெ : அத்தியாகிரகம், இங்கு, இராமடம், கந்தி, காயம், சந்துநாசம், பூதநாசம், வல்லீகம், குதம்.

Ferula Asafoetida

Eng : Asafoetida

இது பாரசீகம், துருக்கிஸ்தானம், ஆப்கானிஸ்தானம், காஷ்மீரம், பஞ்சாப் முதலிய இடங்களில் தன்னிச்சையாயும், அளவிறந்தும் பயிராகும் ஒருவகைச் சிறுசெடியின் பால் அல்லது பிசின். இஃது இந்தியாவில் எல்லாவிடங்களிலும் கடைகளில் விற்கப்படுகின்றது. அநேக நூற்றாண்டுகளாய் நாம் உண்ணும் உணவிற்குரிய பொருள்களிலும், நோய் தீர்க்கும் மருந்துகளிலும் இதைப் பயன்படுத்தி வருவது யாவரும் அறிந்ததே.

இது மஞ்சள் நிறமும் மிகுந்த நாற்றமும் உள்ளது. சற்றேறக்குறைய வெள்ளைப்பூண்டினது நாற்றம் வீசும்; கரகரப்புடன் மிகவும் கசப்புடையது; சாராயத்தில் கரையும். நீர் விட்டரைத்தால் பால் நிறமாயிருக்கும்; சாராயங்களுடன் கூடின் பொடிபடும்.

இதில் ஒருவகை வெண்ணிறம் பொருந்தியதுமுண்டு. அதற்கு வெள்ளைப் பெருங்காயம் (சோமகாயம்) என்பது பெயர். இதற்கு மேற்கூறிய காயத்தினும் மிகக் காரமுண்டு.

**ப. உ.** பிசின்.

சுவை — கைப்பு, கரகரப்பு, தன்மை — வெப்பம், பிரிவு— கார்ப்பு.

**செய்கை :** வெப்பமுண்டாக்கி— உஷ்ணகாரி (Stimulant)
அகட்டுவாய்வகற்றி — உதரவாதஹரகாரி (Carminative)
இசிவகற்றி — அங்காகர்ஷணநாசனி (Antispasmodic)
கோழையகற்றி — கபஹரகாரி (Expectorant)
மலமிளக்கி — லகுவிரேசனி (Laxative)
புழுக்கொல்லி — கிருமிநாசனி (Anthelmintic)
சிறுநீர்ப்பெருக்கி — மூத்திரவர்த்தனி (Diuretic)
ருதுஉண்டாக்கி — ருதுவர்த்தனி (Emmenagogue)
காமம்பெருக்கி — காமவர்த்தனி (Aphrodisiac)

**குறிப்பு :** இது முக்கியமாய்க் குருதியைச் சூடாக்கி, நரம்புகளை வெப்பப்படுத்தும். தமரகத்துடிப்பை உண்டாக்கிப் பெண் இச்சைக் கிளர்ச்சியை உண்டாக்கும். இதைத் தொடர்ச்சியாய்ச் சாப்பிட்டுவரின் தொண்டைப்புண், வயிற்றுப் பல், கழிச்சுல், நீர் எரிச்சல், புளியேப்பம் இவற்றை உண்டு பண்ணும்.

**குணம் :** இதனால் பல், பல்லடி நோய்கள், பாம்பு நஞ்சு, தேள் நஞ்சு, மந்தம், ஏப்பம், வாதம், சூதகவாயு, குன்மம், பெருவயிறு, சூதகச்சூலை, குருதியிலுள்ள நுண்புழு, ஐயத்தால் பிறந்த வலிகள், உடல் கடுப்பு என்னும் இவை போம்.

அளவு 16 மி.கி—650 மி.கி.

இதைப் பொரித்து வழங்குதலே நலம். பச்சையாய் வழங்கில் வாந்தி உண்டாகும்; தலைசுற்றும்; தீக்குற்றத்தைப் பெருகச் செய்யும்.

இதை நீர்விட்டு உரைத்து மார்பின்மீது பற்றிட, குழந்தை கட்குண்டாகும் கக்குவானின் கேவல் குணப்படும்.

குழந்தைகளின் வயிற்றிலுண்டாகும் பூச்சிகளை வெளிப் படுத்த இதை நீரிலிட்டு அரைத்துக் கலக்கி, பீச்சாகச் செலுத்த லாம்.

அபினும் காயமும் சேர்த்துச் சொத்தைப் பல்லில் வைக்க, பல்வலி நீங்கும்.

பிள்ளை பெற்றபின் அழுக்கை வெளிப்படுத்த, காயத் தைப் பொரித்து வெள்ளைப்பூண்டு, பனைவெல்லத்துடன் சேர்த்துக் காலைதோறும் கொடுக்கலாம்.

காயம், கர்ப்பூரம், மிளகு, அபின் சேர்ந்த மருந்து தொடக்க ஊழியில் நன்மை தரும்.

ஒற்றைத்தலைவலி, பல்வலிகளில் இதை வழங்குவ துண்டு.

## 6. சாதுர் சாதம்

சாதுர் சாதம் என்பது ஏலம், இலவங்கம், இலவங்கப் பட்டை, சிறுநாகப்பூ என்னும் நான்கு மணமுள்ள சரக்கு களைக் குறிக்கும் தொகைப் பெயர். இவை பெரும்பாலும் இளகங்கள், தைலங்கள், சூரணங்கள் ஆகியவற்றுக்கு மண மூட்டவும் பயன்படும்.

### அ ஏலம் (பெரிய) ஏலம்

வே. பெ : ஆஞ்சி, கோரங்கம், துடி, அருசகனி.

Eletaria cardamomum
Malabar cardamoms.
Eng. Cardamom seeds

இச் செடி, ஏலக்காயின் பொருட்டுக் குளிர்ச்சியுள்ள மலை நாடுகளில் பயிரிடப்படுகின்றது. இக் காய் மூன்று பிரிவுள்ளது;

உள்ளிலும் மும்மூலையுடையது. விதை கறுப்பு; மணமுள்ளது; மருந்துகளுக்கு மணம் தரும். இதில் வேறு வகைகளுமுண்டு.



படம் 17. ஏலம்

சுவை — கார்ப்பு, தன்மை—வெட்பம், பிரிவு—கார்ப்பு.

**செய்கை :** வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant)
அகட்டுவாய்வகற்றி—உதரவாதஹரகாரி (Carminative)
பசித்தீத்தூண்டி—ஜாடராக்கினிவர்த்தனி (Stomachic)

**குணம் :** இது தொண்டை, தாள், வாய், கீழ்வாய் இவற்றில் உண்டாகும் நோய்களையும், இருமல், கழிச்சல், நீர்ச் சுருக்கு, நெஞ்சில் கோழைக்கட்டு, சிலந்தி நஞ்சு இவற்றையும்

போக்கும்; அழலை ஆற்றும்; வெண்ணீரைப் (விந்து) பெருக்கும்.

ஏலம், அதிமதுரம், செங்கழுநீர், கோட்டம், விலாமிச்ச வேர், வெட்டிவேர், சுக்கு, சந்தனம், நன்னாரி, கோரைக் கிழங்கு, பற்படாகம் முதலியவற்றைச் சிறிது நசுக்கி ஓர் எடை யாய்க் கூட்டி, நீர் விட்டு எட்டில் ஒன்றாய் வற்றக் காய்ச்சி அருந்தின் உடல் வெப்பு, குருவியர்வை, சுரம் முதலியன தீரும்.

**ஏலப்பொடி**

**வ. கு :** ஏலம், அதிமதுரம், நெல்லிமுள்ளி, சந்தனக் கட்டை, வால்மிளகு இவற்றின் பொடி வகைக்கு 34 கிராம், சருக்கரை 85 கிராம் சேர்த்துக் கலந்து 2 கிராம் முதல் 4 கிராம் சேர்த்துக் கலந்து கொடுக்க இருமல், நாவறட்சி, வயிற்றுவலி முதலியன நீங்கும்.

**ஏல வடகம்**

ஏலவரிசி, இலவங்கப்பட்டை, முந்திரிகை (கொட்டைத் திராட்சை உலர்ந்தது), திப்பிலி வகைக்கு 204 கிராம், அதிமதுரம், சருக்கரை, பேரீந்து வகைக்கு 102 கிராம் இவற்றை ஒன்றுபட இடித்துச் சூட்டுடன் இருக்கும்போதே, கழற்சிக்காய் அளவு உருண்டை செய்து வேளைக்கு 1- 2 கொடுக்க மாந்தம், வயிற்றுவலி, பொருமல் கழிச்சல், அழல் போம்.

**ஆ. இலவங்கம்**

**வே. பெ :** அஞ்சுகம், உற்கடம், கருவாய், கிராம்பு, சோசம், திரளி, வராங்கம்.

Eugenia Caryophyllata, Wild.

Eng : Cloves

இஃது இந்தியாவிலும் இலங்கையிலும் பயிராகிறது. எல்லாக் கடைகளிலும் விற்கப்படும்.

சுவை—காரமும் விறுவிறுப்புமுள்ளது, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

**செய்கை :** இசிவகற்றி – அங்காகர்ஷண நாசனி (Antispasmodic)

அகட்டுவாய்வகற்றி—உதரவாதஹரகாரி (Carminative)

பசித்தீத்தூண்டி—ஜடராக்கினிவர்த்தனி (Stomachic)



படம் 18. இலவங்கம்

**குணம்** : கிராம்பு மயக்கம், பேதி, வாந்தி, குருதிக்கழிச்சல், நாட்பட்ட கழிச்சல், எருவாய்க்கடுப்பு, செவிநோய், சிவந்த மச்சம், கறுத்த மச்சம், கண்ணில் பூ, படைகள் ஆகியவற்றை நீக்கும். கறிமசாலையிலும் சேரும்.

**வ. கு** : கிராம்பை நீர்விட்டு மை போலரைத்து, நெற்றியிலும், மூக்குத்தண்டின் மீதும் பற்றிட தலைபாரமும் நீரேற்றமும் குணமாகும்.

தணலில் வதக்கி வாயிலிட்டுச் சுவைக்க, தொண்டைப்புண் ஆறும். பற்களின் ஈறு கெட்டிப்படும்.

இரண்டு ஆழாக்கு வெந்நீரில், கிராம்புத்தூள் கால் பலம் சேர்த்து, அரை மணி நேரம் வரையில் மூடி வைத்து வடிகட்டி, $\frac{1}{8}$ முதல் $\frac{1}{2}$ ஆழாக்கு வீதம் உட்கொள்ள, பசித்தீயைத்தூண்டிக் கழிச்சலைப் போக்கும். பிள்ளைத்தாய்ச்சியின் வாந்தி நிற்கும்.

**இ. இலவங்கப்பட்டை**

**வே. பெ :** கருவாப்பட்டை

Cinnamomum Zeylanicum
Eng : Cinnom—Bark of

கருவாப்பட்டைச் செடி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் உரிய பயிர். ஆயினும், இலங்கையில்தான் மிகுதியாக வளர்கின்றது. நமக்குக் கடையில் கிடைப்பது ஜான்ஜிபார் என்னும்



படம் 19. இலவங்கப் பட்டை

நாட்டிலிருந்து வருவதேயாகும். இது மற்றத் தேசத்திய உற்பத்தியிலும் மேம்பட்டது; கறிமசாலையில் சேரும். வாய் நாற்றத்தைப் போக்கும்.

சுவை — காரமும் இனிப்புமுடையது, தன்மை—தட்பம் (வெப்பவீரியமென்றும் கூறுவர்), பிரிவு – இனிப்பு (கார்ப்பென்றுங் கூறுவர்).

செய்கை : வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant)
அகட்டுவாய்வகற்றி – உதரவாதஹரகாரி (Carminative)
காமம்பெருக்கி – காமவர்த்தனி (Aphrodisiac)

குணம் : இது பாம்புக்கடி, சிலந்திப்பூச்சிக்கடி முதலியவைகளின் நஞ்சைப் போக்கும். இஃது இரைப்பு, இருமல், வயிற்றுக்கடுப்பு, உள்மூலப்புண் இவற்றைப் போக்கும். உடற்குக் குளிர்ச்சியை உண்டுபண்ணும்.

வ. கு : இதற்குச் சூல்பையைச் சுருங்கச் செய்கிற குணமுண்டென்று பெரும்பாடு முதலியவற்றுக்குக் கொடுப்பதுண்டு.

அளவு : இப் பட்டையின் தூளை வேளைக்கு 65 மி. கி. முதல் 260 மி. கிராம் வரை கொடுக்கலாம். பெரும்பாலும் தனியாகக் கொடுப்பது அரிது.

சீதக்கழிச்சலில் 650 மி.கிராம் பொடி பலனைத் தரும். இதன் செடியிலிருந்து 3 வகை எண்ணெய் எடுக்கப்படும்.

(1) பட்டையிலிருந்து எடுப்பது பொன்நிறச் சாயலாயிருக்கும்.

(2) இதன் இலையிலிருந்து எடுக்கும் எண்ணெயை, உடல் வலி, தலைவலி, பல்வலி முதலிய நோய்களுக்குக் கொடுப்பதுண்டு.

அளவு : 2–5 துளி.

**இலவங்கப் பட்டைப்பொடி**

இலவங்கப்பட்டை, ஏலரிசி, சுக்கு இவற்றைப் பொடித்து, ஓர் அளவாகக் கலந்து 180 மி. கிராம் முதல் 650 மி. கிராம் வரை கொடுக்க வாந்தி, வயிற்றுப்பொருமல், வலி, கழிச்சல், கடுப்புப் போம்.

## ஈ. சிறுநாகப்பூ

**வே. பெ :** நாகம், நாகபுட்பம், நாகேசரம், கேசரம், சாம்பேயபம், கநகம், காஞ்சநம், ஏமம், ஆடகம்.

Mesua ferrea




படம் 20. சிறுநாகப்பூ

இஃது இமயம், கீழ்வங்காளம், அசாம், கீழ்த்தொடர்ச்சி, மேல்தொடர்ச்சி மலைகள், பர்மா முதலிய நாடுகளில் பயிரா கின்றது.

**ப. உ :** இலை, மொக்கு, பூ, விதை, வேர், பட்டை.

சுவை — சிறுகைப்பு, துவர்ப்பு, தன்மை—தட்பம், பிரிவு—
கார்ப்பு.

செய்கை :

பூ : துவர்ப்பி—ஸங்கோசனகாரி (Astringent)
அகட்டுவாய்வகற்றி—உதரவாதஹரகாரி
(Carminative)

காய் : மணமூட்டி (Aromatic)
காறலுண்டாக்கி (Acrid)
நீர்மலம்போக்கி—விரேசனி (Purgative)

பட்டை: சிறுதுவர்ப்பி—லகுஸங்கோசனகாரி [Astringent-Mild]

வேர்ப்பட்டை : மணமூட்டி (Aromatic)
வியர்வை பெருக்கி—ஸ்வேதகாரி
(Diaphoretic)

குணம் : இது வெள்ளை, இருமல், கழிச்சல் இவற்றைப் போக்கும். நீரடைப்பு, குருதிப்போக்கு, புண், கொப்புளம், காலெரிச்சல் ஆகியவற்றைப் போக்கும்.

இலை

வ. கு : இலையைப் புற்கை செய்து தலையில் வைத்துக் கட்டக் குளிர்ச்சி தரும்.

இலையை அரைத்துப் புண், கொப்புளம் இவற்றுக்குப் போடலாம்.

இலையைக் குடிநீர் செய்து கொடுக்க, விரல், காலடி இவற்றிலுண்டாகும் எரிச்சல் போம்.

மொட்டு

இதை மணப்பாகு செய்து சீதக்கழிச்சலுக்குக் கொடுக்கலாம்.

**பூ**

பச்சைப் பூவை அரைத்து, வெண்ணெய், கற்கண்டுடன் கூட்டி உண்டுவர, குருதிப்போக்கை அடக்கும்.

பூ உலர்ந்தபிறகும் மணம் மாறாதிருப்பதால், பொடி, இளகம், தைலம் இவை மணம் பெற இதைச் சேர்க்கின்றனர். மனப்பூச்சுக் கலவைகளிலும் இது சேரும்.

உலர்ந்த பூவை நெய் விட்டரைத்து, கால்களில் காணும் எரிச்சலுக்குப் பூசி வரலாம்.

இப் பூவைச் சிறிது நெய்விட்டுக் காந்தாமல் வறுத்துப் பொடி செய்து, தக்க அளவு ($\frac{1}{2}$ கிராம்) எடுத்து நெய்விட்டுக் குழப்பியுண்ணக் குருதிப்போக்கு, நாவறட்சி, வயிற்றுளைச்சல், இருமல், செரியாமை, மிகுதியாக வியர்த்தல் என்னும் நோய்கள் யாவும் போம்.

**விதை**

இதன் விதை ஒரு பங்கு, சதாப்பிலை அரைப்பங்கு சேர்த் தரைத்துக் கழற்சியளவு கொள்ள, முறைக்காய்ச்சல், வெள்ளை, இருமல் போம்.

**பட்டை**

இதை ஊறல் குடிநீர் செய்து உட்கொண்டுவர, உடல் வலுக்கும்.

## 7. திரிமஞ்சள்

திரிமஞ்சள் என்பது மஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள் ஆகிய மூன்றுமாம்.

**அ. மஞ்சள்**

**வே.பெ :** அரிசனம், கான்சனி, நிசி, பீதம்.
Curcuma longa
Eng : Turmeric

இஃது இந்தியாவில் வெப்பமான பாகங்களில் பயிராகும் செடி. இதன் கிழங்கிற்கு மஞ்சள் என்பது பெயர். இதற்கு ஒருவித மணமுண்டு.

மஞ்சள் இருவகைப்படும்: (1) கப்புமஞ்சள், (2) கறி மஞ்சள்.

(1) **கப்புமஞ்சள்:** கிழங்கின் பெரும் பாகங்களை எடுத் துலர்த்தி நல்லெண்ணெயிற் பக்குவஞ் செய்யப் படுவது.

(2) **கறிமஞ்சள்:** கிழங்கின் பக்கங்களிற் கிளைக்கும் விரல் போலுள்ளவற்றை வேறுபடுத்தி, சாணப் பாலில் வேகவைத்துப் பக்குவப்படுத்துவது.

**ப. உ:** கிழங்கு

சுவை — கார்ப்பு, கைப்பு, தன்மை—வெப்பம், பிரிவு— கார்ப்பு.

**செய்கை:** அகட்டுவாய்வகற்றி—உதரவாதஹரகாரி (Carminative)

வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant)



படம் 21. மஞ்சள்

**குணம்:** உடலிற் பூசிக் குளிக்க உடலுக்குப் பொன்னிறம் தரும். புலால் நாற்றத்தை நீக்கும்; ஆண்கள் மனத்தைக் கவரச் செய்யும். பசியையு முண்டாக்கும். இதனால் வாந்தி, வளி, தீ, ஐயக் குற்றம், தலைவலி, நீரேற் றம், வெள்ளை, மூக்கு நீர் பாய்தல், ஐவகைவலி, வீக்கம், வண்டுக்கடி பெரும்புண் இவை போம்.

**வ. கு:** மஞ்சளை நீர்விட்டரைத்து உடலிற் பூசி நீராட மேலே குணத் தில் கூறப்பட்ட நலன்கள் யாவும் உண்டாகும். மேலும், கற்றாழை நாற்ற மும், முகத்திலுண்டாகின்ற நோயும், ஐயமும் மிகுதியான வியர்வையும் நீங்கும்.

மஞ்சளைப் பொடித்துப் புண்கள் மீது தூவ, அவை ஆறும்.

சோற்றுடன் மஞ்சளைச் சேர்த்தரைத்துக் கட்டிகளின்மீது வைத்துக்கட்ட, அவை எளிதில் பழுத்துடையும்.

மஞ்சளைச் சுட்டுப் புகையை முகர நீரேற்றம் நீங்கும்.

வேப்பிலையுடன் மஞ்சளைச் சேர்த்தரைத்து, அம்மைக் கொப்புளத்தின்மீது பூச, அவை பழுத்துடைவதன்றி, வெகு எளிதில் ஆறிப்போகும்.

மஞ்சளுடன் ஆடாதோடையிலை சேர்த்து, பசுவின் நீரை விட்டரைத்துப் பூசச் சொறி, சிரங்கு, நமைப்புடைகள் ஒழியும்.

மஞ்சளை அரைத்து, அதனுடன் சுண்ணாம்பு, பொட்டிலுப்புங்கூட்டிச் சுடவைத்துச் சுளுக்கு, அடிபட்ட புண் இவற்றுக்குப் பூசலாம்.

பச்சைமஞ்சள் இரசத்தைப் பூச அட்டைக்கடி, நஞ்சு, புதிய காயப்புண், புண்கள், வீக்கம் ஆகியவை போம்.

மஞ்சட் பொடியில் 520 மி.கி—650 மி.கி அளவு உட்புகட்ட, வயிற்றுப்புண் வீக்கம் இவை போம்.

மஞ்சளை அரைத்து நீரிற் கலக்கி, வெண்சீலைக்குச் சாயமேற்றி அவ்வாடையை உடுப்பதால், வாதநீர்ச்சுருக்கு, இருமல், நச்சுச்சுரம் மாறாத்தினவு, சாதாரணமான சுரம், மலக்கட்டு இவை நீங்கும்.

மஞ்சள் நீரில் ஒரு சிறிய வெண்சீலைத் துண்டை நனைத்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு, கண்நோய் உள்ளவர்கள், இச் சீலையைக் கொண்டு கண்களை அப்போதைக்கப்போது துடைத்துவரக் கண் சிவப்பு, கண்ணருகல், கண்வலி, கண்ணில் நீர்கோத்தல் போன்றவைதணியும்.

**கறிமஞ்சள்**

இதன் மணத்திற்காகவும் நிறத்திற்காகவும் நாம் உண்ணும் உணவில் இதனைச் சேர்ப்பதுண்டு.

**ஆ. மரமஞ்சள்**

வே.பெ : காலேயகம், தாறுவி, கொக்கு.

Coscinium fenestratum

Eng : Tree – Turmeric

இஃது இலங்கை, மலையாளம் முதலிய நாடுகளிலுள்ள காடுகளில் பயிராகிறது. இது மரவகை. இதன் சக்கை மஞ்சள் நிறமுடையது. ஆகையால், இதற்கு மரமஞ்சள் எனப்பெயர்.

**ப. உ :** சக்கை (கட்டை)

சுவை—கைப்பு, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

**செய்கை :** வெப்பகற்றி—ஜ்வரஹரகாரி (Febrifuge)
பசித்தீத்தூண்டி—ஜடராக்கினிவர்த்தனி (Stomachic)
உரமாக்கி—பலகாரி (Tonic)

**குணம் :** இதனால் குழந்தைகளுக்குண்டாம் கணம், மூலநோய், சுவையின்மை, கணச்சுரம், உட்சுரம் ஆகியவை விலகும்.

**வ. கு :** இதை இடித்து 9 கிராமெடுத்து முறைப்படி குடிநீரிட்டுக் கொடுத்துவர மேற்கண்ட பிணிகள் விலகும். சுரத்திற்குப்பின் காணும் அயர்வு நீங்கும்.

இதை நீர்விட்டரைத்துத் தலையில் பற்றிட, வெப்பம் மாறும். குருதி கட்டிய வீக்கம், தோற்சிதைவுகளின் மீது பூச, அவை குணமடையும்.

**இ. கஸ்தூரி மஞ்சள்**

**வே.பெ :** கஸ்தூரி மஞ்சள், கற்சோலம்.
Curcuma aromatica
The Round Zeodany.

இஃது இந்தியாவின் பல இடங்களிலும் பயிராகிற ஒரு வகைச் செடியின் கிழங்கு.

**ப.உ.** கிழங்கு.

சுவை—கைப்பு, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

**செய்கை :** உரமாக்கி—பலகாரி (Tonic)
வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant)
அகட்டுவாயுவகற்றி—உதரவாதஹரகாரி (Carminative)

**குணம்** : இதனால் பெரும்புண்கள், கரப்பான், நுண் புழுக்கள், அக்கினி மந்தம் இவை போம். ஆண்மையும் அறிவும் பெருகும்.

**வ. கு** : இதை அரைத்துத் தேய்த்துக் குளிக்கக் கரப்பான்' பெரும்புண், மந்தம் இவை போம்.

எண்ணெயிலிட்டுக் காய்ச்சி, உடல்வலி முதலிய நோய் களுக்கும், அடிபட்ட நோய்களுக்கும் மேலுக்குத் தேய்க்க லாம்.

இதன் தூளை 325 மி.கி – 500 மி.கி. வரை உள்ளுக்குக் கொடுத்துவர வயிற்றுநோய், குன்மம் முதலிய நோய்கள் நீங்கும்.

மணமூட்டிப் பொருள்களோடும் தைலங்களோடும் இதைச் சேர்ப்பது வழக்கம்.

## 8. பஞ்சநிம்பம்

பஞ்சநிம்பம் என்பது வேம்பு, மலைவேம்பு, நிலவேம்பு, கறிவேம்பு, சிவனார் வேம்பு என்னும் ஐந்து சரக்குகளைக் குறிக்கும். சிலர் வேம்பின் இலை, பட்டை, பூ. பழம், வேர் ஆகிய ஐந்து உறுப்புகளையும் பஞ்சநிம்பம் என்பர். அவை 'நிம்பபஞ்சாங்கம்' அல்லது 'வேம்பின் ஐஞ்சினை' எனப் படும். அவை பஞ்சநிம்பமாகாதென்றறிக.

### அ. வேம்பு

**வே.பெ** : அரிட்டம், துத்தை, நிம்பம், பாரிபத்திரம், பிசு மந்தம், வாதாரி.

Azadirachta Indica.

Eng : Margosa—tree.

இஃது ஒருவித மகிழ்ச்சியைத் தரும் மரம். இந்தியாவிற்கே உரியதாகத் தெரிகிறது; ஆயினும், பர்மாவிலும் பயிரிடப் படுகிறது. இந்தியாவில் வடமேற்கு நாடுகளில் வறட்சியான பாகங்களில் இது மிகச் செழிப்பாக வளரும்.

சீதத்தால் உண்டாகும் விடசுரங்களைத் தடுக்கும் தன்மை இம்மரத்திற்குண்டென்கிற நம்பிக்கையால், இது பெரும்பாலும்

மிகுதியாக நாடுகளின் எல்லைப் புறங்களிலும், வாழும் இடங்களுக்கு அருகிலும், காளி முதலிய கோயில்களிலும், சாலைகளின் இரு புறங்களிலும் வைத்துப் பயிராக்கப்பட்டு வருகிறது. இதில் வேம்பு நீங்கக், கருவேம்பு, சர்க்கரை வேம்பு, மலை வேம்பு என்கிற இனமுமுண்டு என்பர். அவற்றில் மலை வேம்பைத் தவிர மற்ற இரு வேம்புகளையும் காண்டலரிது.



படம் 22. வேம்பு

ப. உ : இலை, ஈர்க்கு, பூ, காய், பழம், வித்து, நெய், பிண்ணாக்கு, மரப்பட்டை, வேர்ப்பட்டை, கட்டைகள், பிசின்.

**இலை**

சுவை — கைப்பு, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

**செய்கை :** வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant)
புழுக்கொல்லி—கிருமிநாசனி (Anthelmintic)
வீக்கம்பரப்பி (Discutient)

**குணம் :** வயிற்றுப்புழு, பெருநோய், மாந்தம், நச்சுச்சுரம், அம்மைப்புண், சொறி, சிரங்கு ஆகியவற்றைப் வேப்பிலை போக்கும்.

வேம்பு கைப்புப் பொருளாயினும், பித்தப்பையில் நிறைந்த பித்தநீரை வெளியாக்கி காமாலை நோயைப் போக்கும்.

புத்தியைத் தெளிவிக்கும் ; கபப்பிணியை ஓட்டும் ; அழலைப் பெருக்கும் ; வீரியத்தை உண்டாக்கும் ; இது கற்ப மருந்தில் ஒன்றாகும்.

வ. கு : வேப்பங்கொழுந்துடன் ஓமம், மிளகு, பூண்டு, சுக்கு, நொச்சிக்கொழுந்து, கறிவேப்பிலை, சோம்பு, சிற்றரத்தை, உப்பு எடுத்து இவற்றுள் உப்பு நீங்கலாக மற்றவற்றைத் தனித்தனியே நெய்விட்டு வதக்கி, கடைசியில் உப்பைச் சேர்த்து நீர் விடாமற்படி மைபோலக் கரைக்க மெழுகுபோல் வரும். இதில் 65—260 மி.கி. குழந்தைகளின் வயதிற்குத் தக்கபடி எடுத்து, தண்ணீரில் கரைத்துப் புகட்ட, மாந்தம், வயிற்றுப்பொருமல், மார்புச்சளி இவை நீங்கும் ; பசியுமுண்டாகும் ; குடலின் புழுவைக் கொல்லும் ; கழியச் செய்யும்.

வேப்பங்கொழுந்துடன் குன்றிமணி வேர்ச் சூரணம் கூட்டியரைத்து (நீர் வேண்டியிருப்பின் 2-3 துளி விட்டுக் கொள்ளலாம்) 130—200 மி. கி அளவு தினம் மும்முறை கொடுக்க, அசாத்தியமான அம்மை நோய் தீரும்.

வேப்பிலையைத் தனித்தேனும், சிறிது மஞ்சள் சேர்த்தேனும் வெந்நீர் விட்டேனும் விடாமலேனும் அரைத்துச் சீலையில் தடவி மேலுக்குப் போடக் கரப்பான், சொறி, சிரங்கு, அம்மைப்புண் இவை நீங்கும். எரிச்சலிருந்தால் அரிசிமா கூட்டிக்கொள்ளலாம்.

**ஈர்க்கு**

இதைச் சுரக்குடிநீரிலும், புழுக்களைக் கொல்லுவதற்குரிய குடிநீரிலும் சேர்க்கலாம்.

**பூ**

சுவை — கைப்பு, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

**செய்கை :** வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant)
பசித்தீத்தூண்டி — ஜடராக்கினிவர்த்தனி (Stomachic)
உரமுண்டாக்கி—பலகாரி (Tonic)

**குணம் :** பித்தத்தாலுண்டாகின்ற பெருமூர்ச்சை, நாவறட்சி, சுவையின்மை, வாந்தி, நீடித்த வளிநோய், ஏப்பம், வயிற்றுப் புழு ஆகியவற்றைப் போக்கும்.

வ. கு : நாட்பட்ட பழைய பூவை நெய்விட்டு வதக்கி, உப்பு, சுட்ட பழம்புளி, வறுத்த மிளகாய், கறிவேப்பிலை கூட்டி, துவையல் செய்து சோற்றுடன் கலந்துண்ண, மேற் குறிப்பிட்ட நோய்கள் விலகும்.

பூவை ஊறல் குடிநீரிட்டுக் கொடுக்க, அது பலக் குறைவைப் போக்கும். குன்ம நோயைக் கண்டிக்கும்.

**காய், பழம்**

**சுவை :** காய்—கைப்பு, பழம்—சிறு இனிப்பு, கைப்பு ; தன்மை—(காய்) வெப்பம், (பழம்) தட்பம், பிரிவு—(காய்) கார்ப்பு, (பழம்) இனிப்பு.

**செய்கை :** முறைவெப்பகற்றி—முறைவியாதிரோதி (Anti-perodic)
உரமாக்கி—பலகாரி (Tonic)

**குணம் :** முறைச் சுரத்தைப் போக்கும் ; வன்மையைக் கொடுக்கும்.

**காய்**

வ. கு : இஃது இளம்பிஞ்சாயிருக்கும்போது இடிக்கப் பால் வரும். இப்பால் 1,400 மி. லி. எடுத்து, 35 கிராம் சுத்தி செய்த வெண்பாடாணக் கட்டிக்குச் சுருக்கிட, பாடாணம் ஒருவகைக் கட்டாகும். இதைத் தக்க துணை மருந்துடன் வழங்க நச்சுச்சுரம், முறைச்சுரம், பெருநோய், மூத்திரநோய், மலப்புழு, மூலம் தீரும்.

காயை உலர்த்திக் கொட்டையை நீக்கிப் பொடி செய்து, 2—8 கிராம் எடை வீதம் தினமிருமுறையாகக் கொடுக்க, முறைக்காய்ச்சல் நீங்கும். உடல் வலுக்கும்.

பழத்தின் ரசத்தை எடுத்து மணப்பாகு செய்து, தோலைப் பற்றிய நோய்களுக்கு வழங்கலாம். (அளவு 17—3.5 கிராம்).

**வித்து**

சுவை — கைப்பு, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

**செய்கை :** புழுக்கொல்லி—கிருமிநாசனி (Anthelmintic)

**குணம் :** நஞ்சு, முப்பிணி விலகும்.

**'வேம்பின் விதைக்கு விடஞ்சந்நி பாதமுதல்**
**தேம்பிவிழுந் தோடுமெனத் தேர்.'** (அ. கு)

**வ. கு :** இதன் பருப்பை அரைத்துப் புழுப்பட்ட புண்களுக்குப் பூசப் புண்ணினின்றும் புழுக்கள் வெளிப்படும். புண் ஆறும்.

**நெய்**

சுவை—கைப்பு, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

**செய்கை :** வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant)
அழுகலகற்றி—தாதுக்ஷணரோதி (Antiseptic)
பூச்சிகொல்லி (Insecticide)

**குணம் :** வேம்பின் நெய்யைப் பூச, பெரும் வளிநோய் வகைகள், கழலைகள், கரப்பான், சிரங்கு, முன்னிசிவு, சுரம் இவை போம். ஆனால் அழல் மிகும் (பித்தம் மிகும்).

**வ. கு :** வேம்பின் நெய்யுடன் அவ்வளவு ஆடு தீண்டாப் பாளைச்சாறு கூட்டி, சாறுவற்றி நெய் பக்குவப்பட்டபின் இறக்கி வடித்துத் தடவிவர, தோல்கள் வெளுத்துக்காணும். புடைகளும், சிறு சிறு கொப்புளங்கள் கண்டு துர்நீர் பாயும். புண்களும், சுட்ட புண்களும் நீங்கும்.

வேப்பெண்ணெயை இரும்புக் கரண்டியில் விட்டுக் காய வைத்து எருக்கிலையைக் கற்றையாய்ச் சுருட்டிக் கட்டி, ஒரு புறத்தைத் தட்டையாகக் கத்தரித்தெறிந்து, அதைக் காய்ந்து

கொண்டிருக்கும் எண்ணெயில் தோய்த்து ஒற்றடமிட, பிடரி வலி, நரம்பு இசிவு, உடல்குத்து, முப்பிணியில் காணும் வலிகள் தீரும்.

பட்டை

சுவை—கைப்பு, சிறுதுவர்ப்பு, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

செய்கை : முறைவெப்பகற்றி—முறைவியாதிரோதி (Antiperodic)
உரமாக்கி—பலகாரி (Tonic)
துவர்ப்பி—ஸங்கோஸனகாரி (Astringent)

குணம் : இஃது ஐயசுர முதலிய சுரங்கள், சுரத்தாலுண்டாகும் உடல் தளர்ச்சி, மூலகணம், மாந்தம், மலம், வலிப் பெருக்கு, குன்மம், வயிற்றுவலி, எரி பூச்சி இவற்றைப் போக்கும்.

வ. கு : சிதைத்த வேம்பின் பட்டையின் உட்பாகம் 70 கி., நீர் 720 மி.லி. ஒரு மணி நேரங் காய்ச்சி வடிகட்டி, சூடாயிருக்கும்போதே 30—45 மி.லி. வீதம், முறைச் சுரம் வருவதற்கு முந்தியே கொடுக்க, சுரம் வராது ; வந்தாலும் எளிதாயிருக்கும். இதையே சுரத்தாலேற்பட்ட உடல் அயர்ச்சிக்கும் வழங்கலாம்.

ஆ. மலைவேம்பு

Melia azatiract
Eng : Common Bead tree— (The Persian Lilac)

இஃது இந்தியாவில் பல பாகங்களிலும், பாரசீகம், அமெரிக்கா முதலிய இடங்களிலும் பயிராகும் மரம்.

கைப்பும் அருவருப்புமான சுவையுடையது. வேப்பிலையின் ஓரங்களில் காணும் அறுவாய் இம்மரத்து இலையில் இராது. இதன் இலை கரும்பச்சை நிறம்; காய் சிறிது கனத்து உருண்டையாயும் இருக்கும்.

ப.உ: இலை, வேர்ப்பட்டை, பிசின்.

சுவை—கைப்பு, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

**செய்கை :**

**இலை** புழுக்கொல்லி—கிருமிநாசனி (Anthelmintic)
பெருமலம்போக்கி—விரேசனகாரி (Cathartic)
கற்றுகளாக்கி—பாஷாணபேதி (Lithontriptic)
சிறுநீர்ப்பெருக்கி—மூத்திரவர்த்தனி (Diuretic)
ருதுவுண்டாக்கி—ருதுவர்த்தனி (Emmenagogue)

**பூ**

ருதுவுண்டாக்கி—ருதுவர்த்தனி (Emmenagogue)
வீக்கங்கரைச்சி (Resolvent)

**பட்டை**

பெருமலம்போக்கி—விரேசனகாரி (Cathartic)
வாந்தியுண்டாக்கி—வமனகாரி (Emetic)

**வேர்ப்பட்டை**

வாந்தியுண்டாக்கி—வமனகாரி (Emetic)
புழுக்கொல்லி—கிருமிநாசனி (Anthelmintic)

**குணம் :** வயிற்றுப்புழு, சூதக வயிற்றுவலி, வெறிநோய், உடலை வாட்டுகின்ற வளிநோய்கள் நீங்கும்.

**வ. கு :** இலைக்கும் காய்க்கும் நச்சுத்தன்மையுண் டென்பது சிலர் கொள்கை. அளவு கடந்து வழங்கினால் யாவும் நஞ்சே; சூதகக்குருதியை வெளிப்படுத்தாது, கட்டுகின்ற சூதக வலி, நிலைபெற்ற மலட்டுப்புழு, மலட்டு நோய்க்கூட்டம் ஆகியவற்றைப் போக்கவல்ல (தேரையரால் இயற்றப்பட்ட 'தைலவர்க்கச் சுருக்கத்தில் கூறிய) 'கலிங்காதித் தைலத்தில்' இதன் இலைச்சாறு சேருகின்றது.

இலைச்சாற்றில் தக்க அளவு கொடுத்துவர, புழுக்களைக் கொன்று வெளிப்படுத்தும். இலைக் குடிநீரையும் கொடுக்க லாம்.

இலை அல்லது பூவைக் களி கிளறித் தலைக்குப் பற்றிட, வாதத் தலைவலியும், கிளைக்கின்ற புண்களின்மீது தடவி வர அவைகளும் நீங்கும். பேன் உள்ள தலையில் அப்பிவர, பேன்கள் செத்து விழும். மண்டைச்சொறி போம்.

வேர்ப்பட்டையை உலர்த்திப் பொடி செய்து, 5—12 வயதுள்ள சிறுவர்களுக்கு 2—5 கிராம் வீதம், காலை மாலை



படம் 23. மலைவேம்பு

கொடுத்துவர, வயிற்றுப் புழுக்களைக் கொன்று வெளிப் படுத்தும். 4 முதல் 6 கிராம் வீதம் கொடுக்க வெறி, சூதகவயிற்று வலி ஆகியவை நீங்கும்.

**இ. நிலவேம்பு**

**வே.பெ :** சிரட்குச்சி, கிராதம், கிராகதி, நாட்டு நிலவேம்பு, காண்டம், கோகணம்.

Andragraphis paniculata, Nees.

Eng : The King of Bitters.

இஃது ஒரு சிறு செடி. இதில் சீமை நிலவேம்பு அல்லது சூரத்து நிலவேம்பு என்று வேறொரு வகையுமுண்டு. இதனைச் சிரட்டா (Chiretta) என்று மேனாட்டார் கூறுவர். சுமார் மூன்றடி நீளமுள்ள இதன் தண்டு உருண்டு வழவழப்பாயும், பழுப்பு நிறமாயும், கிளைகளுள்ளதாயுமிருக்கும். நாட்டு நில வேம்பானது, வேரோடுங்கூடி ஒன்றரை அடி நீளமாகவும், நான்கு மூலைகளுள்ளதாகவும், கொஞ்சம் கறுப்பாகவும் இருக்கும். இந்தியாவில் எல்லாக் கடைகளிலும் சாதாரண மாகக்கிடைக்கக் கூடியது. இவ்விரண்டு வகைநில வேம்பிற்கும் செய்கையும் குணமும் ஒன்றேயாகும்.

ப. உ: இலை, தண்டு.

சுவை—கைப்பு, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

**செய்கை:** பசித்தீத்தூண்டி — ஜடராக்கினிவர்த்தனி (Stomachic)
உரமாக்கி—பலகாரி (Tonic)
உடற்றேற்றி—வியதாபேதகாரி (Alterative)
வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant)

குணம்: இதனால் வளிசுரம், நீர்க்கோவை, சுரங்கள், மயக்கம் இவை நீங்கும். புத்தித் தெளிவுண்டாகும்.

வ. கு: மேற்கூறிய நோய்களுக்கு, நிலவேம்பு 15 கிராம், கிச்சிலித்தோல் 195 மி.கி., இவற்றை வெந்நீரில் சேர்த்து மூடி, ஒரு மணி நேரம் சென்றபின் வடிகட்டி 15—30 மி.லி. வீதம் தினம் 2—3 முறை கொடுக்கலாம்.

**ஈ. கறிவேம்பு**

வே. பெ: கறிவேப்பிலை, கருவேப்பிலை, கறியபிலை.
Murraya Keonigii, Spreng
Eng: Curry-leaf tree.

இஃது இந்தியாவில் மிக்க ஏராளமாய் வளருகின்ற பெருஞ் செடியினம்; மலைக்காடுகளிலும், காடுகளிலும், வீட்டுக் கொல்லைகளிலும், தோட்டங்களிலும் பயிராகும். இதன் இலை ஒருவித நறுமணத்தைக் கொடுக்கும். இந்தியருள் பெரும்பாலர், தங்கள் வீட்டில் செய்யப்படும் கறி வகைகளிலும், குழம்பு, மிளகுநீர், நீர்மோர் போன்ற பொருள்களிலும் இதனிலையைத் தாளிதமாய்ச் சேர்த்து உண்பர்.

ப. உ : இலை, ஈர்க்கு, பட்டை, வேர்.

சுவை—சிறுகார்ப்பு, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

செய்கை : உரமாக்கி—பலகாரி (Tonic)
பசித்தீத்தூண்டி—ஜடாரக்கினிவர்த்தனி (Stomachic)

குணம் : கருவேப்பிலையால் சுவையின்மை, சீதபேதியால் வரும் வயிற்றுளைவு, பழஞ்சுரம், பயித்தியம் ஆகிய இவை நீங்கும்.



படம் 24. கறிவேம்பு

வ. கு : இதன் இலை, பட்டை, வேர் இவைகளைக் குடிநீரிட்டுக் கொடுக்க மேற்கூறிய நோய்கள் போம்.

இலையை நிழலிலுலர்த்தி, இதனுடன் மிளகு, உப்பு, சீரகம், சுக்கு முதலியவற்றைப் பொடியாக்கிச் சோற்றில் கட்டி, கொஞ்சம் நெய்விட்டுக் கலந்து உண்ண மந்தம், மந்தபேதி, மலதோடம், மலக்கட்டு, கிரகணி, பிரமேகம் இவை சாந்தமாகும்.

இலையுடன் சுட்டபுளி, வறுத்த உப்பு, வறுத்த மிளகாய் கட்டித் துவையல் செய்து ஆகாரத்துடன் சாப்பிட அரோசகம், அதிசாரம், பித்த வாந்தி, பித்தக்ஷயம், செரியாமை, வயிற்றுளைச்சல் இவை குணமாகும்.

ஈர்க்கின் புறணியை முலைப்பாலிட்டு இடித்துச் சாறு பிழிந்து கிராம்பு, திப்பிலி சேர்த்து 2, 3 தரம் குழந்தைகட்குப் புகட்ட, வாந்தி நிற்கும்; பசித்தீபனம் உண்டாகும்.

இதன் ஈர்க்குடன் வேப்பீர்க்கு, நெல்லியீர்க்கு ஆகியவைகளைச் சம அளவாகச் சேர்த்து இடித்து, நீர் விட்டுக் காய்ச்சிக் கொடுக்க, வாந்தி உடனே நிற்கும்.

மேற்படி இலையிற் சிறிதும், வயதுக்குத் தக்கபடி 1, 3 மிளகும் சேர்த்து நெய்யில் வறுத்து வெந்நீர்விட்டு அரைத்துக் கரைத்து, பாலர்களுக்கு நீராட்டியபின் குடிப்பிக்க, மந்தம் முதலியன நீங்கிப் பசியை உண்டுபண்ணும்.

**உ. சிவனார் வேம்பு**



படம் 25. சிவனார் வேம்பு

வே. பெ : காந்தாரி.
Indigofera Aspalathoides, Vahl.

இது தென்னிந்தியாவில் எங்கும் கிடைக்கக்கூடிய பூண்டு.

ப. உ. இலை, பூ, தண்டு, வேர்.

சுவை—கைப்பு, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

செய்கை : வெப்பமுண்டாக்கி (Stimulant)
உள்ளழலாற்றி—அந்தாஸ்நிக்தகாரி
(Demulcent)

குணம் : இதனால், தோலைப்பற்றி வரும் படைகள், நாட்பட்ட புண், சொறி, சிரங்கு, பிளவை, கொடுமை செய்யக்கூடிய வளிநோய்கள், குறைநோய், மந்தம், பாம்பு நஞ்சு இவை நீங்கும். அழகுண்டாகும்.

சிவனார் வேம்பால், குறைநோய் (குட்டம்), சிரங்கு, இரைப்பு, உப்புசம், உளைமாந்தை முதலியன போம்.

வ. கு : இலையையும் பூவையும் குடிநீரிட்டுக் குடிக்க, அது தோலைப்பற்றிய படை முதலிய நோய்களை விலக்கும்.

வேரை வாயிலிட்டுச் சுவைக்க, பல்வலி, வாய்ப்புண் முதலியன நீங்கும்.

வேரை எண்ணெயிலிட்டுக் காய்ச்சி, சொறி சிரங்கு முதலியவைகளுக்குப் பூசப் போம்.

## 9. திரிசுகந்தம்

சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம் ஆகிய மூன்றையும் திரிசுகந்தம் என்னும் தொகைப் பெயர் குறிக்கும். இவைகளில் இலவங்கத்தைப்பற்றிச் சாதுர் சாதம் என்னும் தலைப்பில் கூறியுள்ளது கண்டு கொள்க.

### அ. சாதிக்காய்

வே. பெ : குலக்காய், ஜாதிக்காய்.
Myristica Officienalis. Linn. & Mart
Eng : Nut Meg

இது மலேயா, பினாங்கு, மொலூக்கஸ் நாடுகளுக்கு உரிமையான மரம் ; ஆயினும், இலங்கையிலும், மேற்குத் தொடர்ச்சி மலை நாடுகளிலும் செழுமையாகப் பயிரிடப்பட்டு வருகிறது. மரத்தில் காய் பழுத்தபின் சதைப்பற்றுள்ளதாய் இருக்கும். கொட்டையின் ஓட்டின் மேல் சற்றுச் சிவந்து மெல்லிய தோல் போல இடைவிட்டுப் பதிந்து இருப்பது சாதிப்பத்திரி, என்றும் ஓட்டினுள் உள்ள பருப்பு சாதிக்காய் என்றும் வழங்கப்படும். கொட்டையின் மேல் உள்ள சதை, புளிப்பும் துவர்ப்புங்கூடிய சாதிக்காயின் மணத்தைப் பெற்றிருக்கும். இதனை ஊறுகாய் இட்டுத் தின்பதுண்டு. இதற்குக் குளிர்ச்சித் தன்மை உண்டு. நம் நாட்டில் கிடைப்பவை நெய்ப்பசை மணம் இவற்றுள் குறைந்து காணும். பொதுவாக இதற்கு நல்ல மணம் உண்டு.

ப. உ : காய்.

சுவை—துவர்ப்பு, கார்ப்பு ; தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

செய்கை: வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant)
அகட்டுவாய்வகற்றி—உதரவாதஹரகாரி (Carminative)
மூர்ச்சையுண்டாக்கி—நித்ராகாரி (Narcotic)
மணமூட்டி (Aromatic)
காமம்பெருக்கி—காமவர்த்தனி (Aphrodisiac)
உரமாக்கி—பலகாரி (Tonic)

குணம் : இதனால் விந்துக் குறைவு, பெருங்கழிச்சல், வாயுவினாலுண்டாகும் நோய், தலைவலி, இரைப்பு (சுவாசம்), இருமல் (காசம்), நாட்பட்ட கழிச்சல், வெப்பத்தை முன்னிட்டு வரும் பிணிகள் இவை போகும். ஆனால், மயக்கத்தைத் தரும். மேலும் இது, வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், அக்கினி மந்தம் இவைகளையும் போக்கும்.

அளவு : 320 மி.கி. — 1,000 மி.கி.

வ. கு : கறிமசாலையோடும், வெற்றிலை பாக்கோடும் இதைச் சேர்ப்பது வழக்கம்.

சாதிக்காய் 130 மி.கி., சுக்குத்தூள் 130 மி.கி., சீரகம் 325 மி.கி. இவற்றை நன்றாகப் பொடி செய்து, உணவுக்குமுன்

சாப்பிட, வயிற்றிலுண்டாகும் வாயுவைப் போக்கி, செரிப்பை உண்டுபண்ணும்.

2 கிராம் தூளைப் பாலிற் கலக்கி, பெருங்கழிச்சலுக்குக் கொடுக்கலாம்.

**ஆ. சாதிப்பத்திரி**

**வே. பெ :** சாதிபத்திரி, வசுவாசி.
Myristica officinalis
Eng : Arillus of the nut (Mace)

இது, சாதிக்காயின் ஓட்டின்மீது மூடிக்கொண்டு பச்சையாயிருக்கும்போது செந்நிறமும், உலர்ந்தபின் செம்மஞ்சள் நிறமுமாயிருக்கிற பொருள். இதையும் கறிமசாலை, வெற்றிலை பாக்கு இவைகளில் சேர்ப்பது வழக்கம்.

சுவை—கார்ப்பு துவர்ப்பு, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

**செய்கை :** காமம்பெருக்கி—காமவர்த்தினி (Aphrodisiac)
அகட்டுவாய்வகற்றி—உதரவாதஹரகாரி (Carminative)
வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant)
உறக்கமுண்டாக்கி—நித்ராகாரி (Hypnotic)

**குணம் :** இதனால் தாபசுரம், நிணபேதி, நீர்க்கழிச்சல் இவை போம். இது உடற்கட்டுகளை வலுக்கச் செய்யும். அழலை உண்டாக்கும்.

**வ. கு :** சாதிக்காய்க்குள்ள வழக்கே இதற்குமுண்டு.

**இ. இலவங்கம் :**

ஏற்கெனவே சாதுர்சாதம் என்னும் தலைப்பின் கீழ்க் கூறியுள்ளது.

## 10. கரிசாலை (கரிசலாங்கண்ணி)

**வே.பெ :** கரசனாங்கண்ணி, கரிசாலை, கரியசாலை, கைகேசி, கைவீசி இலை, கையாந்தகரை, பிருங்கராஜம், கரிப்பான், கையான், தேகராஜம், கரிச்சை, மகாநிலம், மவங்கம், மறுங்கம்.

Eclipta alba, Hassk. or

E. erecta, Linn. or E. prostrata, Roxb.

**வகை :** நீலம், மஞ்சள் (பொற்றலைக்கையான்), சிவப்பு, வெள்ளை ஆகிய நாலு இனங்களுள், முதல் மூன்று



படம் 26. கரிசலாங்கண்ணி

இனங்களும் அநேகமாக அகப்படமாட்டா. இப்பூண்டு மிகுதியாக மலைச்சாரல்களிற்றான் உண்டு. நான்காவது கூறிய வெள்ளைக் கரிசலாங்கண்ணியானது எங்கும் அகப்படக் கூடியது.

**ப. உ :** முழுச்செடியும்.

**சுவை**—கைப்பு, **தன்மை**—வெப்பம், **பிரிவு**—கார்ப்பு.

**செய்கை :** பித்தநீர்ப்பெருக்கி—பித்தகாரி (Cholagogue)
உரமாக்கி—பலகாரி (Tonic)

உடற்றேற்றி – வியதாபேதகாரி (Alterative)
வாந்தியுண்டாக்கி—வமனகாரி (Emetic)
நீர்மலம்போக்கி—விரேசனி (Purgative)
வீக்கமுருக்கி – சோபாநாசனி (Deobstruent)
ஈரல்தேற்றி – யகிருதபலகாரி (Hepictonic)

குணம் : இதனால் குரலுறுப்பு நோய், காமாலை, குட்டம், வீக்கம், பாண்டு, பல்நோய் ஆகியவை போம். உடலிற் பொற்சாயலும், ஆளிக்குள்ள பலமுமுண்டாகும்.

**மஞ்சள் (பொற்றலைக்) கையாந்தகரை**

உடலுக்குப் பொற்சாயலையும், விழிக்கு ஒளியையும், புத்திக்குத் தெளிவையும் உண்டாக்கும். குன்மக்கட்டியைப் போக்கும். இது பலவிதச் சிந்தூரஞ் செய்ய உதவும்.

வ. கு : பொற்றலைக்கையாந்தகரையைக் (மஞ்சள் கரிசாலை) கறியாகச் செய்துண்ண, அறிவின் தெளிவும், திருவும் சேரும்.

இலைச்சாறு 700 மி.லி., நல்லெண்ணெய் 700 மி.லி., தைல பாத்திரத்திலிட்டு, சிறு தீயாக எரித்துப் பக்குவமாக வடித்து, 5 கிராம் காலை மாலை இருவேளை சாப்பிட்டுவர, இருமல் நோய் தீரும்.

கையாந்தகரைச் சாறு 5600 மி.லி., நெல்லிக்காய்ச் சாறு 5600 மி.லி., நல்லெண்ணெய் 1750 மி.லி. இவற்றைக் கலந்து, அதிமதுரம் 8 கிராம் சேர்த்து அரைத்துக் குழப்பி, எரித்துப் பதமாய் வடித்துத் தலைமுழுகக் கண்காசம், காதுநோய் இவை தீரும்.

கரிசாலைச் சூரணத்தை அயச்செந்தூரத்திற்கு அனுபானமாகக்கொள்ளப் பாண்டு, சோபை, காமாலை முதலிய நோய்கள் தீரும்.

கரிசாலைச் சாறு 2 துளி எடுத்து, 8 துளி தேனிற் கலந்து கொடுக்க கைக்குழந்தைகட்கு உண்டாகும் நீர்க்கோவை (ஜலதோஷம்) நீங்கும்.

இலைச்சாற்றைக் காதுவலிக்குக் காதுகளில் விடத் தீரும்.

இலைச்சாற்றை நல்லெண்ணெய், அல்லது தேங்காய் எண்ணெயில் காய்ச்சித் தலைக்குத் தேய்த்துவர, முடி கறுத்துத் தழைத்து வளரும்.

## 11. தூதுவேளை

**வே. பெ :** தூதுவளை, அளர்க்கம், சிங்கவல்லி.
Solanum trilobatum, Linn.

இது இந்தியாவில் எங்கும் பயிராகும் ஒருவகைக் கொடி. இதற்கு சிறு முட்கள் உண்டு.

**ப.உ :** இலை, பூ, காய்.

சுவை—சிறு கைப்பு கார்ப்பு, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.



படம் 27. தூதுவேளை

**செய்கை :** வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant)
கோழையகற்றி—கபஹரகாரி (Expectorant)
உரமாக்கி—பலகாரி (Tonic)

தூதுவேளையைக் கற்பமுறையாகவேனும், கறியாக வேனும் உட்கொண்டுவர, உடலில் ஐயத்தால் ஏற்பட்ட நோய்கள் யாவும் நீங்கும்.

**சமூலம்**

குணம் : இதனால், ஐயத்தாலுண்டாகும் காதுமந்தம், காதெழுச்சி, இருமல், நமைச்சல், பெருவயிறு, மந்தம், முக்குற்றம், உடல் குத்தல் இவை நீங்கும். ஆண்மை பெருகும், உடல் வலுக்கும்.

இதன் பூவால் உடல் பெருக்கம், ஆண்மை, வன்மை, தெளிவு உண்டாகும்.

வ. கு : காயை வற்றலிட்டுப் பாகம் செய்து உண்டுவர, ஐயநோய், அழல்நோய், வளிநோய் முதலியன அணுகா. குடல்வாதம் போம்.

பழத்தின் உபயோகத்தால் இறுகிய மார்புச்சளி, இருமல், முக்குற்றங்கள், நீரேற்றம் இவை போம். இருமுறை வெளிக்குப் போம். பாம்பு நஞ்சு தீரும்.

இலைக் குடிநீரை, இரைப்பு, இருமல் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

## 12. ஆடாதோடை

**வே. பெ :** ஆடாதோடை வாசை
Adhatoda Vasica, Nees.
Eng : Malabar – nut

இச் செடி, தென்னிந்தியாவிலும், வங்காள தேச முழுவதிலும் ஏராளமாய்ப் பயிராகின்றது. இதன் இலை மாவிலை நுணாயிலைகளைப் போல 4 முதல் 9 அங்குல நீளமாகவும் 2 முதல் 3 அங்குலம் அகலமாகவும் இருக்கும். செடி 4 முதல் 10 அடி உயரம் பயிராகும்.

ப. உ : இலை, பூ, பட்டை, வேர்.

சுவை—கைப்பு, தன்மை - வெப்பம், பிரிவு—கார்ப்பு.

**செய்கை :** இசிவகற்றி – அங்காதர்ஷண நாசனி (Antispasmodic)
கோழையகற்றி – கபஹரகாரி (Expectorant)

நுண்புழுக்கொல்லி — கிருமிநாசனி (Gemicide)
சிறுநீர்பெருக்கி —மூத்திரவர்த்தனி (Diuretic)

வளி ஐயக்குற்றங்களின் பெருக்கை அறுக்கும். வாத தோடம், பற்பல சுரம், முப்பிணி, வயிற்றுநோய், குருதியழல், இருமல், மேலிளைப்பு, வாந்தி, விக்கல், சூலை, அண்டவாயு ஆகியவைகளையும் போக்கும். பாடக்கூடிய நல்ல குரலொலியைத் தரும்.



படம் 28. ஆடாதோடை

**இலை**

வ. கு : இலையின் ரசம் 10 முதல் 20 துளிவரை எடுத்து' தேனுடன் கலந்து கொடுக்க, மேற்கூறிய பிணிகள் நீங்கும். சிறப்பாகக் குருதியழல், இருமல், இளைப்புநோய், சுரம், காமாலை தீரும்.

இலையை மட்டும் குடிநீர் செய்து, அதில் தேன் சேர்த்துக் கொடுக்கக் குருதியழல், சுரம், இருமல், இளைப்பு நோய் முதலியன தீரும்.

இரண்டு மூன்று கொழுமையான இலைகளைப் பொடிப் பொடியாகக் கத்தரித்து, ஒரு புதிய மண்சட்டியிலிட்டு, தேன் சிறிது கூட்டி எரிக்க, ஒருவித நறுமணம் வீசும். அத் தறு வாயில், அதிமதுரம் 2 கிராம், திப்பிலி 1 கிராம் தாளிசபத்திரி ½ கிராம் (வேண்டுமானால் சிற்றரத்தை ½ கிராம்) இவைகளை ஒன்றிரண்டாக நசுக்கிச் சேர்த்து, அரைப்படி சுத்த நீர்விட்டு அரைக்காற்படியாகக் குறுக்கி வடிகட்டி, காலை மாலை இரு வேளையும் கொடுத்துவர, கோழைக்கட்டறும்; சளி வெளிப் படும். இருமல், இரைப்பு, சுரம் போன்றவை நீங்கும்.

## 13. கீழாநெல்லி (கீழ்க்காய் நெல்லி)

**வே. பெ :** கீழ்வாய்நெல்லி, கீழாநெல்லி, சித்தாமுட்டி.
Phyllanthus niruri, Linn. or
P. Urinaria.

இஃது இந்தியாவில் வெப்ப நாடுகளில், சதுப்பான எல்லா இடங்களிலும் வளரும்.

**ப. உ :** சமூலமும்.

**சுவை**—துவர்ப்பு, கைப்பு, புளிப்பு; **தன்மை**—தட்பம், **பிரிவு**—இனிப்பு.

**செய்கை :** வீக்கமுருக்கி—சோபாநாசனி (Deobstruent)
சிறுநீர்ப்பெருக்கி—மூத்திரவர்த்தனி (Diuretic)
துவர்ப்பி—ஸங்கோசனகாரி (Astringent)
குளிர்ச்சியுண்டாக்கி—சீதளகாரி (Cooling)

**குணம் :** இம் மூலிகையினால், வயிற்று மந்தம், தீக்குற்றத் தால் விளைந்த கேடு, கண்ணில் தோன்றும் நோய்க் கூட்டங்கள், குருதிக் கழிச்சல், நீரிழிவு, காமாலை, உடலில் உண்டாகும் வெப்பு, உடலில் ஊறிய மேகம், சப்ததாதுகத சுரம், தாது வெப்பம், நாட்பட்ட மேகப்புண் ஆகிய இவை போகும்.

மேலும் இஃது அசுத்த இரத்தம், விழிநோய், நாவறட்சி, தாபம் இவைகளையும் நீக்கும்; வாதத்தைப் பெருகச் செய்யும்.

பல பிணிகளினால் நொந்து உடல் மெலிந்து வெளுத்திருக்குங்கால், கீழாநெல்லியை அரைத்து, நல்ல பசுவின் தயிரில் கலந்து நாளும் கற்ப முறையின்படி உண்ண மேக வெட்டை முதலிய நோயகள் யாவும் போம்.



படம் 29. கீழ்வாய் நெல்லி

**இலை**

**வ. கு :** இப்பூண்டின் இளங் கொழுந்தைக் குடிநீரிட்டுச் சீதக் கழிச்சலுக்குக் கொடுக்கலாம்.

இலையை உப்புச் சேர்த்தரைத்துச் சொறி, சிரங்குகளுக்குப் பூச, அவை போகும்.

உப்பில்லாமல் அரைத்துச் சதைச் சிதைவுக்குப் பற்றிடலாம்.

**இலை, வேர்**

இவ்விரண்டையும் குடிநீரிட்டுச் சுரங்களுக்குச் சூட்டோடே கொடுக்கக் காய்ச்சல் தணியும்.

**வேர்**

வேரைக் கழுநீரில் அரைத்துக் கலக்கிப் பெரும்பாட்டிற்குக் கொடுக்கச் சுகமாகும்.

வேரைப் பச்சையாய் 17 கிராம் எடுத்து அரைத்து, பாலில் கலக்கிக் கொடுக்கக் காமாலை நோய் நீங்கும்.

## 14. வல்லாரை

**வே. பெ :** சண்டகி, பிண்டீரி, யோசனவல்லி.

Hydrocotyle asiatica, Linn.

Eng : Indian Pennywort.

இப் பூண்டு, இந்தியாவிலுள்ள பல நீர்நிலைகளுக்கருகிலும், தோட்டங்களிலும் பயிராகும். இது சிறந்த பூண்டு வகைகளுள் ஒன்று. இதை அளவுடன் வழங்கப் பெரும் பயனை அளிக்கும் ; அளவிற்கு மிஞ்சினால், தலைசுற்றல், தலைவலி இவைகளை உண்டாக்கும்.

ப. உ : முழுப்பூண்டும்.

சுவை—துவர்ப்பு, கைப்பு, இனிப்பு ; தன்மை—தட்பம், பிரிவு—இனிப்பு.

செய்கை : உடற்றேற்றி—வியதாபேதகாரி (Alterative)
உரமாக்கி—பலகாரி (Tonic)
சிறுநீர்ப்பெருக்கி—மூத்திரவர்த்தனி (Diuretic)
வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant)
ருதுவுண்டாக்கி—ருதுவர்த்தனி (Emmenogogue)

குணம் : வாய்ப்புண், கழிச்சல், குருதிக் கழிச்சலால் பிறக்கும் வயிற்றுக் கடுப்பு ஆகியவை நீங்கும்.



படம் 30. வல்லாரை

மேற்கண்ட நோய்களே அன்றி, அடியிற் காணும் நோய்களையும் போக்கும். சுரம், இளைப்பு நோயினாலுண்டாகும் தொண்டைக் கம்மல், வெறி, யானைக்கால், விதை வீக்கம், நெறிக் கட்டி, மேகப்புண், காயம், கட்டி, வீக்கம், புடை, கண்டமாலை, மார்பாணி, சூதகக்கட்டு.

வ. கு : எல்லாச் சுரங்களுக்கும் இதன் இலை, துளசியிலை, மிளகு இவைகளை ஓர் அளவாகத் தூக்கி அரைத்து, 65 மி. கிராம் எடை மாத்திரை செய்து, காலை, மாலை, இரண்டு வேளையும் கொடுத்துவர, அவைகள் தணியும்.

குழந்தைகளுக்குண்டாகும் படைகள், குருதிக்கேடு, நரம்பு நோய்கள் முதலியவைகளுக்கும், முதிர்ந்த வயதுடையோர்களுக்குண்டாகும் மேகம், வயிற்று நோய், சுரம் முதலியவைகளுக்கும், இலைச்சாறும், பசுவின் பாலும், அதிமதுரத்தூளும் சேர்த்துக் கலந்து கொடுத்து வர, மிகுந்த பலன் தரும்.

குழந்தைகளுக்குண்டாகும் சீதக்கழிச்சல், குருதிக்கழிச்சல், வயிற்றுக்கடுப்பு முதலிய கோளாறுகளுக்கு, 3, 4 இலைகளை எடுத்துச் சீரகம், சருக்கரை கூட்டி அரைத்துக் கொடுத்தும், கொப்பூழ்மீது பற்றிட்டும்வர, நோய்கள் நீங்கிக் குழந்தைகள் சுகப்படும்.

குருதிக் கொதிப்பாலுண்டாகும் கொப்புளங்களைப் போக்க, இலைச் சுரசத்துடன் கடப்பம் பட்டை, கருஞ்சீரகம் சேர்த்தரைத்து நெய் விட்டுக் குழைத்துப் பூசி வரலாம்.

வல்லாரை இலையைக் கற்பமாய் உண்ணில், அறிவு துலங்கும். வல்லாரைச்சாற்றில், உப்பும், சாதிபத்திரியும் கூட்டிக் கொடுக்க, பெருவயிறு வல்லை முதலிய பிணிகள் போம்.

## 15. துளசி

**வே. பெ :** அரி, இராமதுளசி, கிருஷ்ணதுளசி, திருத்துழாய், துளவு, குல்லை, வனம், விருந்தம், துழாய், மாவலங்கல், கஞ்சம், கிருடமூலி.

Ocimum Sanctum

Eng : Holy Basil

இது நாடு முழுவதும் பயிராகும் ஒரு மணமுள்ள செடி. இதற்கு மணமும் காரமுமுண்டு. இஃது ஏறக்குறைய 2—3 அடி உயரம் வளரும். இதில் நற்றுளசி, கருந்துளசி, செந்துளசி, நாய்த்துளசி, நிலத்துளசி, கல்துளசி, முள்துளசி எனப் பலவகைகள் உண்டு.

**ப. உ :** இலை, விதை.

சுவை—கார்ப்பு, தன்மை—வெப்பம், பிரிவு—கார்ப்பு.

**செய்கை**

**இலை :** வெப்பமுண்டாக்கி—உஷ்ணகாரி (Stimulant)
கோழையகற்றி—கபஹரகாரி (Expectorant)
வியர்வைபெருக்கி—ஸ்வேதகாரி (Diophoretic)

**விதை :** உள்ளழலாற்றி—அந்தர் ஸ்நிக்தகாரி (Demulcent)

துளசியை உட்கொள்ளில், அது பேய்போல் ஆடுகின்ற வெறிநோயைப் போக்கும். மூக்கிலிருந்து நீர்பாயும் (பீனச) நோயைத் தடுக்கும். உடலின் வெப்பத்தை அகற்றும்.

துளசியிலைச் சாற்றால் சுரநோய்க் கட்டமெல்லாம் ஒழிந்து போம்.



படம் 31. துளசி

திருமாலின் மாலையாகிய துளசி, வளிக்குற்றத்தைத் தன்னிலைப்படுத்தி ஐயக் குற்றத்தைக் குறைத்து, அதனால் உண்டாகும் பிணிகளையும் நீக்கி உடலைக் காக்கும்.

**நற்றுளசி** (nul–thulasi)

**குணம் :** இதனால், ஐயம். வயிற்றுளைச்சல், எலும்பைப் பற்றிய சுரம், நீர்வேட்கை, மாந்தம், சுவையின்மை ஆகியவை போம். வெப்பத்தைத் தரும்.

**நிலத்துளசி** (Nila-th-thulasi)

குணம் : இதனால் கணச்சூடு பல அழல் நோய்கள், ஐய சுரம், அழல் சுரம், சிறு குழந்தைகட்கு முலைப்பாலால் வரும் மாந்தம், மாந்தசுரம் இவை போம்.

**நாய்த்துளசி** (Naith-thulasi)

குணம் : குத்திருமல், கோழை, முக்குற்றம் இவைகளைப் போக்கி உடலைக் காக்கும்.

இத் துளசியின் ரசம், கற்கம் இவைகளை உட்கொண் டாலும், வேரின் ரசத்தை நல்லெண்ணெயுடன் கூட்டித் தைல மாய் உபயோகித்தாலும் பயித்தியம், வாதப்பிணி, கபப்பிணி, சன்னி முதலியவை விலகும்.

**கல்துளசி** (Kal-thulasi)

குணம் : இது தீச்சுரம், கட்டி, வண்டுகடி, காணாக்கடி. கோழையைத் தள்ளுகின்ற ஐயசுரம் இவைகளைப் போக்கும்.

**முள்துளசி** (Mul-thulasi)

குணம் : இதனால் எலிநஞ்சு, வெட்டுப்புண், கபம் நீங்கும். நஞ்சுகள் கிளைக்காது.

**செந்துளசி** (Chen-thulasi)

குணம் : இதனால் விடம், ஐயப்பெருக்கு, முக்குற்றம் இவைகளாலுண்டாகும் நோய்கள் போகும்.

**கருந்துளசி** (Kharun-thulasi)

குணம் : இதனால் இருமல், இரைப்பு, நெஞ்சிற் கோழை சேருவதனாலுண்டாகும் குறுகுறுவென்கிற ஒலி, வயிற்றுப்புழு, இருமலினால் நேரிடுங்கேவல், மார்புச்சளி, சூலை, நஞ்சு, முப்பிணி இவை நீங்கும்.

மேற்கூறிய துளசி வகைகளுக்கெல்லாம் வழக்குகள் ஒன்று போலேயாகும்.

வ. கு : துளசி இலையைப் பாலிலிட்டுக் காய்ச்சியுண்ணப் பாலிலுண்டான குற்றங்கள் விலகும். ஐயத்தைச் சேர்க்காமல் தடுக்கும்.

இலையை உலர்த்திப் பொடித்து மூக்கிலிடப் புழுக்கள் வெளிப்படும்.

இதைப் பிட்டவியல் செய்து சாறெடுத்து, சிறிது கோரோசனை கூட்டிச் சிறு குழந்தைகட்குப் புகட்ட, இருமல் தீரும். ஐயக்கட்டு, மாந்தம், கணச்சூடு தணியும்.

இதைத் தண்ணீரில் சேர்த்துக் காய்ச்சி வியர்வை பிடித்தாலும், தலைமுழுகச் செய்தாலும் ஐயம் நீங்கும்.

துளசி இலையை நம் மக்கள் திருமால் வணக்கத்தில் நீரிலிட்டும் தனித்தும் வழங்குவதுண்டு. அன்றியும், மாலையாகத் தொடுத்துக் கடவுளுக்கு இடுவதுண்டு. அந்நீரையும் இலையையும் உட்கொள்வதால், கோழை ஒழிவதுடன், அஃது உடம்பை வளர்க்கும் என்னும் கொள்கையும் உண்டு.

விதையைக் குளிர்ந்த நீரிலரைத்து உண்ணில், அது மண்குத்தி நோய் என்னும் பிள்ளை பெற்றபின் அடிவயிற்றுள் உண்டாகும் குத்தலையும், குத்திருமல், வெள்ளை முதலிய நோய்களையும் போக்கும்.

## 16. பறங்கிப்பட்டை

**வே. பெ :** மதுஸ்மிகம், மதுஸ்மீகி, சீனப்பட்டை, பறங்கிச் சக்கை.

Smilax chinensis,
Eng : China root

இது சீனா, ஜப்பான் முதலிய தேசங்களுக்குரியதே ஆயினும், இந்தியாவிலும் ஏராளமாய்ப் பயிரிடப்படுகின்றது. கடைகளில் சாதாரணமாய் விற்கப்படும்.

ப. உ : கிழங்கு

சுவை—இனிப்பு, தன்மை—தட்பம், பிரிவு—இனிப்பு.

**செய்கை :** உடற்றேற்றி—வியதாபேதகாரி (Alterative)
மேகப்பிணிவிலக்கி (Antisyphilitic)
காமம்பெருக்கி—காமவர்த்தனி (Aphrodisiac)
தூய்மையாக்கி—மலினநிவர்த்தனி (Depurative)

**குணம் :** இதனால் நீர்வேட்கை, பற்பல வளிநோய், புண், பிளவை, நீரிழிவு, கடிவிடம், சிரங்கு, மூலமுளை, முடவாதம், குறைநோய், ஐயம், பகந்தரப்புண், வாந்தி இவை நீங்கும். ஆண்மை உண்டாம்.

வ. கு : இதைப் பொடி செய்தேனும், குடிநீரிட்டேனும் கொடுத்துவர, மேற்கண்ட நோய்கள் போம்.

**பறங்கிப்பட்டைச் சூரணம்**

இதனால் புண், கரப்பான், சூலை, வெட்டை, மந்தம், அதிகக் கழிச்சல், கிராணி, உப்புசம், வயிற்றிரைச்சல் தீரும்.

# 2. விலங்கியல்

உலகிலுள்ள பொருள்கள் யாவும் இயங்குபொருள், இயங்காப்பொருள் என இருபாகுபாடுகளில் அடங்கும். அவற்றுள் மருத்துவத்துக்கு உதவாதது ஒன்றும் இல்லை. இங்கு, பெருவாரியாகச் சித்தர்களால் மருத்துவ முறைகளுக்கும், கற்ப முறைகளுக்கும், வேதியியல் துறைகளுக்கும் கையாளப்பெற்று வந்தவற்றுள் சில இயங்கியல் பொருள்களைப்பற்றிப் (விலங்கினங்களைப் பற்றி) பின்வரும் தலைப்புகளில் சிறிது காண்போம்.

சித்த மருத்துவம் பயில ஆர்வமுள்ளவர்களுக்கு இஃது ஒரு தொடக்க நூலாக அமையுமென்பது என் கருத்தாகும்.

**மருந்திற்குதவும் விலங்கினங்கள்**

## 1. அட்டை

**(Hirudu Medicinalis—Speckled Leech)**

இஃது ஆழமில்லாததும் ஆழமுடையதுமான தெளிந்த நல்ல நீரில் அல்லி, நெய்தல், கொட்டி முதலிய மணமுள்ள செடிகள் இருக்குமிடங்களில் கிடைக்கும்.

மற்றும் இது, மணலின் கீழ், மறைவாக ஒதுங்கிக் கிடப்பதும் உண்டு. இவ்வட்டையைப் பிடித்து முக்கால் பாகம்

நீருள்ள வாயகன்ற கண்ணாடிப் புட்டியில் விட்டு, அந்நீரில் உணவுக்காகச் செவ்வல்லி, கொட்டி, பசுமஞ்சள் இவற்றின் கிழங்குகளிலொன்றை அரைத்துச் சேர்த்து, இவ்வட்டை பற்றிக்கொண்டு உறங்க இலைகள் இட்டுப் புட்டியின் வாயை



படம் 2—1. அட்டை

ஒரு மெல்லிய துணியால் மூடி, அடிக்கடி நீரை மாற்றிக் கொண்டு வந்தால், இது பல நாள்கள் உயிருடன் வாழும். சிறிய உருவமுள்ள அட்டையே மருத்துவத்திற்கு நன்றாகப் பயன்படும்.

(1) நல்ல அட்டை, (2) தீய அட்டை, (3) சாதாரண அட்டை என இவ்வட்டையை மூவகையாகப் பிரிப்பர். இவற்றுள் :

**(1) நல்ல அட்டை நால்வகைப்படும் :**

முதல் வகுப்பு : வெண்மையும் சிறிது பொன் நிறமும் பொருந்தியிருக்கும்.

இரண்டாம் வகுப்பு : செங்கழுநீர் நிறமாயிருக்கும்.

மூன்றாம் வகுப்பு : பவழ நிலத்தையும் அரிசியின் உருவத்தையும் பெற்றிருக்கும்.

நான்காம் வகுப்பு : பச்சை அல்லது எலுமிச்சம் பழ நிறமாகும்.

**(2) தீய அட்டை :** கருநிறம், கருஞ்சிவப்பு நிறம் அல்லது வானவில் போன்ற நிறம் ஆகிய பல நிறங்களைப் பெற்றிருக்கும்.

**(3) சாதாரண அட்டை :** பொன்நிறத்தில் கரு நிறம் பொருந்தியிருக்கும். நிற்க, அட்டைகளுக்குத் தனிவெள்ளை, மிகுநீளம், பொன்மை, கறுப்பு முதலிய நிறங்கள் பொருந்துவன தேசகுணம் என்பர். சாதாரண அட்டை 5 செ. மீ. முதல் 10 செ. மீ நீளமுள்ளதாய், சிறிது கூர்மையான முனைகளுடன் புறத்தோலில் 6 நீள்கோடுகளுடையதாய், குறுக்குச் சுருக்கங்

களையும் பெற்றிருக்கும். அட்டைக்குப் பல் மூன்று ; தோலடுக்கு ஐந்து ; முகம் பச்சை அல்லது சிவப்பு ; பக்க மிரண்டிலும் பருத்த நரம்பு இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

ஆங்கிலச்சீவநூல்கள், அட்டையில் ஆண், பெண் தனியாயில்லை என்று கூறினும், நம் நூல்கள் ஆண் பெண் தனித்தனி உண்டென்றே கூறுகின்றன.

இதனை, 'ஆண்மிகில் ஆணும், பெண்மிகில் பெண்ணும்' என்னும் அடியால் உணரலாம். இவற்றுள் ஆண் பெண் அறிய தாமரையையும் கொட்டியையும் நீரிலிட்டு அட்டையை விடின் ஆண் தாமரையைச் சேரும். பேடு கொட்டியைப் பற்றும். இச் செயலினால் இனம் கண்டுகொள்ளலாம். நிற்க, நண்டு தவளை நீர்ப்பாம்புகளையுடைய நீர், ஓட்டமில்லா நீர் நிலை, சருகூறிய நீர் இவைகளில் பிறந்த அட்டை மருத்து வத்திற்காகாவாம்.

வீக்கம் நீக்கும் செய்கைக்காக நரளத்தைக் கீறி இரத் தத்தை வெளிப்படுத்தல் போல அட்டையை இரத்தத்தை வெளிப்படுத்த உபயோகிப்பது வழக்கம். அடிபட்ட வீக் கங்கள், கட்டிகள், தோல் என்பு போன்ற உறுப்புகளைப் பற்றிய வீக்கங்கள் ஆகியவற்றுக்கு அவ்வவ்விடங்களில் அட்டையைவிட்டு இரத்தத்தை வெளிப்படுத்த அந்நோய்கள் தீரும். ஓர் அட்டை சுமார் 120 துளி இரத்தம் வரை இழுக்கும் வன்மை உடையது. அட்டை உறிஞ்சுவதனால் 12 அங்குலம் வரை உள்ள இரத்தம் வெளிப்படும்.

அன்னம் நீரைப் பிரித்துப் பாலைப் பருகுவதுபோல அட்டையானது விடநீரைப் பருகி இரத்தத்தைச் சுத்திசெய்யும். ஒரே சமயத்தில் 4 அல்லது 0 அட்டைகளுக்குமேல் விடுவ தில்லை.

## 2. ஆமை

### (Chelonia—Turtle Tortoise)

ஆமை, மேலே ஓடு பொருந்தியுள்ள ஒருவகை நீர்வாழ் உயிரி. நீர் வற்றிய காலத்து இது மணலில் புதைந்து கிடக்கும்.

ஆமையைக் கூர்மம், கூனன், கச்சபம், கமடம், கமட தாரி என்னும் மாற்றுப் பெயர்களினாலும் அழைப்பர்.

ஆமை பலவகைப்படும். அவை நீர் ஆமை, நில ஆமை, கடலாமை, பறையாமை என்பன. இவற்றுள் முன்கூறப் பட்டதே மருத்துவத்தில் பயன்படுகின்றது. இஃது அதிகமாகத் தென் இந்தியாவின் கடற்கரைகளிலும், மன்னார் குடாவிலும் கிடைக்கின்றது. நில ஆமை கருமை நிறத்தை உடையது.



படம் 2 – 2. ஆமை

கடலாமை நோக்கினால் குஞ்சுபொரிக்கும் உயிரினங் களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

சிறப்பாக இதன் ஓட்டைப் பற்பம் செய்து குழந்தைகளின் பிணி நீக்கப் பயன்படுத்துகின்றனர். முட்டை, கறி, இரத்தம் முதலியன உணவுப் பொருளாகப் பயன்படுகின்றன.

## 3. எரிவண்டு

**(Mylabris Sps.**
**No Colepters Telinifly,**
**Blistering Beetle, (Airtharioles)**

கண்ணிலடிக்கும் கறுப்பு வண்டு. ஓரங்குல நீளம், ½ அங்குல அகலம், ஒருவிதமான மஞ்சள் நிறம் வாய்ந்தது; மேலே 3 வரிகளும், 3, 4 புள்ளிகளுமிருக்கும்; பட்டவிடத்தில் எரிச்சலுண்டாகிக் கொப்புளிக்கும். இதைச் சாதாரணமாய் வெண்டைச்செடியில் காணலாம். இது கண் விழியில் அடித்து வேதனையையுண்டாக்கும். இது பட்டவிடமெல்லாம் எரிச் சலையுண்டாக்குவதால் இதற்கு இப்பெயர்.

நமது நாட்டில் அநேகவித எரிவண்டுகளுண்டு. அதைப் போலவே ஐரோப்பாவிலும் எரிவண்டுகளுண்டு. அவற்றி னின்றுதான் 'அக்கினப் பிளாஸ்திரி' என்று சொல்லும் எரி வண்டுக் களிம்பு செய்வதுண்டு. தமிழ் மருத்துவத்தில் இவ் வினத்தைப் புள்ளிவண்டு, கொழுஞ்சியடிவண்டு, குருவண்டு,

குழிவண்டு, நீரிற் சுழல்வண்டு, கழுதைவண்டு என்னும் ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ள செய்திகளும், அவற்றை வாதமுறையில் பயன்படுத்தும் விதங்களும் கூறப் பட்டுள்ளன.

எரிவண்டுகளைக் காலை அல்லது மாலை வேளைகளில் சேகரித்துக் காடிநீர் ஆவியில் வேகவைத்து, வெயிலில் நன்றாய்க் காயவைத்துக் காற்று நுழையாத குப்பிகளில் அடைத்து வைக்கக் கெடாமல் இருக்கும்.

விரணங்களுண்டாக்க எரிவண்டுக் களிம்பு, எரிவண்டுப் பிளாஸ்திரியைப் பயன்படுத்துகின்றனர். முடிவளர்க்கும் தைலங்களில் எரிவண்டுகளிலிருந்து எடுக்கும் சத்தைச் சேர்க் கின்றனர்.

## 4. ஓணான்

### (Calotis – Blood Sucker – A Common Agamoid Lizard)

ஓணான், ஒந்தி இதன் தலை சிறியதாகவும், சிறிது சப்பையாயுமிருக்கும் ; நாக்குத் தடித்துள்ளது ; வால் நீளம் ; நுனியில் கூர்மை ; உடம்பு முழுவதிலும் செதில்கள் பாய்ந்துள்ளன. பற்கள் தாழ்வாயையொட்டியுள்ளது. இது தனக்குத்தானே நிறத்தை மாற்றக்கூடிய தன்மையுள்ளது ; அன்றியும் இதற்குத் தலை எப்பொழுதும் ஆடிக்கொண்டே இருக்கும். ஆகவே இதற்கு இப்பெயர். இதில் அநேக வகை களுண்டு. அடியிற் கண்டுள்ளவை தென்னிந்தியாவில் அகப்



படம் 2 – 3. ஓணான்

படக்கூடிய முக்கியமான இனங்கள் : (1) ஓணான், (2) காட் டோணான், (3) சீத்தியோணான், (4) சிவப்போணான், (5) பச்சையோணான். (6) வேலியோணான், (7) கரும் புள்ளியோணான், (8) மரவோணான், (9) மலையோணான்,

(10) தொத்தோணான். இவற்றில் பெரும்பாலானவை பூச்சி களைத் தின்னுகின்றன. சில தாவர உணவை அருந்து கின்றன.

தமிழ் மருத்துவத்தில் இதன் இரத்தத்தைத் துளிக்கணக்கில் பிறந்த குழந்தைக்குக் காணும் கிரந்தி நோய்க்கும், இதனின்று தயார் செய்யும் தைலத்தை வலிப்பு நோய்க்கும் இளகத்தை வீரிய விருத்திக்கும் பயன்படுத்துகின்றார்கள்.

## 5. கஸ்தூரி

### (Moschus Moscaiferus—Musk)

இப் பொருள் மார்க்கம், மார்ச்சாரி, மான்மதம், நாபி, மிருகநாபீ என்னும் வேறு பெயர்களினாலும், பிற மொழிகளில் கஸ்தூரி என்னும் பெயரினாலும் வழங்கப்படுகிறது. இப் பெயர், பொதுவாய்க் கஸ்தூரி மணமுள்ள தாவர சங்கமப் பொருள்களையும், சிறப்பாய் (திபெத்து, அஸ்ஸாம், காஷ் மீரம், இமயமலை, சீனா, ரஷ்யா இவ்விடங்களில் அதிகமாய்



படம் 2—4. கஸ்தூரி மான்

வசிக்கின்ற) கஸ்தூரி மானின் ஆண்குறி மலருக்கும் மேல் தோலுக்கும் இடையே உண்டாம் கழிவுப்பொருள்களையும் குறிக்கும். பெண்மானை வயப்படுத்தும் பொருட்டு, வலிமையும் இளமையும் உடைய ஆண்மானுக்குக் குளிர் காலத்தில் இஃது உற்பத்தியாகின்றது. இக்கழிவுப்பொருள் ஒரு

மெல்லிய தோலால் மூடப்பட்டிருக்கும். ஒரு மானினின்று முக்கால் முதல் ஒன்றரைப் பலம் (26—52.5 கிராம்) வரை கிடைக்கும். இதன் மணம் நெடுந்தூரம் பரவும் தன்மை உடையது. ஆதலினால் வேடர் வேட்டையாடும்பொழுது இம் மணத்தால் நரம்புத் தளர்ச்சியடைந்தும், கண்ணொளியும், காதோசையும் குன்றியும் வருந்துகின்றனர். இம் மான் குளிர் காலம் கழிந்தவுடன், காற்குளம்பினால் பையை உதைத்துக் கஸ்தூரியைச் சிந்த வைக்கிறது. இது கிடைத்தலரிது. ஆனால் சிறந்தது. பல உயிரினங்களின் கழிவுப்பொருளும், பல தாவரவினமும், இதன் மனத்தைப் பெற்றிருக்கின்றன. இவற்றின் உதவியால் செயற்கைக் கஸ்தூரி செய்து மணப் பொருள்களுக்குப் பயன்படுத்துகின்றனர். தேவையின் பொருட்டால், உலர்ந்த குருதி, கல்லீரல், மொச்சை, கோதுமை, பார்லியரிசி, இவற்றைக் கஸ்தூரியுடன் கலக்கின்றனர்.

இதைச் சோதிக்கப் பல முறைகள் உள. ஒரு நூல் கயிற்றைப் பெருங்காயத்திலிட்டு இழுத்துப் பிறகு கஸ்தூரியி லிட்டு இழுக்கப் பெருங்காயத்தின் மணமிருந்தால் போலிச் சரக்கென்று தள்ளவும். இச்சோதனையைப் பாஞ்சாலத்தில் கையாளுகின்றனர்.

கஸ்தூரி நமது நாட்டில் எல்லா மருத்துவர்களாலும் கையாளப்படும் மிக்க பயனுடைய பொருள். இது சாதாரண மாய் உடம்பின் தாதுக்களுக்குப் பலத்தையும், உற்சாகத்தை யும் கொடுத்து உடம்பின் வலிப்பைத் தடுத்து நரம்புகளைப் பலப்படுத்தி இளைப்பு, சோர்வு, தாகம், அசதி முதலிய துர்க்குணங்களை நீக்கி முகப்பொலிவையும் உண்டுபண்ணும். மற்றும் தமிழ் மருத்துவர்கள் இதனைத் தனியாய்ப் பயன் படுத்துவதோடு மற்றைய சரக்குகளுடன் சேர்த்தும், தைலம், மெழுகு, மாத்திரை முதலியவைகளாகச் செய்தும் நோய்க்குத் தக்கவாறு அனுமானித்தும் தொன்றுதொட்டுப் பயன்படுத்தி வருகின்றனர் ; பிள்ளைப் பிணிகளுக்கும் தாய் ஈன்ற பிறகும் வழங்குகின்றார்கள்.

கஸ்தூரி உற்பத்தியாகின்ற மானினம் அழிந்து கொண்டு வருவதைத் தவிர்க்கும் பொருட்டு மானைக் கொல்வது தடை செய்யப்பட்டிருப்பதால் இச் சரக்குக்கு அதிக விலை, தோலாவிற்கு ஆயிரக்கணக்கில் கொடுப்பதாயிருந்தாலும் உண்மைச் சரக்குக் கிடைப்பதில்லை.

## 6. கோரோசனம்

### (Felbovinum Purifactum Purified—Oxgall Oroxbile)

இப் பொருள் ரோசனம், கோமந்திரம், வச்சலமணி, ஜாதி என்னும் வேறு பெயர்களினாலும், வழங்கப்படுகிறது. பொதுவாய் மிருகங்களின் பித்தைக் குறிக்கும்பொழுது ரோசனம் என்றும், சிறப்பாகப் பசுவின் பித்தைக் குறிக்கும்பொழுது கோரோசனமென்றும் (கோ + ரோசனம் = கோரோசனம்), ஆட்டின் பித்தைக் குறிக்கும்பொழுது மைரோசனமென்றும் வழங்கப்பட்டிருக்கிறது. உலக வழக்கில் 2 ரோசனத்தைக் கோரோசனை என்று வழங்குவதற்குக் காரணம் பெரும்பாலும் பசுவின் ரோசனமே மருந்துகளில் கையாளப்படுவதனால்தான்.



படம் 2—5. கோரோசனம்

கல்லீரலினின்றும் உற்பத்தியாகிப் பித்துப்பையில் சேரும் பித்தை மூன்றிலொன்றாகச் சாராயத்தைக் கலந்து முறைப்படி சிறுகவைத்துப் பெருமாத்திரையாய் உருட்டிக் கொள்ளுதல் மரபு. எருமை, மான், காட்டுக் கரடி, மயில், மீன்கள் இவற்றின் பித்தைப் பயன்படுத்துவதும் உண்டு. ஆட்டின் வயிற்றில் பிறப்பதையும், பசுவின் வயிற்றில் பிறப்பதையுமே பெரும்பாலும் பயன்படுத்துகின்றனர்.

கோரோசனை பல மாதிரிகளாகவும், பெரிதாகவும், சுரசுரப்பாகவும் அநேக நிறங்கள் கலந்ததாகவும் உண்டு. இக் கோரோசனை சிறு கசப்பாகவும் தித்திப்பாகவும் மணமுடையதாகவும் இருக்கும். பசுவின் ரோசனையோ தட்டையாகவும் வட்டமாகவும், மேற்பக்கம் மிருதுவாகவும், பளப்பளப்பாகவும் நிறங்கள் பல வண்ணமாகவும், பொதுவாகக் கரும்பச்சையாகவும் இருக்கும். இதில் கடுகளவு வெற்றிலைச் சாற்றில் அல்லது தாய்ப்பாலில் கொடுக்கச் சுரம், குளிர்சீதளம், நீர்க்கோவை, இசிவுமாந்தம் இவற்றைப் போக்கும். இதைக் கடைச்சரக்குகளோடு கூட்டி மாத்திரையாகச் செய்தும்

வழங்குவார்கள். இம்மாத்திரையைக் கழாயத்தில் இழைத்துக் கொடுக்கக் குழந்தைகள் பிணிகளைத் தீர்க்கும். உருக்கிய நெய்யில் கலந்து மூக்கிலிடத் தலைவலியைக் கேட்கும்.

காட்டிலிருக்கும் வெள்ளாட்டினின்று (Goat Bezoar) எடுக்கப்படும் ரோசனை புரைபுரையாக இருக்கும். இது இராசக் கருவிகளுக்கு மிக்க வலுவையுண்டாக்கி, உடம்புக்குப் பலத்தைக் கொடுக்கும், இதய நோய்களையும் குணப் படுத்தும்.

ஊசியைப் பழுக்கக் காய்ச்சி இதனுள் விட்டு எடுக்க ஊசியின் மேல் மஞ்சள் நிறம் படிந்து மஞ்சட்புகை வெளிவந்தால் நல்ல சரக்கென்றும் கறுத்தால் அன்றென்றும் தெரிந்து கொள்ளலாம்.

## 7. சங்கு

**(Turbinella Rapa or Xanchus Pyrum**
**Or. Gastropoda**
**Conch, Conch Shell)**

இது நந்து, சுத்தி, நாகு, வளை, கம்பு, கோடு, வாரணம், வெள்ளை, வண்டு, இடம்புரி, சங்கம், தேவதத்தம் முதலிய வேறு பெயர்களினாலும் வழங்கப்படுகின்றது. இஃது அதிக மாய் இந்துமாக்கடலின் கரையோரங்களில் கிடைக்கின்றது. சங்கில் பலவகைகள் உண்டு: (1) சலஞ்சலம், (2) முட்சங்கு, (3) பட்டி அல்லது சிறுசங்கு, (4) சூற்சங்கு, (5) தாழஞ்சங்கு, (6) வலம்புரிச் சங்கு, (7) இடம்புரிச் சங்கு, (8) பாலடை சங்கு, (9) உவர்ச் சங்கு, (10) நீர்வாழ்சங்கு, (11) முள்ளுச் சங்கு, (12) பாற்சங்கு, (13) வெண்சங்கு, (14) பச்சைச் சங்கு, (15) ஊதுசங்கு, (16) கிருஷ்ண சங்கு, (17) தீர்த்தச் சங்கு, (18) வரிச்சங்கு, (19) பாஞ்சசன்னியம், (20) தொனிச் சங்கு, (21) கடற்சங்கு, (22) கண்டகச் சங்கு, (23) கோலச் சங்கு.

நீர்வாழ் சங்கு, சங்கு குளிப்போர்களால் மன்னார்குடாவில் யாழ்ப்பாணத்திற்கு எதிரில் மூழ்கி எடுக்கப்படுகின்றது. சங்கு குளித்தெடுக்கும் தொழில் தமிழகப் பழங்கால மன்னர்கள் காலத்திலிருந்து அரசுதுறை வாயிலாகவே நடைபெற்று வரு கின்றது. 1967 ஆம் ஆண்டு முதல் இத் தொழில் மீன் வளத்

துறையின்கீழ் இயங்கலாயிற்று. தமிழ்நாட்டில் எடுக்கப்படு கின்ற சங்குகள் மூவகைப்படும். அவை சோழி, பட்டி, இருபிறவி. முதல் இனச் சங்குகள் திருநெல்வேலி மாவட்டக் கடற்ககரையிலும் இராமநாதபுர மாவட்டத்துத் தென்மேற்குக் கடற்கரையிலும் கிடைக்கின்றன. இவற்றுள் திருநெல்வேலிக் கடற்கரையில் கிடைப்பவை மிகச் சிறந்தவையாகும்.

ஆண்டுதோறும் அக்டோபர்த் திங்களிலிருந்து மேத் திங்கள்வரை சங்கெடுப்பதற்கு உகந்த பருவமாகும். இம் மாதங்களில் கடல் கொந்தளிப்பின்றி, நீரும் தெளிந்திருக்கும். காற்றடிக்கும் நிலைக்கேற்ப மீன்வளத் துறையினர் தோணி களை இழுத்துச் செல்ல வசதியளிக்கின்றனர்.



படம் 2 –6. சங்கு

திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி மா வட்டத்தைச் சார்ந்த சற்றேறக்குறைய 1000 முழுக்காளிகளை அமர்த்திச் சங்கெடுக்கின்றனர். 1978 நவம்பர்த் திங்களில் சங்கு குளித்தபோது ஏறக்குறைய 600 பேர் தீவிரப் பங்கு கொண்டனர். இவர்கள் சங்கெடுக்கும் நாள்களில் நாளொன் றுக்குச் சராசரி ரூ. 50/ முதல் ரூ. 100/- வரை ஊதியம் பெற்றனர். எடுக்கப்பெற்ற சங்குகள் அனைத்தையும் அரசு பெற்றுக் கொண்டு தரத்திற்குத் தகுந்தாற் போல் சங்குக் கிடங்கிலிருந்து ஊதியம் கொடுக்கின்றது. வளர்ச்சியில்லாத உயிருள்ள சங்குகள் திரும்பக் கடலில் விடப்படுகின்றன. 36 அடி முதல் 72 அடி வரை ஆழமுள்ள இடங்களில் சங்கு எடுக்கப் படுகின்றன. சங்குகளைக் கொண்டு செய்யப்படுகின்ற வளையல் முதலிய அணிகலன்களை மேற்கு வங்கப் பெண்கள் அதிகமாக விரும்புவதனால் அங்குத் தமிழ்நாட்டுச் சங்குகள் அதிகமாக விற்பனையாகின்றன. மூன்று மாதம் நடைபெற்ற

சங்குக் குளிப்பில் 7 இலட்சம் ;முழுவடிவமுள்ள சங்குகள் வாங்கப்பெற்று அரசு கிடங்கில் பாதுகாக்கப்பட்டன.

வலம்புரிச் சங்கை இந்துக்கள் மிகவும் போற்றிக் கோயில் களில் பயன்படுத்துகின்றார்கள். இது மிக அரிதாகக் கிடைக்கக்கூடியது மட்டுமன்றி விலைமதிப்பும் மிக அதிகம்.

நிற்க மருத்துவத்தில் பயன்படுத்த ஊதுசங்கு சிறந்தது. இதனைப் பற்பமாக்கி, சித்த ஆயுள்வேத மருத்துவர்கள் பயன் படுத்துகின்றனர். இப் பற்பத்தில் மிகுதியாகக் கால்சியம் கார்பனேட் இருப்பதாக ஆய்வின்மூலம் அறிகின்றோம். இப் பற்பத்தை வயிற்றுவலி, சுரம், காமாலை முதலிய பிணிகளுக்கு வழங்குகின்றனர்.

## 8. தேன்

### (Mcl Honey)

தேனீக்கள் மரஞ்செடி கொடிகளிலுள்ள பூக்களில் அமைந்திருக்கும் அமிர்தத்தைப் பருகித் தம் உடலிலுள்ள தேன் பையில் சேர்த்துக்கொள்கின்றன. அப்போது அப் பையில் இருக்கும் அமிர்தம் ஒருவித மாறுதலை அடைகின்றது. இம் மாற்றமடைந்த அப் பொருளைத் தேனீக்கள் அடையி லுள்ள அறைகளில் உமிழ்ந்து சேர்த்து வைக்கின்றன. இப் பொருளுக்குத் தேன் என்பது பெயர். தேனீக்கள் பெரும் பாலும் தேன் கூடுகளை மலை, கொம்பு, மனை, புற்று, மரப் பொந்து முதலிய இடங்களில் கட்டுகின்றன. தேன் சேகரிக்கும் வேடர்களும் வில்லியர்களும் இவ்வடைகளை முட்டை, புழு, தேனீ, மகரந்தப்பொடி முதலியவற்றுடன் சேர்த்தே பிழிந்து கடைக்காரர்களிடம் கொடுக்கின்றார்கள். ஆதலினால் அந்தத் தேன் தூய்மைகெட்டுச் சுகாதார முறைக்குப் பொருந்தாததாய் இருக்கும். தற்காலம் கூடு களமைத்து அதில் தேனீக்களைப் பழக்கி, இயந்திரங்களைக் கொண்டு மாசின்றி இறங்கும் தேனே சிறந்ததாகக் கருதப்படு கின்றது. கடைகளில் சிலர் சர்க்கரையைப் பாகு காய்ச்சி வைத்துக்கொண்டு தேன் என்று விற்பனை செய்கின்றார்கள். குடகு நாட்டில் பானைகளைத் துளையிட்டு, இலவங்கப் பட்டை வாசனை மெழுகு முதலியவற்றைப் பூசி, அரவமற்ற இடத்தில் வைத்துத் தேனீக்களை நுழையப் பழக்கித்

தேனெடுக்கின்றார்கள். தேன் கூடுகளிலிருந்து ஒழுகும் பொழுது சேகரித்தெடுத்த புதிய தேனே சிறந்ததாகும்.

தேன்கூட்டிலிருந்து எடுத்த புதிய தேன் இனிப்பாயும், தெளிவாயும், இளமஞ்சள் நிறமாயுமிருக்கும். பிறகு படிப்படியாய் உறைந்து மங்கலாகிவிடும். மலர்களுக்குத் தக்கவாறும் காலதேசத்திற்கு ஏற்றவாறும் தேனின் மணம், சுவை, குணம் முதலியன வேறுபடும். தேனில் உடலுக்குத் தேவையான இனிப்புச் சத்து உலோகச் சத்துகள், வைட்டமின் போன்ற எல்லாச் சத்துகளும் சிறு சிறு அளவில் பொருந்தியிருப்பதாகத் தற்கால அறிவியலறிஞர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.



படம் 2—7. தேனீ

நம் நூல்களில் தேன் 12 நாழிகையில் செரித்துவிடுகின்றதென்று கூறப்பட்டுள்ளது. ஆதலினால், இது விரைவில் உடலில் சேர்ந்து வலுவைக் கொடுக்கின்றது. இதனை மேனாட்டார் சிறந்த உணவாய் உடல் வன்மைக்காகவும் நலத்திற்காகவும் உட்கொண்டு வருகின்றனர்.

கடைத்தேனில் மெழுகு, தேன், ஈ, புழு, முட்டை, மகரந்தப்பொடி முதலியவை கலந்திருப்பதால் இதனைப் பயன்படுத்துமுன் நீர் இயந்திரத்தில் வைத்துக் காய்ச்சிச் சூடாயிருக்கும்போதே ஈரக்கம்பளித் துணியிலிட்டு வடிகட்டிக் கொள்ளவேண்டும்.

தேனைத் திரியில் தோய்த்துக் கொளுத்த நன்றாக எரியின் நல்ல தேன். நல்ல தேனை நாய் நக்குவதில்லை. இது பழங் குடியினர், மலைவாசிகள் செய்யும் சோதனை. தேனை இளகம் (இலேகியம்), மணப்பாகு, மெழுகு போன்ற மருந்துகள் செய்வதற்குப் பயன்படுத்துகின்றனர்.

சித்த மருத்துவத்தில் பற்பம், செந்தூரம். சூரணம், மாத்திரை, குடிநீர் போன்ற மருந்துகளுக்குத் தேன் ஒரு சிறந்த துணை மருந்தாகும். தேனினால் நீங்கும் பிணிகள் மிகுதி. தேனீ வளர்த்தலையும் தேன் சேகரித்தலையும் பற்றி எழுதப் பட்ட நூல்களில் தேனைப்பற்றிய நல்ல செய்திகள் கிடைக் கின்றன.

ஐரோப்பாக் கண்டத்தில் வசிக்கும் மக்களுள் பெரும் பாலோர் தங்களுடைய அன்றாட உணவுப்பொருள்களுள் இதையும் ஒன்றாகச் சேர்த்துச் சாப்பிட்டு வருகின்றனர். இங்கிலாந்தில் செலவாகும் தேவையைக் கணக்கிட்டால், ஆண்டுக்குத் தலைக்குக் கால் ராத்தல் தேன் ஆகிறதாம். அமெரிக்காவிலுள்ள யுனைடெட் ஸ்டேட்ஸ் கவர்ன் மெண்டார், மக்களை அதிகத் தேன் சாப்பிடும்படி பிரசாரம் செய்கின்றனராம். தேனை உட்கொள்பவர்களுக்கு மேனி யழகு அதிகப்படுமாம் ; தோலில் சுருக்கங்கள் விழாவாம். நன் முன்னோர்கள் தேனை அருந்தி வந்தால் தேகா ரோக்கியமும் நீண்ட ஆயுளும் உண்டாகுமென்று இதனைப் பானமாய் அருந்தி வந்திருக்கிறார்கள்.

இருக்கு வேதத்தில் தேனினால் செய்யப்பட்ட ஓர் இனிய பானத்தை முனிவர்கள் முதல் தேவர்கள் வரை பயன்படுத்தி வந்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முல்சம் என்னும் பானத்தை ரோமர்களும், லிப்பிடெஸ் என்னும் பானத்தை ருஷ்யர்களும், கிளாரி, பிராகெட் என்னும் பானங்களை இடைக் காலப் பிரிட்டிஷாரும் தேனிலிருந்து செய்து பயன்படுத்தி வந்திருப்பதாய் மேனாட்டு வரலாறுகள் கூறுகின்றன. தேனி லிருந்து செய்யப்படும் பீர் அல்லது ஒயினைத் தென்

ஆப்பிரிக்காவிலும், கீழ் ஆப்பிரிக்கா முதலிய இடங்களிலு முள்ள சுதேசிகள் பயன்படுத்துகின்றார்கள். நைஜீரியாவில் தேனிலிருந்தும் தினையிலிருந்தும் செய்ததொரு பானத்தை ஏழைகள் சிறப்பாகப் பருகுகின்றார்கள். இலங்கையிலுள்ள மலைவெட்டர் என்னும் வகுப்பினர் தேனை முக்கிய உணவுப் பொருளாய்ப் பயன்படுத்துவதுமன்றி, அதனை அடைமானம் வைப்பதற்கு ஆன ஜாமீன் பொருளாகவும் பயன்படுத்து கின்றனராம். கீழ் ஆப்பிரிக்காவில் சுக் என்னும் வகுப்பாரிட மிருந்து அந்நியர் நிலத்தை வாடகைக்கு வாங்கவேண்டு மானால், தேனிலிருந்து செய்த ஒருவிதப் பானத்தைக் கொடுக்க வேண்டுமாம்.

டெமோகிரிடியஸ் என்ற கிரேக்கத் தத்துவஞானி ஒருவர் தேனை வெந்நீரில் விட்டு அதிலிருந்து எழும் ஆவியை மட்டும் உட்கொண்டு பல நாள்கள் எமன் தம்மை நெருங்கவொட்டாத படி தடுத்து வந்தாராம்.

இளைஞன் ஒருவன் ஏதோ அடிபட்டதனால், 3 வாரங் களுள் 160 இராத்தல் எடையிலிருந்து 100 இராத்தல் எடை உடையவனாய் மரணத்தறுவாயில் இருந்தானாம். அவனைச் சில மருத்துவர்கள் கைவிடக்கூடியவன் என்று தீர்மானித்துச் சிகிச்சை இன்றி விட்டார்களாம். மருத்துவப் புலவர் ஒருவர் அவ்விளைஞனுக்கு ஒரு தேக்கரண்டித் தேனை அரைக் குவளைப் பாலில் கலந்து ஒரு மணிக்கொருமுறை கொடுக்கு மாறு ஏற்பாடு செய்தாராம். அதனால் அவன் பத்து நாள் களுக்குள் நலமடைந்து மூன்று வாரங்களுக்குள் பழைய நிலை யை அடைந்தானாம்.

பிரிட்டிஷ் கீழ்ஆப்பிரிக்காவிலுள்ள வாசாமியா என்னும் குலத்தினர் தங்கள் குலப்பெண்கள் பிள்ளை பெறின் தீட்டுக் கழியும் வரையில் வெந்நீர் கலந்த தேனையே உணவாகக் கொடுப்பார்களாம்.

தென்னாட்டில் அநேகத் தமிழ்க் குடும்பத்தினர், குழந்தை களின் நாவில் தேனைத் தடவி அவர்களைச் சுவைக்கும்படி செய்து வருகின்றனர். அன்றியும், தமிழ்நாட்டார் மணமக்கள் நீடூழி வாழவேண்டும் என்னும் எண்ணத்துடன், மாப்பிள்ளை யும் பெண்ணும் தம் வீடு வந்ததும் பழமும், தேனும், தயிரும் கலந்து கொடுக்கின்றனர். தமிழ்நாட்டு வேடுவர்கள் தேனும் தினைமாவும் கலந்து புசிப்பதையும், இதனைத் தேக்கிலையில்

வைத்து அருந்துவதையும் காண்கின்றோம். பக்தர்கள் பழனியில் தேன்கலந்த பஞ்சாமிருதத்தைக் கடவுளுக்குப் படைத்து, அதை அருந்தி உடல் நலம் பெறுவதைத் தமிழ் நாடறியும்.

முற்காலத்தில் எகிப்தியரும் அசிரியரும் அழுகிப்போகாமல் பல நாள்கள் வரை சவங்களைப் பாதுகாக்கத் தேனைப் பயன் படுத்தி வந்திருக்கின்றனர். அப்துல் லத்தீப் என்ற பேராசிரியர் ஒருவர், ஒரு குழந்தையின் சவத்தை அதன் தாய், முத்திரையிட்ட தேன் சாடியில் வைத்துப் பாதுகாத்து வந்த தாய்க் கூறுகிறார். இன்னும் அக்காலத்தில் கொழுப்பையும் தேனையும் இறந்தவர்களது உடலின்மேல் தடவிச் சவங்களைப் பாதுகாத்து வந்ததாய் ஹோமர் என்ற கிரேக்க மகாகவி கூறியிருக்கின்றார். இம்முறையில்தான் மகா அலெக்சாந்தரது சவமும் பாதுகாக்கப்பட்டதாம். தேன் அழுகக்கூடிய சவங்களையும் பாதுகாக்கக்கூடியதாய் இருப்பதனால் அதை உட்கொள்பவர்கள் நிச்சயம் உடல் உரம் பெறுவார்கள் என்பதிலும் ஆயுள் நீடிக்கப் பெறுவார்கள் என்பதிலும் ஐயமில்லை.

## 9. தேன் மெழுகு

### (Cera Wax)

தேனீக்கள் தேனைக் குடித்துத் தேன் மெழுகை உற்பத்தி செய்கின்றன. உழைப்பாளித் தேனீக்களின் அடிவயிற்றில் மெழுகின் பைகள் இருக்கின்றன. அப் பைகளில் மெழுகு பட்டைகள் அடுக்கடுக்காய் இருக்கும். அவற்றிலிருந்தே அவை தேனடையைக் கட்டுகின்றன. தேனடைகளைச் சேகரித்துத் துண்டு துண்டாக நறுக்கி, உட்புறம் தேங்காய் நெய் பூசப்பட்ட பாத்திரத்தில் போட்டு, அப் பாத்திரத்தை அதிகச் சூடுள்ள வெந்நீர்ப் பாத்திரத்துக்குள் வைத்தால், தேன் மெழுகு நன்றாய் உருகிப் பாகு போலாகும். பின்பு பாகை, வேண்டிய அளவில் செய்த அச்சுகளில், தேங்காய் நெய் தடவி அச்சுகளுக்கு நேராக ஒரு மெல்லிய துணியைப் பிடித்து, அவற்றில் ஊற்றவேண்டும். பாகு போன்ற தேன்மெழுகு, துணியின் மூலம் இறங்கி அச்சுகளில் விழுந்து இறுகிவிடுகிறது. பின்பு அதை அச்சுகளிலிருந்து கட்டிகளாக எடுத்து விற்பனைக்கு அனுப்புகின்றார்கள். இது வடிகட்டிய ஒழுங்கான நல்ல மஞ்சள் மெழுகாகும்.

தேன் மணத்துடன் கூடியது; நீரில் கரையாது; தேன்மெழுகு மரங்களுக்கு மெருகு பூசப்படுவதற்குமுன் பூசுவதற்கும், காலணிகளுக்கு மெருகு கொடுப்பதற்கும், துணிகளில் அச்சடிக்கும் பல உபாய முறைகளுக்கும் வார்ப்பட வேலைகளுக்கும் பயன்படுகின்றது. இதனை மருத்துவத்தில் புறமருந்தாய்ப் பயன்படுத்துகிறார்கள். இது தைலம், களிம்பு, பிளாஸ்திரி செய்யப் பயன்படுகிறது. இது வீக்கங்கள் விரணங்களை ஆற்றும்.

## 10. நண்டு (ஞெண்டு)

### (Crab— Cancer pagurus)

இது குளம், ஏரி, ஆறு இவற்றுள் சாதாரணமாக வசிக்கும், கடலிலும் இதன் இனம் உண்டு. இதைச் சாதாரணமாக ஏழை மக்கள் புசிக்கலாம். இதற்கு மருந்துக் குணமுண்டு. ஆகவே, பத்தியக் கறியாகவும் உபயோகிக்கலாம். இதை ரசமாகச் செய்து நோயாளிகளுக்குக் கொடுக்க உடம்புவலி, சீதளம், சன்னி முதலியவற்றைக் குணப்படுத்தும். இது அடியிற் காணுமாறு பலவகைப்படும். அவை :



படம் 2—8. நண்டு

(1) குள நண்டு, (2) ஆற்று நண்டு, (3) கடல் நண்டு, (4) கடுக்காய் நண்டு, (5) நீலக்காலி நண்டு, (6) ஒருகால் நண்டு, (7) செம்பாறை நண்டு, (8) தில்லை நண்டு, (9) வயல் நண்டு, (10) வெள்ளை நண்டு, (11) கறுப்பு நண்டு, (12) வானம்பாடி நண்டு, (13) பால் நண்டு, (14) பீ நண்டு, (15) சீமை நண்டு, (16) தூக்காய் நண்டு, (17) பெரு நண்டு.

நண்டு வசிக்கும் வளைத்தண்ணீர் மாறாத விக்கலுக்கும், நண்டுக் கொழுப்பு மருந்திற்கும் பயன்படும்.

## 11. நத்தை

### (Snail)

குளம் குட்டை முதலிய நீர்நிலைகளில் காணப்படும் ஒரு பூச்சிக்கூடு. இதற்குக் கண்மாய் எனவும் பெயர். இதை ஏழை



படம் 2—9.

மக்கள் தின்பதுண்டு. சுவையாயிருக்கும். இதற்கு மருந்துக் குணமுண்டு. இது மூலத்திற்கு மிகச் சிறந்தது. உடம்பிற்கு மிக்க குளிர்ச்சி தரும்.

## 12. பவழம்

### (Coral)

பவழம் கடற் பஞ்சைப் போன்று கடலின் தரையில் படிந்து கூட்டமாக வாழும் உயிரியாகும். கூடிவாழும் இவற்றுள் சில வகைகள் தாம் நற்பவழம், வெண் பவழம், செம்பவழம், ஊதாப்பவழம் ஆகியவற்றைக் கொடுக்கின்றன. சிலவகைகள் கடினமான பவழப் பாறைகளை மட்டும் கட்டுகின்றன. மற்றவை பவழம் கொடுப்பன அல்ல. பவழ மணிகளைக் கொடுப்பவற்றுக்கு எட்டுக் கைகள் உண்டு. பாறை கட்டு பவற்றுக்குக் கைகள் ஆறு அல்லது ஆறின் மடங்காக இருக்கும்.



படம் 2—10. பவழம்

பவழம் என்னும் இக் கடினப்பொருள் பவழ உயிரிகளின் கழிவுப் பொருளேயாகும். அப் பொருள் சுண்ணாம்புச் சத்தும் கரியும் (Calcium carbonate) சேர்ந்து அமைந்ததாகும், எனவே, நாம் அணிந்து அழகுகாணும் பவழமணிகள் ஓர் உயிரியிலிருந்து கிளைகளாக முளைத்துக் கூடிவாழ்ந்த பல உயிரிகளின் உடற்கூடாகும். இந்தக் கூடு பல குழாய்களால் ஆக்கப்பட்டிருக்கும். குழாய்களில் ஆங்காங்கே நடுவில் கெட்டியான அச்சு அல்லது தண்டு இருக்கும், அதிலிருந்து தான் கிளைகள் பிரிகின்றன. அசல் பவழ மணியைப் பரி சோதித்தால் ஆங்காங்குச் சிறு குழிகள் தோன்றும். ஒவ்வொரு குழியிலும் அங்குக் கிளையாக முளைத்த ஒரு சிறு உயிரி இருக்கும். கடற் பஞ்சைப்போலவே பவழமும் முதலில் முட்டைபொரித்து நீந்திநெளியும். குட்டியாக ஆரம்பித்துப் பிறகு அசைவற்ற உயிரியாகக் கடல் தரையில் படிந்து கிளை கள் பல விட்டுக் கூடி வாழ்கிறது

கூடிவாழும் அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு வாயும் வாயைச் சுற்றி எட்டுக் கைகளும் உண்டு. ஒவ்வொரு கையிலும் மிகச் சிறிய நச்சுப்பைகள் அமைந்துள்ளன. இவ்வுயிரி தன் கைகளால் உணவைப் பற்றியவுடன், அவற்றின் உடலில் நஞ்சைச் செலுத்திக் கொன்று விழுங்கு கிறது. செரிமானம் ஆகாத உணவுப் பொருள்கள் வாயின் வழியாகவே வெளியே தள்ளப்படுகின்றன.

பவழம் நல்ல வளர்ச்சியடையப் பத்து ஆண்டுகள் ஆகின்றன. நன்றாக முதிர்ந்த பவழக் கிளைகளை முறித்து வந்து, மேலிருக்கும் கசட்டுப் பொருள்களை நீக்கிவிட்டு, உள்ளேயிருக்கும் உறுதியான சிவந்த மணிகளுக்கு மெருகு கொடுத்து மாலையாகப் போட்டுக்கொள்வதற்கும், அணிகலன் களில் இணைத்துக்கொள்வதற்கும் வேறு வகையில் அழகு படுத்தும் பொருள்களுக்கும் பயன்படுத்துகிறார்கள். இதனால் பவழம் விலை மிகுந்த பொருளாகிறது. பவழமும் பஞ்சிணங் களைப் போலவே வெப்ப மண்டலக் கடலில் ஆழமில்லாத பகுதிகளில் வாழுகின்றன. ஆழமில்லாப் பகுதியில் அலை களால் பாதிக்கப்படுமிடங்களில் அசைவற்று வாழ்வதால் அலைகளின் எதிர்ப்பைத் தாங்க அவை எப்போதும் ஒன்றாகவே கூடி வாழ்கின்றன. இருந்த இடத்திலேயே உணவைச் சேகரிக்க வேண்டுமாகையால் ஒன்றுக்குக் கிடைக்காதபோது மற்றொன்றுக்குக் கிடைத்த உணவை ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ள உடற்குழாய்கள் மூலம் பகிர்ந்துகொள்ளுகின்றன.

இந்தியாவிற்கு மேற்கேயுள்ள இலட்சத் தீவுகள், மாலத் தீவுகள் முதலியவற்றைச் சுற்றியும், பாம்பன், இராமேசுவரம் இவ்வூர்களுக்கு அண்மையிலும் அந்தமான் தீவிலும், பசுபிக் மாக் கடலிலுள்ள தீவுகளைச் சுற்றியும், ஆஸ்திரேலியாவிற்கு வடகிழக்கிலும் பவழங்கள் விளைகின்றன. சிறந்த செம்பவழம் மத்திய தரைக்கடலின் ஓரங்களிலும், அங்குள்ள தீவுகளைச் சுற்றிலும் காணப்படுகிறது. பவழமணி கொடுக்கும் இனங் களும், பாறை கட்டுபவையும் ஒன்றாக சேர்ந்து வாழ்கின்றன. மணி கொடுக்கும் இனங்கள் (Corallium Mulrum – நற்பவழம்) மரம் போலவும், விசிறி போலவும் மூங்கில் புதர் (Tulipora) போலவும், பாறை கட்டுபவை குன்று (Favia) போலவும் மூளைபோலவும், மான் கொம்பு (Hadre Pora) போலவும் காணப்படுகின்றன. ஆஸ்திரேலியாவிற்கு வடக்கேயுள்ள இத்தகைய பவழமழைத் தொடரானது, கரையினின்றும் 90 மைல் தூரம் பிரிக்கப்பட்டு, 1200 மைல் வரை நீண்டு கிடக் கிறது. இத்தொடர் சில இடங்களில் விடுபட்டும் சில இடங் களில் அழகிய தீவுகளாகவும் இருக்கிறது. அத் தீவுகளுக்குப் பவழத் தீவுகள் என்றும் அப்பகுதியிலுள்ள கடலுக்குப் பவழக் கடல் என்றும் பெயர். அத் தீவுகளில் வாழும் மக்கள் பவழப் பாறைகளைக் கொண்டே வீடுகள் கட்டிக்கொள்கிறார்கள்.

— கலைக்கதிர் மே, 1960
(பக். 5, 6, 7)

நிற்க பவழம் வித்துருமம், துகிர், துப்பு, பிரவாளம், வாரிதி தண்டு, செந்தண்டு மாலை என்னும் வேறு பெயர்களி னாலும் வழங்கப்பெறும்.

கடல்படுபொருள்கள் ஐந்தனுள் இதுவும் ஒன்று. கடல்படு பொருள்களாவன:

"ஓர்க்கோலை சங்க மொளிர்பவளம் வெண்முத்தம்
நீர்ப்படு முப்பினோ டைந்து"

என்பர்.

நவமணிகளுள் ஒன்றாகவும் கூறப்பெற்றிருக்கிறது. சிலப் பதிகாரம், திருவிளையாடல் புராணம் முதலிய நூல்களில் நல்ல பவழத்தினுடைய இலட்சணங்கள் கூறப்பெற்றிருக் கின்றன.

சித்த மருத்துவத்தில் பவழத்தைப் பற்பமாக்கிப் பல பிணிகளுக்கு வழங்குகின்றார்கள். சிறப்பாக இருமல், காச நோய் முதலிய கபப் பிணிகள் நீங்கும்.

## 13. பாம்புகள்

இஃது ஒரு நச்சுயிரி. இது நெளிந்து (ஊர்ந்து) செல்வதால் இப் பெயர் பெற்றதுபோலும். இவ்வினத்தில் அநேகம், நச்சுத் தன்மையில்லாதன என்று அறியவேண்டும். ஏனெனில், அவை பழக்கத்தில் பார்த்தாலும் பற்களையும் மற்ற அமைப்பு களையும் கவனித்தால் கடிக்கக்கூடிய தன்மை வாய்ந்தன வல்ல. சாதாரணமாக அதிக விஷமில்லாத பாம்புகளின் பற்கள் முழுவதும் வழவழப்பாகவே இருக்கும். பல்லடியின் சந்தும் நச்சு நீரைப் பற்கடிவாய்க்குக் கொண்டுவரும் வசதியும் கிடையாது. ஆனால், நச்சுப் பாம்புக்கோ பற்களின் முன் பக்கத்து மேல் வரிசையில் நீளமான பள்ளமுண்டு. இதற்கும் நச்சுப் பல்லின் கோளத்திற்கும் சம்பந்தமுண்டு. இதன்மூலமாய் நஞ்சு கோளத்திலிருந்து பல்லிற்கு வந்து சேரும். அப்பொழுதுதான் பாம்புக்குக் கடிப்பதற்கு வசதி ஏற்படும். இவ்விதமான கோளங்கள் அநேகம் பாம்புகளுக்குக் கிடையாது. எல்லாப் பாம்புகளுக்கும் இரு நாக்கு உண்டு. நச்சுப் பாம்புக்கு மாத்திரம் முன்பற்கள் நீண்டும் கடிக்கும் போது மாத்திரம் நிமிர்ந்துகாணும் அநேக நச்சுப் பாம்புகள் இருந்தாலும் தென்னிந்தியாவில் நாகம், விரியன், வழலை, கொம்பேறிமூக்கன் முதலியவைதாம் நச்சுள்ளனவென வழங்கப்பட்டவை. சாரைப்பாம்பு அல்லது ஆண் நாகம் என்று சொல்லப்படுவது அவ்வளவு நஞ்சுள்ளதன்று. பாம்பின் கறியும், தோலும், நஞ்சும் மருத்துவத்திற்குப் பயன்படும்.



படம் 2—11. பாம்பு

வெண்ணாந்தை அல்லது மலைப் பாம்பின் இறைச்சி உப்புக் கண்டம் குட்டத்திற்குதவும். தன்வந்திரி வாகடத்தின்படி பாம்பின் சட்டையைப் பொடித்துப் புங்கம் எண்ணெயிற் குழப்பி மேற்பூச்சு மருந்தாகப் பயன்படுத்தினால் கால் கை வலி தீரும். இது முறைச் சுரத்திற்கும் பயன்படும்.

**பல வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ள பாம்புகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சர்ப்பம் | 8 | 7. | கொம்பேறி | 2 |
| 2. | விரியன் | 16 | 8. | நாகம் | 5 |
| 3. | வழலை | 4 | 9. | பச்சைப் பாம்பு | 1 |
| 4. | மூக்கன் | 2 | 10. | சவடு | 2 |
| 5. | சுருட்டை | 4 | 11. | மண்ணுளி | 1 |
| 6. | சாரை | 5 | 12. | புடையன் | 16 |

## 14. புனுகு (புழுகு)

**(Viverra Civetta; V. Zibetha; V. Rasse. Lin. Civetcat)**

இதற்குப் பிலாளகம் என்னும் வேறு பெயரும் உண்டு. இது வடமொழியில் கந்த மார்ஜாலபீஜம் என்று வழங்கப் படுகின்றது. இது புனுகுபூனை என்னும் ஒருவிதப் பூனை யினின்று எடுக்கப்படுகின்றது. இப் பூனை, மலையாளம், ஆப்பிரிக்கா, தென் ஆசியா முதலிய இடங்களில் அதிகமாகக் கிடைக்கும். இப் பூனையின் மலவாய்க்கும் குறிக்கும் மத்தியில் இரண்டு பைகள் இருக்கின்றன. இந்தப் பைகளில் மணமுள்ள ஒருவகைப் பிசுபிசுப்புள்ள பொருள் சேருகின்றது. இந்த நெய்ப்புப் பொருளே புனுகாகும். புனுகைச் சேகரிப்



படம் 2--12. புனுகு பூனை

பதற்காகப் பூனையை ஒரு கூட்டில் அடைத்து அக்கூட்டின் நடுவில் ஒரு மூங்கில் துண்டைச் சுழலும்படி இசைத்து வைத்தால், இப் பூனை அடிக்கடி மலவாயை இம் மூங்கிலின்மேல்

தேய்க்கும். அப்பொழுது மூங்கிலின்மேல் புனுகு படியும். இதனைச் சேரச்சேர வழித்தெடுத்துக் கொள்ளல் வழக்கம். சவ்வாது என்னும் பொருளும், புனுகு பூனையினின்றும், உருவத்தில் சிறிது வேறுபட்ட சவ்வாதுப் பூனையென்று கூறப் படும் ஒருவிதப் பூனையினின்றும் மேற்கூறியவாறே எடுக்கப் படுகின்றது. இதன் குணம் முதலியன புனுகை ஒத்திருக்கும்.

புனுகையும் சவ்வாதையும் மணத்திற்காக மணம்பூச்சு, வர்த்தி முதலிய மணப்பொருள்களில் சேர்க்கின்றனர். பண்டை நாளில் மக்கள் கூந்தலுக்கு மணம் ஊட்டுவிப்பதற் காகப் புனுகு நெய் உபயோகித்ததைச் சிலப்பதிகாரம் போன்ற காவியங்களால் அறியலாம். இது சித்த மருத்துவ முறையில் முகப்பருவை நீக்க வெளிப்பிரயோகமாகவும் வேறுபல நோய் களுக்கு குறைந்த அளவில் தனியாகவும் மெழுகுகளிலேயும், மாத்திரைகளிலே கூட்டியும் கொடுக்கப்படுகிறது.

## 15. பூ நாகம்
### (Earth Worm)

இதுவே நாங்கூழ். ஈரமுள்ள பூமியில் ஒருகஜ சதுரமுள்ள பள்ளந்தோண்டி அதில் வரகு வைக்கோலை 5. செ. மீ. கனம் பரப்பி, தண்ணீர் ஊற்றி மேலே கீற்றுப்பாய் மூடிவைத்து நாடோறும் ஒரு தடவை தண்ணீர் தெளித்து மூடிவிட வேண்டும். இவ்விதம் ஒரு வாரம் அல்லது பத்து நாள் செய்து வரின் பூசாரத்திற்குத் தகுந்த விதமாகப் பூச்சிகள் பிறக்கும்.



படம் 2–13 மண்புழு

செம்மண் பூமியிலிருந்து வெட்டி எடுத்த பூ நாகத்தை மோரில் போட்டு 2 மணி நேரம் மூடிவைத்துப் பிறகு அலம்பி எடுத்து மறுபடி மோரில் போட்டு இம்மாதிரியே 2, 3 தடவை அல்லது எத்தனை தடவை ஆனாலும் பூச்சிகளின் வயிற்றில் மண்ணில்லாதபடி சுத்திசெய்து விடவேண்டும். இப்படிச் சுத்திசெய்த பிறகு மருந்துகள் செய்கின்றார்கள். பூநாகத்தில் செம்புச்சத்து எடுத்துக் கிண்ணி செய்வதும், பூநாகக் கழாயம் செய்து பயன்படுத்துவதும் உண்டு.

## 16. மான்

**(Dear)**

மான், கலைமான், கடமான் என்று மூவகை உள. இவற்றுள் மான் அரிணம், சாரங்கம், நவ்வி, உழை, பிணை, சூனம், மிருகம், மறி, குறங்கம், ஏணம் என்னும் வேறு பெயர்களாலும், கலைமான் இரலை, வச்சயம், புல்வாய், கருமான் என்னும் வேறு பெயர்களாலும் வழங்கப்படுகின்றன.

இவைகளின் கொம்புகளே பெரும்பான்மை மருந்தாக்கப் படுகின்றன. பதப்படுத்தப்பட்ட இவற்றின் தோல் இருக்கைக்கும், இறைச்சி உணவிற்கும் பயன்படுகின்றன.



படம் 2–14. மான்

மான் கொம்பைக் கலைக்கோடு என்றும், சிருங்கி என்றும் வழங்குவர். இதனைப் பற்பம் செய்து வெப்பப்பிணிக்கும் இதய நோய்களுக்கும் வழங்குகின்றனர்.

## 17. மீன்

**மீன் வகை**

(1) வரால்மீன், (2) குறவைமீன், (3) அயிரைமீன், (4) இறால்மீன், (5) கெண்டைமீன், (6) சன்னக்கெண்டை, (7) பேராரல்மீன், (8) சிற்றாரல்மீன், (9) கச்சல்மீன்,

(10) உழுவைமீன், (11) கொடுவாமீன், (12) வாளைமீன், (13) சேல்கெண்டை, (14) கெளிற்றுமீன், (15) ஓலை வாளை, (16) சுறாமீன், (17) கொள்ளிமீன், (18) சன்னாக் கூனி, (19) திருக்கைமீன், (20) மடவைமீன், (21) சுரும்பு மீன், (22) உல்லமீன், (23) கற்றலைமீன், (24) வெள்ளை வௌவால், (25) கருவௌவால், (26) நெய்த்தோலி, (27) மயிரிமீன், (28) விலாங்குமீன், (29) கிழங்கான்மீன், (30) வஞ்சிரமீன்.



படம் 2—15. மீன்

இவற்றுள் சுறாமீன் தென்னிந்தியாவின் கடற்கரை ஓரங் களில் அதிகமாகக் கிடைக்கின்றது. இதில் கொம்பன்சுறா, புலிமுகச்சுறா, மாட்டுச்சுறா, பால்சுறா என்பவை இருப்பினும் பத்தியத்திற்குப் பயன்படுவது பால்சுறாவே. சுறாமீன் கல்லீரலைப் பிட்டுச் செய்து உண்ணுவதுண்டு. இம் மீனின் கல்லீரலிலிருந்து எடுக்கப்படும் நெய்யில் வைட்டமின் ஏ. யும் டீ. யும் இருப்பதனால் குழந்தைகளின் கணைக்கும் உடல் இளைத்தவர்களுக்கும், இரைப்பு நோயால் வருந்துகின்றவர் களுக்கும் வழங்குகின்றார்கள்.

வரால்மீன் தலையில் இருக்கும் கல்லை நீர்க்கட்டுக்கு இழைத்துக் கொடுப்பதுண்டு ; கண்மருந்துகளில் கூடச் சேர்க்கப்படுகின்றது.

## 18. முத்து

### (Pearl)

நவமணிகளுள் ஒன்றும் கடல்படு பொருள்கள் ஐந்தனுள் ஒன்றுமாகிய முத்திற்கு முரிவஞ்சி, தூலகம், சுக்கிரன், நித்திலம், தரளம், சங்கீன்ற பிள்ளை, ஆதித்தன் சோதி, ஆழி வித்து, கத்தலம், மௌத்திகம் என்னும் வேறு பெயர்களும் உண்டு.

தற்காலம் முத்தெடுக்கத் தலைமன்னாரில் தோணிகளைச் சேகரித்து 60 முதல் 90 அடி ஆழமுள்ள கடற்கரை இடங்களில் நிறுத்தி, ஒரு கயிற்றில் பாரத்திற்காகக் கல்லைக் கட்டி, அதனுடன் முத்துச் சேகரிப்பதன்பொருட்டு ஏற்படுத்தப் பட்டுள்ள முத்துக்குளிப்போனைத் தரைமட்டத்திற்கு அனுப்ப, அவன் முத்துச் சிப்பிகளைச் சேகரித்த பிறகு தோணியில் இருப்பவனுக்குக் குறிப்பறிவிப்பான். மேலுள்ளவன் கயிற்றை மேலே இழுக்க, மூழ்கியவன் சிப்பிகளுடன் நீர்மட்டத்திற்கு வந்து அவற்றைத் தோணியில் சேர்ப்பான். பிறகு சிப்பி களைக் கரைசேர்த்து அழுக வைத்துப் பிளந்து கடல்நீர் உள்ள பாண்டங்களில் இட்டு மிகக் கவனமாகச் சிப்பிகளில் உள்ள முத்துகளைப் பொறுக்கி எடுத்தபின்பு ஓடுகளையும் சுத்தம் செய்து சேர்க்கின்றனர்.



படம் 2–16. முத்துச் சிப்பி

நீரில் மூழ்குகின்றவர்கள் மேல்வரும் காலத்துச் சிலர் இரத்தம் கக்குதலும் சிலர் மூர்ச்சையாதலும் சிலர் இரண்டையும் அடைதலும் உண்டு. அவர்களுக்கு உடனே சாராயம் போன்ற போதை தரக்கூடிய பொருள்களைக் கொடுத்தல் பழக்கத்தில் இருக்கின்றது.

கிடைக்கும் முத்துகள் கடுகளவிலிருந்து நாவல் கொட்டைப் பருமன் வரையுமிருக்கும். முத்தின் பருமன் அதிகமாக ஆக விதையும் அதிகரிக்கின்றது. மனிதர் பண்டை நாள் முதல் முத்தை நகையாய் அணிந்து வருகின்றனர். முத்தை அணிந்தால் தீங்குகள் அணுகாது என்னும் நம்பிக்கை உண்டு.

ஜூலியஸ் ஸீசர், மார்க்கஸ் புரூட்டஸின் தாய் சர் வில்லாவுக்கு 4.800 பவுன் விலையுள்ள முத்தை இனாமளித்த தாகவும், கிளியோபத்ரா 80,000 பொன் மதிப்புள்ள முத்தை விழுங்கியதாகவும், பர்சிய நாட்டு ஷாவுக்குப் பயணி டேவர்னீர் 1,80,000 பவுனுக்கு ஒரு முத்தை விற்றதாகவும், மாஸ்கோவிலுள்ள (பிஸ்கிரின்) முத்து 24 காரட்டிருந்ததாகவும் கூறப் பட்டிருப்பதிலிருந்து முத்திற்கு மற்றைய மணிகளைக் காட்டிலும் விலையும் மதிப்பும் அதிகம் என்பதனை உணரலாம்.

திருவெண்காடர் புராணம் என்னும் நூலில் உயர்ந்த முத்தின் பிறப்புக் கீழ்க்காணுமாறு கூறப்பட்டிருக்கின்றது: ஐப்பசித் திங்கள், சுவாதி மீன் கூடிய சமயத்தில் கடலிலிருக்கும் சிப்பிகள் வெளியில் வந்து தம் வாயைத் திறந்திருக்கும் காலத்தில் மின்னலுடன் பெய்யும் மழைத்துளி அச் சிப்பிகளில் விழ, வாய் மூடி உள்ளிறங்கிச் சூல்கொண்ட முத்துகளே உயர்வானவை. மற்றும் திருவெண்காடர் புராணம், அரதனச் சுருக்கம், திருவிளையாடல் புராணம், சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் முத்துப் பிறக்கின்ற பிற இடங்கள், முத்தின் குணங்கள், குற்றங்கள், முத்தின் நிறங்கள் விளக்கமாகக் கூறப்பெற்றிருக்கின்றன.

முத்துக் கிடைக்கும் இடங்களைப் 'போகர் 7000' என்னும் நூல் கூறுகின்றது. அவ் விடங்கள் தற்காலம் சிறந்த முத்தெடுக்கப்படுகின்ற சிங்களம், பாரசீகம், தலைமன்னார், தூத்துக்குடி முதலிய இடங்களோடு ஒத்து வருகின்றன.

செயற்கையில் முத்துகளை உற்பத்தி செய்யச் சப்பானிலும் நம் நாட்டிலும் நீர்நிலைகளை ஏற்படுத்தி, அதில் சிப்பிகளின் வாயை விழிப்புடன் பிளந்து உள்ளிருக்கும் சதையின்மேல் மூடியிருக்கும் சவ்வைக் கால்சதுர அங்குலத்திற்கு மூன்று பக்கம் கத்தரித்துப் புரட்டி அவ்விடத்தில் சிறிய கண்ணாடி மணி அல்லது மணல் பருக்கை ஒன்றை வைத்து, புரட்டி வைத்த சவ்வை மூடித் தையலிட்டு, வாயை மூடி நீரில் விட்டு விடுகின்றனர். மணலைச் சுற்றிலும் சிப்பிச் சதையிலிருந்து வடியும் பசை போன்ற நீர்மம் மூடி ஓர் ஆண்டில் சிறந்த முத்தாகின்றது. இம்மாதிரி செயற்கையில் முத்து உண்டு பண்ணுவதில் வல்லுநர்களெனச் சப்பானியர் கருதப்படு கின்றனர். நம் முன்னோர் செயற்கை முத்தைச் செய்து வந்த தாகவும் அறியக்கிடக்கின்றது. முத்தைச் சோதிக்க முத்துத்

தொகுதிலிருந்து எடுத்த ஒரு முத்தைச் சாராயத்திலிடக் கரைந்துவிட்டால் நன்முத்தாகும் என்று கூறுவர்.

தமிழ் மருத்துவத்தில் முத்தை நீற்றிக் (பற்பம் செய்து) கோழையகற்றிச் செய்கைக்காகவும், உடல் உரமாக்கிச் செய்கைக்காகவும் சிறப்பாக வழங்கப்படுகின்றது.

# 3. வேதியியல்

## சித்த வேதியியலின் வரலாறும் வளர்ச்சியும்

சித்த மருத்துவத்தின் தனிச் சிறப்பு அதனுடைய வளமான வேதியியலால்தான் அமைந்து உள்ளது. வரலாற்றுக் காலத்துக்கு ஏறக்குறையப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அவர்கள் பல ஏற்றமுள்ள கனிமங்களைக் கண்டு பிடித்தும், அவற்றின் துணைகொண்டு பல கனிமக் கூட்டுச் சரக்குகளைச் செயற்கை முறையில் உற்பத்தி செய்து அவற்றின் பயன்களையும் கண்டுபிடித்து மக்களினத்துக்குப் பயன்படும் முறையில் ஏடுகளில் பதிந்துவைத்தும் தக்க பல மாணவர் களுக்கு அறிவுறுத்தியும், கைமுறைகளில் பயிற்றுவித்தும் வேதியியல் என்னும் சித்த மருத்துவக் கிளையைப் பரவச் செய்தும், நிலைபெறச் செய்தும் உள்ளனர் என்பது அவர் களின் நூல்கள் வாயிலாக அறியக் கிடக்கின்றது. சித்தர்களின் வேதியியல் என்னும் சித்த மருத்துவ அறிவியல் துறை எந்தக் காலத்தில் தொடங்கியது என்று வரையறுத்துக் கூற இயலாது ; எனினும் அது மிகப் பழமையானது என்பது மட்டும் யாவரும் ஒத்துக்கொண்ட உண்மையாகும்.

வேதியியல் என்னும் சொல் வேதை, இயல் என்னும் இரு சொற்களால் ஆன சொற்றொடராகும். அது 'வேதையியல்' என்று இருக்கவேண்டியது நாளடைவில் மருவி 'வேதியியல்' என்றாகியது. இந்த அறிவியல் துறையைத் தமிழிலக்கியங் களில் இரசவாதம், வகாரவித்தை, வாதம், வேதிப்பு என்றெல் லாம் கூறுவர். வேதை என்னும் சொல் மாற்றுதல் அல்லது மாறுபாடுறச் செய்தல் என்னும் பொருளைத் தரவல்லது.

இயல் என்னும் சொல் இலக்கணம் என்று பொருள்படும் என்பது யாவரும் அறிந்ததே. ஆகவே, இந்த இயல் இயற்கையில் அமைந்துள்ள ஒரு பொருளின் பண்புகளை மாற்றம் அடையச் செய்து மக்களினத்துக்கும், மற்ற உயிரினங்களுக்கும் பயன் விளையுமாறு அல்லது விளக்குமாறு செய்தலை விளக்கும் சித்த மருத்துவத் துறை என்று பொருள்படும். ஆனால், பாமர மக்கள் வேதையென்னும் சொல்லைக் காதால் கேட்ட மாத்திரத்தில், அந்த வித்தையால் மட்டமான உலோகத்தை உயர்ந்த உலோகமாக்குதல், அதாவது இரும்பு, செம்பு, ஈயம், துத்தநாகம் முதலிய மட்டமான உலோகத்தை உயர்ந்த உலோகமாகிய தங்கம் அல்லது வெள்ளியாக்குதல் என்று கூறுவர். அத்தகைய முறைகள் சித்த மருத்துவக் கலையில் மிகுதியாகக் காணப்படும் என்றும் கூறுவர். அவர்கள் கூற்றில் ஓரளவு உண்மைதான் உண்டு என்பது இந்த அறிவியல் நூலை ஆசறக் கற்றுப் பயின்றவர்களுக்கே விளங்கும்.

இவ்வறிவியல் துறையைச் சற்று விளக்குவோம். சாதாரணமாகத் தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு முதலிய உலோகங்களுக்கு இயற்கையில் (1) உருக்கினால் உருகி நீர்த்துக் காணல், (2) தகடாகத் தட்டிக்கொள்ள இயலல், (3) மெல்லிய கம்பியாக இழுத்துக்கொள்ள இயலல், (4) வெட்டித் துண்டு பட்ட முனைகள் பளிச்சிடல், (5) அதன் மெல்லிய சிறு துண்டும் தண்ணீரில் ஆழ்தல், (6) உட்கொண்டால் சீரணிக்கப்படாமல் உண்டது உண்டவண்ணமே வெளிப்படல், (7) அவ்வாறன்றிச் சிறிதளவு உலோகம் உட்சென்று செரிப்பு நீரில் கரைந்தாலும் நச்சுக் குறியைத் தருதல் என்னும் பண்புகள் உண்டு என்பது எல்லா அறிவியல் நூலும் கூறும் உண்மைகளாகும். அத்தகைய உலோகங்களை எவ்வளவு வெப்ப நிலைக்குக் கொண்டுபோனாலும் உருகிப் போகாமலும், தகடாகவோ, கம்பியாகவோ ஆக்கமுடியாதபடி, அதாவது வேதியியல் முறைப்படி மாற்றப்பட்ட உலோகத் துண்டை அடித்து நீட்டவோ தகடாக்கவோ முனைந்தால் அவ்வாறு செய்ய இடங்கொடாமல் அது நொறுங்கிப் பொடிப்பொடியாகிப் போதல், வெட்டித் துண்டு செய்த முனைகள் பளிச்சிடாமல் காணப்படல், தண்ணீரில் மிதத்தல், உட்கொண்டால் செரிப்பு நீருடன் உறவாகி உடலில் ஏற்கப்பட்டு நச்சுத் தன்மைக்குப் பதிலாக நல்ல பயன்களைத் தரவல்லதாதல், நச்சுக்குணம் அறவே மாறி நல்ல மருந்தாதல் (அமிர்தம்)

என்னும் மாற்றங்களை இவ்வகை வேதியியல் முறையால் செய்துகொள்ள இயலும்.

இயற்கையில் உப்பு வகைகள் நீரில் கரைந்து போதலும் நெருப்பிலிட்டால் சடசடவென்னும் ஒலியுடன் தூளாவதும் கண்கூடு. ஆனால், அத்தகைய பொருள்கள் நீரில் கரையாமல் நிற்கவைத்தலும், நெருப்பிலிட்டால் தங்கம், வெள்ளி முதலிய கனத்த உலோகங்களைப்போல உருகி நிற்றல் என்னும் குணங்கள் மேற்கூறிய சரக்குகளுக்கு இவ்வகை வேதைமுறை யால் அமையும். நெருப்பிலிட்டு உருக்கினால் உருகிப் பெரு மளவுக்குப் புகைந்து போய் எடை மிகவும் குறையவல்ல துத்த நாகம், கருவங்கம் முதலிய உலோகங்கள், நெருப்புக்குப் புகைந்து போகாமலும், எடைகுறையாமலும் நிலைபெறச் செய்யவல்ல முறை வேதைக்கலையின் ஒரு சாதனையாகும். மற்றும், எளிய வெப்பத்தையும் தாங்காமல், முற்றிலும் மறைந்துபோக வல்ல இரசம், தாளகம் முதலிய பொருள்களை மிகுந்த சூட்டிலும் ஓடாமற் செய்யவல்லதும், இத்தகைய வேதை முறையேயாகும். மற்றும் இயல்பான வெப்பதட்ப நிலையில் நீர்த்து இருக்கும் இயல்புடைய இரசம் என்னும் பாடாணப் பொருளை வெள்ளித் துண்டைப்போல இறுகி இருக்கும் வண்ணமும், நெருப்பிலிட்டு உருக்கினால் உருகி நீர்த்தலும் குளிரவைத்தால் மீண்டும் வலிந்து நிற்கவும் செய்ய வல்ல சதுரப்பாடு உள்ள முறைகள் பல வேதியியல் துறையில் பரக்கக் காணப்படும். மற்றும் நெருப்பில் எரிந்து சற்றும் மிச்சமில்லாமல் போகக்கூடிய வெடியுப்பு, கற்பூரம், பச்சைக் கற்பூரம் முதலிய பொருள்கள் நெருப்புக்குப் பற்றி எரியாம லிருக்கச் செய்து அவற்றைச் சுண்ணங்களாவும் பற்பங் களாகவும் செய்யும் முறையும் வேதியியல் துறையின் மேன்மை யைப் புகழவல்லதாம்.

இவ்வண்ணம், ஒவ்வொரு பொருளின் இயற்கைப் பண்பு களைக் குறிப்பிடும் வகையில் மாற்றியமைத்து மன்பதைகளின் தீராப் பிணிகளைத் தீர்க்கும் உயர்ந்த மருந்துகளாகச் செய்யும் பற்பல முறைகள் வேதியியல் என்னும் சித்த அறிவியல் துறையில் காணலாம். அவற்றைப் பற்பித்தல், செந்தூரித்தல், கண்ணமாக்கல், உருக்கல், கட்டல், களங் காக்கல், சத்தெடுத்தல், குருவாக்கல் என்னும் முறைப்படி செய்தால் முறையே பற்பங்கள், செந்தூரங்கள், சுண்ணங்கள், உருக்குகள், களங்குகள், கட்டுகள், சத்து, குரு என்னும் மிக மேன்மையுள்ள மருந்துகள் ஃகைக்குக் கிட்டும். அவ்வாறு

கிடைத்துள்ள மருந்தின் மேன்மையைக் கண்டுபிடிக்கவும், தாம்தாம் செய்த முறை சரியானதா அன்றா என்பதைப் பரிசோதிக்கவும் சித்தர் நூல்களில் குறிப்பிட்ட சில பெரிய மருந்துகளாகிய பற்பம், செந்தூரம் முதலானவற்றின் செய் முறையைக் கூறியானபின் அந்த மருந்தை, இரும்பு, ஈயம், தாமிரம், துத்தநாகம் முதலிய கீழ்த்தர உலோகங்களில் ஒன்றை உருக்கி, அது கண்விட்டாடும்போது அளவுப்படி போட்டு ஆறவிட்டால் அந்த உலோகம் வெள்ளியாகவோ, தங்கமாகவோ மாறும் என்று சித்தர்களின் நூல்களில் கூறப் பட்டுள்ளது. இதையே ஆதாரமாகக்கொண்டு வேதியியல் என்பது, சித்தர் போதிக்கும் தங்கம் செய்யும் முறை அல்லது மட்டமான உலோகத்தைத் தங்கமாக்கும் முறை என்று கூறுவர். இவ்வகைக் கூற்று முதலில் நாம் சொன்னதுபோன்று ஓரளவே உண்மையானதாகும் என்பது தெள்ளிதின் விளங்கும்.

மற்றும், அவ்வகையான (மட்டமான உலோகத்தை உயர்ந்த உலோகமாக மாற்றவல்ல) மருந்தை மக்கள் குறிப் பிட்ட முறைப்படி உண்டு வந்தால் அவர்களுடைய தீராப் பிணிகள் தீருவதோடல்லாமல், தங்கம், வெள்ளி போன்று நீடித்து நிலைத்துத் திண்மையிலும் வண்ணத்திலும் ஓங்கி வாழ் வார்கள் என்றும் அறிவுறுத்தியுள்ளனர். அவ்வகை முறை களைச் சித்தர்கள் காயகற்ப முறைகள் என்பர். அத்தகைய முறைகள் எண்ணற்றவை சித்தர்களின் பெருநூல்களிலும், வாத காவியங்களிலும் உண்டு.

காயகற்பம் என்னும் சொற்றொடர் காயம் என்பது உடலையும், கற்பம் என்பது நீண்ட கால அளவையும் குறிக்கும் இருசொற்களால் ஆனது. கற்பம் என்பது எவ்வளவு ஆண்டுகளைக் கொண்டது என்று ஒரு வினா எழக்கூடும். அது பிரமனின் ஆயுட்காலத்தைக் குறிக்கும் சொல்.

'சதுர்யுகம் ஓரிரண் டாயிரம் பிற்படின் சதுமுகற்கொரு
தினமதாம்
மதிமலியு மித்தொகையின் அயனாயுள் நூறுபோய்
மாண்டதொரு கற்பமாம்'

என்று அறப்பளீச்சுர சதகச் செய்யுள், எண் 40 கூறுவதி லிருந்து ஒருவாறு கணிக்க இயலும். எவ்வாறெனில் நான்கு யுகங்கள் எனப்பட்ட கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம்,

கலியுகம் என்பவை இரண்டாயிரம் கழிந்தால் பிரமனுக்கு ஒரு நாளாகும். இவ்வாறு 365¼ நாள் கொண்ட ஆண்டுகள் நூறு கழிந்தால் பிரமனுடைய ஆட்சிக்காலம் முற்றும். இந்தக் கால அளவைதான் 'கற்பம்' என்று குறிக்கும் கால அளவை யாகும். எனவே, கற்பம் (கல்பம்) என்னும் சொல் மிக நீண்ட நாளளவைக் குறிப்பதாகும் என்பது விளங்குகின்றது.

எனவே, சித்தர் நூல்களில் நீண்டநாள் நல்ல உடற் கட்டுடன் என்றும் இளமையோடு இருக்க வைக்கும் மருந்து முறைகள் இவ் வேதியியல் துறையில் விளக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வேதியியல் துறைக்குப் பயன்படும் மருந்துச் சரக்குகள் யாவற்றையும் தாதுப் பொருள்கள் (கனிமங்கள்), இயங்கியல் உயிர்ப் பொருள்கள் (சீவப்பொருள்) நிலையியல் உயிர்ப்பொருள்கள் (தாவரப்பொருள்) என மூன்று வகை களாகப் பாகுபாடு செய்யலாம். சித்தர்கள் பெரும்பாலும் தாதுப் பொருள்களையே (கனிமங்களையே) முதலாகக் கொண்டு, நிலையியல் உயிர்ப்பொருள்களையும், இயங்கியல் உயிர்ப் பொருள்களையும் துணையாகக்கொண்டு தம் வேதியியல் துறையை விரிவுபடுத்தியுள்ளனர். ஆகவே, நாம் வேதியியல் துறையில் முதற் பொருளாகக் கருதப்படும் கனிமங்களையும் (தாதுப் பொருள்களையும்), சில இயங்கியல் உயிர்ப்பொருள்களையும் பற்றி இங்கு விளக்குவோம்.

## மருந்திற்குதவும் இராசயனப் பொருள்கள்

### கனிமங்கள் (தாதுப் பொருள்கள்)

இவை பெரும்பாலும் பூமியிலிருந்து தோண்டி எடுக்கப் படுபவையாம். இவற்றுள் சில கடல்படு பொருள்களாகவும் இருக்கும். இவ்வாறு இயற்கையில் கிடைக்கக்கூடிய கனிமங் களைப் பிறப்புச் சரக்கு என்பார்கள் சித்தர்கள். இவ்வகைப் பிறப்புச் சரக்குகளின் துணைகொண்டு செயற்கையில் பல தாதுப்பொருள்களைச் செய்து வேதியியல் துறையில் பயன் படுத்தியுள்ளனர். அவ்வாறு செயற்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை 'வைப்புச் சரக்கு' என்பர்.

சித்தர்கள், தாதுப்பொருள்களை (அ) காரசாரங்கள், (ஆ) உபரசங்கள், (இ) பாடாணங்கள், (ஈ) உலோகங்கள் என நான்கு வகையாகப் பிரித்து அவை ஒவ்வொன்றிலும் பிறப்பு வகைகள், வைப்பு வகைகள் எனக் கூறுபடுத்திக் கூறியுள்ளனர்.

## (அ) காரசாரங்கள்

இவை யாவும் உப்பு வகைகளாம். இதில் சில வகை அமிலத்தன்மை உள்ளவையாகவும், சில உப்புவகை கரிப்புத் தன்மை உள்ளவையாகவும், சில இரண்டுமற்ற நடுநிலைத் தன்மை உடையவையாகவும் இருக்கும். சித்தர் நூலில் கூறப் பட்டுள்ள காரசாரச் சாக்குகள் மொத்தம் இருபத்தைந்தாகும். அவற்றுள் இயற்கையில் கிடைக்கக்கூடிய காரசாரங்கள் அல்லது பிறப்புக் காரசாரங்கள் பத்து என்றும், செயற்கைக் காரசாரங்கள் அல்லது வைப்புக் காரசாரங்கள் பதினைந்து என்றும் வகைப்படுத்தியுள்ளனர்.

**பிறப்புக் காரசாரங்கள் :** (1) சூடன், (2) சீனம், (3) பூநீறு, (4) வளையலுப்பு, (5) பச்சைக் கற்பூரம், (6) கல்லுப்பு, (7) கறியுப்பு, (8) பொன்னம்பர், (9) மீனம்பர், (10) கடல் நுரை என்னும் உப்பு வகைகள்.

**வைப்புச் சாரங்கள் :** (1) இந்துப்பு, (2) பொட்டுலுப்பு, (3) வெங்காரம், (4) துருசு, (5) எவட்சாரம், (6) நவாச்சாரம், (7) சத்திச்சாரம், (8) ஏகம்பச்சாரம், (9) கெந்தியுப்பு, (10) திலாலவணம், (11) கெந்திலவணம், (12) காய்ச்சுலவணம், (13) பிடாலவணம், (14) சிந்துலவணம், (15) காசிலவணம் என்னும் உப்புவகைகள்.

இவற்றுள் கெந்தியுப்பு என்னும் சரக்கும் கெந்திலவணம் என்னும் சரக்கும் ஒன்றேபோலப் பொருட்படினும், அவற்றின் வைப்புமுறை மாறுபாட்டுக் காரணத்தைக் காட்டவேண்டி ஒன்றை உப்பென்றும் மற்றதை லவணமென்றும் கூறியுள்ளார் என்றறிக.

மேலே கூறப்பட்டவையன்றிச் சில சித்தர் நூல்களில் வைப்புக் காரசார வகையில் சவுட்டுப்பு, எவட்சாரம், சவுக் காரம், அமுரியுப்பு என்னும் நான்கு உப்புவகைகளைக் கூறி யுள்ளனர். இவை பிற்சேர்க்கையாக இருக்கலாம் என ஊகிக்க இடந்தருவதாக உள்ளது. இவ்வகைப் பிற்சேர்க்கைகள், வளர்ந்துவரும் அறிவியலின் இயல்பு என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

**காரசாரங்களின் பயன் :** மேலே கூறப்பட்ட காரசாரச் சரக்குகளை வேதியியல் துறைக்குத் தேவையான செயற்கை நீர்களையும், திராவகங்களையும் உற்பத்தி செய்து கொள்ளவும், உலோகங்களை எளிதில் உருக வைக்கவும், தனிச் சரக்காகக் கொண்டு அவற்றையே அகமருந்துகளாகச் செய்யவும், பற்பல அகமருந்துகளில் கூட்டுச் சரக்காகவும் பயன்படுத்தி நற்பயனைக் கண்டு தம் நூலில் பதிந்து வைத்துள்ளனர். இவற்றுக்கு எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் கூறுவோம்.

**செயற்கை நீர் :** இதனைச் சித்தர் நூல்களில் **செய்நீர்** என்று குறிப்பிடுவர் சிலர். 'செயநீர்' என்றும் குறிப்பிடுதல் உண்டு. செய்நீர் என்பது அந்த நீர் இயற்கையில் கிடைக்கப் பெறாதது என்பதையும் காரசாரங்களின் கூட்டால் தனிப்பட்ட முறையில் உற்பத்தி செய்யப்பட்டது என்பதனையும் உணர்த்தும். அதனையே 'செயநீர்' என்னுங்கால், அதன் துணைகொண்டு ஒரு பொருளின் பண்பை மாற்றம் செய்யும் முயற்சியில் வெற்றி தரும் நீர் (செயம் நீர்—செயம்=வெற்றி) என்று பொருள்படு மாறு அமைந்துள்ளமையைப் புலப்படுத்தும்.

மேலே கூறிய சில உப்புகளைத் தூளாக்கி ஒரு பீங்கான் பாத்திரத்தில் பரப்பிப் பனியில் வைத்தால் அது நீர்த்துக் காரமுள்ள ஒருவகை நீரைத் தரும்.

**எடுத்துக்காட்டு**

பொட்டுலுப்பையும் புளியையும் சமமாய்க் கூட்டி நன்றாக உறவாடும்வரை பிசைந்து பிசைந்து உரலிலிட்டு இடித்து அடைபோலத் தட்டி ஒரு புது மண் ஓட்டிலிட்டு அடுப்பி லேற்றி எரிக்கவும். அது சூடேறித் தானே பற்றிக்கொண்டு எரிந்து சாம்பலாகி அணைந்துவிடும். அந்தச் சாம்பலை நன்றாக ஆறவிட்டுப் பின் அதனுடன தூள் செய்த வெங்காரத்தையும் நவாச்சாரத்தையும் கூட்டிக்கலந்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் பரப்பிப் பனியில் வைக்கச் செய்நீர் இறங்கும். இது பற்பல வேதைமுறைகளுக்குப் பயன்படும்.

**உலோகங்களை உருகவைத்தல் :** எளிதில் உருகாத உலோகங்களை உருக்க வெங்காரத் தூளைப் போட்டு உருக்குவது சித்தர்களின் பழக்கம். உருக்கினத்துக்கு ஆதி யென்று வெங்காரத்தை சித்தர் நூல்கள் கூறும்.

**அகமருந்தாக்கல் :** வெங்காரம் , படிகாரம், வெடியுப்பு முதலிய உப்புவகைகளைப் பற்பங்களாகவோ சுண்ணங் களாகவோ செய்து வெங்காரப் பற்பம், படிகாரப் பற்பம், வெடியுப்புச் சுண்ணம் என்னும் தனி மருந்துகளாக்கி உடற் பிணி தீர்க்கும் மருந்துகளாகப் பயன்படுத்துவர்.

**அகமருந்துகளின் கூட்டுச்சரக்காக்கல் :** தயிர்ச் சுண்டிச் சூரணம், சீரகச் சூரணம், ஐந்துப்புப் பற்பம், நவரசத் துவையல் என்னும் கூட்டு மருந்துகளில் மேற்படி காரசாரச் சரக்குகளில் குறிப்பிட்டவை சேரும். இதன் விரிவுகளை மருத்துவம் பயிலுங்கால் அறியலாம்.

## (ஆ) உபரசங்கள்

எல்லாச் சித்தர் நூல்களும் உபரசங்களின் எண்ணிக்கை நூற்றிருபது என்று கூறும். உபரசம் என்னும் சொற்றொடரில், துணை என்று பொருள் பயக்கும் 'உப' என்னும் சொல்லும், பாதரசம் அல்லது சூதபாடாணம் என்னும் பொருள் தரும் 'ரசம்' என்னும் சொல்லும் இணைந்துள்ளன. அதாவது இச் சொற் றொடர் இரசத்தின் பண்பில் அல்லது இரசத்தின் கூறு ஓரளவு கொண்ட பொருள் எனப் பொருள் தருமாறு அமைந்துள்ளது.

இங்ஙனம் உபரசங்கள் என்று கூறப்படும் சரக்குகளை வகைப்படுத்திக் காணுங்கால் அவற்றில் பெரும்பகுதி கனிமங் களாகவும் (தாதுப் பொருள்கள்) சிறுபான்மை இயங்கியல் உயிரினங்களிடமாகப் பெறம்படும் பொருள்களாகவும் (சீவப் பொருள்கள்) அமைந்துள்ளன.

அவற்றின் விரி : (1) அஞ்சனக்கல், (2) அத்திபேதி, (3) அந்தகக் கல், (4) அப்பிரகம், (5) அயச்சிலை, (6) அன்ன பேதி, (7) இரசித சிலை, (8) இராசவர்த்தக்கல், (9) ஈரக் கல், (10) ஈயச்சிலை, (11) உவர்மண், (12) ஏமச்சிலை, (13) ஏமமணல், (14) ஓடு, (15) கடல் நுரை, (16) கருங்கல், (17) கருஞ்சுக்கான், (18) கருமணல், (19) கல்நார், (20) கல் மதம், (21) கற்காலி, (22) கற்சிட்டம், (23) கற்சுவடு, (24) காகச்சிலை, (25) காசுமீரப் படிகம், (26) காந்தம்,

(27) காரீயச் சிலை, (28) குருந்தக்கல், (29) கெண்டகச் சிலை, (30) கெருடப்பட்சிக் கல், (31) கோமேதகம், (32) சாத்திரபேதி, (33) சிலாசத்து, (34) சிலாநாகம், (35) சிலா வங்கம், (36) சிவப்பு (மாணிக்கம்), (37) சுக்கான் கல், (38) சுத்த மண் அல்லது சுத்த மணல், (39) சூடாலைக்கல், (40) செங்கல், (41) செம்புச் சிலை, (42) செம்புமணல், (43) செம்மண் அல்லது செம்மணல், (44) சொர்ணபேதி, (45) தராசிலை, (46) தவளைக்கல், (47) துரிசு, (48) தேக்கல், (49) நாகச்சிலை, (50) நாகப்பச்சை, (51) நாகமணல், (52) நிமிளை, (53) நீலம், (54) படிகக்கல், (55) பச்சை, (56) பித்தளைச் சிலை, (57) புட்பராகம், (58) பேரோசனைக் கல், (59) மஞ்சட்கல், (60) மந்தாரச் சில்லை, (61) மரகதப் பச்சை, (62) மாக்கல், (63) மாங்கிசச் சிலை, (64) மாங்கிசபேதி, (65) மாந்துளிர்க் கல், (66) லோக மணல், (67) வங்க மணல், (68) வயிரம், (69) வெண்கலச் சிலை, (70) வளப்பக் கல், (71) வெண்சிலை, (72) வெண்மணல், (73) வெள்ளி மணல், (74) வெள்ளீய மணல், (75) வெள்ளைச் சுக்கான், (76) வைக்கிராந்தம், (77) வைடூரியம் என எழுபத்தேழாம்.

**இயங்கியற் பொருள்கள்**

(1) ஆட்டுக் கொம்பு, (2) ஆமை, (3) இந்திரகோபப் பூச்சி, (4) எலிமுள், (5) எலும்பு, (6) எறும்பு, (7) கடற் பாசி, (8) கத்தூரி, (9) கரடி, (10) கலைக்கொம்பு, (11) கழுதை வண்டு. (12) காண்டாமிருகத்தின் கொம்பு, (13) கிளிஞ்சல், (14) குருவண்டு, (15) கோழி, (16) சங்கு, (17) சாலக்கிராமம், (18) செவ்வட்டை, (19) தவளை, (20) நண்டு, (21) நத்தை, (22) நாகச்சட்டை, (23) நாகர் வண்டு, (24) நாயின் கட்டம், (25) பல், (26) பன்றிக் கொம்பு, (27) பன்றி முள், (28) பவழம், (29) புற்றாம்பழம், (30) பூநாகம், (31) மயிர், (32) மயிலிறகு, (33) மாட்டுக் கொம்பு, (34) மின்மினிப்பூச்சி, (35) மீனெலும்பு, (36) முட வாட்டுக்கால், (37) முட்சங்கு, (38) முட்டை (ஓடு), (39) முத்து, (40) முத்துச்சுப்பி, (41) யானைக்கொம்பு, (42) திமிங்கிலம், (43) கருவண்டு, ஆகியவையாம்.

**உபரசங்களின் பயன்கள்**

(1) இச் சரக்குகளில் பலவற்றைத் தக்கமுறையில் பற்பம், செந்தூரம், கண்ணம், எனப் பலவகை மருந்துகளாக்கி உள்

மருந்துகளாகப் பற்பல நோய்களுக்கு வழங்குவர். எடுத்துக் காட்டாக அன்னபேதி, செந்தூரம், கல்நார் பற்பம், காந்தப் பற்பம், காந்தச் செந்தூரம், அப்பிரகப் பற்பம், அப்பிரகச் செந்தூரம், நவமணிச் செந்தூரம், சங்குப் பற்பம், முத்துச்சிப்பிப் பற்பம், ஆமையோட்டுப் பற்பம், முட்டை யோட்டுப் பற்பம், நத்தைப் பற்பம் எனப் பலவாம். அவற்றின் செய்முறை முதலியவையும் வேதியியல் துறையில் பல சித்தர்கள் தத்தம் நூலில் பரக்கக் கூறியுள்ளனர்.

(2) உபரசச் சரக்குகளில் ஏற்புடையவற்றைச் சேர்த்துச் சத்தெடுத்து அந்த இரசத்தின் உதவியால் இரசத்தைக் கட்டி பலவகை இரசக் குளிகைகள் செய்வர். அதில் 'கமனக் குளிகை' என்பது குறிப்பிடத்தக்கது. இதன் உதவியால் சித்தர்கள் விண்வழிப் பயணம் செய்ததாக வரலாறுகள் கூறும்.

(3) பற்பல மாத்திரைகள், சூரணங்கள், இளகங்கள் என்னும் கூட்டுமருந்துகளில் சேர்ப்பர். எடுத்துக்காட்டாக அமுதாதிக் குளிகையில் சாத்திர பேதியும், மயிலிறகாதிச் சூரணத்தில் மயிலிறகு சுட்ட சாம்பலையும் நத்தை இளகம், ஆமை இளகம் என்னும் மருந்தில் முறையே நத்தை, ஆமை ஆகியவற்றின் தசைகளையும் சேர்த்துச் செய்வர்.

(4) சில உபரசப் பொருள்களைப் புறமருத்துவத்துக்குப் பற்றுகள், ஒற்றடங்கள், மேற்பூச்சுகள், வேதுபிடித்தல் முதலானவற்றுக்குப் பயன்படுத்துவர். வறுத்த மணல் ஒற்றடம், சுட்ட செங்கலிட்டு வேதுபிடித்தல், கிளிஞ்சல் மெழுகு பற்று, காவிக்கல் பற்று முதலியவை இதற்கு எடுத்துக் காட்டாக இன்னும் கைம்முறை மருத்துவங்களாகப் பாமர மக்களிடையேயும் வழக்கில் இருந்துவருவது கண்கூடாகும்.

(5) மேலே கூறிய உபரசங்களில் வைரம், வைடூரியம், நீலம் என்று கூறப்படும் நவமணிகளும் உள. அவற்றைக் கொண்டு பற்பல அணிகலன்களைச் செய்து அணிந்து கொண்டு அதன் பயனாகப் பற்பல நோய்களை வராமல் தடுத்துக்கொள்ளவும் வழிமுறைகள் சித்தர் நூல்களில் கூறப்பட்டுள்ளன.

(6) ஏமச்சிலை, ஏமமணல், வெள்ளிச்சிலை, வெள்ளி மணல் என்று பற்பல உலோகம் உள்ள கற்களும், மணல்

களும் உள்ளவற்றினின்று முறையாக அவ்வவற்றில் உள்ள உலோகங்களைப் பிரித்தெடுத்து உலோகங்களின் வகை களுக்கு ஏற்பப் பற்பல அணிகள், பாத்திரங்கள், படைகள், கருவிகள் முதலானவற்றைச் செய்தும் பயன்படுத்த வாய்ப் புண்டாம்.

## (இ) பாடாணங்கள்

பாடாணம் என்னும் சொற்குக் கல் என்று பொதுவான பொருள் உண்டு. இது கல்லைப்போல இறுகிக் கனத்துக் காணும் பொருள்களைக் குறிக்கும் எனினும், சித்தர் நூலில் கூறப்பட்டுள்ள பாடாணங்கள் மேற்கூறிய பண்புகளைக் கொண்டு பெரும்பாலும் பற்பல நச்சுக் குணங்களையும் பெற்றிருத்தல் உண்டு. இவ்வாறு பாடாண வரிசையில் ஒன்றாகக் கூறப்படும் சூதபாடாணம் என்னும் இரசம் (பாத ரசம்) திண்மையும் செறிவும் பெற்றிருப்பினும் நீர்த்த பொருளாக உள்ள ஒரே சரக்காகும். இதனை மிகச் சிறந்த பொருளாக எல்லாச் சித்தர் நூல்களும் கூறும்.

முன்னம் விவரித்த சரக்குகளில் உள்ளதுபோலப் பாடாணங்களிலும் பிறப்புப் பாடாணங்களும் வைப்புப் பாடாணங்களும் உண்டு. பெரும்பாலான சித்தர் நூல்கள் பிறப்புப் பாடாணங்கள் முப்பத்திரண்டும், வைப்புப் பாடாணங்கள் முப்பத்திரண்டுமாக மொத்தம் அறுபத்து நான்கு பாடாணங்களைக் கூறும். அவைகளின் விவரம் வருமாறு :

**பிறப்புப் பாடாணங்கள்**

(1) அஞ்சன பாடாணம், (2) அப்பிரக பாடாணம், (3) அரிதாரம், (4) அவுபல பாடாணம், (5) இரசம், (6) இலிங்க பாடாணம், (7) கச்சாலப் பாடாணம், (8) கவுரி பாடாணம், (9) கற்க பாடாணம், (10) கற்பரி பாடாணம், (11) கற் பாடாணம், (12) காந்த பாடாணம், (13) கார்முகிற் பாடாணம், (14) குதிரைப்பற் பாடாணம், (15) கெந்தக பாடாணம், (16) கோளக பாடாணம், (17) சங்க பாடாணம், (18) சரகாண்ட பாடாணம், (19) சாலாங்க பாடாணம், (20) சிலாமத பாடாணம், (21) சீதாங்க பாடாணம், (22) சீர்

பாத பாடாணம், (23) தாலம்ப பாடாணம், (24) தாளக பாடாணம், (25) துத்த பாடாணம், (26) தொட்டிப் பாடாணம், (27) பலண்டுருகப் பாடாணம், (28) மனோசிலை. (29) முரத பாடாணம், (30) வீரபாடாணம், (31) வெள்ளைப் பாடாணம், (32) வைக்கிராந்த பாடாணம் என்னும் முப்பத்திரண்டு பாடாணங்கள் இயற்கையில் (பிறப்புப் பாடாணங்களாகக்) கிடைக்கக் கூடியவை என்று சித்தர் நூல்கள் கூறும்.

**வைப்புப் பாடாணங்கள்**

(1) அயத்தொட்டிப் பாடாணம், (2) அரிதாரம், (3) இரசித பாடாணம், (4) இரசித சிங்கிப் பாடாணம், (5) இரத்தசிங்கிப் பாடாணம், (6) இரத்த பாடாணம், (7) இலிங்க பாடாணம், (8) ஏமசிங்கிப் பாடாணம், (9) கவுரி பாடாணம், (10) கார் முகில் பாடாணம், (11) கெந்தி பாடாணம், (12) கோழித் தலைக் கெந்தி, (13) வாணகெந்தி, (14) கோமுக பாடாணம், (15) செப்புத் தொட்டிப் பாடாணம், (16) சூதபாடாணம், (17) சோர பாடாணம், (18) திமுறுகல் பாடாணம், (19) துத்த பாடாணம், (20) துருசு, (21) நாகபாடாணம், (22) பவளப் புற்று, (25) பொற்றொட்டிப் பாடாணம், (26) வறபாடாணம், (27) வெண்முகிற் பாடாணம், (28) வெள்ளித்தொட்டிப் பாடாணம், (29) வெள்ளைப் பாடாணம், (30) குங்குமப் பாடாணம், (31) கோடாசூரி, (32) மிருதார சிங்கி என்பவை முப்பத்திரண்டு வைப்புப் பாடாணங்களாகும்.

இவ்வறுபத்து நான்கு பாடாணங்களுள் (1) இரசம் என்று கூறப்படும் சூதபாடாணம், (2) கெந்தகம் (கெந்தி அல்லது கெந்தி பாடாணம்), (3) வெள்ளைப் பாடாணம், (4) மனோ சிலை, (5) அரிதாரம், (6) கவுரி பாடாணம் என்னும் ஆறு பாடாணங்களும் பெருவாரியான கைப்பழக்கத்திலுள்ளவை யாம். ஆகவே, அவற்றைப் பற்றிச் சற்று விரிவாகக் கூறுவாம்.

மேலே கூறப்பட்ட ஆறு பாடாணங்களும் மனோ சிலையைத் தவிர உள்ள ஐந்து பாடாணங்களும் பிறப்புப் பாடாணங்களாகவும், வைப்புப் பாடாணங்களாகவும் சித்தர் நூல்கள் கூறும். இதிலிருந்து மேற்படி பாடாணங்களை அப் பாடாணம் கலந்துள்ள அல்லது இணைந்துள்ள அல்லது ஒன்றியுள்ள வேறு பொருள்களிலிருந்து வேறு பிரித்து எடுத்துக் கொள்ள இயலும் என்று கண்டுபிடித்து அதில் பண்டைக் காலச் சித்தர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள் என்பதைக் காட்டுவதாக உள்ளது. மேற்படி பாடாணங்களில், மனோ

சிலை மட்டும் பிறப்புப் பாடாணமாகத்தான் உள்ளது என்று புலனாகின்றமையால் இதை வைப்புப் பாடாணமாக்க இயலா தென்பதும் கூறாமலே விளங்கும்.

(1) **இரசம்**

**வேறு பெயர் :** சூதம், புண்ணியம், ஈசன், வீரியம், விந்து, பாரதம், சுக்கிலம், யோகம், ஞானம், நீர் எனப் பல பெயர்கள் உண்டு. எல்லாவற்றையும் கூறப்புகின் இப் பட்டியல் மிகப் பெரிதாகிவிடும். சட்டமுனி நிகண்டில் இரசத்தின் வேறு பெயர்களில் ஒன்றாகச் 'சரக்கிற் கலந்திடு சீவன்' என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

**கிடைக்கும் இடங்கள் :** இரசம் ஐரோப்பாக் கண்டத்தில் ஸ்பெயின், இத்தாலி, ரஷ்ய நாடுகளிலும், ஆசியாக் கண்டத்தில் சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளிலும் அமெரிக்காக் கண்டத்தில் கலிபோர்னியா நாட்டிலும் கனிகளிலிருந்து கிடைக்கின்றது. இது இலிங்கத்திலிருந்து பிரித்தெடுக்கப்படு கிறது. இரசமாகவே சிறுசிறு துளிகளாய் மிக்க குறைந்த அளவில் கிடைப்பதும் சேகரிக்கப்படுகின்றது. வாணிகப் பொருளாகக் கிடைக்கும் இரசத்தில் கல், மண், தூசிகள் இருப்பதுடன் காரீயம், வெள்ளீயம் என்னும் இரு உலோகங் கரைந்து இருக்கும். இதனைச் சித்தர் நூல்களில் கூறியபடி சுத்தம் செய்தே மருந்து செய்யப் பயன்படுத்தல் வேண்டும். ஆகவே, இலிங்கத்திலிருந்து எடுக்கப்படும் சுத்தமான இரசமே தூய்மையானதாகவும், அக மருத்துவத்துக்கு மிகவும் ஏற்ற தாகவும் சித்தர் நூல்கள் வலியுறுத்தும். அத்தகைய இரசத்தை 'வாலை இரசம்' என்பர்.

**பகைச் சரக்குகள் :** மிருதார சிங்கி, கௌரீ பாடாணம், வெள்ளைப் பாடாணம், குதிரைப்பல் பாடாணம், சத்திச் சாரம், வெடியுப்பு, சூடன் முதலியனவாம்.

**நட்புச் சரக்குகள் :** காரீயம், மனோசிலை, வீரம், தாளகம், துருசு, பவளப்புற்று ஆகியனவாம்.

இதற்குப் பகைச் சரக்குகளும் நட்புச் சரக்குகளும் இன்னும் பல உள. விரிவுக்கு அஞ்சி இதனுடன் நிறுத்தப்பட்டது.

**இரசத்தின் வகைகள்**

இது ஐவகைப்படும் : (1) இரசம், (2) இரசசேந்திரன், (3) சூதம், (4) மிசரகம், (5) பாரதம் என்பன. தற்காலத்தில்

கடைச் சரக்காகக் கிடைப்பது பாரதம் என்னும் வகையான இரசமேயாம். இது வெண்ணிறமுடன் பல தோடங்கள் நிறைந்ததாக இருக்கும். இதனை முறைப்படி சுத்தித்தே மருந்துகளில் சேர்த்தல் வேண்டும்.

**சுவை :** இதன் பெயருக்கு ஏற்ப ஆறு சுவைகளையும் உடையது. எனினும் இனிப்புச் சுவையே மேலோங்கி இருப்ப தால் இதற்கு இரசம் என்னும் பெயர் அமைந்தது எனலாம்.

**வீரியம் :** இது வெப்பதட்ப வீரியங்களை உடையது.

**பிரிவு :** எப்பொருளை இதற்குத் துணை மருந்தாக்கிக் கொடுக்கின்றோமோ அப்பொருளின் பிரிவையே இது அடை கின்றது என நம்பப்படுகின்றது.

**செய்கை :** இது உடல் தேற்றி, உடலுரமாக்கி, மலம் போக்கி, பித்த நீரகற்றி, வீக்கமுருக்கி, உமிர்நீர் பெருக்கி, சிறுநீர் பெருக்கி, மேகநாசனி என்னும் பல செய்கைகளை உடையது.

**இரசத்தின் பெருமை :** தென்மொழி, வடமொழி, அரபுமொழி முதலியவற்றில் தாதுப் பொருள்களைப்பற்றிக் கூறும் இந்திய மருத்துவக் குணபாடங்களில் இரசத்துக்கு ஒப்பான வேறு ஒரு பொருள் கூறப்படவில்லை என்பது மிக்க வியப்பான செய்தி யாகும். இதன் பெருமை அளவு கடந்ததாகும். அதில் சில வற்றை இங்குக் கூறுவோம் :

சில சரக்குகள் சிற்சில நோய்களுக்குச் சிறப்பாகக் கூறப் பட்டிருப்பினும் வேறுசில நோய்களுக்கு அறவே விலக்க வேண்டி எச்சரிக்கை கூறப்பட்டுள்ளது. ஆனால், இரசத்தை எந்தப் பிணிக்கும் வழங்கலாம் என்னும் சலுகை உண்டு. சில சரக்குகள் வெப்பத்தால் உண்டாகும் நோய்களுக்கு ஏற்ற தென்றும், தட்பத்தால் உண்டான பிணிகளுக்கு விலக்க வேண்டுமென்றும் நியதிகள் உண்டு. அதேபோலத் தட்ப நோய்களுக்கு ஏற்றது வெப்பநோய்க்கு விலக்க வேண்டு மென்னும் கட்டுப்பாடு உண்டு. சில சரக்குகள் வெளிப் பிரயோகத்துக்கு மட்டும் பரிந்துரை செய்யப்படும் ; உட் கொள்ள அனுமதி கிடையாது. அதேபோல, அக மருத்துவத்துக்கு அனுமதிக்கப்பட்ட பொருள் புற மருத்துவத் துக்கு விலக்கப்பட்டுவிடும். ஆனால், இரசத்தால் செய்யப் பட்ட மருந்துகள் வெப்பதட்ப நோய்கள் யாவற்றுக்கும் ஒத்த

தாகக் கருதப்பட்டு வழங்கப்பட்டும் வருவதுண்டு. அதே போல் எவ்வகை நோயினும் அகமருந்தாகவேனும் புற மருந்தாகவேனும் கையாள அனுமதியுண்டு.

ஆனால், இதனை நல்லபடியாகத் தூய்மையுறச் செய்து மருந்துகளில் பயன்படுத்தல் வேண்டும். அரைகுறையாகச் சுத்தித்த இரசத்தால் பல தீங்குகள் ஏற்படுவது திண்ணம். இதன் விவரங்களை மருத்துவக் கலை வல்லுநர்கள் வாயி லாகவும், அவர்களுடன் பயிலுவதாலும் அறிதல் வேண்டும்.

இரசம் பற்பம், செந்தூரம், சுண்ணம் என்னும் மருந்து வகையில் கையாளப்படுகின்றது. இது சேராத மாத்திரைகளும், மெழுகுகளும் சித்த மருத்துவ முறையில் மிக அருமை என்று துணிந்து கூறலாம். இது சிறப்பாக, தற்போது கிடைத்துள்ள சித்தர் முறைகளில், இரசத் தைலம் (தேரையர் தைலவர்க்கம்) என்னும் முறையில் தாவரப் பொருள்களுடன் கூடித் தயாரிக்கும் முறை ஒன்று உள்ளது.

## (2) கந்தகம்

**வேறு பெயர்கள் :** நாதம், பரைவீரியம், அதீதப் பிரகாசம், தேவிபுரம், சத்தி, சத்திபீஜம், தனம், பொன்வர்ணி எனப் பல பெயர்கள் உண்டு. இதனைக் கெந்தகம் அல்லது கெந்தி என்றும் வழங்குவதுண்டு.

மேலே கூறப்பட்ட அறுபத்து நான்கு பாடாணங்களில் பிறப்புக் கந்தகம், வைப்புக் கந்தகம், கோழித்தலைக் கந்தகம், வாணக் கந்தகம் என நான்கு வகைகள் கூறப்பட்டுள. அவற்றுள் பிறப்புக் கந்தகம் இயற்கையான மலைகளில் பிறக் கின்றது. மற்ற மூன்று வகையும் மேற்படி கந்தகத்தை முதலாக வைத்துச் செயற்கை முறையில் செய்யப்பட்டு வருகின்றவையே. சித்தர் நூல்களில் பிறப்புக் கந்தகம் நிறத் தாலும் செயலாலும் நான்கு வகையாகும் என்று கூறப் பட்டுள்ளது. அவை : (1) வெண்ணிறக் கந்தகம் — எல்லா நோய்களையும் தீர்க்கவல்லது. (2) கிளிமூக்குப் போன்ற செந்நிறக் கந்தகம் — எல்லா உலோகங்களையும் பொன் னாக்க வல்லது. (3) பொன்னிறம் அல்லது நெல்லிக்காய் போன்ற நிறமுடையது. இஃது இரசத்துடன் கலந்து உறவாகி இருக்கும். (4) காகத்தின் நிறம் (கறுப்பு நிறம்) உடையது. இது நரை, திரையை நீக்கவல்லது. மேற்படி நான்கு வகை யில் ஈற்றது கிடைப்பது மிக மிக அரிது. இவற்றுள் மூன்றாவ

தாகக் கூறப்பட்ட பொன்னிறக் கெந்தி எங்கும் மருந்து வகைகளுக்கு மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதனை நெல்லிக்காய்க் கந்தகம் என்பது வழக்கு. மேலே கூறப்பட்ட வைப்புமுறைக் கந்தகத்தில் வாணகந்தி (சுரக்கந்தி) என்னும் வகையைப் புறமருத்துவத் துறையில் பெரிதும் பயன்படுத்துவர்.

இதன் பகைச்சரக்கு — தாம்பிரம்; நட்புச்சரக்கு — இரசம். இதன் பெரும்பயன் — இதனைக் கொண்டு ஏறத்தாழ எல்லா உலோகங்களையும் செந்தூரமாக்கலாம். அக்காரணம் பற்றியே, இதனைச் சித்தர் நூல்களில் சிந்தூரத்தாதி என்று குறிப்பிட்டுள்ளனர்.

**சுவை, செய்கை, குணம்:** கெந்தியென இதற்குப் பெயர் அமைந்துள்ளமையே இஃது இயல்பான குறிப்பிடத்தக்க மணத்தை உடையதாகும் என அறியலாம். கைப்பும் துவர்ப்புமான சுவை இதற்கு உண்டு. கந்தகம், பித்தநீரை அதிகம் சுரப்பித்தல், மலமிளக்கல், உடல் தேற்றல், வியர்வையைப் பெருக்கல் கிருமிகளை அழித்தல் என்னும் செய்கைகளைச் சிறப்பாக உடையது. இதனைச் சிறிய அளவில் உட்கொண்டாலும் வியர்வை, சிறுநீர், பெண்களின் தாய்ப்பால் ஆகியவற்றின் வழியாக வெளியேறும் என்பதை மேற்படி கழிவுப்பொருள்களில் இச் சரக்கின் நாற்றம் இருப்பதைக் கொண்டு அறியலாம். இது தோலின் உட்பாகத்திலுள்ள சுரப்பிகளையும், குதத்திலுள்ள சுரப்பிகளையும் தூண்டிச் சுறுசுறுப்பாக்கிச் சுரப்புகளை அதிகப்படுத்தும். இதை அதிக அளவில் உட்கொண்டால் பேதியாகும்.

இதற்குப் பற்பல சுத்திமுறைகளைச் சித்த மருத்துவ நூல்களில் விவரித்துள்ளனர். இதன் சுத்தி முறையில் பசுவின் பால் பெரும் பங்கு கொள்ளும்.

சித்த மருத்துவத்தில் இரசம் சேரும் பெரும்பாலான மருந்துகளில் கந்தகம் இல்லாமலில்லை. ஆகவே, இரசமும் கந்தகமும் இணைபிரியா நண்பர்கள் என்று கூறலாம்.

இதனை முறைப்படி சுத்தித்துத் தனி மருந்தாகவே பயன்படுத்துவதுண்டு. இதனைப் பற்பம், செந்தூரம் எனச் சிறந்த முறைகளாகச் செய்து தீராப்பிணிகளாகிய குட்டம், மேகம் முதலானவற்றைக் குணப்படுத்த உள்மருந்தாக பயன்படுத்த

லாம். இதனைச் சுடர்த் தைலம் என்னும் ஒருவகைத் தைல முறையில் சேர்த்துச் சொட்டளவில் கொடுத்து நாட்பட்ட தீரா நோய்களைக் குணப்படுத்தலாம். இதனை இரசாயனமாகச் செய்து தீராத தோல் நோய்களுக்கு நல்ல உடல்தேற்றியாகப் பயன்படுத்தலாம். மற்றும் இது பல சரக்குகளுடன் இரசத்தின் துணையுடனும், தனிப்படவும் பற்பல மாத்திரை முறைகளில் பயன்படுத்தப்படுகிறது. மேலும் கந்தக வடகம், கந்தக மெழுகு, கந்தகத் தைலம் எனப் பற்பல முறைகளில் கந்தகத்தை முதற் சரக்காக வைத்துத் தயாரிக்கும் முறைகள் பல உள. அவற்றின் பயன்களும் கந்தகத்துடன் கூடும் சரக்குகளின் செய்கைக்கு ஏற்ப நற்பயனை விளைக்க வல்லதாக அமையும்.

## (3) கௌரி (கவுரி)

**வேறு பெயர் :** ஈசுவரி, சிவகாமி.

இது பிறப்புப் பாடாணமாகும். வைப்புப் பாடாணமாகவும் சில சித்தர் நூல்கள் கூறும். ஆகவே, இதில் இயற்கைப் பாடாணமாகவும் செயற்கைப் பாடாணமாகவும் இருவகை உண்டு என்று அறியக் கிடக்கின்றது. இயற்கையில் கிடைக்கும் இப் பாடாணம் நிறத்தின் வேறுபாட்டால் செம்மை, மஞ்சள், வெம்மை நிறக் கௌரி பாடாணங்கள் உண்டென்பர். ஆனால், விற்பனைக்குக் கிடைக்கும் சரக்குப் பெரும்பாலும் செந்நிறத்ததாகவே உள்ளது.

இதனையும் சித்தர் நூல்களில் கூறியுள்ள முறைப்படி சுத்தம் செய்த பின்னரே மருந்துகளில் சேர்த்தல் வேண்டும்.

சுரம் போக்கி, முறைச்சுரம் போக்கி, வளிப்பிணியகற்றி என்னும் செய்கைகள் இப் பாடாணத்துக்கு (கவுரி) உண்டு.

இதைத் தனிச் சரக்காகக் கொண்டு பற்பம், செந்தூரம், சுண்ணம் போன்ற முறைகள் சாதாரணமாகக் கையாளப் படுவதில்லை. இதனைக் கட்டு மாத்திரையாகச் செய்து விடாச் சுரங்கள், மாறல் சுரங்கள், முக்குற்றச் சுரங்கள் ஆகியவற்றுக்கு ஏற்ற துணை மருந்துகளில் இழைத்து உள்ளுக்குக் கொடுத்தல் உண்டு. இக் கட்டு மாத்திரை முறைகளை வேதியியல் துறையின் சிகரம் எனக் கூறலாம்.

இது பற்பல சுரக்குளிகைகளில் பலசரக்குகளில் ஒன்றாகச் சேர்க்கப்படுகின்றது. வாதப் பிணிக்கு வழங்கும் மருந்துகளிலும், மெழுகு, குளிகை முதலிய முறைகளிலும் ஒரு கூட்டுச் சரக்காகத் திகழவல்லது. இதனை முதற்சரக்காகக் கொண்ட 'கௌரி மாத்திரை', 'கௌரி மெழுகு' என்னும் பெயர் கொண்ட சிறந்த மருந்துகள் பல உண்டு.

(4) **அரிதாரம்** (Trisulphurate of Arsenic)

**வேறு பெயர்:** பீதகி, ஆலம்பி, தாளகம், காற்புத்தி, பழுப்பு, கோதந்தம், மால்தேவி.

இதனுடைய நிறம், உருவம், குணம் ஆகியவற்றின் அடிப்படையில் சிவந்த அரிதாரம், மடலரிதாரம், பொன்னரிதாரம், கரட்டரிதாரம் என நால்வகையாக நூல்கள் கூறும். வேறு சில நூல்கள் பத்திர அரிதாரம், பிண்ட அரிதாரம் என இரு வகைகளே உண்டென்று கூறும்.

நம் நாட்டில் இஃது இரும்புடன் கலந்து மிகச் சிறிய அளவில் ஆர்ஸனிக் பைரேட் (Arsenic pyrite) என்னும் தாதுப் பொருளாகக் கிடைக்கின்றது. இது பெரும்பாலும் சுமத்திரா, சீனா, துருக்கி முதலிய வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

இது திண்மை உடையதாகவும், நெருப்பிலிட்டால் நீலநிறப் புகையெழுப்பவல்லதாகவும் இருக்கும். இச் சரக்கை யூனானி மருத்துவர்கள் கையாள்வதில்லை. ஆனால், சித்தமருத்துவர்கள் நெடுங்காலமாக மருந்து முறைகளில் கையாள்வதுண்டு.

'அரிதாரப் பொன்னுக்கு (ஹா) ஆனியில்லை' என்னும் பழமொழியைக் கொண்டு இது வேதையில் முக்கியச் சரக்காகும் என்பது அறியக் கிடக்கின்றது. இது 'களங்குக்கு ஆதி' என்று நூல்கள் சிறப்பித்துக் கூறும்.

மேலே கூறிய கௌரி பாடாணத்தைப் போல இதனையும் கட்டு மாத்திரையாகச் செய்து பற்பல சுரப்பிணிகளுக்குப் பயன்படுத்தலாம்.

இது கோழையகற்றி, சுரமகற்றி, வாந்தியுண்டாக்கி, நச்சரி (விடத்தன்மையைப் போக்கி), உடல்தேற்றி, உடலுரமாக்கி என்னும் செய்கைகளை உடையது.

இதனையும் முறைப்படி சுத்தம் செய்தே மருந்தாகச் செய்தல் வேண்டும். இதைத் தனிச் சரக்காகக் கொண்டு பற்பம், செந்தூரம் என்னும் பல உயர்ந்த மருந்துகள் செய்து பயன்படுத்தப்படுகின்றன. தாளகக் கருப்பு, தாளக மாத்திரை, தாளக எண்ணெய் என்னும் சில மருந்து முறைகளும் இதைக் கொண்டு செய்து பயன்பெறலாம்.

### (5) மனோசிலை

**வேறு பெயர் :** சிலை, வில், நடி, நான்முகன் தேவி, சர சோதி, வாணி, வெள்ளைச்சி, தாமரை வாசனி.

இதனைப் பிறப்புப் பாடாண வகையைச் சேர்ந்ததெனப் பெரும்பாலான சித்தர் நூல்கள் கூறும். சில சித்தர் நூல்களில் வெள்ளைப் பாடாணம், கெந்தகம் ஆகிய இரண்டையும் ஐந்துக்கு மூன்று என்னும் அளவுப்படி கூட்டிச் செய்யப்படும் கூட்டுப் பாடாணம்தான் வைப்பு மனோசிலை என்று கூறப் படும். பிறப்புப் பாடாணம் அருகிய காரணத்தால் மேற்படி வைப்புமுறை கையாளப்பட்டுத் தொன்றுதொட்டு வழக்கில் இருந்திருப்பது நூல்கள் வாயிலாகப் புலனாகின்றது.

சிலர் சிவந்த அரிதாரம், மடலரிதாரம், குதிரைப்பல் பாடாணம் ஆகியவை மனோசிலையைக் குறிக்கும் என்று கூறுவர்.

இஃது உடல்தேற்றி, உடலுரமாக்கி, வெப்பகற்றி என்னும் சிறந்த செய்கைகளை உடையது. இது பெரும்பாலும் வெப்புப் பிணிகளுக்கு வழங்கப்படும் சிறந்த மருந்தாகும். இதையும் முறைப்படி தூய்மை செய்தே உள் மருந்தாகப் பயன்படுத்த வேண்டும்.

இதைத் தனியே பற்பித்தோ சிந்தூரித்தோ வழங்குதல் பெரும்பாலும் இல்லை. எனினும், இதனுடைய பற்ப முறையும் ஆட்சியும் பண்டைக் காலத்தில் வழக்கிலிருந்தது என்பதைத் **தேரையர்** என்னும் சித்தர் இயற்றிய **கரிசல்** என்னும் நூலில், — வில்லைக் கணையா லடலைத்தீ காய்தலின்,' என்று மனோசிலையை திப்பிலிச் சாற்றால் பற்பித்துக் கபசுரத்துக்கு வழங்கும் முறையைக் கூறி இருப்பதால் அறியலாம். இதனைச் செந்தூரமாக்கும் முறையும் நூல்களில் உண்டு.

இதனைப் பிற சரக்குகளுடன் சேர்த்து மாத்திரை, கறுப்பு மெழுகு, தைலங்கள், என்னும் முறைகளில் சேர்த்து மருந்தாக்கி வழங்கி வருதல் உண்டு. அவற்றுள் கைப்பழக்கத்தில் சிறந்து இருப்பவை மனோசிலை மாத்திரை, சிவனாரமுதம் ஆகியவையாம்.

இதைக்கொண்டு எண்ணெய் செய்து தொழுநோய்ப் புண்களுக்குப் புறமருந்தாகப் பயன்படுத்தினால் தொழுநோய்ப் புண்கள் விரைவில் ஆறிவிடும். இதைக் தக்கபடி பக்குவம் செய்து மாத்திரையாக்கியதைத் தீயிலிட்டுப் புகைத்து அப் புகையை வெண்குட்டமுள்ள இடங்களில் படும்படியாகச் சில நாள்கள் செய்துவந்ததால், தோலின் வெண்ணிறம் போய் இயல்பான நிறம் உண்டாகும்.

இது, கண்ணோய்களுக்குப் பயன்படும் சிறந்த மாத்திரையாகிய சந்திரோதய மாத்திரையில் ஆறு சரக்குகளில் ஒரு சரக்காகச் சேர்கிறது.

**(6) வெள்ளைப் பாடாணம்** (Arsenious Acid, White Arseivic)

**வேறு பெயர் :** வெள்ளை.

சங்க பாடாணம் அல்லது சங்குப் பாடாணம் என்பதும் இதுவேயென்பர் சில நூலோர். ஆனால் அவற்றுக்கிடையே வேறுபாடுகள் உண்டு.

| வெள்ளைப் பாடாணம் | சங்குப் பாடாணம் |
|---|---|
| 1. **நிறம்:** சீமைச் சுண்ணாம்பினது. | 1. **நிறம் :** வெண் சங்கினது. |
| 2. இதன்மேல் நீர் தெளித்தால் அதை உள்ளுக்கு இழுத்துக்கொள்ளும். | 2. நீரிம் கரைந்து போகும். |
| 3. தோலில் பட்டால், பட்ட இடத்தில் தடிப்பு உண்டாகும். | 3. தோலில் ஒட்டாது. பட்டால் தடிப்பு உண்டாகாது. |
| 4. தீயிலிட்டால் வெள்ளைப் பூண்டு மணத்துடன் புகையெழும்பும். | 4. நெருப்பில் புகையும். ஆனால் வெள்ளைப் பூண்டு மணம் வாராது. |
| 5. வெட்டுவாயில் பளபளப்பு இராது. | 5. வெட்டுவாய் கண்ணாடி போலப் பளபளத்து ஒளிரும். |
| 6. எளிதில் உடைந்து தூளாகாது. | 6. எளிதில் உடைந்து தூளாகும். |

இது தற்காலம், ஏறக்குறைய அறுபது ஆண்டுக் காலமாகக் கிடைப்பது அரிதாகிவிட்டது. நூல்களில் வெள்ளைப் பாடாணம், சங்குப் பாடாணம் ஆகியவற்றைக் கட்டவேண்டிய இடங்களிலெல்லாம் சங்குப் பாடாணத்தையே பயன்படுத்தி வருவது பழக்கமாகிவிட்டது.

இப் பாடாணம் பெரும்பாலும் அயம், கந்தகம், தாமிரம் என்னும் சரக்குகளுடன் கலந்தே கிடைக்கும். சில சமயங்களில் கலப்பில்லாத தனிச் சரக்காகவே கனிகளிலிருந்து கிடைக்கின்றது.

வெள்ளைப் பாடாணம் மிகக் குறைந்த அளவில், பசித் தீத்தூண்டி, உடல் தேற்றி, நரம்புத் தளர்வு நீக்கி, உடலுரமாக்கி, சுரம் போக்கி ஆகும். மற்றும் இஃது இதயம், நுரையீரல், குடல், பிறப்பு உறுப்பு ஆகியவற்றை தூண்டும் தன்மை உடையது.

உடல் தாதுக்களுக்கு வன்மையை உண்டுபண்ணி நோயணுகாமற் பாதுகாக்கும் மேன்மையான பண்பும் இதற்கு உண்டு.

யுனானி மருத்துவர்கள் இதனைத் தாதுவிருத்திச் செய்கைக்காக அதிகமாகக் கையாள்கின்றனர்; மற்றும் பறங்கி நோய்களை தீர்க்கவும் இதனைப் பயன்படுத்துகின்றனர். மேல்நாட்டு மருத்துவ முறையில் ஏறக்குறைய முப்பதாண்டுகளுக்குமுன் பறங்கி நோய்க்கு மிக்க ஏற்றமுள்ள மருந்தாகக் கருதப்பட்ட வெள்ளைப் பாடாணத்தால் செய்த மருந்து வகைகள், தற்போது அறவே கைவிடப்பட்டு வழக்கொழிந்தும் போய்விட்டன.

இதனையும் முறைப்படி சுத்தித்தே மருந்துகளில் சேர்க்க வேண்டும். இதைத் தனிப்பட்ட முறையில் பற்பமாகவும் செந்தூரமாகச் செய்தும் கட்டுமாத்திரையாகச் செய்தும் பயன்படுத்துவதுண்டு. இதனைச் சுரம் தீர்க்கும் மாத்திரைப் பிரயோகங்களில் சேர்த்துப் பயன்படுத்துவர்.

இப் பாடாணத்தைச் சேர்த்துச் செய்த விடக்குழம்பு என்னும் மருந்தால் நல்ல பாம்புக் கடியால் ஏற்பட்ட நஞ்சும் முறிந்து நலமுறும் என்பது அனுபவ வாயிலாக அறியக் கிடக்கின்றது.

மேலே கூறப்பட்ட ஆறு பாடாணங்களுக்கும் அளவு கடந்த நற்பண்புகள் உண்டெனினும் நச்சுக் குணமும் அதே அளவுக்கு உண்டு. அவற்றைப் பற்றிச் சித்த மருத்துவ நூல்களில் நச்சு முறிப்பு மருத்துவத்தில் பரக்கக் கூறப் பட்டுள்ளது. ஆகையால், மேற்படி சரக்குகளை நன்கு சுத்தித்தே மருந்து முறைகளில் சேர்க்கவேண்டுவது இன்றி யமையாததாகும்.

## (ஈ) உலோகங்கள்

உலோகங்கள் பதினொன்றாகும். அவை தங்கம், வெள்ளி, செம்பு, நாகம், உருக்கு, இரும்பு, வெண்கலம், பித்தளை, தரா, கருவங்கம், வெள்வங்கம் என்பன.

இவற்றில் வெண்கலம், பித்தளை, தரா ஆகிய மூன்றும் செயற்கை உலோகங்கள். மற்றவை இயற்கை உலோகங் களாகும். செயற்கை உலோகங்களை வைப்பு (allon) உலோகங்கள் எனவும் இயற்கை உலோகங்களைப் பிறப்பு உலோகங்கள் எனவும் கூறுவர்.

ஐம்பூதங்களின் சேர்க்கையால் இப் பிரபஞ்சம் தோன்றிய தத்துவத்தின் அடிப்படையில் உலோகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பூதத்தினை முதன்மையாகக் கொண்டுள்ளது. அவ்வாறே தங்கம் பிருதிவி பூத உலோகமாகவும், கருவங்கம் அப்பு பூத உலோகமாகவும், செம்பு தேயு பூத உலோகமாகவும், அயம் வாயு பூத உலோகமாகவும், நாகம் ஆகாய பூத உலோகமாகவும் நமது சித்த மருத்துவ நூல்களில் பகுத்துக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். இவையன்றி ஏனைய உலோகங்களும் ஐம்பூதக் கலவையினால் ஆனவையே. அவற்றிலும் முதன்மையான தன்மையை ஒரு பூதம் ஏற்றுக் கொண்டு, அவ்வுலோகத்தில் அதன் தன்மையை மிளிரச் செய்யும்.

**நவலோகங்கள்**

| | |
|---|---|
| பொன் | பித்தளை |
| இரும்பு | தரா |
| செம்பு | துத்தநாகம் |
| ஈயம் | வெண்கலம் |
| வெள்ளி | |

—பிங்கல நிகண்டு

## 1. தங்கம்
## (Aurum - Gold)

**தங்கத்தின் வேறு பெயர்கள் :** மாசை, ஒதகம், பீதம், மாடை, மாடு, வேங்கை, ஆசை, சுவணம், காரம், அருத்தம், காஞ்சனம், காணம், தேசிகம், கனகம், கைத்து, செந்தாது, பொலம், அத்தம், சாமி, வித்தம், தனம், உடல் பண்டம், இரணியம், நிதி, வெறுக்கை, ஈகை, திரசியம், சாதரூபம், செங்கோல், நிதானம், மாழை, அரி, தபனியம், தமனியம், ஆடகம் என்பன.

### தோற்றம்

இது பிருதிவித் (மண்) தன்மையுடைய உலோகம். நாணய கால உலோகங்களில் (coinage) தங்கம் முதன்மையானது. நாகரிகத்தின் தோற்றக் காலத்திலிருந்து, தங்கம் சிறந்த ஓர் இடத்தைப் பெற்று இன்றும் உயர்வுடன் போற்றப்பட்டு வருகிறது.

உலகில், தென் ஆப்பிரிக்காவில்தான் மிகுதியாகத் தங்க வயல்கள் உள்ளன. இந்தியாவில் கருநாடக மாநிலத்தில் கோலார்ப் பகுதியில் தங்கக் கனிவளம் இருப்பதை அறிவோம். இன்று உலகில் கிடைக்கும் தங்கக் கனிவளத்தில் இந்தியாவின் பங்கு ஏறக்குறைய நூற்றுக்கு மூன்று பங்குதான். இயற்கைக் கனிவளத்திலிருந்து புதிய முறைகளால் தூய தங்கம் பிரித்தெடுக்கப்படுகிறது.

### தங்கத்தின் சிறப்பு

| | | |
|---|---|---|
| அணு எடை | — | 197.2 |
| உருகுநிலை | — | 1063° |
| கொதிநிலை | — | 2660° |

காற்றில் கலந்த மலினங்கள் பொன்னின் தன்மையை மாற்றுவதில்லை. எளிதில் வெள்ளியுடனும் செம்புடனும் சேர்ந்தாலும், இயற்கையில் தனித் தன்மை உடையது. வெள்ளியின் சேர்க்கையில், அது வெளிர் பசுமஞ்சளாகவும் செம்பின் சேர்க்கையில் செம்பொன்னாகவும் தோன்றும். மற்ற உலோகங்களைப் போன்று எளிதில் நீரகங்களினால் மாசடைவதில்லை. 'அக்வா ரீஜியா' (Aque Regia) என்னும் நீரகக் கலவையில் (Conc Nitric Acid 1 Part, Conc Hydrocloric Acid

3 Part) மட்டுமே கரையவல்லது. இரசம், சயனைட் இவற்றிலும் தங்கம் கரைந்து உருமாற்றம் பெறும். மிருதுவான தன்மையுடைய இவ்வுலோகத்தை எளிதில் நீட்டவும், தட்டிப் பரப்பவும் இயலும்.

**தங்கத்தின் தரம்**

பொன்னின் தரம் என்பது அதனுட் காணும் தூய பொன்னின் அளவேயாகும். மாற்று என்னும் அளவை முறையினால் தரம் கணிக்கப்படுகிறது. பத்தரை மாற்றுத் தங்கம் என்று முழுத் தூய்மையான தங்கத்தை கூறுவர். நவீன முறையில் காரட் (Carat) என்னும் அளவு முறை கையாளப் படுகிறது. தூய தங்கம் 24 காரட் அளவுடையது. செம்பு கலந்த தங்கம் மாற்றுக் குறைவானதாக மதிப்பீடு செய்யப் படுகிறது.

தரத்தின் அளவாக, நமது மருத்துவத்தில் பொன்னை நான்கு வகைகளாகக் கூறுவர். அவை : (1) ஆடகம், (2) கிளிச்சிறை, (3) சாதரூபம், (4) சாம்பூநதம் என்பன.

சில உலோகங்களுடனோ, உபரசங்களுடனோ, கார சாரங்களுடனோ சேர்க்கை ஏற்படும்போது பொன்னின் தன்மையில் மாற்றம் ஏற்படுகிறது. இவ்வாறு பொன்னின் தனித்தன்மைக்குத் தீங்கு விளைவிக்கும் சரக்குகளுக்குப் பகைச் சரக்குகள் என்றும், பொன்னின் தனித் தன்மையைத் தீங்கின்றி மேலும் மிளிரச் செய்யும் சரக்குகளுக்கு நட்புச் சரக்குகள் என்றும் பெயர்.

எடுத்துக்காட்டாக முட்டை ஓடு, அப்பிரகம், காந்தம், வெடியுப்பு, வங்கம், இலிங்கம் ஆகியவை பகைச் சரக்குகளாகும். செம்பு, வெள்ளி, நவமணிகள், சூடன், கல்லுப்பு, பச்சைக் கற்பூரம், நவச்சாரம், வெங்காரம் ஆகியவை நட்புச் சரக்குகளாகும்.

**பொன்னின் தன்மை**

தன்மை : பிருதிவித் தன்மை
சுவை : இனிப்பு
வீரியம் : வெப்பம்
பிரிவு : இனிப்பு

சிறப்பு : இனிப்புச் சுவை ஐயக்குற்றத்தை மிகுதிப் படுத்தும் எனினும், தங்கம் அதற்கு மாறாக, தன்னகத்தே உள்ள, தனிச் சிறப்பினால் ஐயக்குற்றத்தின் சீற்றத்தைத் தணிக்கும்.

செய்கை : நரம்புகளுக்கு உரமூட்டுதல், உடல் தேற்றல், நினைவாற்றலைப் பெருக்குதல் ஆகியவை குறிப்பிடத்தக்க செய்கைகளாகும். மேலும், இளைப்பு நோய், காசம் போன்ற நோய்களில் வேற்று நிலைப்பட்ட ஐயக்குற்றத்தைத் தன்னிலைப்படுத்தி, நோய் நீக்கம் பெறச் செய்கிறது.

**தங்கத்தின் நச்சுத் தன்மை :**

செய்முறை தவறிய தங்க பற்ப, செந்தூரங்களை உட்கொண்டாலும், அன்றி அளவு தவறி உட்கொண்டாலும் விடத் தன்மைகள் தோன்றும், இரைப்பை, குடல் இவற்றில் எரிச்சல் உண்டாகி மயக்கம், வலிப்பு (cramps), நீர்ப் பை கெடல், சுரம், தோல் வெடித்துப் புண்களாதல் ஆகிய தீமைகள் ஏற்படும்.

**விடத்திற்கு முறிவு :** முட்டை வெண்சத்து, பால், மாவினால் செயத பண்டங்கள் இவற்றை உட்கொள்ளல் வாயிலாக நச்சுத் தன்மையை நீக்கலாம்.

**தங்கத்தின் சுத்தி**

செம்மண் பற்றிட்டு அகலில் வைத்து அடுப்பேற்றி, வாட்டிக் கழுவி, ஆறுமுறை இவ்விதம் செய்வது சுத்தியாகும். தங்கத்தினால் செய்யப்படும் மருந்துகள் :

1. தங்கபற்பம்
2. தங்கச் செந்தூரம்

துவரை இலை, ஆத்தி இலை, ஆமணக்கிலை, அகத்தி, வாழைக்கனி, இவற்றின் சாறுகள் தங்கத்தைப் புடமிடப் பயனாகின்றன. புடமிட்ட பிறகு கிடைக்கும் தங்க பற்பம் ஏனைய பற்பங்களைப் போன்று தூய வெண்மையாயிராமல் மஞ்சள் நிறத்தை உடையதாய் இருக்கும்.

குட்ட நோய், நரம்புத் தளர்ச்சி, காசநோய், மூலநோய், பெருவயிறு முதலிய பிணிகளுக்குத் தங்க பற்பம், தங்கச் செந்தூரம் கொடுக்கப்படுகிறது.

## 2. செம்பு
(Copper - Cuprum)

**வேறு பெயர்கள்**

அவுதும்பரம், உதும்பரம், இரவி, இராசி, இரவிப் பிரியம், எருவை, சீருமை, கற்பம், சுல்பம், தாமிரம், தாம்பிரம், பரிதி, விடு, விடம் என்பன.

**தோற்றம்**

வட அமெரிக்காவில் சுபீரியர் ஏரி (Lake Superor) அருகிலும், நேபாளம் மற்றும் மத்திய ஆப்பிரிக்க நாடுகளிலும் செப்புக் கனிவளங்கள் உள்ளன.

**சிறப்பு**

| | | |
|---|---|---|
| செம்பின் அணு எடை | — | 63.57 |
| உருகுநிலை | — | 1083°C |
| கொதிநிலை | — | 2380°C |

பல்விதமாயின தாது சீவப் பொருள்களில் செம்பு சேர்ந்திருப்பதைப் பண்டைத் தமிழ் நூல்கள் வாயிலாக அறிகிறோம்.

"செவ்வைச் சிகப்புக் கொடியின் சிறுகீரை
செவ்வலிக் கையான்மிரி செந்தரிஅய் — ஒவ்வுமிடம்
மூக்கி புளிதுயை மூதோ ரிலைக்கஞ்சந்
தேக்கவுரி மூலமிவை செம்பு"

—தேரையர் அந்தாதி

**மருந்திற்குப் பயன்படும் செம்பின் சிறப்புப் பண்புகள்**

பிற பொருட் கலப்பின்மை, சிவந்த தாமரை நிறம், மின்னும் ஒளி, காற்றில் பட்டால் பசுமையான மாற்றம், கடினமான தோற்றமாயினும் வெட்டுக்கு எளிதாய் உட்படுதல், வெட்டு வாயில் செந்நிறமும் ஒளிமையும் காணல், உருகும்போது பசும்புகை வெளிப்படல், சூடாறியபின் மேற்புறம் கருமை நிறமடைதல், குளிர்ந்த வெடியுப்புத் திராவகத்தில் மட்டுமே கரைதல், அதிகச் சூட்டையும் மின்சக்தியையும் தாங்கி ஈர்த்துச் செல்லும் சிறப்பு உடைமை, பிற உலோகங்களுடன் எளிதில் கலக்கும் தன்மை உடைமை ஆகியன.

பகைச் சரக்குகள் : (1) கருவங்கம், (2) வெடியுப்பு

நட்புச் சரக்குகள் : (1) அயம், (2) இரசம்,
(3) தங்கம், (4) நாகம்

**செம்பின் தன்மை**

ஐம்பூதக் கூறில் செம்பு தீக்கூறைக் சார்ந்தது.

சுவை : கார்ப்பு, கைப்பு

வீரியம் : வெப்பம்

பிரிவு : கார்ப்பு

**செய்கை**

வறட்சி, வெப்பம் உண்டாக்குதல், இசிவகற்றி, உடல் தேற்றல் என்பன.

**செப்புக் கலவை உலோகங்கள்**

(1) பித்தளை : செம்பு, நாகம்

(2) மணி உலோகம் : செம்பு, தகரம்

(3) வெண்கலம் : செம்பு, நாகம், வெள்வங்கம், தகரம்

(4) பீரங்கி உலோகம் : செம்பு, தகரம்

(5) ஜெர்மன் வெள்ளி : தாமிரம், நாகம், நிக்கல்

**செம்பின் நச்சுத் தன்மை**

அச்சம், இருமல், விக்கல், மயக்கம், வாயில் நீர்ஒழுகல், தொண்டை அடைப்பு, மார்பு எரிச்சல் என்பன.

நச்சு முறிவு: மருந்து உண்பது நிறுத்தப்பட வேண்டும். எலுமிச்சம்பழச் சாற்றில் சுக்குத் தூள் கலந்து உண்ண வேண்டும். பால், இளநீர், மோர் இவற்றை நச்சுத்தன்மை நீங்கும்வரை ஆகார மாக உட்கொள்ளல் சிறந்ததாகும்.

**" இடையறாக் களிம்பினால் கொல்லுவ ததுவே
எலுமிச்சைச் சுக்காலது போம் "**

என்பது வாக்கு.

**செம்பின் சுத்தி**

செம்பைச் சுத்திசெய்யக் கொள்ளுக் குடிநீர், புளியிலைச் சாறு, கற்றாழைச் சாறு, புளித்த மோர், பொன்னாங்கண்ணிச் சாறு இவற்றில் தனித்தனியே ஏழுமுறை தோய்த்து எடுக்கச் சுத்தியாகும்.

**செம்பினால் செய்யப்படும் சில மருந்துகள்**

(1) செம்புப் பற்பம், (2) செம்புச் செந்தூரம்.

செம்பைப் புடமிடப் பொன்னாங்கண்ணி இலைச் சாறு பயன்படுகிறது. முறைக்காய்ச்சல், காசநோய், குன்மநோய், பாண்டுநோய் ஆகிய நோய்களுக்குச் செம்புச் செந்தூரம் பரிகாரமாக வழங்கப்படுகிறது.

## 3. கருவங்கம்
## (Lead)

**வேறு பெயர்கள்**

ஈயம், காரீயம், கருநாகம்

**தோற்றம்**

இயற்கையான மலைப்பாங்குப் பகுதிகளில் 'Galena cerussite, Arglesite' என்னும் இயற்கை கனிவளங்களாகக் கற்களுடனும் மணலுடனும், செம்பு இரும்புப் பாடாணங்களுடன் கலப்புற்ற நிலையில் கிடைக்கின்றது.

**சிறப்புப் பண்புகள்**

கருவங்கத்தின் அணு எடை : 207.21
உருகுநிலை : 327.4°C
கொதிநிலை : 1750°C

கருவங்கம், தூய நிலையில் வெள்ளி போன்ற வெண்மையும், ஒளிமையும் உடையதாயினும் நீலமேக நிறத்தை இயல்பாகப் பெற்றுள்ளது. மிக மிருதுவானதும், தீயிலிட எளிதில் பற்றி ஒட்டிக்கொள்ளும் (327°C) சிறப்பும், காகிதத்தில் வரையும் தன்மையும் உடையது. மேலும் கம்பி நீட்டுதல், தட்டித் தகடாக்குதல், எளிதில் வளைத்து உருமாற்றுதல் ஆகிய தன்மைகளையும் பெற்றுள்ளது. குடிநீரில் கரையும் இயல்பினால், கருவங்கத்தின் நச்சுத்தன்மை, உடல் வன்மையைக் கெடுக்கும். ஆகவே கருவங்கத்தினால் செய்த பாத்திரங்களையோ அன்றிக் குடிநீர் செலுத்துவதற்குக் கருவங்கக் குழாய்களையோ பயன்படுத்துவது கூடாது.

தற்காலத்தில், குழாய்கள் செய்யவும், மின்சாதனங்கள் செய்யவும் தேக்க மின்சிறைகள் (Storage Battery) செய்யவும்

மற்றும் எழில் ஓவியங்கள் தீட்டும் வண்ணக் கலவையிலும் பயன்படுத்தப்படுகிறது.

**நட்புச் சரக்குகள் :** இரசம், செம்பு, வெள்ளி, வெள்வங்கம்

**பகைச் சரக்குகள் :** அப்பிரகம், அயம், முட்டை ஓடு

**கருவங்கத்தின் தன்மை**

ஐம்பூதங்களில் நீர்க்கூறைக் கொண்டது.

சுவை : கைப்பு

வீரியம் : வெப்பம்

பிரிவு : கார்ப்பு

**செய்கை**

வெப்பமுண்டாக்கல், பசிதூண்டல், கிருமிநாசம் செய்தல், சிறுநீர் பெருக்கல் ஆகியவை இதன் செயலாகும்.

**கருவங்கத்தின் நச்சுத் தன்மை**

பல் ஈறு கறுத்து அல்லது நீலநிறமடைந்து காணல், வயிற்று வலி, பசியின்மை, மல இறுக்கம், கைகால் தளர்ச்சி, காமாலை, இளைப்பு, தோல் சொறி, பக்கவாதம் என்பன தோன்றும்.

**முறிவு :**

மருந்தை உட்கொள்ளாமல் நிறுத்துதல்,

கறுப்புப் புல்லாஞ்சி இலைச்சாறு,

புளியரணை வேர், கல்கம் இவற்றை உட்கொள்ளல் நஞ்சு முறிவாம்.

**கருவங்கச்சுத்தி**

நொச்சியிலைச் சாற்றில் வங்கப் பொடியைக் கலந்து வெயிலில் வைத்து எடுத்துக்கொள்ளல் இதன் சுத்தியாகும்.

**கருவங்கத்தினால் செய்யப்படும் சில மருந்துகள்**

வங்கப் பற்பம், வங்கக் களிம்பு,
வங்கச் செந்தூரம், வங்கச் சுண்ணம்

வாதநோய்களுக்கும் மேகநோய்களுக்கும் உள் மருந்தாகவும்,

நாட்பட்ட புண்களுக்கு மேல்பூச்சு மருந்தாகவும் பயனாகின்றது.

## 4. அயம்
## (Iron)

### வேறு பெயர்கள்

அசி, அயசு, அயில், இடி, இரும்பு, ஈச செயம், கருங்கொல், கறுப்பி, கரும்பி, கரும்பு, கறுப்பு, கருமணல், கரும்பொன், கயசு, கிருஷ்ணவயம், ஆதி, சத்து, கிரோசரம், கிட்டம், திரும்பி, துண்டம், பிண்டம், பொன்மணல், லோகம், கருந்தாது.

### தோற்றம்

எல்லா மலைப்பகுதிகள், பாறைகள், மணல் நிலங்கள் ஆகிய பகுதிகளில் கலப்புற்றுக் கிடைக்கிறது. வானின்று விழும் விண்வெளிக் கற்கள் அயக்கற்களே. ஹெமடைட் (Haematite), மேக்னடைட் (Magnatite), சிட்ரைட் (Siderite), லினோனைட் (Linnonite) என்று பலவகைக் கலப்புக் கனிமங்களாகக் கிடைப்பினும், ஹெமடைட் என்னும் வகைக் கனிமத்திலிருந்துதான் அயம் அதிகமாகப் பிரித்தெடுக்கப்படுகிறது.

### சிறப்பு

| | | |
|---|---|---|
| அயத்தின் அணு எடை | : | 55.85 |
| உருகுநிலை | : | 1539°C |
| கொதிநிலை | : | 2900°C |

### மருந்திற்குப் பயனாகும் அயத்தின் பண்புகள்

பிற பொருள்களுடன் கலப்பின்மை, தேய்ப்பின் வெண்ணொளியுடன் மிளிர்தல், தீயினில் இட்டுக் காய்ச்சக் காய்ச்ச இறுகும் தன்மை, தூய கரிய நிறம், ஈர்ப்புத் தன்மை ஆகியவை அயத்தின் பண்புகளாகும்.

"எய்ப்புடன் இரும்பையுண் மின்" எனும் முதுமொழியையும், "இளைத்தவன் இரும்பைத் தின்பான்" என்னும் வழக்கு மொழியினையும் இங்குக் காண்க.

**அயத்தைப் பிரிந்தெடுத்தல்**

மேற்கூறிய கனிமங்களை நவீன கொதியடுப்பிலிட்டுக் காய்ச்சி இரசாயன முறைகளைக் கொண்டு மலினங்களை நீக்கித் தூய்மையான அயத்தைப் பிரித்து எடுக்கிறார்கள்.

**அயத்தின் தன்மை**

ஐம்பூதங்களில் நீரும், தீயும், வளியும் கொண்ட சிறப்பான கலப்புத் தன்மையுடையது.

சுவை : பெரும்பான்மை துவர்ப்பு, சிறுபான்மை புளிப்பு, கைப்பு.

வீரியம் : வெப்பம்

**செய்கை :**

குருதி பெருக்கல், பசி தூண்டல், உடலுறமாக்குதல், உடல் தேற்றல் ஆகிய செயல்களைப் பெற்றுள்ளது.

**நஞ்சுத் தன்மை**

குருதியிருக்கம், நீரடைப்பு, உடல் எரிச்சல், காமாலை ஆகியவை தோன்றும்.

**நச்சு முறிவு**

மருந்தை உட்கொள்ளாமல் நிறுத்துதல், இளநீர், பால், சிறுநீர் பெருக்கும் மருந்துகளைக் கொடுத்தல் என்னும் முறைகளினால் அயத்தின் நஞ்சு முறியும்.

**அயசுத்தி**

இலுப்பைப் பூச்சாற்றில் அயப்பொடியை இட்டு, முப்பத்தைந்து நாள்கள் வெயிலில் வைத்து, இடையிடையே சாற்றை மாற்றிப் பிறகு எடுத்துக்கொள்வது சுத்தியாகும்.

**அயத்தினால் செய்யப்படும் சில மருந்துகள்**

1. அய பற்பம், 2. அய சம்பீர கற்பம், 3. அயச் செந்தூரம், 4. அயப்பிருங்கராஜ கற்பம்.

**அயத்தைப் புடமிடப் பயனாகும் தாவரப் பொருள்கள்**

சீதேவிச் செங்கழுநீர், ஆரையிலை, முருங்கையிலை, தென்னங்குருத்து, பனங்குருத்து, ஆடாதோடை, சீந்தில்,

தூதுவேளை ஆகியவற்றின் சாறுகளைக் கொண்டு அயத்தைப் புடமிடலாம்.

புடமிடப்பட்ட பிறகு கிடைக்கும் அயச் செந்தூரம், செங்கரு நிறங் கொண்டதாய் இருக்கும், பெருவயிறு, குன்மம், பாண்டு, சோகை போன்ற நோய்களுக்கு அயச் செந்தூரம் பயன்படுகிறது.

## 5. உருக்கு

### வேறு பெயர்

அயக்கடிசு, அயம், எஃகு, எழுகு, ஒழுகறை, மணிவாள், கிட்டலோகம், இரத்தலோகம், வற்றல் லோகம், மலைக் குடோரி, தீட்சணம்.

இது, நம்நாட்டில் மைசூரில் இரும்பிலிருந்து செய்யப்படுகிறது. இது இரும்பில் சற்றுப் பேதப்பட்டதாகும்.

இதற்குத் துவர்ப்புச் சுவையும், வெப்ப வீரியமும் உண்டு. மேலே இரும்புக்குக் கூறிய செய்கைகள் யாவும் இதற்கும் உண்டு.

மருந்து செய்யப் புகும்முன் இதனை நன்றாகச் சுத்தி செய்து கொள்ளல் வேண்டும். இதற்குச் சுத்தி செய்முறைகள் பலவுண்டு. அவற்றை மருத்துவப் பெருநூல்களில் படிப்பதுடன் செய்து பழகியும் வரல் வேண்டும்.

இந்த உலோகத்தைக்கொண்டு பற்பமும் செந்தூரமும் செய்து பற்பல துணை மருந்துகளில் பல நோய்களுக்கு வழங்குவர். பலவகைப்பட்ட நோய்க்கு ஒரே மருந்தைக் கொடுத்தல் சித்த மருத்துவத்தின் தனிச் சிறப்பாகும். இதனை இத்துறையில் அனுபவசாலிகளே அறிவர்.

## 6. நாகம் (துத்தநாகம்)
## (Zincum—Zinc)

### வேறு பெயர்

சீறல், பொருமல், பொங்கல், இரைச்சல், ஐம்புகை, சோரம், வாசுகி, வெண்ணாகம்.

இயற்கையில் நாகம் மற்றப் பொருள்களுடன் கலந்தே கனிகளிலிருந்து கிடைக்கின்றது. இது பளபளப்பான வெண்மையும் நீலமும் கலந்த நிறமுடையது.

இது திராவகங்களில் கரையும். இதன்மேல் காற்றுப்பட்டால் உப்புப் பூத்துக் காணப்படும். இதனுடன் செம்பைக் சேர்த்து உருக்கினால் பித்தளை என்னும் வைப்பு உலோகம் கிடைக்கும். இது பெரும்பாலும் சீனாவிலிருந்தும் பர்மாவிலிருந்தும் நம் நாட்டுக்கு இறக்குமதியாகின்றது. பெருங் கண்ணாகம், சிறுகண்ணாகம் என இருவகை உண்டென்பர் சித்தர்கள். அதில் சிறுகண்ணாகமே மிகச் சிறந்தது என்பர்.

இது துவர்ப்புச் சுவையும், குளிர்ச்சி தரும் பண்பும் உடையது.

இதற்குத் துவர்ப்பி, குருதிப் பெருக்கடக்கி, உடல் தேற்றி என்னும் செய்கைகள் உள.

துத்தநாகம், மேகம், பேதி, வெள்ளை, உட்சூடு, கிரகணி, முளைப் (மூலம்) புண், பித்தம் முதலிய நோய்களை நீக்கி உடலுக்கு வன்மையைத் தரும்.

இதற்குச் சுத்தி முறைகள் பல உள. இந்த உலோகத்தைப் பற்பமாகவும் செந்தூரமாகவும் செய்து பற்பல நோய்களைத் தீர்க்க வழங்குவர்.

**நட்புச் சரக்கு**

அப்பிரகம், இரும்பு, கந்தகம், காந்தம், காரீயம், கௌரி, நவாச்சாரம், சிலாசத்து, இரசம், செம்பு ஆகியவையாம்.

**பகைச் சரக்குகள்**

அண்ட ஓடு, அபினி, அன்னபேதி, கல்லுப்பு, கிளிஞ்சில், சிங்கி, தங்கம், தரா, நண்டோடு, மிளகு, வளையலுப்பு, வீரம், வெடியுப்பு, வெள்ளைப் பாடாணம் ஆகியவையாம்.

## 7. வெள்ளி
(Silver)

**வேறு பெயர்**

அரன்பதி, துப்யான், வெண்தாது, வெண்பொன், இரசிதம், சுக்கிரன் முதலியன.

இவ்வுலோகம் பொன், செம்பு, பாடாணம் ஆகிய தாதுப் பொருள்களுடன் கலந்தே கனிகளிலிருந்து கிடைக்கின்றது. முற்காலத்தில், டில்லி, ஆக்ரா, இலாகூர், சிந்து முதலான

இடங்களில் வெள்ளிச் சுரங்கங்கள் இருந்தனவாகக் கூறப்படு கின்றது.

மருந்துகளில் பயன்படுத்தித் தகுதிவாய்ந்த வெள்ளி ஊட்டமாகவும், இதரப் பொருள்களுடன் கலவாமலும், வெட்டு வாய் வெண்மையாகவும், மிருதுவாகவும் நெருப்பிலிட்டுக் காய்ச்சினால் மினுமினுப்புடன் சங்கை ஒத்த நிறத்துடனும், நெய்ப்புடனும் இருத்தல் வேண்டும். இதனைக் காய்ச்சியோ காய்ச்சாமலோ சுத்தியால் அடித்தால் பொறி கிளம்பாமலும், ஒடிபடாமலும் இருத்தல் வேண்டும்.

ஊட்டமின்றி இலேசாகவும், கரகரப்பும், வறட்சியும் உடையதாயும், சுத்தியால் அடித்தால் பொறிகிளம்பல், ஒடிதல் என்னும் குணங்களை உடையதாகவும் நெருப்பிலிட்டுக் காயச்சும்போது சிவப்பு, மஞ்சள், கருமை ஆகிய நிறங்களைக் காட்டுதல் என்னும் குணங்களைப் பெற்ற வெள்ளியை மருந்து செய்யப் பயன்படுத்தக் கூடாது.

இந்த உலோகம் மேலே கூறியபடி தகுதிகள் வாய்ந் திருப்பினும் இது சிறந்த உலோகத்தில் இரண்டாவதாகக் கருதப்படினும் இதற்கும் சுத்தி முறைகள் நூல்களில் கூறப் பட்டுள்ளன. எனவே, இதையும் முறைப்படி சுத்தம் செய்தே மருந்துகளாக மாற்ற வேண்டும். இதனால் செய்த மருந்து வகைகளால் பழையசுரம், மரவிடம் (தாவர நஞ்சு) மன நோய்கள், விழிநோய்கள், கோழை. இருமல், மார்புச் சளி, எண்வகையான குன்மரோகங்கள், வாத கோபம், கிரந்திகள், நீர்க்கோவை, சொறி சிரங்கு முதலானவை தீரும்.

இவ்வுலோகத்தைப் பெரும்பாலும் பற்பங்களாகவும், செந் தூரங்களாகவும் செய்தே வழங்குவர். இதனைச் சுண்ண மாக்கியும் பெரிய நோய்களுக்கு வழங்குதலும் உண்டு.

## 8. வெள்ளீயம்
## (Stannum—Tin)

**வேறு பெயர்கள்**

வெள்வங்கம், வெண்ணாகம், குடிலம், தவளவங்கம், சுவேத வங்கம், பாண்டீ, மாரசம் என நூல்களில் வழங்கப் படும். இது **குரகம், மிச்ரகம்** என இருவகைப்படும்.

குரகம் என்னும் வகையைச் சேர்ந்த வெள்ளீயம், வெண் ணிறம், கனம், நயப்பு, நெய்ப்பு, குளிர்ச்சி, விரைவில் உருகல்,

ஓசையின்மை முதலிய நற்பண்புகளை உடையதாகும். இது மருந்து செய்ய ஏற்றதாகும்.

மிச்ரகம் என்னும் வகையைச் சேர்ந்த வெள்ளீயம், மேலே கூறிய பண்புகளின் எதிர்மறையான குணமுடையது. வெண்மை கருமை ஆகிய இருநிறங்கலந்த நிறமுடையது. இது மருந்துகளைச் செய்யப் பயன்படாது.

இதற்குக் கைப்புச் சுவை, வெப்ப வீரியம், கார்ப்புப் பிரிவும் உண்டு. இது தாது வெட்பகற்றி, கிருமிநாசனி, வீக்க முருக்கி, துவர்ப்பி என்னும் செய்கைகளை உடையது.

இதனால் செய்த மருந்துகளின் பயனால், தாகநோய், கரப்பான், சலப்பிரமேகம், பித்தகபதொந்தம், சுரம், கிரந்தி, மந்தார சுவாசகாசம், அக்கினிமந்தம், மேகவகைகள், இயற்கை ஒளிகுன்றல் என்னும் நோய்கள் தீரும்.

இதனைப் பற்ப செந்தூரங்களாகவும், சுண்ணமாகவும் முறைப்படி தூய்மையாக்கிச செய்து பற்பல துணை மருந்துகளுடன் மேலே கூறிய பல பிணிகளுக்கு வழங்குவர்.

இதுவரை இயற்கை உலோகங்களை விவரித்தோம். இனி, வைப்பு உலோகங்கள் அல்லது செயற்கை உலோகங்களைப் பற்றிச் சிறிது விளம்புவோம். சித்தர்கள் காலத்திலேயே வெண்கலம், பித்தளை, தரா என்னும் மூன்று உலோகங்களின் செய்முறைகளையும் அவற்றின் பயன்களையும் நன்கறிந்து இருந்தனர் என்பது தெளிவாகிறது.

## 9. வெண்கலம்
## (Bronze)

### வேறு பெயர்கள்

கஞ்சம், தாரம், உறை என்னும் பெயர்களினாலும் வழங்கும். இந்த வைப்பு உலோகம் செம்பு எட்டுப் பாகமும் வெள்ளீயம் இரண்டு பாகமும் சேர்த்துச் செய்யப்படுவதாகும். இதனை, ‘எட்டெடைச் செம்பில் இரண்டெடை ஈயமிடில், திட்டமாய் வெண்கலமாம் சேர்த்துருக்கில்’ என்னும் குறுக்கையூர் காரிநாயனார் இயற்றியுள்ள தனிப்பாடலின் அடிகளால் அறியலாம்.

இதன் சுவை — துவர்ப்பு ; வீரியம் — வெப்பம் ;
பிரிவு : கார்ப்பு
செய்கை—உடல்தேற்றி, உடலுரமாக்கி

வெண்கலத்தால் செய்த மருந்து வகைகளால் கண் ணோய்கள், வெள்ளை, வெகு மூத்திரம், இரத்த பித்தம், சுவாசகாசம், மந்தம், வாதப் பிரமேகம், வாதவலி, சூலை, பெருவயிறு முதலிய பிணிகள் தீரும். பித்தமும், சுக்கில தாதுவும் அதிகரிக்கும். இது கபத்தைக் குறைக்கும்.

இதனைச் சுத்தித்து முறைப்படி பற்ப செந்தூரங்களாகச் செய்து மேற்படி நோய்களுக்கு வழங்குவர்.

சரியானபடி முடியாத வெண்கல பற்ப செந்தூரங்கள் ஆயுட் காலத்தைக் குறைப்பதோடு, மார்புநோய், உடலில் தாபம் முதலிய இன்னல்களைத் தரும் என்பது அநுபவத்தில் கண்ட உண்மையாம்.

## 10. பித்தளை
(Brass)

**வேறு பெயர்கள்**

ஆரகூலம், சீருணம், இரதி, மாயாபுரி என்பவை வேறு பெயர்களில் சில. இது வைப்பு உலோகம். இது செம்பும் துத்தநாகமும் சேர்த்துச் செய்யப்படும். இதனை, 'இட்ட முடன், ஒரேழு செம்பில் ஒரு மூன்று துத்தமிடில் பாரறியப் பித்தளையாம் பார்' என்னும் செய்யுளின் அடிகளால் அறிய லாம்.

சுவை : துவர்ப்பு, உப்பு ; வீரியம் ; சீதம் ; பிரிவு : இனிப்பு

செய்கை : உடல்தேற்றி, உடலுரமாக்கி.

**இதனால் தீரும் பிணிகள் :** வாதம், பித்த குன்மம், தாபசுரம் ஆகியவை தீரும்.

**இதன் பயன் :** இதனால் சீதளமும் தாதுவும் விருத்தியாகும்.

இதனைப் பற்பமாக்கி, பற்பல அனுபானங்களில் மேற் கண்ட பிணிகளுக்கும், மற்றும் மண்டைநோய், செவி, தொண்டை, விதைகள், பல்லீறு, கன்னம், உதடு, மார்பு, முளைமூலம் ஆகியவற்றின் பிணிகளுக்கும் தீராப் படை களுக்கும் வழங்குவர்.

சரியானபடி முடியாத பித்தளைப் பற்பத்தால் பல கேடுகள் விளைதலும் உண்டு. ஆகவே, இதனைக் கையாள நேர்ந்தால் இது சரியானபடி முடிந்ததா இல்லையா என்று பரிசோதித்துக் கொள்ளல் வேண்டும்.

## 11. தரா

இது 'மதுகம்' என்னும் பெயரிலும் வழங்கும். இஃது எட்டுப் பங்கு செம்புடன் ஐந்து பங்கு காரீயத்தைக் கூட்டிச் செய்யும் வைப்பு உலோகமாகும். இதனை 'வெட்டைத் தரா' என்று அகத்தியர் குணவாகடம் கூறும்.

**தீரும் பிணிகள் :** தரா என்னும் வைப்பு உலோகத்தின் பற்பம் முதலிய மருந்தால், சூலை, கபவாதம், மேகம் ஆகிய பிணிகள் தீரும் என்று அகத்தியர் குணவாகடம் கூறும்.

இதன் பற்பம் மிக்க அருமையாகக் கையாளப்படுவதாகும். இது, துணை மருந்துகளின் விசேஷத்தால் மேற்படி நோய்களே அன்றி மகோதரம், பிலீகம், கவுசை, அகுவை, குன்மம் முதலிய கன அசாத்தியமென்று அஞ்சப்படும் பிணிகளும் தீரும் என்று நூல்கள் கூறும்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

கற்க கசடற